உ

கணபதி துணை

சேதுபுராணம்.

சைவாசாரியராகிய

நிரம்பவழகியதேசிகர்

அருளிச்செய்தது

இஃது

இராமநாதபுரசமஸ்தானம்

ம-ா-ா-ஸ்ரீ

பொன்னுச்சாமித்தேவரவர்கள்

வேண்டுகோளின்படி,

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து,

மேற்படியூர்

சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

ஏ விளம்பி ௵ ஆனி ௴.

இதன்விலை ரூபா ௧.

(Copyright Registered.)

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

சோணாட்டிலுள்ள வேதாரணியத்தைச் சார்ந்த

குறுக்கை வித்துவான்

குமாரசுவாமிப்பிள்ளை

இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம.

ங்கையிலங்கியசடிலமுடியிறைவன் றனையிமவான்களிக்கவீன்ற
ங்கைபுணர்தலைவனைப்பூசித்துமன னெக்குருகிநாடிக்கூப்புஞ்
செங்கையிராகவனிலங்கைக்கிறைவனுயிர்செகுத்தபழிதீர்த்தஞால
மங்கையணியெனவிளங்கு சேதுமான்மியமானவடநூறன்னை.

பொருவருஞ்சைவாகமந்தேர்ந் தாசிரியத்தன்மையினைப்பூண்டநல்லோர்
ருதுறுநற்கலைக்கடலைநீந்திமதி புனையமலன்கழற்காற்கன்பு
மருவுறுசீர்நிரம்பவழகியமுனிவன் றென்மொழியால்வகுத்துச்சொன்ன
திருவுறுமப்புராணமதையேட்டில்வரைந் திடுதலினுற்சிதைவுற்றுங்கு. (௨)

ருறுமக்கரங்கண்மிகுந்துங்குறைந்தும் பிறழும்வழுத்தீரவாய்ந்து
பெருறுமவ்வரைதவிலாவுரியினைமை விக்கவெனப்பிரசமார்செய்
ருறுவெண்சுரிமுகஞ்சென் றுலவுசெம்பி நாடாளுநிருபன்முல்லைத்
ருறுவண்புயனினியதமிழுதவிபுகலுமெழிற்சதுரான்மிக்கோன். (௩)

திமேவுசிகரமணி மாடமோங் கியபூதுவைவளர்வோன்,சேது
திமேவுதுணைவனுலகுயிரோம்பி வளமுதவுபண்பார்சங்க
திமேவுபுலவருக்குநிதிமாரி பொழிகருணை நிறைநீமேகந்
திமேவுமரசர்பணிபாதனில வியவடிவோன் றுகடீர்செல்வன். (௪)

னத்துமெருவலரைமேவவிடு தலினுனுமானமார்வெஞ்
னத்தானையொடுமுலகமுய்யவளித் திடலானுந்திருவார்செல்வத்
னததானைவிழைந்திடுதலானுமலர்ச் சேக்கையினிற்றங்கும்வெள்ளை
னத்தானைத்தந்தமாலனையபொன்னுச் சாமியெனுமரசன்சொல்ல. (௫)

றுகலைமதிவிளங்கு புலவர்சிகாமணி புடைசூழ்தெண்ணீர்வைப்பி
றுபுகழ்யாழ்ப்பாணத்திலகியநல்லூரன்மனத்திசைகொள்வேதந்
றுசிவபரஞ்சுடரைக்கொண்டடைந்தார்தமைத்தெருட்டுங்குணமாஞான
றும்முக நாவலனற்றெளிவுறவச் சிறப்பதிப்பித்தருளினனே. (௬)

சிறப்புப்பாயிரம்

மகாவித்துவான்

ம-ள-ள-ஸ்ரீ, திரிசிரபுரம்,

மீனாட்சிசுந்தரம்பிள்ளை மாணாக்கராகிய

சோடசாவதானம்

சுப்பராயச்செட்டியார்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

திருவளர் மருமத் துருவளர் செங்கேழ்ப்—பரிதியி னவிர்மணிப் பிரபையா
லென்றுங்—குவிதர வின்றி விரிதரு முந்திப்—பாயிருள் பருகு மாயிரந் தோட்
டுப்—பூமலி கமலத் தேமலி பொகுட்டி—னுண்முகத் தேவைப் பான்மையி னுத
வி—நல்கெனப் பணித்து மல்குறக் காக்கும்—பெருமபெயர்க் கடவுள் வரம்
பில்பல் லுயிர்களி—னிடர்தொகை களைவா னெடுத்த வுருததொறூஉஞ்—சிவ
மே யென்றுந் தவவில் பொருளெனுப்—பேருல கோர்ந்து தேருறத் தேர்ந்து—
நேசித் தொழுகிப் பூசித் தாங்குக்—கயரத பதாதித் தயரதன் மகவாய்த்—தோ
ன்றிய ஞான்று மான்றபே ரன்பால்—விதிவழி வழாம லதிர்வறப் பூசித்—துள
நெகிழ்ந் துடலம் புளகமுற் றிருநோக்—கன்பினீர் வார வின்பந் தேக்கி-வேண்
டிய நல்வரங் காண்டக வீண்டப்—பெற்றமை முதலிய துற்றபல் காதையுந்—
தீதற வோதுஞ் சேதுமான் மியத்தைப்—பொதியிற் பொதிந்த கதிர்பொதி மணி
யை—வெளிப்படுத் தெனனப் பழிப்பில்வட மொழியி—னின்றுமொழி பெயர்த்
துக் குன்றுத வில்லாப்—புலமையி னிறைந்த தலைமையின் மிக்கோன்—வரம்
பில்புகழ் சான்ற நிரமப வழகிய—தேசிக னென்போ னுசிதென் மொழியிற்—
சுவைகனிந் தொழுகித் தூங்குசொற் பொருளா—னவையறப் புகன்ற நலங்கெழு
புராணங்—கற்றோ ரன்றியு மற்றோர் வரைதலிற்—றுன்னிய வழுவொரீஇ
மன்னிய நிலமிசைப்—பரவிப் பொலியப் பதித்துத் தருகென—வரியளி துதை
தலிற் புரிமுறுக் கவிழ்ந்து—புதுமது வாக்கும பதுமப் படுகரிற்—பிணர்மருப்
பெருமை துணையொடு மிரியச்—சினந்துமீ தெழுந்து முனைந்தவெள் வாளை
கள்—செருமுகத் துடன்று பொருதுயிர் விடுத்து—விரியொளி பரப்பும் பரிதியி
னுடல்கீண்—டுலவாப் பொன்னிறங் குலவாப் புகுந்து—சவர்க்க மகளிர்தஞ் சுவர்
க்கங் கிடக்கு—மடங்கா வென்றி விடங்கர் போலக்—கதுமெனப் பலவின்
முதுசினை தூங்குந்—தேனடை கிழித்து வானிறந் திரிந்து—சுரநதி புகுந்து தெ
ருமர லொழிந்து—பெடையிள வாளைக ளொடுபுணர்ந் துவக்கும்—வம்பியல்
விழவறாச் செம்பி நாடுடையோன்—கனகக் கொல்லர் கனற்கண் வைத் துருக்
கிய—வசும்பொளி காலும் பசும்பொற் பிழம்பை—யொடிதலி லச்சிற் படிய
வாக் கியதெனக்—கரும்பு வின் மதவேள் விருப்புறு மைந்தர்—பொங்கிருள் சீக்
குஞ் செங்கதிர்ப் புதவேள்—கொய்யுளைப் புரவி வையமும் பெட்ப—நறுமணங்
கமழு மறுகினிற் கிடவும்—விண்முக டுரிஞ்சும் பொன்னெடுங் கொடிஞ்சி—நவ
மணி குயின்ற சுவணத் தடந்தேர்ப்—பைங்காற் சுவட்டிற் கொங்கா ரன்னவா—
திண்டோள் புரளுந் தண்டொடை யுகுத்த—பூந்துகள் பொதியுங் காந்திசேர்
புதுவைப்—பொன்னக ரென்னு நன்னக ராளி—குலவரைக் கரசாம் பொலன்வ
ரை சழனு—நிலைத்ரப் புரிந்த மலையைவெற் புனட்யோன்—றலஞா னத்திற் றல

வலி பொருந்தி—யவஞா னந்தெறு சிவஞான தேவன்—றவமொரு வடிவாய்ப்
புவிமிசை வந்தெனச்—சான்றோர் புகலத் தோன்றிய திறலோன்—மறைவழி
விளைத்த நிறைபொருட் கலைக—டிரிபற வுணர்ந்த பொருவில்பே ரறிவா—லெவ
லுகைப் பொருட்கு மிறைவனு நிறைதலிற்—பசுபதி தானே பரமெனத் தேர்ந்து—
சிவபுண் ணியப்பயிர் நவமுற வளர்ப்பா—னருட்கொழுந் தாய சிவக்கொ
ழுந் துறையுந்—திருத்தகு கோயிலு ணிறுதகமூன் றுறுப்புங்—குறைவிலா திய
ன்று நிறைதர நடத்துவோ—ஞமினிப் பிறர்பா ரணுகி யிரக்குந்—தோமினி
நணுகோ மெனவுளங் கூர்ந்து—சாமியென் பார்க்குச் சாமியே யனைய—பொன்
னுச் சாமிப் புரவலன் புகல—மன்னிய பிறப்பின் வண்பய னிதுவெனுத்—திட
முற வுணர்ந்து வடமொழி யோடு—பொருந்தத் தெரிந்து திருந்தப் பதிதனன்—
பொற்பலர் பசுந்துணர்க் கற்பகப் பொழிலொடு—தோழமை கொள்ள வானளா
யோங்கு—மிளமரப்பொதும்பர் வளமனை வாழ்க்கையர்—விருந்தினர் தம்மைத்
திருந்திய முகத்தோ—டெதிர்தழீஇ யின்சுவை பொதிதரு மடிசி—லூட்டி யுவக்
குங் காட்சியை நிகாப்ப—வண்டின முவப்ப மலர்ந்த மலர்முகங்—கொண்டெதிர்
தழுவிக் கொழுமது வூட்டு—மூழியல் வளஞ்சா லீழநன் னாட்டின்—மாச்சீர் காச்
சீ கனிச்சீர் விளச்சீ—பூச்சீர் நிழற்சீர் பொதுளியைந் திணைப்பொரு—ளகமும்
புறமுந் தகவுறத் தழுவி—யணியியல் விளக்க மணிதரப் பொருந்திக்—குலவிய
நுண்பொருட் புலமை யான்றோர்—நுவன்ற கவின்ற கவித்திறங் கடுக்கும்—பீடு
யர் செல்வ நீடும்யாழ்ப் பாணத்-திருநில மீமிசை யியங்கு நலனெலா—மொருங்கு
திரண்டம் மருங்கி னிலவலா—லனைவரும் வியந்து வனைதரப் புகழ்ந்து—நல்லூ
ரென்னு நல்லூ ரானி—யலகில்பல் சமயக் கலகநூ லென்னுங்—கான்யா றடை
கரை கண்டுளந் தெளிந்து—தானிக ரதுல சைவநூலென்னும்-பெருநதி யுவட்டி
னொருவழிச் சென்று—சைவசித் தாந்தத் தெய்வமாக் கடலை-நணுகியாங் கதனுட்
டுணிவொடு திளைத்துச்—சிவபோகமென்னுந் தெள்ளமு தருந்தித்—தேக்கெறிந்
தென்றுஞ் செருக்கும் பெரியோன்—கனவினு நன்னடை தணவாச் சீலன்-மன
மொழி சிறிது மயல்வழி புகுத்தா—தனகன தடிக்கீ ழமைதர வொடுக்கியோன்—
கண்ணக னிலத்தி னண்ணியமன்பதை-யுள்ளத் தளவிற் கொள்ளக் கொடுக்குங்-
கல்வியிற் பெரிய சொல்வன் மையினே-னென்றொரு நாவாற் பன்ன வமையா-
தெனப்புவ னத்தார் தனித்தனிப் புகல—வுரவுநீ வரைப்பிற் பரவிய புகழோ—
னென்னுள நோக்க மிலங்கச் செய்வோன—மன்னிய சிறப்பின் வரநதி குலத்
தோன்—கடிதவில்வாய்மை கனிந்த—முடிவில்சீரா றுமுகநா வலனே.

சிறப்புப்பாயிரம்.

மதுரை

ஆறுமுகப்பிள்ளை

இயற்றியது.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிதிகழண் மிடற்றிறையை யிராகவன்பூ சித்து
    வாழ்த்திடுஞ்சீர்ச் சேதுமான் மியத்தின்வரி வழுவைத்
துணிவுறத்தீர்த் தெழுதலிலக் கரத்தினியை விக்க
    தோமறவென் றெழிற்புதுவை வளருமதி பதிபொற்
பணிதிகழும் புயப்பொன்னுச் சாமிநர பதிதான்
    பகரவா ரிதிபுடைசூழ் யாழ்ப்பாண மதனி
லணிதிகழ்நல் லூர்மேவு புலவர்குல திலக
    னாறுமுக நாவலனைச் சிறப்பதிப்பித் தானே.

சருக்கவகரா

சருக்கம்.	பக்கம்.	சருக்கம்.	பக்கம்.
அகத்தியதீர்த்தச்சருக்கம்	க௰அ	சாத்தியாமிர்ததீர்த்தச்சருக்கம்	கசுஅ
அக்கினிதீர்த்தச்சருக்கம்	கஙக	சிவதீர்த்தச்சருக்கம்	கசச
அசுவத்தாமாச்சருக்கம்	கஅங	சீதைகுண்டச்சருக்கம்	அஉ
அமுததீர்த்தச்சருக்கம்	கூசு	சேதுசருக்கம்	ங௰
அவையடக்கம்	ச	சேதுபலச்சருக்கம்	ஙககூ
அனுமகுண்டச்சருக்கம்	க௰ரு	சேதுமாதவச்சருக்கம்	ங௰ச
இராமதீர்த்தச்சருக்கம்	ககங	சேதுயாத்திரைச்சருக்கம்	ஙகச
இராமநாதச்சருக்கம்	உசகூ	சேதுவந்தசருக்கம்	ஙஎ
இராமனருச்சனைச்சருக்கம்	உருசு	தருமகுத்தச்சருக்கம்	ககூக
இலக்குமதீர்த்தச்சருக்கம்	கஉஉ	தனுக்கோடிச்சருக்கம்	கஎஅ
இலக்குமிதீர்த்தச்சருக்கம்	கஉஅ	திருநாட்டுச்சிறப்பு	ரு
கடவுள்வாழ்த்து	க	துத்தமச்சருக்கம்	சரு
கத்துருச்சருக்கம்	உகஅ	துராசாரச்சருக்கம்	உ௰அ
கந்தமாதனச்சிறப்பு	கஎ	தேவிபுரச்சருக்கம்	சு௰
கவிசம்புச்சருக்கம்	உ௱	தோத்திரச்சருக்கம்	உஅரு
கவிதீர்த்தச்சருக்கம்	உஉகூ	நைமிசாரணியச்சிறப்பு	உஎ
காசிபச்சருக்கம்	உஙஅ	பராவசுச்சருக்கம்	ககூரு
காயத்திரி சரசுவதி தீர்த்தச்சருக்கம்	உஙச	பலதீர்த்தச்சருக்கம்	உசரு
		பாலோடைச்சருக்கம்	உகரு
கோடிதீர்த்தச்சருக்கம்	ககூக	பாவநாசச்சருக்கம்	எஅ
சக்கரதீர்த்தச்சருக்கம்	சஉ	பிரமகத்திச்சருக்கம்	உஎகூ
சக்கரதீர்த்தச்சருக்கம்	கசஉ	பிரமகுண்டச்சருக்கம்	க௱
சங்கதீர்த்தச்சருக்கம்	கருஉ	மங்கலதீர்த்தச்சருக்கம்	அஎ
சங்கரபாண்டியச்சருக்கம்	உகூங	முத்தீர்த்தச்சருக்கம்	கருரு
சடாதீர்த்தச்சருக்கம்	கஉசு	விதூமச்சருக்கம்	சஎ
சருவதீர்த்தச்சருக்கம்	கஎங	வேதாளவரதச்சருக்கம்	கூகூ

பிழை திருத்தல்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௪௨	௪	௪	செய்தான்	செய்வான்
௬௫	௪௨	௩	முழவுகோல்	முளவுகோல்
௬௬	௫௬	௨	திறலாழி	திறலாளி
௭௨	௩0	௩	கீசகம்	கீகசம்
௮௬	௪௬	௧	இராவகன்	இராகவன்
௧௧0	௨௪	௧	எந்தவிடை	எந்தவிறை
௧௧௨	௪௪	௧	நீர்க்கதமன்மகன்	நீர்க்கதமன்
௧௩௯	௨0	௩	சாருபண்ணியள்	சாருபண்ணியன்
௧௨0	௬௯	௪	வேதிமிண்	வேதிமீண்
௧௮0	௩௨	௨	வெற்பென	வெற்பன
௨0௨	௨0	௩	ணிலம்பாட்டினுளெனுத்	ணிலம்பாட்டினுயெனத்
௨௧௫	௩	௧	விதனுண்மை	விதனுண்மை
௨௧௬	௧௧	௧	படு	யடு
௨௨௪	௫௫	௨	பரிதிவான்	பரிதிவாண்
௨௩௭	௩௫	௨	மறைத்துறை	மறத்துறை

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சேதுபுராணம்.

காப்பு.

திங்களங்குழவியென்னத்திகழொருமருப்பிற்சோதி
தங்குவிம்புரிவயங்கத்தடாமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்கணல்குந்தூயசீராமசேதுப்
புங்கவர்வணங்குமியானைமுகத்தனைப்போற்றல்செய்வாம். (௧)

தொடர்கின்றவிடிக்கண்வெற்புத்துகள்படத்துளைக்குமேலோ
னடர்கின்றவுதற்குநாதருளியவைங்கைமுக்கட்
படர்வென்றிப்பகவன்முனைவிளைப்பவமுதற்படியினெல்லா
விடர்கின்றும்புரக்கவெம்மையெங்கணுமொர்தஞான்றும். (௨)

கடவுள்வாழ்த்து.

சபாபதி

பூமாதுபொலிவெய்தமுகுந்தன்காக்கும்புவிமாதுவளம்பெருகப்புலமைசான்ற, நா
மாதுநலந்தழைப்பவிருள்கால்சீக்குநகைநிலவுதவழ்மவுலிநன்னீர்க்கங்கை, மாமா
துபுனறுளிப்பமறைகள்யாழ்த்தவளர்தில்லையம்பலத்துள்வாமநீங்காத, தேமாதுவி
ழிகுளிர்ப்பவமரர்போற்றத்திருநடஞ்செய்நூபுரத்தாள்சென்னிசேர்ப்பாம். (௧)

இராமநாதசுவாமி.

பூந்தவிசினிருந்தபிரான்முதலோர்காணப் புண்டரிகமகள்கொழுநன்புகழிலங
கை, வேந்தனுயிர்ப்பழிகழுவுமுகத்தால்யாக்கும்விடையவனேயுடையவனும்வே
தவரும்மை, யூந்தரங்கம்வெளிசெய்வானனைவரோமெனைந்துகந்தமாதனத்திலரு
ச்சித்தேத்து, மேந்துபுனற்சடிலமுடியிராமநாதனிணையடிச்செந்தாமரைகளிறைஞ்
சிவாழ்வாம். (௨)

சேதுபுராணம்.

பார்வதவர்த்தனியம்மை.

தண்ணெனவும்வெச்செனவுந்துசாயாத்தகைபயின்றுவிடநீக்கித்தலைவற்செ
ன்று, முண்ணமுதந்தனையுதவியிமையமேருவுயர்சிகரமந்தரத்தையொருவிச்சேர
துங், கண்ணுதலைவிளர்ப்புறலாற்கயிலையெள்ளிக்கௌணியர்க்குத் * தமிழ்சுரக்கு
ங்காட்சியாலே, வண்ணமுலைமலயமலைமானுங்கன்னிமலைவளர்காதலிமலர்த்தாண்
மனத்துள்வைப்பாம். (௩)

விநாயகக்கடவுள்.

வேணிமுடிப்பகீரதிநீர்புழைக்கைவாங்கிவிடுத்தயன்வெண்டலையுருட்டிமிளிர்
வெண்கோட்டாற், கோணிலையமதிக்குழவியுழுதுமேருக்கொடுமுடியிற்கிளைத்தவெ
ண்டோள்குழையத்தாக்கித், தாணெடியவிடைமுனிந்துகயிலைமுக்கட்டாதையொ
டும்விளையாடித்தனபாலன்பர், மாணிலவுமனத்ததிநின்றுலாவுந்தெய்வவாரணத்
தைநினைந்திறைஞ்சிவழுத்தல்செய்வாம். (௪)

சுப்பிரமணியக்கடவுள்.

சூலவுமலைமகள்கலசமுலைப்பால்வாசக்குமுதமவள்கொழுநர்மறைகொழிக்குஞ்
செவ்வி, நிலவுமுகமலாகமழச்செய்துமுனரேனெடுந்துளைகைபிடித்தேறிரெற்
றிப்பட்டத, துலவியிவரொருமுயருவப்பமாலொடும்பாகணங்களிதூங்கவுலகமு
டுங், கலபமரகதமயிலூர்கழற்காலவென்றிக்கந்தனைவந்தனைசெய்துகருத்துள்வை
ப்பாம். (௫)

சரசுவதி.

கவளமதகரியுரிவைப்போர்வைமுடுங்கண்ணுதலோன்புகழ்விரிக்குங்கலைகள்யா
வும், பவளவிதழ்ப்பசுங்குதலைமொழியிற்காட்டும்பைந்தொடியையயந்தணன்றேய்
பருமயல்கூற், றுவளுமணிமருங்குலிளநிலவெண்மூரற்சுந்தரியைவெண்கமலத்தோ
ட்டுவட்டத், தவளதிருவெமர்வாமலினைப்போலுந்தையலைமையலையகற்றித்தாளி
ற்றாழ்வாம். (௬)

திருநந்திதேவர்.

போதனுறைமலர்முடிமொழுமராகோமான்புரநிலைமைகுலையாதுமருதுபோழ்ந்த
பாதனுறைகடல்சுருங்காதரிணஞ்சூலப்படைமருவண்கரிகைகரப்பரித்துப்பாந்தட்
காதனுறைசிறுபுனறகங்கைகுடுங்கண்ணுதலெம்பரன்மதியுங்கதியுநல்கு
நாதனுறைதிருக்கயிலைகாவல்பூண்டநந்தியைநம்புந்தியின்கணயந்துவாழ்வாம். (௭)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

சங்கபணிக்குழைதயங்கத்தழைந்தகாதுந்தனிவிடையுமுதலபலதணப்பில்கா
ட்சி, பொங்குமடையாளங்கள்புகன்றுபோற்றிப்பொருவிறந்தபரஞ்சுடரைப்புந்தி
க்கெட்டா, வங்கணனைவழுதியுடல்வெப்புநீங்கவணிதிகழ்வெண்டிருநுண்ணீறள்ளி
ச்சாத்துஞ், செங்கைவிரல்கொடுகுறித்துத்தெரிக்குந்தோன்றல்சிற்றடியின்பெருந்
தகைமைசிந்தைசெய்வாம். (௮)

---

* ‘கௌணியர்க்குத் தமிழ்சுரக்குங்காட்சி’ என்பது பொதியமலைமேற்செல்லுங்கால், கௌணியர் என்பதற்குப் பூமியிலுள்ளோர் எனப்பொருள் கூறுக. கௌணி பூமி. க்ஷௌணி என்னும் வடமொழி கௌணி எனத் தற்பவமாயிற்று.

திருநாவுக்கரசுநாயனார்.

தேவரையுமுனிவரையுந்துளவமார்பிற்றிருவரையுங்குரவரையுஞ்செல்வமிக்கார், யாவரையுமேவல்கொளுநெற்றிநாட்டத்திறைவரைமுன்னிகந்திருந்தவெண்ணந்தோன்றச், சேவரையுநெடுங்கொடியின்றகைமையெல்லாத்திசைவரையுஞ்சலத்தமிழின்செய்யுள்பாடு, நாவரையர்புகழ்மொழிகள்வரைந்துகூறிநயந்தவர்செய்திருத்தொண்டுவியந்துவாழ்வாம். (௯)

சுந்தரமூர்த்திநாயனார்.

தாதுகொண்டமலர்ச்சுரியற்பரவையெல்பாடனத்துணைமேன்மயற்குளிரின்ளர்வுதீர, வேதுகொண்டுவிழையுநெறிவிருமபிமாலுமவிரிஞ்சனுமுன்றேடாதவெளியையாரும், யாதுகொண்டுமறிவரிதாயெங்குமானவிரும்பொருளைநெருங்கிருளிரவின்மீளத, தூதுகொண்டார்தமையெமையாட்கொள்வீரென்றுசொல்விபவாபதம்புல்லிதொழுதல்செய்வாம். (௧௰)

மாணிக்கவாசகசுவாமிகள்.

செழியர்குலபதிகொடுத்தமாடுகொண்டுசென்றுதிருப்பெருந்துறையிற்செறிந்தசம்புப், பழிவிரவுபரிதிரள்கொண்டணைந்தமாறன்பணித்தவிடர்க்கிரங்கியருள்பாடிப்போற்றி, வழியமுதகிணையிலாயகுடமீதேமதுரையமாபரம்பரனைவந்திக்காநச், சுழிபெருகுபுனற்றரங்கவைகைவாய்மண்சுமப்பித்தாரபதாந்தலைமேற்சுமத்தல்செய்வாம். (௧௧)

சண்டேசுரநாயனார்.

மனுதிகளுக்கெட்டாதபரமானந்தவாழ்வினையங்கோரிலிங்கமணலாற்கூப்பித்தனுதியந்தனினின்றுந்தாபிததான் பாறைதந்த வனபாலாட்டவந்துதடுக்கத்தாதை, யெனுதவனறனிருபதமுமழுவாற்றுண்டித்திகழ்ந்தவனைப்பரபதத்தளிருத்திததானுமபிறுவியருளடைந்தவிறற்சண்டேசனருள்பிரசமலரிறைத்திறைஞ்சிப்பரசுவாமே. (௧௨)

மெய்கண்டதேவநாயனார்.

அல்லாதபரசமயவலகைதேர்விண்டகலவகல்புனற்பெண்ணையயல்சூழ்வெண்ணெய்ப், பொல்லாதவிபமுகததுப்புத்தேடனபாற்புனிதசிவாகமப்பொருணமைபொருந்தவாய்ந்து, நில்லாதநிலையிதுமறமெனறுமொன்றாய்நிறகுநிலையிதுவெனமெய்ந்நெறிதேர்ந்தியாரும், வெல்லாதசிவஞானபோதஞ்சொன்னமெய்கண்டான்சரணமுடிமீதுகொள்வாம். (௧௩)

திருத்தொண்டர்.

முன்னடையவரியசிவமுத்திபெற்றோர்முதலகிலதுவிரும்பிமுயலாநின்றோர், பின்னடையவருமவர்கண்முதலாயுள்ளபிள்ளையிளவெள்ளைமதிபிறங்குவேணி, மின்னடையுமணிமௌலிவேதகீதன்வெண்ணீறுங்கண்டிகையுமெய்விடாமற், றன்னடைநன்னெறிதம்மையுடைந்துளார்க்குந்தருந்தொண்டாபெருந்தொண்டுதலைமேற்கொள்வாம். (௧௪)

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௧௪.

சேதுபுராணம்.

அவையடக்கம்.

வெறியவென்பேதைமைவெளிப்படுத்துவா
னறிஞர்தொக்கிருந்தனையழைத்திராகவ
னெறிகடற்சேதுவினிராமநாதனை
நிறுவியகாதையைநிகழ்த்துகென்னவே. (௧)

தொடங்கினன்மற்றவர்சொல்வழாதரு
ளிடங்கொளுந்தாதையரிட்டகாரிய
மடங்கலின்றாயினுமமையுமாயினு
மடங்கெழுமைந்தர்தாமறுக்கற்பாலரோ (௨)

வேறு

ாதிமதிச்சடைநம்பனவின்றிடு
முதியவப்பழங்காதைமூவாறினு
ளதிகமெய்க்கதையாமுழக்காகுநற்
கதிமணிக்கடலாமபெருங்காந்தத்துள். (௩)

சிற்பரன்றிகழ்சேதுக்கதைவட
சொற்பரப்பைத்தமிழினான்சொல்லுத
லொற்கமின்றியுறவியொன்றாடகக்
கற்குழித்துநெறிசெய்யுங்காட்சியே. (௪)

வானளக்கபறவைகணமாந்
தானளக்கவிங்கூர்வனதாழையங்
கானளக்கர்வண்சேதுவின்காதையை
யானளக்கவென்றெண்ணியபின்னரே (௫)

பேயொடாடும்பிரான்றிறங்கூறுதற்
கேயுமென்னுரையென்னும்வழக்கிரு
லாயுநுண்புலவர்க்கிலையாகுமாற்
றீயதென்றுமறுத்துரைசெய்வதே. (௬)

குவிபுயத்துணைக்கோசலனேவலாற்
கவியுமொன்றுகடற்கரைகண்டதா
னவியமேந்தரனல்லருளாலிது
புவியில்யானும்புகலுதற்பாலனே. (௭)

ஆதிவெற்புமனுவுமுண்டாழியுங்
கோதிலாணின்குளப்படிநீருமுண்
டோதிமுற்றுணர்ந்தோருமுண்டோதிடாப்
பேதையேனுமுண்டென்செயும்பெற்றியே. (௮)

சொல்வகுத்தலருமையெற்சூழ்ந்திடா
சொல்வகுத்துப்பொருணிலைதோற்றியச்
சொல்வகுப்புக்கடந்தவன்றொல்புகழ்
சொல்வகுத்தல்சுருதியுமில்லையே. (௯)

இகழுமாக்கதைசெய்திடுஞ்செய்யுடான்
பகர்விருத்தமதாகும்படியின்மே
னிகரிலாதென்றுநின்றுநிலவிடப்
புகலுநூற்பெயர்சேதுபுராணமே. (௧௦)

வாழிமாரிவழங்குமணிமுகில்
வாழியந்தணர்மன்னவர்வாழிய
வாழிவெண்டிருநீற்றொளிவையகம்
வாழிவாழியுவைதிகசைவமே. (௧௧)

வேறு.

விரிதருபைங்கடலுலகம்புரந்ததனிவேந்தரெல்லாம்வியந்துபோற்ற
வரியமறைமுனிவாதமிழ்ப்பாவாணர்செவிநுகர்பேரமுதமாகத்
தெரிதரமுத்தமிழ்வடிக்குமுனிநிரம்பவழகியதேசிகனுஞ்செம்மல்
வரிசைபெறுவடமொழியின்சேதுமாக்கதைதமிழால்வகுத்திட்டானே. (௧௨)

அவையடக்கமுற்றிற்று.

ஆக செய்யுள் - ௨௯.

திருநாட்டுச்சிறப்பு.

தலைமைவளர்தமிழ்நடைவையெல்லையிரண்டினிலொன்றுதன்கணாக
நிலைமையுறுமற்றையதாய்நின்றவடவேங்கடத்தினீடுதென்பா
லலைவகலும்படிபடிநேர்நிறுவவருகுறுமுனிவனமர்ந்ததென்றன்
மலையமலைதருபொருநைவளமலிசால்புடையதொருவழுதிநாடு. (௧)

அனையதிருநாடுடையதருண்மிகையாற்றருங்கலைகொளளவையாட
னினைவரியபரம்பரனைக்கயனயனவல்லியொடுநெருங்கிச்சூழ்ந்து
புனையுமலரிறைத்திறைஞ்சியமரர்புகவிடமின்றிப்புறத்துநிற்ப
வனைதரளமணிக்கொங்கைமாதருடன்மைந்தர்தொழுமதுரைமூதூர். (௨)

உந்துசுடர்ஞானத்தையொருமூன்றுமுலையணங்காவுதவிப்போற்றி
யந்தமிலாவானந்தமருள்வடிவாய்மௌலிதரித்தரசுநல்கிச்
சந்தமலிதமிழ்ச்சங்கப்புலவரெதிர்நின்றுவிடைசாற்றததந்த
விந்தமதிற்கூடலுயர்பென்னாலும்பிறராலுமியம்பலாமோ. (௩)

பணியாப்புன்சமணீசர்பணியதனாற்பாண்டியன்மேற்படர்ந்தவெந்தீப்
பிணியாற்றவரும்புகலிப்பிள்ளையாரிருந்தமடம்பிறங்குகாட்சித்
தணியாப்பொன்கொழித்தெறியுந்தரங்கநதிவைகைவடசாரின்மேய
வணியாப்பனூருமுளைஉத்தடல்வழுதிவழிவளர்க்குமந்தநாடு. (௪)

பாடகக்காலுமைநகிலப்பாலருவிதழ்ப்பவளப்பாலனோடு
கோடுதப்பொய்யமண்வாதுகுறித்தபொழுதெதிரேற்றங்கொண்டபாடற்
றேடகக்கைம்மடமகளிர்துணைவரொடுங்குடைந்தாடுந்துறைநீர்வைகை
யேடகப்பொற்சிவபுரியுமியம்புதமிழ்த்திருநாட்டினிடத்ததாகும். (௫)

வளம்படியும்வயற்பாண்டிமண்டலத்துண்டலர்கமலவாவிமாடுந்
தளம்படிதண்டலைமருங்கும்பளிக்கறைசூழ்தலங்களினூர்தையலாரு
முளம்படியுமகிழ்நரும்போற்றுதிக்கைதழீஇமதக்களுழியுவட்டக்காம
ரிளம்பிடியுநகளிறுமுடன்விளையாடுங்கொடுங்குன்றமென்னும்வெற்பும். (௬)

முத்தூருஞ்சுரிமுகவெள்வளைதவழ்ந்துதிரண்டுமேனைமுன்றிலெங்குங்
கொத்தூருங்குழன்மடவாரடிபெயர்க்கவிடமின்றிக்குலாவுமோங்கன்
மத்தூரும்பெருங்கடலின்மலர்ந்தமலர்ச்சீதளநீர்வாவிசூழ்ந்த
புத்தூரும்புயறுளிக்கும்பொதியவரைத்தமிழ்நாட்டிற்பொலிந்துமன்னும். (௭)

வீடானைப்பிறவானைநினையானைமறவானைவேறொன்றோடுங்
கூடானைப்பிரியானைக்குணங்குறியொன்றில்லானைக்குகப்பிரானை
நீடானைமுகத்தானைப்பயந்தானைத்தொழுதமரர்நிரப்புநீங்கு
மாடானைநகருமுடைத்தன்னதமிழ்நாடதன்சீரளவிற்றோ. (௮)

மனவாயில்கடந்தகண்டவளரொளியாய்ப்பேரின்பமயமாயாரு
முனவாயிலகன்றகலாதொழியநினைவகம்புகுதுமொன்றைத்தொண்ட
ரினவாயில்பெறுமவர்கள்பெறவழங்கும்பெருந்தகையாலெவரும்போற்றும்
புனவாயிலுடையதவம்புரிந்ததுமுன்றமிழ்மலயப்பொருனைநாடு. (௯)

வானப்பேரமரருயர்மாளிகைச்சோபானவழிவந்துவேலைத்
தானப்பேர்நிலங்கெழுமித்தந்திமடுப்புகுந்தாடித்தலைவணங்கு
ஞானப்பேர்முனிவர்மனத்திருக்கோயில்வீற்றிருக்குநம்பன்மேய
கானப்பேர்கைதவனாட்டதுவாயிற்பிறநாட்டிற்கவினியாதோ. (௧௦)

கோவணமுங்கீளுடையுங்குலவுதிருநீற்றன்பர்குழாங்குழாமா
யாவணமுந்திருமடமுமாலயமுமிகநெருங்கியளப்பில்காட்சித்
தீவணங்கொள்சடைமுடியார்புகழ்விளம்புமொலியமரர்செவியிற்றாக்கும்
பூவணமுந்தமிழ்நாட்டிற்புரமென்றாலதற்குரைசால்புரையுமுண்டோ. (௧௧)

பருச்சுழியின்மிதக்குமதகரிபிலத்திற்புகப்பாய்ந்துபடருங்குண்டாற்
றுருச்சுழிமுன்னிரைக்கொள்சுரும்பொளிவளையாருந்திமிசையுரோமங்காட்டு
மருச்சுழிவெண்டிரையமலவான்யாறுபுனைமௌலிவள்ளல்வாழுந்
திருச்சுழியல்வளவர்திறற்சேரர்திருநாட்டுளதோதென்னனாட்டில். (௧௨)

கரங்குன்றம்படைத்தனையதாரகனுமுன்னவனுங்கருதிப்பெற்ற
வரங்குன்றவடிசுடர்வேல்பணிகொண்டமயிற்பெருமான்வள்ளிமுன்னர்ச்
சரங்குன்றமெனத்தகையவரிவிழிப்பூண்முலைக்கயமான்றனைமணந்த
பரங்குன்றமுள்ளதுமற்றேதிலதோகயற்றுவசன்பாண்டிநாட்டில். (௧௩)

பொற்றாலத்தமரர்கடல்கடைந்தமுதமெழுப்பவெழுபுவனமுற்று
முற்றாலமெழுந்ததுகண்டிரிதரலுமதுநுகர்ந்தமூர்த்திவேதஞ்
சொற்றாலநிழலிருந்தோன்சொரியருவியுடன்றுயில்கூர்தும்பிவீழுங்
குற்றாலங்குறும்பலவென்றிரண்டுமொருங்குளவழுதிகொற்றநாட்டில். (௧௪)

தீயின்றதெனத்தளிர்த்ததேமாந்தண்கனியுடைந்தசெந்தேனூறுங்
காயின்றகதலிபயில்கௌரியனாட்டணிதெரிக்குங்காமர்வேதம்
வாயின்றமறையவனுமதிப்பரிதாயலகினிலைமாண்பிற்றாகி
வேயின்றதனித்தாளமணிநிலவுவிட்டெறிப்பவிளங்குநெல்லை. (௧௫)

பூங்காடுதனிற்சங்கமொருமூன்றுமிருந்தனவெம்மீசன்றானே
நின்றுகெதிரிலைவேன்மீனவனாய்மௌலிபுனைவேட்கையுற்றான்
றென்றுடென்றமழகுடையநாட்டினையுந்தென்றிசைநாட்டினையுஞ்செப்புஞ்
சொன்றுநெறியதனாற்றமிழ்நாடெனதுவளஞ்சொல்லுந்தானே. (கசு)

வே று.

கூம்புடைக்கலன்குலாவுங்குரைகடலுடுத்தபாரில்
யாம்புகழ்மதுரைமுன்னாவியலுடைப்பதிகணீடு
தீம்புனற்பொருநைசூழ்ந்ததென்றமிழ்நாட்டிலெம்மா
லாம்படிதொகுத்துச்சொன்னவணியினைவகுத்துச்சொல்வாம். (கஎ)

கொள்ளுமாதரவின்றேனுங்கொடைக்குணம்விடாமையாலே
வள்ளியர்தம்பாற்கொண்டுவழங்கிடும்வண்மையார்போல்
வெள்ளியமுகிலினீட்டம்வீழ்ந்துவாய்வைத்துவேலை
யள்ளலம்பெருநீர்மாந்தியம்பரதெழுந்ததன்றே. (கஅ)

இன்னுயிர்க்கூட்டம்வாட்டமிசைந்தனகாணுமாபோன்
மின்னுவாள்விளக்கமேந்திவெங்கதிர்விரிக்கும்வேனின்
மன்னனையுரப்பிச்சீறிவைதல்போலிடிவழங்கிப்
பண்ணிறப்படைவிற்கோலிப்பரந்தனதிசைகளெங்கும். (ககூ)

நீர்முகந்தெழுந்தகொண்மூநெடுவிசும்படங்கமூடிப்
பார்முகம்வெயர்ப்புற்றென்னப்பஃறுளிசிந்திச்சந்தக்
கூர்முனைக்கோட்டுத்தென்றற்கொழுங்கிரிக்கரிமேற்றாவும்
போர்முனைச்சரங்களேய்ப்பப்பொழிந்தனபுயலின்றாரை. (உ0)

நிலையிலாநீர்மையாக்கநேர்ந்துழிநேர்ந்தவாங்கே
தலைமையோருதவுமாபோற்றண்டமிழ்முனிவன்வைகு
மலையமாசயிலமெங்கும்வழங்கியதருவிவெள்ளம்
விலையிலாமணிவெண்முத்தும்வெறுக்கையினோடுமன்றே. (உக)

பொதியமேன்மிடைந்தசந்தின்பொங்கர்வேரகழ்ந்துபார்மேற்
குதிகொளுமருவித்தெண்ணீர்கோடியர்பொருநைக்கோல
நதியிடங்கொளாமற்பொங்கியோங்கரிற்புரட்டிநார
நிதியினைநோக்கிச்செல்லுநெட்டணையுடைத்துநீங்கி. (உஉ)

வெஞ்சினமாறுகொண்டவிலங்கினம்வேறுவேறாங்
கெஞ்சலின்றொழுகியாற்றினிடையிடையெதிர்ந்துசீறு
மஞ்சரிப்படலைநீங்காவண்டினம்புதுநீராடு
மஞ்சொலாரளகம்பற்றியணிநெடுங்கரையிலேறும். (உங)

பூங்குலைக்காந்தடன்னைப்பொன்னவிழ்கணிமேலாக்கி
வேங்கையந்துணரைக்கோடன்மென்கொடிமீதுசேர்த்தி
யீங்கிவைபலவுமாறாவீர்த்தெழீஇக்கும்பயோனி
யாங்கமர்மலையவெற்பினற்புதங்காட்டுமென்னீர். (உச)

முறிபயில்கொடிகள்சுற்றிமுரணெடுங்கோடுதெற்றிச்
செறியுடைப்பொதும்பர்கல்லிச்சென்றிடும்பொருநைத்தீநீ
ருறுமலர்த்தருக்கள்சாயாதொழுகலானுறையுங்கூட்டிற்
பறவைகளென்றும்போலப்பயில்வனபறந்திடாமல். (உரு)

செழுமலைக்குறடுரிஞ்சிச்செய்யசந்தனத்தின்சேற்றால்
வழிபுனற்பொருனையாடுமொந்தர்தம்வடிவிற்சாந்தங்
கழியுமாறழுந்தத்தேய்த்துங்கழிஇயினமில்லையென்று
வழிவுறக்கரையிலேற்றராடுவர்மீளமீள. (௨௬)

இரைதிரைக்கடலிற்றுன்றேய்ந்தின்றிடுந்தரளந்தன்னை
நிரைகெழுதிகிரியீன்றநித்திலமெனவுநேரு
முரையுளங்கொண்டாற்போலவொலிகொணீர்ப்பொருனைதென்றல்
வரைதருமாரமெல்லாமருங்குறவொதுக்குமாதோ. (௨௭)

அடைகடலடையும்போதிலதனொடுமுல்லையாதி
யிடைநிலைப்பொருள்களெல்லாமேய்ந்தனவினத்தாலீன்ற
குடைபுனற்பொருனைமாதைக்குறிஞ்சிதான்வருணற்கீயு
நடைகெழுமணத்தின்காட்சிநாடுறுநயப்புற்றென்ன. (௨௮)

பெருகுமோராற்றிற்செல்வோர்பிரிவுழிப்பிரியுமாபோற்
றிருகுசால்கடுப்பிறைடித்திசைதிசைகால்வாய்முட்டிப்
பருகுநீர்பரந்ததெங்கும்பற்பலமுகத்தான்மள்ள
ருருகுசான்மகிழ்வினீண்டியுய்த்தனர்பழனந்தோறும். (௨௯)

ஊற்றமார்குடதிக்கென்னுமொருகுடிப்பிறப்பைநாடி
மாற்றிலாவருணன்றிண்டோண்மணந்திடாவைகைஞாங்காக்
காற்றலைநிறைத்துப்பொங்கிக்கலந்ததுகழனியெங்கு
மேற்றனருழவர்நேர்வந்தெழுகடலெனமுழங்கி. (௩௰)

கிளைத்தெழுபொருனையோடுங்கேடிலாவைகையோடுந்
திளைத்தணிபடைத்ததந்தத்தென்றிசைப்பொன்னிநாடு
துளைத்தமுள்ளரைக்காற்கஞ்சத்தூநிதியோடுந்துங்க
வளைத்தகைநிதிபெற்றோங்கும்வடதிசைத்தலைவன்போல. (௩௧)

வேறு.

வெள்ளவோதையும்வெள்வளையோதையு
மள்ளரோதையும்வன்பகட்டோதையும்
புள்ளினோதையும்பொங்கிப்பொலிந்தன
வள்ளலார்கலியோதையடங்கவே. (௩௨)

மின்னுவொன்றிருமேகப்பிடர்த்தலந்
துன்னியென்னத்துணைக்கருமேதிமேற்
பொன்னின்மாநுகம்பூட்டிவயிரத்தின்
மன்னுஞாஞ்சிறெடுத்தனர்மள்ளரே. (௩௩)

நெகிழ்ந்துசேறுறநீரினிரப்பியே
திகழ்ந்தவேருழுஞ்செய்கையின்மேயினா
மகிழ்ந்துமண்டிக்களமர்முன்வையக
மகழ்ந்தகேழலுமற்புதமெய்தவே. (௩௪)

மூண்டஞாஞ்சின்முனைக்கொழுநாவினாற்
கீண்டெடுத்தகிளரொளிமாழையு
மாண்டவேர்ப்படைச்சாலின்வழிமறித்
தீண்டுசங்குமெடுத்தெறிவார்சிலர்.

காரின்மேதிகழனிபுகும்பொழில்
வேரியுண்டுவெறித்துநகத்தலை
யூரிபோக்கலுமுன்சென்றுபற்றியவ்
வேரின்மீளவிணக்கிடுவார்சிலர். (௧௬)

வயலிற்றூக்கும்வராற்கொதுங்குற்றயற்
கயல்களொற்றக்கலங்கிநிற்பார்சில
ரியலுமின்னிசையேரொலிப்பாட்டினூற
புயலினூர்திபுகழிசைப்பார்சிலர். (௧௭)

வீறுமாக்கொடைவித்தகர்மெய்த்தவத்
தேறுபாத்திரமெண்ணுதல்போற்பழுஞ்
சேறுபார்ப்பனசெந்நெலின்வான்முளை
நாறுபார்ப்பனவாயினநாடெலாம். (௧௮)

பாலர்வேண்டுவபாலித்தவர்க்கவை
சாலுநாளிற்றரக்கொளுந்தாயர்போற
சேலுலாவுந்தெளிவயனீரெலா
மாலின்மள்ளர்வடியச்செலுத்தினார். (௧௯)

நல்வளங்கொளநாடொறுநாடொறு
மல்வளங்கொளுமள்ளர்வளர்த்திடப்
பல்வகைப்பயமுண்டெழில்பல்கிடுஞ்
செல்வமைந்தரினாறுசிறந்தவே. (௨௦)

வெண்மைசான்முளைவீங்கிவிரிந்தெழீஇத
தண்ணநாறுபச்சென்றுதளிர்த்தன
கண்ணினாடுங்கடையர்விதைத்தநா
ளெண்ணியெண்ணியிரட்டியுண்டெனனவே. (௨௧)

மாற்றிலாமுதல்கைக்கொண்டுவாணிகர்
வீற்றிலாபம்விளைவுழிச்சேறல்போ
னாற்றைவேறுபழனத்தினட்டுவா
ரூற்றமோடுபெறித்தாருழவரே. (௨௨)

மாறுநேர்ந்தெழுமன்னர்முடித்திரள்
கூறுதென்னன்கொணர்ந்துகுவித்தல்போ
னாறுசேர்முடிநன்குறச்சேர்த்தினா
ரேறுசெய்யுள்வரம்பிடமின்றியே. (௨௩)

பாயுநீர்விட்டுழுதுபரம்புமேற்
போயசெய்யுட்புகுந்தெழுகஞ்சத்திற
சேயதாள்வைத்துச்சென்றுகடைசியா
ரூய்நாற்றுநடுவார்தொடங்கினார். (௨௪)

பண்டுதாமவர்பாலிகையாரமு
துண்டதற்கெதிர்நல்குமுதவிபோற்
கொண்டுகாதற்கொழுநர்கொடுத்திட
வண்டுநோக்கியர்வார்மதுமாந்துவார். (௨௫)

மள்ளர்மாந்துவார்மங்கையர்வாய்ப்புகக்
கள்ளுவாரித்தங்கைகொடுபெய்குதன்
முள்ளுலாவரைமுண்டகப்பூமது
விள்ளுமாம்பலின்வீழ்க்கின்றபோலுமே. (சகூ)

வேரியுண்டிவியந்திருகைகளால்
வாரியுண்டுழிமாதர்மதர்விழி
சோரியுண்டெரிதூவழற்காய்ந்தவேல்
காரியுண்டிகோட்சியிற்றேன்றுமே. (சஎ)

வருவரேகுமினென்னமயங்கிவாய்
வெருவிவேறுவிளுவிடைகூறுவார்
முருகுவேரிமுகந்துண்பர்மீளவுந்
திருகுசிந்தைதெளிவடையாமலே. (சஅ)

கலைகுலைந்தமைகாண்கிலர்காழகத்
தலைகுலைந்தெனத்தாம்பிறர்க்கோதுவார்
நிலைகுலைந்துநெடிதுநின்றேடுவார்
வலைகுலைந்திடவாம்பிணைமானவே. (சகூ)

வெங்கண்மொண்டுமிசைந்தவெறியிரு
லங்கமுற்றுமருங்கிற்றள்ளாடுவார்
செங்கைகொட்டித்திரிந்தயலார்கள்போற்
றங்கள்செய்கையைத்தாம்பழித்தோதுவார். (ருo)

காடுசேர்மலர்க்காமதுவண்டுடன்
கூடவுண்டுகுமட்டியெடுத்தவ
ணீடுமெய்க்கலைகொண்டுநெடுவரம்
பூடுசாயுமுழத்தியர்தாஞ்சிலர். (ருக)

துன்றுகள்வெறியாலிவர்சோர்ந்தன
ரென்றுதாங்கிச்சிலரையெடுத்தவர்
நின்றிடாமனிலத்திடைவீழுமுன்
சென்றுதாம்விழுஞ்சேயிழையார்சிலர். (ருஉ)

பாடுவார்தமைப்பார்த்துப்பரதத்தி
ளுடுமாறிங்கழகிதென்பார்சில
ரோடுவார்பின்றொடர்வதையுற்றெதிர்
நாடு (ருங)

உணர்ச்சிமேலவருண்கினுமம்மரே
யணைக்குங்கள்ளுக்குமற்புதமாகுமோ
பிணைக்கட்பேதைமைபெற்றகடைசியர்
தணப்பினெஞ்சகந்தன்னைமயக்கலே. (ருச)

நன்னர்நாறுநடுகின்றமாதரோ
டன்னம்போவதறியாருழவர்கள்
செந்நெறுசிலமடவார்நடா
தென்னையோவறிதேகலென்றெண்ணுவார். (ருரு)

ஆன்றநீரினவரிதழும்பகந்
தோன்றுநீழலைச்சூழார்நடுந்திற
மேன்றுகாண்பவரென்னிந்நாறெல்லா
மூன்றுவீரிக்கயத்துளென்றோதுவார். (ருசு)

அலையுஞ்சேதகத்தம்புயக்கைபுக
முலைகொளுறுநடுஞ்சிறுமூரலார்
தலையுருவகைகட்டிடுந்தாங்களே
கலையுங்கூடநடுஞ்செயல்காட்டுவார். (ருஎ)

தளர்வுறுமுடிச்சாலியினுறெலாங்
களமர்மாதர்கழனிகளெங்கணும்
வளரநட்டுவரம்பினிலேறினு
ரளறுதீர்ந்திளைப்பாறும்பிணைகள்போல். (ருஅ)

இந்தவாறுநட்டேறியசாலிகள்
பைந்தளிர்க்கொண்டெழுந்துபடர்மழை
தந்தளித்ததகைமையுணர்ந்தபோன்
முந்திமேகமுகத்தினைமோந்தவே. (ருகூ)

விழைதகொண்கர்விழிக்கடையேவலா
லுழத்திமாதரொருங்குதிரண்டுறீஇத்
தழைத்தவுற்பலந்தாமரையாம்பலென்
றிழைத்தசாலியெழுங்களைகீக்குவார். (சுo)

வேறு.

செங்கமலமலர்களையார்தெரிந்துதெரிந்தவிழ்வாசப்
பொங்கமலவெண்கமலப்போதுபலகளைந்திடுவார்
கொங்குவிரிசேதாம்பல்குறையாமல்வெண்குமுத
மங்கைகொடுபறித்தெறிவாரகம்பொருந்தாரவைகளைய. (சுக)

மைந்நீலங்கடுமடவார்வயனீருண்மதர்விழிசே
ரந்நீழலஃதுணரார்களைந்துகளைந்தயர்வுறுவார்
கொய்ந்நீரின்மலரெடுத்துக்குவித்திடுவார்கோகனதங்
கைந்நீடிகாதிருந்ததெனக்கரமுதறிக்கரைந்திடுவார். (சுஉ)

நின்றெரியுஞ்சுடர்க்கமலநிரையிரண்டுமெருங்கிடுறெடு
முன்றெரிந்துகளைந்திடுவார்முயன்றெழுந்தவடிப்பெயர்ப்பைப்
பின்றெரிந்துசிலநளினம்பிழைத்தவெனக்காணுராய்
மின்றெரிவதெனமூரல்விளைக்கவவர்வெள்கிடுவார். (சுங)

உறுமினத்தாலுடனொருங்கியொண்மலரின்களையெடுப்பார்
சிறுமலர்த்தாள்கமடமிசைச்செலவைத்துச்சேயிழையீர்
புறவடியான்மிதித்தபிழைபொறுத்திரெனப்புகன்றிரங்கி
யிறுமிடையரர்கால்பிடிப்பாரிளவராலினைப்பிடிப்பார். (சுச)

ஆடுறுசீர்விளையாட்டினனமேற்கண்புதைப்பார்
பீடுறுதாட்டாமரையிற்பிறழும்வரிக்கயல்புதைத்து
நாடலர்சேதாம்பலின்கண்வண்டுமுரலொலிகேட்டு
மூடுகரந்தனைவெருண்டுமொழிந்திடுவாரெனப்பெயர்ப்பார். (சுரு)

கங்குபயில்வயற்சாலிக்களைமுழுதுங்களைந்திடுமுன்
வா
ரங்கணிணையணிவதனமவிரிதழ்சூழ்ந்தகலாமற்
பொங்களியால்வழிமயங்கிப்போக்கின்றிநின்றிடுவார். (௬௬)

மணிநீலஞ்சிலர்களையமலர்க்குமுதஞ்சிலர்களையப்
பிணியவிழ்வாரிசங்களையும்பெய்வளையார்கமலநடுப்
பணிலமுறங்குவகாணூஉப்பங்கயச்செங்கோட்டின்மிசை
யணிமலர்வெண்டாமரைப்போததிசயமென்றவைகளையார். (௬௭)

போதுபயில்களைகளைந்துபோக்குதலும்புணர்ந்தபெரும்
பாதகம்போயகன்றவழிப்பயனுதவுநல்வினைபோற்
கோதில்பசுஞ்சுருள்விரிதுக்கொண்டகருவெளிப்படுத்தி
யேதமில்சீர்வயற்பைங்கூழீன்றசெழுங்கதிரீட்டம். (௬௮)

தந்நிறத்தைக்காரியதிற்றந்துமுதறருவனபோ
லெந்நிறத்தவிதமெதறிநீரிரும்பழனத்திட்டவைதா
மந்நிறத்தவானகதிர்களவையலர்ந்தவாங்குழவர்
செந்நிறத்தசாலியிவைசெழுங்கரும்பனவெனத்தெருண்டார். (௬௯)

தரையைவளந்தருகெனவோர்சயவேந்தன்முன்றுறந்த
மரகதக்கோல்வயிரமுனைவாளியெலாமுடன்வாங்கி
நிரைதரவோர்பாற்குவித்துநிறுத்தினபோனீண்டெழுந்த
குரல்விரவுகொழுஞ்செந்நெற்குலவிநிலவினவெங்கும். (௭௰)

உவந்தெதிர்ந்தமொழிப்போரினுற்றபொருளுரைசெய்யுந்
தவந்திரிந்தபொதிமங்கைச்சாக்கியர்போற்றலைநிறுவி
யவந்தருசொல்லவர்வாதிலழிந்ததற்பின்றமிழ்விரகா
சிவந்தகழல்பணிந்தமைபோற்செந்நெல்லிளைகதிர்வளைந்த. (௭௧)

கைதவன்றன்றொடையடைவாய்க்கதிரரிவாள்கொண்டுழவர்
மொய்தவளவளைகுளிறமுழங்கொலிவாய்க்கிணையிரட்டச்
செய்திரிசேல்கயலபாயசெந்நெலரிந்தரிபரப்பி
மைதவழ்கந்தரவணக்காவடசிகரிபலவமைத்தார். (௭௨)

மெய்த்தவரைசசிறகரிந்துவிண்ணவர்கோன்வீழ்த்தியபோ
னுய்த்தநெடும்போர்சாயவுடங்கிருபாலினுஞ்சரிந்து
முத்தமிழ்க்கொற்கையர்பெருமான்முகிலைவிலங்கிட்டதுபோன்
மைத்தகடாவினமபிணித்துவளைவித்தார்வயமள்ளர். (௭௩)

துற்றபலாலததொகுதிதொடுத்துதறிச்சூழ்போக்கிக்
குற்றமொடுகுணமவேறுகுறித்துணருங்கொள்கையர்போ
லுற்றெழுங்கால்வரத்தூற்றியும்பருறவுயர்த்திட்ட
நெற்றிரளின்பொலியீட்டநெருங்கிநிறைந்தனவெங்கும். (௭௪)

ஆறிலொருபங்குலகமளிக்குமிறைக்களித்தைந்து
கூறுகொடுபணிதெய்வங்குலப்பிதிர்கள்விருந்துறவின்
பேறுதவியொன்றுகொடுபெருகுதிருப்பெருங்குடிமை
வீறுபதிபலவுளதமமேதகுதென்றமிழ்நாடு. (௭௫)

வேறு.

வருக்கையுங்கமுகுமாவும்வாழையும்வழையும்வாசத்
துருக்கமுமராமுங்கோங்குந்தூங்குபைங்குலையதெங்கு
நெருக்குசம்பகமந்தாரநீபொடலஞ்சுரபுன்னைத்
தருக்களும்பிறவும்விண்டோய்தண்டலையிடங்களெங்கும். (எசு)

கொம்பர்தாழ்பொங்கரெங்குங்கூவுவகுயிற்குழாங்க
ளம்புயப்பொய்கையெங்குமாடுவவன்னக்கூட்டஞ்
செம்பொனூர்தெருள்ளலெங்குஞ்செறிவனதேர்க்குலங்கள்
பைம்புனற்பழனமெங்கும்படர்வனபணிலக்கொள்ளை. (எஎ)

தண்கழைநெரித்துவீழ்ததசாறடுபாகின்கந்தந்
திண்கவைப்பொழிவிற்பல்லதேமலர்முருகுநாகக்
கண்கவர்பாளையாசங்களுவியோபொருகாற்காமர்
விண்கிளர்தருப்பூநாற்றமவேறுவேறுகநாறும். (எஅ)

ஏர்கெழுபொருண்மைவேட்டவிருநிலத்தவாகடம்பிற்
பார்கவாமுறையிற்கொள்ளும்பரிவருத்தனம்போற் * பாடுங்
கார்கெழுசுரும்பினீட்டங்கன்னியர்கோட்டுப்போதார்
வார்குழலேலமன்றல்வாங்குவதேங்காநீங்கி. (எகூ)

வாவியிற்றும்பிநீங்காவாவியையானளாவுங்
காவினிற்சுரும்புகாவின்கண்ணதேகாதன்மாதர்
பூவியற்சுரியல்வண்டுபுறஞ்செலாதொன்றுக்கொன்று
மேவியற்கந்தந்தாழ்வுமிகுதியுமின்மையாலே. (அ௦)

பாயுறைப்பட்டநாப்பண்பாட்டிசைவண்டவிழ்த்த
வாயிதழ்வனசப்பள்ளியகந்துயிலன்னங்காட்டுங்
காயழற்றூணததுச்சிக்கண்ணுருன்கலக்கமீக்கொண்
டோயுமாவுடனுறங்குமுலகுதந்தவனுறக்கம். (அக)

ஆடுறுமஞ்ஞைகார்கண்டரிவையரொளித்தல்காணூஉ
நீடுநம்மினங்களாடாநெறியெனோவென்றுநீங்குந்
தோடுறுசோலைநாளுந்தோகையர்துதைதலாலே
கூடுறுபருவமாறுங்குயிலினங்கூவல்காட்டும். (அ௨)

கடலெழுமிரவிபோலுங்கடிகொள்செங்கமலங்காமர்
மடலவிழ்வனசமபோலுமவனிதையர்வதனமன்னார்
படரொளிவதனம்போலும்பனிமதிபரந்தவானிற்
சுடருமிழ்திங்கள்போலுஞ்சுரிமுகச்சங்கமாதோ. (அ௩)

வாலொளிப்பணிலம்போலும்வல்லியர்கண்டங்கொல்லுங்
காலவேலன்னகண்ணூர்கந்தரம்போலுங்கந்தி
கோலவண்கமுகுபோலுங்கொழுங்கரும்பினியகன்னல்
போலுமாற்கிள்ளையன்னார்புகன்றிடுங்கிளவிதானே. (அ௪)

மெல்லியர்கூற்றுப்போலும்விளம்பிசைவீணைமிக்க
வல்லகிபோலும்பாடும்வண்டினம்விண்டபோதிற்
புல்லிசைத்தும்பிபோலும்பூவையர்நாட்டங்கூர்ந்த
வல்லன்னார்நயனம்போலுமாடவரங்கைவாளே. (அ௫)

* பரிவருத்தனம்—பண்டமாற்று.

துளங்குவாள்போலுமிஞ்சித்துஞ்சிமெஞ்சிற்றோன்றும்
விளங்கொளிமின்னுவன்னவித்துத்துப்போலுங்காவி
விளங்குயிலன்னார்தங்களிடுகிடையேழைநல்லார்
வளங்கொணுண்மருங்குபோலும்வாளரியேறுதானே. (அசு)

அரிவயவேறுபோலுமாடவர்கூட்டமன்னோர்
புரிதருங்குழலைப்போலும்பொருகடல்புரண்டுவீசும்
விரிதிரைநரலைபோலும்விரைமலர்ச்சோலைவேரி
சொரிமலர்ப்பொதும்பர்போலுந்தோகையர்சுருண்டவோதி. (அஎ)

சிலைநுதலார்கள்வாரிச்செருகுபூங்கோதைபோலு
மலைகொணீரருந்துமேகமறல்பொழிமஞ்சுபோலுங்
கொலையிபங்களிறுபோலுங்குறுமுனிபொதியக்கூட
மலையமாசிகரம்போலும்வளர்புயவழுதிநாட்டில். (அஅ)

மேகநேர்குழலார்செம்பொன்மிளிரொளிவதனம்போலு
மாகமார்சசிநீள்வானில்வருஞ்சசிபோல்வார்மாதர்
தோகையர்குறங்குபோலுந்துடைவைசேரரம்பைதுங்க
நாகமேலரம்பையன்னார்நன்னுதலார்கடாமே. (அகூ)

துணையிபமருப்புநேருந்துடியிடைமடவார்சொற்க
மணைதருசொற்கம்போலுமன்னநாட்டோர்களெல்லாம்
பணைகொள்சம்பகப்பூமானும்பாவையரவர்தநாசி
புணரிசைத்தநாசிபாடும்பூவையரோதிவண்டே. (கூ0)

கந்திமாணிழைசேர்மாதர்கந்தரங்காட்டக்கந்திப்
பைந்தலையுறங்குநீலப்பணிமுகிலளகங்காட்ட
வந்தநீண்முகிலிற்றோன்றுமலங்கொளிமின்னுவன்னார்
சிந்தூரநுதல்சேர்கூந்தற்சீமந்தரேகைகாட்டும். (கூக)

கிடங்குநீள்கடலிற்றோன்றக்கிடங்கருகுடுத்தஞாயிற்
றடங்கெழுபுரிசையோடாச்சலதிமேற்கலங்கண்மான
விடங்கெழுநாப்பண்வாழ்வாரேறியநாய்கரேய்ப்ப
வுடங்கமர்தலைவனீகானொத்துளவூர்களெங்கும். (கூஉ)

ஆலைபாயோதையன்றியந்தநாட்டகத்தின்வேறு
வேலைவாயோதைகேளாவிளங்குதாழ்காதிற்செம்பொன்
னோலைபாய்கண்ணார்மேனியொளியலாதும்பர்நீடுஞ்
சோலைபாய்முகில்கண்மின்னுத்துளங்கொளிதோன்றிடாதே. (கூங)

மருங்குயர்மாடத்தேறிமலர்க்குழல்விரித்துக்கோது
மருங்கவின்மடவாரன்றியடுக்கன்மேன்மயில்கள்காணா
நெருங்குபூஞ்சோலையெங்குநிரைவளையார்சொல்லன்றிக்
கருங்குயிலோசைகேளாகைதவன்கன்னிநாட்டில். (கூச)

சேட்படுகனகமாடச்சென்னியிற்செழும்பந்தாடல்
வேட்கையிலொருசாரேணிமீதிளமாதர்போத
றாட்புறங்கொளாதசெங்கேழ்ச்சுடருருத்தம்பத்தும்பர்
நாட்பணிமலர்மேலன்னநாடிவிண்ணடத்தன்மானும். (கூரு)

கன்னியர்வாணிபோலக்கழனியும்வள்ளைகாட்டு
மன்னவர்பாணிபோலவலக்கையுங்குருகுகாட்டு
மின்னிடையார்மனம்போல்வேலியுமுல்லைசேரும்
பொன்னனையார்தனம்போற்பொதும்பருமாரஞ்சேரும். (௯௬)

கொழுநர்தம்மார்புமாதர்கொங்கையும்பொறியின்மல்கும்
பழிதவிர்மனமுமல்குற்பரப்புமொண்கலையின்மன்னும்
விழிகளுஞ்சுரும்புநெய்த்தவிலோதமுமளிபடைக்கு
மழிவிறிண்டோளுங்காதுமலங்கல்வண்டோடுதாங்கும். (௯௭)

மாதர்தங்கண்ணுஞ்செப்பும்வார்த்தையுமுழையைமானுங்
கோதையர்மணிக்கழுத்துங்கொங்கையுங்கோடுபோலு
மேதமிலவரைம்பாலுமிடையுநீள்விசும்பையேய்க்கும்
பேதையரெயிறுந்தோளும்பிறங்கெழின்முளையைநேரும். (௯௮)

குற்றிடைமடவார்நாட்டங்குழலொடுகளவுகூறு
முற்றவரதாத்தோடுமொருவிசைகோபமூருஞ்
சுற்றுவாரணிந்தகொங்கைத்துணையொடுசூதுசாரு
மற்றவர்தளிரகட்டின்வரையொடக்தரங்கநேரும். (௯௯)

சுருள்பயில்கூந்தனல்லார்தோணிகராம்பணைக்குங்
குருமணித்தரளமாலைக்கொங்கையுமிகப்பணைக்கு
மருமலராம்பற்செவ்வாய்வாணகைதளவினீடு
கருமைசேரரிபரந்தகண்ணுங்காதளவினீடும். (௧௦௦)

சூழிமால்யானையோதைதுரகதவோதைவீணை
யேழிசையோதையெங்குமியப்பியவோதைமாதர்
வாழியலரங்கினோதைமறைக்கிடையோதைமல்கி
யாழிவாயரற்றுமோதையடங்கினுமடங்கிடாவே. (௧௦௧)

சுற்றுறுநகர்களெங்குஞ்சுடர்மதிலரமியங்க
டெற்றிகள்கோபுரங்கடெளிபளிக்களிந்தம்வேள்வி
பற்றியசாலைகூடம்பயின்மடமரங்கமாதி
வெற்றிடமாகியொன்றுய்விளங்கொளிவிண்ணளாவும். (௧௦௨)

மருத்துறழ்வாசியூர்வார்மதகயமுகைப்பார்மாலைப்
பருத்தகாற்றேர்நடாத்திப்படருவார்பயின்றமாடத்
தெருத்துகளிரவிவீசுஞ்சேயொளியுண்டுசேண்போய்த
தருத்திகழ்செம்பொனாட்டைத்தாரணியாக்குமாதோ. (௧௦௩)

ஆனகண்ணிமைத்தலென்னென்றன்னநாட்டவரைத்தேவர்
மேனிலைநமரென்றோடிமேவியும்விழித்தேநிற்ற
லூனமில்விளையாட்டென்னவும்பரையுவர்தழீஇயும்
வானவர்நரரென்றிந்தமண்டலக்கிருமையின்றால். (௧௦௪)

ஆண்மகச்செய்கைமுற்றுமன்னநாட்டாடவர்க்கே
மாணிழைத்தெரிவைமாசீர்மருவினரவண்சேர்மாதர்
பூணுமில்லொழுக்கம்பூண்டபுண்ணியரங்கண்வாழ்வார்
காணிலங்காட்டினேரேகற்றவர்கலைகண்முற்றும். (௧௦(

பதிநிலைமரபுமெண்ணில்பசுக்களதியல்பும்பாசம்
பொதிநிலைமுறையுமேனைப்புறநெறிவழக்கும்பொய்யா
விதிநிலைவிலக்குமின்பமெய்ப்பொருட்டுணிவுமாகுங்
கதிநிலைதெரிக்குந்தொன்னூற்கவிஞர்சேர்கழகமெங்கும். (௧௦௬

பன்னுசீர்க்கிள்ளிநாடும்பைந்தமிழ்நாடதேனு
மின்னிசைத்தமிழிஞானிருப்பதுமலயவெற்பிற்
பொன்னிபோற்பொருநைதானும்பூம்பணைவளங்களினுங
கன்னிநாட்டிதுபோன்முத்தங்காவிரிகான்றிடாதே. (௧௦௭

பங்கயங்கழுநீராம்பல்பசுங்கொடிப்பாசிவள்ளை
சங்கெழின்ஞெண்டியாமைத்டவராலிவைதயங்கிக்
கொங்கியல்வாவிமானுங்கோதையர்குழாம்பின்பற்றி
யங்குழலளியராகுமாடவர்கணங்களெங்கும். (௧௦௮

இல்லமென்கிளவியந்நாட்டிருப்பவரிசைக்குங்காலை
வெல்லருங்கேள்விமேலோர்விதித்திடுமிலக்கணத்துட்
சொல்லிடும்பெயரேயேனைத்தொழிற்குறிப்பிரண்டினுள்ளு
நல்லதோர்பெயரேயன்றிநவின்றிடநாடிடாரே. (௧௦௯

அருள்கொளாக்கடியகூற்றோடாம்பயனடையாமாற்ற
மருள்கொளுங்கிளவிதீயவஞ்சமார்குறளையென்னுந்
தெருள்கொளாவிழிசொன்னான்குஞ்செப்பிடார்தென்னனாட்டார்
பொருள்கொளாருருச்சொலாயும்போதினுமிறிஞிபோல. (௧௧௦

இன்கொடைப்பண்புதம்பாலில்லரோவுளரோவென்னி
னன்கொடைப்பொருளன்றூவிநயக்கினுநயந்தோர்கேட்கு
முன்கொடைப்பாலராவார்முழுதுநின்றிரந்திட்டாலும்
பின்கொடைப்பாலராகார்பெருவிறல்வழுதிநாட்டார். (௧௧௧

மாரவேள்கவிகைமாறன்வழிமுதன்மந்தக்காலு
மாரமும்பொதியநல்குமாதலாலணிசேர்கன்னிப்
பேருறுநாட்டதின்பம்பேசிலந்நாட்டினோரே
சேருவர்வீடும்போகந்தீர்ந்துழிச்சேர்தலாலே. (௧௧௨)

தருமபயமாறறலாலதந்தையைங்கர்க்குந்தமபா
லிருந்தனமீகையாலேயீன்றவளேய்க்குமெண்ணில்
வரும்படியளித்தலாலேமன்னவன்மானுமாட்சித்
திருந்துவீடுதவலாலேதேசிகனுந்தென்னாடு. (௧௧௩)

வேறு.

மாதரோதிபுனைவதுமாலையேமாலைநல்கவருவதுமாலையே
கோதைமாரிடையொப்பதுநூலையேகூறுகின்றதுமுத்தமிழ்நூலையே
வேதவேள்விபுரிகடன்வேலையேவீணிழைப்பதின்றியிடும்வேலையே
காதலர்க்கியமீவதுகாலையேகருதுகின்றதுகண்ணுதல்காலையே. (௧௧௪)

மானனார்முலைவாரணகும்பமேவாயின்மேயதுபூரணகும்பமே
தானமயாவையுநந்தவனங்களேதணிவர்வந்தவர்தந்தவனங்களே
பானமேயதுவாசநளினமேபயிலுமானவர்பேசனளினமே
யானகேணியுறுமுற்பலங்களேயன்பர்கூட்டம்பெறுமுற்பலங்களே. (௧௧௫)

வேறு.

வடிவமாதர்கழுத்தும்வளைகளே
கடியகண்ணுங்கருங்குவளைகளே
நெடியகாதுநிரந்தவளைகளே
யொடிவிலாதவுரையும்வளைகளே. (ககரு)

மருவுமாதர்கண்மானுவவாளியே
தெரிவைமார்குழைசேர்வதும்வாளியே
பொருவராடவர்பூந்தனுவாளியே
வெருவுநேரவர்மேவிடவாளியே. (ககஎ)

வங்கவேலைவரும்வாரணங்களே
பொஙகுவீதிபொரும்வாரணங்களே
யங்கணோதுவதாமாரணங்களே
தங்குவாரிலர்தாமாரணங்களே. (ககஅ)

கொண்டசெய்கைவிடாதகொடிறுகள்
விண்டுயிரப்பனவேரியம்போதுகள்
கண்டிகைப்பனகாணுறுமானினந்
தண்டமேவுவதந்தியினங்களே. (ககக)

வல்லிசேர்வனவண்டிமிர்முல்லைகள்
கொல்லிபாடுவகோமளவண்டினம்
புல்லிநீப்பனபூவிரிகோரகை
யல்லியற்கையவாயிழையார்குழல். (கஉ0)

ஆயிரங்கவைநாவரவஞ்சொல
வாயிரங்கரவாணன்பொறிக்கினும்
பாயிரும்புகழ்ப்பாண்டிநன்னாட்டணிப்
பாயிரங்குறைவுற்றிடும்பாலதோ. (கஉக)

திருநாட்டுச்சிறப்புமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - கசக.

கந்தமாதனச்சிறப்பு.

யாம்பகர்தென்னநாட்டிலிமையவரமுதமின்றித்
தாம்பசித்தடைந்தபோதுந்தாங்குமெய்த்திருவிளோங்கி
மேம்படுசேதுவின்கண்விரிதருதரங்கவேலை
வாம்புனலுடுத்தகந்தமாதனச்சிறப்புச்சொல்வாம். (க)

வேறு.

ஏர்பயிலிராமனன்றிராமநாதனும்
பேர்பயில்சனைப்பிரதிட்டையாற்றியே
சீர்பயிலருச்சனைசெய்தவெல்லையாங்
கார்பயில்சாரல்சூழ்கந்தமாதனம். (உ)

அருவருளன்றியேயம்பிகாபதி
[illegible]டெங்
கருவருளாநெடுங்கந்தமாதனத்
திருவருளாற்சிலசெப்புவாமரோ. (௩)

வெண்ணதிதவழ்மதிவேணிதாங்கலாற்
பண்ணமர்பசுங்கொடிபடரும்பாங்கினாற்
றிண்ணவெங்கூற்றுவன்சேர்கிலாமையாற்
கண்ணுதலனையதுகந்தமாதனம். (௪)

விரியுமாலாழிவெண்கோடுமேவலா
லுரியதன்னடிவரையுலகடங்கலாற்
புரிமலரிலஞ்சியாற்புவனம்போற்றலாற்
கரியவனேருமாற்கந்தமாதனம். (௫)

உருப்பயில்குவலயமுதவுபட்டமுற்
றிருப்புறுகமலமேய்ந்திலங்கநான்முகம
விருப்பினுன்மான்கலைமேவியாடக
கருப்பனைநிகர்வதுகந்தமாதனம். (௬)

அணைப்பருமுந்தியாலாரக்கோட்டினு
லிணக்கிகீள்பொன்வரையெழுதன்மாண்பினல்
வணக்கவினுன்றவாய்மருவுநகாப்பினுற்
கணப்பிரானனையதுகந்தமாதனம். (௭)

சந்தனமிசைமுலைவள்ளிசாாதலா
லந்தமில்சூர்க்கணமறநெருங்கலாற்
சுந்தரமயின்மிசைத்தோன்றுங்காட்சியாற
கந்தனையனையதுகந்தமாதனம். (௮)

விண்டகைநாகமேலாருமேன்மையாற்
கொண்டலூர்சசிதலைக்கூடுங்கொள்கையா‌ன
மண்டுகட்பலவினுல்வயங்கிவாணிலா
கண்டலன்போல்வதுகந்தமாதனம். (௯)

மன்னுநீடாவிதன்வயினிடைப்பல
துன்னலாற்றுனைக்கைநீள்வேழந்தோன்றலா
லுன்னருமரணிடததோங்கலால்வரைக்
கன்னியையுறழுமாற்கந்தமாதனம். (௧௦)

அஞ்சனமாலணையரவப்பள்ளியால்
விஞ்சுநற்செங்கனகங்கொண்மேனியா
லெஞ்சலின்மதனனையும்பலெய்தலாற்
கஞ்சமின்னிகர்வதுகந்தமாதனம். (௧௧)

அலர்கொள்வாறமுமரையதன்கண்வாழ்வதாய்
நிலவுமெய்த்தவளமுநீடிநித்தனு
மலகுணர்வுறல்சிறந்தோதியாதியாய்க்
கலைமகட்புரைவதுகந்தமாதனம். (௧௨)

முயறவமுனிவரான்முழங்குவெண்ணிறப்
புயறவழ்ந்தெங்கணும்போர்த்தபொற்பினு
லயில்விழியுமையுடனரனிருத்தலாற்
நனம். (௧௩)

மணநிகர்வானரமலைத்தகோடுறீஇப்
புனிதவிண்ணுருத்திடும்பொன்னின்மாண்டுக
ளணிலமுற்றெடுத்திறைத்தடங்கமூடலாற
கனகவெற்பனையதுகந்தமாதனம். (௧௪)

ஷடச
சிந்துவினருகுறீஇத்திகழுங்கூலமே
லந்தரரமுதெழுந்ததற்பினேற்றிய
ஏகந்தமாதனம். (௧௫)

கழைநிரைமுனைத்தலைககனநாட்டினைப்
புழைபடச்செருகியேபொருதுநிற்றலா
லுழைபயில்வோர்சிரத்துரிஞ்சிடாதுவா
னெழவிசைத்தூன்றியகால்களேய்க்குமால். (௧௬)

ஆதிமீன்ஸ்ரேணியீறவற்றின்வண்ணமாய்
வேய்தருநித்திலம்விளங்கிதோன்றலால்
யாதுநாள்பல்குதற்கேதுவீங்கெருச்
சோதிநூலறிஞருந்துணுக்கமெய்துவார். (௧௭)

தள்ளுறவெடித்தவாய்த்தரளம்வீழ்த்திடா
வள்ளியற்றிகிரிகள்வானரக்குழா
மொள்ளிகலரக்கர்போட்டோடுநாட்கவர்
வெள்ளியீட்டிகணிறீஇவிட்டபோலுமால. (௧௮)

கோளுறுகுனிதலைக்கோட்டின்மின்றொடு
காளமாமுகிற்கணங்கவவிநாலுவ
தாளுறுகவிப்படைதடிந்தரக்கர்கை
வாளொடுதூக்குகாவட்டணங்கள்போல். (௧௯)

காலமாமழைக்குலங்கடியவாடையாற்
கோலமார்குவடொரீஇக்குமுறிசசேண்செல்வ
வாலவுணரனருளாலிராகவன்
பாவிராவணன்பழிபாறல்போலுமே. (௨௦)

விள்ளுறுபாழிவாய்மின்னியேயுட
னுள்ளுறமூடியங்கொடுங்குகார்க்குல
நள்ளுறையோகினிநலங்கொண்முன்றில்வாய்க்
கொள்ளிவாயலகையின்கூட்டம்போலுமே. (௨௧)

துறுமுதிண்காம்பினத்தூணமெங்கணு

விறையுருவெயில்படாதிராமனன்றுகா
ளறுவையினமைத்தகூடாரமொக்குமே. (௨௨)

விற்பயின்மின்னுடன்வேறுவேறுநீஇப்
பற்பலமழைத்திரள்பரவித்தோன்றுத
லுற்பவந்தொறுமரனுருவம்போற்றிய
சொற்புகழிராகவர்தொகுதிபோலுமே. (௨௩

ஒளிர்நிழலெதிர்படவுருத்துமண்டியொண்
குளிர்பளிக்கறைநிலங்குழியக்குத்தியே
மிளிர்நிழல்கீழுறமீளும்வீழ்ந்ததென்
றளியறைநனைகவுளடுக்கன்மாடெலாம். (௨௪

இடித்திடுமொலிகளிறைக்குமெங்கணும்
பொடித்திடுதுளிமழைபொழிந்துலாவிடுந்
தடித்துருதிதுமுகிற்சாதிபேதமென்
றடித்தலையவர்சொலற்கமையும்வேழமே. (௨௫)

திறங்கெழுவரைப்புனல்சேரவெள்ளராப்
பிறங்கவிற்பற்றிநால்பெற்றிகண்டவர்
கறங்கருவியிற்சிலககனத்தங்ஙனே
யிறங்கிடாதொழிவதென்னென்னமன்னுமே. (௨௬)

ஞாற்சியிற்றிரண்டவந்நாகநல்விளங்
காற்செறிபொதும்பர்சூழ்கந்தமாதன
மேற்செறிமாதவர்விரித்துலர்த்திய
பாற்செறிபின்னலின்படலைபோலுமே. (௨௭)

கடன்முகந்தேறியகாளமேகமு
முடனிவரும்பலுமுருண்டுவீழ்வன
படரொலியருவியிற்படியுமாந்தரைத்
தொடரிருட்பிழம்பினிற்றுணிகள்போலுமே. (௨௮)

வெண்டுகில்விரித்தபோல்வெற்புரிஞ்சிட
வண்டமார்மதியுமிழமுததாரைபோற்
றொண்டர்மெய்ஞ்ஞானவெண்சுடரின்கற்றைபோற்
றண்டவிலருவிகடயங்குமெங்கணும். (௨௯)

நிச்சயமிந்துவினீன்மையன்றிஃ
தச்சமினிறைமதிக்காசுண்டாகுமோ
வுச்சியிலவ்வரையோங்குதண்டலைப்
பச்சிலையுரைப்புறும்பசுமையாகுமே. (௩0)

இனியமுட்பழங்கவியினங்குடைந்திட
வணிபுரையரவுமிழ்மணியின்வீழ்மது
முனிவரர்சாலைமுன்முளைக்குமாதுள
நணிவிரைப்பெய்குடநாரம்போலுமே. (௩௧)

தலைமுகிலளகமாத்தவளத்தாரகை
யலைகுழன்மல்லிகையலரின்சூழலா
வுலையிடைகொம்பராவுயர்தருக்குலஞ்
சிலைநுதன்மாதரிற்சேணிற்றோன்றுமே. (௩௨)

கற்பகமரனென்னக்கந்தமாதனத்
திற்றிளர்தருக்களையிரந்தியாசகர்
நற்பொருள்வழங்கிலநம்மைப்போலவே
யொற்கமுற்றனகொலோவுவையுமென்பரால். (௧௩)

ரிப்பருமிருபுறத்தருவினீள்கவை
பிணிப்புறுகொடிகளிற்பிச்சமேல்விரித்
தணிக்குலமஞ்ஞைகளகவியாலுவ
மணிக்கயிற்றூடும்வேழம்பமாதர்போல். (௧௪)

நண்ணியவானரங்குனிப்பநாப்பணே
மண்ணூறுநாழிலான்மருங்குமீப்படர்
தண்ணடைகோடிலாத்தருக்கடோன்றுமாற்
கண்ணுளர்நிறுவியகம்பமென்னவே. (௧௫)

கொய்யலர்குளிர்சுனைகுளித்துநாடொறுஞ்
செய்யவெங்கதிரெனத்திரிவன்சூரியன்
றுய்யநீரவருடன்றொடர்புண்டாயினும்
வெய்யவர்விடுவரோமிக்கதன்மையே. (௧௬)

குயில்களுமளிகளுங்கொழும்பைங்கிள்ளையு
மயில்களுநெருங்கலால்வாசவண்பொழில்
பயிலும்வேண்முனிவர்மேற்படையிறங்கிய
வெயிலுறுபாசறையேர்படைக்குமே. (௧௭)

கால்வளர்முண்டகக்காமர்பூஞ்சுனைச்
சேல்வகைதிரிவனதிரண்டுசேணிடை
யேல்வைகண்டுவெந்திடுமிலேகமாதரார்
நீல்வரிமதர்விழிநீழலொக்குமே. (௧௮)

பரவுநாசசுனைதனைபம்பாதுந்தபாசடை
கரவிலாமுண்டகக்கன்னிகாந்தனு
மிரவிமாமருகுநேரெய்திடாமலே
மரகதவாடையான்மறைத்தல்போலுமே. (௧௯)

விரைக்கயமதனிடைவேந்தன்வைகிடு
நிரைக்கொள்விண்ணுலகெலாநிழலிற்றோன்றுதல்
வரைக்கருந்தவத்துருவாசனுணையாற்
றிரைக்கடலுள்விழுஞ்செய்கைபோலுமே. (௨௦)

அலர்க்கதிரிரதமேலாடுங்கேதனங்
கலர்க்கிடங்கொடுத்திடாக்கந்தமாதன
மலர்க்கயத்தமிழ்ந்தியேநனைந்தவான்றுகி
லுலர்த்தியவெடுத்தெடுத்துதறல்போலுமே. (௨௧)

இவரிமைக்கணிற்சிலவிமைத்திடாவென
நவிலுதற்குடன்படநாளுஞ்செய்வதோ
தவருறைகந்தமாதனத்தின்சால்பினை
யுவகையாலும்பர்தாமுற்றுநோக்கலே. (௨௨)

மேவினரின்புறீஇமீள்கிலாமையாற்
றூவறுகந்தமாதனமரன்பதம்
யாவரும்புகுவரென்றெண்ணிவெற்பென
நாவலர்மறைத்தனர்நவின்றதாகுமே. (௪௩)

கதலியங்கனிநறுக்கால்கொண்மாங்கனி
மதுமரீஇயியவையின்மல்கியுந்தியே
முதிர்பலாப்பழங்கொடேன்முகப்பமாதிர
மதிர்வுறவரும்பெருநதிகளாகுமே. (௪௪)

பாங்குறீஇயுலத்தின்மேற்பயிறருக்களிற்
றூங்கிறூன்மதுத்துளியதனிற்றூவுத
லோங்கல்வாழ்சிவபிரானுருவத்துச்சிமேற்
றூங்குபொற்சீதளத்தசும்பினீடுமே. (௪௫)

நிரைதரமாடுசூழ்நெடுந்தருக்களின்
விரைதருபன்மலர்மெய்ந்நிறங்கொளும்
வரைசெய்வெண்பளிக்கறைவட்டம்வைத்திடு
மிரசதகோடிகத்திலங்கித்தோன்றுமே. (௪௬)

தேவரூரணித்துறச்சென்றுங்கற்பகக்
காவினில்வீழ்ந்திடாகந்தமாதன
மேவுதண்டலையளிவெறிமிக்கில்லையாம்
பூவினில்வண்டுறுதென்கைபொய்மையே. (௪௭)

நாடுவிண்மாதரைநகமடந்தையர்
கூடுழியோதியிற்குரைக்கும்வண்டினந்
தோடுறுகுழன்மதுத்துய்க்கலாவவ
ரோடிவர்சுருணலமுரைப்பதொக்குமே. (௪௮)

முந்துநங்குறைகளான்முனிந்துரித்தனை
யெந்தையிங்கருளினியென்றபோலரன்
கந்தமாதனந்தனைக்கலையிபம்புலி
யைந்துவாய்விலங்கிவையடைந்துசூழுமால். (௪௯)

தேடுபொன்வரைமுதற்சிலம்பியாவையுங்
கேடுறுதிதனொடுகேண்மைகொண்டபோற்
கோடுறுமருவிகள்கொழித்தபொற்குவை
மாடுநின்றிலங்கிடுமணிக்குவால்களே. (௫௦)

அந்தரத்துறையுமோவண்டஞ்சேய்மையாற்
றந்தனவிழிக்குவைதஞ்சமில்லபோற்
கந்தமாதனமெனக்கட்டுரைத்திடு
மிந்தமால்வரைத்தலையிருப்பதுண்மையே. (௫௧)

வரிமுலையுண்டிடுமான்மறிக்குழா
மரியுடன்கண்படுமானைக்கன்றுக
ளெரிவெயிற்கிளர்வராவிப்பொருப்பின்மால்
பரிவிரிசிறைநிழற்பரப்பொதுங்குமே. (௫௨)

மாணிலமையோர்முனிவரர்கள்யாவருங்
காணருமூவருமிதன்கட்காணலாற்
றூணுவாங்கந்தமாதனம்புக்கார்கள்போற்
சேணிலாருளரெனவையஞ்செப்புமே. (௫௩)

பொருவிறண்பளிக்கறைபோலத்தோன்றியே
மருவுறவமிழ்த்திடும்வாசப்பூஞ்சுனை
திருமுனிவேடமாய்ச்செல்லுமாதவ
ருருவுயிர்கவரும்வில்வலனையொக்குமே. (௫௪)

புல்லலைபுதலினூற்பொதிந்துமேலெழாய்
பல்லலைவிடவராப்பாதலம்புகுங்
கல்லலையுணர்விலாக்கடைப்பிறப்பினோ
ரல்லலைநெஞ்சகமென்னலாயதே. (௫௫)

கரியனவெளியனகாமர்பொன்மைய
வரியனபுகரனவரத்தமெய்யன
பெரியனசிறியனபிறங்கற்பஞ்சர
முரியனபுள்ளினமுலாவுமெங்கணும். (௫௬)

எண்கொடுகேசரியிணங்கியோருழைக்
கண்கவர்கங்குலும்பகலுங்காட்டுவ
வண்களிமடமயின்மாதர்மாட்டுறீஇப்
பெண்களோரிருவர்சேர்பெற்றிகாட்டுமே. (௫௭)

மட்டறப்பகைத்துவால்வளைத்தகோம்பினோ
பட்டிடக்களிமயில்பரதஞ்செய்வன
வெட்டடிப்பறவைமூக்கிடையுரிஞ்சிடுங
கட்டுடற்றினவுதீர்காதலாளியே. (௫௮)

எயினரைவெரீஇச்செலுமேணமக்குலம்
பயின்மடவாரவைபாறும்வட்டையின்
வயினுறீஇக்கிளையெனவைகச்செய்கையா
லயனிலையவர்விடும்பார்வையன்னதே. (௫௯)

கூனுடைவெஞ்சிலைக்குன்றவாணர்தா
மானுடன்புலிபடவளைத்தவார்வலை
யினமார்வலியரோடெளியர்க்கீறுசெய்
கோனுடைவன்கொடுங்கோலைப்போலுமே. (௬0)

அருள்விடாமுனிவர்போலவர்செய்வேள்வியைப்
பொருள்விடாமைந்தரும்புரிவுற்றூடுவார்
தெருள்விடாவமுதவான்றிங்கள்போலலா
திருள்விடங்காறுமோவிளையதிங்களே. (௬௧)

கறுவுநெஞ்சவருறுக்கந்தமாதனத்
தூறுநாருயிர்ச்சுவையுணர்ந்தகூற்றமும்
பெறுதவமுனிவர்மேற்பிரசவாளிதூய்
மறுவுறுதேகியமதனுமில்லையே. (௬௨)

விலங்கன்மற்றதனிடைவெயிலின்வாடிய
வலங்கிளமென்றளிராடல்வல்லியும்
வலங்கெழுமறைத்தழல்வல்லமாதவக்
கலங்கழிவல்லியுங்கண்டதில்லையே. (௬௩)

மகங்கெழுபண்ணவர்மகார்மருங்குறீஇச்
சுகங்களும்பூவையுஞ்சுருதிகற்பன
விகம்பரமிரண்டினுமிவ்வென்றுள்ளவோ
வகங்கொணற்சார்பினோர்க்கடைந்திடாதவே. (௬௪)

ஆணியந்தொறுங்கதிரடையச்சேந்துவிண்
மேனிபின்கருகலால்விளம்புமம்மலைத்
தானமாதவர்மகத்தழற்கொளுந்தியே
வானகம்வெந்ததாமாலையென்பதே. (௬௫)

குரவர்சூழ்கிரியறல்குதிக்குமோதையுங்
கரவரைமுழக்கமுங்களுவிவிம்முறும்
விரவுமிட்டியினழல்விடுஞ்சுவாலையு
மிரவெரிமரங்களுமிடைமயங்குமே. (௬௬)

கற்கெழுசிகரமார்கந்தமாதனக்
குற்குலுத்தாவமுற்றெழுந்தகுய்யுறு
நற்கனம்படிதலானரலைசேர்புலால்
வற்கமுங்கமழ்ந்திடும்புலவுமாற்றியே. (௬௭)

கொம்பொடுதூங்குதேன்கூட்டிலீக்கணம்
பம்புபேரரவமும்பரவையோதையு
மிம்பரிலக்கிரியிருக்கின்றோர்க்கலால்
வம்பலர்வகுப்புறுமாண்பிற்றோரிடம். (௬௮)

அடைபயிறருமிடைந்தாதபம்புகற்
கிடைவெளியின்மையாலென்றுங்கங்குலா
நடையதோரிடமணிநாகம்வைகலா
லுடையதுபகற்பொழுதென்றுமோரிடம். (௬௯)

நனிமிகுசராசரநாமங்கொள்ளுயிர்
முனிவறவாக்கலான்முழுதுங்காக்கலாற்
பனிமலர்க்கண்ணிருபகவரன்றியுந்
தனியுலகளித்திடுந்தகையதவ்வரை. (௭௦)

ஈங்கிதனுச்சிநீத்திலங்குவானமு
மீங்கிதன்சாரல்விட்டிருக்கும்வையமு
மீங்கிதன்றுளலாப்பிலமுமின்மையா
லீங்கிதன்கண்ணுயிரேகிமீழ்வதே. (௭௧)

அதனிடையுணவெலாமாகுஞ்செய்கையா
லதனிடைமருந்தெலாமமருந்தன்மையா
லதனிடையீறுறுதாகலானுயிர்க்
கதனிலையேநிலையாகவேண்டுமோல். (௭௨)

இலைத்தடஞ்சூலினனேதுவின்றெலா
நிலைத்திடல்வேண்டலனீண்டமேருவு
மலைத்திடலாலஃதன்றுவையக
முலைத்திடாதமைத்தவிவ்வோங்கல்போலுமே. (எங)

நண்ணிளமாதரார்நாடிநேரொலி
தண்ணுறுகந்தமாதனவிலங்கலின்
கண்ணுளாரெவரெனக்காண்டுமென்றுபுக்
குண்ணிறைமுழையிருட்கொல்கிமீளுவார். (எச)

ஓவறுநெடுங்கணக்கோதிடுஞ்சிறார்
வாவெனவரையயல்வருவர்தேருவர்
போவெனயாரெமைப்போகென்றாரெனக்
கூவெனவெங்ஙனேகூப்பிடென்பரால். (எரு)

பொற்புவிமுதலியபுவனம்யாவினு
மற்புதமுடையதொன்றடையிலாங்கது
கற்பருமுழைபயில்கந்தமாதன
வெற்பினிலுள்ளதாம்விளம்புங்காலையே. (எசா)

சிந்தையின்மூவருந்தேடியெய்தரு
மந்தண்மாண்பொருள்களுமதன்கணுள்ளவாங்
கந்தமாதனவரைக்காண்கிலாப்பொரு
ளெந்தவானுலகினுமில்லையாகுமே. (எஎ)

அலங்கலையடிவரையறைதல்பேனமா
மிலங்கலரிட்டிசைமறையியம்பியே
கலங்கெழுகடற்பிரான்கந்தமாதன
விலங்கலாமரன்பதம்விளக்கல்போலுமே. (எஅ)

முறிபடுதுகிர்களின்மொய்த்தநித்திலங்
குறிகொள்விற்கோடியிற்குடைந்துளோர்பவந்
தெறிகெடவோடுதல்கண்டுதெண்டிரை
நறுநுதல்கொண்டபுன்னகையைமானுமே. (எகூ)

ஊக்கமார்பலகலனுடையச்சில்லமேற்
றூக்கலுங்கந்தமாதனத்தைச்சாருத
லாக்குமன்னுயிரருளகந்தைவேரறப்
போக்கலுமரன்பதம்புணர்தல்போலுமே. (அ0)

மருவுழித்தெரிபலமாதிரக்கல
மொருமுகத்தோடிவந்துடனிறங்குதல்
கரவுடைப்படைக்குழாங்கருத்துநேர்ந்துழி
விரைவினிற்றிரண்டுடன்மேவல்போலுமே. (அக)

நாற்றிசைக்கலன்கொடுநண்ணியெண்ணிலா
வேற்றுளசாதிகள்விரவிநீங்குத
லீற்றினிலுயிரெலாமெய்தியோருழைத்
தோற்றுழிப்பிரிந்துபோந்தொடர்புகாட்டுமே. (அஉ)

நிகழுருவொன்றதாய்நீண்டுதெம்மிசைப்
புகலுடையண்டமாருயிர்கள்போற்றியே
யகலிடந்தாங்கியவரவமேய்க்குமே. (௮௩)

வன்னமென்பாசடைவடிவமாகியே
புன்னைமேன்மரகதம்பொதுளிற்றென்றுதா
துன்னியபோலும்வெண்முகையின்றோற்றமே. (௮௪)

விரைமலர்ஞாழலின்வீழ்ந்ததாதுவாம்
புரிவுசால்சுண்ணமேற்புரண்டசங்கினஞ்
சுரிவளைசெய்யவீங்கென்னத்தோன்றியே
பெரியவர்தம்மையும்பேதையாக்குமே. (௮௫)

கணிதமில்புகழுடைக்கந்தமாதனப்
பணைவரைப்புதுமையோபரவைப்பாங்கெலாம்
புணருமாதாரமும்புளினமாங்கதி
லணையுமாதேயமும்புளினமாகுமே. (௮௬)

தழுவுசீர்நுளைச்சியர்தசும்பிற்சேலுடன்
விழிநிழலெண்ணியேவிற்கக்கொண்டவ
ரொழிவுறக்கடதினீரூற்றியோரிரண்
டெழில்கொண்மீன்காண்கிலமென்னென்றெண்ணுவார். (௮௭)

முள்ளுடைநெட்டிலைமுடங்கல்சூழ்துறைத்
துள்ளிவீழ்ந்தளகமேற்றுவக்குண்வெள்ளிறால்
பள்ளமார்கடற்பயில்பரத்திமார்புனை
வெள்ளியம்பிறை ணிவிளக்கஞ்செய்யுமே. (௮௮)

மூள்புலனருகுறுமுனியுமாதவர்
கேள்கிளர்வரையதன்சாரபுகிட்டியே
சூள்கொளாறளையருந்துவன்நீவாரியுள்
வேள்கொடியகப்படவலைகள்வீசுவார். (௮௯)

வந்துதோய்முகிறழீஇமரீஇயதீஞ்சுவை
யுந்திநீர்கடல்புகுந்துவர்படைத்தன
முந்திமேலவர்தொடர்முருச்கிமீளவுந்
தந்தொடருறுநரத்தவறிற்றீரவரோ. (௯௦)

கானுறுகைதைமேற்கலவர்கார்க்கடன்
மீனெறிசாலநேர்விரித்துலர்த்தலும்
வானிறவண்முகைவலையிற்பட்டன
தூநிறக்குருகெனத்தோற்றுவிக்குமே. (௯௧)

காயலின்கூலமுங்கண்டனீழலும்
பாயுநீருவளகப்பரப்புமெங்கணுஞ்
சாயலின்மஞ்ஞைநேர்திமிலத்தையலார்
வாயிலார்சிற்றில்செய்தாடன்மன்னுமே. (௯௨)

சிலைபயிலிராகவன்செய்தசேதுவாங்
கலையொடுமொன்பயில்கந்தமாதன
மலைவளமதனொடுமெருவுமாண்புசா
லலைவளமளவையாலளக்கலாகுமோ. (௧௩)

மறைமுதற்கலைகளான்மருவுந்தன்னிலை
முறைதரக்கண்ணுதன்மொழிந்தவாறுபோற்
கறையிறன்பெருமையைக்கந்தமாதன
மறையுமேல்வாய்படைத்தறியலாகுமே. (௧௪)

கந்தமாதனச்சிறப்புமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨௪௩.

நைமிசாரணியச்சிறப்பு.

பெரியசூதனிச்சேதுவின்மாக்கதைபேச
வரியமாதவர்வினவியசூழலாமதனால்
விரியுமைம்புலவேதனையொருவினோர்மேவற்
குரியமாண்விளைநைமிசவளஞ்சிலவுரைப்பாம். (௧)

கொண்டநான்முகர்பிறப்புடனிறப்பொருகோடி
கண்டமாதவர்வாழ்வதுகருங்கடலமுத
முண்டுளோர்தொகைக்கவர்தொகையுயர்புடைத்தென்று
லண்டர்நாட்டினுமிக்கதாநைமிசவடவி. (௨)

உற்பவந்தனக்கஞ்சியேதன்கணுற்றோரை
யெற்படும்பகலிரவெனுமிரண்டிலாவகண்ட
சிற்பரம்பொருட்சிவத்துடன்சேர்த்திடுஞ்செயலாற்
கற்பமெண்ணிலகடந்ததுநைமிசக்கானம. (௩)

கறையடிக்குலமுதலியகருவிலங்கொலியுந்
துறைகொள்கானியாறுகண்டெழுபெரும்புனற்றுவைப்பு
நிறைதருக்கண்மேற்றவழ்புயலரவமுநீங்கா
மறைமுழக்கினான்மறைப்பதுநைமிசவனமே. (௪)

முறுகவாமருள்வெகுளியாமும்மையுமொழியு
மிறுதிதோற்றமென்றிருமையுமெய்துநர்க்கியா
வுறுதிகூர்ந்திடுமொருமையாற்பொருமதனோடு
மறலிகண்டறியாததுநைமிசவனமே. (௫)

உவருலாங்கடல்சுவறினுமழைமுகிலுதவா
திவறல்கூரினுநல்குரவின்றியேமல்குந்
தவறிலாத்திருமாதவர்க்காயதோர்சார்பா
லவணிமாநிதியனையதுநைமிசாரணியம். (௬)

கொங்குதேரளிக்கொள்ளையுங்கிள்ளையுங்குயிலுக்
தங்குமாதவர்சாலைசூழ்ந்திசைத்திடுந்தமர
மங்கண்வேள்சிலைநாண்பரிகாளமாயலைந்த
வெங்கடுங்கொழித்தாண்மினென்றேத்துதலேய்க்கும். (௭

முகமுனெய்திடுமயன்முதலோர்க்கவர்முதியோர்
தகையினோடுமுன்னிருந்ததுநடந்ததுந்தவத்தோர்
பகர்தல்கேட்டவைபடித்துடன்படித்தவப்படியே
புகல்செய்பூவையுமிறந்தநாளுணர்ந்தவாபோலும். ௮

வரியராவினமயிலினோடாடியேமறைநூ
லரியவேதியர்சாலைமுன்னடைந்திடலவர்தாம்
புரியுநோன்பினாற்புலப்பகைபோக்கியபொருளைத்
தெரியநின்றெதிர்காட்டிடுஞ்செயலினைத்தெரிக்கும். (௯

கானமீதுசஞ்சரித்திடுங்கருங்கடாவினங்க
ளானகாரியமன்றெனாதருந்தவத்தவர்மே
லூனமார்படையெடுத்துவந்துடைந்துடைந்தோடிப்
போனகாலர்கள்விடுத்தபல்லூர்திகள்போலும். (௧௦

மொட்டவிழ்ந்தெரிகாந்தளங்குலையின்மேன்முனிவர்
கட்டெழின்மகார்பனசமாண்கனிமதுச்சூத
நெட்டிலைக்கொடுசுருதிசூழ்தும்பிநின்றிசைப்ப
விட்டுவேள்விசெய்தாடிடமெங்கணும்விளங்கும். (௧

ஓடவென்றவைம்புலத்தினருடசமேற்படரு
மாடன்மென்கொடியவர்மகத்தழற்கொழுந்தாலும்
பாடலார்மறையோரருட்பார்வையினாலும்
வாடலுந்தளிர்த்திடுதலும்பன்முறைமருவும். (௧

தண்டமார்கரியரியிவைதாபதமதன்கட்
பண்டைவான்பகைதீர்ந்தொருதுறையினீர்பருகும்
விண்டவெஞ்சினநெஞ்சுடைமெய்த்தவமேலோர்
கொண்டகொள்கைமூன்றுலகமுங்கொள்ளுமென்கூற்றால். (௧

முகைகொள்பூமுதல்பிறவொடுமுல்லைநீண்முதற்குந்
திகழுநீர்சொரிந்துறுவர்தாம்வளர்த்திடுஞ்செய்கை
பகைவிருப்பெனுமிரண்டுமின்றாகியபான்மை
யகநிலைத்தமைபுறத்தினுந்தெரிக்குமாறனைய. (௧

உடையின்வற்கலைமுனிவர்தம்முளத்துறையீசன்
சடையினிற்கிளர்சசிக்கலைசதாமறைநாவிற்
றொடைகொள்சொற்கலையளப்பிலவவற்றொடுந்துவன்றி
யடையுமாக்கலைபலவுளவதன்கணாச்சிரமம். (௧

பிரமசாரிகள்சங்கமோமனையறம்பிரியார்
பரவுகூட்டமோவனத்திடைப்பன்னியரோடும்
விரவுவாரவர்தொகுதியோநீத்திடுமேலோர்
திரள்கொலோபெரிதென்னவக்கானகஞ்சிறக்கும். (௧

யாகவேதிசேரிடமதாமில்லையேன்மல்லல்
யோகசாதனைமுயலிடமாமஃதொழிந்தா
லாகமாதிநூல்பயிலிடமாமலதருளோ
டேகமாமிடமாகுமவ்வனமிடமெல்லாம். (கஎ)

திருந்துதண்டகம்வதரிகாச்சிரமமுன்னுகிப்
பொருந்திடங்களினின்றுதம்புதல்வர்பன்னியரோ
டருந்தவப்பெருங்கிளைஞர்தாங்குழாங்குழாமாகி
விருந்துவந்துபோந்துழனியேவைகலுமிகுமால். (கஅ)

ஆணவத்தினிற்கரந்தவென்றருங்கிழங்ககழ்வார்
கோண்மனத்தினிற்கவர்த்தெனக்கொழுஞ்சமித்தொடிப்பார்
காணுமூழினிற்கனிந்தவென்றருங்கனிகவர்வார்
யாணர்நைமிசவனத்துவாழிருந்தவத்திறையோர். (கசூ)

வேறு.

நன்றுதீதுபகையுறவுதுன்புசுகநாடொருமுனிவர்நாகருஞ்
சென்றுகாணரியசிவபிரானையுயர்திருவருட்கதிதெரிக்கவே
யொன்றுகாதலொடுகண்டிரண்டறவுடனகலந்திலகுமோவியத்
தென்றும்வாழுதலினைமிசத்துறவரில்லையோவெனவுமிசையுமே. (உ0)

ஒருநெஞ்சமொழியுருவமுற்றுமரனுடைமையாகவவருணரினுஞ்
சாருவாகன்முதலோர்மதங்கள்சிலர்சாற்றவேறுசிலர்சார்ந்தயற்
சேருமம்மதமறுக்குநூல்களுரைசெய்யவைதிகர்கள்சைவரன்
ருரும்வைகுவர்கொனைமிசாரணியமதனிலென்னவருமையமே. (உக)

ஆருமாதவர்களாடுசீர்புலரவாவியங்கரையினிற்கவே
வாளுலாவுசடிலக்கொழுந்துநுனிவந்துதாழுறைகளுந்திவாய்
மூளுமாரழன்முடுக்கிமூடுசெழுமுனைதிறந்தவழிவிந்துவி
னீளுமாரமுதுபொங்கிமேல்வழியவீழுநுண்டுளிகணேருமே. (உஉ)

கட்டவிழ்ந்துபொலிகமலமென்னவெரிகாமர்வேள்வியழன்முன்னரே
வட்டமாநிலம்வகுத்ததாதையெனமன்னுமாதவர்கண்மலரின்மே
லெட்டுவாள்விழிவிரிஞ்சன்வைகியிடுமென்றிடும்பொருளைமன்றவே
விட்டலக்கணையிறைவுணர்த்திடுவர்வேறுகூறுவதென்மேன்மையே. (உங)

மாயமூணமுகவன்வாசவன்புலவர்வையமன்னவர்கள்வாழ்வினுக்
காயதோர்தவமிழைத்தொழிந்தவர்களவர்கள்சீர்பகரவரியதா
மேயமாதவமலாதுவேறுணர்வின்வெஃகுருமுனிவர்வெஃகியே
தூயவாழ்வுபயினைமிசப்பெருமையாவர்வல்லவர்கள்சொல்லவே. (உச)

நைமிசாரணியச்சிறப்புமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உசுஎ.

சேதுசருக்கம்.

பூமலியிதழிசூடும்புதுநிலாமகுடவேணி
நாமலிசுருதிபோற்றுநம்பிரானிராமநாத
னேமலிசிலையிராமற்கிராவணப்பிரமகத்தித்
தீமலியிடுக்கண்டீர்த்தசேவடிசென்னிவைப்பாம். (க)

அனையதோர்நைமிசப்பேரடவியிற்சௌனகாதி
முனிவரருறைவரன்னோர்முத்தியின்வேட்கைமிக்கோ
ரினையவர்கணிதமெண்ணிலிருபத்தாறிரட்டியையஞ்ஞா
றனையவரருள்சேர்மைந்தரவர்மைந்தரளப்பிலாதார். (உ)

புலப்பகைமாற்றியன்பாற்புராந்தகன்முகுந்தன்கஞ்ச
மலர்ப்பதமருச்சித்தேத்திமாதவமிழைப்பாரங்கட்
கலப்புறக்குழுமியோர்நாட்கரிசுதீர்கதைகள்பேசி
யுலப்பிலொன்றதனுபாயமொருவருக்கொருவராய்ந்தார். (௩)

இனையமாண்பொருள்வினவியிணைதவிர்தவத்தின்மிக்கோ
ரனைவருமமருங்காலையளவறுவளமைசான்ற
நனையவிழ்பொதும்பர்மேயநைமிசவனமதன்கட்
டுனைவில்சீருறுவர்முன்னர்த்தொல்லுணர்ச்சூதனுற்றான். (௪)

விளங்கழலுருவிற்றோன்றும்வியாதன்மாணுக்கற்காணூஉத்
துளங்கொளியிருக்கையேற்றித்தொன்முறைவழிபட்டுண்மை
யுளங்கெழுசூதற்போற்றியுததிசூழுலகமுய்ய
வளங்கொணல்வரவுசொன்னார்மாதவர்கணத்தர்யாரும். (௫)

அந்தணர்சென்றுதாமேயாநெறற்றீர்த்தந்தம்முன்
வந்தினிதாடப்பெற்றமாந்தர்போன்மகிழ்வினீடிப்
புந்தியாலங்கட்டேரும்பொருணிலைத்துணிவுசூதன்
சுந்தரவாயாற்கொள்வார்சூழ்ந்திவைசொல்லலுற்றார். (௬)

வாதராயணன்பாற்கொண்டாய்வரமிகுபுராணமுற்று
மாதலாலறிதியெல்லாமருந்தவச்சூதநீயே
பூதலத்தெவையோமேலாம்புரம்புனல்பொருந்துமுத்தி
யாதினுலெவவாறுண்டாமீசன்மாலிவர்மாட்டன்பு. (எ)

எற்றினன்மனத்தால்வாயால்யாக்கையாலியன்றசெய்கை
முற்றியபயனுமேவுமுடிவிலாவருளினாலே
சொற்றியாவெமக்குச்சூததுகளிரிகுரவர்யாதும்
பற்றியபுதல்வர்தம்மேற்பரிவினாற்பகர்வரன்றே. (அ)

வேறு.

என்றுகூறலுங்கேட்டதினிதெனாத்
துன்றுவேதவியாதன்றுணைப்பத
மொன்றுமுள்ளத்துவப்புற்றுயிர்க்கெலா
நன்றுநாடிநவிலுதன்மேயினன். (௯)

போற்றுநீர்மைப்பொருளிதுமுன்னியான்
சாற்றினேனிலையார்க்குந்தவத்தினி
ருற்றமிக்கவொருமையினீருமக்
கேற்றநண்பினியம்புவன்கேண்மினே. (௧௦)

உற்றஞாலத்தொருநகர்காகுத்த
னற்றமில்கவியாற்றந்ததாழிநீ
ரெற்றுஞ்சேதுவிராமேச்சரமதில்
வெற்றிசால்பலதீர்த்தங்கண்மேவுமால். (௧௧)

ஞானமாதவிர்நானிலமேற்பிற
வானவூர்களிலாமெனன்னீர்களிற்
றானுயர்ந்ததுதன்னொருகாட்சியான்
மோனவானந்தமுத்திவழங்குமே. (௧௨)

பொருவில்சங்கரன்பூமகணாயக
னிருவராலுமன்பெய்திடுமங்கிலை
யருவமூவகைச்செய்கையினுற்றனு
மருவுமவேறிலைமற்றிதற்கையமே. (௧௩)

இந்தவுற்பவத்தேவனிச்சேதுவை
வந்துகாணினுமோர்கற்பம்வள்ளல்பாற்
றந்தைதாய்வழிக்கோடிதமரொடு
முந்துவைகுவன்சேர்வன்பின்முத்தியே. (௧௪)

பூவினுண்டுகள்பொங்கொளித்தாரகை
மேவுமெண்ணினில்விண்ணில்விளங்கெலாத்
தேவுமானவிச்சேதுகண்டார்பய
னேவனெண்ணுவன்சேடனுமெண்ணலான். (௧௫)

அண்ணல்காகுத்தனாழ்புனற்சேதுவைக்
கண்ணினாலொருகாற்கண்டமானவ
னெண்ணில்வேள்விதவம்புனல்யாத்திரை
பண்ணிமுற்றியபண்புடையானரோ. (௧௬)

மேதினிப்பிறவேறொருவன்றனைப்
போதிசேதுவிற்கென்னப்புகன்றவ
னேதுமிப்பயனெல்லாமுறுமெனில்
யாதுபற்பலயாம்பகர்கின்றதே. (௧௭)

மூழ்குமானுடன்மோதலைச்சேதுவி
னேழுகோடிகுலத்தொடுமேகுவா
னூழியானகரங்கணின்றேமுனஞ்
சூழுமாயத்தொடர்பினைநீக்குவான். (௧௮)

கந்தமாதனவோங்கலைக்கண்ணுத
லெந்தைதன்னையெறிதிரைச்சேதுவைச்
சிந்தைசெய்தவன்றீவினைப்பாலெலா
மந்தமாகுவதுண்மையதன்றியே. (௧௯)

ஈன்றதாய்தந்தையென்னுமிருவழிச்
சான்றகோடியிலக்கந்தமருடன்
மூன்றுகற்பஞ்சிவபதமுற்றிமே
லான்றமுத்தியவணின்றடைகுவான். (௨

சேதுமூழ்கினன்றீமையைந்தாற்றினும்
வேதன்வாழ்தினமூன்றெழில்விண்டுவூர்
தாதைதாய்தன்றமர்சதகோடியோர்
காதல்செய்யக்கலந்தவண்கட்டறும். (௨

விழுமவெங்குகைமேனின்றுருகிடான்
வழுவழுத்தவசைக் * கிணறுழ்ந்திடா
னிழுமென்வைதரணிக்குளிழிந்திடான்
றெழுதுசேதுவின்மூழ்கியதோமிலான். (௨௨

வளைந்தவான்குமலித்தசைதின்றிடா
னுளைந்துதானுமுணவதற்காகிலான்
களைந்தமூத்திரபானங்கருதிடான்
விளைந்தகாதலிற்சேதுவின்மேவினோன். (௨௩

காய்ந்தகுலினிற்கல்லிற்கரிந்திடான்
சாய்ந்தசோரியுடன்புழுததானுறு
னேய்ந்தமுள்ளிலவேருன்மலமடுத்
தோய்ந்திடான்முன்னஞ்சேதுவிற்றோய்ந்துளான். (௨௪

செருமித்தாழுஞ்சிலைமழைதீமழை
கருவிற்காய்புனல்காரவெந்நீர்கடுங்
குருதிக்கூவல்குளியான்கொடுந்தழல்
வெருவிப்பாய்கிலான்சேதுவின்மேவினோன். (௨௫

சென்னிகீழ்ப்படத்தூங்கான்சிலைமரந்
துன்னுசெக்கிலரைப்புண்டுசோர்ந்திடான்
வன்னிமீதுபுரளான்மருதநிறு
வின்னல்வந்துறுன்சேதுவினேகினோன். (௨௬

மண்டுகாமநீமாந்தான்மலத்திர
ளுண்டல்செய்யானுடலினும்பூசிடான்
றண்டமோதத்தபிதநுப்பெருந்துயர்
கொண்டழுங்கான்குரம்பிற்குறுகினோன். (௨௭

வைத்தகூரரிவாளினரிவுறுன்
பித்தங்கோழைபெருகுகைப்புண்டிடா
னத்திசேர்தசைவெஃகானறுப்புறுன்
மூத்தனுகுவன்சேதுவின்மூழ்கினோன். (௨௮

துன்றுபாந்தட்டுளைப்பநகறிப்புறுன்
குன்றுநேர்கரிக்கோட்டாலறைபடா
னன்றிக்காய்சிலையெண்ணெயயின்றிடான்
சென்றுதெண்டிரைச்சேதுவிலாடினோன்.

வெந்தநுண்மணலாழான்விழுந்தெழா
னுந்துதீமுனையூசியிருந்திடான்
மூந்துகாரமுகத்தினுமூக்கினுஞ்
சிந்தமாழ்குறுன்சேதுவின்மூழ்கினோன். (௩0)

உருவிலென்புபிடுங்கவொடுங்கிடான்
றருவினின்றுமலத்திடைத்தாழ்ந்திடான்
வெருவுமூவிலைவேலால்விளிந்திடான்
பொருவில்சேதுவின்மூழ்கியபுண்ணியன். (௩௧)

தீயபாசத்திற்றேகம்பிணிப்புறான்
பாயும்வெம்புகைநுங்கான்படைமிசை
காயிருப்புப்பலகையிற்கண்படான்
றூயசேதுக்குடைந்தெழுந்தூயனே. (௩௨)

ஆக்குமுண்டையயத்திரளாண்குறி
தூக்கவாடிலன்கூசிமுகத்தினி
னோக்கிற்சந்திற்செருகநுடங்கலான்
றேக்குவார்கடற்சேதுவிற்சேர்ந்தவன். (௩௩)

இனையதீநரகெண்ணிலவென்னினுந்
தனைவருத்துந்தகைமைமற்றொன்றினு
நினையுமாறிலனீள்கடற்சேதுவி
னனையுமெய்யுடைநன்னலமானவன். (௩௪)

பாதகந்தவப்பண்ணினனாயினுங்
கோதுநீங்குநிரயங்குறுகிடான்
சேதுவீசுந்திரைப்புனலாடிடப்
போதுவேனென்றுநூறடிப்போகினும். (௩௫)

அணியிராமனணைமிசைக்கண்படும்
பணியர்காத்திரம்பற்றியநுண்மணற்
கணிதமந்தணர்க்கொன்றகரிசெலாந்
துணியுமின்றிதற்கையுறல்சூழ்ச்சியே. (௩௬)

கூறுகோசலநாடன்குரம்பினில்
வீறுசீதளமாருதமேற்படி
னூறுநூறுமதவினுகர்சசியா
லேறுதீவினையீறுறுமக்கணம். (௩௭)

கொழித்தமுத்தக்குளிர்புனற்சேதுவின்
மழித்தசென்னிநவிருளைவைகினோற்
பழிததகுங்குருதற்பம் * பயில்பவ
மொழித்தகற்றிடுமோர்பதினாயிரம். (௩௮)

பைம்பொனெற்றும்படரலைச்சேதுவின்
றம்பவுத்திரபுத்திரர்தங்களால்
விம்பவென்புறிலக்கணம்வீயுமா
லம்பொனின்கரவையிரண்டாயிரம். (௩௯)

* தற்பம்—மனைவி, சயனம்.

வணர்கொளுஞ்சிலைவள்ளலிராகவ
னணையினல்வகையாம்பெரும்பாதகர்ப்
புணருந்தீமையுமொல்லையிற்போயிடு
முணருநெஞ்சினுடன்புகுந்தாடிலே. (௪0

வழிதிரிப்பவன்மாதவர்வேதியர்ப்
பழுதுரைப்பவன்பாகந்தற்காக்குவான்
கழியுமூணன்கடிமறைவிற்பவ
னழிவிலந்தணர்க்கொன்றவரைவரும். (௪௧

பூசுரர்க்குப்பொருடருவேனெனப்
பேசிப்பின்னரிலையெனும்பேதையுந்
தேசிகர்ப்பணியானுஞ்சினமுறு
மாசினனுமறையவர்க்கொன்றவர். (௪௨)

விப்பிரக்கொலைசெய்தவன்வேட்டுநீ
ளொப்பிலானினஞ்செல்வதையோட்டுவா
னிப்பவத்தினரின்னவர்தீங்கெலாஞ்
செப்புஞ்சேதுவிற்றீர்வதுதிண்ணமே. (௪௩)

தினமுமங்கியிற்செய்கடனீத்திடும்
பனவன்கூட்டம்பதிதனகணிகையுண்
விலையிறேவருணுண்பவன்வேரியுண்
வனிதைகேள்வனிவ்மதுமாந்தினோர். (௪௪)

கந்தமூலங்கனிபழுக்காய்துகில்
சந்தமான்மதம்பாளிதர்தாமிரம்
வர்தகஞ்சமதுநெய்பால்கண்டிகை
தந்தகள்வனறபணியக்கள்வனே. (௪௫)

தோற்றினாடன்றோன்றியமங்கைமா
மாறறினணபனமகனமடவாமது
நாற்றவாயினள்பூததவணமபினுள்
பேறறினீனமடநதைபிறணிலாள். (௪௬)

கோவைவாயிதழுண்டார்குருமனை
மேவினாபிறாமெய்ந்நெறிக்கின்னவா
பாவமுற்றவும்பற்றறுமற்றெனோ
தாவில்சேதுவிற்றாழ்ந்தவளவிலே. (௪௭)

சொல்லினாருடன்றோழமைவந்திடப்
புல்லினாபிறபுன்மையர்யாவருஞ்
செல்லினார்கடற்சேதுவினாடலா
லல்லினாடுமெடிநிழல்சேர்வரே. (௪௮)

நாகம்வேட்டுறைநாகரைவன்னியைத்
தாகம்வேட்டதரணியைத்தாழ்தலும்
யாகம்வேட்டலுமின்றியரம்பையர்
போகம்வேட்டவர்போதுமின்சேதுவின். (௪௯)

மண்டலம்பொன்வழங்குநற்றுணியந்
தண்டலைந்தரனோன்பிற்றவிப்புடற்
கொண்டழுங்குறல்வேண்டாங்குரம்பினீர்
கண்டுமூழ்கிற்கடவுளராகலாம். (௫௦)

சேமமிக்கபுராணஞ்சிறப்புடன்
றாமனந்தருசேதுவிற்றோய்தலை
யோமம்வேள்வியுதவிதவஞ்செப
மாமிவற்றினதிகமென்றோதுமே. (௫௧)

பூண்டுளத்திற்புரிவதொன்றின்றியே
சேண்டொடுந்திரைச்சேதுவினாடிடின்
மீண்டெழுச்சிவியனிலததில்லையா
மாண்டவந்தணிரியவுரைவாய்மையே. (௫௨)

வளம்விரும்பினும்வான்மடவார்முலைத்
தளம்விரும்பினுமொனாறுடன்சாபிலா
வுளம்விரும்பினுமவேண்டிற்றுதவுமா
லளம்விரும்புமலைகடறசேதுவே. (௫௩)

தீங்குநீக்கிதிருவளர்நல்வினை
யோங்கநல்குமுயாபினதாதலாற்
பாங்குசோகடற்சேதுபடிந்துளோரா
தாங்கள்காமுறுமின்பந்தருவதாம. (௫௪)

எச்சம்யாவினுந்தீர்த்தமெவற்றினு
மச்சநீங்குமளவையில்யோகினும்
விச்சைநோன்புபலவினுமிக்கதான்
முச்சகம்புகழ்சேதுவின்மூழ்கலே. (௫௫)

சேயவிந்திரனாட்டைசெழுந்துழாய்
மாயனூரைமலரயன்வைப்பினை
மேயவீசன்கயிலையைவேண்டினோர்
தோயவாரிதிச்சேதுவிற்றோய்கவே. (௫௬)

செல்வமாயுள்சிறப்புததிருமறைக்
கல்வியேனைக்கலைமனுக்கைவர
லொல்வதேதுமறாண்மையிற்றங்கிடு
மல்வருங்கடற்சேதுவினாடலே. (௫௭)

அன்பின்மூழ்கினுமன்றிப்படியினுந்
துன்பமிம்மையுமம்மையுஞ்சூழ்ந்திடா
வின்பிலொற்கமெனும்பணிசெற்றிடும்
வன்புள்வேந்தனும்வாரகடற்சேதுவே. (௫௮)

பொருவில்சீதப்புதுமதிபோலவு
மருவும்வாரிமணித்திரண்மானவுந்
தருமராசிதழைக்கும்பவத்திர
ளொருவுஞ்சேதுவைக்காணுமுயிர்க்கெலாம். (௫௯)

தேவரான்றருச்சிந்தாமணியிவை
யாவுமேற்பவர்க்கீதருந்தன்மைபோன்
மேவியாடினர்வெஃகியபேறெலா
மோவில்சேதுவுதகமுதவுமே. (

தேடற்காம்பொருளின்மையிற்சேதுநீ
ராடற்கேகானறிஞர்பால்வாங்கியு
நாடிப்போயவணழ்குகநல்கினேன்
கூடக்கொள்ளுங்குளித்தவன்கொள்பயன். (௩

சொற்றசேதுவினூடத்தொகும்பொரு
ளற்றதேற்கொள்கவந்தணர்பாலன்றி
மற்றுமன்னர்வணிகர்கைக்கொள்ளலாங
குற்றம்வாழ்க்கைத்தொழிலர்கைக்கொள்வதே. (௩

படம்பொருண்முதற்பல்வகைத்தானிய
மிடங்கொணெஞ்சத்திசைந்தனநல்கியே
தடங்கொள்சேதுவிற்சார்கென்றொருவனைத
தொடங்கலாற்றித்துணியச்செய்தேவினேன். (௩௩

ஆசிலாரணபாராயணத்தினால்
வாசிமேதமுதலமகஙகளா
லேசில்வான்றுலையாதியவீகையாற்
பேசுமாண்பயனெல்லாம்பெறுவனால். (௩௪

பாரிலேகாப்பழிமுதற்பாவமும்
வேருடன்கெடும்வேண்டியவின்பெலா
மாருமென்கொலறைவதுபல்லயாஞ்
சேருமிப்பயன்வாங்கிச்சென்றானுமே. (௩௫)

கோசலத்தவர்கோமகனாற்றிய
தேசுடைப்புனற்சேதுவின்மூழ்குறு
மாசைமேற்கொண்டிரக்குமவர்கள்பால்
யாசகத்தினிழிவரவில்லையே. (௩௬)

புஞ்சமார்புனற்சேதுவிற்போதுநீ
யெஞ்சலில்பொருள்வனென்றீந்திடா
வஞ்சன்றன்னைமறையவராருயி
ரஞ்சநீத்தவனென்பரறிந்துளோர். (௩௭)

செயிரில்சேதுவிற்செல்வதுசெப்பியே
பயில்பெரும்பொருள்கொண்டுபெடர்கிலா
வயிரநெஞ்சனைமாநிலத்தேவர்க
ளுயிர்கவர்ந்தவனென்னுமுலகமே. (௩௮)

குடையப்போவன்குரைக்குங்குரம்பினீ
ரடையுநன்பொருளீயுமென்றாக்கமிக்
குடையனாயுமொருவர்கையேற்றிடுங்
கடையனூடகக்கள்வனென்பாரரோ.

ஏகுமாறியற்சேதுவிற்கெவ்வகை
யாகுமவ்வகைசெய்மினசத்தரே
லீகைவேண்டுவவீந்தும்விருப்பினாற்
போகவேவுமின்பூசுரர்தம்மையே. (௭௦)

ஓங்குவேள்வியுஞற்றற்பொருட்டினா
லீங்குவேண்டுவயாவர்கணேற்கினுந்
தீங்குறுதெனிற்சேதுவிற்போதுவான்
வாங்கலாம்பொருண்மற்றெவர்பாலினும். (௭௧)

வேறு.

முன்குலாயவுகத்தினின்முத்திதான்முந்தைஞானவுணர்ச்சிபுணர்ப்பதா
நன்குலாயவிடைக்கணுகத்திலேநப்புவேதமகத்திலுதிக்குமே
பின்குலாயவுகத்தினிரட்டிதான்பிந்திடாதகொடைக்கண்விளைக்குமான்
மன்குலாவுமுரைத்தவுகத்தெலாமன்றல்சேதுநனைத்தலளிக்குமே. (௭௨)

சேதுசருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௩௧.

சேதுவந்தசருக்கம்.

என்றுசூதனெறிகடற்சேதுவின்
றன்றுமேன்மைகள்சொற்றிடக்கேட்டுளத்
தொன்றுமன்பினராகியுயர்தவ
வென்றிமாதவர்பின்னும்வினவுவார். (௧)

வேறு.

எந்தவாறடல்சேரிராகவனிந்தவாழியடைத்தனன்
கந்தமாதனவெற்பினீடியர்காமர்சேதுவினெவ்வள
வுந்துதண்புனலாடவுள்ளனதெள்ளுசூதவுளங்கொள்வான்
முந்துரைத்தருளென்றுபண்ணவர்மொழியமற்றவன்மொழிகுவான். (௨)

வரம்பின்மாதவிர்நீவிர்கேண்மினிர்மன்னுகாதலின்முன்னமே
குரம்புகண்டமைகூறுவன்கிளர்கோசலத்திருநாடர்கோ
னிரம்புகாதலிசீதைபின்வரநீடுதம்பிதன்னோடுநேர்
தரம்பெறுவுயர்தாதைசொற்படிதண்டகாடவிமேவினான். (௩)

நலஞ்செய்பஞ்சவடிக்கண்வைகிடுநாளின்மாரிசன்மாயையாற்
பொலஞ்செய்தேவியைராவணன்கொடுபோகமோகிதபோதனாய்
நிலஞ்செய்கானகமெங்குமால்கொடுநேடியங்கெதிர்நேர்படப்
பலஞ்செய்வானரமொன்றுநின்றதுபம்பையின்கரைகண்டனன். (௪)

ஆவதோர்பொழுதனையவானரமங்கைவில்லொடுவந்திடுங்
காவலன்றனையிளவலோடெதிர்கண்டுவந்தெழுகாதலா
னீவிரன்னவரின்னகானிடைநேரவந்திலர்முந்திநீர்
யாவர்வைகுவதெங்ஙனும்பெயரேதணைந்ததெனென்றதே.

விற்கடபபரும்விறலிராகவன்மேயதன்னிலைகேட்டிடு
மற்கடத்தொடுகூறிமுற்றவுமற்றதன்றிறம்வினவினான்
சொற்கடற்றுறைகண்டவக்கவிசொல்லுபேரனுமானெனக்
கற்கடற்சுடர்பானுமைந்தனமைச்சனாகுவனடியனேன்.

எங்கண்மன்னவனுன்னுடன்றொடர்பெண்ணியிங்கெனையேவினா
னங்கண்மேவிடில்யாவுநன்மையவாகுமென்றிடவாதபன்
றுங்கமைந்தனிருக்கையுற்றனனுற்றபோதிருதூயருந்
தங்கணண்புவிடாதழற்கரிதந்துகொண்டனர்தகவினால்.

உறுதிபேசினன்வாலியாருயிருண்பனென்றுலகுண்டவ
னறுதிகூறினனவனுமாதினையாய்ந்துதந்திடுவேனெனாப்
பெறுதியின்னனசெய்கையாகியபின்றையொன்றியவிருவரு
மிறுதியின்றுயரன்பினாயிடையினிதிருந்தனரந்தநாள்.

செய்யபானுவினீள்பிறங்கடைதேறிடும்படிசேவடித்
துய்யபேர்விரல்கொண்டளப்பருதூரமுந்தியெறிந்தனன்
வெய்யதுந்துபிகாயமன்றியுமிக்கசாலிகளேழையு
மையறீரவுறவெய்தனன்மழைவண்ணனன்றொருவாளியால்.

இச்சயச்செயல்கண்டுகோடரவேந்தனிந்திரனாலுமிங்
கச்சமெற்கிலையுனதுநண்பினரக்கனாற்றலழிதியான்
கச்சறுத்தகல்வட்டவானகவெளியடைத்தெழுகதிர்முலை
மைச்சுருட்குழன்மாதைநல்குவன்மதிலயோத்தியர்மன்னனே.

விந்தைசேர்புயவாலிவன்மையின்மேவிவாழ்வுறுமிக்ககிட்
கிந்தைசேர்குதியென்னொடென்றுகிளர்ந்தனன்கிளர்சூரியன்
மைந்தன்வள்ளலுநன்றெனாமகவானளித்தவன்வைப்பினைத்
தந்தநேர்முலைமயில்சுமித்திரைதந்தசேயொடுசார்ந்தனன்.

இன்னகாலையினெல்லைமைந்தனிகன்றுசென்றறைகூவினா
னன்னசெய்கைவலாரிமைந்தனகத்துணர்ந்துபுறத்தணா
யுன்னுபோர்செயமற்றவன்கையுரத்துடைந்துவெருக்கொளா
மன்னிராகவன்முன்னர்வந்தனன்வலியவாலிபின்வந்தவன்.

அலையில்வல்லிமணாளனங்கிலையறிவுறும்படியாலவன்
றலையில்வல்லிபுனைந்துடற்றுதிதமையனோடினியென்னலு
முலையில்வல்லழல்போலமண்டியுரப்பினானஃதுணர்வுறா
மலையில்வல்லியதோளினீடமர்வாலிவந்தெதிர்கோலினான்.

வாங்குவிற்படையண்ணன்மற்படைவாலியாவியைமாற்றினா
னோங்குபொற்சரமொன்றிலாதபனுதவுசேய்தனதூர்புகுந்
தாங்கண்மைத்தெழுகாரகன்றபினரியினத்தொடுமெவருறும்
பாங்கிலுற்றனன்மூண்டகாசனைபயிலிடந்தெரிபண்பினான்.

இவர்மருங்கிலிருந்துவானரவீரர்தங்களையேவினா
னவரின்மாருதமைந்தன்முந்தியறிந்துவந்தையன்றியுங்
கவரில்சூடைவிளங்குமாமணிகைக்கொணர்ந்ததுகண்ணுறா
வுவரிவண்ணனிடும்பைவாரிதியுவகைவாரியொடாடினான்.

இள[illegible]வேந்தன்மாருதியீறில்சாம்பவனளன்முத
லளவில்கோடரவனிகவாரிதியதனொடும்பணியணையொடுந்
துளபமாலைதுறந்தவன்சுடருச்சியிற்படர்தொல்வகுந்
துளபல்சும்மைகடந்துபோயினனுயர்மகேந்திரவோங்கலின். (௧௬)

ஆண்டிராகவனூழிதீர்த்தமடைந்திருந்துழியந்தநாள்
வேண்டுமெந்திரமுதல்வர்நால்வர்பின்மேவமேவியவீடணற்
காண்டல்செய்தவனோடுநண்புகலந்துகண்டுகேவிப்பிரான்
பூண்டசங்கையவன்குணத்தியல்போற்றுசெய்கையின்மாற்றியே. (௧௭)

முரசமார்ப்பநிசாசரக்குலமுதன்மைசூட்டியவர்க்கெலா
மரசனுக்கியதன்றிவென்றியமைச்சனுக்கினனவனையு
நிரைசெயாயிரகிரணன்மைந்தனிகர்ப்பவப்பணிநேர்ந்தபி
னுரைசெய்கின்றனன்வள்ளலொன்றவருணர்வுறும்படியுன்னியே. (௧௮)

வே று.

ஆய்ந்திப்பதாதியளப்பரிதாமகன்றபரப்பிற்றறன்மிகுதி
பாந்தட்குலத்திற்றிரைபுரளும்பகுவாய்மகரம்பலதிரியுங்
காந்திச்சுடருஞ்சுறமறியுங்கடுங்காலெறியுங்கடியகரா
நீந்தற்கரியநெடுஞ்சலதிநீந்திக்கடக்குநெறியாதோ. (௧௯)

காணவெருவுங்கணமனமுங்கருதாச்சதயோசனைகணிதஞ்
சேணுமுடைத்துக்கரும்படலத்தியவுருமேற்றொலிப்பகுவாய்
மாறுமுகிலின்கணமிடைந்தவருணனிருக்குமறிகடலை
யேனென்றுதவியில்லாதேயேறுமுபாயமவேறேதோ. (௨௦)

இடுக்கண்பெரிதுதானையுடனேறும்வகையுமிலைபுணையாய்
விடுக்குந்துணையுமிவண்காணேம்பிரிந்துமிதிலைவேந்தனருள்
வடுக்கண்மயிலையையனுடன்வையமிழந்துவனம்புகுந்துற்
றடுக்குந்துயரமாறுகினுமாழிகடக்குந்துயராறு. (௨௧)

யாதுவகையானீந்திடுவேமெறியுந்தரங்கக்கடலிதனை
வேதமுனிவர்கணம்புடைசூழ்மிக்கபொதியக்கடமுனிவன்
காதிலங்கைகாவலனைக்கறைதீர்கந்தமாதனத்திற்
போதியெனுஞ்சொற்பொய்யாமோவென்றுபுகன்றுபுழுங்கினனால். (௨௨)

இவ்வாறிராமனிரங்குதலுமிருந்தபனன்மகன்முதலோர்
கைவாய்புதைத்துத்தொழுதிசைப்பார்கலனும்புணையுங்கைக்கொணர்ந்து
மைவார்சலதிகடத்துமெனவகுத்தாரிலங்கைமனற்கிளையா
னெவ்வாமனத்தானவரவைமுன்னுறுவதுணர்வானுரைசெய்வான். (௨௩)

தரங்கநரலைதனைவணங்குந்தகையதிராமன்றன்வழியில்
வரங்கொள்சகரரகழ்ந்தமையால்வந்தவினையுமுடிக்குமென
வுரங்கொள்புலமைவீடணன்சொலுளங்கொண்டுவந்துபுவியுயிர்கட்
கிரங்குங்கருணைக்கடலனையானிதனையிசையவிசைக்கின்றான். (௨௪)

அகலமொருநூறியோசனையுண்டாழம்பெரிதுவானரமா
மிகவொன்றனிகமளப்பிலவுமேறுங்கலங்களரியனவா
மிகலும்வணிகாக்கிடர்வினையுமவேண்டாரிடைப்புக்கடுவர்வெரூஉ
மகரசலதிகடத்தலிந்தவகையாலரிதான்மனங்கொள்ளா. (௨௫)

ஓராவிளம்பும்வீடணன்சொ லுள்ளம்விரும்புமாகையினு
பாராவாரந்தனைப்பணிவன்படருநடவைபணியாதேற்
கூரார்பகழியழல்வாயாற்குடிக்கப்பணிப்பனிதனையெனு
வாராவன்பினிலக்குமனோடணிநீர்கரந்தொட்டாசமித்தான். (௨.௬

துண்ணென்றெறியுந்திரைக்கடலைச்சுருதிவழியேதொழத்தொடங்கும்
வண்ணங்கரியானனந்தனிகர்வலத்தோண்மவுலிமலரணையாப்
பண்ணும்பசும்பொன்வேதிகைமேற்பயில்பாவகன்போன்முறைப்படுத்த
தண்ணந்தருப்பைச்சேக்கைமிசைத்தடந்தாமரைக்கட்டுணைதுயின்றான். (௨.௭

உருகும்பரிவின்முறைபிறழாதுஞற்றுநோன்பினுடன்குசைமே
லிருகண்டுயிலும்பெரியோனுக்கிறந்தவொருமூன்றிரவுகண்டுங்
கருகுஞ்சலதிகடுப்பினெறிகாட்டாதொழியக்கவுசலைசே
யருகிலிளையோற்குறித்ததுபோழ்தலர்க்கண்சிவப்பவறைகுற்றான். (௨.௮

எம்மைமதியாவிருங்கடலையிருதாள்வளையவெதிர்கோலி
வெம்மைவிசிகக்கடுங்காலால்விரையக்கலக்கிவிளிந்தசுறாச்
சும்மையுயர்த்திவானரத்தின்றொகுதிநடப்பத்தொகுத்தமைப்பன்
செம்மையணையொன்றதுகாண்பாயெம்பிதருதிசிலையென்றான். (௨.௯

எளியாராவர்வலியவருமியல்பிலோர்கட்பொறைபுரிந்தாற்
றளியார்சலதிவணங்குதலாற்றகையிலோமென்றிகழ்ந்ததாற்
களியார்மகரமிடங்கரினங்கலங்கவளையின்குலங்கதற
வொளியார்பகழிமழைபொழிவனுததிசுருங்கவுதுகாண்பாய். (௩.௦)

பொல்லாநிருதர்விலங்கல்பலபுணர்ந்தபுணரிக்கிதுகாறு
மில்லாவளவையுளதாக்கியிடுவெனிளையோயினியென்று
வொல்லார்புரமூன்றெரித்தவன்போலொருவில்வாங்கியுறவளைத்துச்
செல்லார்பொதும்பர்க்கோசலர்கோன்சிந்தையழன்றுசினங்கொண்டான். (௩.௧)

அதரந்துடிப்பவணிபுருவநிமிரவருட்கணழலிறைப்ப
முதிருஞ்சினத்தான்கார்முகத்தைமுறுகவாங்கிமுளரியுமிழ்
கதிர்வெஞ்சரங்கடூவுதலுங்கடிகொண்டொதுங்கிக்கலங்கஞருற்
றெதிரஞ்சலிசெய்தார்கலிநீரிலங்குபிலநின்றெழுந்ததால். (௩.௨)

எழுந்துசரணம்புகன்றழியாவின்பமுதலாமிராகவனை
விழுந்துபணிந்துகௌசிகன்றன்வேள்வியளித்தோய்விண்ணவர்க
டொழுந்தண்கழற்காற்சுந்தரனேசுருதிமுதலேதுணைப்பொருளே
செழுந்தண்மலர்ப்பூங்கொம்பருறழ்சீதைபுணருந்திருமார்பா. (௩.௩)

அன்பாற்செறிவாரிடர்களையுமருளின்கடலேயகலியையா
டன்பாற்சாபமடித்துகளாற்றவிர்க்குந்தலைவாதாடகைமுன்
வன்பாற்றரக்கர்குலஞ்சுருங்கவானோர்தழைப்பவருமுகிலே
யென்பாற்குற்றம்பொறுத்தருளியானின்றிசைக்குமிதுகேண்மோ. (௩.௪)

ஆதிநாளிற்புடவிமுதலைந்துமலர்மேலயன்வகுத்த
நீதிதிரியாவெனதியல்புநிலையாநிலைமையதுமாற்று
மீதுவிகாரமதற்கிசையேனியாதொன்றானுமெனவிறையோன்
கோதிலணிகமுடனிலங்கைகுறுகக்குறுகென்றுரைசெய்தான். (௩.௫)

விற்றோன்வலியானீயிதனைவேண்டிற்றனுவின்வென்றிவினை
கற்றோர்பிறருமடல்புரியக்கடவராவார்காகுத்தா
மற்றோருபாயம்வகுத்துரைப்பன்வளர்வானரரில்வான்றபதி
பெற்றோனொருவன்மயவினையிற்பெரியோனளனும்பெயர்கொண்டோன். (௧௬)

உள்ளானவன்கைப்படுந்திருணமோங்கன்முதலாவுளவெவையு
மெள்ளாதெந்தமிசைநிறுப்பணிதனலனைசெய்தேகென்றே
தெள்ளார்சலதிமறைகுதலுந்தேவர்க்குறுதிசெயவந்தோன்
விள்ளாவிருப்பினளன்றன்னைவிளித்துநோக்கிவிளம்பிடுவான். (௧௭)

வருவாய்களனீமயவினையின்மாண்புமதியும்படைத்தமையாற்
றருவாயலைநீர்க்கருங்கடலிற்றடந்திண்குரம்பொன்றியாமெல்லாம்
வெருவாவகையான்மதிலிலங்கைமேவும்படியென்றியம்புதலுந்
திருவாய்மொழிகேட்டதற்கிசைவான்றெய்வத்தச்சன்சிறுவனியான். (௧௮)

வரமொன்றளித்தாடனக்களித்தான்மாகப்புனைவன்மயவினையிற்
றரமொன்றிலையாமெனைப்போலோர்தனயற்பெறுதிநீயென்றே
யுரமொன்றுனதுகருணையினுலுதிதியடைப்பேனெனவுரைப்பத்
திரமொன்றிராமனகவிகளெல்லாஞ்சென்பின்குரம்புசெயவென்றான். (௧௯)

கருடனெனவுங்காற்றெனவுங்கடியகவியின்கணமெழுந்தே
யருடங்கிராமன்றனைவிடைகொண்டவனியடங்கப்படாந்தெங்கு
மிருடங்கடவிமரங்கொடிபுல்லிருங்கல்லெவையுமெடுத்திடலும்
பொருடங்குலகிற்புனைவனமகன்பொருகுமகராலயமடைத்தான். (௨0)

இப்பான்மையிற்றலிறைத்தகரைக்கிடம்யோசனைபத்தெழுபதொடு
முப்பானீளமிக்குரம்பினமூலங்குளிக்குமுந்தர்பால்
வைப்பான்கருணைமதிமவுலிவண்மைவிரதமகந்தவஞ்செய்
மெய்ப்பான்மையினேரிடத்துறையும்வினைகள்யாவும்விளிந்திடுமால். (௨௧)

பயங்கொளிருளின்படங்கிழிக்கும்பரிதியொளிபோற்படியிலதாம்
வயங்கொளிராமன்வானரத்தால்வகுத்தசேதுவதன்முல
நயங்கொடருப்பசயனமெனஞாலம்பகருநான்மறையீர
கயங்கொள்கடலின்முன்சேதுக்கண்டமுறையின்கறையீதால். (௨௨)

கட்டுமிராமன்பேரணையிற்கணிப்பிறீர்த்தமுளவவற்றின்
மட்டும்பெயருமவன்றுறந்துவந்தவனைக்கும்வகுப்பரிதா
மெட்டுமூன்றுதீர்த்தமிவற்றெண்ணுந்தீர்த்தமிவற்றுடல்
கிட்டும்பரிசன்றவைநாமங்கேண்மினடைவிற்கிளக்கின்றேன். (௨௩)

பரிதியலகைவரதமுடன்பாவநாசஞ்சீதைமடு
பெருமங்கலமேயாரமுதம்பிரமனனுமன்பெயாக்குண்ட
மிருடீர்மலயமுனியலக்தையிராமனிலஞ்சியிலக்குமன்பேர்ப்
பொருவிலோடைசடாதீர்த்தம்புண்டரீகமகள்பொய்கை. (௨௪)

அங்கிதீர்த்தமவற்றினுமோராழிதீர்த்தஞ்சிவதீர்த்தஞ்
சங்கதீர்த்தந்தாழ்யமுனைதளிநீர்க்கங்கைதயநகுகயைப்
பெருங்குதீர்த்தம்புனற்கோடிபுணர்சாத்தியமேமானதமாந்
துங்கதீர்த்தந்தனுக்கோடிதொகைநீராமமிவையாமே. (௨௫)

வேறு.

கோசலேசனிரந்தவினங்கொடுகோதிலாநெறிகண்டகுரம்பினில்
வாசமேவியதண்புனல்சென்றவைமாதரோடுபடிந்தவர்பண்டைய
பாசவேரறும்வென்றிமிகும்பகர்பாடல்சால்பழநன்கதையிங்கிது
பேசுவார்களிறந்துபிறந்துழல்பேதைவாழ்விலிணங்கிலரென்றுமே. (௪௬)

சேதுவந்தசருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௮௫.

சக்கரதீர்த்தச்சருக்கம்.

தேசியற்சூதனீதுசெப்பலுமவனைநோக்கி
மூவிருநான்குதீர்த்தமொழிந்தனைசேதுவின்கட்
டாவிரியாதிதீர்த்தஞ்சக்கரதீர்த்தமென்றே
யாவதென்னிமித்தங்கூறென்றறைந்தனரந்தணாளர். (௧)

செப்புவானதனைச்சூதன்றிரிபுவனத்துயில்லை
யொப்புயர்பிதனுக்கித்தையுள்ளுவாருருவங்கொள்ளா
மெய்ப்படுமிலக்கந்தோற்றமேவியபாவம்யாவு
மப்பொழுதகற்றுமுண்மையாழிநற்றீர்த்தமம்மா. (௨)

கங்கைகாளிந்திபம்பைகமழ்மணிகன்னிகைப்பேர்
நங்கையேவாணிரேவைநருமதைபொன்னிநன்னீர்
பொங்குகோதாவரிப்பேர்ப்புண்ணியதீர்த்தமொன்பா
னிங்கிவையோடுமேலாம்யாறுகளினையவெல்லாம். (௩)

பாலவாங்கோடிகூற்றேர்பகுதியுமிதனுக்கொவ்வா
சாலவுமிதனைமிக்கோர்தருமபுட்கரணியென்பர்
காலவமுனிவன்முன்னங்கமலமின்றழுவுங்காமர்
மாலவன்றனைநோக்கிமாதவம்புரிதல்செய்தான். (௪)

தெக்கிணதிக்கின்முந்நீர்த்தீரத்திலாலவாய்புல்
லக்கிராமம்பாலோடையாமிவைக்கருகுசேருந்
தக்கசீர்த்தருமவாவித்தடங்கரைப்பிரமந்தன்னுட்
புக்குலாயவாலுணின்றிப்பொறிபுறங்கொடுத்துப்போக. (௫)

சாதவாய்மையனுயாவுந்தானெனக்காணூஉமிக்க
விரதமேற்கொண்டுசாந்திமேவிவேறிடையூறின்றி
யிரதமில்சருகுநீர்காலிவைமுறையுண்டுவேழ
வரதனைநாடிநோற்றான்வருடமைம்பஃதுநூறு. (௬)

மீண்டுமெக்கணிதயாண்டுமிசைவிலன்விழுமழைக்குச்
சேண்டெறுநீவேனிற்குத்தெளிபுனற்குளிர்க்குவீடாய்க்
காண்டகுகாற்றடக்கிக்கண்ணனெட்டெழுத்துமெண்ணி
மாண்டகுகாலவன்றான்வானவர்வியப்பநோற்றான். (௭)

அதுபொழுதைம்படைக்கையம்புயமடந்தைகேள்வன்
கதுமெனவெழுந்துவிண்மேற்கருடவாகனத்தனாகிப்
புதுமலரிறைப்பவானோர்பொங்கொளிபுவனங்காப்ப
மதியுறழ்குடைநிழற்றமருங்குசாமரையிரட்ட. (௮)

பாசடைநவெட்பூத்தபதுமமொன்றென்னமார்பிற்
றேசுடைத்திருவயங்கச்செங்கையோர்வனசஞ்சுற்றக்
காசுடைவலயமாரமாலிகைகவினககண்டோா
மாசுடைசிறுபுன்மூரல்வையகமயக்கல்செய்ய. (௯)

புனைந்தபொன்மவுலிமின்னப்பூரியங்கலைதழைப்பச்
சுனந்தரன்முதலோர்சூழத்தொடர்ந்துகந்தருவர்பாடச
சனந்தரன்சனகன்முன்னோந்தாபதர்தழுவியேத்த
வனைந்தபொற்சூரலங்கைமாகதாவாழ்த்தவந்தான். (௧௦)

வந்தமாதவனைநின்றமாதவன்மலர்க்கைகூப்பிச்
சிந்தைமேன்மகிழ்ச்சிபொங்கச்சென்னியாலுறவணங்கி
யிந்திரைமணாளவென்றுமீறிலாவிறைவயாவுந்
தந்துவைத்தழிக்கும்வானோர்தலைவனே * போற்றியென்றான். (௧௧)

போற்றலுந்துளவமாலைப்புங்கவன்பொருப்பினீண்ட
நாற்றடந்தோள்களாலுநற்றவற்புல்லிநல்லோ
யேற்றனவரங்கள்வேண்டுகென்றலுமிறைவநீயே
தோற்றினைவரம்வேறுண்டோசுருதியுந்தொடரொணாதோய். (௧௨)

அடியனேன்றனக்குநின்பாலன்பருளென்னநல்கிப்
படியின்மேல்வண்டெடுத்தபச்சைமென்புழுவிற்பாருண்
ணெடியகார்வடிவங்கொள்வார்நினைந்தவரெம்மைநீயு
மொடிவிலாதுணர்ந்துகோடியவணுறைந்திருத்தியென்றும். (௧௩)

தருமதேவதைதானுடத்தருதலாற்றருமதீர்த்த
மிருமைசேரிதனின்பாங்கர்யார்தவமிழைத்திட்டாலும்
பெருமிதம்பெறுவாமுன்னம்பிறைமுடிப்பிரானையுன்னி
யருமைசால்விரதநோன்பொன்றாற்றியதறத்தின்றெய்வம். (௧௪)

அன்றறக்கடவுள்காணவழல்கொண்மூவிலைவேலண்ண
ணின்றனனுலகநாதாநீலகந்தரனேயெங்குந்
துன்றியபசுக்கட்கெல்லாந்தொன்னெடும்பதியேபோற்றி
யென்றதுமகிழ்ந்தெம்பெம்மானென்னநீவேட்டதென்றான். (௧௫)

வேட்டதுபிறிதின்றென்றுவேணிமேன்மிளிரும்வெள்ளைக்
கோட்டிளங்குழவித்திங்கட்குழகனைக்கோடறன்மேற்
கேட்டதுகொடுத்தானெந்தைகிடைத்ததவ்வரமுமாங்கே
யோட்டிளவானேறாகிமுக்கணாற்பொறுத்ததென்றும். (௧௬)

---

* திரிமூர்த்திபரன் சிவபிரானேயாக ஈண்டு விட்டுணுவைக் கூறியது என்னை யெனின், அநிருத்தன் முதலிய மூவர்க்கும் அதிபதியென்பதே இதன்கருத்தென்க. சிவனுக்கு உருத்திர விட்டுணு பிரமர்போல அவர்களுக்கும் அழித்தல் காத்தல் படைத்தல்களில் அதிகாரம் பெற்ற வியூகர்கள் உண்டென்று வாயுசங்கிதை முதலியவற்றிற் கூறப்பட்டது. பிரமாவுக்கு விராட்டு, காலன், புருஷன் என்னுமூவரும், விட்டுணுவுக்குச் சங்கரிடணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்னுமூவரும், உருத்திரனுக்கு அரன், மிருடன், பவன் என்னுமூவரும், வியூகர்களென்றறிக.

பின்னரும்பினாகபாணிப்பிஞ்ஞகன்றருமதீர்த்த
மென்னநின்பேரினாகவித்தடமிதன்கூலத்து
நன்னெறியுழப்போர்க்கெல்லாநலமிகநல்குமென்னா
மன்னருங்கயிலைவெள்ளிமால்வரையேகினானால். (௧௭)

ஆகலினீண்டிருத்தியாயுவுள்ளளவுமென்னை
யூகமாருளத்தினாடிலுனக்கெனதுருவமுண்டா
மோகமாரச்சநின்பான்முற்றியகாலைநந்தம்
வேகமார்நேமிவல்லேமேவியவவினையைவீட்டும். (௧௮)

எனநவின்றருள்வழங்கியிந்திரைகொண்கன்போனான்
முனிவரன்காலவன்றான்மூன்றெனுமமையந்தோறு
நனிகொள்சாளக்கிராமநறபிலையருச்சித்தங்கண்
மனவிசைநிறுத்திவாயில்வருபயன்மாற்றிநோற்றான். (௧௯)

ஈங்கிவன்மாகத்திங்களிலங்குவெண்பக்கநந்தை
தாங்குணவின்றிப்பின்றாட்டருங்கடனாற்றிமாலைப்
பூங்கமழ்குல்லையிட்டுப்போற்றியங்குறையும்போதி
லோங்கழல்வயிற்றரக்கனொருவன்வந்துறுவன்றன்னை. (௨௦)

அயிலுவான்பற்றலோடுபெருர்தவனினைந்துமாலை
யெயிலதாய்க்கனகன்சேயெனக்கருளென்றினைந்தான்
றுயிலராப்பள்ளிவள்ளல்சுதரிசனத்தைவிட்டான்
வெயிலவன்வழுவிப்பார்மேல்வீழ்ந்தெனமேவிற்றங்கண். (௨௧)

தற்றெரிந்தோடரக்கன்றலையினைத்தடிந்ததாழி
நற்றவனதனையிந்தநறும்புனற்றடத்தினாளிங்
குற்றதிங்கொழியவென்றுமுறைந்தருளென்றுபோற்ற
மற்றதுபுரிவனென்னாமாலவனேமிகூறும். (௨௨)

உன்றனையளிக்கமாயோனுதவலாலரக்கற்கொன்றே
னென்றுநின்பொருட்டிருக்கேனித்தடத்தாடினோர்பா
ணின்றிடாவலகைபூதநீடுசேய்மதிவீடுண்டாந்
தென்றிசையவாக்குப்பூசைசெய்திடிற்றேவராவார். (௨௩)

படர்ந்திடுமளவுதேவிபட்டணங்காறுமுண்டித்
தடந்தனக்கெனதுபேராற்சக்கரதீர்த்தமென்க
விடந்தருமிதனையென்னாவிரவிமுன்னுவரியாழ்ந்த
வுடம்புவர்கழிப்பான்போலவுவளகம்புக்கதாழி. (௨௪)

வேறு.

வாழிருந்தவமாமுனிகண்டிடவாசமுண்டகநீரிலமிழ்ந்திய
வாழியின்றிருநாமமடைந்திடுமோவியங்குறைகாலவனென்பவன்
வீழ்நெஞ்சினின்மேவநினைந்தவர்வேறுதுன்பிலர்கூறுமிருங்கதை
சூழுமஞ்செவியேறினரொன்றுயாதுயதண்புனலாடினரின்பமே. (௨௫)

சக்கரதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௪௧௦.

துத்தமச்சருக்கம்.

சூதன்கூறுந்தொன்மொழிவண்ணச்சுவைமாந்தி
யேதந்தீருமாதவர்பின்னுமிசைக்கின்றா
ரோதுங்காலவன்றனையந்நாளுயிருண்ணப்
போதுந்தியவிராக்கதனாரோபுகலென்றார். (௧)

உள்ளுமினன்றானுண்மையுரைப்பேனொருகாலத்
தெள்ளலினீதோர்சாபவசத்தாலிவன்வீரா
கொள்ளுநிசாசரனாயினன்வெள்ளிக்குன்றம்போல்
வள்ளறனாலவாயெனவுண்டோர்வளாகோயில். (௨)

மாசறுமின்பக்காதன்மனத்தான்மதுரேசன்
பூசையிழைப்பார்கண்டியுநீறும்புனைமெய்ய
ரேசில்வசிட்டராதியரெண்ணாயிரமும்மைத்
தேசுறுதக்கோர்மாதவமங்கட்செயுநாளின். (௩)

ஒண்கந்தருவன்விசுவாவசுவினொருமைந்தன்
விண்கந்தரநேர்குழன்முத்தணியாம்வெண்பாளைத்
தண்கந்தரபூகதமடவார்கட்டளைநீங்கா
வண்கந்திடறுங்கரியிற்றிரிவான்வலிமிக்கான். (௪)

மாணிலைமேவுங்கலையொன்றெனவும்வழிநிம்பா
லாணிலைசேரும்விடையொன்றெனவுமலாநீபக்
காணிலைமன்னுங்கயல்விழிபாகன்கமழ்கஞ்சப்
பூநிலைவாவிப்புனல்விளையாடல்புரிகுற்றான். (௫)

துத்தமனென்பான்றூர்த்தர்குழாத்துட்சுடர்போல்வான்
பைத்தநிதம்பப்பான்மொழிநல்லார்பலரோடு
மெய்த்துகிலில்லாதாடலுமுச்சிவினைசெய்தற்
குத்தரமீனின்கொண்கனைமுன்னோருடன்வந்தார். (௬)

வந்தவர்தம்மைக்காணலுநாணுமடயின்னார்
தந்தமருங்குற்காடைபுனைந்தார்தகையில்லா
வந்தரில்வாளாதுத்தமனின்றனதுகாணூஉ
முந்தைவசிட்டன்சிந்தைவெகுண்டான்மொழிகின்றான். (௭)

அறுவையுடுத்திலையஞ்சிலைதுத்தமவதனாலே
பெறுவையிராக்கதமேனியையின்னேபெறுகென்றா
மறுவையொழிக்குந்திங்கண்முகத்தம்மயில்போலுஞ்
செறுவையயிற்கண்மாதரையும்பார்ச்செலுமென்றான். (௮)

நீன்முகிலோதிமாதருரைப்பார்நிகழ்வேதன்
கான்முளைதாளில்வீழ்ந்தருள்வேலாய்கதிகண்டோய்
வான்முளைதிங்களின்மக்கள்பயக்கினும்வந்தைக்கும்
பான்முளைமூரலவாக்குமிரண்டிலைபதியின்றேல். (௯)

இற்றிடனன் றிதிலெங்கள்பொருட்டாலிவனுற்றுங்
குற்றமமைத்தருளாளுடையார்குறைகொள்வாரேன்
மற்றெவர்காப்பவரென்றதுநஞ்சொல்வழுவாகா
பற்றியவாண்டொருபத்துடனாறுபங்காறும். (௫௦)

சாலகடங்கடனாயிவனெங்குந்தமோறிக்
காலவர்தம்மைச்சக்கரதீர்த்தக்கரைகாணுக்
கோலவுனுவிற்பற்றிவிழுஙகக்குறுகுஙகான்
மாலவனெஃகஞ்சென்னியறுக்கும்வந்தங்கண். (௧௧)

பின்பிவனிந்தச்சாபமுநீங்கிப்பிடியன்னீர்
முன்பெனநும்பான்மேவுவனென்னுமுனிவோர்க
டன்புறனுகவசிட்டனடந்தான்றலைவன்பா
லன்பிலலைப்புண்டன்னவர்தழுவினரழுதாரால். (௧௨)

சாயமிளம்பிறையோடமர்நள்ளிருடனைமானத்
தீயவிர்குஞ்சியும்வெள்ளெயிறுங்கொடுதிரணீலக்
காயமுமேவினனன்னவன்வஞ்சியர்கண்டஞ்சிப்
போயினர்விண்மிசைபொன்னிறமஞ்ஞைகள்போமாபோல். (௧௩)

பூண்டவிராக்கதன்வாளரிமான்கரிபுரிகானில்
வேண்டுகொலைத்தொழில்செய்துழல்காலையில்விதிநன்கா
னீண்டவனேமிதடந்துறைகாலவனோசென்று
ஞண்டொருபத்துடனாறுநிரமபியதந்நேரம். (௧௪)

கோமுனிகாலவனுவியையுண்டிகொளும்போழ்தி
னேமிதடிந்ததவன்றலைசாபமுநீங்குற்றே
மாமகள்கோன்படைதன்னைவழுத்தினன்வானோர்கள்
பூமழைசிந்திடமுன்னமர்பொன்னகாபோயுற்றன. (௧௫)

ஆழியையேத்தியகன்றதுசாபநின்னருளாலே
வாழியவென்றுயர்காலவாகாலில்வணக்கஞ்செய்
தேழிசைவல்லவனேகியபினமுனியிங்கிரிற்
சூழொளிநேமியைவைகெனவேண்டுபுசொன்னனால். (௧௬)

அப்படியாகுகவென்றதுநேமியுமறவீர்கா
ளிப்படியாகுஞ்சக்கரதீர்த்தத்தியல்பென்றன்
மெய்ப்படுசூதனகேட்டவாபின்னும்வியலிந்நீர்
மைப்படிகூந்தற்றேவிபுரத்தின்மட்டுண்டேல். (௧௭)

கிடைகொள்குசைப்புற்பள்ளியுளன்றிக்கிளர்வாவிக்
கிடைநடுவிற்றதெனென்றனர்சூதனிசைக்கின்றன
புடைவிரிநீள்சிறைகொண்டுபொருப்புகள்புயல்சூழ்வா
னடைவழிபோகியிருந்தனபார்மேனகரெங்கும். (௧௮)

தொழுகுலவந்தணர்வேள்விசிதைந்தனதொன்னீதி
வழுவினவிந்திரனுடுபுவச்சிரவயிர்வாயாற்
குழுவுறுகுன்றின்சிறகவைபற்றிக்கொய்திட்டான்
முழுதும்விலங்கல்கலங்கிவிழுந்தனமுந்நீரில். (௧௯)

வேறு.

விரிசிறையரிபடுமென்றுகன்றியவிசையொடுபடர்சிலவென்றியொன்றிய
கிரியினமிதனையுமண்டுதெண்டிரைகளரொலிநரலையினெஞ்சுகொண்டிதி
லுரிமையினிருதலையுந்தணந்தலருவளகவகவையினன்றுதுன்றவி
னெரியுமிழ்பரியியலந்தையென்றிடுமிணைதவிரிஃதிடையின்றிநின்றதே. (௨௦)

துத்தமச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௪௩௦.

விதூமச்சருக்கம்.

நீன்மைமேனியனையியர்தடத்துறைநிறைநீ
மேன்மையுள்ளநுவிளம்புவதினைமுமெய்ந்நூற்
பான்மைநாடியபடிமையீர்கேண்மினீர்பரிவால்
யான்மைதீரபுகழ்வியாதனதருளினாலிசைக்கேன். (௧)

மேலைநாடுறைவசுக்களில்விதூமனென்பவனு
மாலநேர்விழியலம்புசையென்னுமோரணங்கு
ஞாலமீன்றவன்வாய்மையானரர்களாய்ப்பிறந்தார்
தாலமீதவர்சாபமீங்குற்றதித்தடத்தில். (௨)

வேதநான்முகனிங்ஙனோதங்களைவெருளற்
கேதுகாரணம்யார்வயிற்றுதித்தனரியாபாற்
கேதமோடியதெவ்வகைகிளக்கெனக்கேட்ட
ராதலாலஃதுறைகுவன்றெளிமினீரடைவால். (௩)

முன்னைநாளுலகுதவியமுண்டகமுதாதி
மன்னுநாமகண்மருங்குசாவித்திரிவயங்கப்
பொன்னிறுடைவேந்தனும்புலவருமபோற்றப்
பன்னுமேழிசையாணருஞ்சித்தரும்பரவ. (௪)

பதமகன்றடைந்திடுமெவர்பதத்திருவோடு
மிதமுட்டன்றெழுவெய்துநரிவர்களைவேறு
விதமுறத்தெரித்தவரவர்மெய்ப்பெயர்விளம்பிக்
கதமில்கட்டியங்காரர்பல்லோரெதிர்காட்ட. (௫)

ஆதிவானவக்கதிவிடுத்தவனிமேற்பிறக்கப்
போதுவாதமைக்கண்டவனனையபுலவ
ரேதமார்புவிமக்களோடிங்கெமக்கென்ன
பேதமென்றுளம்பேதுறீஇத்தமிற்சிலபேச. (௬)

மெய்த்தநன்றயன்வினவலுமேவியதேவ
ரித்துணைப்பொழுதருளினாலிருந்தனமென்கை
வைத்தநற்பதத்திருத்தினுமாற்றினுமுனது
சித்தமேலினியென்றிடுங்குறிப்பினைத்தெரிப்ப. (௭)

இந்திரத்திருநீங்கிவந்திருப்பவர்மகவான்
வந்திடச்சசிவருதலுமருவிவாழ்நாளிற்
றந்தசூளுறவெண்ணியேதையலார்தம்மைப்
புந்திநம்பிடலாகுமோவென்றுளம்புழுங்க. (௮)

கடிகொளாருயிர்க்களைமத்திடுங்கதியளவுணர்த்தும்
படிவநான்முகமெண்டிசாமுகத்திருள்பருக
முடிவிலாவிழியருட்புனன்முனிக்கணமுகப்பச்
சுடர்கொண்மார்பினூன்மேருவெள்ளருவிபோற்றுளங்க. (௯)

குழவிஞேடியர்பற்பலபகிரண்டகோடி
முழுதுமீண்டியசராசரவணுக்களின்முடிமேற்
பழுதுருவிணைப்பயன்படப்பற்றிகலின்றி
யெழுதுசெங்கைசேரங்குலியாழிநின்றிலங்க. (௧௰)

பாணிறதெகின்வாகனம்பவுரிகொள்வதுபோல்
வாணிறப்பெருஞ்சாமரையலமருமருத்திற்
றூநிறச்சிறுகுடுமியின்சுருக்கவிழ்ந்தலையப்
பூநிறத்தொடைமிலைந்ததோள்வலயங்கள்பொலிய. (௧௧)

முனிவராதியர்முறைமுறைவணங்கிடமொழியும்
புனிதவாசகமிறுதிநீத்தவர்கள்பாற்பொருப்பில்
வனிதைநாயகன்பேரருள்வழங்கிடவாறே
ரினியவாரமுதெழுந்தவஞ்ஞான்றுபோலீண்ட. (௧௨)

ஈன்றதேவருமுனிவருயித்துணையென்று
தோன்றவெண்ணியதொகுததபோற்றிரண்டதொல்லவைக்கட்
சான்றவந்தணன்சத்தியவுலகின்மேற்றலைநா
ளூன்றவார்குழலரமபையர்நாட்டியங்கண்டான். (௧௩)

பாதநூபுரப்பரலொலிபரதநூல்பகரச்
சோதிமேகலைபொன்மயிற்றோகையிற்றுளங்கக்
காதல்வானவர்நிலயமோகாமரோண்கவிஞே
யாதுகண்களாற்பருகுவம்யாமெலாமென்ன. (௧௪)

வீணையுட்டுளைவேயிசைபல்லியவிதங்கள்
யாணர்பேரவையிருந்தவர்செவிக்கமுதிறைப்பச்
சேணதிச்சிறுசீகரந்தென்றன்மேற்சிதற
மாணிழைச்சுடர்மடந்தையர்நடித்தனர்மரபால். (௧௫)

அவர்தமிற்சிலர்நடித்தபினலம்புசைநாமத்
துவரிதழ்க்கொடியாடினளவளுடைத்துகிலைப்
பவனனீக்கினன்மீதெழப்பயில்விளையாட்டாற்
சவையில்வெள்கினரயன்முதலோர்தலைதாழ்த்தார். (௧௬)

வளைத்தவின்மதன்வசுக்களில்விதூமனைமார்பந்
துளைத்தலான்முகங்கவிழ்த்திலனவள்குறித்தோற்றந்
திளைத்தகாதலிற்பார்த்தனன்கேசவனிலஞ்சி
முளைத்ததாமரைமகனதுதெரிகுறீஇமொழிவான். (௧௭)

வென்றிசால்புகழ்மேதகுவிதூமனீகேண்மோ
நன்றுநாமவையோருடன்முகிழ்த்திடநயன
மொன்றுகாதவினலம்புசையூருவின்மூல
மின்றுகண்டனைவெள்குறுதிதுநினக்கியல்போ. (௧௮)

தன்னைநேரெழிலலம்புசைதானுமற்றங்க
னுன்னைநோக்கினுள்வேணவாவுததியூடுற்றாள்
பின்னையென்கொலோபேசுவதீங்கெனப்பிரமன்
மன்னுசாபமன்றவர்பெறுமாற்றினால்வகுப்பான். (௧௯)

மண்டலத்தினீர்மனைவியுமணாளனுமாகி
விண்டலத்தைவிட்டுதித்திராலெனறனன்விரிஞ்ச
னண்டமெத்துயிருணர்வுசேர்வினையறிந்தமைப்போன்
கண்டதற்கமைதிடுவதோர்புகழ்மையோகழறில். (௨௦)

வெய்யசாபமீதடைந்தழிவிதூமனவ்வேதன்
செய்யதாள்பணிந்தடியனேனித்துணைத்தீமைக்
கையவாற்றலனளியனேனருள்புரியென்றான்
வையமீன்றவன்விளம்புவானவற்கெதிர்மாற்றம். (௨௧)

இட்டசாபமீதகன்றிடாதிவளொடுமினிநீ
வட்டமாநிலந்தோன்றியேவசுந்தரைபுரந்து
மட்டகன்றநாளின்பமுற்றிருந்தபின்மணிப்பொற
சுட்டிசேர்நுதலலம்புசைதருவளோர்சுதனை. (௨௨)

காளையன்னவன்றன்னையக்கருங்கடற்புடவி
யாளவைத்ததன்பின்னாநீதென்றிசையாழி
நீளமாகரையூடுசோநெடியவனுழிக்
கோளிலாப்பெயாகொண்டநீர்வாவியிற்குறுகி. (௨௩)

நாணமாற்றியேயிவளொடுநண்ணியமக்கண்
மேணிபாப்புரிதோலெனவீட்டியேவிண்மே
லானநின்பதமடைகுவாய்சாபமீதந்தத்
தேனறுந்தடத்தன்றியேதீர்ந்திடாதென்றான. (௨௪)

நாற்றலைப்பெருமானிதுநவின்றிடக்கேட்டு
வேற்றுவாசகம்விளம்பிடான்விதூமனுமவெள்கி
யேற்றதன்புரத்தெய்தியேயிருந்தபினிந்த
மாற்றமோதியவிரிஞ்சனைநினைந்துதன்மனத்தில். (௨௫)

தாதையார்நமைப்பயந்துபாற்றடமுலையூட்டுங்
கோதையாநிலத்தெனக்குரிதுணருவான்குலவு
மோதையார்கவுசாம்பியென்றுள்ளமாநகரின்
மேதையார்சதானீகனென்றுரைத்திடும்வேந்தன். (௨௬)

முன்னமாரனையுதவியமுகுந்தனேபோல
வென்னைஞாலமேலீன்றிடுந்தாதையவவேந்தல்
பன்னிவிண்டுமாமதிப்பெயர்படைத்திடும்பாவை
யின்னையென்றெடுத்தாய்ந்துளத்தொருதலையாக்கி. (௨௭)

விட்புலத்துறைவிதூமனிம்முறையலைவேலை
மட்புலம்புகமதித்தபின்மாலியவானைப்
புட்பதந்தனையிவரொடும்புகழ்ப்பலோற்கடனைக்
கட்புலத்தெதிரழைத்தனன்புகுந்தவாகரைவான். (உஅ)

யானுடைப்பெருந்துணைவிர்காள்கேண்மினோயானோர்
தேனுடைக்கமலாசனன்செப்பியசாபம்
வானுடைத்திருநீக்கியேமண்மிசைநூக்க
வூனுடைப்பிணிமாந்தர்தம்பிறந்தையின்றுறுகேன். (உகூ)

ஒன்றுமுள்ளலீரென்றனனுரைசெவிப்புகுமு
னன்றுமூவரும்பதைபதைத்தழல்விழுந்தவர்போ
னின்றுகண்கணீர்சொரிந்திடநின்னையாநீங்கி
யின்றுவாழ்கலமுடனணைந்திடுதுமென்றார். (௩0)

காதலாருரைகேட்டெதிர்விதூமனுங்கரைவுற்
றோதுவான்மிருநேயமென்னிடததுநீருடையீர்
பேதைமானுடயோனியான்பெறுகுவன்பிறழா
வேதனாணையானீவிரென்வேண்டுதிர்வெறிதே. (௩௧)

மதாணிமார்பகன்மதிற்கவுசாம்பியர்மன்னன்
சதானிகன்மனைவிண்டுமோமதியவடன்பா
லிதாகிதம்பகையுறவுவிட்டுயிர்முறையினும்
பிதாமகன்புரிபெரியசாபநிருற்பிறந்தே. (௩௨)

வேறுசூழ்வினையுள்ளனமண்மிசைமிசைந்து
கூறுசாபநீத்தும்மையான்கூடுறுந்துணையு
மாறுவீர்துயரமர்விரிங்கென்றனனவரிப்
பேறுநன்றெனமறுத்தெதிர்பேசுவாரின்னும். (௩௩)

தாழ்விலாதெமையளித்திடுந்தலைவநிற்பிரிந்து
வாழ்வதின்மிகக்கொடியதோமகடமபிறவி
யாழ்கடற்புவியன்றநுகரமமேயானுஞ்
சூழ்வதுன்னுடனுமெனிலெமக்கருந்துறக்கம். (௩௪)

இங்குநின்பணியிழைத்தபோல்யாங்களும்பிறந்தே
யங்குநின்பணியாற்றிடவருளெனப்பணிந்தார்
துங்கமூவருமன்பினுற்றடுத்தெதிர்சொல்லான்
பங்கமில்புகழ்விதூமனுமதற்குடன்பட்டான். (௩௫)

உரைசெய்மூவரும்விதூமனுமுளங்கொளும்போழ்திற்
றரைசெயுற்பவமதிக்குலந்தனிலருச்சுனனும்
வரைசெய்மார்பினன்வழிச்சனமேசயனமைந்த
னிரைசெய்பொற்றொடிப்புயன்சதானீகனுநிருபன். (௩௬)

அருணலங்கொடையறிவுசீராண்டகையமைந்த
தருணநீதியன்றடங்கவுசாம்பியிற்றகைசா
றெருணயங்கொளுன்முறையினுற்புரந்தனன்றேய
மருணினைந்திடாயுகந்தரன்மற்றவனமைச்சன். (௩௭)

சேனைகாவலன்விப்பிரதீகனந்தணரின்
ஞானவல்லபன்புரோகிதனரபதியொருநாண்
மானவேல்விழிமனைவியோடிருந்துழிமருவு
மேனைமூவரில்யுகந்தரன்முகந்தெரிந்திசைப்பான். (௩௮)

சுந்தரத்தடமுலையிவளகட்டிடைத்தோன்றல்
லுந்துதித்திலனின்னமுஞ்செய்வதென்மதியோய
சந்ததிக்கினியென்றலுமகிழ்வுறத்தலைவன்
சிந்தைவைத்திதுநுவலுவான்றேர்ச்சியின்செல்வன். (௩௯)

மறுவில்சாண்டிலியப்பெயர்மாதவத்தொருபே
ருறுவனுண்டுமெய்யொழுக்கநூலுணர்வருளுடையோனை
செறுதல்வேண்டுதறீதுநன்றெனபவைசேரப்
பெறுகிலானவன்பெருமகத்தருந்திறல்பெறறான். (௪௦)

நற்றவன்றனைநணுகெனநகைமுகமகவைப்
பெற்றவன்றையிற்களித்தனனவனொடும்பிரிந்த
பற்றவன்றனையடைந்தனன்பண்ணவனபடியாள்
கொற்றவன்றனக்குரிமைசேர்ருக்கைமுன்கொடுத்தான. (௪௧)

ஆதனத்தமரரசனையருந்தவனோக்கி
யாதுநச்சினையாஞ்செயவேண்டியதெவனோ
வோதெனத்தகையுகந்தரனுனைப்புகலுவந்தான
காதலறபெறுங்காதலான்காவலனென்றான். (௪௨)

நீவிரும்பியதூதவுதுங்கழ்சதானீக
வாவிசூழ்கவுசாம்பியில்வந்தெனுமுனிவ
னாவிபோலுலகளித்திடுமரசனோடதனகண்
மேவியாற்றினனபுத்திரகாமமாமவேளவி. (௪௩)

நீங்கிவானினைத்தசாதராமனேனெனவே
யோங்குதன்பெயாசகத்திரானீகனெனனறுரைப்பப
பாங்குசான்முனியருளினற்பகாசதானீகற
காங்கண்மைந்தனுய்விதூமனன்றவதரித்தனனால். (௪௪)

எயசீர்யவுகந்தராயணனெனுந்தோன்ற
லாயினனமைச்சன்றனக்கனையமாலியவான
மாய்விலாருமணவானெனுமபெயாமகவானான்
பாய்பதாகினிநாயகற்குரியபுட்பதந்தன். (௪௫)

மாமறைச்செயல்வல்லபன்மைந்தனுய்வசந்த
நாமமெய்தினன்பலோற்கடனிங்கிவாநாளுந்
தாமுயர்ந்தனர்தத்தமநெறிகளிற்றணவா
வேமமன்னவன்சேய்சகத்திரானீகற்கென்ன. (௪௬)

ஐந்துவற்சரஞ்சகத்திரானீகனுக்காக
வந்தயோர்த்தியிற்கிருதவன்மாமனையாள்பா
லுந்துசீர்மிருகாவதிப்பெயரினுலுதித்தாள்
கந்தமார்சுருளலம்புசையென்னுமக்கன்னி. (௪௭)

ஐவர்தாமிவரம்புவிமேற்பிறந்தமர்நாட்
டைவிடப்பணிப்பற்பெயர் * படைத்தவாளரக்கன்
றெய்வநாட்டினைத்தூலசென்னிய † னெனச்சிறந்த
வைவயப்படைத்துணைவனோடெய்தியேமலைந்தான். (சஅ)

பாந்தண்மூரலான்படைக்கெதிர்பைந்தருநாட்டு
வேந்தனிற்கலான்விறற்சதானீகனைவிளித்தா
னேந்தவிந்திரனாணையென்றிகற்படையோடும்
போந்தனுதரோடும்பரின்மீமிசைப்போவான். (சகூ)

வேள்விநாயகனாணையால்விண்மிசைப்போவா
னுள்வினைத்திறலமைச்சன்முன்மூவரோடங்க
ணீள்சகத்திரானீகனைநெடுநிலங்காவற்
கேள்விசாலிளங்கோவெனக்கிளர்முடியணிந்தான். (ருo)

ஏறறம்வெறவனிநதிரர
யாற்றலோடுசென்றும்பாமேலரவெயிற்றரக்க
னூற்றமாரணிமுனையுறீஇயுடன்றமர்புரிந்தான்
கூற்றமோவெனமதிற்கவுசாம்பியாகோமான். (ருக)

கார்முகங்கொடுசேணெறிக்கடியதேர்கடவி
யீரமுகம்பயில்பல்லமெணணில்லனவேவிப்
போர்முகந்தனிற்பகைஞராருயிரபலபோக்கி
யார்முகந்தருவாரெனப்பொருதிளைத்ததன்பின். (ருஉ)

நெட்டுயிர்ப்பெறிபாந்தளம்பற்பெயாநிருதன்
பட்டிடப்பொருதங்ஙனமவனுயிர்பருகி
மட்டலர்ப்பொதிகற்பகநாடர்கண்மதிப்ப
விட்டனன்றனதாவியுஞ்சதானிகவேந்தன். (ருங)

துன்னலாரைவென்றவனிமேற்போகினுந்துறக்கந்
தன்னின்மீண்டுறவேண்டுமொற்சாவுவந்திடுநா
ளென்னபேறிதெனக்கவுசாமபியரிறைவ
னுன்னுமாகவததாகநீததுவணைமேலுறைந்தான். (ருச)

வலவனிந்திரனாணையான்மன்னுடல்கொண்டு
நிலனிறங்கினன்சகததிரானீகனேர்காணூஉ
வலமருந்துயரளக்கர்வீழ்ந்தையனைததழுவிப்
புலரவாயினீர்புலம்பினன்விழியினீரொழிந்தான். (ருரு)

தண்ணறுந்தொடைச்சகத்திரானீகனத்தந்தைக்
கெண்ணருங்கடனிழைத்தனனிறைவனோடேகாள்
வண்ணவொண்புகழ்மடந்தைவீற்றிருந்தனண்மண்மே
லண்ணவில்லவளுடனுயிரில்லவளானாள். (ருசா)

இறையிறந்தபின்யுகந்தரன்விப்பிரதீகன்
மறையிறந்திடாவல்லபன்வாய்மையான்மறையின்
முறையிறந்திடாமுறையினன்முதுகடலாடைத்
[illegible]தளித்தனன்சகததிரானீகன். (ருஎ)

* அதிதய்ஷ்டிரன். † தூலசிரன்.

அந்தமூவருமாய்ந்தனரதன்பினரவர்பால்
வந்தமூவருமரசியலாற்றிடமைந்தன்
றந்தையிற்பதின்மடங்குறுதானைதற்சூழ
விந்துமண்மகள்கலன்கழியாதரசிருந்தான். (ருஅ)

காமரிந்திரனந்தநாட்கடியதூதுவரை
நாமிழைத்திடுநெந்தனவிழவுகண்டுவெப்ப
நேமிசூழ்புவிச்சகத்திரானீகனைக்கொணர்மின்
போமினென்றனனவர்கவுசாம்பியிற்புகுந்தார். (ருகூ)

புகுந்தசாரணர்தமக்குமுன்புகுஞ்சதமகன்போற்
சகந்தொழுங்கழற்சகத்திரானீகனைச்சார்ந்து
மிகுந்தவானவாவேந்துனைவருகெனவிளித்தா
னிகந்திடாதனையெங்களோடென்றுநின்றிசைத்தார். (சூ0)

அண்டர்கோன்பணியென்றலுமாடகச்சில்லிக்
கொண்டறேய்கொடிக்கொடிஞ்சிமான்றேரிசைக்கொண்டு
விண்டலந்தருநடவைபோய்மேனிலத்திறையா
கண்டலன்றனைக்கண்டயலிருந்தவக்காலை. (சூக)

வச்சிரக்கரனொருகதைவருகதையாக
மெய்ச்சிரத்தையிற்சகத்திரானீகனோவிரிப்பா
னச்சநுண்ணிடையலம்புசைபிறந்தனளயோத்தி
யிச்சைகூர்ந்திடுகிருதவன்மாவெனுமிறைபால். (சூஉ)

விரிஞ்சனனையிறைலவண்மென்கயான்மூலந்
தெரிந்தகொள்கையில்விதூமனைவசுக்களிறசிறந்தோய்
புரிந்தமானுடமடக்கொடிபுமானுருவாகிப்
பரிந்தகாதலினின்பவாரிதியினிறபடிந்து. (சூங)

மண்புரந்தருண்மகவினைமணிமுடிமிலைச்சித்
தண்புதுப்புனற்சக்கரதடததிடைமூழ்கி
நண்பினும்புகல்சாபநீத்தவளொடுகலஞ்சேர்
விண்புகுந்திடுகென்றனன்மறையெலாம்விரித்தோன். (சூச)

என்னவோதினனிந்திரனெயிற்கவுசாம்பி
மன்னனன்னவள்வனப்பெனுந்தூதுதன்மருங்கிற்
பொன்னிறுடைதொடீர்த்தலுநிற்கலான்போகி
நன்னகர்ப்பதிவிடுத்திடத்தன்னகர்நடந்தான். (சூரு)

சேணெறிக்கிடைக்கண்டனடிலோத்தமையவட
னீணெறிக்குழற்கங்குலினெஞ்சகமயங்கான்
வேணெறிக்கொருசுடர்மிருகாவதிமெய்யிற்
பூணெறித்திடுபுதுவெயிலுள்ங்கொளப்போனான். (சூசா)

பொய்தரும்புலன்வெஃகுறுமெய்யரிற்போகுங்
கைதரும்படமன்னனைத்திலோத்தமைகாணு
வெய்துருங்கவினிளையைநீயென்னைவேண்டிலையான்
மைதருங்கணார்பொறுத்திடார்மறையவமானம். (சூஎ)

சேர்கிலாதெனையெவளிடத்தாசையாற்சென்றாய்
கார்குலாவகுழன்மின்குலாங்கவினுடைமருங்கு
லேர்குலாவணங்கவணலம்வற்சரமிரண்டே
ழார்கிலாதகல்வாயெனச்சாபமாங்கறைந்தாள். (௬௮

துவளுநுண்ணிடைத்திலோத்தமைக்கெதிர்மொழிசொல்லான்
பவளவாய்மிருகாவதியெனப்பெயர்பகரு
மவளையோததியிலுள்ளவளில்லவளாறு
லிவளும்பிரிவாற்றலோவரிதெனக்கென்று. (௬௯

காதிலோடிருகண்மிருகாவதிநாமச்
சீதவாணகைமுகிழ்நிலாசசேயிதழ்ச்செவ்வி
மாதுதன்மனமலருறவளநகர்ப்போகி
யேதினுள்சிலவிறைச்செயலிழைத்தனனிருந்தான். (௭௦

அருட்சிறந்திடுசகத்திராணிகளுங்கதற்பின்
றெருட்சிசேரவைத்ததிசைமுகன்சபித்தநாட்சிந்தை
மருட்சிகூர்கலைமதியொளிமாழ்கவந்தெழுந்த
விருட்சிபோலிருண்டலர்புனையிருங்குழலாளை. (௭௧

பங்கமுற்றிடமுண்டகங்கறுத்துடல்பனிப்பத்
திங்கள்விட்டொளிர்திருமுகச்செவ்வியினாளை
யங்கயற்றுணைகண்டிடமகரநின்றாடுந்
தங்குபொன்மணியூசனேர்தாழ்குழையாளை. (௭௨

வானமாரொளிவளர்சிறுபிறையுடன்மறுப்போ
னானமார்திலகம்பயினன்னுதலாளைக்
கானமார்கனிக்கோவையிறசேந்துளங்கரையப்
பானமார்நறவொழுகிடும்பாலிகையாளை. (௭௩

மூரலென்றுமோர்பெயர்பெறவிளங்கிலாமுகிழ்க்கு
மாரநல்கியகந்தரத்தணிவளையாளை
வேரலென்றிருமென்கழையென்றிருவிகற்பாற்
சோரவிஞ்சையர்நெஞ்சமாதோளிணையாளை. (௭௪

அம்புலாங்கடலலைத்தநாளரனைக்கள்வ
னும்பர்கண்படாதருண்மகற்குற்றிடத்துதவுந்
தம்பமாவமுதடைத்தொளித்திடுமிருதடம்பொற்
கும்பநேர்வெளிவந்தனகொங்கையினாளை. (௭௫)

சினமடிக்கொளாமுனிவரர்சிந்தைவண்டாடும்
புனமடிக்கொளாக்காந்தளம்போதுடையாளைத்
தனமடிக்கொளுநாண்முதற்சார்புளார்கல்வி
மனமடிக்கொளமடிக்கொளுமணிவயிற்றாளை. (௭௬)

தந்தியின்றுணைக்கோட்டிடைத்தாழ்கையாம்பருத்தா
லெந்தவாற்றினோவிடைச்சிலபொருள்களான்மறையுங்
குந்தளக்கருங்குருத்தெனக்குளிர்மடுச்சுழிநீ
ருந்திநின்றெழுநுண்மயிரொழுங்குடையாளை. (௭௭)

அற்கருங்கடற்பரப்பதன்மேல்வெளியதன்மேற்
சொற்கமென்பதுபொருள்படத்துணைமுலைதாங்கி
யொற்கமின்றகல்கடிதடமாமதற்கும்பர்
நிற்குநுண்பொருளுருவிலாநேரிடையாளை. (௭௮)

குரம்பைமானவருலகினிற்கொண்டணைந்தற்று
ளரம்பையென்பதையறிவுறுத்தணிகுறங்காளைப்
பரம்புவிண்செலுநாட்கிளைப்பவனருண்டுறுமா
தரம்படுங்குளிர்போன்முழந்தாளுடையாளை. (௭௯)

ஏறெனுந்தடநீர்விளையாடியவிகல்வே
ளாரநல்கிணைவரானிகரடிக்கணையாளை
நேருணர்ச்சியிற்றிருவொடுநிறுத்தநாட்டன்னைப்
பாரிறக்கியவிதிதராசுறழ்பரட்டாளை. (௮௰)

மழவர்தாமிடையின்றமர்சேர்வையின்வன்ன
மெழுதுபுத்தகநேர்புறவிணையடியாளைக்
குழுமிநின்றதன்வாசிணைகொள்பவாகூற்றின
பழுதில்பேரொலிவழங்கிடும்பரிபுரத்தாளை. (௮௧)

வேதியன்முனநடித்தநாள்வெண்சிறையூதி
யோதிமந்தருபரிசினேருறுநடையாளை
யாதியின்னமுப்பளவலையழிவுசெய்யாமற்
போதனல்கியபடைத்துணைபோன்றமர்வாளை. (௮௨)

சென்றுகண்டவர்பார்வையுஞ்சிந்தையுந்திருப்பா
நின்றுதங்களையுடையவாகல்வியுநெறியும்
வென்றியும்பிணித்துடன்செலமெல்லடிப்புறத்தி
லொன்றுசங்கிலியொக்குமேருருவுடையாளை. (௮௩)

வேள்விரும்புறுமிரதியைவேண்டலன்மகவான
வாள்விழிச்சசிதனைமான்மார்பகமையா
னீள்குழற்பொறிதனையிவணேர்படிலென்று
நுள்வகுத்திடவிளங்கியசோதியினாளை. (௮௪)

அறந்தருந்திருப்புக்கமாமதிலயோத்தியினிற
பிறந்தகம்படப்பிறங்கியபெண்மையினாளை
மறந்தரும்படைக்கிருதவனமாமகள்வடிவாய்ச்
சிறந்தசீரெலாந்திரண்டனசெய்கையினாளை. (௮௫)

அருவமாமழகவயவம்படைத்தணைந்தனைய
பொருவிலாமிருகாவதியெனும்பெயர்புனைந்த
விரிகலாபமாமஞ்ஞையஞ்சாயனமென்கொடியை
நிருபன்முற்றெருட்டர்நிலைமையாற்றழுவுவானினைந்தே. (௮௬)

காணரும்பெருங்காதலானறிஞரைக்கரைந்து
மாணெடும்புகழ்க்கிருதவன்மாமருங்கேவிப்
பூணிளங்கொடிதனைமணவிதியினாற்புணர்ந்தான்
சேணிலம்பிரிதுயரெலாமங்ஙனந்தீர்ந்தான். (௮௭)

விட்டிடச்சொலும்வேந்திளஞ்சேயெதிர்வேடன்
பட்டணங்களினாட்டியான்பயன்கொளற்பால
னட்டமிங்குனக்கேதெனாநகைமுகனாகிக்
கட்டினானுடனெரியமீண்டன்னகட்செவியை. (க௦எ)

கறையகித்துயர்காண்கலனாய்தருங்கனகப்
பொறைமணிப்புயத்தொடியினைப்புளினனுக்குதவிச்

னறைமலர்க்கழல்பணிந்துடன்கொண்டதுநண்பு. (க௦அ)

இன்னதற்பினர்த்திருதராட்டிரன்மகனெனுமக்
கின்னரப்பெயர்மாசுணங்கேண்மைசால்குமரன்
றன்னைமுற்கொடுபோதலம்போயுபசரித்த

(கக௦)

இளையளாகியலளிதையையீந்தபின்பார்தள்
வளையிடுங்கரமங்கையுமன்னவன்மகனு
மளையுமன்புடனகமகிழ்ந்தமர்ந்தனரந்நாட்
டளைநெடுங்குழல்பழுதிலோர்குழவியைத்தந்தாள். (கக௧)

தந்தகோற்றொடிசாற்றுவாள்சருபமாகுக
முந்தொர்சாபமுண்டென்பெயர்சுகண்டியான்முன்ன
மந்தவித்தியாதரர்குலத்தாயிழையகட்டில்
வந்தபீளிதுமற்றதுமாற்றிடுமருந்து. (கக௨)

தலைவமைந்தனைத்தலையளிபுரிகெனாத்தன்கைம்
மலரில்வீணையுமயாடுறுநாகநீள்வல்லி
யலரலங்கலுமுதயனன்பாலளித்தரவக்
குலம்விடுத்திடாவேகினள்விசப்பிலக்கோதை. (கக௩)

மன்னன்மைந்தனுமாமனாதியரனுமதியா
லன்னைதன்னுழையப்பொருண்முன்றுடனாகிப்
பன்னருந்தவன்றெளித்தலாற்பழங்கணீத்துறையும்
பொன்னனாருடனிகழ்ந்தகாரியமெலாம்புகன்றான. (கக௪)

மாதுகேட்டுளமகிழ்ந்தவணிருந்தனண்மற்றப்
போதுவேடுவன்புகழ்க்கவுசாம்பியிற்போகி
யீதுதோள்வளைகொண்மினென்றியம்பவோரிளங்கோக்
காதுவேற்பெருங்கோமுதற்பொறியதிற்கண்டான். (கக௫)

கண்டநாய்கனக்கடுங்கொலைக்கிராதனோடதனைக்
கொண்டுமன்னவன்றிருமுனங்குறுகலுங்கோமான
விண்டுபோயினமின்மிருகாவதிமென்கை
முண்டகம்பொழிமதுமழைப்பெருக்கிலேமூழ்கி. (கக௬)

சீதளம்பெறுவளையையத்திருவினைநீங்கிப்
பேதுறுந்துயர்க்கனல்வெதுப்பகன்றிடப்பிறங்குஞ்
சோதிமார்பகத்திருத்தினனெயினனைச்சுட்டி
யாதுகூறுதிநினக்கிதுவந்தவாறென்றான். (கக௭)

சவரனச்சொடுசகத்திராணிகனைத்தாழா
வவரலாற்றடைவறைந்தனனிறைவனன்றங்கட்
கவரிலாயுகந்தராயணன்முன்னவர்கணங்கொண்
டிவரவேகினனிடைநெறிக்கரந்தனனிரவி. (௧௧௮)

கான்பரந்தபூங்குழன்மிருகாவதிகலவா
லூன்பரந்தமாலழலரசுச்சியிற்றூங்கி
வான்பரந்ததுபோற்பரந்திட்டதுமாலை
மீன்பரந்தனவெயர்ச்சிதாமெய்ப்பொடித்தென்ன. (௧௧௯)

மாசுடைக்கலைமதியவர்வளர்வுறின்மரபிற்
றேசுடைத்தகையோர்களைத்தெறுந்திறன்றேற
வீசுடைப்படைச்சகத்திராணிகனுள்வெருவ
வாசுடைச்சுடரம்புலியெழுந்ததம்பரத்தில். (௧௨௦)

வயங்குவட்டமுங்கிருதவன்மாவருண்மகள்போற்
றயங்குசீர்மிருகாவதியாகியதகையா
லியங்குசேணிருந்திறைவனுக்கிடரிழைத்திட்டான்
முயங்குசீதளவமுதவெண்ணிலவுகான்முதல்வன். (௧௨௧)

சந்துமாலையுந்தழல்படுசகத்திராணிக
னுந்துமேனியிலுரோமராசித்துணைக்கிரட்டி
கொந்துலாமலர்ப்பகழிதூயஞ்சுகக்கோடை
வந்துவையமேல்வந்தமராடினன்மாரன். (௧௨௨)

வீரனேர்பொருதாருயிர்கவர்ந்திடும்வென்றி
மாரனின்மையான்மற்றதுவஞ்சனைக்கொள்வான்
சாரவிட்டலுமெல்லெனச்சார்ந்தவன்றன்பாற
சேரநின்றுலாந்தீவகம்போன்றதுதென்றல். (௧௨௩)

குணந்தருஞ்சிலைக்கிருதவன்மாவருள்குயிலைத்
தணந்தநாண்முதலின்றளவொருகலைதானுப்
புணர்ந்தவாணியம்போன்மிகநீண்டதுபுல்லார்
கணந்தொழுஞ்சகத்திராணிகற்கற்றைநாட்கங்குல். (௧௨௪)

விரவலார்சயத்தேர்மணியான்மணிவிரிந்த
புரவ்ளாழியத்தேரிடைப்பூட்டுருளாழி
பரவுகாவலற்கிருசெவிப்புழைவழிப்படரு
மரவமானதுசுடுதுளைத்திகிரியூதரவம். (௧௨௫)

இசைந்தவீணையுமன்றிலுமிடர்செயவிரங்கித்
தசைந்தபூணிணைத்தனமிருகாவதிதனபா
லசைந்துறங்கிடாவரசனையவவிருட்பெளவம்
வ்சந்தனேற்றினன்றொல்லுரைசொல்லுநாவாயால். (௧௨௬)

அலங்குநஞ்சுடர்த்தொகைப்படையுடையவனரசன்
வலங்கொண்மைந்தனையுதயவெற்புதவினண்மனைவி
புலங்கொளப்புகின்வேறலன்புதல்வனம்பேரன்
கலங்கதீர்ப்பனென்றெழுந்தனன்கதிரவன்கடன்மேல். (௧௨௭)

வைகறைப்படவெழுந்துபோயுதயமால்வரைமேன்
மொய்கரிக்கரியுறவுகூர்முனிவனுச்சிரமத்
யுய்கருத்தினுற்புகழ்ந்தனனுறுவனெஞ்சுவப்ப. (கஉஅ)

பார்த்திவன்றனைப்பார்த்தவன்பாத்தியமுதலாஞ்
சீர்த்தநல்லுபசாரமுன்செய்தபின்சிறந்த
வார்த்தையொன்றுரைசெய்வனின்மகனிவன்வென்றி
கூர்த்தமொய்ம்பினுனுதயனனிராமனேர்குணத்தான். (கஉகூ)

குசனைநேருமித்தோன்றலவவுதயனன்குழவி
வசையினின்றிருப்பேரணிணமனைவியம்மடவா
ணசையுடனறழ்இயேகெனமனனவனகைதேர்
மிசையிலேறியன்றவருடன்வியனகர்புக்கான். (கஙு0)

புக்கபின்புதன்புதல்வனுமுதயனன்புயமேற்
றக்கதன்றடந்தோளுறைதராதலமாதை
மிக்கவன்பினுலிருதினன்மேதினிவாழ்விற்
றுக்கமுற்றனனுணர்ந்தனன்சதமகன்சொல்லை. (கஙுக)

கண்ணைநேரியயுகந்தராயணனெடுவசந்தன்
வண்ணமாருமண்வான்மிருகாவதியோடு
மண்ணலேகினன்மானுடவாக்கையையாழித்
தண்ணறும்புனலாட்டினனவிட்டினன்சாபம். (கஙுஉ)

தேவதுந்துபிமுழங்கினவிமையவர்சிதறும்
பூவுதிர்ந்தனமுனையவியல்பெலாம்புணர்ந்த
வாவியன்னவருடனிமையோருருவாகி
மீவிமானமேற்கொணடுவிண்மேவினன்விதூமன். (கஙுங)

வேறு.

திகிரிவாவிவழுத்துபுயாருமேதெரியமேலுலகுற்றதுநேறியே
யகிலலோகருமுற்றதின்மூழ்கினுரடல்விதூமனுடைச்செயலீதரோ
பகருநீரொராபகற்பொழுதாடினேோபரவுவாணிலிருப்பாகள்பாடுவார்
நிகரிலகாதைசெவிக்கொளுநீர்மையாரிணைவுசேர்பொருளக்கணநேருமே. (கஙுச)

விதூமச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ருசுச.

தேவிபுரச்சருக்கம்.

மாண்டகையபரிதிமடுவாய்மையிதுவெனக்கேட்டு
மீண்டுமுனிவாருஞ்சூதபார்மேதகுசூதனைநோக்கி
யாண்டதனைத்தேவிபுரமளவுளதென்றனையன்றே
யாண்டையதந்நகரமதற்கிந்நாமமிசைந்ததெவன்.

கோசலைசேயணைமூலங்குலவாழித்தடத்தின்கண்
மாசலையப்புகுந்தாடுமெனிதருறும்பயன்வகுத்துப்
பேசலையன்றிப்பிறங்கும்பெருமிதங்களுளபிறவு
மாசலையும்படிசுருங்காதகலமுறவருளென்றார். (௨)

சூதனவருரைகேட்டுச்சுடராழித்தடமுடிவா
மாதிருவின்புரம்வந்தவரலாறுமற்றையவு
மோதுமறைமுனிவீர்காளொருதலைக்கொண்டுருகுமனக்
காதலுடன்கேண்மின்கள்கழறுவமென்றவைகரையவான. (௩)

அன்புடனிக்கதைகேட்பாரறைவாரைவினையணுகா
மன்பெருநீரிடைக்குரம்புவகுத்திடுநாளாதிதனி
லொன்பஃதுசிலைநிறுத்தானுததியின்பாற்காத்ததன்
பொன்புனைதன்கரங்களினலதுதேவிபுரமாகும். (௪)

தாரணியையலங்கரிப்பாடலைவியவணுத்தூணு *
நாரணிதான்கதிராழிநறுந்தடத்தினைகரையிற்றன்
பேரணிநதோர்நகாவகுத்தபெருங்காதைவருநிமித்தத்
சீரணிமாதவிர்கேண்மின்சென்றதொருகாலத்தின். (௫)

சுரரசுரருடன்பொருநாட்சுதனிழந்ததிதியென்பா
ளரவமெனவுயிர்த்திரங்கியழுங்குறுவாடான்பயந்த
சூரவநெடுங்குழன்மகளைக்குறித்துரைப்பாளகோற்றொடியாய்
வரமிகுமோர்மகப்பொருட்டான்மாதவநீசெயற்பாலை. (௬)

இந்திரனுமிமையவருமிலராகவுளனாகு
மைந்தனுனதகட்டுதிப்பமறைநியதிவழுவாமற்
புந்திகவாபுலனடக்கித்தவம்புரிதிபோயென்று
டந்தவளைப்பணிந்தவளுந்தபோவனத்தினிடைச்சார்ந்தாள். (௭)

மையுறுதனமனத்திருண்டமலர்க்குழலாண்மணிமகிட
மெய்யுருவுதரித்திமையாவிண்ணவரும்விழிமுகிழ்ப்ப
வையமலினிடைநிலையுற்றருந்தவருங்கருதாத
பொய்யிறவமிழைத்திட்டாணடுங்கினமுப்புவனங்கள். (௮)

குற்றிடைநுண்கொடியவளாங்கொடியவண்முன்குறுகிமனத்
துற்றபயத்துடனுனதுதவமுகந்தேமொண்ணுதலாய்
மற்றையுருநரருருவாமகிடமுகமதலையைநீ
பெற்றிடுகென்றருள்புரிந்தான்பிறங்குசுபாரிசமுனிவன். (௯)

அவ்வரந்தந்தவனவளையணங்கிடையாயடன்மகிட
னெவ்வரமும்பெறுஞ்சிறுவற்கிடுநாமமிவனிமையோர்
கவலுவயுழந்திடவலைத்துக்கவுசிகனைப்புறங்காண்பன்
செவ்வரங்கொடவம்விடுதிவருகெனத்தன்னுழைச்சென்றான். (௧௦)

உடன்கொடுபோஞ்சுபாரிசன்றனூர்புகுந்தபின்னைநாண்
மடங்கலெனமகிடமுகமதலையவள்வயின்றோன்றி
விடங்கொளுருவெனவிளங்கிவெண்மதிசேர்விறற்சகரர்
கிடுக்கெனமைந்திகல்வீரங்கெழுமிமிகக்கிளர்வுற்றான். (௧௧)

* நாத்தூண் — மைத்துனி.

தானவர்மாதவமனையதனயனிவன்றழைத்திடுநாண்
மேனிலையோர்பெரும்பகையாம்விப்பிரசித்திக்குரிய
மானமகன்வித்துத்துமாலிமுதல்வல்லவுண
ரானவர்தாமுடன்குழுமியன்றவன்பாலடைந்திட்டார். (கஉ)

அயர்நிலைதீர்கவரிமுகத்தவற்கறைவான்மின்மாலி *
யுயர்நிலைநந்தமராட்சியுடையவர்முன்னிடைநாளின்
மயர்நிலையர்நாரணன்றன்வன்மையினனமர்க்கெல்லாந்
துயர்நிலைசூழ்ந்திதுபொழுதுதுய்க்கின்றூர்சுரரானோர். (கங)

மேதிமுகநின்வீரவென்றியிதில்விளங்கியிடக்
காதியிமையவர்குலத்தைக்கனகநிலங்கைக்கொள்வேம்
போதியெனப்புகன்றிடலும்புதியபடைத்திதிபேரன்
சோதியெரிவடவையெனப்போய்வளைந்தான்சுரருரை. (கச)

வளைந்தமரருடனூறுவருடமமராடுதனு
முளைந்தமரர்சதமகனேடுடைந்துதலைகுலைந்தோடி
விளைந்தபுகழ்விரிஞ்சனுழைமேவினரவனவர்க்கொண்
டளைந்தமதிச்சடைமுடியாரரியொடமரிடம்புக்கான். (கரு)

இறையிறைவிப்பொருள்புணருமீசனையுமாயனையு
முறைவழுத்திமுளரிமகன்மொழிகின்றான்முகமகிடன்
பொறைவிடுக்குந்தருவரொடும்புரிவாலப்போர்வலியா
னறையவிழ்க்குங்கற்பகக்காநன்றுடைக்கொண்டான். (கசு)

உம்பர்களுமகபதியுமொதுங்கிநிலையிலராகி
யம்புவியின்மானுடர்போலலமரலுற்றலைகின்றூர்
கொம்பருறழ்மணிமருங்குற்கோதையிளங்கொடிபாகா
தம்பமவர்தமக்குனதுதாட்டலம்வேறிலையென்றான். (கஎ)

உந்திமலர்மகனிதனையுரைததிடலுமுலகொடுக்கு
மந்தமுதலவனழன்றானவனெவையுமாகையினு
லிந்திரனுன்முகன்முகுந்தனிவர்முதலாமிமையோர்பால்
வந்தெழுவெஞ்சினச்சுடர்கள்வானளவினிமிர்ந்தனவால். (கஅ)

நிமிர்ந்தசுடரவைதிரண்டோர்நேரிழைதன்வடிவாகி
யமர்ந்தவதற்கழனுட்டத்தண்ணலொளியணிவதனங்
கமங்கெழுகுன்முகிலுருவன்கடியசினக்கனல்கரங்க
ணமன்றருவன்றழற்படலைநறுங்கதுப்பினெடுங்கற்றை. (ககூ)

தாமரையோன்றருநெருப்புச்சரணசரோருகத்துணைக
ளேமநிலக்கிறைஞெகிழியிடைமதித்தீயிருகொங்கை
வாம † மணிமுழந்தாள்கள்வருணகிரணம்புடவி
யாமதனன்கனனிதம்பமடியுகிராதபன்சோதி. (உ0)

மலர்க்கைநகம்வசுக்கள்வசுமந்திரிவெந்தழனுசி
நலத்தகையாவவிரிஞ்சர்நகையெரிவெண்ணகைமுறுவல்
வலக்கண்ணுமிடக்கண்ணும்வயங்குதழற்கடவுளழல்
கலக்குமிருவகைச்சந்திக்கனலிரண்டுங்கரும்புருவம். (உக)

* மின்மாலி—வித்துத்துமாலி. † வாமம்—தொடை.

காற்றுதவுகனலியருகன்னமற்றைக்கடவுளர்தீ
யேற்றவவயவம்பிறவுமிங்கிலைக்கொண்டெழும்படிவங்
கூற்றுருவமடந்தையெனக்கொடியதிறற்சுந்தரியா
யாற்றின்மிருந்தெவராலுமடற்கரிதாயினவங்கண். (உஉ)

கன்னிதனைக்கண்டுமனங்களிசிறந்தார்கடவுளர்கண்
முன்னுதற்கட்பெருமானைமுதற்றலைவர்முத்தலையாய்
மன்னுதலைச்சூற்றலையாம்வயப்படைகண்மலர்ப்பிணைய
னன்னுதற்செந்திலகம்விரைநாகமிவைநயந்தளித்தார். (உ௩)

அங்கிருந்தாரவருதவுமவைதரித்திட்டார்ப்பரவத்
தெங்கிருந்தார்களும்வெருவவெதிர்விளங்குமெதிரில்லாக்
கொங்கிருந்தார்மலர்க்கூந்தற்கொடும்பாலைக்கிழத்திதனைப்
பொங்கிருந்தாபதர்தேவர்பிறர்யாரும்போற்றிசைத்தார். (உ௪)

அகிலதலம்விதிர்விதிர்ப்பவதிருமடற்கேசரிமேற்
பகவதியையடிவணங்கிப்படைபலகொண்டணைந்திட்டா
கல்கருதியிமையவருமிவளிடிவெங்குரல்கேளா
கரமலிகடல்புரண்டுவெருவதெனமகிடமுகன். (உ௫)

வில்லுமிழுந்திருவுருவவிறலணங்கைமுன்கண்டான்
செல்லுமதுபொழுதின்கட்டேவிக்குந்தானவாக்குரு
சொல்லரும்வெஞ்சமர்விளைந்ததெண்டிசையுந்துணுக்கென்ன. (உ௬)

வேறு.

ஆயிரகோடியிலக்கமுதற்படையவர்சூழக்
காய்கணைவிற்குலிசமகதைசூல்கடகஞருந்தம
பாய்கரிவாசிபதாதினிதேரிவைபலவோடு
மாயிருமேதிமுகத்தவுணர்க்கிறைவந்தெய்தி. (உ௭)

ஏவினனாயுதம்யாவையுமங்கவனெதிர்நிற்குந்
தேவிதன்மேலவைசிந்துபுவேதிததிரளெல்லாந்
தூவினடானவர்மேலவள்கட்டுணைதுணையாகப்
பூவிரிவெம்படைபற்பலபோக்கினர்புலவோரும். (உ௮)

பட்டனதானவர்தானைகளிற்பலபடல்காணு
வுட்டெறுகோபவழற்புகைமானவுயிர்த்தொல்லை
கிட்டினன்மேதிமுகத்தவனொண்ணுலிகிளர்தாள்வில்
வட்டமுகங்கொளவாங்கினன்வாளியின்மழைபெய்தான். (உ௯)

வேறு.

ஈராயிரமைந்தொகைவெஞ்சராமிந்திரன்மேலு
மோராயிரமைங்கணைதன்முகவூர்தியன்மேலுங்
கூராயிரமெண்கணையங்கடலின்கோமேலுஞ்
சாராயிரமாறடுகோறனதன்றன்மேலும். (௩௦)

வாயுவசுக்கண்மருத்துவர்சீதளமதிவானோன்
றேயுவிருச்சிகளாதியமற்றுளசேனாட
ராயுணத்தவரோரொருவர்க்கயுதம்பாண
மேயசினச்சுடர்போலெவர்பாலினும்விட்டார்த்தான். (௩௧)

விட்டதுகாணலும்விற்றைவெகுண்டனள்வேதாள
மட்டிரிபாரிடராகியவீரரைவம்மின்கள்
கட்டுமினீடியபாடியையீருயிர்கவர்கின்றே
னெட்டருமெய்வரமேதிமுகத்தனையானென்றாள். (௩௨)

அக்கணமன்னதுசெய்குவமென்றெயிறவிர்பேழ்வாய்
மெய்க்கணநாதர்திரண்டனர்சூறைவிசைக்காலிற்
புக்குழிஞைச்சிறுபஞ்சியெனத்திசைபோய்வீழச்
செக்கிடுமிக்கினெரித்தனர்தானவர்திரளெல்லாம். (௩௩)

பூதர்கலக்கியபோர்நிலைகண்டுபொருக்கென்ன
மேதிமுகத்தனிதானவினத்தொடுமிடனூழி
வாதமெனப்படர்காலையமைச்சர்மகாநாதன்
பாதமளப்பிலனென்றுளனைம்முகிபதமில்லான். (௩௪)

மாவனுமேதகுசண்டன்மகோதரன்மலியூணன்
வீவிலிகற்பதகூடன்மகோற்கடன்விழியொன்றும்
பாவிசுலோசனன்லோசனமெண்ணிலிபலரின்னோர்
தேவிமுகத்தெதிர்நின்றனர்போர்புரிசெயல்கொண்டார். (௩௫)

வேசரிபோலவர்மேல்வரல்கண்டவர்மிசைவேகக்
கேசரியேறியுகைத்திறுதிக்கெழுகிளாமேகத்
தோசைகொள்விற்கைவளைத்துயர்துர்க்கையொலிப்பித்தாண்
மீசெறிவித்திடுநாண்வயிரக்கணைவிடலுற்றாள். (௩௬

ஈறில்சாத்திரவேலும்யானையிலக்கம்பத்
தூறில்வயப்பரியோர்சதலக்கமொலித்திண்டேர்
நூறெனிலக்கமைந்நூறொருநூறுறநவவெண்ணின்
மாறிலிலக்கத்தோருடன்மாவனுமாய்வுற்றான். (௩௭)

[illegible]
யேவிலமைச்சர்களாயிரகோடியிலக்கததோர்
தாவிலிருததையொரேழரையிற்பொருசமராடன்
மாவனுவொத்தபடைத்திரளோடவண்மாய்வுற்றார். (௩௮)

வேறு.

கண்டவவாறுகவரிமுகத்தினன்
மண்டுசீற்றவடவையின்வாடினன்
றுண்டவெண்பிறைமூரற்சுழல்விழிச்
சண்டகோபற்கொருமொழிசாற்றுவான். (௩௯)

அடையுமாவனுமுன்னரமாத்தியர்
படைமுருக்கியபண்ணம்பணத்தியை
மிடையுநின்பெருஞ்சேனையின்வெள்ளமோ
டிடையவேற்குதியேகுதியென்றனன். (௪௦)

போவனென்றுபொருசண்டகோபனு
மேவல்பிந்தவிகன்றுசென்றேற்றமர்
தேவிமுன்சிலைகோட்டுபுசிந்தினு
னுவமல்கியவாளியடங்கலும். (௪௧)

செறுத்துவந்தவன்சிந்துங்கணையெலாம்
வெறுத்திடாவிளையாட்டினின்விந்தைதா
னறுத்துவீழ்த்தபினம்பொன்முழவுகோல்
பொறுத்ததாள்வலவன்னுயிர்போக்கினாள். (சஉ)

தேருடைத்தனள்விற்றுணிசெய்தன
ளூருடைததிண்புரவியுலைத்தனள்
சாருடைத்தடங்கேதனஞ்சாய்த்தனள்
போருடைச்சண்டகோபன்புழுங்கவே. (சங)

அசையும்வையமிழந்தோனசைவிலா
திசையும்வையத்தெதிர்ந்திருங்கேடகம்
வசையில்வாள்கொடுவார்சிலைக்கையினும்
விசையையூர்திதன்மெய்யினும்வெட்டினான். (சச)

வெட்டுநாந்தகம்வெட்டலின்றித்துணி
பட்டதந்தரிபாரவெஞ்சூலாத்
திட்டவண்சண்டனார்புகவேவினாள்
கொட்டமல்குங்குரற்சண்டகோபனை. (சரு)

அரவில்வெய்யவடற்சண்டகோபனு
மிரவுமுற்றியிறந்தழியக்கணங்
கரவைரததலையேறியக்கன்னிமுன்
பரவுசித்திரபானுவந்தெய்தியே. (சசா)

எறியிலங்கயில்கண்டையிரைத்திட
வெறியிலங்குவிழியினன்வீசினான்
மறியினன்றழல்வத்திரிமாற்றினாள்
குறியிலங்குமுங்காரக்குரைப்பினால். (சஎ)

மாற்றினின்றிலண்மற்றவன்மாபினா
டேற்றசூலமொன்றேற்றியெதிரிபம்
பாற்றுசித்திரபானுவினாவியைக்
கூற்றமுண்ணக்கொடுத்தனள்கொற்றவை. (சஅ)

ஐயைபின்னரடருங்கராளனைக்
கையினால்விழக்குத்திக்கதையினான்
மெய்யின்மோதிவிளிவித்துவாளினான்
மையில்பாட்களனாவியும்வாங்கினாள். (சகூ)

ஆழிக்கொத்தெதிரந்தகனாவியை
யாழிச்செம்பொனணிகரத்தேந்திய
வாழிக்கீந்தனளாகண்டலன்மக
னாழித்தேர்வலவீற்கிளையாளரோ. (ருய)

மூட்டுமேதிமுகத்தவனேவலாற்
கிட்டுந்தேர்ச்சித்துணைவர்கிளையெலாங
கட்டினாட்பினுட்காமருகாததிகை
விட்டில்கொல்லுமவிளக்கின்விளங்கினாள். (ருக)

வேறு.

அவ்வகையணிகெழுதானையுடைந்துழியடன்மகிடானனவசுரேச
னிவ்வகையமரிதுநலனெனநகையுடனெருமையினிகலுருமுழுதாகிக்
கவ்வைசெய்முகனுறுதுண்டமுயிர்ப்பெழுகால்கொள்குளம்பிவைகளினாவி
வவ்வியவிசயைகணங்களையவள்பரிவாளரிதனையடவந்துற்றான். (ருஉ)

அடவவன்வந்ததறிந்தெழுகுலகிரியகலிடமவையிருபிளவாகி
யிடவடியிடுதிண்மடங்கன்முனிந்துடனெரியவிர்குருதியிழிந்தோட
வுடலுறவுகிர்கள்வகிர்ந்ததுணர்ந்தவனொருகவரியினுருவுறுமழிக்
கடலெனமறுகிடுமகிடனையென்றுயிர்கவர நினைந்தனள்கலையூர்வாள். (ருங)

நிறங்கெழுமைக்கிரிவாசுகிசுற்றியநீர்மையின்மற்றவனெடுநீண்மை
பிறங்கியமேனியைநாண்கொடுகண்களபிதுங்கவளைந்துபிணிக்குங்காற்
கறங்கொலிநீண்மகிடப்படிவத்தொடுகெட்டுமகற்றுபுகடிதங்கண
மறங்கிளர்கோளரியாகமெடுத்துமுன்வந்தனனத்திமகண்மைந்தன். (ருச)

சிங்கவுருத்தலைகொள்ளும்விருப்பொடுதேவியுருத்தெழுசெயலுடா
வங்கதுவிட்டனனுண்மகனாயினனழல்வசியங்கைகொண்டவனின்று
னிங்கிவனிக்கணமிற்றுயிர்நீங்குகவென்றெரிவெஞ்சரமெய்தனண்மா
றங்கையொழித்திபமாயவனேறியசயமிருகேசரிதனையீர்த்தான். (ருரு)

எழுமதியுண்ணுமிராகுவெனத்தலையீர்த்தபுழைக்கையையெதிர்சீறித்
தொழுதகையந்தரியூர்திறலாழிதுமித்ததலுமொய்ம்பதுதொலைவுற்றே
பழுதுபடுஞ்சிறைவன்புள்விசும்புபறந்திகலின்றகல்பாரின்கண்
விழுவதெனத்தகுவர்க்கிறைபண்டையமேதியுருப்பின்வெளிப்பட்டான். (ருசா)

விண்ணவர்தொழுவருவிசயமடக்கொடிவெய்யவன்மேதியின்மெய்காணா
வுண்ணிறைகோபவழற்கனெய்விட்டெனவுண்டனடேம்பிழியுணவோடும்
வண்ணவிழிந்துணையனனிமிழ்ந்தனமகிடனுமிடலொடுவளைகொம்பாற்
றிண்ணியவெண்குலமலைகளபிளந்துயர்தேவிதன்மேலவைசெலவுய்த்தான். (ருஎ)

துரந்தவடுக்கலடங்கலுநுண்ணியதுகள்படவெய்தனள்சொல்கின்றாள்
வரந்தருவன்றருவனமுகநோக்கியிம்மதுநுகர்காலையின்மதனோடுங்
கரந்திடலன்றிமுனனின்றிடுதென்றிசைகாவலனூர்வாகனமாக்கிப்
பரந்திடுநினையிமைப்பிலிமைப்பிலர்பதமவையவரவர்பாலீவேன். (ருஅ)

மைத்திரண்மேதியயென்றவனுச்சியின்வரைவிழுமுருமெனமாறங்கை
குத்தினணெஞ்சுகுழம்பிமெய்வனமைகுலைந்துநிலைப்படல்கூடாம
லித்திசைசோதிசையென்றுணர்வுற்றெனயமதிசைவாயலையெறிதீரத்
துயத்தகடுப்பினாற்றியாற்றியுகக்கடைவேலையினோடுற்றான். (ருகூ)

ஓடுகருங்குகுவைதொடர்பூரணையொப்பவிளங்கெழிலொண்சீயப்
பீடுடையூர்தியுகைத்துடனாரணிபின்றொடர்வுற்றனள்பெயரன்னா
னோடுபொன்னாகவெண்ணாகனையஞ்சுமைநாகநிகர்ப்பநடுக்கத்தான்
மாடகல்யோசனைபத்துளபுண்ணியவாவியின்மூழ்கிமறைந்துற்றான். (சாO)

வாவியமுழ்ந்துண்மறைந்துகிடந்திடுமகிடனைமற்றதன்மாடெய்தித்
தேவிதெரிந்திலணிற்புழியோர்மொழிசேணிலிணாங்கிரிசெயமாதே
யாவியயர்ந்துனதங்கையவைத்தவினவனிதனள்ளுறவாழ்ந்துள்ளா
னீவிடலின்றுயிர்கொள்கெனவொல்லைநிகழ்ந்ததுகேட்டனணிகரில்லாள். (சாக)

கோறலையுட்கொடுசின் றிடுகொற்றவைகுரையகல்வாய்பயில்கோளரியா
மாறலையூர்தியைவாய்பருகென்றனள்வாவியடங்கலும்வறளாக
வீறலைவாரிதிமண்படவுண்படுதொாவெண்புயலென்னவிரைந்தங்கட்
சேறலதொன்றொழியாதுகுடித்ததுசிங்கவினத்துயர்சிங்கந்தான். (௬௨)

பற்றியவந்தயனிற்பதுகாணிலர்பட்டிகர்மிக்கெழுபயமுள்ளே
யுற்றுறைகின்றுழியோடியகருவரியொததுவறததலுமுதகந்தான்
மற்றதறிந்துளமவெள்கிவிழித்தவண்மகிடனுநோம்பாரவல்லோரிற்
கொற்றவைகாணவெழீஇயவள்கண்ணெதிருறுகினனீறுறல்குறுகுற்றான். (௬௩)

மதித்துமருப்பிணைசேரொருணமத்தலைமடவையிடைக்கழல்வைப்பார்போல்
மிதித்தொருமுத்தலைவேல்கிரிவதிடைவெண்ணூரைகாலவிறற்கன்னி
பதித்தழல்வாள்கொடுசெனணியரிந்தனள்பட்டனன்மேதிப்படிவத்தான்
றிதித்தொடர்புற்றவர்மாய்வதுதொன்றாற்றெய்வவழக்கின்செயலன்றே. (௬௪)

வேறு.

மேதிமுடிமிதித்தவடிவெட்டுண்டவிடஞ்செந்நீ
போதலவையொருநான்கும்புலவரவணுவமித்தா
ரூதிடுதோற்றுருதியஃதுறப்பிடித்தகரங்கொல்லன்
றீதருஞ்செஞ்சிவைவீசுஞ்செழுந்தழலின்கொழுந்தென்ன. (௬௫)

பொருமயில்வாட்கரங்கொண்டுபோர்மடந்தையறுத்திடலுங்
கருமகிடமுகங்கான்றகறைகடிதுபரந்தெங்கும்
பெருகியதங்கவண்முன்னேன்பிறழ்துளைப்பற்காளியன்மேன்
மருமலர்த்தாளுறுததவதன்வாய்வழியுநகறையொப்ப. (௬௬)

விடங்கெழுமுசுடிகைமுடிவேறுபடத்துடித்திறக்கும்
படங்கொளரவுடலென்னப்பதைத்ததயன்பருங்காயம்
வடங்கெழுசெந்துகிருருக்கிவாகவைத்தமரகதத்தின்
கடங்கவிழ்ந்ததெனக்குருதிகான்றதுபைஙகவரிமுகம். (௬௭)

அனகவருட்சுடர்வடிவாமம்பணத்தியமுற்கூலம
பனகநிகாபாதகன்மேறபடலூன்றிப்பரிந்திடலுரு
சனகனருடாமரைமேற்றையலுறைதடமாாபன
கனகவரைநிறுததலைத்தகருநகடலிறகதறினனால். (௬௮)

மாலையெனப்படர்குருதிவளையநிலவரைசிவப்ப
நீலையுருக்கொடிமகிடனெடுஞ்சிரமேனின்றிடலாற்
பாலையெரிவனநடுவெட்பருமணித்தினைபீடிகைமேன்
மேலையவட்டொழும்பேறும்விண்ணவரன்றடைந்தார்கள். (௬௯)

ஐவகையநாதமுந்தாமதிர்ந்தொலிப்பவமரேச
ரைவகையதருமலரிஞ்சாரம்பொழிந்தார்தத
ரைவகையபொறிகளிப்பவலகைநரிகொடியெருவை
யைவகையபேருணவுமார்ந்துபசிதீர்ந்தனவால். (௭௰)

இரணியரிலொருகோடியிராவணரிலொருகோடி
முரணுஞ்டையதாரகப்பேர்மூர்க்கர்களிலொருகோடி
யரணமிகுசூர்கோடியவரவர்தம்மனிகமுடன்
மரணமுறும்பொழுதுளவாமகிழ்வணைந்தார்வானோர்கள். (௭௧)

வெற்றிபுனைமகிடமுகன்விளிந்தவன்றுமேதினியோ
ரிற்றைவரையிததினம்போலிலங்குதினங்கண்டறியே
மற்றிதுசெங்கதிரொளியால்வந்ததன்றுமாழ்கிருளு
முற்றதொலையிருளுமலவுணர்வதுண்டென்றதிசயித்தார். (௭௨)

விண்குளிரமேதிமுகவெய்யவன்றுணிறந்திடலுங்
கண்குளிரக்கவினுருவங்காணாமற்கேளாமற்
பண்குளிரச்செவியமுதம்பருகாமல்வாய்குளிர
மண்குளிர்ந்தபல்லுயிர்கள்வடிவமெலாங்குளிர்ந்தனவால். (௭௩)

திடங்குலவுமனனின்றிச்சிதறிமையோர்திரளானோ
ரடங்கலணைந்தந்தரிதாளரவிந்தம்பணிந்தருளா
விடங்கெழுமுறபதத்தணுகியெல்லவருந்துயர்தீர்ந்தா
ருடங்கிருணோயுயிர்க்கெல்லாமொருநாளிலொழிந்ததுபோல். (௭௪)

தேமினியமலர்க்கூந்தற்றேவியவடன்பெயரால்
யாமினியவலைக்கரைமேலிலங்குவடசாரிமையோர்
தாமினியபொன்னுலகுந்தருநிழலும்விருமபாம
லாமினியவளமபடைக்குமணிநகரொன்றுண்டமைத்தாள். (௭௫)

இழைக்குநகர்க்கிடரொன்றுமிசையாமலெவ்வுயிருந்
தழைக்குமியல்வரமளித்தாள்சயமடந்தையவளேவக்
குழைக்குநறுஞ்சுவைமதுரக்குளிரமுதாற்குலவமரீஇ
மழைக்குயின்போனிறைத்தனரவ்வாவியினைவானாடர். (௭௬)

தக்கவர்வாய்ப்படுவதுமுன்சால்புடையதாயிடினு
மிக்குயர்ந்துபண்டையினும்விழுமியதாய்விளங்குதலா
லக்குமரியரியூர்தியார்ந்துலாந்தவறற்பட்டந்
தொக்கவமுதாய்நிரம்பிச்சுதைத்தீர்த்தமாயினதால். (௭௭)

புத்தமுதமயமாகும்புண்ணியநீர்படிந்தோர்கள்
சித்தமுறுமபொருள்கூடத்திருவுளஞ்செய்தகல்விசும்பி
லெத்தலமுந்தொழுமிறைவியெழுந்தருளியினிதிருந்தாண்
முத்திதருந்தேவிபுரமுறையீதுமுனிவீர்காள். (௭௮)

இந்நகர்முற்படநன்னாளெமையாளுமிபமுகனைத்
தன்னலர்க்கண்புனைகழலோன்றருந்திலகசாயிதனைப்
பொன்னவிர்பூமலர்கொண்டுபூசித்தங்கவரருளாற்
கன்னவமுந்தவணிறுத்தான்காகுத்தன்கரங்களினால். (௭௯)

கோனதற்பின்றினமைந்திற்குரம்பிலங்கைமுடிவாகத்
தாணிழைத்தறலைக்கொண்டுதெளர்வினளன்றருங்கனகக்
கானவரியனையிருந்துகவிப்படையாற்கரைகண்டா
னானவனைமறங்கெடுக்குமறங்கொடுக்குமனைவர்க்கும். (௮௰)

குணமருங்குதேவிபுரங்குடமருங்குகுசைப்பள்ளி
யணையதனுக்கதன்மூலமாமிரண்டுமேவற்றுடி
யிணையிலணைக்கிறையாகுமிராகவனையிறைஞ்சிடுக
புணருமருளிதுரோக்கிப்புறநெறிக்கட்போனாலும். (௮௧)

அக்குரம்பினடிமூழ்கியணையணைவார்சங்கற்பஞ்
சக்கரநீர்த்தடமியற்றித்தங்கியதன்றகையுணர்க
விக்கிரமத்திழைத்திடுவார்க்கெழுபவநூறாயிரத்திற்
புக்கவினைத்தொடர்நீங்கும்பொருந்தியிடும்பரபோகம். (௮௨)

ஆதலினாற்றருமதடமதற்குநிகர்பிறிதில்லை
மாகநதிமுதற்றீர்த்தம்வகுத்தவிதன்பதினாறி
லேகமதற்கிணையாகாவிதூசரதஞ்சிலையொன்பான்
மோகமறநாட்டுமிணைமூலத்தின்முதன்மூழ்கி. (௮௩)

திரிரியற்கரையினிற்சேத்திரபிண்டங்கொடுத்தங்கண்
முகிலுருவன்றனைவணங்கிமொழியுநெறிவழிபோகி
யகறருப்பசயனமடைந்தன்றுநளன்றருஞ்சிங்க
நிகரிலணைதனைப்பணிவாநிரயமுறுமபயனினையார். (௮௪)

இராவணனுமிராகவனையெண்ணியொருதலைநிலையா
யிராவணங்கின்மணவாளனீரிரண்டுமருப்புடைய
யிராவணனுநதொழுஞ்சரணதெழுந்துகளாற்சுசியாகி
யிராவணனைத்தெறுஞ்சேதுவிதன்பொருட்டிப்பணியென்றும். (௮௫)

கோதவந்தீர்முத்திநிலக்குறியாகிக்குழைக்கொம்பர்ப்
பாதவம்போற்குளிர்கவிகைப்பத்திரதப்பெயர்வேந்தன்
மாதவமாமகன்கொடியாய்வளர்சீதைமணக்கமலக்
காதவனாயமர்சேதுவதன்பொருட்டிப்பணியென்றும். (௮௬)

வேறு.

ஓதாவிவையிருமந்திரமார்கவியூடாரணையைவணங்கினர்போதுக
வேதாளவரதமென்றறைநீரினில்வேறாரொருவர்விளம்பியநீள்கதை
யீதாதரமொடியம்பிடுநீர்மையர்யாரேமகிழ்வுறவுண்டிடுபொன்மையர்
காதாலவரவர்பண்டையதீவினைகாணாரிறைகழல்கண்டுறைவார்களே. (௮௭)

தேவிபுரச்சருக்கமுற்றிற்று.

திருவிருத்தம் - ௬௫௧.

வேதாளவரதச்சருக்கம்.

சூதமுனிவனிவையுரைப்பத்தொன்னூற்பொருண்மைமுழுதுணர்ந்த
வாதிவருணரவர்பின்னுமறைவார்சுருதியளந்தமைத்த
வேதவியாதனருண்மதலாய்விளம்புந்தருமத்தொல்காதைச்
சீதவமுதஞ்செவிநிறையத்தேக்கியிருந்துந்தெவிட்டாதால். (௧)

ஆசிலுனதுதிருவடிகளடைந்தவடியேமகமகிழ
வேசில்கதைகளுரைத்தருளாயின்னுமுனநீயெடுத்துரைத்தாய்
தேசுபயிலும்படையாழித்தீர்த்தமதற்குதென்பாலில்
வாசமருவும்வேதாளவரதமெனவோர்மலர்வாவி. (௨)

அன்னதீர்த்தமதற்கப்பேரடைந்தவகையுமதன்றகையு
மின்னபரிசென்றெமக்கிசைப்பாயென்னச்சூதனியம்பிடுவான்
மன்னுமுனிவீர்நன்றுவினாமருவுந்தருமக்கதையிதுதான்
கன்னம்புகுமேன்மடவோர்தங்கருததுமுருகிக்களிகூரும்.

இந்தக்கதைமுன்றருணநிலாவெறிக்குஞ்சடிலத்திறையிறைவிக்
கந்தப்புரத்திலருள்புரிந்ததனையறைவனறவீர்காண்
முந்தைப்பொழுதோர்காலவனாமுனிவன்வழுவாமொழிப்புனிதன்
சிந்தித்தினியசிவக்கொழுந்தைச்சேருந்தவத்தின்செயல்பூண்டான்.

தன்னாச்சிரமந்தனிலிருப்பான்றனக்கோர்குமரிதானுண்டாற்
பொன்னாதரிக்கும்வனப்புடையாள்புவனம்விளங்குங்காந்திமதி
யென்னாவிசைக்கும்பெயருடையாளினறமுனிவற்கென்றுமலர்
மின்னார்தருப்பைசமிதைபலிவேள்வியேவல்விதந்தருவாள்.

சேயநிலைக்கட்டானொருநாட்சென்றுசெழுந்தண்மலர்பறித்துத்
தூயமுனிவன்மகத்தழலின்றொழிலுக்குதவத்துனைவோடுங்
காயுமதிநேர்கதிர்வதனக்காந்திமதிதான்போந்திடலு
மேயசுதரிசனன்சுகன்னனிருவர்விச்சாதரர்குமரர்.

கனகவிமானந்தனிலேறிக்ககனத்தணைவார்காந்திமதி
தனதுகவினுமயிலியலுந்தாமக்குழலுந்தளிரடியு
மனமென்னடையுங்கவிரிதழுமவணிசிறுகவகனிதம்பப்
பனகபடமும்பணைமுலையும்படைவேல்விழியும்பார்த்தார்கள்.

சூழுமவரின்முன்னவனாஞ்சுதரிசனன்றான்சுடரிழைமேல்
வீழுமனங்கொண்டநங்கனடும்விரைப்பூஞ்சரங்களுரங்குளிப்ப
தாழுநெறியாற்றரையிழிந்துதையலவளைச்சார்ந்துரைப்பான்
யாழின்மொழியாய்நீயாரையேவருனைத்தந்திடுமேலோர்.

உன்றனெழிலாமழல்வீசவுருகியுள்ளநவநீத
மின்றெனுடலந்தனைச்சுடுமாலிரதியனையாயெனக்கிரங்கி
மன்றலளகமலர்வேரிமழையாற்றணித்துமகிழ்ந்தணைப்பாய்
நன்றுதருங்கேசராமகன்யானாமஞ்சுதரிசனனங்காய்.

மாளாவளங்கூர்விஞ்சையர்க்குமன்னன்மதலையானதனாற்
றோளாத்தரளத்தொடையனையாய்துணையாய்விருமபிறசுகம்பெரிதாம்
வேளாலழிந்தேன்விழிவாளால்வென்றிதருவாயென்றிடலுங்
கேளாவதனைக்காந்திமதிகிளப்பாளறநூற்கிடைநோக்கி.

வம்மோசுதரிசனகேண்மோமறைநூற்பொருடேர்காலவனாம்
வெம்மோகனமின்முனிமகள்யான்வேண்டும்பணியங்கவற்கிழைப்பேன்
பொம்மோய்வேள்விபுரிவதற்குப்போதுகொணர்ந்துபோகின்றேன்
செம்மோட்டிரவிதேர்தோன்றிச்சென்றதியாமமொன்றதனால்.

தரியேனிங்குத்தாழ்த்தக்காற்றந்தைமுனியுந்தமையுதவும்
பெரியோரன்றிப்பேதையர்க்கோர்பெற்றியுளதோபெறுவாயே
லெரியோடிகலுந்தவத்தாதைக்கிசையென்றியம்பியேகுற்றாள்
பிரியாமருளினவள்கூந்தற்பிடித்தான்வலிதிற்பெயர்குற்றான்.

இயலுமெகினத்திளம்பேட்டிலெழில்வெண்டுலிதொடுத்தீர்க்கும்
வயவில்வேடன்றனைப்போனருன்மரபின்விச்சாதரர்குமர
னயர்வினிலையுங்காந்திமதியவனகையகப்பட்டலைகுழலாற்
றுயர்கொண்டுழந்தாண்முட்கலையாற்ருகை துவக்குண்மஞ்ஞையைப்போல். ()

பதுமமகளைக்கொடுபோகும்பத்தூமுகன்போற்பாறுதனு
மிதுவென்புகுந்ததெனவேங்கியோரான்றிலெனக்கதறிச்
சுதரிசனனுஞ்சேணியர்கோன்ருன்றலெனதுசுருட்கோதை
யதனைப்பற்றியீர்த்தகல்வானத்தாவெனையீங்களியென்ருள். (கச)

கடியுறறலறுஙகாந்திமதிகடுங்கூறற்சையைககாலவன்ரு
னெடிதுற்றறிந்துமுனைவரொடுநில்லாதேகிநேர்கண்டான்
வடிவிற்சிறந்தமகடனையுமயிரதொட்டிழுக்குமைந்தனையு
மிடியிற்கொடியபெருஞ்சாபமிடுவான்சீறியிஃதுரைப்பான். (கரு)

விச்சாதரரினமிகவிழிந்தோய்யேதகீதியொருவினையாற்
கைச்சாரிடும்பைபலமருவிக்கவல்கூர்புலினக்கடைமாந்த
ரசசாய்நெடுநாளலமரலுறறதனபினெவருமனுகாத
மைச்சாரசுழற்கண்வேதாளவடிவாகென்ருனமறையுணர்ந்தோன். (கசு)

தசையோடிரந்தனையருந்தித்தையலாரைவலிபுரித
விசையாவரக்காவேதாளமிரண்டுமிழைக்குமியல்பாகும்
வசையார்வன்மைசெய்தலினலவண்ணமிதுநீபெறக்கடவை
நசையால்விலக்காநினக்கிளையோனரனுமளவேநயந்திடுவான். (கஎ)

ஆவதிலனல்வேதாளமகனுஞ்சாபமவனறனக்குக்
காவறசேணிவிகனைதகிகவுதுகளைததானகாணிலென்று
தேவாபரவுங்காலவனருனறெய்வமுனியாதிரளோடு
தாவின்மகளையுடன்கொணடுசாலையுறையுடனைசசார்ந்தான். (கஅ)

ஆத்தவறிவினவன்சாபமதனுக்கஞ்சியதனபினனா
மூத்தசுதரிசனன்கிளையமுறைநீசுகனனனுடனமூங்கு
நீததயமுனைக்கரைவேதனிகாகோவிந்தசாமியெனுங
கோத்தமறையோன்பிதாவாகக்கொள்வோமெனறுட்கொண்டானல். (க௯)

விசையதத்தனெனப்பிறந்தான்விச்சாதரரிற்சுதரிசன
னசைவிலசோகதத்தனெனவாருனசுகனனனவாக்கிளமை
யிசையும்பருவத்தருண்மறையோனீராருண்டுமெழையின்றிப்
பசையில்கருப்புவரத்தளர்வான்பன்னியுடனும்பாலரொடும். (உ0)

தனயர்மனைவிதன்ருேடுந்தளாகோவிந்தசாமியென்பான்
றனைகொள்வருத்தமருத்தலைப்பத்துகமாகாசிதொன்னகர்போய்க்
கனிகொள்வடக்கீழ்த்தவமிழைக்குங்கபாலமாலாபரணனெனு
முனியையவணங்கவவனினியமொழிந்தாங்கொன்றுமொழிந்திடுவான். (உக)

வாக்குமறையோர்குலத்துயர்ந்தோய்மைந்தரிவரின்முந்தையவ
னீக்கமுள்ளதாமுனக்கெனவுநெடுந்தேரிரவிநீர்க்கணையா
லாக்குமபகைதீரநதணன்பாலாகுந்துயரமவுணரினி
நீக்கமுடன்வந்தவெரனவொளிப்பான்கடலினுட்புகுந்தான். (உஉ)

தேரினடக்குங்கதிர்மறையச்செய்யுநியமச்செயலாற்றித்
தூரநடக்குந்துயக்கதனுற்றுணரில்கோளியதன்பாங்கர்ப்
பாரினடக்கும்பலிநடவாப்பழஞ்சேதிமத்திற்பாலரொடுங்
காரினடக்குங்கோதையொடுங்கங்குற்றுயின்றான்கலைமறையோன். (௨

தந்தைவிசயதத்தனொடுதானைவிரித்தோர்தலைத்துயின்றா
ணந்தவசோகதத்தனுடனன்னைதுயின்றாளவ்வண்ணம்
பந்தவிசயதத்தனைத்தான்படியினெடுஞ்சேண்படருதலால்
வந்தருளிருமெய்வெதுப்பும்வாட்டத்தாதைமருண்டணைத்தான். (௨

அப்பணைத்துமவியாமலந்தவிசயதத்தனுக்கு
வெப்புங்குளிருயிகத்தருவாய்வெய்யதழலென்றையனுடன்
செப்பவவனுந்தீதேடிச்சென்றுதிரும்பிச்செழுந்தோன்றான்
மைப்பொங்கிருள்வாய்நகருறங்கும்வன்னிகிடையாதிவணென்றான் (௨

ஐயனுவலுமதுகேட்டுமெமையாப்பிணியாலவனுரையைப்
பொய்யென்றகற்றிப்பூசுரனேபோதிகொணர்திபொருக்கென்னச்
செய்யதழலீண்டெரிவதெனச்சேணிற்றெரிப்பத்திருமறையோன்
மெய்யின்மொழிகேணிதுகேண்மோவிசயதத்தாவெனப்புகல்வான். (௨

இடனுந்தூரம்வெருவருநெஞ்செரியுங்குணபந்தனைப்பற்றிச்
சுடலையதன்கணதுநின்றிடற்சுருங்குமாயுளாகையினாற்
கடனன்றுனக்கென்பஃதுகருதிக்கவராதொழிந்தேன்காணென்றா
னுடனென்றவனும்பயந்தவனையொறுத்துநோக்கியுரைசெய்வான். (௨

ஈமத்தழலென்றெனையளிக்குமெந்தாய்நொந்திங்கிடருழப்பேற்
கோமத்தழலென்றாராயேனுய்யாதின்றெனுயிரென்றா
னுமத்துணையின்மகவாஞ்சையளக்கரமிழ்ந்தோனதுகொள்வான்
போமப்பொழுதுவிசயதத்தன்புறப்பட்டவன்பின்போகுற்றான். (௨

சுடலைக்காட்டில்விசயதத்தன்றொக்கவதற்பின்சவத்தழலி
னுடலைக்காய்ச்சியிதஞ்சிறிதேயுற்றான்பெற்றானுடன்கேட்பான்
மிடலுற்றெரியுமீதிதனில்வேறுதிரண்டுவிரைக்கமல

(௨

சொன்னமதலைக்கருமறையோன்சொல்வான்குணபத்துழைமண்டைச்
சென்னிவளைத்துச்சுழன்றெரியுஞ்செந்தீச்சுவாலையதனாலே
வன்னிதிரட்சிவடிவாகிவசைகீசகமென்றிருவகையாய்த்
துன்னும்புலவாற்செம்பதுமத்துணரிற்றோன்றுஞ்சுதவென்றான்.

கேட்டபொழுதில்விசயதத்தன்கிட்டிப்பிணத்தின்றலைதனையோர்
காட்டத்தறைந்தானறையவசைகக்கித்தெறித்ததவன்முகத்தி
னுட்டுநசையாற்படுநெய்த்தோர்நாவால்வளைத்துநக்கிநவி
ரோட்டையெடுத்தவவசையனைத்துமுண்டான்மறித்துமுணர்வில்லான்.

வேறு.

கோதாளிரத்தவசைவாரியுண்டகோவிந்தசாமிகுமரன்
பாதாளமும்பர்பதிமுட்டிநீண்டபடிவத்தினொடுபெயமார்
வேதாளமாகிமிடலோடெழுந்துமிடையண்டகோடியுடைய
மாதாளியைந்துதுணைமின்பிறங்கவருகார்விசும்பினதிர்வான்.

நின்றுண்டலூனின்வசையன்றிமுன்னர்நிலையுற்றதாதையுயிருங்
கொன்றுண்டுமிக்கவசையுண்ணநாடுகுறியோடும்வந்துகுறுக
வன்றுண்டறீர்தியிவனாவியென்னவறைசேணில்வாணியதனான்
மின்றுண்டமூரலதுபோனதஞ்சமிகுதூரம்விண்ணினிடையே. (௩௩)

வேணிக்கணோடியலகோடுகோடிவேதாளநாதன்மகிழுங்
காணிக்கையாகிநடுமேவிமுன்னங்கபாலந்தகர்த்தகதையைப்
பேணிக்கபாலமிகுபோட * னென்கைபெயராய்நராத்தியணியோன் †
பூணுற்றவெற்றிபொலிசேனைகாவல்புணர்வுற்றிருந்ததுவே. (௩௪)

வே று.

அனையதோர்காலைதன்னிலடல்கொள்சித்திரசேனப்பேர்
வனைகழல்வீரன்றன்றான்மறங்கெழுநராத்திபூணன்
றனதுயிர்மாய்ந்ததன்றான்றலைமைசேரரசுதாங்கி
வினைகெழுகபாலபோடவேதாளமேவிற்றன்றே. (௩௫)

மாவிந்தவரைமுளைத்தவளர்பிறைவாளெயிற்றுச்
சாவிந்தவண்ணமங்கட்டங்கியபின்னைநின்ற
கோவிந்தசாமியென்பான்குலமகன்கொள்கைகாணூஉ
வாவிந்தவிறுமபூதென்னென்றகம்வெரீஇயகன்றுபோனான். (௩௬)

புறந்தழற்காடுநீங்கிப்புதல்வனோடில்லாடுஞ்சுந்
திறந்தபாண்கோயிலெயதிசசேய்முறையவர்க்குச்செப்பி
யிறந்தகன்றுடையவான்போலேம்பலித்திரங்கியேங்கி
யறந்திரிந்தறியேனென்றுவந்தணனுண்டிருந்தான். (௩௭)

சான்றவேதியனையங்கட்சமுத்திரதத்தனென்னு
மான்றசீர்வணிகன்கண்ணுற்றறிந்தவனலக்கண்டீர
வேன்றநண்பனைந்தவின்சொலிசைத்திருபிறப்போயிங்கென்
வான்றனமுழுதுநீயேவளர்த்தனைவைகிடென்றான். (௩௮)

கோட்டமிலிளங்கோமாற்றங்கோவிந்தசாமிகேளா
வாட்டியுமகவுந்தானுமதற்குடன்பட்டவன்றன்
மாட்டினைப்பெருக்கிவிண்போமைந்தனைமண்ணிற்காண
நாட்டியகவற்சியோடுநண்ணியங்கிருந்தானன்றே. (௩௯)

இந்நெறியுறையுநாளிலிளவலாமசோகதத்தன்
றன்னெறிமறையுமேனைத்தடங்கலைப்பரப்புந்தானை
மன்னெறிமரபுக்கேற்றவழக்குமும்பிறவுங்கற்றுப்
பன்னெறியவரும்போற்றும்பான்மையிற்சிறந்தான்மன்னோ. (௪0)

தேசிவன்படைக்குமேல்வைத்திகழ்பிரதாபமௌலி
காசிமாநகரங்காக்குங்காவலன்வாயில்காண்பான்
மாசிலாவவாசிநின்றோர்மற்படைவல்லமல்லன்
வீசியவென்றியாண்மைமேதகவோடும்வந்தான். (௪௧)

அவன்றனையரசன்பாங்கர்வவினையாளரஞ்சிக்
கவன்றனைவோருமொல்கக்காவலன்கனன்றுசிந்தை
யிவன்றனையுழைத்துநீயேயாரையுமெள்ளுமற்போ
ருவன்றனைவென்றியாயினுதவுவன்வேண்டிற்றென்றான். (௪௨)

* போடம்—தகர்த்தல். † நராத்திபூடணன்.

காஞ்சனநளினப்போதுங்கன்னியுங்காற்சிலம்பும்
வாஞ்சையிற்கொண்டுமீண்டம்மறையவன்மன்னவன்முன்
பூஞ்சிலம்பதனைவைத்தான்புகுந்தவாறரசன்கேளா
வாஞ்செயலார்செய்வாரென்றதிசயித்தவற்புகழ்ந்தான்.

அத்திறமமருநாளிலலங்குவேலசோகதத்தன்
மொய்த்தபூந்தளிமநாப்பண்முயங்கிவீற்றிருக்கும்போழ்தில்
வித்துத்துப்பிரபைதன்னைவினவுவான்விளங்குசெம்பொற்
புததிதழ்ப்பதுமமெங்கட்பூத்திடுமென்னப்பூவை.

கரவலகபாலபோடகப்பெயர்க்கடிவேதாளப்
புரவலற்குள்ளதாங்கோர்பொன்னிதழ்க்கமலப்பொய்கை
வரவலமறையோயுன்றன்மாமனீராட்டிற்கொய்தே
யிரவலர்கதுப்பினென்றாய்க்கீந்தனனென்றிசைத்தாள்.

பாசிழைபகரக்கேட்டுப்பால்வளாய்பசும்பொற்கஞ்ச
வீசிலகொணரவேண்டுமேவுதுமவண்யாமென்னாப்
பூசுரன்றெரிவையோடுமபுங்கவன்புகன்றசாய
மாசதுகழுவுவான்போன்மருவினன்வாவிப்பாங்கா.

துறக்கநாடணியதாகத்தோன்றியவெல்லைபோல
நறைக்கெழுங்கனகக்கஞ்சநாண்மலர்நிறையப்பூத்த
மறக்கடிவயவேதாளமன்னவனாணையஞ்சிச்
சிறைக்களிவண்டும்வீழாததேன்றடங்கண்டுவந்தான்.

வெய்தெனச்சூழ்புக்குவிரிந்தபொற்சரோருகங்கள்
கொய்திடத்தடுத்தேதூப்புங்கொடியவேதாளமெல்லா
நொய்தினிற்செற்றான்செற்றநோன்மைதானாவலக்கேட்டு
கைதருகபாலபோடகன்மனங்கனன்றுபோந்தான்.

போந்தவன்றானைவெள்ளம்பொங்கழற்கரியதாது
தோய்ந்தநீர்போலமாய்த்துததோன்றும்வேதாளவண்ணன்
மாய்ந்திடவடருங்காலைவளரொளிவிமானமீதிற்
காந்திசேர்விக்கினத்திகவுதுகன்ககனநண்ணி.

அவணயமொழிகள்சொல்லியழைத்துயரசோகதத்தா
விவனாயிரிவனைக்கொள்ளேலென்றுவிண்ணியமியம்பு
முவணையிற்சாபநீங்கியுறுவதற்குறுவன்கூறுந்
தவணையன்றாதலாலேதண்ணளியாற்றடுத்தான்.

உரைசெயுமோசைதேராவும்பரினோக்கிவிஞ்சைக்
கரசனைக்கண்டான்கண்டவளவினிலகன்றுசாபந்
தெரிசனவேதிகண்டசீருணமபோலத்தெய்வப்
பரிசெலாமருவியுற்றான்பட்டர்சுடர்ப்பைம்பொற்றேர்மேல்.

அன்னவன்றனக்குப்பின்னாமளியினாலறைவான்சேணி
மன்னவன்சுகன்னவம்மோமற்றிவணின்றோனான்றன்
முன்னவன்காலவப்பேர்முனிமகட்டீண்டலாலே
சொன்னவெஞ்சாபச்சூழாற்சுழற்கண்வேதாளமானான்.

தடுத்திலையென் றுனக்குந்தந்தனன்சாபம்யானீங்
கடுத்திடநீங்கிற்றற்பமாகையாலவன்றனக்குத்
தொடுத்ததீங்கொழியுமெல்லைசொல்லினனில்லைநல்லோய்
விடுத்திவண்சேண்போகென் றுவிளம்பினன்விஞ்சைவேந்தன். (௭௩)

மின்னுடைத்தனிவிமானமீப்பயில்விஞ்சைநாதன்
றன்னுடன்சுகன்னன்மீண்டுசொற்றுவான்றலைவகேண்மோ
வென்னுடன்வந்தோனின்னவிழிபுறவேகேணீது
நின்னுடைக்கருணையாலேநீங்குமாநினைதியென்றான். (௭௪)

நினைகுவாய்நீயேயென் றுநின்றவனிரப்பநீடுங்
கனைகழல்விக்கினத்திகவுதுகன்கழறுகின்றா
னனையவராலுநீங்காவித்துணைக்கடியசாபந்
தனையெவரகற்றற்பாலார்சாற்றுவதுண்டுமற்றும். (௭௫)

பங்கயன்சனகராதிப்பண்ணவர்க்குரைத்ததாகு
மிங்கிதுகேட்டியாயிலிசைக்குநன்னீர்களெல்லாந்
தங்கியநிலையாய்நேமித்தடந்தனக்கணித்தாய்த்தென்பால்
வங்கவாரிதியின்கூலம்வதியுமோர்புனிதவாவி. (௭௬)

நோக்கிடவிரிந்துபாறுநோய்தினில்வினைகளெல்லாம்
வாக்கினால்வகுத்தலாற்றேன்மற்றதின்மூழ்குமாந்த
ராக்கமுன்றமையன்றன்னையப்புனலாட்டுவித்தா
னீக்குறுங்காலவன்முன்னிகழ்த்தியசாபமென்றான். (௭௭)

செப்பிதுவினவியொல்லைத்திசைமுகன்சனகர்முன்னோர்க்
கப்பொழுதிசைததாகியாழிநீரதற்குத்தெற்காய்
மைப்புயறவழுங்கந்தமாதனவரைக்குதக்கா
மொப்பினீர்மேவிமுன்னோற்குரைசெய்வானென்றுபின்னோன். (௭௮)

சடைமுடிக்காலவன்றன்சாபநோய்தரும்வேதாள
முடையுடறீரமுன்னோய்முழங்கொலித்தெய்வவாவி
குடையெனப்பவனமங்கட்குரைத்தெழுதரங்கமோதவ்
வடையுநீர்த்திவலையொன்றையவன்மிசைவீசிற்றம்மா. (௭௯)

வீசியவுறைவாள்கொண்டுமேயவெஞ்சாபம்வீட்டி
யேசில்ந்தணனுயங்கணிருந்துசங்கற்பங்கூறி
நேசமோடுதகமூழ்கினிலைமொழிதன்னைநீத்தான்
பூசுரனென்றுதொக்கபுணர்மொழியிரண்டுதெம்மில். (௮௦)

தோமினீர்த்தடத்தைவாழ்த்திச்சுதரிசனன்றானன்று
காமருவிக்கினத்திகவுதுகன்சுகன்னனென்ன
வாமிருவோருஞ்சூழவரம்பையர்வாழ்த்தெடுப்பத்
தாமமார்கடவுணாட்டிற்சார்ந்தனன்றலைமையோடும். (௮௧)

பண்பில்வேதாளரூபந்துவலிற்பாற்றலாலே
வண்புனற்பெயர்வேதாளவரதமென்றுரைக்கும்வைய
மெண்புனலிதற்குமுன்னமுரைத்தவையுரைக்கநின்ற
வண்புனல்யாவுமொவ்வாமண்புகார்மூழ்குமாந்தர். (௮௨)

வேறு.

நியமநலங்கொடுபெரிதுகதென்புலமாள்வோர்கணிலவுகடன்றனையினையதடந்தனிலோர்ஞான, மயமுணரந்தணிரதிர்விளங்கிடவேதாளவரதமெனும்பெயர்வரவுமொழிந்தனமாறுத, நயமிகுநண்பொடுபகருமிகன்கதைநாவாரநவிலவிரும்பினர்செவியுறுமன்பினர்நாடோறும், பயமருள்வஞ்சகவினையுளழுந்திலர்பார்மாதர்பணைமுலையுண்கிலர்பரமபதந்தனில்வாழ்வாரே. (அக)

வேதாளவரதச்சருக்கமுற்றிறு.

ஆ திருவிருத்தம் - எகச.

பாவநாசச்சருக்கம்.

அந்தண்மாதவிர்கள்வம்மினீருளமமைந்துகேண்மின்முதலாடினேர்
மைந்துசேரலகைவரதகீரினிடைமற்றதன்பினுடன்மருவுவார்
கந்தமாதனவரைக்கண்மற்றதுகடற்கண்மன்னுகரைபுருவமாய்ப்
பந்தநீங்கயணிருக்கையுய்க்குநெறிபடவகுத்ததுபடிப்பிரான். (க)

கோடியாயிரவிலக்கம்வாவியுளகுலவுவெற்பதனினதிகளு
மாடிலத்தொகையசலதியாச்சிரமவடவிவேதவனமாதியாய்
நாடியற்பதிகள்யாவுமெய்கொடுநயந்துவைகுமவனுடோறும்
வாடிலாவமரரெண்வகைததொகையவசுவசிட்டன்முதன்மறைவல்லோர். (உ)

சித்தர்சாரணர்பிதிர்க்கள்விஞ்சையர்சிறந்தகின்னரர்கணங்கடா
மொத்தசீருலகபாலர்பானுமுதலொன்பதின்றொகையகோளினேர்
நத்துலாவுகரனுன்முகக்குரிசிறுகநாதனிவர்நங்கைமா
ரத்தியானனன்விசாகன்மற்றையரளப்பிலார்கள்பலரவரெலாம். (ங)

பொய்வினைப்பவமொழித்துநீடுபுவிபுனிதமாம்வகைபொருப்பிதின்
மெய்விருப்பினொடுமேவுவார்தருணவெண்ணிலாமவுலியண்ணலு
மையரிக்கணுமையோடிருப்பனவண்மருவுமாடலரமாதரார்
சைவநற்சரணருச்சனைக்குரியதகையராயினர்தயங்குவார். (ச)

வீறுடுங்கிளர்விலங்கலீதெவர்விழிக்கெதிர்ப்படுமவர்க்கெலா
மீறுடும்பவமிலாதவின்பமதியெய்துமிங்கிதிலெழுந்துலாங்
காறுடும்பொழுதினியைபின்மாதாபுணர்கடியபாதகமொர்கோடியின்
பேறுடும்பிரமகததிகோடிபழிபின்கொடுத்தனபெயர்ந்துபோம். (ரு)

வழுவின்மாதவர்வணங்கும்வெற்பிதுமுன்வாரிநாப்பணதுமாநள
னெழுவினீள்புயவிராமனேவலிலிருங்குரம்பினையிழைத்திடும்
பொழுததற்குநவொனதெண்ணிநரர்போற்றிசெய்துநெறிபோதுவார்
தொழுதுமற்றிதனைவேண்டுகோடல்சிலசொல்லவேண்டுமிகுதொடர்பினல். (சு)

சாந்திமேவியுயர்தருமமல்கியரிதன்னைமுன்னமரர்தாமெலாம்
போந்திறைஞ்சவளர்பொற்பின்மன்னியபொருப்பினுதமிகுபுன்மைசான்
மாந்தரேமுனதுசென்னிமேலுனைமதித்திடாதடிமிதித்திடு
மேந்துதீவினைபொறுத்துநின்கணமரீசனைத்தரவிரங்குவாய். (எ)

என்றுவேண்டுமொழிகூறிமெல்லவதிலேகிவேலையிடைமூழ்கியாங்
கொன்றுகாதலொடுகெருகொண்டதொருபிண்டநல்கினுகமுற்றுறு
மன்றுகாறுமகிழ்கூர்வர்தென்றிசையினர்சமித்தளிரினளவிடிற்
சென்றுசேணரகுவாழ்பிதிர்க்கண்முறைசேர்வர்முத்தியொடுதேவரூர். (௮)

ஏவநாசமணுகாதவிவ்வரையிலெங்கணும்புகழெடுத்தசீர்ப்
பாவநாசமெனவுண்டுமொதருமபட்டமொன்றுடல்படுந்துடக்
காவநாசமுறுமெண்ணிலாடினரகற்றியெவவினையுமரவணைக்
கோவனுசறுவைகுண்டம்வைகுறுவர்கோதின்மாதவகுணதனீர். (௯)

எனநவிற்றியருள்சூதனோர்முனிவர்யாவருமபெருகுமிச்சையால்
வினவுகிற்பவர்கள்பாவநாசமெனமேவுபேருணர்வின்மேலையோய்
வனமலர்த்தடமிதற்குவந்ததுவுமற்றிதன்பெருமைமுற்றவு
முனதுளக்கருணையானுரைதியெனவோதுயானவனுவப்பினால். (௧௦)

இமையவெற்பினயல்பிரமவாசிரமமென்னுமெல்லையினியன்றவா
றமையவுற்றறைவனறவிர்காளறிமினுயிடைப்பலவறந்தரு
முமையுதித்தகிரியருகுசோதருமவுருவவாசிரமமொன்றுதான்
சுமைமலர்ப்பணைவயங்குதண்டலைதுதைந்தநீழலொடுசூழ்வதாம். (௧௧)

கோடிலங்கவருகுன்றமோடமர்குரங்கமெங்கணுநெருங்கிடுந்
தோடிலங்குமலாவண்டினோசையொடுபண்டைவேதவொலிதுன்றிடும்
பீடிலங்குமறைவாணர்சாரணர்பிறங்கியோகியரறங்குலாம்
வீடிலங்குமனைவாழ்க்கையோரதுவிடுத்துமெய்ம்மையுணர்விழுமியோர். (௧௨)

இற்றொடர்ச்சியொடுவாழ்வனத்தவர்களியல்வுழிப்பிரமசரியமா
நற்றொடர்ச்சியவர்தத்தமக்குரியநான்மறைத்துறைநடாத்துசீர்
முற்றொடர்ச்சிபயில்வாலகில்லியரைமுதலமாதவர்கள்பிறரெலா
மற்றொடர்ச்சியகன்ஞானவாச்சிரமமாமதன்கணினமர்ந்தநாள். (௧௩)

முடமதிச்சடிலமுக்கணக்கனருண்முன்னுமாதவர்கண்மன்னுமவ
விடமதிற்பழயசூத்திரக்குலமியன்றுளானொருவணிகன்மிகுந்
திடமதிப்பெயரினானணைந்தினிதுசென்னியாலெதிர்வணங்கினான்
கடமதித்தகளிறனனவற்கவர்கள்காசிலாசிபலகழறினார். (௧௪)

கேள்வியிறபெரியபடிவரங்கணுயர்கிளரொலிச்சுருதிவழிதரும்
வேள்வியைத்தெரிபுகண்களிப்பமகிழ்மேவியன்னசெயல்வெஃகியே
கோள்விடுத்தமுனிகுலபதிக்கருகுகுறுகிமுன்பணிகுணத்தனா
யாள்வினைதொழிலினானவற்கதனையாதரத்தினொடுமறைகுவான். (௧௫)

அன்னையனையருளாலுனைப்புகலடைந்தனனறருமமாற்றுவா
னென்னைவீறுமியமானனுக்கியருளெச்சமிங்கிதனினிறைவயான்
றொன்மையேவல்புரிசூத்திரன்பெருமதொண்டுகொண்டருளுகென்றலுந்
தனைநாடுமுனிதான்வினயதுதனக்கியன்றவிடைசாற்றுவான். (௧௬)

இழிந்தவூற்பவனினக்குவேள்விகளிழைப்பதற்குரிமையில்லையா
லொழிந்திடிந்தநினைவுங்கள்பான்மறையினோடுபல்லவகையோதினான்
மொழிந்தவன்புலையனொப்பனன்றியுயர்முர்ந்தைநன்மரபின்முறையெலா
மழிந்தவன்பிரமகோதிரக்கயலனாகியேபதிதனாகுமால். (௧௭)

மறுவிலாதமனுவாதிசொன்னகுலவழிவழாதுதிடமதியினோ
யுறுவதானமறைவாணரேவலையுஞற்றுகென்றனனுவப்பினாற்
பெறுவதானசெயல்பிழைபடத்தளர்வுபெற்றுநின்றுமிகமற்றவன்
வெறுவியாகுலமனத்தினெண்ணினன்விசாரமொன்றுதவமேவுவான். (கஅ)

பூவனந்தடம்வகுத்துநோன்புமுறைபோற்றிவேள்விமுறைபுரிகுவித்
தாவதாகியமமாற்றிநல்லுணவயர்த்தருச்சனையமைத்துறுந்
தாவதர்க்கினியகாய்கிழங்குகனிதந்துநெஞ்சினுறுதட்பமோ
டோவினாள்கள்பலசெல்லமெய்ந்நெறியுழத்தலுற்றனனொழுங்கினால். (க௯)

நற்குணங்கொடிவைசெய்யுநாண்மருணடைச்செலாவறிவினன்மைசால்
கற்கனீண்மரபில்வந்திடுஞ்சுமதிகருதிவேதநிலைகண்டுளான்
செற்குலந்தவழ்பொதும்பர்மேவுதிடமதியிருக்கையிடைசென்றனன்
முற்கலந்தவனிறைஞ்சிநண்புதருமுகமனும்பலமொழிந்தபின். (உ0)

கந்தமென்கனிவழங்கியன்புசெயல்கண்டுவந்துமிகுகாதலா
யந்தணாளவகலென்றபின்னர்தனதாசிலாசிரமமணுகினா
னிந்தவாறுபலகாலிவன்கண்முனியெய்திநண்புநனிசெய்தனு
கந்தம்வாய்மைதவறானெனும்பரிசுநாடியின்னணநவிற்றுவான். (உக)

தென்புலத்தவர்கடேவருக்குரியசெய்கடன்றருதிறங்களு
நன்புலத்தமனுவோடுமாளயநயங்கொளட்டகைமுன்னாவா
யன்பினிற்புரிசிராத்தமானவையுமடியனேனடிகளாகநீ
யின்பினிற்றெருளும்வண்ணமுள்ளபடியின்றெனக்குரைசெயென்றனன். (உஉ)

தெட்பமார்சுமதிதன்மதிச்செயறெளிந்திடாதுமருள்சிந்தைசேர்
நட்பினாலுரைமறாதெலாமுணரநல்கியேமரபினாளுமே
யொட்பமேவுதிடமதிகொடவ்வகையுஞற்றுவித்துருகியுவகையாற்
றட்பமோடவனளித்தகொண்டுறையுடன்னைவந்தினிதுசார்ந்தனன். (உ௩)

சிறந்தசீர்ச்சுமதிவாழுநாண்முனிவர்தேர்வுறீஇயஃதவன்றனைத்
துறந்துநீக்கவதுகருவியாவுடறுறந்தவாசியிடைனூதரோ
டிறந்துபோகிமிகுகற்பகோடிகொளிலக்கநாணிரயமெய்தியே
பிறந்துநீடுதருவாகிமுன்பினர்பெருங்கரத்துருவுபெற்றனன். (உ௪)

பன்றிநாய்பறவைநீசர்பின்னவர்கள்பரதர்மன்னருறுபடிவெலா
மொன்றியேயடைவின்முந்துபோலமறையுயர்குலத்திடையுதிப்புறா
நன்றிசாலுமுபநயனமாண்டினிலைநாலிரண்டினினயந்தொர்நாட்
டென்றினாடவிவாயவண்பிரமசாரிசேரலகைதொட்டதால். (உ௫)

தொட்டபோதுமனமச்சமுற்றுவிழிசுழலவேறுபடுதொடர்பினோ
டொட்டுமுன்னையியல்விட்டுமெம்மரினுழந்துவாய்வெருவியோலமிட்
டெட்டெனுந்திசையுமாறியோடியிடறுற்றுவீழ்ந்தழுதெழுந்திராப்
பட்டிடுஞ்செயலையீன்றவன்றெரிபுபருவரற்பரவைமூழ்கினான். (உ௬)

மூழ்கலுற்றுமுறைநாடிமைந்தனோடுமுகிறொடும்பொதியமுனிவனா
மாழ்கடற்கரமமைத்ததண்டமிழகத்தியன்சரணவம்புயந்
தாழ்கருத்தினொடிறைஞ்சிநின்றுமிகுதனயனுற்றமருள்சாற்றியே
சூழ்கதிர்ப்புவியில்வேறுவெந்துயர்துடைத்திடும்புகறுணிந்திடேன். (உஎ)

ஆருயிர்க்கினிலையன்னைதன்னிலெமதப்பிகாபதிதனன்பரு
ணோரனுற்றவர்களில்லையுன்னையினிநின்கணுய்யுநெறியிங்கெனக்
கோரின்மிக்கமகனொருவனேயிவனுடற்கரந்தகடியோடுமா
றீரம்வைத்தருளியானுமென்மரபினொருமவீடுபெறவென்றனும். (உஅ)

நெடிதுபோதுகுறுமுனிவனின்மலனிலத்துலாவிமுனிகழ்ந்திடும்
படியெலாமுணர்வுகொண்டுபண்டிவனோபனவனுன்மறைபகர்ந்திடு
மடிவுதீர்மனுவைமன்னுருத்திரனமனங்கொளச்சொல்வினைவன்மையாற்
கடியதீநரகடைந்திழிந்தபல்கருப்பமுற்றுவருகதையெலாம். (உகூ)

ஐயனோடுசொலியவவினைக்குறையினந்தகனவிடவணைந்ததால்
வெய்யபேயிதுவிடுக்குமாற்றினைவிளம்புவன்றெளிதிவிழைவொடுஞ்
செய்யசங்குலவுதென்கடற்கணமர்சேதுநாப்பணுயர்சேணுடன்
வையகம்பரவுகந்தமாதனமென்வரையிருக்குமிசைமறைவலோய். (௩0)

அச்சிலம்பிடையோர்பாவநாசமெனுமவாவியுண்டதனினாடினன்
மெய்ச்செறிந்தபிணிபூதமாதிபழவெவ்வினைப்பிறவியியலெலாம்
விச்சைகண்டவிருள்போல்விளிந்தொழியுமவிசயமென்னவொளிமிக்கதா
யிச்சகம்புகழுமனனருழிபுகவேகுவாய்மகனொடிக்கணம. (௩க)

ஏகிமுத்திவசமூழ்கிலிந்தவிடரீடழிந்தகனுமின்பமுண்
டாகும்வேறிலையுபாயமெனாறுமலயநதருந்தவனறைந்தனன்
றாகமிக்கமறையோனுமன்றுதருதனயனோடனையதடமரீஇ
மோகம்விட்டகனுமாறுசேயினொடுமூன்றுநாளதனின்மூழ்கினன். (௩உ)

விண்டுபோயினதுவேதியக்குலனில்வெறியநாட்டலகைவிடுதலுங்
கொண்டல்கான்றமதிபோல்வனப்புமிகுகோலமேவுமறையோன்மகன்
றண்டலின்றிவளர்செல்வமல்கியதருக்கினுற்றணியெருக்கனோ
னண்டஞானமுதலமலமுத்திநிலையதனோடினிதடைந்தனன். (௩௩)

அவனளித்ததிடமதியுநாள்சிலவகன்றபின்புயிரகன்றுபோ
யிவனெனக்கடியவளறுபுக்கிழிபிறப்பெலாமடைவிலெய்துநாட்
பவமுடைக்கழுகினுருவமாயவழிபாவநாசநடமேவியே
தவனநீக்குபுனலுண்டுவீசுசிறைதனையடித்துடனனைத்தனன. (௩௪)

பறைவிரித்துருநனைத்தபோதுவினைபற்றறுத்தமரர்படிவமாய்
நறைவிரித்ததொடையாடையாபரணநன்னிழற்கவிகைபலவுடன்
குறைவிரித்தநடவானரம்பையர்குழாம்வளைப்பவறைகுரான்மணிப்
பொறைவிரித்தகொடிசூழ்விமானமிசைபொன்னகர்க்கடிதுபோயினன். (௩ரு)

வேறு.

வாவியின்மாண்பிஃதந்தணீர்வான்றவம்வீடுவழங்குமாற்
பூவினாரணனும்பரார்பூசைசெய்நீர்மையதொன்றுதான்
மேவினராடுநரிந்தநீர்மேலறைவோர்வினையன்றியே
பாவமெலாமடுபண்பினிற்பாவவிநாசனமென்பவே. (௩சு)

பாவநாசச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௭௭0.

சீதைகுண்டச்சருக்கம்.

மதுரவாய்மைமல்குசூதன்மரபினாடிவரைவிலாக்
குதுகலங்கொண்முனிவரோடுபின்னுமொன்றுகூறுவான்
பதுமவாசம்வீசுபாவநாசநீர்படிந்தபின்
மிதிலைவந்தசீதைவாவிகுடையவேண்டும்விதியினால். (௧)

பிரமவண்டமதனிலுள்ளபெரியகங்கைமுதலநீர்
பரமர்தங்குகாசியாதிபதிகடங்கள்பழிகடீர்
வரமனங்கொள்செய்கைமுன்னிவைகுமங்கண்வாழுமாற்
சிரமொரைந்துகொண்டதேவும்வாவிமேவுதிருவினால். (௨)

வேயிரண்டுவாளிரண்டுவில்லிரண்டுவில்லுவக்
காயிரண்டுகொண்டவல்லிகருவின்மேவுமுயிரெலா
மாயிரண்டினாடுசீதைவாவியின்கண்வேதியப்
பேயிரண்டினைஞ்சதங்கண்ணானைவிண்டுபோந்ததால். (௩)

உதுவிளம்புசூதன்முன்னமுறுவர்பின்னுமுரைசெய்வா
புதுவிளம்புநிலவுமூரல்வனிதைசீதைபுனிதநீ
ரிதுவிளம்புபிரமகத்தியிந்திரற்குநீக்குமா
றதுவிளம்புவந்தவாறுமறைதியென்னவன்பினால். (௪)

தனகலந்தசிந்தையோடுசூதனன்றுசாற்றுவா
னெண்கடந்தபொருண்மைநாடுமிருடிகாண்முன்னேல்லையின்
வண்கிடங்குசூழுமாரைவைசயந்தநகரிலே
வெண்கபாலபரணனென்றொராவிறலரக்கன்மேவுவான். (௫)

பங்கயன்கணும்பரிற்படாவரம்படைத்தசீர
வெங்கபாலபரணவீரன்விறலமைச்சன்வின்மைசா
லங்கமேயகுணபக்ஷ * னக்குரோணிநூறதாய்ப்
பொங்குதானையிரதமும்பல்புரவியோடுபொலிகுவான். (௬)

மகரவேலைபோலவாழும்வாளரக்கன்மந்திரப்
புகரிலானைவருகவென்றுபுரிவதொன்றுபுகலுவான்
பகரிலேகராசைவென்றுபடலைவாகைசூடியே
சிகரமார்வசந்தமேவியமரர்நாடர்தெரிவைமார். (௭)

முன்குலாவியாடல்காணவேண்டுமென்றுமொழிதலு
நன்கிதென்றுமந்திரத்தினாதனுநவிற்றினான்
வன்கண்மாயநிருதனன்றுவானவூரைவலிசெய்வான்
வென்கொடாதபடைஞர்சூழவிண்ணிலேகவெஃகினான். (௮)

நீதன்வஞ்சநெறிமைதன்னினீடுமைந்தனானதுன்
மேதனார்புரக்கவைத்துமிடைபதாதிநடைகொளும்
பாததூளிநாலைமேடுபடவிலங்கல்பஃறுகட்
பூதியாகமெய்ப்புழுங்கியிரவிகண்கள்பொத்தவே. (௯)

* சவபக்ஷன்.

மூசுதானையியமுழக்கின்முகின்முழக்கமூழ்கவெண்
டூசினீடுதுவசராசிசுடர்விசும்புதூர்க்கவூர்
வாசியோதைவழுவையோதைமண்டியெண்டொகைப்படு
மாசையானைசெவியடைப்பவமரருரையனுகினன். (௧௦)

எய்தலுற்றவேலைவேலையெனவிரட்டுமொலியினால்
வெய்தெனப்படர்ந்தவாறுவினவியும்பர்வெள்ளமு
மைதுரக்குமூர்தியானும்வந்துவந்துமார்புதந்
துய்தலற்றநிருதநாதனுடனுடன்றுபொருகுவார். (௧௧)

கருளினோடுவெயில்கலந்தகாட்சியன்னமாட்சிசே
ரிருவாதங்கள்படையுமுந்தியெதிரிவிலைக்குமமரிலே
யருகுநின்றசேனைகோடியங்குமிங்குமற்றதா
லொருவரோடுமொருவர்தொந்தயுத்தநின்றுருற்றினா. (௧௨)

கூற்றனேற்றதண்டமங்கைகொண்டுமிண்டுகுணபது
ணாற்றலானையக்குரோணிமுப்பதோடழித்தனனா
காற்றினோடிவநதடர்ந்தகைசிகன்றனுவியை
மாற்றினானொவாளின்வீசிவருணனென்னுமவானவன். (௧௩)

குருதியங்கணிருத * னுவிகுந்தமேவிவயவினன
பரிதியங்கணமலனண்புகொண்டிலங்குபானமையா
னொருகபாலபரணனோடேன்பிறந்தநால்வரிற்
றிருகுகோரதிட்டிவனமைசெய்யவங்கிசாதினன். (௧௪)

வெமபயாவகன்றனுவிவிரவுகந்தவகனினு
லும்பர்போனதூன்விருப்பினனும் † வேரியூணனு ‡
மிம்பயாருமிடாகடீரவியமனுாரிலேகினு
ரம்பொனூடுறைந்துவாழுமாயுள்வேதரிருவரால். (௧௫)

பாறுகொண்டவன்கபாலபரணனோடுபரவுயின்
னேறுகொண்டதின்பதாகையிறைவனோற்றெதிரந்தயன்
கூறுகொண்டபாதியாமமளவில்வென்றிகொளவரு
நூறுகொண்டவக்குரோணிசேனைமுற்றுநூறினன. (௧௬)

படுததல்கண்டுசீறிவந்துபடுகபாலபரணனே
ரடுத்துநிற்றிபோகலும்பரதிபவெனனவார்ப்பரித
தெடுத்துவிலவளைததுவாளியெங்கணுஞ்சொரிந்தபின்
றொடுததொரைந்துவாசவனறன்மௌலிமீதுதூவினன. (௧௭)

பிசிதவுண்டிநாறுவெண்பல்பிறழ்கபாலபரணனோ
விசிகமைந்துமுடனறுத்தமேனமைகண்டுவிட்டிடும்
வசிகொள்சூலமதனைவேலின்மாற்றிநிறகுமதிநுதற
சசிமணாளன்வீறுணர்ந்துதழலெனவெகுண்டுதான். (௧௮)

அஞ்சுநூறுபததுநூறுதொடியிரும்பினனமுழம்
விஞ்சுநூறுகொண்டமைத்தவிசயதண்டவெற்பினுற்
பஞ்சபாதக்கபாலபரணனும்பர்படையெலா
மெஞ்சுமாறுகொக்கரித்துரத்தினோடெறிந்தனன். (௧௯)

---

* ருதிராக்ஷன். † மாமிசப்பிரியன். ‡ மதியசேவி.

அடுதிறங்கொடன்பதாகையற்றுமார்பினூற்றெனப்
படுதலுங்குழம்புநெஞ்சுபதைபதைத்துவையமேற்
சடிதிவீழ்ந்துநெடிதுபோதுதனைமறந்துதுஞ்சினான்
முடிவிலண்டர்குரவனங்கணஃதுணர்ந்தமுறைமையான். (௨௦)

வீவதற்குமுன்னமாகவேந்துதன்னைமிருதசஞ்
சீவனித்தொன்மந்திரஞ்செபித்தெழுப்பல்செய்தன
னாவதக்கணத்தினெஞ்சயாச்சினீங்கியைந்தருத்
தேவருக்குநாதனுந்தெளிந்துசிந்தைதேறினான். (௨௧)

தேறிவெள்விசும்பினோடுதிண்களிற்றின்மத்தகத்
தேறிநூறுகோடியங்கையேந்திமுன்பெதிர்ந்திகல்
கூறிவையமோடுநேர்கொடுங்கபாலபரணன்மேற்
சீறிவன்மைசிதறவீறுசென்னியின்கணெற்றினான். (௨௨)

தொடிசிதைந்துதோள்சிதைந்துதுரகமோடுதிகிரிமேற்
கொடிசிதைந்துபடைசிதைந்துகுடைசிதைந்துகொண்டபோ
ரடிசிதைந்துதானுமேனியளவிறாளியாயிடும்
படிசிதைந்துதிண்கபாலபரணனாவிபாறினான. (௨௩)

அடும்பயந்தருங்கபாலபரணனாவியகறலுங்
கொடும்பயஞ்செய்கிருதனைசெய்கொலையினண்டர்கோவினைப்
படும்பயங்கொள்பிரமகத்திபற்றியேபடர்ந்ததென்
றிடும்பைதீருமுனிவரோடுசூதனங்கியம்பினான். (௨௪)

வேறு.

கரைதருகாதைகேட்டுக்கணங்கெழுமுனிவரானோ
ருரைதருகின்றார்யாதுமுண்மையாலுணர்ந்தசூதா
புரைவிலாவரக்கற்கொன்றபுன்மைதான்புலவர்தங்கட்
கரையன்மேற்பிரமகத்தியாயதென்றறைந்ததென்னீ. (௨௫)

கோவினைவதைத்தபாவங்கொடும்புலிகொன்றார்க்காமோ
வாவினொண்பாலுண்டார்பாலடையுமோமருட்கையம்மா
யாவதுமுணரலாற்றேமிதனிலையெங்கள்சங்கை
போவதுகருதியன்பாற்புகலுவாயெனப்புகன்றார். (௨௬)

அந்தணர்மாற்றங்கேளாவதிசயமடைவதாகி
முந்தையேகாந்ததுற்றமுறையினைமொழிவான்சூதன்
விந்தவாரடவியங்கண்விறற்றிரிவக்கிரப்பேர்ப்
பந்தவூளரக்கன்றேவிபாசிழைக்கொம்பரன்னாள். (௨௭)

மெல்லிதழ்ப்பவளவாயால்விண்ணவர்வேட்கைதீர்ப்பாள்
பல்லிதழ்ப்பதுமவண்டின்பரிபுரமிழற்றுந்தாளாள்
வல்லினைக்குயத்தாற்கோங்கைமயிலைமெல்லியலால்வென்றாள்
செல்லினைக்கவர்ந்துதேன்மேற்செறிகுழலென்னச்செய்தாள். (௨௮)

காமனையாறலைத்துக்கவிகையுங்கணையுங்கைக்கொண்
டேமகன்முகமும்பார்வையிணையுமாவிழைத்துக்கொண்டா
டேமலர்வல்லியொன்றுதென்றலிற்றுளங்குமாபோற்
றாமனமருளக்கண்டோர்தான்றனிசரித்தாண்மன்னோ.

ஊரரவிந்தமாண்பேரோங்குமாமுளரிநாப்பட்
சீரரவிந்தமேவுந்திருவெனத்திரியுங்காலை
நீரரவிந்தநோக்கிநெடியவனுந்திநீங்கா
வேரரவிந்தமைந்தனெனத்தகுமிருடிநாதன். (௯௦)

சுடர்ச்சுசியன்னதூயோன்சுசியெனுநாமமேயோ
னிடர்ச்சினமிகந்தோனுங்கணிருந்தவமிழைத்திருப்பான்
படர்ச்சியின்வயத்தாலோர்நாட்பால்வளைப்பசும்பொற்றேட்டா
ளடர்ச்சிசாறருச்சூழன்னோனாச்சிரமத்தணைந்தாள். (௯௧)

தூசியன்மருங்குநல்லாடொக்கபோதரியநோன்பான்
மீசிறந்துடையோன்காணுவேள்படைக்குடைந்துவீங்கு
மாசையங்கடலிற்றோன்றுமவிமதியன்னவன்று
டேசியல்வதனநோக்கிச்சிந்தைமால்கொண்டுசொல்வான். (௯௨)

எங்குளாயிந்தக்காட்டிலெய்தியதென்கொலென்போ
நங்கைநீயுரியையாக்கோநவிலெனநகையினோடு
மங்கைதானுரைப்பாண்மேலோய்வயததிரிவகக்கிரன்றன்
றுங்கமாமனைவிநாமஞ்சொல்லுவார்சுசீலையென்றே. (௯௩)

வகைமலர்கொய்யவந்தேன்மகவிலேன்மணாளன்றானும்
புகழ்முனிசுசிபாற்போகிப்புதல்வனைப்பெறுதியென்றே
பகர்தருசொல்லுமுண்டாற்பகவநின்னருளினாலே
யிகலுடைமக்கட்பேறின்றியான்பெறவிரங்கிடென்றாள். (௯௪)

வாரிசமகடூஉவன்னவரிவளைவாய்மையாகுஞ்
சீரியவமுதமாந்திச்செவிகளாற்களிப்பினோடும்
பேரியன்முனிவன்கூறும்பெய்வளாயிங்குவந்த
காரியநன்றால்யாமுமகருததிடையுவகைகொண்டேம். (௯௫)

தண்டளிருடச * நாப்பட்டபனியச்சேக்கைமீதில்
வண்டமர்குழலாய்நின்பூண்மணிமுலைதழுவுமவாவுசை
கொண்டனமென்னறுகாதல்கூறியக்கோதையோடு
முண்டகமுதல்வன்போல்வான்மூன்றுநாணமுயங்கியுற்றான். (௯௬)

இயைந்தவளின்பவேலையிடையமிழ்ந்தெழுந்தபின்னர்
வியந்தருண்முனிவர்கோமானவிளம்புவான்வெறிமென்கூந்தற்
குயந்தருகிள்ளையன்னாய்கோளியந்தளிரகட்டிற்
பயந்தருணீகபாலபரணனும்பாலன்றன்னை. (௯௭)

ஆயுவுமநேகமுள்ளானபெடையாண்மைவல்லோன்
மாய்விலன்வலாரியல்லாவானவர்தம்மாலெய்துஞ்
சாய்விலெத்திருவுமெல்லாஞ்சகததிரவருடந்தானே
தேய்விலாத்தவங்களாற்றிததிசைமுகனருளிற்சேர்யான். (௯௮)

ஒள்ளிழைமடவாயுன்றனொருமகன்சதமகன்போல்
வள்ளியவலியுமின்புமருவுவானென்றுகூறி
வெள்ளியங்கிரியில்வெள்ளைவிடைப்பிரான்காசிதன்னிற்
றெள்ளியவுணர்வின்மோலோன்சென்றனன்சென்றபின்னர். (௯௯)

* உடசம்—பனசாலை.

பாற்றொடியவள்கபாலபரணனைப்பயந்தாளன்றோ
னோற்றுநான்முகனைநோக்கிநூறுபத்தாண்டுகோறு
மேற்றமுந்திறனுஞ்சீருமெய்தினானிவனைவிண்கோத்
தோற்றிடத்துரந்துகொன்றான்சூழ்ந்ததுபிரமகத்தி. (சுO)

தீயினுங்கொடியபேயாற்சிந்தைநோயுழந்துசால
வாயிரங்கண்ணனெண்கண்ணவன்றனையடைந்துபோற்றி
மாயிரும்பிரமகத்திவந்தவாறியம்பியீது
நீயிரங்குற்றுநீக்கநினைதியென்றிறைஞ்சிநின்றான். (சுக)

நின்றவாசவனைநோக்கிநிறையிதழ்மரையிருப்போ
னொன்றுளங்கரைந்துநண்பாலுரைசெய்வானும்பர்கோவே
மன்றலஞ்சுனைநீக்கந்தமாதனவரையிற்சீதை
தன்றடங்கரையில்வேள்வித்தழன்முகவாயிறன்னால். (சுஉ)

சிற்பரமன்றுளாடுந்திங்களங்கண்ணியானை
யற்பினால்வணங்கியேதியப்புன்லாடினாயே
ணிறபுறாதகனுமிந்தநீண்மறைப்பேயுநீயும்
பொறபுறுமகிழ்வினோடுபுகுதுவாய்புலவர்நாட்டில். (சுங)

ஆதலாற்பொருளுமின்புமறனொடுவீடுநல்குஞ்
சீதைபூந்தடதிலின்னேசெல்கெனச்செப்பலோடும்
போதனன்மாற்றங்கேட்டபுரந்தரன்புவிசூழ்கந்த
மாதனமபோகிச்சொன்னவகையெலாமரபிற்செய்தான். (சுச)

ஆங்கணிந்திரனைநீங்கிற்றருங்கொலைப்பிரமகத்தி
யோங்குயாநிலையிற்போனானுபேந்திரற்குரியமுன்னோ
னீங்கிவவாறேற்றம்பெற்றவிலங்கெழிற்சீதைநன்னீர்
பாங்கினாற்படிவாரெண்ணும்படியெலாம்படியிற்சோவார். (சுரு)

இராவகன்றெளியுமாற்றாலெரியிடைமூழ்கிவிண்ணோர்
புராதனமுனிவர்காணப்பொலன்றளிர்க்கொடியிற்றோன்று
மராவுறழல்குற்சீதையாழ்புனற்குண்டமென்பர்
தராதலமுய்யத்தாதுதானிதிற்குடைதலாலே. (சுசா)

வேறு.

ஈறிலன்புடையுங்கடமக்கியாமேதமின்றியியம்புதிறத்தினாற்
றேறுமின்கள்சிறந்ததவத்தினீர்சீதைகுண்டமெனும்பெயர்பெற்றவா
றூறகன்றநலங்கொளுளத்தினாலோதுமிந்தவருங்கதைகற்றுளோர்
பேறிதென்றுபிறங்குசெவிக்கொள்வார்பேசருந்திருநன்றிபடைப்பரே. (சுஎ)

சீதைகுண்டச்சருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - அகஎ.

மங்கலதீர்த்தச்சருக்கம்.

நாரணனெண்கலைநற்படிவத்தோ
னோரணவுங்கழலெண்ணுபுபின்னுங்
காரணமெய்ந்நெறிகண்டுளரூத
ஞாரணவாய்மையருக்கருள்செய்வான். (க)

ஞானநலத்திகழ்நான்மறையீர்காள்
சானகிதன்றடமூழ்கியதக்கோ
தேனிறைமங்கலதீர்த்தமெனப்பே
ரானசெழுந்தடமாவெனபால். (உ)

இந்திரையிந்திரனெண்ணிறைவத்தோர
சந்ததமன்னதடந்தினலருசேர்
சிந்தையினோவுவாசெப்புமதன்பால
வந்தபெருங்கதையொன்றுவகுப்பாம. (ங)

திங்கள்வயங்குதிருக்குலமுள்ளான்
றுங்கமனுத்துறைசோரவுபடாதே
பைங்கடல்சுற்றியபாரமுழுதாள்வா
னிங்கிவனாமமகேசவனென்பான். (ச)

மேதகுவானவர்வேந்திவனாற்றும்
போதமகத்திடைபுந்திநிறைப்பா
ராதியருங்குலவந்தணரெல்லா
மோதனமுண்டுதமமுந்திநிறைப்பார். (ரு)

மன்புரிகின்றவளங்கொள்சிராத்த
மின்புறுநெஞ்சினிடஞ்சிறிதின்றாற்
றென்புலவாணர்செழுங்கொடைவேந்தன
பின்புளராலவைபெற்றிடவேண்டார். (சு)

மந்திரம்வேதம்வரம்பில்புராணந்
தந்திரமாதிதடங்கலைதன்னு
ளிந்துவினமேற்பழுதிறுறவந்தோன்
புந்திபுகாதபொருட்கலையின்றால். (எ)

வாணெடும்வென்றிமகேசவமன்னன்
றாணிழனீங்கியதண்டலராறோ
கோணுதன்மாதர்குழாத்திலர்பொற்பூ
ணாணுறுகந்தரநாரியர்தாமே. (அ)

சீதநிலாமதிசீர்மரபுற்றோன்
கோதறுசெவ்வியகோற்குளிர்பூங்கா
மாதிறல்வாய்மைமனுக்குலமன்னா
நீதிவெயிற்குநிழற்செயுமம்மா. (கூ)

இறைவனுமாயனுமென்றுமிருக்கு
மறைகடலோங்கலகன்றதுமுண்டான்
மறைவழுவாதமனோசவனெஞ்சத்
துறைவதொர்நாளுமொழிந்தறியாரால். (க0)

வம்பலர்மாலைமனோசவமன்ன
னம்புவிதன்குலமாகையினாலே
செம்பொருளுந்திதிரிந்தசினஞ்சேர்
வெம்பணிதீண்டவெருவருமென்றும். (கக)

இன்னணமாற்றுமிலைசக்குரியோனா
மன்னவர்சிங்கமனோசவனென்பான்
றனனருளாயதடம்புயறன்னா
னன்னிலமாதுநயம்பெறுமந்நாள். (கஉ)

நிந்தைபுனைந்துநிலத்திருநீப்பான்
முந்துகுலத்தின்முறைச்செயல்விட்டே
மந்தரவாகுமனோசவமன்ன
னந்திலுளத்திலகந்தையையுற்றான். (கங)

ஆரமுதத்திடையாலமடைந்தாற
சாரமுதச்சுவைதான்கெடுமாபோ
லீரமுதக்கலையிந்துகுலத்தோன்
வீரமுதற்குணமேவிலனானான். (கச)

யாவனகந்தையினைப்பொருள்கொண்டா
னவனவன்கணழுக்கிவறன்மை
மாவகல்காழ்ப்புமருட்கைமதத்தோ
டவறுவேட்கையிடங்கொளுமன்றே. (கரு)

இடங்கொளுமக்கணமின்பநலத்தாற்
றொடங்குதிருப்புகழ்சுற்றியசுற்ற
முடங்கியைகான்முளையூர்பொருளுற்ற
மடங்கலுமாயுமலக்கணுமேவும். (கசா)

போதிலைகாய்முதல்பொற்புறுவித்தி
னாதலெனக்கொளகந்தையவன்பான்
மேதினிமானவர்யாரும்வெறுப்புற்
றோதுமழுக்காறுற்றதுமன்னோ. (கஎ)

சீற்றமயக்கொடுசேகிவையிற்றான்
மாற்றிரிகாமமனோசவனன்னாட்
சாற்றரும்வேதியர்தங்கிழமைத்தாங்
கூற்றுநிலக்கிறைகொள்ளமதித்தான். (கஅ)

கொள்ளமதித்தகொடுந்தொழில்வேந்தன்
றெள்ளியவிப்பிரர்செஞ்சடைமுக்கண்
வள்ளல்வளைக்கரமாவிவர்பாகத்
துள்ளபொருட்பலவுங்கவாவுற்றான். (கக)

சாலிவயற்பயிறண்ணடைகொண்டான்
பாலியல்பின்றுபழித்துறைபூண்டான்
மேலியறீயவினைப்பயனென்ஞான்
மாலியல்சிந்தைமனோசவமன்னன். (உ0)

இக்கொடுவேந்தனிழைத்திடுபாவம்
பக்குவமாயபலத்தொடர்பாலே
யொக்கலின்மேதகுபூணநிலத்தான்
மிக்குறுகோலபவேண்டலனுற்றான். (உக)

கூன்றடவிற்பயில்கோலபனோடு
மூன்றிருதிங்கண்முயன்றமராற்று
மான்றுமனோசவன்வல்லையின்வல்லே
தானறுகான்முளைதையலொடுற்றான். (உஉ)

தண்டியலூணதராதிபன்வெம்போர்
விண்டவனீள்வனமேவலுமன்றேன்
மண்டலமாதைமணந்துவலததா
லெண்டருகாலமிருந்தனனிப்பால். (உங)

அச்சமில்கோலபனுண்டிடவைய
மைச்செறிகாட்சிமனோசவன்வாளா
வெச்சமுமில்லுமிளைக்கவிளைத்தே
பொச்சையினூடுபுகுந்தலமந்தான். (உச)

பொன்னுலகோர்மிசைபுத்தமுதீயும்
வன்னமதிக்குலம்வந்தருள்கோமா
னின்னலுழந்தனனெவ்வகையானுந்
தன்னவையல்லதனக்குதவாவே. (உரு)

நீணிலவாழ்வினைநீர்த்திரையென்று
தேனுளதாவெணியின்புறலாமோ
மானுயர்செல்வமனோசவனாக
மூணிலதாகியுணங்கியதெனறால். (உசா)

குஞ்சரமெண்குருராலரியேனம்
வெஞ்சினவேங்கைமிடைந்துறுகானில்
வஞ்சகனானமனோசவன்மற்றோர்
தஞ்சமிலாதுதளாந்துழியோர்நாள். (உஎ)

தோன்றல்பசித்தழல்சுட்டிடவாடா
வீன்றவரோடுமிளைத்தனனென்று
னூன்றளர்செய்துயரொட்டலர்வாளாற்
கீன்றெனமம்மாகெழீஇயினரன்றோ. (உஅ)

ஆருயிர்மைந்தனகட்டழலாகு
மாரிவறந்தவயங்கெரிவேணி
னேரியவல்லியினின்றுளமவாடுமெ
பாரிதன்றேடிறைபனனியுரைபபான. (உகூ)

மாதுசமிததிரைமற்றிதுகேண்மோ
யாதினியாறறுவதெவவிடைசெலவேனு
சாதலணைநததுசநதிரகாந்தற
கோதுவதெனனினியுணடியுமின்றால. (௩0)

ஏககறுமிநதவிடுக்கணொழிததே
காககுநாவேறெவாகாசினியினமேற
பூககமலததுறைபுஙகவனெனபா
னாககமிலெமமையளிததத்தையெனனோ (௩௧)

குனறவிலலானடிகோவலனறா
ளெனறுமுனாவிமையோரிவாதமமை
யனறுபணிநதிலனவவினையாலே
யினறடைகுறறதகநதையெனககே. (௩௨)

வெவவியயானெனனமேவிடலாலே
வெளவினனநதணாவானவரானோ
செவவியமாணபொருடவினையிறபுற
கவவையுழநதுகலஙகலுருறனேன (௩௩)

மாறறலனாளகெனமாநகரீநதேன
பாறொடிநீதருபாலகனோடு
மாறறருமுநதியழறபசிகூர
வீறொருவேனவனமேவினனநதோ (௩௪)

நீரணிவேணிநிருததனைமாலை
வாரமனததுணைராமருளோனறே
வாரணருணணவளிநதிலனனனம
யாரிவனுணடியெனககிடுகினறோ. (௩௫)

கணணனுளததனறுகாதகழறகா
லுணணிலவுநதிருவுமபரினமேலாம
வெணணிறநீறணிவேடமிலஙகும
புணணியரேவலபுரிநதறியேனால. (௩௬)

பாஙகுறுவாழைபலாவிவைநலகுந
தீஙகனிதணடுசெருபபலாசாநதம
பூஙகுடைவெளளிலைபொஙகுதுவாககா
யீஙகிவைநலவிரையயநதனமறறும (௩௭)

சிததிரையாகியதிஙகளினேருஞ
சிததிரைநாணமறைதோநதவாதமபாற
சிததிரகுததாசிறபபுறவீயேன
சிததிரமனனசெழுநதொடிநலலாய. (௩௮)

ஆலரசததியருசசுனமாதி
சாலநிழறறுதருபபதிகததோர
மேலெறியாதபவெபபமுறாதே
வாவியவடடையிலவைததறியேனால (௩௯)

காதினிலங்கியகட்செவியெம்மான்
மேதினியுண்டருள்விண்டுவிளங்குஞ்
சேதிமநீண்மதில்சேர்மணிமுன்றில்
சோதனிகொண்டுதுடைத்தறியேனால் (௪௦)

ஏரிகுளங்கிணறிங்கிவைதாரேன்
காரிநுகர்ந்திருள்கண்டனைமுன்னோர்
சீரியகோயில்சிறப்பொடுசெய்யேன
பாரில்வணங்கல்பழிச்சலிலேனால். (௪௧)

பூவனமொன்றுபுரிந்ததுகாணேன்
மாவனமாலைவனத்தயல்போகேன்
றேவரைவிற்கெழுதிங்களிஞற்றேன
மேவியபூசைவிடிந்திடுமுன்னே. (௪௨)

தாதையாதாயர்தமக்குயர்கன்னி
மாதமுதற்கண்மகாளயமற்று
மீதுறுகாமநைமித்திகநித்த
மாதிசிராத்தமளித்தறியேனால். (௪௩)

ஒட்டியதிங்களொடொன்றொருபான்மே
விட்டுளபக்கமிருங்குருமேவு
மட்டமியாதியறந்தருமந்நாட்
பட்டினிகொண்டுபசித்தறியேனால். (௪௪)

நாலுமறைக்குணவின்றிடுநற்சா
பாலமுரைத்தபலன்கெழுமோரேழ்
கோலமனுக்கொடுகோதிரிவெணநூல்
சாலவெனமேனிதரித்திலன்மன்றே. (௪௫)

அநாதிநுதற்கணரன்பொறியைந்து
மெனாவின்மனத்தினிருத்தியதில்லேன்
பினாகிதொழும்புபிறங்கியகண்டி
கனாவினுமென்மிசைகண்டறியேனால். (௪௬)

விண்டுவினாமம்விளம்புமெழுத்தா
மெண்டொகைமந்திரமெண்ணிலனீதோ
பெண்டொருபங்கிறைபேசியநூற்பா
லுண்டனவொன்றையுஞற்றியதில்லேன். (௪௭)

புண்ணியமின்னவைபோற்றலிலாதே
நண்ணியதென்றிடர்நாடியினைந்தே
மண்ணில்விழுந்துமனோசவமன்ன
னுண்ணிகழ்போதமொழிந்துகிடந்தான். (௪௮)

தார்புனைகோனுடறூரணிமீதே
சோர்பொடுசாய்ந்துதுடிப்புறுமாற்றை
யேர்புனைமின்றிருவில்லவளென்னும்
பேர்பொருண்மாறுறுபெண்கொடிகண்டே. (௪௯)

சேற்றெழுசெய்யசெழுங்குமுதத்திற்
றோற்றலிலாதசுரும்பிசைபோலே
வேற்றுணைநீர்வரவீழ்ந்தழுதேங்கிப்
போற்றியகேள்வன்மெய்புல்லினள்சொல்வாள். (௫0)

சோமகுலேசதுளங்கொளிவீசு
மாமணிமார்பநின்மைந்தனொடென்னை
வேமெரிதில்லம்விடுத்தொருநீயே
போமதுகொண்டனைபுந்தியிலந்தோ. (௫௧)

ஆவொருவேன்மகனுமிவனோடுங்
காவலரின்றுழல்கன்றுடையான்போற்
றீவனமீதுதிரிந்திடுவேனோ
வாவுறுகிள்ளைமனோசவமன்னா. (௫௨)

கேளிரைநீத்தகிலேசமலாதுன்
றோளையுநீங்குதுயர்க்கடன்மூழ்கிக்
கோளரியஞ்சுகுலப்பிணையாகோ
வாளமர்தானைமனோசவமன்னா. (௫௩)

உன்னையுநீங்கியுலங்கெழுதோளாய்
பொன்னவிர்பூண்மணிபோக்கியதேபோ
லென்னையமங்கலையென்னவிசைக்குங்
கொன்னுமென்னாருயிர்கொண்டுறைவேனோ. (௫௪)

சுந்தரநின்னிருதோள்பிரிவேனோ
வந்தனன்யானுமனோசவவென்பா
டந்துறழ்நேரிடைசந்திரகாந்தா
வுந்தையயர்ந்ததுணர்ந்திடுகென்றாள். (௫௫)

கண்டதுகான்முளைகண்புனல்சோரப்
பண்டிகொழுந்துபசித்தழலோடுந்
தண்டலிறந்தைதனைததழுவுற்றே
விண்டொலியின்றிவிழுந்தழும்வேலை. (௫௬)

வேறு.

நெடியவேணியனீறணிமேனியனீங்காக்
கடிகொள்கண்டியன்கண்ணுதருள்புணர்கருத்தான்
படிமையாலுயர்பண்ணவன்பல்லுயிர்புரக்கு
மடிகளாகியபராசரனணைந்தனனங்கண். (௫௭)

உணங்குசாலிகண்டெவியவெழுந்தகாரொத்த
குணங்கொண்மாதவக்குரிசிலைத்தெரிந்துதண்கோதைப்
பணங்கொளல்குலாள்பராசரன்பாதபங்கயமேல்
வணங்கினாளருண்மைந்தனுந்தானுமாய்மண்ணில். (௫௮)

சரணமேல்விழுந்தையறன்றுயர்த்தழல்சமிப்ப
வரணவாசிநீருளினாற்றெளித்தளித்தறவோ
னிரணவேல்விழியாரைநீமதலையாரெவனோ
கிரணமாழ்குறுமிரவிபோற்கிடப்பவனென்றான். (௫௯)

வேளைவென்கொளுமெய்த்தவன்வினாவிடைகொடுப்பான்
வாளைநேர்விழிமற்றவனென்மணவாளன்
காளைசந்திரகாந்தனெங்கான்முளைகதிர்கால்
கோளையாகியவம்புலிகுலேசனிக்கோமான். (௬0)

வேந்தையீன்றவன்விக்கிரமாட்டியன்விருப்பான்
மாந்தர்சொல்பெயர்மனோசவன்மலர்த்திருமடந்தை
காந்தனன்னவன்புலனிரண்டொருபொறிக்கவர்வோ
னேந்துமன்பதையிங்கெனைச்சுமித்திரையென்னும். (௬௧)

கோலபன்றனதுருவமாங்கொடுவினைவயத்தான்
ஞாலமுந்திருநகரமுநரபதியிழந்தே
பாலனோடுமென்னோடுமிப்படர்விடரிதன்கண்
மாலுடன்புகுந்துற்றனன்மைந்தனிவ்வைகல். (௬௨)

பற்றிநின்றெரிபசியினாற்றன்முகம்பார்த்துத்
துற்றிவேண்டுசொற்றுய்ப்பதற்குதவிடுஞ்சொன்றி
யற்றதன்வயிற்றழலிடையஞ்செவிததுளையா
லுற்றுவீழ்ந்துணாவொடுங்கினனிறைவனென்றுரைத்தாள். (௬௩)

நிமித்தமீதெனாநெடுங்கணீர்சொரிந்திடநிற்குஞ்
சுமித்திரைக்கெதிர்சொல்லுவான்பராசரனேருகாய்
கமித்துநின்றிடுகளையெலாங்களைபடுங்கணத்திற்
சமித்துமோகமிங்கெழுவனோர்கலையிலுன்றலைவன். (௬௪)

வாடுறேலெனமனந்தெளிந்தரிவையையமன்று
ளாடுதாணினைந்தருந்தவனரசனதாக்கை
யூடுதன்கையாலொருமுறைதடவலுமுணரா
வீடுகொண்டெழீஇயிறைஞ்சினான்பராசரனிணைத்தாள். (௬௫)

கழுமலத்தமிழ்ப்பிள்ளையார்கரதலந்தீண்ட
வழுதிதீப்பிணிமாற்றியன்றுயிர்பெறுவளம்போ
லெழுதருந்திறன்மனோசவனிருந்தவன்பாதந்
தொழுதுளங்கவர்களிப்பினாலவனொடுஞ்சொல்வான். (௬௬)

அறனிலாதவர்க்கரியநின்றரிசனமதனா
னிறனிலாவுயிர்நிலைகெடாதயர்வினைநீங்கித்
திறனிலாவுணர்வெய்தினன்சேர்ந்தனன்வனத்தின்
மறனிலாவுவேற்கோலபமாற்றலன்வலியால். (௬௭)

சத்திதந்தருடனயநின்றனதருட்கடைக்கண்
வைத்திடாவிடினுய்கலன்மரபிதுவென்றா
னத்துணைப்பொழுதஞ்சலென்றரசனையமைத்த
கைத்தலத்தினன்பராசரனருளினாற்கரைவான். (௬௮)

செல்வமன்னவகேண்மதிதெவவினைத்தெவிட்டி
மல்வளங்கெழுவாகுவின்வாகைநீமிலையு
நல்வரங்கொளுநடவையொன்றியம்புவனாலைக்
கல்வளம்பயில்கௌசலைகாளைதன்கரைமேல். (௬௯)

தாணுவாழ்வரைக்கந்தமாதனந்தனிலுண்டோர்
மாணுறும்பெயர்மங்கலதீர்த்தமாம்வாவி
வேணவாவுலகடைந்திடமிதிலையிற்பிறந்த
யாணர்வல்லியோடிராமன்வீற்றிருப்பனாங்கென்றும். (எ0)

சேயுநீயுநின்றேவியுமாயவண்சென்று
பாயுநீர்த்தடமன்பினாற்படிந்ததன்பாரத்
தாயநற்பதிச்சிராத்தமுன்னானவையமைத்தாற்
போயொழிந்திடுமெபொருகோடிநெடுங்கொடிப்பூவை. (எக)

அண்ணலானனவம்புயமாலயமாக
நண்ணுமாமகணண்ணலன்றன்னையுநாசம்
பண்ணிநின்பழம்பதிபுகுவாயுனைப்பகரும்
புண்ணியம்புணர்பொருட்டினாற்போதுவன்யானும். (எஉ)

அல்லறீரியநம்மொடுமணைதிரென்றறவோன்
வல்லைமன்னன்முன்னோருடன்மஙகலதீரதத்
தெல்லைநாடியேயேகுவானிருஞ்சுரம்போகித
தில்லமும்பலதேசமுஙகடந்தவண்சென்றான். (எங)

மங்கலப்புனன்மரபினான்மற்றவரோடு
மங்கலக்கணின்றகன்றிடவாடியேயருளாற்
றிங்கண்மூன்றளவிறைவனாற்சிராத்தமுஞ்செய்வித்
தெங்கணும்புகழ்பராசரனிருந்தனனிதன்மேல். (எச)

நீரெழுத்தெனநெடுந்துயர்நீங்கிடவிராம
னோரெழுத்தினையரசனஞ்செவித்துளையுரைத்தான்
போரெழுத்திகழ்புயத்தினான்புனலதிற்புகன்ற
சீரெழுத்தைநான்கொருபதுநாண்முறைசெபித்தான். (எரு)

அறையுநன்மனுவரசனோர்பராசரனருளான்
முறையிலங்கெதிரதோன்றினமுரண்கொள்கார்முகமுங்
குறையிலேமலிதூணியுஙகுமுறுவெள்வளையு
மிறைசெய்தண்டமுமுசலமும்விளங்குமாடியமும். (எசா)

பாகுநீள்கொடிபரியுடன்படர்நெடுந்தேரு
மீகையாலுறையிட்டகூர்நாந்தகமிரண்டு
மாகமார்தொடையாரமுமாயிரந்துகிலும்
வாகுசேர்மணிவலயமுமகுடமுந்தொடியும். (எஎ)

வைசயந்தியாம்பொன்மரைமாலையுமருவார்
கைசயந்தராதோடவென்காண்பவன்கண்டே
யுய்சயந்தருமூழினாலுவகையுற்றோடி
மொய்சயந்தனக்குதவிடுமுனியுடன்மொழிந்தான். (எஅ)

அங்கண்மன்னனைப்பராசரன்றானபிடேக
மங்கலத்தடநீரினாற்செய்தருள்வழங்கப்
பொங்குபூணொடுமெய்புகுங்கருவியும்புனைந்து
செங்கைவாளொடும்வில்லொடுந்தேர்மிசையேறி. (எகூ)

தூங்காற்றியதூணியன்முதுகிடைச்சுமந்த
வோங்குபொன்முடிச்சென்னியனுச்சியிற்கதிர்போ
லாங்கண்மேதகவிளங்கினனரசனன்றவற்குப்
பாங்குசேரருட்பராசரன்பின்னரும்பரிவால். (௭0)

விரிஞ்சனுதியர்விசிகமேல்விடுதலுமீளப்
புரிந்துகோடலுமவயவப்பகுதியும்போற்றித்
தெரிந்திடற்கருங்கொள்கையாற்றிருவருள்செய்து
விரிந்தமாதவமேன்மையாலாசிகள்விளம்பி. (௭௧)

ஒன்னலன்றனைவென்றிகொள்போகெனவுரைப்பப்
பன்னரும்புகழ்ப்பராசரன்பங்கயபாத
மன்னனாகியமனோசவனவலங்கொடுவணங்கிப்
பொன்னனாளொடுமாரணன்றனொடும்போனான். (௭௨)

விண்ணியங்குதேரிரவிதனைமெய்யாகிப்பமேலெய்ப்ப
மண்ணியங்குதோமனோரவன்வளநகர்மருங்கிற்
வேறிடத்துறையிருடிதன்மனமெய்ப்பொருட்டணிவெளியிலே
யேறிடத்தெரியாமைகண்டிஃதென்கொலெனனவிரங்கியே
மாறிடப்புரிபாவமல்கிடினெஞ்சுசஞ்சலமருவுமாற்
கூறிடப்புகிற்றீமையோருழைகுடியிருந்ததுமில்லையாம். (க௬)

உழிதர்கிற்பதென்னுள்ளமென்னவுணர்ந்துபன்முறையுன்னியவ
வழிதனைத்தெரிகுற்றநெஞ்சமருண்டுதன்றனைவைதுகொண்
டிழிபுரைத்திலமிவ்வுடற்றொடர்பென்றுபேதைமையெய்தினே
மழிவினன்றிமறந்தபாதகநங்கணெய்தியதையகோ. (க௭)

மாரிகாத்துயிர்வாழவைத்திடுமெகிட மற்றிதைவழிபடேம்
பூரியர்க்குளிழைத்தநன்றிபுலன்கொளார்மிருபுன்மையோ
ரேரியற்றிருமறைகளிற்பரிகாரமில்லையிதற்கிவர்க்
கோரியற்கதியுலகுமங்கிலையுறவுமிங்கிலையுணரிலே. (கஅ)
எருமைசெய்திடுநன்றிதன்னையிழித்ததீவினையாலெமக்
கொருமையுற்றிலதுள்ளமியாருபகாரமாற்றியதுணர்கிலா
ரருமைசேரரணுகநம்பியடைந்துளாரையழித்தவ
ரிருமைசேர்பயனென்றுமெய்திலரெய்துவாரிருணிரயமே. (கக)
யாப்பின்மன்னியநன்றிதன்னைவிடுத்ததீமையிதற்குயிர்
நீப்பதேபரிகாரமென்றிடுநீதிநூலருடாதைதாய்
காப்புநேர்கிலர்குரவர்தக்கிணைகாதலோவெழுங்கிலார்
தீப்பவங்களுமாற்றுநன்றயர்தீங்குநீங்குயிர்தீர்க்குமால். (உ0)
மடிவதன்றியிருப்பதில்லையிம்மண்ணினன்றிமறந்திடு
முடிவிறீமையினேடுமொவிமுடிக்கிலெய்திடுமுத்தியென்
றடியிலங்கொளிமாமணிததிரளாடகக்கிரியுச்சிமேற்
படியின்மாதவனேநியுன்னினன்வீழ்ந்திடும்படிபடியின்மேல். (உக)
போரினேடுபுறங்கொடாருயிர்பொருண்மையென்றுபுலங்கொளா
வீரர்போன்முனியிறுதிநாடியமேன்மைகண்டிருண்மேதியின்
பாரமாவுருவிட்டுவெந்தெதிர்நின்றுமாதவபதறல்யான்
யாரையும்முயர்மேன்மைசெய்திடுதருமமென்னவியம்பியே. (உஉ)
உனைமகிழ்ந்தனம்வற்சநாபவிருத்தியாயுவினேடுமித்
தனையெனுமிருகாலநின்னிகர்தருநர்தாமிலர்தரணிமேற்
றுணியினேடுயிர்நீத்தலேபரிகாரநன்றிதுறந்தவர்க்
கெனினுநல்லறமாற்றுநின்கணுபாயம்வேறுளதிருடிகேள். (உங)
கந்தமாதனவெற்பிலேமுனிசங்கனென்னுபுகண்ணனைத்
தந்தவாவியின்மூழ்குநன்றியயர்த்ததீமைதகர்க்குமா
லிந்தவாய்மையினையமெய்தலையென்றுகூறியதிருடிகேட்
டந்தவாவியினுடியவவினைநீக்கிநின்மலனுயினன். (உச)
அங்கண்மன்னியனந்தகாலமகண்டவாழ்விலமர்ந்தனன்
சங்கவாவியின்மேன்மைதானிதுநன்றிவிட்டவர்தாங்களுங்
கொங்கைவாய்வழிபாலளித்திடுகோதைதாதையர்குரவனும்
புங்கவன்பழிபுகலுவார்களுமுய்வரிப்புனல்போற்றினல். (உரு)
மொழியுநால்வர்தமக்குமுன்மனுநூன்மொழிந்திடுமுறைமையா
லழிவதேபரிகாரமாம்பவமஃதகற்றிடுமெற்புதங்
கெழுவுசங்கதடத்தினிற்கரிதாஙகொலோபிறர்கேடெலா
மொழிவுசெய்குதல்பூரணப்பொருளோடுலாவருமுரவிர்காள். (உசு)
வேறு.
நீடுசீர்பயில்சங்கதடத்தினீர்நீர்மைகூறுநிறைந்தபுகழ்ச்சிசால்
கேடில்காதைவிரும்பிநவிற்றுவார்கேள்வியூடுபுகுஞ்செயல்பெற்றுளா
ராடினேரெனநன்றியயர்த்தலாலாயதீவினையங்கணகற்றியே
வீடிலாதவிரிஞ்சபதத்திலேமேவியாவர்விளங்கருண்முத்தரே. (உஎ)

சங்கதீர்த்தச்சருக்கமுற்றிற்று

ஆ* திருவிருத்தம் - க,ருo அ.

முத்தீர்த்தச்சருக்கம்.

அங்கைபயிலுங்குண்டிகைத்தேவனையான்சூதனவன்பின்னுஞ்
சங்கையகலும்படியுரைப்பான்றவத்தீர்சங்கதடம்படிந்தோர்
மங்கையொருபங்குடையபிரான்மருவுங்கந்தமாதனஞ்சேர்
கங்கையமுனைகயைமூன்றுங்கலந்துகுளிப்பார்களிப்பாரால். (௧)

உலகமுழுதுமெடுத்தபுகழுடையதீர்த்தமுவைமூன்று
மிலகுதருமந்தரும்பாவமிடுக்கண்மருணோயிவைதீர்க்கு
மலகிலிரயுக்குவனருளாலறிவையடைந்தானடல்வேந்தா
திலகன்சானசுருதியவைசென்றுகுளித்ததிருவதனால். (௨)

வேந்தன்சானசுருதியருண்மேயவகுந்துவிளம்பியிடும்
வாய்ந்தவியாதமாணாக்கன்வதனநோக்கிமுனிவரெலா
மாய்ந்தசூதவெமக்கிவைவந்தணைந்தவாறுமரசனரு
ளேய்ந்தமுறையும்விரித்துரைப்பாயென்றாரவனுமிசைக்கின்றான். (௩)

முடவன்பிறப்பிலொருமுனிவன்மொழிவாரிரயுக்குவனெனப்பேர்
நடவுஞ்சகட்டின்மிசைதிரிவனம்பன்கந்தமாதனத்தின
மடனிலறிவன்றவமுஞற்றிவாழ்நாள்வரம்புகடந்தமர்வான்
றடமாநதிகண்முதற்றீர்த்தந்தான்சென்றாடுந்தகையில்லான். (௪)

சொற்றமுனிவன்கதிர்விலகிச்சூழுங்கந்தமாதனத்தின்
முற்றுவேனிலைவகையாய்முழங்குதழலின்வெளிதன்னி
லூற்றபுனலின்மழைபனிநாளுறுநோன்பியற்றியுடம்பெல்லாம்
வற்றிச்சொறிகொண்டெழுந்தினவுமாறவகிராவாணுகிர்வாளால. (௫)

அடங்காதெனினுங்கண்டுயையைவாய்வேட்கையடங்கிடுவான்
முடங்காலெனினுமொருபொழுதுமுயலுநோன்புமுடங்கலிலா
னுடம்பாஞ்சுமையிற்சிறிதுசிறிதொழிந்ததொழிகவென்பான்போற்
சடம்பாய்குருதித்துளிபரம்பததளிர்க்கைநகங்கொண்டுரிஞ்சிடுவான். (௬)

ஈரைம்பொறியினொன்றினிடரில்லேமேனையொன்பஃதுந்
நீரிலடையுமின்பமெனச்சிந்தைகளிக்குமஃதன்றிப்
பாரிலுரைக்கும்பங்குவெனும்பழியுட்கருதான்படர்யமுனை
நாரங்கங்கைகயைமூன்றுநண்ணிக்குளிக்குநசையுற்றான். (௭)

புன்மைநிலையினினித்தனக்குப்போய்வந்துழலும்புலையாட
லின்மைதெரிப்பான்போக்குவரவின்றியிருப்பானிருந்தளப்பான்
சென்மமுடவன்யானதிகள்சேயவுருளிற்செலவரிதா
லின்மைகடியுந்தவவலியாலழைப்பனவற்றையெனத்துணிந்தான். (௮)

ஆர்க்குமரியத்தவமுடையானம்மூவாறுமடுக்கலின்பா
லீர்க்குங்கருத்தான்குணதிசைபார்த்திருந்தோர்மனுவையெண்கொண்டான்
பார்க்குமனவிற்பார்கிழித்துப்பணிநாடொருவிப்பவப்பொதும்பர்
வேர்க்கணைகழுநதிமூன்றுமேயவவன்பால்விரைவோடும். (௯)

குறுகிமுனிவனுளங்குளிரக்குளிர்நுண்டிவலைமிசைவிசிறி
மறுகுமனந்தீர்மாதவநின்மனுவின்வலியால்வந்தடைந்தேம்
பெறுகவேண்டுங்காரியநீபேசென்றிடலும்பெருந்தவத்திற்
றறுகண்மிகுந்தோன்விழித்தெதிரியுந்தரங்கநதிகடமைக்கண்டான். (௧௦)

கதிகளுணர்ந்தோன்கண்டுருகிக்காதல்பெருகிக்களிசிறப்ப
நதிகளவற்றிற்கருக்கியநீர்நல்கிவேண்டும்பலிநயந்தான்
மதிகொளுலகிலலகுபடாவாழ்வின்மலிந்தமாண்பதனா
லதிகரவருமன்புடையாரளிக்குஞ்சிறிதுமுவப்பாரால். (௧௧)

பூசையிழைத்தபின்முனிவன்புகல்வான்யமுனைபுனற்கங்கை
யாசையலைகுமலைக்கயையெனறறையுஞ்சலங்காளசலமிதில்
வாசமபுரிமினென்றுரான்றமண்ணீரகழ்ந்துவருமிடத்தின
வீசும்புனலைநும்பெயரால்விளம்பக்கடவதுலகென்றான். (௧௨)

இன்பங்குலவுநதிமூன்றுமிசைந்துகரந்தவிமையவரை
மின்பங்கதனைத்தனதுபங்காவிரும்பும்பங்குமெயமமுனிவன்
றன்பங்கமிலாததவவலியாற்சார்ந்தநதிநீர்தனிலாடு
மன்பங்குடையாரருளுடையாராவாராகாரறிவில்லார். (௧௩)

மக்களுருவங்கொடுதோன்றிமறைந்தநதிகளன்றுமுதன்
மிக்கவுலகம்புகழ்ந்தேத்தவிளக்கம்படைத்தவவற்றின்பாற்
புக்குமகிழ்வுற்றினிதாடுப்புனிதமனிதர்க்கதுபோழ்தே
துக்கமகனும்பிறவிமருடோன்றுதொன்றுஞ்சுடர்ஞானம். (௧௪)

இருடீரியக்குவன்றானுமியம்புந்தனதுமந்திரத்தின்
கருடாவலியால்வரவழைத்தகாமர்யமுனைமுதன்மூன்றும்
வெருடாமனததால்வேறுதவம்விட்டுப்படிந்துவிருப்பினொடு
மருடாகந்தமாதனததில்வைகுற்றிருந்தான்மற்றநாள். (௧௫)

சானசுருதியபிதானந்தரணிநிருபன்புத்திரன்சே
யானமுறையாற்பவுத்திரனெனறறையும்பெயருமடைந்துள்ளான
தீனர்விழைவுதீர்க்கையினாற்சிரத்தாதேயனெனப்பட்டான்
மேனிதழைப்பயட்டுதவிவெகுபாக்கியனுந்தானானான். (௧௬)

பரிசிலாளர்வயினளவில்பரிவுங்கொடையுமபயின்றுடைய
வரசன்படிமையதுபுனையாயறவோரனையானவனொரு
முரசுமுழங்குங்கொடிவீதிமூரிநகரம்பெருநடவை
தரைசெய்மூதூர்பஃறேயஞ்சதுக்கமுதலதலமெல்லாம். (௧௭)

பருப்பின்பொருப்புநெய்ந்நதியும்பழத்தோடலம்பும்பாற்கடலும்
விருப்பினறியகறிவகையும்வேண்டும்பிறவுமுளவாக்கிக்
கருப்புக்குறையுமுயிர்வளர்க்குங்காதலனைபோற்கரைந்தன்பாற்
றிருப்பிநிறுவிவருவார்க்குஞ்செல்வாரெவர்க்குஞ்சிறந்தளிப்பான். (௧௮)

அன்னமிலதேலாருயிர்கட்கசைவின்றாகுமாகையினாற்
றுன்னுமடிசிறருஞ்சானசுருதி[illegible]வையுந்தொடுத்தியக்குந்
தன்னோர்வடிவந்தானாகுந்தானத்துயர்நததகைநாடி
மன்னுநரருமாதவருமவானோரெவருமகிழ்ந்தாரால். (௧௯)

வே று.

நாளுமகிழுமமரர்முனிவர்ஞாலவனிதைநலனுணர்ந்
தோளுமரசர்மவுலியிடறுசுடர்கொள்வீரவனைகழற்
றாளுமுடையவரசுசானசுருதிதன்னையன்பினா
லாளுமுறைமைகருதியெகினமாயினார்களனைவரும். (உ0)

அஞ்சவுருவமாகிவிண்செலளவிறிங்கண்மாலைபோற்
றஞ்சவமரர்முனிவர்நீடுதகுதிமருவுதொகுதியின்
புஞ்சமறிஞர்பரவுசானசுருதிவீசுபுகழ்மைபோல்
விஞ்சும்வேனிலிரவிலுன்ணிவிண்பரந்துபோனதால். (உக)

மேகமுட்டுமேனிலைக்கண்வெண்பளிங்கினீடுசா
லைகமுற்றிருந்தசானசுருதிமீதெழுந்துதாம்
போகலுற்றபோதுபின்செல்புள்ளிலொன்றுமுன்புகுந்
தோகைமிக்கவெகினமொன்றைநாடியொன்றுசொல்லுமால். (உஉ)

நிற்றிநிற்றிநீபலாக்கநீடுசேர்மராளகா
வெற்றியோடுவிரசுசானசுருதியிந்தமேனிலத்
துற்றுளானிவவாறுதானுணர்ந்திலாய்கொலுள்ளமேற்
சற்றுமெண்ணிலாமலந்தர்தம்மிலேகுகின்றியால். (உங)

இரவிகோடிசிறுகமல்கியெங்கணும்பரந்துபோய்ப்
பிரமலோகமுழுதுமுண்டுபெருகுசோதிநிருபனைப்
பரவிடாதுபோதனன்றியன்றுநிந்தைபண்ணினால்
விரவுதோகைவேவவீசும்வேந்தனீடுகொந்தியே. (உச)

என்னலோடுமெகினராசனிஃதுரைக்குமோதிமந்
தன்னைநாடியழகிதமமசாற்றும்வாய்மைசாலவு
முன்னையோரினுனைநேர்முதுக்குறைந்துளாரில
ரென்னையோமருட்கைநின்னையெம்மைவிட்டடைந்ததே. (உரு)

சிறியனுண்மைதெளிகிலாததிண்சிலைக்கொணெஞ்சினான்
வறிதிலூனுயிர்த்துலாவுபுல்லுணாதமானனா
னறிவிலாதமருளன்மூகனவலன்வஞ்சன்யாரினும்
வெறியனென்கொலிவனையெண்ணிவீணின்மேன்மைகூறினாய். (உசா)

அரியதூயவறனினுண்மையதனிலொன்றுமறிவதற்
குரியனல்லன்முனிரயுக்குவன்பிறங்குமுலகினமேற்
பெரியனென்னவமலஞானவீடுமேவுபேறிலான்
றிரியுமட்புனைந்தபாவைபோன்மயங்குசெய்கையான். (உஎ)

அந்தவந்தணாளன்மெய்யகண்டசோதியமருஞ்
சிந்தைகோடலரிதுவானுடுக்குழாந்தெரிக்கினு
மிந்தமண்ணெழுந்ததூளியெண்ணினாலுமிருடிதான்
றந்ததானதருமமேருவெண்படாததகையதால். (உஅ)

இறையினீடுமிவணிழைத்ததருமம்யாவுமீறுறும்
பிறையினோடுகட்டும்வேணிசரணிலன்புபெற்றசீர்
மறையினோன்மனத்திலுண்மைஞானமென்றுமாய்வுறு
தறையநாடின்முனிரயுக்குவன்றன்மேன்மையறைதிநீ. (உகூ)

எற்பிறங்குமிரவிகிற்கயார்பழிச்சுவார்விளக்
கற்பமன்னனிவனைநீவழுத்தல்செய்யிலறிஞர்தா
நிற்பழிப்பர்விடுதியோகவாணர்தாமுங்கரிலா
னுற்பவத்தின்முடவனுகியுறையுமந்தவுறுவர்கோன். (கூ0)

இரைத்தெழுந்துலாவியோடும்யமுனைகங்கைகயைகடாந்
திரைக்கரங்குவிததெழுந்துசெய்யகந்தமாதன
வரைக்கண்வைகுமாறுமுன்னமற்றவன்றன்வாயினு
லுரைக்குமந்திரத்தின்வன்மையாலழைத்தவுயர்பினுன். (கூக)

புவனமூன்றினுயிர்கள்செய்தபுண்ணியத்தின்வகையெலாந்
தவநிரம்புமுனிரயிக்குவன்புரிந்ததவறிலா
நவநயங்கொடருமராசியுள்ளடங்குநம்பிரான்
சிவனகண்டபூரணத்திலுலகடங்குசெய்கைபோல். (கூஉ)

யாதும்வாயிசைக்குமென்னிவின்பமொன்றுமெய்திடாப்
பேதைமன்னனின்மைமேன்மைபேசியென்கொல்பெறுதிநீ
மூதுணார்ந்தமுனிரயுக்குவன்சிறந்தமுதன்மையே
யோதுகென்னவோதிமிக்கவோதிமமமொழிந்ததால். (கூகூ)

இன்னவாறுதலைமைசாலுமெகினியம்பிநின்றதன்
பின்னரந்தமுனிவர்தேவர்பிரமலோகமேவினர்
சொன்னவாய்மைகேள்விபுக்கபோதுசானசுருதியு
மன்னமோதுமன்னமாதவன்கணன்பனுயினுன். (கூச)

ஆகநொந்தழுங்கிவாடிமீளமீளவயர்வொடும்
போகியென்னவிண்டூமூச்செறிந்துநின்றுபுட்சொலும்
யோகியானமுனிரயுக்குவன்பதத்தையுறமிகும்
வேகியாகியிரவுமுற்றும்விழியுறங்கவின்றியே. (கூரு)

அள்ளல்வாரியகிலமாளுமரசனுகுமெம்மையிங்
கெள்ளிநின்றுமுடவனுகுமிருபிறப்பினவனையே
புள்ளினங்கடாமுமையபோற்றிசைப்பவாதலால்
விள்ளுவேனிவவுலகுகாவல்விடுவனில்லின்வேட்கையே. (கூசு)

முடவனுனமுனியையெய்திமுந்தைஞானமடையவே
கடவனென்றுநெடியவேலைகையினீந்துவார்கள்போற்
படரிருட்கழித்தெழுச்சிபாடுவார்கள்பாடல்கேட்
டெல்வருந்திஞேரின்மெல்லவுற்றெழுந்துபின்னரே. (கூஎ)

மாதலிக்குவலவனுகும்வன்மைசாலும்வலவனைக்
காதலிற்கரைந்துமைந்தகடிதுதேரிலேறிநீ
வீதலிக்குவேடனக்குநல்குமுக்கண்மெய்ப்பொருண்
மூதலிக்குமுனிவர்மேவுபன்னசாலைமுழுவதும். (கூஅ)

ஆலயங்கள்வரைமுடிக்கரந்தணுளர்வாழுமூர்
வாலுகந்திரண்டகுன்றமானுலாவுகானக
மேலையோர்கள்பிறரிருக்கைவிரிதரங்கநதியிடஞ்
சோலையெங்குமிடைவிடாதுதுணைவிஞேடுதேடியே. (கூகூ)

பங்குவாயோர்பண்டிமீதுதிரியுமிக்கபடிமையா
னங்கமேயபிரமமன்னவறிவனெண்ணிலறனுளான்
றங்கஞானமுனிரயுக்குவன்பிறங்குதூய்மையா
னிங்குளானெனத்தெரிந்துவருதிபோதியென்றனன். (௪0)

சூதனுடியரசன்வாய்மைதுண்ணெனக்கொடிஞ்சியின்
மீதுகொண்டுதேடியெங்குமெய்தளர்ந்தொர்வைகரூன்
மோதுசீதவேலைசூழ்முழங்குகந்தமாதனச்
சோதிவெற்பிலெய்தினனம்முனியிருந்தசூழல்வாய். (௪௧)

உருடையூடுதிரியும்பருணர்வகன்றபிரமமென்
றருடயங்குமிறைவனேதுமமலமேனியிஃதெனுப்
பொருடயங்கும்வலவனுடியுலகுசெய்தபுண்ணியம்
வருடைதங்குகந்தமாதனக்கண்வைகல்செய்யுமால். (௪௨)

எனநினைந்துவிழிகுளிர்ப்பவின்பமோடுகண்டுதான்
முனிரயுக்குவன்றன்முன்புசென்றுபோக்கின்முண்டகக்
கனைகழற்பணிந்துபோற்றிவினயமோடுகாதலாற்
பனவநின்னைநாமமென்கொல்பகருவார்கள்பாருளார். (௪௩)

போற்றிவைகுதருமம்யாதுபுகலுகென்னமாதவன்
சாற்றுவார்களெனைரயுக்குவன்சயுக்குவனெனுத்
தோற்றுபாரினோர்களென்றுசொல்லினன்குறிப்பினு
லேற்றபாகனினிதுகூறியிருடியெண்ணமெண்ணுவான். (௪௪)

மனைநடாத்துநெறியினுண்டுமாண்பொருட்கண்வாஞ்சையிவ்
வனைநடாத்துமருளின்மாதவற்கெனுவறிந்துதேர்
தனைநடாத்திவலவன்வல்லைசார்ந்துமுன்புதன்னையவ்
வினைநடாத்துவேந்தனோடுசெயலெலாம்விளம்பினன். (௪௫)

கூறுசூதன்வாய்மைநெஞ்சுகொண்டுவேந்துகோவுமங்
காறுநூறுகோவும்வாவுமாடல்வாசிநீடுமோ
ரேறுதேருமேமபாரமொன்றுமிந்தமூன்றொடு
மூறுகாதலோடும்வல்லையுறுவர்கோனையுற்றனன். (௪௬)

உற்றிறைஞ்சிமுனிரயுக்குவன்பதத்திலுவகையாய்
மற்றைமூன்றுவகையுமுன்னர்வைத்திவற்றைவாங்கிநீ
யிற்றைவைகலிருளகற்றியென்னையாளுகென்றனன்
சொற்றவாய்மைகேட்டிலிங்கிதுனைவினோடுசொல்லுவான். (௪௭)

ஈறுவென்றளப்பினுளிருக்குமிங்கெனில்லமிப்
பேறுகொண்டுநிறையுறுதுபேசவேண்டின்மற்றித
னூறுகொண்டதொகையுமற்பமென்றுவேந்தைநோக்கியே
தேறுமுண்மைமுனிரயுக்குவன்பரிந்துசெப்பினன். (௪௮)

பாவின்வேலைதிவலையொன்றுபடவகன்றுதிரையொழிந்
தேனுணர்வின்பவாரியளறுநீங்கவில்லெனிற்
சேலுலாவுகடலுடுத்தசெகதலப்பொருட்களாற்
சாலுமோனமுனிவர்சிந்தைதானிறைக்கலாகுமோ. (௪௯)

கழைகொள்சாறுநிம்பநெட்டிலைக்கொள்வாரிகாஞ்சிரம்
பழம்வருக்கையுதவுமிக்கபழமரங்கொள்பாவையா
மிழைகொளேமகாட்டரம்பையென்னுமங்கையாயினும்
விழைவதில்லையாயின்மேருவெற்புமற்பமாகுமால். (ருo)

மாடியந்தயங்குமார்பின்மன்னன்மீண்மெற்றிவை
கோடிகோடலொழிதிநீகொடுக்குமின்பபூரண
வீடிலாதமெய்ப்பொருட்குவிலையிதன்றுன்மெய்ப்பதஞ்
சூடியுண்மையருள்புரிந்துதொண்டுகொள்ளுகென்றனன. (ருக)

பங்குவாயமுனிவிளுவியரசன்வாய்மைபரிவிறைற்
றங்குமில்லின்வாழ்வுபாவதருமமென்னுமிவைகளி
லிங்கியாவரநெஞ்சுதூய்மையெய்துவாாகளவாகளே
யங்கண்ஞானநிலைமைசேரவருகராகுமவர்கடாம். (ருஉ)

இறைவநின்கணிற்கணிச்சையில்லையேனுமிருவினைத்
துறையகன்றிலாயிரண்டுமுற்பவங்கள்சூழுமா
வுறையும்யோகவாணரல்லரவையிரண்டுமொழிகிலா
ரறைவதுண்டுநீயடைந்ததெம்மைநம்பியாகையால். (ருங)

வாழ்பொருப்பினீடுகந்தமாதனத்தின்மன்னமூன்
றாழ்புனற்றடங்கண்மேவுமவைகடங்கணுடிநே
ரூழ்வினைத்தொடர்ச்சிசாடும்வீடுநல்குமுதவிடுஞ்
சூழ்வுபெற்றபலவுநெஞ்சுதூய்மையாகுமக்கணம். (ருச)

பின்றையுன்கணுழிவுறூவகண்டவாய்மைபிறழ்விலா
வொன்றையோதல்செய்துமென்னமன்னனுள்ளமுவகையாய்
மன்றல்வாரிசததிருக்கண்மலர்மலர்ந்துவல்லைபோ
யன்றவவாவிமூன்றுமாடியமலநெஞ்சனுயினன். (ருரு)

ஆனபின்பசும்புறூதடங்கவிண்டகன்றவச்
சானசானசுருதிவந்துதனதுஞானதேசிகன்
மோனவாய்மைமுழுதுணார்ந்தமுனிரயுக்குவன்றுணைக்
கானல்வாரிசம்பணிந்துகாதலோடுபேரசினன். (ருசு)

ஒருவராலுமடையொணுதவுணர்வுபெற்றவுறவனு
விருவராய்வினீடுசோதியிமையமங்கைநாயகன்
கருவராதகதிவழங்குகழலலாதபிறவெலா
மருவராவகண்டஞானியாயினனவவரசனே. (ருஎ)

வேறு.

இதுரயுக்குவன்கண்டமூன்றுவிநீரிறைபவுத்திரன்சென்றுதோய்ந்தாசையா,லது வெனப்படுபெங்கநீங்கிநிலாவருளையுற்றிடுந்துங்கமாண்காதைதான், முதுமறைப்பல ந்தன்றுநோனபோவிலாமுனிவிரிப்பழஞ்செஞ்சொலிங்கோதுவா, ருதுசெயிக் கொளும்பண்பிறுங்கேண்மையோருவர்பிறப்பகன்றோன்றுகாண்பார்களே. (ருஅ)

முத்தீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,ருசுசு.

கோடிதீர்த்தச்சருக்கம்.

ஆடினோர்கள்பகீரதியாதிநீர், பாடின்மாதவிர்சேகரம்பத்தனேச்
சாடிவென்றவிராமன்றனிச்சிலேக், கோடிதீர்த்தங்குடைவரடைவினல். (க)

கோசலேசன்குனிசிலேக்கோடிநீர், மாசுதீர்க்குமறத்தின்வடிவமா
யாசையெட்டுமெகிலதலங்களும், பேசுகீர்த்திநலத்திற்பிறங்குமால். (உ)

சகலசெல்வந்தனக்குநிமித்தமாய், விகலமின்றிவிளங்கிடும்வெவ்வினேப்
பகலருந்தொடர்ப்பாலனயாவையு, மகலநீத்துபசாந்தியளித்திடும். (ங)

நனவினண்ணுமிடுக்கணுநன்றிலாக், கனவுநீக்குங்களேயுங்களேயெலா
நினேவுமாத்திரம்போதுநிலேயுரு, வினேகள்யாவும்விளிந்துவிடற்கரோ. (ச)

நீர்முகந்திகழ்நீரிதுநித்தன்மே, னீர்முகந்தபிடேகநிரப்புவான்
கார்முகந்தகவினகொளிராகவன், கார்முகங்கெழுகோடியிற்கண்டதால். (ரு)

எண்ணியாதபிடேகமெம்மீசனேப், பண்ணினுனெனிற்கோசலேபாலகன்
கண்ணினீர்வரக்காதலினேதுகேன், புண்ணியந்தலேக்கொண்டபுலத்தினீர். (சு)

கூரம்பார்தனுநீ ஓருக்கொண்டலாம், வீரம்போஓமிராமன்மிதிலேசே
ரீரம்பார்விழியேந்திழைக்கள்வனே, யோரம்பாலமரேற்றுயிருண்டநாள். (எ)

பிறைகொண்மூரற்பிரமக்கொலேமருட், கறைகழீஇயகல்காதறாத்தலா
னிறைபொதும்பர்நெடுங்கந்தமாதனப்,பொறையின்மல்குபொருப்பினேமேவினன்

மேவியாயிடைமின்னிடைபாகனு, மாவிநாதனருட்குறிநாட்டியே
தேவிளம்பிறைச்சென்னியிலாட்டுவான், பூவிரைப்புனல்வேட்டெழும்புந்தியால்.

அவ்விலிங்கத்தருகினிருந்துதான், கைவிலிற்கடைகொண்டுதென்காரெழாத்
தெவ்விலிப்படிசெய்குவனென்றபோற்,குயவிலிட்டுக்குடைந்தனனமைந்தினல்.()

கீன்றபோதுகிலேசம்படைத்திலா, ளான்றபார்மகளப்பணிச்சேக்கையி
லூன்றுமாழியஞ்செங்கையுகிர்நுதி, போனறதவவிற்றலேபிலபுக்கதால். (கக)

ஆங்கிராமனகத்திடையன்பினு, லோங்குகங்கையையுன்னியச்சாபத்தை
வீங்குதோளின்வலிகொடுமீளவும், வாங்கினனவவழிவந்தெழுந்ததால். (கஉ)

பிலத்தினின்றெழும்பேரிசைக்கங்கையஞ், சலத்தினுலபிடேகமத்தாணுவி
னலத்தவேணியினண்பினிலாட்டினன், குலத்தகோசலகோமகன்றனரோ. (கங)

கார்த்தமேனியன்கைவிற்கடையினுற், பார்த்தலத்திற்பதிப்பப்படர்தலாற்
கூர்த்தமூன்றுபுவனமுங்கோடிநற், றீர்த்தமென்னச்சிறந்ததித்தீர்த்தமே. (கச)

கந்தமாதனவெற்பிற்கடிகமழ், பைந்தடப்புனல்யாவும்படிந்தபி
னிந்தமாண்புனலாடுகவென்புசேர், முந்துதீவினேமுற்றுமுடிக்குமால். (கரு)

கூனல்வார்சிலேக்கோடியந்தீர்த்தநீ, ரூனனேத்தவருற்பவந்தீர்த்தலா
லேனேநீர்களினுற்பியனில்லேயென், ருனசூதனருந்தவர்க்கோதினன். (கசு)

அரியசூதனறைவதுகேட்டலுந், திரிபிறேவிகற்பமுஞ்சேர்கிலாப்
பெரியமாதவரையம்பிறந்ததற், குரியசெய்கைவினாவியுரைசெய்வார். (கஎ)

தத்துவத்தொகையாயசயந்தன, முய்த்துருட்டுமுணர்வுடைச்சூதனே
மெய்த்தவேதவியாதன்விருப்பினால், வைத்தஞானநிதியுடைவள்ளலே. (கஅ)

ஓதுகின்றபுராணமீரொன்பதால், வேதமாண்பொருள்வேறுபடாவகை
யாதுமுண்மையியம்புகின்வாயினாற், பேதையோரிற்பிறந்ததோர்வாசகம். (ககூ)

கோவிராமன்கொடுமரக்கோடிநீர், மேவினோர்க்கிலைவேறுளநீர்களா
லாவதென்றனையம்புவியோர்பிற, வாவுநீர்குடைந்தாடுதன்மம்மரோ. (உ0)

எங்கணெஞ்சமிரங்கவிரைத்தெழு, சங்கையின்றுதுடைத்தருள்சாற்றெனாத்
துங்கமாதவச்சூதனையேத்தினா, ரங்கண்வைகுமுனிவரவரெலாம். (உக)

தொன்றுமுற்றுணர்சூதனவிற்றுவா, னன்றுசாலவுநான்மறையீரிஃ
தன்றுகேட்டனனாரதனாதியை, யின்றுகேட்டனிர்நீவிரியம்புகேன். (உஉ)

மறிகருங்கடல்சுற்றியவையமே, லெறியுமொண்புனல்யாத்திரைக்கேகுவார்
நெறியினேர்படுநீள்புனலாலயங், குறியினாடுதல்குயபிடல்வேண்டுமால். (உங)

வணங்கலாடன்மறந்தனர்போயினா, ரிணங்குநீமையின்வீடவர்க்கில்லையாம்
பணங்கொள்பாந்தளின்மேற்பயில்பாரக, வணங்குதானுமவர்தமையெள்ளுமால். ()

இக்கணக்கிலிரும்புனலாடுவார், சக்கரத்தடமாதித்தடமெலாம்
புக்குமூழ்கியபின்னைப்புயலன்னான், மிக்கவார்சிலைக்கோடிநீர்மேவுவார். (உரு)

என்னிமித்தமெனிலவற்றெஞ்சிய, புன்மையுள்ளனபோதற்பொருட்டதா
மன்னமுத்தாக்கவண்வைகலினறியே, பின்னையொல்லைபெயருதல்வேண்டுமால்.

இராமனும்முனமிப்புனன்மூழ்கியே, யிராமநாதனையாட்டியிடரொழித்
திராமலேகினன்யாரொடுமோகையா, விராமல்வேண்டுமிதுகுடைந்தோர்க்கெலாம்.

வானயாறதுமாண்பிலங்கீண்டெழீஇத், தானிலத்தில்வெளிப்படுந்நன்மையான்
ஞானதாரகாற்பிரமப்பொரு, ளானராகவனங்கிதிலாடலால். (உஅ)

சூட்டுந்திங்கட்சுடர்முடிவேணிமே, லாட்டியப்பிரமக்கொலையண்டிடா [ல்.
தோட்டுஞ்செய்கையுளங்கொண்டிராகவன், கோட்டுந்தண்சிலைக்கோடியினுக்கலா

கோலும்வார்சிலைக்கோடிப்புனல்வள, ஞாலமேலெவர்நாடிநவிற்றுவார்
மாலுமற்றிதின்மாதுலற்கொன்றத, னலடைந்தபழிவிடவாடினன. (ஙO)

கண்ணனாடினன்கஞ்சன்பழிகழீஇ, மண்ணினார்க்குவரந்தருமாறெனா
வண்ணன்மாண்புடைச்சூதனருளலு, மெண்ணின்மாதவர்யாரும்வினவுவார். (ஙக)

யாதவக்குலமின்புறத்தோன்றினோன், மாதுலக்கொலைசெய்திடவந்ததென்
னேதிடப்பழிகோடியிலுற்றதென், சூதசொற்றருளென்றனர்சொல்லுவான். (ஙஉ)

அதுவிரும்பியறிமினறவிர்காள், விதுவிரும்பும்விளங்கொளியானுளன்
யதுவிரும்புமிருங்குலவேந்தல்பேர், மதுவிரும்புமலர்த்தொடைச்சூரனே. (ஙங)

சேயவற்குத்திறல்வசுதேவனென், றூயகாளையவன்மனையாயினா
ளேயுமோரெழிற்றேவகியென்பவ, ளேதேவகன்றனயைபிற்றோன்றினாள். (ஙச)

வேறு.

ஆனகதுந்துபிதேவகியென்பாளவளோடுங்
கோனகர்போதும்போதினில்வஞ்சங்கூர்கஞ்சன்
றானகறேரின்சாரதியானான்றனைநோக்கி
வானகமீதோர்வாணியெழுந்ததுமருள்கூர. (௫௫)

கேண்மதிகஞ்சாநின்னொடுதோன்றுங்கிளர்சோதிப்
பூண்மடமாதைமைத்துனனோடும்பொற்றேரி
லாண்மையினேற்றிக்கொண்டுபடர்ந்தாயவணல்கு
மாண்மலிவீரமக்களினெட்டாமைந்தன்றான். (௫௬)

உன்னுயிர்கொள்ளும்பொய்யலமெய்யென்றுரைசெய்யத்
தன்னுயிர்காக்குந்தஞ்சம்விரும்பித்தளர்கஞ்ச
னென்னுயிர்நிற்குமிவளுயிர்போனாலெனநாடா
மின்னுயிர்கொள்வானுன்னியெழுந்தான்விரைவோடும். (௫௭)

அத்துணைகஞ்சன்றனமர்வண்ணமருள்கூறி
மைத்துனனோதுமைந்தர்களன்றேவதைசெய்வா
முத்துறழ்மூரலாவிமுடித்தென்முகிலோதித்
தத்தையளிக்கும்பாலரைநின்கைத்தருகின்றேன். (௫௮)

வஞ்சியையாவிவௌவலையென்றான்மன்றாடா
வஞ்சலைநன்றென்றம்முறைசெய்வானவரோடுங்
கஞ்சனுமீளததேரைநடாத்திக்கடிதேகி
மஞ்சிவரிஞ்சித்தன்பெருமூதூர்வந்துற்றான். (௫௯)

ஏறிருகால்சேர்தேரினிழிந்திட்டிவர்மக்கட்
பேறிருகாலுலாயிடுகோறும்பெயராமல்
வேறிருகாலினங்கவர்தம்மைவிலங்கிட்டான்
சீறிருகால்சேர்தீயவிலங்கிற்றிரிகஞ்சன். (௬0)

கார்மதமுண்டாமளவுமடங்குங்கரிபோலுங்
கூரிசைதோன்றுந்துணையுமடங்குங்குயில்போலுஞ்
சார்புயர்கண்ணன்றம்மகவாகத்தருகாறுஞ்
சேர்புகழோரிருவோருமிருந்தார்சிறைதனனில். (௬௧)

அவ்வழிநீடுந்தேவகிகேள்வனவளினுஞ்
செவ்வழியெல்லாங்கஞ்சனகையிற்செலவுய்த்தான்
வெவ்வழிநின்றான்கொன்றனனெல்லாம்விளிவுற்றா
ரிவ்வழிதானோர்மூவிருமைந்தரிதன்பின்னர். (௬௨)

கருவினிலேழாமதுதனைமாயன்கடிமாயை
குருமலிநந்தகோபனதில்லங்குறுகுற்ற
வுருவுடைரோகிணியுந்தியினுய்த்ததிவவுலகெல்லா
மருவுகருப்பம்வீழ்ந்ததுதேவகியினென்ன. (௬௩)

வெந்திறன்மாயாதேவியம்மாயன்விதிநிற்பாண்
முந்துகருப்பம்வேறயல்வைத்தபின்முகில்வண்ணன்
செந்துவர்வாயாடேவகியுந்தித்திருவாலம்
பைந்தளிருற்றான்பூண்டுதுயின்றபழக்கத்தால். (௬௪)

மாதமொர்பத்துமுற்றியபிற்றைவசுதேவன்
பேதைவயிற்றின்வந்துபிறந்தான்பிறழ்செங்கைப்
போதொருநாலுநேமியும்வாளும்பொருதண்டுஞ்
சீதநிலாவெண்சங்கமுமாகித்திகழ்கண்ணன். (சரு)

சூரியகோடிநிலாவுகிரீடச்சுடர்வீச
வேரிகுலாவும்பூவனமாலைமிளிர்தொங்கற்
பாரியதோளிற்பேரெழின்மல்கப்படியுண்ணுஞ்
சீரியவண்ணக்கண்ணனன்மேனிசிறந்தன்றே. (சசு)

தந்தவர்துன்புமன்பர்பிறப்புந்தலைசாய
வந்தருள்கண்ணன்கண்குடிகொள்ளவசுதேவன்
பைந்தொடிநங்கைதேவகியோடும்படாநீங்கி
யிந்திரைகேள்வனபேரிசைநாடியியம்புற்றான். (சஎ)

நீயுலகானயுலகுடையானுநீயேயா
லேயுநிமித்தந்துணைமுதலாகுமிறையோனே
மேயமகத்தோடப்பிரதானமவிராட்டன்றி
யாயசுராட்டுமெச்சமிராட்டுமொனே. (சஅ)

பூப்புனறீகால்வானிவைநல்கும்புவனங்கள்
கோப்பவனந்தீரநிலனைந்துங்குலையாமற்
காப்பவனீயானின்கணிவற்றின்கண்ணுகும்
யாப்பவைதநகட்குன்னுழையல்லதையார்பாலே. (சகூ)

வெங்கொலைவாளுந்தண்டமும்வில்லும்வெண்சங்கும்
தங்கியவநகைச்சீயநிகர்க்குந்தனிவீரா
வுங்கெவாகாண்பார்வையமளந்துண்டுயர்வண்ண
மிங்கிவளுந்திபுக்கமைவுற்றவிறுமபூதே. (ருo)

நாந்தகையிலலாமக்கண்முகுந்தாஞானநீ
யேந்தலைவேலைஞாலமுமவானுமெல்லாமுந்
தாந்தனிதோற்றுந்தநதையுமயாயுந்தானுயநீ
யாந்தரவநதோனெனணவுநினறுலென்சொல்கேம். (ருக)

ஐந்தமரேதிப்புஙகவநீயிங்காள்கென்று
ணந்தமர்செஙகைநாதனுமெல்லெனநகையாடி
வந்தனைகூறுந்தந்தையும்யாயுமகிழ்வெய்த
முந்தையின்ஞாலம்வாய்வழிதோன்றமொழிகுற்றான். (ருஉ)

வம்மினிராயுமையனுநீவிாமருடீர்மி
னும்மைவருததுங்கஞ்சனுயிாப்பாலுண்பான்யா
மிம்முறைவந்தேமெம்பெருமாயையையீன்றுளால்
வெம்முலைமைத்தண்கோதையசோதைவிளக்கன்னுள். (ருங)

கொய்யுமுறித்தண்கோமனநந்தகோபன்றோய்
தையலளித்தாள்பாயலிலென்னைத்தரையெல்லா
முய்யவிருத்தமாயையையீன்றுளுயர்சேக்கை
வையம்வழுத்துஞ்சீாவசுதேவாவையென்றான். (ருச)

அக்கணமப்பனுமப்படிசெய்தனனாய்பாங்கர்
வைக்குமம்மாயைகிடந்தழலுற்றனண்மாமன்றன்
மெய்க்குலமாதராழுங்குறிகாட்டும்விருப்பாள்போ
லிக்குரல்கஞ்சன்வினாயவனுற்றனனிகன்மிக்கான். (௫௫)

உற்றவணங்குடறூக்கியெடுத்தவனுயர்பாறை
யெற்றினனன்பிலன்மானமுமெண்ணிலனிதுபோழ்தின்
வெற்றிகொண்மாயைகரங்களோரெட்டினுமிளிர்தானை
பற்றிமுனிந்தவனங்கையிறுத்திதுபகர்கின்றாள். (௫௬)

தன்மதிமூடரின்முன்வருகஞ்சாதுனையாதே
நின்மதிநின்கூற்றுற்றதுவேறோர்நிலையின்க
ணன்மதியில்லாய்நாடுதியென்னாநகைமாலைப்
பொன்மதியானனவல்லியொரெல்லைபுகுந்துற்றாள். (௫௭)

ஆண்டவள்பூசையளப்பிலகொண்டருளடியார்கள்
வேண்டியநல்வரநல்கியிருந்தனள்விழைவோடு
மாண்டகைகஞ்சனுமம்மொழிகேட்டுளமயாவாகிப்
பூண்டபகைப்பொடுமுற்றனன்மற்றிதுபுரிகின்றான். (௫௮)

சீலக்கிரமச்சிந்தையில்கஞ்சன்சினமூளா
வாலக்கிரகப்பூதனைமுன்னாவளர்தானைக்
கோலக்கடியைத்தன்பகையாருயிர்கொள்வானாய்ப்
பாலக்குழுவைக்கொல்லுமினென்றான்பரிவோடும். (௫௯)

என்றிசைபித்தக்கஞ்சனிசைக்குமிசைகேளா
வன்றவணப்பேயீட்டமிழைத்துமஃதென்னாச்
சென்றுசினக்கும்பேய்களையெல்லாஞ்சிறுபோதிற்
கொன்றனனந்தகோபகுலத்திற்கோபாலன். (௬௦)

ஆனபின்னாணிரைதன்னுள்வளர்ந்தனரடன்மேவுந்
தானிகர்வெள்ளையுமாயனுமைந்தர்கடாமபல்லோ
ரூனமில்குழலொடுதேதுபுவேய்ங்குழலுயராவின்
கானமர்கற்றினமேய்த்தனர்தாஞ்சிலகாலங்கள். (௬௧)

கண்டவரின்புறராமனும்வண்டறைகாயாவின்
றண்டேனார்வண்ணனுமுள்ளநிரம்புதருக்கோடும்
பண்டையதங்கள்பழக்கமிகுத்தெழுபண்பாலே
யண்டர்குழாத்தொடவ்வாணிரைகாத்தனரவர்சின்னாள். (௬௨)

இந்நிலைவெஃகியவாடல்விழைத்தவரிருவோரு
மன்னுயர்கோகுலம்வைகினர்மாதுலன்மற்றந்நா
ளன்னவர்தம்மையுடன்கொணர்வுற்றிவணடைவாய்நீ
யென்னவுரைத்தக்கூரனையேவினனெண்ணாதான். (௬௩)

சேகுலவுள்ளக்கஞ்சன்விடுப்பத்திகழ்தெய்வக்
கோகுலமேல்க்கூரனுமேகுபுகுழலூதி
யாகுலநீக்காவாணிரைகாக்குமவர்தம்மை
மீகுலவும்பர்வியப்பவழைத்துடன்மீண்டேற்றான். (௬௪)

கடமலிமத்தக்கரியுறழ்கஞ்சன்கற்பாலே
வடமதுரைக்கண்வைத்தவர்தம்மைவந்தன்னோ
னுடனவனுற்றுக்கொண்டணைசெய்கையுரைசெய்தே
தடமணிமார்பக்கூரனடைந்தான்றனதில்லின். (௬௫)

மற்றையவைகலுச்சியதன்பின்மதில்வெற்பு
முற்றகிடங்குங்கொண்டலுறங்குமுயர்மாடப்
பொற்றெருவெங்கும்புகழ்மதுரைக்கட்பொலிவெல்லாஞ்
சுற்றுபுநோக்கினர்கண்ணனுநீலத்துகிலோனும். (௬௬)

கோலநிலாவொருகுண்டலன்மாலிவர்கோபாலர்
பாலர்குழாத்தொடுபட்டணமாண்பதுபார்க்கின்றார்
மேலவர்பேரொளியல்லதுகாண்கிலர்விரையோதி
வாலநிலாவுறழ்வாணுதனமான்விழிமடநல்லார். (௬௭)

தந்தையாதங்களைமைந்தனீனாடினர்தனுமுன்னம்
வெந்ததுமேவியதன்றியிரண்டுவிளங்காகம்
வந்ததெவவாறெனமாமதுராபுரிமறுகெல்லாஞ்
சிந்தையின்மாலொடுபின்றொடர்புற்றனர்திருவன்னார். (௬௮)

காதலினோடணைகன்றெறிகைத்துணைகாணாமுன்
னேதமில்செங்கையிலங்கியகன்றையெறிந்திட்டார்
தீதுறுபேய்த்தனமான்மிசைவுற்றிடுசெயனாடா
மாதர்கடாமிசைவுற்றனபேய்த்தனமயன்மிக்கார். (௬௯)

இடையர்தமிற்பாலாடைகவர்ந்தானிவனென்னா
வடைவுறுதம்பாலாடையளித்தாரணியாழிக்
குடையவனென்பாரங்குலியாழியொருங்கீந்தார்
தொடையவிழ்கூந்தற்றோகையர்மோகமொர்துணையின்றால். (௭0)

வேறு.

மையுருவத்திருமாயன்மடவியரைததானோக்கிவயங்குமுன்னோன்
மெய்யுருவமவர்க்குதவிவிருப்பினொடும்படர்காலைவில்லொன்றாங்க
னுய்யுமொருநிலைச்சேமத்துறைவதுகண்டோடியருளுததிபோல்வார்
வெய்யவராயவண்காவல்புரியுமவர்தமைவெருட்டிவிரைந்தெடுத்தார். (௭௧)

எடுத்தசிலைதனைநாரியேற்றவளைத்திடமுறிந்ததிரண்டாயோதை
யடுத்ததகிலாண்டமெல்லாமதுவினவிப்பலரடைந்தாராடன்மிக்கோர்
தொடுத்ததனுத்துணியிரண்டாலவர்கடனுத்துணிப்படுத்திச்சொரியுந்தான
மடுத்துலவிவாயில்பயில்வயக்குவலயாபீடமருப்பைப்பேர்த்தார். (௭௨)

உரங்கொண்மதகயமருப்பைத்திருப்புயமேற்கொண்டவர்தாமொல்லைக்கஞ்ச
னரங்கமதிற்புகுந்தனர்களவணிருக்குமல்லர்தமிலதிகரான
வரங்குலவுசாணூரமல்லனையுமுட்டிகமல்லனையுமுன்னா
விரங்குதிறற்படைமல்லரெல்லையில்லாருயிர்கவர்ந்தாரிருவர்தாமும். (௭௩)

விஞ்சுதிறலிருவர்களுமற்றதன்பினவையினடுவிளங்குமம்பொன்
மஞ்சமிசையிருந்தனர்களெதிரிருக்குமாதுலனைமதியாரங்கட்
கஞ்சனதுகளிதெரிந்துவெகுண்டெழுந்துகண்ணனவன்கால்கள்பற்றி
யெஞ்சும்வகையெடுத்துயரச்சுற்றிநிலமிசையடித்தானெவருமஞ்ச. (௭௪)

அடித்தலுந்தன்னுடல்சிதறிக்கஞ்சனுந்தென்றிசையடைந்தானவனைப்பின்னோன்
முடித்ததற்பினவற்கிளையோரெண்மரையுமுன்னவனாமுசலிவானில்
வெடித்தவுருமெனவிழுமோர்குற்றதனான்முற்றுவித்தான்வெண்சங்கங்கைப்
பிடித்தவன்பின்சிறைவிடுவித்தருள்புரிந்தான்றனைப்பயந்தபெரியோர்தம்மை. (எரு)

பின்புமதுராபுரியிற்கஞ்சனாலைப்புண்டபெருஞ்சுற்றத்தா
ரன்பிலனாங்கஞ்சனுக்கஞ்சிப்புரியைவிட்டிதுகேட்டணைந்தோர்க்கெல்லா
மின்பமொழிபலமொழிந்துதலையளிசெய்தானிரைகள்யாவுங்காக்க
மின்பிறங்கும்புயலகடுகிழிக்குங்கோவர்த்தனமேவிடுங்கையானே. (எசு)

இக்கிரமத்தியல்புரியுங்கஞ்சனிலைகுலைந்ததற்பினிருந்தநாட்டை
யுக்கிரசேனனுக்குதவிமாறனைக்காணியவணைந்தவுறுவர்தம்முள்
வக்கிரமினாரதனைமுகந்தெரிந்துமாதுலனைவதைத்தசெய்கை
யக்கிரமமென்குநர்மற்றனையபழிகழுவும்வழியறைநீயென்றான். (எஎ)

நண்பினொடுநாரினொடுநாரதன்கேட்டதற்குவிடைநவிலுகின்றா
னெண்பரமமுதலாகியொளியாகியானந்தவுருவமாகிப்
பண்புசெயல்பேருருப்பவமிறுதிபிணிவீடுபெயிலாதாழிக்
கண்படுமோதவநினக்கோர்நல்வினையுந்தீவினையுங்கலப்பதுண்டோ. (எஅ)

எனினுமிஃதுயிர்களெல்லாமிழைப்பவிழைத்திடல்வேண்டுமிராமசேதுத்
தனிலிலகுதடங்கந்தமாதனத்திற்சிவலிங்கந்தாபித்தாட்டற்
கினியபுனலிராகவன்வேட்டிராமேசன்றனக்கயற்பாரிடந்துவில்லி
னுனியதனாற்பாதாளகங்கைதனைவரவழைத்தானான்மைமிக்கான். (எகூ)

உன்றனக்குமுன்னையதாமவதாரத்திராவணனையுயிர்கொள்பாவ
மன்றகலக்கவுசலைசேயமைத்தநெடுங்கோடிதனிலாடினீயு
மின்றொழியும்பழியிஃதென்றியம்பினனமால்விடைமுனிவர்க்கீந்தப்போதே
சென்றனனச்சேதுவினின்மாதுலனைக்கொன்றபவந்தீர்க்குமாற்றால். (அ0)

கோடியிடத்தினிதியற்றிச்சங்கற்பங்கவிகைபலகோடிநல்கி
யாடியடன்மாமனுயிரழித்தவினைக்கரையேறியதற்குப்பின்னர்
நாடியசீருடைராமநாதனிருபதந்தொழுதுநந்தகோபன்
றேடியநற்றிருவனையான்வடமதுரையிடம்புகுந்தான்சிறப்பினோடும். (அக)

வேறு.

மெய்த்தவத்தினிர்காளிதுநத்தினோன்வெற்றியிற்கிளர்மாமனையட்டவா
றித்தகைத்துயர்கோடியெனச்சொனீரிச்சைவைத்திஃதேவர்நவிற்றுவா
ரத்தவர்க்கிலைவேதியரைக்கொறீதற்பினுற்றிதிலாடியமுத்தாபான்
முத்தொழிற்குரியோருமுவப்பர்தாமுச்சகத்தினும்வேறிலையொப்பதே. (அஉ)

கோடிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,சுசஅ.

சாத்தியாமிர்ததீர்த்தச்சருக்கம்.

ஒளிவளர்சூதனுவப்பினின்மீளவுமுரைசெய்வான்
றெளிவளர்மாதவிர்கேண்மினிர்கோசலைசேய்நல்குந்
தளிவளர்கோடிதடம்படிவுற்றிடுதெக்கோர்சென்
றளிவளர்சாத்தியவாரமுதத்தடமதுதோய்வார். (க)

ஏத்தியனன்னீரிங்கிதின்மூழ்கினரிடர்வஞ்ச
நீத்தியல்கூருநல்லறம்யாவுநிலைசெய்யு
மேத்தியமாக்கும்புந்தியுமன்னோவிழைவெல்லாஞ்
சாத்தியமாக்குஞ்சாத்தியதீர்த்தத்தடமம்மா. (உ)

ஆர்கெழுசாத்தியவாவியின்மூழ்கிமெறமுள்ளோர்
சேர்கதிவேள்விகள்செய்தவர்செய்தவாசோகில்லார்
போர்கெழுமைம்புலனோடுபுறந்தருபுலமிக்கோர்
யார்கதியாயினுமிப்புனலாழ்கதியிணையாகா. (ங)

தானிகர்சாத்தியவாவியினீள்புனறரைமேல்யார்
மேனியிலுற்றதுமற்றதுபற்றியவினைதீரு
மானதடத்தினிலகமருடத்துடனுடுற்றோர்
மானிலைபுக்குயாமேதகுமாண்புடன்வதிவாரே. (ச)

முற்பருவத்திடைதீவினைமுற்றினர்மூப்பெய்தும்
பிற்பருவத்ததுநீக்கநினைந்ததுபிழையோரா
யற்புறசாத்தியவாவியின்மூழ்கிடினருணன்குழ்
புற்பனிபோல்வினைநீங்கிடுமையுறல்பொருளன்றால். (டு)

வன்பவநீக்குவர்சாத்தியநீரின்மகிழ்ந்தாழவா
ரென்பதில்வைகிடுமெத்துணையதுணையாண்டெல்லை
மின்பயில்பஙகிறைமெய்ப்பரமேவுவாவினைசாடிப்
புன்படர்கஙகுறுரங்தெழுசெங்கதிர்போல்வாரால். (சு)

வம்பவிழ்பூந்தொடைவேந்துபுரூரவாவென்பான்
றம்புருசாபமகற்றியவிப்புனறோய்ந்தங்கா
ளும்பரின்மேவுமுருப்பசிநீக்கமொழிந்துய்ந்தா
னம்புவிமேலிதின்மேதகுசால்புடையறலுண்டோ. (எ)

ஈங்கிதுகூறியசூதனைமாதவரெல்லோரு
மோங்கியசூர்ப்பெணுருப்பசிமணமகனுலகாள்வோ
னாங்குயர்தும்புருசாபமணைந்ததெனவையாவும்
யாங்களுளங்கொளுமாறருள்செய்குதியென்றார்கள். (அ)

அன்றொர்புரூரவாவெனுமன்னவனமரேசன்
வன்றிறலாண்மையுமந்திரிவாழ்வுமரீஇயுள்ளான்
வென்றிகொள்வேள்வியுமெண்ணிலவீகையும்வினைமுற்றிப்
பொன்றிகழ்பூமியரேத்தமண்ணுபுரந்துற்றான். (கூ)

செருப்பயின்மொய்ம்பிணையேதுணையாவெறிலையாடைப்
பொருப்புறுபூண்முலைமண்மகடோளிணைபுணர்காலை
யுருப்பசிமித்திராவருணன்புகலுயர்சாப
நெருப்பில்வெதும்பினள்சேணிலநீத்தனணிலனுற்றாள். (௧௦)

வேறு.

ஊண்டகுமமுதத்தீஞ்சொலுருப்பசிவிருப்பின்மேவி
மாண்டகுபுரூரவாவின்மாநகர்மருங்கோர்காவிற்
காண்டகுவேழவில்லிகாகளங்கறங்குமாபோற்
பாண்டகுவீணையேற்றிப்பாடினாள்பவளவாயால். (௧௧)

மாடகமுறுக்கியாழ்
தாடகச்செவவிநாற்றித்தந்திரித்தளர்வுநீக்கிப்
பாடகப்பதுமமென்றாட்பாசிழைபாடலுற்றாள்
கூடகம்புக்கவாவிக்குழுவெலாஙகுழையவுள்ளம். (௧௨)

மண்டியபுள்ளுமாவுமருங்குறீஇமயங்கிச்சோரத்
தண்டளிர்ப்பொதுளப்பட்டதருக்குலந்தயஙகுமாலைப்
பண்டருவீணைவாங்கிப்பாடுவாள்பண்டுசேணி
னுண்டவாரமுதைமீளவுமிழ்ந்திடுவாளையொததாள். (௧௩)

வெவவிசையங்கூர்பானுமேனியுங்குளிரமெல்லென்
றீஙவிசையங்கூர்தீஞ்சொலேந்திழைபாடலோடுந்
தெவ்விசைநாடுகொண்டசேனைகாவலர்மாற்றம்போ
லவ்விசைபுரூரவாவினஞ்செவியுற்றதங்கண். (௧௪)

நல்வழியான்பாற்பெய்தநறுமதுத்தாரைபோலச்
செல்வமார்களிப்பினீடுசெவிததுணைபுக்கபாடன்
மல்வளர்புயப்புரூரவாவெனுமன்னன்கேட்டச்
சொல்வழிமடவாசூழத்துரகமேறகொண்டுபோந்தான். (௧௫)

போனபின்புரூரவாவப்பொருசிலைப்புரூரததானைக்
கானுறுகாவில்வாழுநகளிமயிற்பெடையிறகாணூஉ
வானசீர்த்தாரமாநீயாகிலாதாரமெய்தி
யானுயிர்பிழைப்பனங்காயென்றுபின்னிரந்துநின்றான். (௧௬)

அன்னவளதனைக்கேளாவாவல்கொண்டழுங்கிததானு
மன்னவர்மவுலியன்றாய்வழங்கியமாற்றநன்றா
லென்னுளங்கேதந்தீரவெனக்கொர்சஙகேதஞ்சொன்னா
லுன்னுடைமனைவியாவலுண்மையீதெனவுரைததாள். (௧௭)

தரணிகாவலனுநன்றேதையலாய்சாற்றுகென்றான்
புரணவாட்கணணிசொல்வாள்புதல்வராந்தகரிரண்டு
மரணமாயளிப்பாய்மிச்சிலளித்திடாயன்றியென்றுந்
திரணெடுங்குறங்கிலாடைதீர்ந்தியான்றெரியநில்லாய். (௧௮)

சொல்லுமிம்மூன்றுஞ்செய்தாற்றுப்புத்துப்பாக்கித்தோன்றா
வில்லுனக்காவலென்றாளிறைவனுமினிதேயென்றா
வல்லுறழ்நறுமென்கூந்தலந்துவராம்பற்செவவாய்
வல்லுறழ்முலையினாளைமனைவயிற்கொண்டுசென்றான. (௧௯)

கிளர்மனைநீங்கிமன்னன்கிஞ்சுகவிதழியோடு
மளகையுற்றெறிநீர்வாணியதன்கரையன்னமாடுந்
தளமலிமலர்நீர்வாவிச்சயித்திரரதமென்றோதும்
வளமலிவனத்துட்புக்கான்மாரன்மேல்வயிரமிக்கான். (௨0)

அடிபயில்சிலம்புவம்பிலணிந்தனிர்வம்பையங்கோதா
வொடிவுறுமருங்குலென்பதுணர்ந்தனன்போலநீக்கிக்
கடிகமழ்கொங்கைபுல்லிக்கலந்தவளோடுமுற்றான்
முடிமிசையொன்றுகொண்டமூவிருபஃதாண்டங்கண். (௨௧)

ஒக்கலுமும்பர்நாடுமுருப்பசிமறந்துவிண்ணோர்
மக்களிற்சிறியரென்பாண்மன்புயமணித்தூண்செய்த
மிக்கசீர்ப்பாவையாகிவிலங்கன்மேன்மயிலாய்வேந்தன்
றக்கதார்மார்பினுளுந்தானுடன்றழுவியுற்றாள். (௨௨)

வண்ணவேற்புரூரவாவாமன்னனோடிணங்கிமண்மே
னண்ணுமிந்நாளின்முன்னோன்முகன்றந்தைநல்கு
முண்ணமுதுடையதேவருருருப்பசியென்றோதும்
பெண்ணமுதனைவெஃகிப்பெரும்பசியுழந்ததன்றே. (௨௩)

இந்திரனூரேர்செய்வாணியல்விசுவாவசுப்பேர்க்
கந்தருவன்றானின்னோர்கண்டுயில்பாயலெய்திச்
செந்திருப்பசிநீர்காட்சித்திகழுருப்பசிமாடுற்ற
வுந்துதளிரண்டிலொன்றையொல்லைகொண்டும்பருற்றான். (௨௪)

உரங்கொடுபெற்றியீர்ப்பவுதளனுமதலைகூப்பிட்
டிரங்கியததனைக்கேளாவேந்திழையேம்பலித்தென்
வரம்பெறுமகற்கொண்டாரோவானிடைப்படர்வார்மற்றூர்
பரம்புகற்பாலேனிங்கென்பாலனைவிடுத்தற்கென்றாள். (௨௫)

வள்ளிழைமாற்றங்கேட்டமன்னவன்மங்கையெம்மை
நள்ளிருளாடல்செய்யினக்கணுக்காண்பளென்று
வுள்ளமேலமைந்தான்மற்றையுதண்மகவினையுந்தூக்கித்
துள்ளிடக்கொண்டுபோனார்சூழிசைத்தலைவர்விண்மேல். (௨௬)

கரவுசால்கள்வர்கொண்டார்கான்முளையிரண்டுமேந்தோ
வுரவுசாலரணமாவாரொருவருங்காணேனென்று
வரவுநேரல்குல்வல்லியரற்றலுமாற்றானண்ண
லிரவெனுமுடுக்கைபெற்றானென்னவாளேந்திநேர்ந்தான். (௨௭)

பட்டிகர்போகல்போகல்பான்மைகூர்மக்கடம்மை
விட்டனிர்போமினென்னுமிடலொடுதொடரும்போழ்தி
லெட்டிசைவீணைவல்லோரேவலாலிருள்விண்டோடச்
சட்டெனவெழுந்ததாங்கோர்தயங்கொளிமின்னுத்தானே. (௨௮)

சம்பைசூழ்விளக்கந்தன்னுட்டையலாடனதுகேள்வன்
பைம்பொனீளறுவைநீத்தபடிவினைத்தெரியப்பார்த்தா
ளும்பர்சேரிசைவல்லோருமுதளிரண்டும்பர்விட்டுத்
தம்பதியடைந்தார்சொன்னசபதமுந்தவிர்ந்ததன்றே. (௨௯)

அத்துணையகன்றுபோனாளாயிழையவளிகாப்போன்
மைத்துணையோடுமீண்டுமணங்கமழுமளிநாப்பண்
பைத்துணையல்குற்காணான்பருவரலுழந்துநீங்காப்
பித்துணர்ந்துடுக்கையின்றிப்பேயரினுழிதர்கிற்பான். (கூ0)

இருநிலந்தன்னிற்றீராவிடும்பைகொண்டலைவானோர்நாட்
குருநிலந்தன்னிலுற்றான்குளிர்மலரோடைதன்னுண
மருணிலவோதிநால்வர்வானவர்மகளிரோடு
மூருநிலவெழில்கூர்தெய்வவுருப்பசியாடல்கண்டான். (கூக)

பூவையைப்புணர்ந்துகண்ணுற்புரூரவாவாவாபொன்னம்
பாவைநேர்பவளச்செவ்வாய்ப்பால்வளாய்பசும்பொற்றோகாய்
மேவியங்குறையாதென்னைவிட்டுநீபோந்ததென்னோ
தீவினையிழைத்தாயென்றூச்சிந்தைநொந்தழைத்தான்பல்கால். (கூஉ)

காரிகைகேட்டுவீணைகழறலையொன்றுநின்பா
லேரியல்கருப்பமுற்றேனீரைந்துதிங்கட்பின்னர்ச்
சேரிவணறததின்சானறசேயுனக்குளதாம்பின்ன
ரோரிரவணேவேனுன்னையுள்ளலைபோதியென்றாள். (கூந)

அண்ணறனகரம்புக்கானாயிழைதோழிமார்தந்
தண்ணளிவதனநோக்கித்தையலீர்சார்ந்தவேந்த
னெண்ணியவேடங்காட்டுமென்றெடுபென்றளின்ப
நண்ணிவீற்றிருந்தான்யானுநண்புகொண்டணைந்தேனென்றாள். (கூச)

சேடியர்கேட்டெமக்குச்சேயிழாய்வேண்டுஞ்செம்ம
லோடினிதுறைவதென்றூருற்பவமாகும்வேலை
நாடியவவரசன்மீண்டுநண்ணினனங்கணங்கை
வாடில்சீராயுவென்னுமகப்பயந்தவன்கையீந்தாள். (கூரு)

அளித்தபின்மன்னனேடுமென்றிராவொன்றுமேவிக்
களித்தனண்மகவோரைந்துகாட்டிடுங்கருப்பமுற்றாள்
விளித்தனள்வேந்தையென்மேல்விருப்பினல்வீணைவல்லோா
தெளித்தநல்வரங்களீவார்சென்றவர்ச்சோதியென்றாள். (கூசா)

கேட்டஃதிறைவன்வல்லேகின்னரர்தம்மின்மிக்கோர்
மாட்டணைந்திறைஞ்சியானேர்வரங்கொளவந்தேனும்பா
லீட்டமொண்செல்வமிக்கேனெழிலுருப்பசியோடென்றுங்
கூட்டுறீஇயிருத்தல்வேட்டேன்கொடுத்தருள்செய்மினென்றான். (கூஎ)

அனையவரதனையீவாராரழற்றாலி * யொன்று
தனையவன்பாணிநல்கித்தார்கமழ்மார்பகேண்மோ
வினையதைமூன்றுகூறிட்டெச்சநீயிழைத்திட்டாயே
லுனையகன்றொழிதல்செய்யாளுருப்பசியென்றுமென்றார். (கூஅ)

வாங்கியதழலைமீண்டுவருமவன்வனத்தினுப்ப
ணுங்கொருநினைவுநேர்ந்தானற்புதமந்தோவந்தோ
யாங்கருத்திழந்தேம்வாளாவெமக்குருப்பசிவந்தெய்தா
ளோங்கழற்றாலிதன்னாலுறும்பயனென்றுமின்றால். (கூகூ)

---

* தாலி—மட்பாத்திரம்.

சுடுங்கனலிதனைவீணைசுமப்பதென்னென்றியாரு
நடுங்குறுகாட்டில்வைத்துநரபதிநகரிற்போனான்
கடுங்கனற்றாலியன்னாள்கழுத்தணிதாலியாகிக்
கொடுங்குழையவள்சேர்நாடுகொடுத்திடுங்கொள்கைதேரான். (௪0)

காவலன்காதனீடிக்கண்படான்கங்குனாப்ப
ணோவிலாதென்றுநங்கையுருப்பசியுலகஞ்சேரத்
தாவில்சீர்வீணைவல்லோர்தருந்தழற்றாலிதன்னை
யாவரும்வெருவுங்காட்டிலிருத்தினேமென்றுநேடி. (௪௧)

அந்நிலையெழுந்துபோகியடவியுளதனைக்காணான்
வன்னியுட்பொதியோர்போதிமற்றவணிற்பக்கண்டா
னின்னதாயினதாலந்தவெரியுநற்றாலியிதனை
நன்னகர்நாங்கொண்டேகிநலங்கெழுபலகையாக்கி. (௪௨)

வெங்கனலெழுப்பிச்செய்தும்வேள்வியென்றெண்ணிவேந்த
னங்குலியாறுநான்காலரணிசெய்தழலுண்டாக்கிப்
பங்கொருமூன்றுபண்ணிப்பாய்தழலவற்றினெல்லாஞ்
சங்கையின்மகங்கடந்தான்சதுர்மறைவிதிவழாமல். (௪௩)

உயர்மகமிழைத்தபேற்றாலுருப்பசியோடுங்கூடி
யியல்புழியாழ்நாவாழுமிடமெலாமினிதினேகிப்
புயல்வளாகவிகைச்செங்கைப்புரூரவாப்புணர்ப்பினீடி
மயலகன்றின்பமெய்திவைகினான்வைகுநாளில். (௪௪)

வேறு.

சுந்தரவாய்மைத்தும்புருநாதந், தந்திடவிண்ணோர்தாம்புடைசூழ
வந்தரமின்னாராடல்பயின்றா, ரிந்திரனென்பானின்பொடுகண்டான். (௪௫)

தொல்குலவானோர்சூழ்ந்திடவின்ப, நல்கிடுநட்டநாங்தெரிவோமென்
றொல்குமருங்குலுருப்பசிகாதன், மல்குபுரூரவாவுமடைந்தான். (௪௬)

மாமைநலங்கூர்வானகமின்னார், தாமுறைவண்ணந்தந்துநடித்தா
ராமளவின்கணடைந்தவழக்காற், காமருருப்பசிகண்ணுள்புரிந்தாள். (௪௭)

எள்ளவிலாடலிழைத்திடுமோண்பா, லுள்ளமதர்ப்பிலுருப்பசியென்பாண்
மெள்ளநகைததாள்வேந்தனைநோக்கா, வள்ளல்புரூரவாவுநகைத்தான். (௪௮)

பாங்குறுபல்லோர்பண்ணவர்நாப்ப, ணீங்கிவரேதுவின்றிநகைததார்
நீங்குகவென்னாநீடியசாபந், தூங்கவினாசான்றும்புருவிட்டான். (௪௯)

மாசில்புரூரவாமகவானை, யாசிலடைக்கலமாவடைகுற்றே
னீசிறிதாளநினைந்திடுகென்னா, வேசறவோடுமிரந்தனனங்கண். (௫0)

கட்டறுகாதல்கருத்துறலாலே, மட்டின்மகங்கள்வருந்திவளர்த்தே
னொட்டுமெருங்குலுருப்பசிதன்னை, விட்டிடுமாறெவன்விண்ணவர்கோவே. (௫௧)

இத்துயர்தீரவிரங்கெனவுள்ள, மொத்துயர்கொங்கையுருப்பசிதன்மேல்
வைத்தபுரூரவாவினைநாடா, வித்தகவிண்ணோர்வேந்தனிசைப்பான். (௫௨)

சாபமகற்றுந்தன்மையுரைப்பே, னீபயமெய்தனிலங்கொள்புரூர
வாபயில்கோசலமன்னர்குலப்பொற், றீபமிழைக்குஞ்சேதுவதன்பால். (௫௩)

ஆழியசாத்தியாமிர்தமென்னுஞ், சூழியதுண்டுசூழ்ந்திடவீறு
மேழிசையாழ்நரியக்கர்கள்சித்தர், வாழியல்வானோர்மாதவரெல்லாம். (௫௪)

புத்திவழங்கும்புன்பவநீக்குஞ், சித்திகளியுந்தீதறுசாப
முத்தியுநல்குமொழிந்தவையெல்லாஞ், சததியமன்னுசாத்தியநீரே. (௫௫)

ஞானநலங்கூர்நாடருவீடு, தானிதிலுண்டாஞ்சாதனைதன்னுண்
மானிலமன்னுமற்றதனுற்பே, ரானதுசாத்தியாமிர்தமென்றே. (௫௬)

அம்புவியேத்துமப்புனரோய்ந்தாற், றம்புருசாபந்துள்பமோள்வா
யும்பருமெய்துமுருப்பசிபோகம், வமபவிழ்தார்புனைமன்னவவென்றான். (௫௭)

தாழ்ந்தமரேசன்றன்னைவிருப்பால், வாழ்ந்துபுரூரவாவுடன்வந்தே
யாழ்ந்துயர்சாத்தியாமிர்தநன்னீர், வீழ்ந்திடுசாபவேலைகடந்தான். (௫௮)

ஊறியவன்பினுருப்பசியோடு, மேறிவிமானமெய்துபுவிண்மேற்
பேறுறுதேவர்பெரும்பதமுற்றான், மாறில்புரூரவாவெனுமன்னன். (௫௯)

சாற்றியபீடார்சாத்தியநன்னீர், போற்றினர்நீப்பார்புன்மைகளெல்லாந்
தேற்றியவேட்கைசேர்குவர்காம, மாற்றுபுதோய்ந்தார்மாண்டுதியாரே. (௬0)

வேறு.

அப்பகல்கேட்டனர்சனகராதியோரற்புதசாத்தியவமிர்தமேன்மைதா
னுப்புவியாக்கியானினன்வாயினுலொப்பறநோற்றுயர்சவுனகாதியீ
ரிப்பகல்கேட்டனிரெனதுவாயினுலெச்சமில்வேட்கையிலினிதுநீவிர்தாங்
கைப்படும்வீட்டுயர்கதியின்மேவுவார்கற்பவர்கேட்பவர்கசடுதீருமே. (௬௧)

சாத்தியாமிர்ததீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - க,எ0௬.

சருவதீர்த்தச்சருக்கம்.

இகலிலாதகுழுவுசாலிருடிநாதர்மகிழவே
புகலுமாறுபின்னரும்பொருவில்சூதனேதுவா
னகலமாசுசாத்தியவமிர்தவாவியாடினோர்
சகமெலாமுமேத்திடுஞ்சருவதீர்த்தமாடுவார். (௧)

தருமரூபமாகுநீள்சருவதீர்த்தமூழ்குவா
ருருவினீடுவினைகள்போமுதனிலாடலுற்றிடுந்
திருவினேரையஞ்சிடுந்தீமைதீர்வதின்றெனுக்
கருவினெல்லையன்னநீர்காணுமெல்லைதானரோ. (௨)

மகமிழைக்குமாண்பினுன்மந்திரங்களெண்ணலா
லகனும்வேதமோதலாலரனைமாலையன்பினுற்
புகரில்பூசைபுரிதலாற்புசிப்பொழிக்குநோன்பினுற்
றகவினீடுபெயனெலாஞ்சருவதீர்த்தநல்குமே. (௩)

சருவதீர்த்தமென்றுபேர்தடமிதற்குவந்தவா
றுறுவர்யாரும்வினவினாருரைசெய்மேன்மையுன்னியே
கிறும்வேதவாய்மையாணிகழ்வியாதனடிகள்சேர்
மறுவில்சூதமாதவன்மரபினாடியோதுவான். (ச)

பேயொடாடியன்பனும்பிருகுவும்பலாயினா
னுய்வினீடுசுதரிசனப்பெயர்க்கொளந்தண
னோய்விலாதநியதியானுற்பவத்தில்விழியிலா
னோயுழந்துநரையினானோவிழந்தமேனியான். (ரு)

அந்தனந்தவந்தணனானதன்மையதனினான்
முந்துநீர்களொன்றினுமூழ்கவேகுமுரணிலான்
மைந்திலாதிருக்கவும்வசுந்தரைக்கணீரெலாம்
பந்தமோடுமாறுதான்பரிவினாடவெஃகினான். (சு)

கோலமல்குநீரெலாங்குடையநீடுகோதலாற்
காலவாசைவேலைசூழ்கந்தமாதனத்திலே
யாலநீழலண்ணலாரடிவழுத்துமர்ச்சனை
மூலவேதமுறையினான்மூன்றுபோதுமுயலுவான். (எ)

பொழுதுமூன்றுமாடிநீர்புலனடக்கியன்பினாற்
கழுதுசுற்றவாடுவான்கழல்பணிந்துபாடுவா
னிழுதினோடுநறியவூணிழைத்தெவர்க்குநல்குவான்
முழுதுமாகநீற்றினான்முண்டமேவுபுண்டரன். (அ)

வேனில்வேலையவகைவெய்யவங்கிநாப்பணுங்
கூனன்மேனிகுளிர்செயுங்கொன்னிலம்புதன்னிலும்
வானநாளில்வானிலுமருத்தருந்திவைகியே
யீனமின்றிநோற்றனனிருபிறப்பினானரோ. (கூ)

கணிதவாண்டொர்பஃதுதான்கண்டிமாலைமார்பனாய்ப்
பணிசுமந்தபாரில்யார்பண்ணவல்லரென்னவே
மணிதயங்குவிழியிலான்வளர்தவத்தின்வாடல்கண்
டணிகொடிங்கள்வேணியானருள்சுரக்கநாடினான். (கo)

தெள்ளலைக்கொள்கங்கைநீர்சிதறுசீகரத்துடன்
கள்ளிறைக்கவெங்கணுங்கடுக்கைமாலைகண்ணுத
னள்ளழற்கொழுந்துலாய்நக்கவேறுநகையெலாம்
வெள்ளிவெற்புநடவல்பேர்விடையுகைத்துவிண்ணின்மேல். (கக)

வெற்பில்வல்லிமென்கைசேர்வெள்வளைத்தழும்புடன்
பொற்புயங்கொளங்கதப்புயங்கராசிபொலியவே
யெற்பிறங்குமேனிமேலெழுந்தசோதியெண்டிசைப்
பிற்புறங்கொள்கங்குல்வேர்பிடுங்கிநின்றிலங்கவே. (கஉ)

பிடித்தசூலமொன்னலார்பேருடற்பிளந்துமுன்
குடித்தசோரிமீளவுங்கொப்பளிக்குமாறுபோல்
வடித்தசோதிவீசவேமழுவலங்கைமல்கவே
முடித்ததிங்கள்வெண்ணிலாமுளைக்கொழுந்துலாவவே. (கங)

உடையகங்கைகண்களோடொப்புநோக்குமாறுபோ
லடையவைத்தசெங்கைமானதுகுதித்திறங்கிடா
திடையுடுத்தவெம்புலியிருந்துவக்கனுங்கவே
புடைநெருங்குகூளியும்பூதமுந்தழைப்பவே. (கச)

கால்விரிந்தவெண்ணிலாக்கடிகொணீறுபூசிடு
நூல்விரிந்தமார்பமுநுடங்குமாரமாலையு
நீல்விரிந்தகண்டமுங்கலைவிரிந்தவாரண
மால்விரிந்தநீழல்வாயறைந்தவாயுமழகுற. (கரு)

கண்ணணிட்டபார்வையுங்கருந்தலைச்சில்வேடுவெ
ரண்ணலிட்டபார்வையுமன்பர்சூழ்ந்துபார்க்கவே
யெண்ணனுற்றவிருவருமிந்திராதிதேவரும்
பண்ணவக்குழாங்களும்பணிந்துபோற்றெடுப்பவே. (கசு)

வேறு.

விதியரியிவர்க்கரியமேனியலதொன்றை
முதலுணர்கிலேனெனமுகிழ்த்தகணிரண்டும்
புதரிதயமாமுளரிபோலமலர்வித்தே
சுதரிசனனென்றுரைசெய்தூயனெதிர்நின்றான். (கஎ)

நிற்றலொடுநித்தனருளானெடியநோக்கம்
பெற்றவனவன்றெரிபுபேதமறயாண்டு
முற்றசரணங்கண்மிசையோடியடிவேரோ
டற்றமரம்வீழ்வதெனவன்பினொடுவீழ்ந்தான். (கஅ)

வீழ்ந்துவிழிமாமலர்மிலைச்சியுலகெல்லாம்
வாழ்ந்திடவெழுந்தருளும்வள்ளறனைவானோர்
தாழ்ந்திடவுயர்ந்தசிவசங்கரனைநெஞ்சாற்
சூழ்ந்துருகிமெய்ப்புகழ்துதித்திடுதலுற்றான். (ககூ)

மங்கையுமைபங்குறையபங்கவரவங்கூர்
கங்கையொடுதிங்கள்புனைதுங்ககனறங்குஞ்
செங்கையணிகங்கணபுயங்கசிரகங்கொ
ளங்கைவிதிகங்குலவலங்கலகளங்கா. (உ0)

அரகரவராகமிலரானவர்பராவும்
வரகரவரானவர்விராவரணவஞ்சப்
புரகரபுராதனகராவையடுபுள்ளூர்
சரகரசராசனதராதரபிரானே. (உக)

ஓலமிடுகோலமறைநாலுமுனிநால்வர்க்
காலநிழலேனுமருளானுதவுசீலா
பாலனையவாலவிடைமேலபடர்நீலக்
காலனுயிர்காலவொருகாலிடறுகாலா. (உஉ)

நீளமரர்கோளினுயிர்மீளநுகர்காளா
வேளதுடன்மாளவழன்மூளும்விழியாளா
வாளிலகுநாளமலர்நாளலர்செய்தாளா
வாளுநெறியாளர்தமையாளுமருளாளா. (உங)

அம்பரதிகம்பரவகம்புறம்விரும்பார்
வெம்பவபயம்பரிபரம்பரவிரும்புஞ்
செம்பொனணியம்பலசிலம்பொலிசிலம்ப
நம்புமவர்தம்பநடனம்பயிலுநம்பா. (௨௪)

பாசமறவீசுபிரகாசமறைவாசி
யீசபவநாசவுணதேசில்புகழ்பேசு
நேசர்மிருநேசநிறைமாசிறுகள்வாசம்
பூசுமமரேசதவர்பூசைபுரிதேசா. (௨௫)

கட்டரவுகட்டுமணிபட்டிகையமுட்டாண்
மட்டலரில்விட்டொளிரும்வட்டமுகதொட்டே
யட்டுழுவைகெட்டுரிகொளட்டவுருநட்டா
திட்டமுமதிட்டமுமில்சிட்டசிவபட்டா. (௨௬)

வெற்பவையின்முற்பரவுவிற்சயிலவிற்போர்த்
தற்பரமசிற்படிவதற்பொருவுபொற்பா
வற்பகலுநிற்பரசுமற்புடையசொற்பாக்
கற்பவர்கணற்பூலனினிறபுறுமகற்பா. (௨௭)

வையநிலைபொய்யுடையமையலெனவுய்யு
மெய்யருளினையுமுளமெய்யருணர்மெய்யா
செய்யதழல்கையிலணிசெய்யுமொளிரசெய்யா
வையமகலையர்தொழுமையமிசையையா. (௨௮)

வேதவளர்கீதவிதியோதுநெறிமீதா
ரேதுவகலாதிபரபோதகவினோதா
பாதககிராதபடைமோதுமிருபாதா
நாதமிகுசோதிவளைகாதிலணிநாதா. (௨௯)

அன்னையுமளித்தருள்செயத்தனுமெனக்கா
முன்னையலதோர்துணையுமுள்ளமிசைகொள்ளே
னென்னையருள்கூர்தியெனவின்னபலவாகுஞ்
சொன்னிலவுமாலைகொடுத்தினிதணிநதே. (௩௦)

இன்றுவிழிதந்தருளியெந்தையெதிர்நின்றாய்
பின்றையினிவேறுதெரிபெற்றியிசைகில்லே
னென்றுமெனதம்பகமுனெய்திடுதியின்றேன்
மன்றவிழியன்றையின்மறைத்திடுதிவள்ளால். (௩௧)

என்பனடிதாழுவனெழுந்துதுதிசெய்தே
முன்பணிவுசெய்ததைமறந்துமுறையாலே
பின்பணிவனுசறுபிறப்பிருமைபெற்று
மன்பினொடுநெஞ்சொருமையாகியறவோனே. (௩௨)

ஆதரவுகண்டமலனந்தணனைநோக்கிப்
போதுமினிவேண்டியபுகன்றிடுதிமேலோய்
நீதவமுயன்றமைநினைந்தமைநினைந்தே
யோதியிதில்வந்தனமுனக்கருளவென்றான். (௩௩)

வேறு

வாண்மதிச்செஞ்சடைமுடியோன்வாய்மையுணர்ந்தவன்கமலத்
தாண்மதிக்குஞ்சுதரிசன்றன்றரைமிசைவீழ்ந்தடிகேள்யா
ணண்மதிக்குநிகர்வெளுத்தநரையுடம்பானலிவுற்றேன்
சேண்மதிக்கும்புனலாடல்செயமாட்டேன்சிவபெருமான. (கச)

நன்னீர்கண்முழுதாடுநசையுடையேனதுபயக்கு
மந்நீர்மையருளென்றானண்ணலுமங்கதுகேட்டுக்
கொன்னீர்வேற்காகுத்தன்குரம்பதனால்வரம்பறுசீர்
மின்னீர்மைமுகிறவழும்வியனகந்தமாதனத்தில். (கரு)

புனன்முழுதும்வரவழைக்கேம்பூசுரனேயெனப்புகன்று
மனமதனினினைந்தருளவந்தனவப்புனலெல்லா
மனையுறழ்தண்ணளியீசனந்தணனைப்பார்த்தருளா
முனிவரனேயித்தீர்த்தமுடிக்குமுனைவினையனைத்தும். (கசா)

நீர்கள்பலசெறிந்திடலானிகழ்சருவதீர்த்தமெனும்
பேர்பெறுமானதனாமம்பெறுமனததால்விளித்தமையாற்
பார்பரவுபுனலின்பம்பரபோகமவையிரண்டு
மேர்பெருகுமிஃதொன்றேயினிதளிக்குமிருபிறப்போய். (கஎ)

கடும்பதகவனக்கழலாங்காமமுதலாறுடைக்கு
நெடும்புயலாம்பிறப்பிறப்பெனீண்முதலைநீங்கத
குடும்பமெனுமளவைபடாக்குரைகடலின்கரையேற
விடும்புணையாம்வேதாந்தவித்தையன்றிமுத்திதரும். (கஅ)

நிரையவழியடைக்குமிதுநெடுமறையோய்குடைகென்றே
வரையரையன்மடப்பாவைமணவாளனருள்புரிந்தா
னுரைசெய்துணையதிலாடியுததியெழுங்கதிர்போல
நரைதிரைபோயிளம்பருவநல்லுருவங்கொண்டெழுந்தான். (கசு)

ஏறுடையானுடனணைந்தாரிதின்மூழ்குமவன்கிழவர்
வேறொருவனெழுந்தனனேவிளங்கொளிசேர்பெருமையிறுனை
மாறுறுமூப்பினைக்கழுவிவந்தனனேவிவனெனறே
வாறுலவுசடைப்பெருமானருள்பரசியதிசயித்தார். (உ0)

சுதரிசன்றனவண்படைத்தசுடர்ப்பழிவந்தனைக்காணூஉப்
பதராறுநூன்முனிவருடன்பங்கயநறடமதனைத
துதிபுரிந்தானிறைவனவண்டுமறையோனறனைத்தெரிந்து
வதிகுதிநீயெஞ்ஞான்றும்வளங்கெழுநீரிதனகரைமேல். (உக)

ஆடுநினைந்தமையிதனிலயற்றீர்த்தஞ்செலல்வேண்டாம்
வீடுனக்குமிறுதியினின்வேதியனேவிளைத்தினிதுன
னோடுபடிந்திடுமவர்க்குமுதவிடுமென்றுரைததருளித
தேடுமிருவருக்கரியசிவபெருமானகரந்தகன்றான. (உஉ)

வேறு.

ஆனதற்பினர்வேதியனப்புனலாடியுற்றுயிராகமகற்றிவிண்
போனவக்கணமேவினன்முத்தியிற்போதநற்றவிர்யாமுமுமக்கிவண்
மானதப்புனல்வாய்மைநவிற்றினமாசிவிக்கதையோதியவுத்தமர்
பானநற்செவியாலடைவுற்றவர்பாதகக்கடறாளெழவற்றுமே. (உங)

சருவதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ - திருவிருத்தம் - கஎ௫உ.

தனுக்கோடிச்சருக்கம்.

பயங்கொள்பவப்படையுடைக்கும்பவுராணிகோத்தமனும்பண்புசான்ற
நயங்கொள்புகழ்ச்சூதமுனிநன்முனிவருடன்மீண்டுநவிற்றல்செய்வான்
வயங்கொள்புலப்பகைதடிந்தீர்மானதீரபடிந்தோர்கள்வையங்காக்குஞ்
சயங்கொண்மனுக்கோடிநிகாதசரதன்சேய்தனுக்கோடிதன்னிற்றோய்வார். (௧)

பீடுகெழுமதிலிலங்கையரக்கர்தனுக்கோடிபலபிளவுகண்ட
நீடுதனுக்கோடியினைநினைந்தாலும்புகழ்ந்தாலுநேர்கண்டாலும்
வீடுபெறலெளிதாகும்வெந்நரகமெழுநான்கும்விழியிற்காணார்
கோடும்பிறைமுடியவன்றாள்குறித்ததுணருஞ்செய்யமதிக்குணத்தினீர்காள். (௨)

குழுமுத்மமந்ததமம்ரவுரவமாரவுரவமேகும்பிபாக
மழிவுதருகாலசூத்திரமசிபத்திரவனமேயருந்தலாகாப்
புழுவுணவுப்கலரியவிருட்கூபஞ்சந்தஞ்சமபொருமுட்கூராற்
பிழைபடுசென்மலிசூர்மிபெருகியெழுமவைதரணிபிராணரோதம். (௩)

ஆயவிசசனமலாலாபக்கணம்மயவீசியுடனடருஞ்சார
மேயவுணுவச்சிரகண்டகங்காரவளறரக்கர்வெள்ளவுண்டி
தூயதழல்சொரிசூலப்பிராந்தவிதோதனந்தந்தசூகந்துய்த்தல்
சேயபரியாவருத்தந்திரோதானஞ்சூசிமுகஞ்செந்நீர்நுங்கல். (௪)

நச்சழலிற்சுழல்கொள்பரிபீடணமென்றிவைநரகநாலேழாகு
மச்சமிவற்றுண்டென்வுமடைவதிலாபுகுந்திடருற்றழுந்துவாரோ
வெச்சவிடைக்கிரங்கலின்றியெழுங்கலசமுலைசசனகியென்னுமின்சோ.
பச்சைமுகிலிடந்தயங்குந்தனுக்கோடிபடிந்தவர்களபடிமையீர்காள். (௫)

மாதர்பொருண்மைந்தரிவர்தமைத்திருடும்வஞ்சகனைவலியகால
தூதர்பிணித்திருள்பெருகுதமதிடுவரந்ததமந்துன்னிச்சோரவா
ஞுதனுயிர்கொன்றுநிதிகொண்டுநுகர்நவையுடையானலனுயிர்க்குத்
தீதிழைத்துமனைநிறைப்பான்விடவரவாரிரௌரவத்திற்சென்றுசேர்வான். (௬)

வன்றுயாகூர்மாரவுரவத்தினிடையடைந்துமனைமாதினொடுந்
தன்றனயாபசித்திருப்பததானுகர்வான்றன்றசையைத்தானேதின்பா
னன்றியுயிருளபறவைவிலங்கிவற்றையருள்சிறிதின்றடுவோனுகு
நன்றியிலாவேடாதமிலிழிந்தோனைநமனறூதாநடுங்கப்பற்றி. (௭)

குன்றுநிகர்புயமுரியப்பிணித்திறுகக்கொடுபோந்துகும்பிபாக
மென்றநரகினிற்றயிலமெரிமயமாமதனிடையிட்டெரிப்பர்பன்னு
ளன்றிமறையந்தணரையன்னையத்தனிவரையவமானஞ்செய்வோன்
றுன்றுமிடமோரயுதயோசனையாங்கொடுங்காலசூத்திரத்தில். (௮)

மேலெறிக்கவிரவிசுடர்கீழெரியவெய்யதழல்விளங்குசலவத் *
தாலமைத்தநெடுங்களத்தினாவிகுலைந்தழுங்கியுளமலறிச்சோரவா
ஞுலுமறைநெறிமாற்றிநவைநெறியினடக்குமவனுரினீங்குங்
காலனெடுந்தூதுவராலடைவனசிபத்திரவெங்கடறுதன்னில். (௯)

* சல்வம்—தாமிரம.

வென்றிபுனைமுடிமன்னனாயினுமவனுழையில்வினைஞரேனு
மொன்றுமபராதமுறாதவர்கடமைதண்டிப்போருயர்ந்தபூமி
துன்றுசுரர்தமையுடலம்வருத்திடுவோரிவரைநமன்றூதர்பற்றிப்
பன்றிமுகமெனுநரகிலாலையிடுகன்னலெனப்படுத்துவாரோ. (௧௦)

யாவதுமெம்பரனருளென்றிருக்குநருக்கிடாபுரியுமிழிஞனந்த
கூவமதிற்கண்படைநீத்தன்னவராற்றுயர்க்கடலுட்குளிப்பன்பன்னாட்
டேவர்முதலைவகையமகம்புரியாதுண்ணுமவன்சிறந்தவுண்டி
மேவுசமபந்தியினோக்கிடலின்றித்தான்மிசையும்வெறியனின்னோர். (௧௧)

இருமியுணுவெனுநரகந்தனிற்புகுந்தாமுநெடுங்கிருமியாகிச்
செருமிவளர்கிருமிகளுக்குணவாகித்தாமுமவைதின்றுநோவா
ரருமறையோராடகத்தைப்பிறர்நிதியைவன்மையினாலபகரிப்போன்
றிருடுமவன்றிருடுவிக்குந்தீயனெனாசெப்பிடுமித்தீயோரெல்லாம. (௧௨)

காய்கனல்சேர்கருந்தாதுக்குழியதனுளவிடமுங்கலந்துமொய்த்திட்
டகறிக்குஞ்சநதஞ்சநகடைவர்தெனதிசைக்கோனேவலோரா
லாய்கலைதேரருண்முனிவீரனுகவொணுவாடவனையணைந்திட்டாரும்
வேய்கெழுதோளிணைபுணாதற்குரியளலலாடனைப்புணருமவிதியிலானும். (௧௩)

அழலிருப்புமகன்மடந்தையத்துணையையிருசுடருள்ளளவுமபற்றித்
தழுவியிடருழந்தலைவாகுண்மியின்பாற்சனமலிமுட்டைதருச்சோரயான்
குழுவுயிரைப்பலவிதத்தானலருத்திடுவான்வைதரணிகொண்டமிழ்த்து
மொழியுநெறிப்புக்கறநதின்கரையுடைக்குமரசேனுமுழையரேனும். (௧௪)

மானமிகந்தாசாரவரம்பொருவிவிடலியிதழ்மதுநீர்மாநதிக்
கானவிலங்கெனவிலங்கிமறைநெறியின்மருண்டுழலுங்கடியன்சோவ
னூனுதிரமலங்கோழைமூத்திரஞ்சீபூதநிவறநெறழிபின்றூடு
யானவதிபயங்கரங்கூர்பெருநரகிலடுங்கூற்றினுணைதன்னால. (௧௫)

காட்டுறையும்விலங்கினுயிர்கடுங்கணையானருமலிகளாற்கவர்ந்துநாளும்
வேட்டைமுயல்வெய்யவனைமேதியிறைவிடுந்தூதாவிசிகநதேற்றி
யீட்டுபிராணதரகைவாமிருநரகிலவீழ்த்திடுவாரெசசதூதாவி
வாட்டுமவன்மறைமுறைவிட்டகந்தையினாலரிபடுவன்வைசசத்தில். (௧௬)

தொல்குலஞ்சேர்மனைவியைத்தன்சுக்கிலநீர்நுங்குவிக்குந்துரிசனந்நீர்
மல்குநெடுங்குழிக்கிடந்துகாமவறல்பருகியிடுமவணிகாதம்பா
லல்குபொருள்கவர்ந்துநகரழலூட்டிவிடமருத்தியாவிகக்கீறு
நல்குமவன்வச்சிரதங்கிட்டிரப்போநரகடைந்துனைவன்பனனாள். (௧௭)

சொன்னவர்களனைவர்களுந்தனுக்கோடிபடிந்தனரேற்சொல்லிவந்த
வெந்நரகமடைவதிலர்வேறுபலநிரயங்கள்விளம்பாநின்ற
வின்னமுளவவையெவற்றுமிதின்மூழ்குமவர்மூழ்காரிவுளிமேதத்
துன்னுபலம்படைத்திடுவாரொருவிசையித்தனுக்கோடியுதகந்தோய்வார். (௧௮)

வேறு.

ஆவியுண்மையறிவுதலைப்படு, மேவுநாலுவிதங்கெழுமுத்தியும்
பாவவள்ளிபடராபழங்கணும், யாவுங்காய்படுமின்பமுண்டாகுமால். (௧௯)

ஆடகத்துலையாயிரங்கோதனங், கூடநல்குங்கொடைப்பயன்றந்திடு
நீடுகீர்த்தியுஞ்செல்வமுநீங்கலா, மாடுமல்குமனத்திருணீங்கிடும். (௨0)

அஞ்சுதீமையிலொன்றிலயுதமாம், புஞ்சமைம்பதினாயிரம்போக்கிடும்
பஞ்சபாவந்தனக்கநுபாதக, மெஞ்சலில்லனயாவையுமெஞ்சுமால். (௨௧)

பரவுமாசைப்படுகடற்கப்புறம், விரவுமுள்ளம்விரிகடன்மேதினி
புரவுபூண்டபுயலுறழ்கார்முகக், குரவனீள்சிலைக்கோடியிலாடினால். (௨௨)

கொன்னெடுந்தனுக்கோடிநலம்புக, லன்னவாய்மையிலையமின்றையர்காள்
வன்னிவெந்தமழுவினைநாவினா,லின்னமெய்ம்மையென்றேந்துவன்யானரோ. (௨௩)

யாங்கிளந்தவிருந்தனுக்கோடியி, னாங்குசீருபசாரமென்றோதுவான்
சாங்கரீயமரபிற்சனித்தவ, னாங்கதனறியறக்கயலாகுவான். (௨௪)

மைத்தமாமருண்மாற்றிவளங்கெழூ, புத்திநல்கிப்புரிந்திடுமோக்கமு
மெய்த்தஞானமும்வீடுமெளிதகிடு, மித்தகைத்தனுக்கோடியிருக்கவே. (௨௫)

வேற்றுநீர்சிலவேண்டிப்படருத, லாற்றுநீர்மையராரினும்பேதைய
ரேற்றநன்றியொன்றில்லாரிவாமருட், பேற்றின்மான்மியம்பேசவொண்ணாதரோ.

பெருகுநீரிதன்பீடுபழிச்சுவா, ருருகிநோக்குநருள்ளத்தழுத்துவா
ரருகுசென்றுதொடுமவரனபினாற், பருகுவார்முலைப்பால்பருகாரரோ. (௨௭)

நீரின்மேன்மைநிகழ்த்துழிநீடருள், வாரிசூதன்மறைமொழிமாதவர்
பேரிதற்குப்பெருந்தனுக்கோடியாங், காரணமபுகலென்னக்கழறுவான். (௨௮)

கோணிராமன்குலவுதன்றோற்றமா, மானனன்றனதாவிமுருக்கிமுன்
பானுமைந்தன்பறித்தமவுலியை, மேன்மைவீடணன்சென்னியிலைச்சியே. (௨௯)

துறைகொணீர்மிசைதோன்றியபோதுபோற், சிறையினீங்கியசீதையுந்தம்பியு
மறையுணர்ந்திடுமொருதிவானரர்க், கிறைவனாதியர்யாரும்வளைப்பவே. (௩0)

சித்தர்சாரணர்சேணியிற்கந்தரு, வத்தர்தேவரரம்பையர்மாதவர்
மொய்த்துவாழ்த்திடமூவெயில்வாட்டிய, வத்தனென்னவில்லங்கையிலேந்தியே.()

இலங்கைநீங்கினனிட்டவின்னீங்கிடா, நலங்கொள்கார்தவழ்ஞாயிறுந்திங்க
ளும், வலங்கொள்வெற்பெனவண்கந்தமாதன, விலங்கன்மேல்விளையாட்டொடு
மேவினான். (௩௨)

ஆண்டிருந்துழியண்ணலிராகவன், றீண்டமெய்யுடையாளாச்சிலையினை
மாண்டதன்குணத்தோடும்வகுத்ததாள், பூண்டுவீடணனென்றுபுகலுவான். (௩௩)

ஈறிலாதிக்குரய்பிருந்தாலிஃ, தாறதாகவடுவாரடலுளோர்
வீறுசேதுவிடார்ப்படவில்லினாற், கீறல்வேண்டுங்கிளர்மணிப்பூணினாய். (௩௪)

என்னைவெஃகியெனலுமிராகவன், வின்னுனிக்கொடுவென்றிக்கலுழனாம்
பன்னகப்பிணிமுன்றுணிபட்டபோ, லுன்னுசேதுவுடந்திடக்கீறினான். (௩௫)

ஊக்கமார்தனுக்கோடியுடைத்தலா, லாக்கினாரிதற்கப்பெயராய்ந்துளார்
நீக்கிலாநெடுங்கீற்றிதுநேர்பட, நோக்கினார்பின்கருக்குழிநோக்கிலார். (௩௬)

வெய்தெனச்சிலைவெற்பின்கடையினாற், செய்தகீற்றினைக்கண்டவர்சேருவார்
பொய்தவிர்ந்தபுலத்தினைமூழ்குவா, ரெய்துமாண்பயன்யானறியேனரோ. (௩௭)

நன்மதைக்கரைநற்றவம்போற்றுவான், றன்மனத்தெழுபாதகஞ்சாய்த்திடுங்
கன்மலைத்தெழுகங்கையின்மாண்டவன், புன்மலச்சிறைநீக்கிப்புனிதனும். (௩௮)

குருநிலத்திற்கொடைபுரிவான்செயும், பெருமறைப்பிரமக்கொலைநீங்கிடு
மருவுகோன்புவனமலியீகைமற், றுருவிறத்தலென்றோதியமூன்றையும். (௩௯)

கட்டுஞ்சேதுவிற்கார்முகக்கோடியி, விட்டமோடுமிழைத்திடக்கிட்டுமேற்
கிட்டும்யாவையுங்கேழகன்முத்தியு, மொட்டுமையமிதற்கிலையுண்மையே. (௪0)

மாணிநீவினைவாட்டிடுமேற்றிது, காணுமெல்லையிற்கார்முகக்கோடியாற்
பூணுங்கீற்றிதுபொன்னகர்மாலயன், றுணுலூர்க்குப்புகுநெறிதானரோ. (௪௧)

மூள்விருப்பின்முயன்றிடுமோதவம், வேள்வியீகைவிளம்பிடுமெந்திர
மாள்வினைச்செயறன்னிலதிகமா, நீள்பெரும்பயனீரிதுநல்குமால். (௪௨)

மோகமல்கியறம்பிறமுன்னியே, யாகம்வாட்டியென்னுழ்யமுறுநதி
நாகமாநதிநாப்பண்சென்றூடுமோ, றேகல்வேண்டாவிதிற்படிவார்க்கரோ. (௪௩)

நாணுலாந்தனுக்கோடிநரரெதிர், காணில்வேண்டிலர்காசியின்மாரண
மூணிலான்றினமூன்றுதிலாடியான், மாணுலாம்பொருளியான்வறியனும். (௪௪)

அச்சிலைப்பெருங்கோடியறலினை, நச்சியாடுநயனுடையார்பெற
வைச்சபேறுவரைவறுதக்கிணை, யெச்சகோடிகளீதலிலாவரோ. (௪௫)

கோளிலாப்பதினுயிரங்கோடிநீ, ராளுமண்மிசையுள்ளவவையெலாந்
தாளுலாமலர்ச்சானகிதன்மண, வாளன்வாரதனுக்கோடியின்வைகுமால். (௪௬)

தேவர்முப்பத்துமூவருந்தேவர்சூழ், மூவராயமுதல்வருமங்கவர்
தேவிமாருந்திணிசிலைக்கோடியுண், மேவிநாளும்விருப்பினிருப்பரால். (௪௭)

முத்திபெற்றமுனிவருமோதுபா, லத்தியுற்றவமுதுணுந்தேவரும்
புத்திபெற்றதும்புண்ணியம்பெற்றதுஞ்,சித்திபெற்றதுந்திண்சிலைக்கோடிவாய். ()

மூட்டுநாண்சிலைக்கோடியின்மூழ்கியே, யீட்டுதேவர்பிதிர்க்களிவர்தமை
யூட்டுவான்வினையாவுமொழிந்தவன், வீட்டின்வீடறுமேன்மையின்மேவுவான். ()

செருத்திறங்கெழுதிண்சிலைக்கோடிவா, யொருத்தன்யாவனொருமறையோற்குண
வருத்தினனவன்யாண்டுமெழிவுறூ, திருததுமபேரினபநாட்டிவிருப்பனே. (௫0)

சாகமூலபலமுண்டுதெம்முயிர், போகநீப்பவர்புண்ணியமூழ்குவார்க்
காகுமாடுபவாடல்விற்கோடிநீர், யாகமாம்பரிமேதமிழைகிலா. (௫௧)

ஆசினற்குலநால்வரினுடிேனோர், கூசிநீங்கும்பிறந்தைபின்கொள்கிலா
மாசித்திங்கட்படிபவர்மாண்பயன், பேசிக்காட்டிடும்பீடிலன்யானரோ. (௫௨)

வாய்ந்தமாகமதியினிலாடினேன், பாய்ந்துலாவும்பகிரதியாதிநீர்
தோய்ந்தவன்பலஞ்சொல்லினழிவிலா, தேய்ந்தநாடுற்றுவீடும்பினையதுவான். ()

புருடனுடினும்பொற்றொடியாடினு, மருடரும்படிவந்திடுநாண்முத
விருடரும்பயன்செய்தனயாவையு, மருடருந்தனுக்கோடியகற்றுமால். (௫௪)

இறந்திடாவிமையோர்தங்குழாத்தினுட், சிறந்தகோசலைசெம்மலைப்போலவே
யறந்திடாதவளர்புனல்யாவினு, மறந்தருந்தனுக்கோடியதிகமால். (௫௫)

அங்கண்வார்தனுக்கோடியளித்திடு, மெங்கண்வேட்டவுமெல்லொருமுப்பதும்
வெங்கணிந்தியம்வென்றுயர்மாகவான், றிங்கண்மூழ்கிற்சிவபதஞ்சேரலாம். (டுசு)

உரமனத்தெழுசீற்றம்விட்டுஞெரு, தரமயின்றுதடந்தனுக்கோடியில்
வரமளித்திடுமாசியிலாடுவோன், பிரமகத்தியினீங்கிப்பிறங்குவான். (டுஎ)

மாசிமாதம்வயத்தனுக்கோடியி, லாசுதீரவடைந்திதிலாடியே
யீசர்கங்குலிலீரியாமமும், வீசியுண்டிவிழியுறங்காமலே. (டுஅ)

இந்தியங்களடக்கியிராகவன், முந்திறைஞ்சியமுக்கண்முதல்வனை
யுந்துபூசையுஞற்றித்திவாகரன், வந்துதோன்றிடும்வேலையின்மற்றநாள். (டுகூ)

கோடுசேர்தனுக்கோடிமுன்னீரெலா, மாடிகித்தநியமங்களாற்றியே
நீடிராமன்வழுத்துநிருத்தனைப், பாடியன்பிற்பரவிப்பணிந்தபின். (சுo)

நல்லுமாத்திரமொண்பொருண்மண்பசு, நல்லசெந்நெற்றிலமுதனல்கியே
வல்லவாறுமறையவர்க்கூட்டுவித், தல்லறீரவவரருள்பெற்றரோ. (சுக)

புகறலின்றிப்புரிகபின்பாரணம், பகருமிம்முறைபண்ணினர்க்கெம்பிரா
னகமடங்கவகற்றியளித்திடு, மிகபரங்களிரண்டினுமின்பமே. (சுஉ)

எவவகைத்தவருத்தங்களெய்தியு, மெய்வகுப்புறுமுத்திவிரும்பினோன்
றெய்வமாசிநற்றிங்களிலாடுவான, கவவைவெண்டிரைக்கார்முகக்கோடியில். (சுங)

மன்னுமத்தவுதயமகோதய, மென்னுமிங்கிவற்றிப்புனலாடினேன்
றனனதீவினையாவையுஞ்சாய்த்திடு, முன்னுமின்பமுமுதியுமெய்துவான். (சுச)

செல்வமுத்தொழிற்றேவருமன்னவன், சொல்வயத்தர்தொகுத்தவிருதிறத்
தெல்வயங்குதயம்படிவார்க்கிலை, நல்வளங்கெழுஞாலத்துதயமே. (சுடு)

மற்றவர்க்குமனுமுதலானநூல், கற்றுச்செய்பரிகாரங்களின்றியே
யுற்றதீவினையோடுமுண்டாயிடும், பற்றுவேள்விப்பயன்கள்பண்ணுமலே. (சுசு)

கதிரிரண்டையும்பாந்தள்கவருநா, ளிதனிலாடிலிருபிறப்பாளர்தம்
வதையின்மாசறுமற்றவர்பெற்றிடுஞ்,சிதைவில்பேற்றினைச்சேடனுஞ்செப்பிலான்

இரவிதிங்களெனப்படுந்தேவரை, யரவமுண்டிடும்வேலையமிழ்ந்திஞோர்
பரவுபாவப்பதாகினிபாற்றிடுங், குரவிர்காடனுக்கோடிதனம்பினால். (சுஅ)

காயும்வெண்கதிர்செங்கதிர்கட்செவிக், காயகல்லுணவாம்பொழுதாடினோர்
தூயதீர்த்தமுழுவதுந்தோய்ந்தவ, ரேயுமின்பமிவற்றையமில்லையே. (சுகூ)

ஆகலாலிங்குமங்குமளப்பிலாப், போகநல்கும்பொருதனுக்கோடியிற்
றூகமாற்றிடுந்தண்புனலாடுமோ, ரேருவீரினிநீருமிருடிகாள். (எo)

விற்பிறங்குமிராமன்விற்கோடியி, னற்பலந்தருபிண்டங்கணல்கினன்
முற்பிதிர்க்களுதாரமுடிவிலாக், கற்பகாலநிரம்பிக்களிப்பரால். (எக)

அண்டர்நாதனமர்கந்தமாதனங், கண்டசேதுக்கவுசலைசேய்கரங்
கொண்டவார்தனுக்கோடியிவற்றினிற், பிண்டமீந்தவர்க்கில்லைபிதிர்கடன். (எஉ)

மூவிடங்களுமுன்னிமுனிவிர்கா, டேவனுற்றுந்திறத்தனதென்புல
மேவினோர்தமிருணவிமோசனத், தாவினுமந்தமக்குளவாகுமால். (எங)

வேறு.

ஆதலிற்றனுக்கோடியிலாடுமொருருயிர்க்கிளைப்பாயினுமேகுவீர்
மோதடற்சிலைத்தேசிகனீடுசேய்மூரிவிற்பரித்தாமன்முன்னொடினான்
போதுநித்திரைக்காதலினாவிவான்போகவிட்டவதத்தீவினைபோக்கவே
யாதனைப்பவத்தீதறுமாத்வீர்நுமக்கிசைத்தேமிவண்யாமரோ. (௭௪)

தனுக்கோடிச்சருக்கமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௧,௮௨௬.

அசுவத்தாமாச்சருக்கம்.

கரகபாணியயனேர்கதியினீடுமுனிவரங்
குரகநேருயிர்த்தயர்ந்துறங்குகின்றுளார்தமை
விரகிலாதுகொன்றதுமீளவந்தவெம்பவந்
துரகதாமனீத்ததுஞ்சூதகேட்டல்வேண்டினோம். (௧)

வேதநான்குவகைசெயும்வியாதமாணவகவெமக்
கோதுநின்சொலமுதவூணுவட்டவில்லையாகையா
லேதுவொன்றுமின்றிநீயெங்கண்மேலிருத்திடும்
போதுமூதவருளினாற்புகலுகென்றுபோற்றினார். (௨)

என்றபோதுசூதனங்கிலங்குவாதராயணன்
மன்றவாசவனசநேர்மலர்ப்பதங்கள்வாழ்த்தியே
யொன்றுஞானமுனிவிர்காளுவகையோடுகேண்மினென்
றன்றியன்றவாறெலாமவர்க்குரைத்தன்மேயினான். (௩)

பண்டுபாண்டுமைந்தரும்பார்வயில்லிமைந்தருங்
கொண்டவேலைவையகங்கொள்ளுமாறுமாறதாய்
மண்டுபோர்விளைத்தநாள்வைகல்பத்தினளவிலே
வீண்டுமேனிவீடுமன்வீடுமன்னினனரோ. (௪)

மேலையைந்துபகலிலேமெய்துரோணன்விட்டன
னுயிரன்றொடொன்பதினைகநாடுநண்ணினா
னேலுமங்கர்தம்பிரானெட்டுமேல்கொள்பத்திலே
சாலநீடுசெல்வியன்றரைதுறந்துபோயினான். (௫)

பாதிதத்துவத்தொகைபட்டவாணியத்திலே
யூதைகாளைகதையினாலூருவிண்டுடைந்துதா
னாதனும்பறுஞ்சினனந்தவேலையரசாதாம்
பேதுவார்கண்மெய்விடாற்போக்குமாறுபுரிகுவான். (௬)

மட்டிலாதமகிழ்வினார்வளைமுழக்கவருகுவார்
திட்டத்துய்மனீடுதிண்சிகண்டிசிஞ்சயன்முனா
மிட்டமேவுமாசருமேனைவேந்தரனைவருஞ்
சட்டெனப்புகுந்துளார்தங்கடங்கள்பாசறை. (௭)

பின்னர்வீரரைவரும்பின்னைகேள்வன்சாத்தகி
யென்னுமந்தவிருவரோடிறங்கிடாதமவுலியான்
மன்னுழாடைமண்டபமருங்குசென்றுமேவினார்
வென்னிடாமிடைந்தகான்வெள்ளிடைக்கணுற்றபோல் (௮)

ஆண்டுறைந்தசண்டருமமாத்தியவிருத்தரும்
பூண்டுதாளிறைஞ்சினார்புயங்கவீரகேதன
னேண்டயங்குமிற்கணாேரமம்யாவும்வெளவியே
வேண்டுசெய்கையுவக்கயால்வீற்றிருத்தன்மேயினார். (௯)

கைவலங்கொடிகிரிசேர்காளமேகமேனியா
னைவரோடுமாயிடையாவதொன்றுகூறுவா
னுய்வதன்பொருட்டுநீருடையிருக்கையின்புற
நைவுறுமனம்மொடுநண்ணுமின்களென்றனன். (௧௦)

அறிவுகொண்டுசெய்வதென்றைவராழியானொடும்
புறனிலேகியாழ்பிலம்புகுந்துகொண்டபொருளைமீ
தெறிபுனற்கொளோகையாற்றெய்தியங்கணிரவெலாஞ்
செறுநர்மாளவென்றசீர்த்திருவினோடுமருவினார். (௧௧)

சுரிமுகஞ்சுலாயெழீஇத்துள்ளவீசிப்பாரெலாந்
தெரிவிலாதுசிதறிடுஞ்சீகரக்குழாங்கடா
மரியகண்ணனைவரோடணுகயந்தவளவிலாப்
புரிவினீடுமங்கலப்பொரியிறைத்தல்போலுமால். (௧௨)

ஆகுமந்தநிசியினாடவணிருந்தகண்ணன்மு
னோகையாறுவீசுமாமெருவிதரகமுவணமூர்
பாகவீண்டுவறிதிரேல்பள்ளிகொள்ளுமென்னவே
நாகநீடுநல்லணைநல்கல்போலமல்குமால். (௧௩)

அறுவையில்லதன்புறனிமவரோடுமைவண
னுறுவதெண்ணியுற்றபினுற்றுளார்கள்கிருபனு
மறுவிலாதகிருதவன்மாவும்வாசித்தாமனுந்
தெறுவியாளதுவசனைச்சென்றுகங்குல்சேருமுன். (௧௪)

சேருமூவர்காண்மகன்செய்யவெய்யதண்டினா
லூருவிண்டுடைந்துவீழ்ந்துடல்புரண்டுமண்ணின்மே
லாரையும்வணங்குறுவந்தன்மைந்தன்மூழ்குறுஞ்
சோரிவாரிகண்டுதாந்துன்பவாரிமூழ்கினார். (௧௫)

கதையின்வீமனறைதலாற்கவான்பிளந்துசோர்கறைப்
புதையுமேனிபூழியாற்போர்த்தநீடுபுரவல
னுதையவெற்பில்வீசிடுமூதைவீசுதூளுடற்
றுதையும்வாலசூரியன்றோற்றமென்னவைகினான். (௧௬)

கண்கலுழ்ந்தமூவரைக்கண்டுகண்ணிலான்மகன்
விண்கவிழ்ந்ததாரைபோல்விழிகள்சிந்தவெள்ளநீ
ரெண்கவன்றிரங்கினானினைதல்கண்டழுங்கியே
புண்கனலிறைத்தபோற்புரவித்தாமன்சீறியே. (௧௭)

கடியவீமசேனனுங்காலினும்பல்கைக்கதை
யடியினால்விழுந்தெழாதழுதநெஞ்சுதழுதழுத்
தொடிவுகூர்சுயோதனற்கொன்றுகூறவெஃகியே
யிடியெனவெகுண்டெழீஇயிவுளித்தாமனோதுவான். (கஅ)

ஐவர்பாண்டுநல்கினோராயுமெந்தையாருயிர
மைவழங்குநெஞ்சராய்வஞ்சமாற்றிவெளவினு
ரிவ்வெனுதவத்துயரென்னும்வேலையேறினும
பைவியாளதுவசனைபழங்கணுற்றிலேனியான. (க௯)

நிருபகேண்மியாவெனைநீவிடுக்கிலின்றிராப்
பரிதிதோன்றுமுன்னரேபாண்டுமைந்தரொருவரு
மொருவலின்றுசிஞ்சயனொடெலாருமாலெதிர
பொருதுகொல்வன்யான்செயுமபுண்ணியத்திணையே. (உ0)

வேறு

இனையதுகூறக்கேளாவிகற்றுரியோதனன்று
னனையதுசெய்வலென்றுவறல்பொழிவிழிய
முனைவனுங்கிருபன்றன்னைமுடங்குவிற்குரவனீன்ற
தனையனைநமதுதானைத்தலைவனாச்செய்தியென்றான். (உக)

அன்னவாறவனுமன்னோற்கன்றபிடேகஞ்செய்தான
பின்னரக்குரிசிறன்னைத்தழீஇவிடைபெற்றுப்போற்றி
யுன்னுசீர்ப்போசனோடுமூவிருவோருமைவா
பொன்னெடுந்துகிலின்மாடுபோயினார்பொழுதுபோமுன். (உஉ)

அஞ்சுபேராவிகொள்வானடைந்தவமறுவாத
ளஞ்சுபேராகியன்னோரடலொலிக்கசனிகேட்ட
நஞ்சுகாலரவம்போலநலிவுறீஇநடுங்கிநெஞ்ச
நஞ்சுகாறமொறுற்றுநாடிப்பின்னோடினாகள் (உங)

ஓடினாரினைப்புற்றங்கணொருசிறிதிருந்தாதமு
னோடினார்மீளினம்மைநந்தியாவதத்தபாலே
சூடினான்கொல்லுமென்னுததுணைனெவெருவியுளளம
வாடினார்மருங்குகண்டாரவளமலியடவியொன்று. (உச)

காம்புடைமலர்கள்பூத்தகாமருதடங்களாலும
பூம்பிணைப்பொழில்களாலுமபொருசிறைப்பறவையாலும
வாம்பிணையாளியென்குமரைகரிகவையமாமுன
னும்பலவிலங்கினாலுமணிகிளாவல்லியாலும். (உரு)

இடைவெளியின்றிமல்குமிருந்தளிர்க்கானநோக்கி
யடைவதோரணமாகவதனிடைபடுக்குத்தண்ணீர
தடையில்வாம்புரவிக்கூட்டித்தாங்களுமுண்டுபோங்கோர
வடதருநீழல்கானூஉமானிறடந்தேரிழிந்தார. (உ௬)

இழிந்துடற்புனிதம்பண்ணியிருந்தனர்நியமமாற்றிக
கழிந்ததுகதிருங்கங்குற்காலமுங்கலந்ததாட
லொழிந்தனபகறசரிக்குமுயிரெலாமுறக்கமுற்ற
வெழுந்தனவுழிதர்கிற்குமிரவினினுயிர்களெல்லாம. (உஎ)

ஆயிடையலக்கண்கூருமன்னவர்மூவர்தம்முட்
போயிடர்கிருபன்றானும்போசனும்பூமியென்னும்
பாயலிற்றுயின்றாரங்கட்பாய்பரித்தாமன்சீற்றத்
தீயினால்வெதும்பிதஞ்சான்சிந்தைநோய்கொண்டிருந்தான். (உ௮)

கார்ப்புழைக்கரங்களாதிகலந்துறைவிலங்கினேதை
யேர்ப்புழைச்செவியிற்கேளாவிதமுரசரவம்போலும
போர்ப்பிறர்கொடிபோலன்றிப்பொறையினேன்புகழ்ப்பதாகை
யார்ப்பரித்திடுங்கொலென்றவ்வயர்வுறுமசுவத்தாமன். (உ௯)

தழைத்தடங்கானுலாவுந்தந்தியைக்காணூஉத்தண்டம்
புழைக்கரமாகவீமன்புக்கனனென்னவஞ்சும்
பிழைத்தனுமரிதிறந்தபிதாவினிமீள்வதில்லை
யிழைத்ததீதெற்றுக்கென்றுவிரங்கிடுமிவ்வுளித்தாமன். (௩0)

நிசியெரிதாருவின்பாணீடுமாலோடுஞ்சேர்ந்த
பசுமுகில்பார்த்தியாரோபடர்வனம்புக்கசெய்தி
விசயனுக்குரைத்தாபொற்றேர்மீதடைந்திட்டானெனனு
வசைவுறீஇமயங்கிச்சோருமாண்டகையசுவத்தாமன். (௩க)

வயங்குகரிமுதுகிலேறிமணித்தலைபிடுங்கலாற்று
துயங்கிநேர்கடப்பிலோடியுற்றிடுமரையைநோக்கிச
சயுங்கிளாநகுலனூருந்தாவுபோர்வாசியென்றுத
துயங்கியுள்வாடியாகந்துளங்கிடுந்தூரகத்தாமன். (௩உ)

சூழியினீங்கிவான்மேற்சுடர்நெடுவாளைதுள்ளிக்
காழிருள்கிழித்தசோதிகண்ணினுட்கலத்தல்காணு
வாழியசாதேவன்கைமமருவலாவரைகொணமார்பம
போழொளிவாளினுடிப்புலம்பிடும்புரவித்தாமன். (௩௩)

இரவினிலுறங்காதிவ்வாறிருந்துருகியிவுளித்தாமன
பரவுபல்காகந்துஞ்சுபனைமலிகோளியின்மே
லுரமிருங்கரியசெய்யவுருவுடனொலிக்குமவெய்ய
கூரலினைக்காட்டிச்செல்லுங்குராலினைக்குறித்துக்கண்டான். (௩௪)

பெரியவக்கூகைபின்னர்ப்பிறங்கொலியொன்றுசெய்து
விரிநிழற்கொம்பரூடுமேனியைமறைத்துவைகித
திரியவுங்கொடிகளெல்லாந்திடுக்கிடவெழுந்துபற்றிக்
கரியவக்காக்கைக்கூட்டங்கலைத்துயிருண்டதன்றே. (௩௫)

கலைத்துயிருண்டுகாக்கைக்கால்களுந்தலையுமூக்கு
மலைத்திடுஞ்சிறையும்வாலுமடங்கலும்வேறுவேறு
வுலைததுடன்பறித்துவீசியொருசிறிதிடமிலாம
விலைததடங்கோளியெங்குமிறைததினிதிருந்ததம்மா. (௩௬)

முற்பகலிழைத்ததீமைமுற்றிடுங்கொடியர்தம்பாற
பிற்பகலொருகால்வென்றோர்பின்னொருகாலந்தோற்பா
ரற்பர்கள்பலருமாற்றாண்டகையொருவற்கென்னுஞ்
சொற்பொருடெளியயாருந்தொலைந்தனகாக்கையீட்டம். (௩௭)

ஆகுமச்செய்கைகண்டவப்பொழுதசுவத்தாமன்
கூகையைக்குரவனாகக்கொண்டிதுகுயிற்றுமாற்றா
லேகியாமொருவனாகவிரவினில்விரவலார்க்கு
மாகநாடளித்துமென்னாமனத்திடைவலித்தான்மன்னோ. (௩௮)

அருமையுண்டைவர்சேர்சென்றமர்விளைத்தாலிகோட
லொருமைசேருபாயம்வேண்டுமுரககேதனன்றனோடும
பெருமிதம்பேசிவந்தேம்பிறழ்விலாதெந்தவாறும்
வருமிதங்கடைப்பிடித்தன்மன்னுயிரெவைக்குமுண்டால். (௩௯)

மன்னவனேவனிற்பார்மாயவஞ்சனையினாலுந்
துன்னலர்க்கோறன்மாண்பேசுயோதனன்றனையும்வீழ்த்தா
ரொன்னலர்புணர்ப்பினாலேயுங்குருவலன்றிமுனனம்
பன்னுநான்மரபுதேர்ந்தபண்டிதர்பகர்ந்ததுண்டால். (௪௦)

உண்பவர்வழிநடப்போரோரிடத்திருப்போர்கங்குற்
கண்படுகின்றோர்மெய்யிற்கலைநெகப்படைத்தோரெங்கும்
புண்படவடிபட்டுள்ளம்புழுங்குவார்போரிலாக்கை
மண்படவிழுந்தோர்கையின்மாண்படையிழந்தோர்தம்மை. (௪௧)

இறச்செயலாகுமவேண்டார்க்கியாமுமிவ்வாறுசெய்த
லறச்செயலென்றுதுஞ்சுமைவரைப்படுக்கவெண்ணிப்
பொறைச்செயற்கிருபனோடுபோசனையெழுப்பியாங்கோ
முறைச்செயன்முகூர்த்தமொன்றுமுனனுபுமொழியலுற்றான். (௪௨)

மன்னவர்மன்னனாகிவலியரின்வலியோனாகிப்
புன்மைதீர்புனிதனாகும்புயங்ககேதனனைக்கொன்றா
ரொன்னலருபாயத்தாலேயுதைத்தனன்வீமனந்தோ
வெங்கிலையவர்களேனுமிறைஞ்சிடாமவுலிமீதே. (௪௩)

ஆதலினவர்தம்மையாடைவீடதனைநீங்கிப்
போதுறுவகைவளைத்துப்பொருகணைமாரிதூவிப்
பாதிநள்ளிரவிற்சென்றுபடுத்திடல்வேண்டுமென்றா
னீதவனுவலக்கேளாவியல்புழிக்கிருபன்சொல்வான். (௪௪)

பொருவிரிதுரோணநல்கும்புண்ணியப்புதல்வகேண்மோ
தருமமன்றுறங்குவாரைத்தடிந்திடல்சயத்தோவிட்டுக
குருமுனையேதியின்றிக்கொய்யுளைந்ததாகக்கோறல
பெருமையன்றிழிப்பர்யாரும்பிழையிதுவிடுதிபிள்ளாய். (௪௫)

வலம்புரித்தாமன்றாதைமனைவிகாந்தாரிமாறா
நலம்புரிவிதுரனின்னோநவிற்றிடிறங்கோறுமென்றான
சலம்புரிப்புரவித்தாமன்றானதுமறுத்துப்பின்னு
மலம்புரிகிருபனோடுமடங்கவினுரைத்தலுற்றான். (௪௬)

முந்தைநாளாகவத்தின்மூண்டபோர்ப்பாண்டுமைந்த
ரெந்தையைப்புணர்ப்பினாலேயின்னுயிர்கொண்டசெய்கை
சிந்தைநின்றிருமன்றிச்சிறியனாந்திட்டத்துய்மன்
றந்தையைக்கொன்றானென்றுசபையெதிர்சாற்றலாற்றேன். (௪௭)

மொய்வயப்போரிலெந்தைமுடிந்திடமுடித்ததன்றி
வைவயத்தானைவிட்டவராநிமகனைச்செற்றான்
செய்வய்ப்பற்குனன்றன்சிகண்டியைத்தண்டமாக்கொண்
டைவரேயிடித்தார்முன்னராருநெறியறத்தின்கூலம். (௪௮)

மறுத்துரையாடலொன்றுமாதூலவின்றிராவி
லறுத்திடுகின்றேனந்தவைவரையறிதியென்று
நிறுத்தவாம்பரிகடம்மைநெடுங்கொடித்தேரிற்பூட்டிக்
கறுத்துளங்கடிதிலேறிக்கந்துகத்தாமன்போனான். (௪௯)

இருவருமவன்பின்பற்றியேகினாரிவுளித்தாமன்
கருகிருட்சீரையில்லின்கடைப்புறஞ்சென்றுநின்று
பெருகியகங்கைவேணிப்பிஞ்ஞகன்பாதஞ்சாணித்
துருகினனளித்தானுள்வாளொன்றுமைநங்கைகேள்வன். (௫௦)

வாளொளிவிளக்கமேந்திமடிமனைபுகுவான்வாயிற்
கேளுறுகிருபனோடுகிருதவன்மாவையைத்துத்
தோளிணைபணைப்பவெங்குஞ்சுறறுபுதிரியாவல்லே
மீளுறீஇத்திட்டத்துய்மன்வியனறுகில்வீட்டில்வந்தான். (௫௧)

சென்றிவன்புகுதும்மெல்லைத்திரள்புயதிட்டத்துய்மன்
முன்றருவோகவெல்லாமுயன்றபோரிளைப்பினாலே
கன்றியதானையோடுங்கணபடைகொண்டாரங்கட்
டுன்றுவெண்டுகிலாபள்ளித்துயிலுமபாஞ்சாலற்கண்டான். (௫௨)

காண்டலுமுதைத்தான்காலாற்கண்டுயிலமளிநீங்கி
யாண்டெழுந்திவனைக்கண்டானவனவன்புரவித்தாமன்
மீண்டவன்குஞ்சிபற்றிமேதினிதன்னில்வீழ்த்திப்
பூண்டபூங்கழலானமோதிப்புரட்டினான்புரளவாகம். (௫௩)

அங்ஙலைதிட்டத்துய்மனச்சுறீஇயுறக்கநீங்கான
றன்னுடலபதைப்புறாமற்றளார்ந்தனனவன்களத்தை
வின்னெடுநாணாற்கட்டிமேழகமறுக்குமாபோற்
கன்னிகாமாபிலேறியரிந்தனன்கற்கித்தாமன. (௫௪)

பதாகினிமுழுதுங்கொன்றுபாவைபாஞ்சாலிபால
ருதாமனியுசசிகண்டியோங்குசோமகாமுன்னோரே
மதாசலம்புரவிகாலாண்மற்றவனுள்ளவெல்லாஞ்
சகாகதிசேர்தமம்போற்றடர்ந்தனன்றன்கைவாளால். (௫௫)

ஆடுபோர்க்கலக்கத்தஞ்சியாடைமண்டபத்தைநீங்கி
யோடுவார்தம்மைப்பற்றியுடன்றரந்துயிர்குடித்தார்
நீடுயர்வாயினின்றகிருபனுங்கிருபன்றானும்
வீடுபேறுழிவேலைபோன்றதக்கங்குல்வேலை. (௫௬)

அந்நிலம்மூவரிவ்வாறடுங்கொலையதனைநாடிக்
குந்திதன்புதல்வர்க்கஞ்சிக்குலைகுலைந்தவலங்கூரா
வுந்தியகடுப்பினோடியொருவரோடொருவர்கூடார்
சிந்தினர்சென்றார்செய்ததீவினைக்காறாப்ப. (௫௭)

வேறு.

வீறுவாம்பரித்தாமன்வெரீஇயுளம், பாறுமெல்லை * யிரேவையிற்பண்ணவர்
தேறுதொல்கதைவேதசிவாகமங், கூறியங்கட்குழீஇயிருந்தார்களால். (ருஅ)

நீர்த்தார்தங்கடிரள்கண்டவருழை, யோத்தமெய்யொடுமெல்லெனக்கிட்டினன்
சூர்த்ததீங்கிவன்சூழ்ந்திடுஞ்செய்கையைப், பார்த்துணாந்தனர்யோகபலத்தினால். ()

செய்தபாவந்தெரிந்ததபோதனா, ரெய்தனுக்கினர்வேதியவீனனே
கைதருந்துயிற்காவலர்க்கொன்றநீ, வெய்தெனப்படாவேறொருசூழலில். (சுO)

நோக்கினாலுனையாங்களுநோன்பினை, யாக்குநீதிக்கயலவராகுவே
நாக்கினாலுனைநாடிநவிற்றிடி, னீக்கரும்பிரமக்கொலைநேர்ந்திடுமே. (சுக)

கேடுசேரினுந்தான்பிறர்கேட்டினை, நாடுமாறதுநன்மையன்றெம்மையுங்
கூடநின்றுறைடுங்கூட்டலைநீயிவ, ணீடநின்றிட்னீங்குதியென்றனர். (சுஉ)

துங்கமாதவர்சொன்மொழிகேட்டலுந், தங்குமானத்தழலில்வெதும்பியே
யங்கணீங்கியேயச்சுவத்தாமனீள், கங்கையாறுகொள்காசியின்மேவினான். (சுந)

காசியாதிக்கடிநகரெங்கணும், வாசமேவுமறையவாநிந்தனை
பேசநொந்துழிதந்துபெரிதுளங், கூசியாவிகுலைந்துலைகினறநாள். (சுச)

நித்திரைக்கொலைசெய்பழிநீக்குவான், மைத்திரைப்புவியேத்திடமாமறை
முத்திரைப்பொருள்கண்டமுனிவனை, யெய்த்திரைக்குமிளைப்புடனெய்தினான். ()

ஏதமுன்னியொருமருங்கெய்தியே, காதலோடுசொரிந்திடக்கண்கணீா
வேதவோதைவெதரிவனத்துறை, வாதராயணன்றாளில்வணங்கினான். (சுசு)

மறைவியாதன்வயப்பரித்தாமனை, யிறைதெரிந்துழியெய்தலையிங்குநீ
நிறையிருட்கணபடுக்குநிருபரை, முறையினீங்கிமுடித்ததபாதகனே. (சுஎ)

பெருகும்பாதகமுனனுடன்பேசினு, மருகுறுதெமதாசிரமந்தனைத
திருமியேகுதியெனறலுநதிண்சிலைக, குருவினுமபலகுலைநதுளங்கூறுவான். (சுஅ)

உன்றனைசசரணகூறியுறுமெனை, நின்றனைகலைநீததிடிலாணினங
கன்றனைததிடாகாளையாதங்கள்பா, லினறனைககுமிரககமின்றாகுமால. (சுகு)

நீரம்வாரிநெடுங்கரையேறறினு, ஞாமாருயிாநல்குநாவேறெவா
சேரவானிற்செழுந்தருவீசினு, லாரவணபறவைககாணுகுவாா. (எO)

இழிந்தியாருந்துரப்பவிரங்கியா, ரொழிததிடாயென்றுனைப்புகலுற்றனன
கொழித்தமாமறைக்கோலவியாதநீ, பழிததிடாதருண்மற்றொருபறறிலேன. (எக)

முற்றுமுற்றவுணர்ந்தமுதுக்குறை, வுற்றவேதவியாதவுனக்கியான் [தே.
சொற்றல்வேண்டுங்கொல்சோர்ந்தவாகண்ணதே, கற்றமேலவாகண்ணருளென்ப

நீவிடாதெனையாளநினைகெனுத, தாவுவாம்பரிததாமனிறைஞ்சலும
பாவியானினறுபாணிப்பபனமறை, மாவியாதனமனங்கரைநதோதுவான். (எந)

யாதினும்பரிகாரமிதற்கிலை, கோதுநீங்குமுபாயமுங்கூறலாஞ்
சேதுவின்கட்செழுந்தனுக்கோடியென், றோதவாரியிலுண்டொருநீர்த்தமே. (எச)

தொன்மைஞாலந்துதிப்பவிளங்கிடு, நன்மையென்னுமுறுவதுநல்கிடும்
புன்மையாவையும்போக்கிடும்புண்ணியத், தன்மையாலுயர்சார்பிற்சிறந்திடும். (எரு)

* இரேவை—நருமதை.

ஒற்கநீக்குமுளம்வெளிசெய்திடுஞ், சொற்கமீயுந்துயரந்துடைத்திடும்
வற்கநீடுமருட்பவமாற்றிடு, மற்கடிந்தருளானந்தநல்கிடும். (எசூ)

துரிசுகாட்டுஞ்சுவன் * மொழித்திடுங், கரிசுதீர்க்குங்கடவுளர்போற்றிடும்
பரிசுநல்குந்தசரதன்பாலனுங், குரிசிலேந்துகுனிசிலைக்கோடியே. (எஎ)

சாந்தியாதிதவநெறிதந்திடு, மாந்தர்காலவரைக்கிடைநாளிலே
வீந்திடாமையுமவென்றியுமீமிசை, யேய்ந்தவாயுளுமின்புங்கொடுத்திடும். (எஅ)

ஓங்குமேன்மையுரையிலடங்கிடா, வாங்குவார்தனுக்கோடியின்மாதமொன்
றாங்கணெய்தியிடையினறமிழ்நதி, னீங்குநித்திரைச்செய்தநெடுங்கொலை. (எகூ)

என்றுவேதவியாதனியம்பலு, மன்றுவாம்பரித்தாமனதனுழைச்
சென்றுவைகலிடையின்றிததிங்களி,லொன்றுமூழ்கினன்சங்கற்பமோதியே.(அ0)

காலமூன்றுங்கவுசலைகான்முளை, மாலொழித்தவரதனைப்போற்றுவா
னேழுந்திங்களிறுதித்தினததினிற், கூலமாதனுக்கோடியிலாடியே. (அக)

ஈசனஞ்செழுதெண்ணியிருந்துப, வாச்மாகவருந்துயின்மாற்றியே
வீசுபானுவிரிந்தெழுமவேலையிற், கோசலேசன்விற்கோடிஃகுடைந்தரோ. (அஉ)

அன்றிராமனருச்சனைசெய்திடுங், குன்றவிற்கைக்குழகன்றிருமுன
நின்றுமார்பநிறைத்திடக்கணகணீர், நனறுசேரின்பக்கூத்துநடித்தனன். (அங)

ஆடல்செய்திடுமன்பினைநோக்கியே, பாடல்விஞ்சையர்பண்ணவர்சூழ்ந்திட
வேடுலாங்குழலேழையொடெய்தினன்,கோடற்றாமன்முனகொன்றையந்தாமனே

வந்துநின்றவளர்மறையுச்சிமேற், செந்தணிப்பொருட்செல்வத்தைக்காண்டலு
முந்துவாம்பரித்தாமனுருகிநெஞ், சிந்துவேணியன்றாள்பணிந்தேத்துவான். (அரு)

ஆடுகாலவகாலவன்றம்புய, ளுடுசேகரநற்கருணாகர
பாடுசாமமெய்ப்பாதிகொள்சாமமா, னீடுமத்தநெடுந்தொடைமததனே. (அசூ)

தியகங்கையாய்சென்னியிற்கங்கையாய், தூயசோதியாய்தொண்டரைச்சோதியாய்
தாயினல்லனேசார்புளனல்லனே, யாயகண்டனேயல்லுறழ்கண்டனே. (அஎ)

அன்பர்க்கண்ணியாயம்புலிக்கண்ணியா, யென்பின்றாரினாயெண்கடித்தாரினாய்
பொன்கொள்வேணியாய்போதகவேணியா, யினபவீட்டினாயென்பவம்வீட்டினாய்.

பாகவில்லனேபற்பதவில்லனே, மாகநாதனேமாமறைநாதனே
வேகவாணனேவேங்கைக்கவானனே, நாகநேத்திராநன்னுதனேத்திரா. (அகூ)

கம்புட்காதினாய்காமனைக்காதினாய், செம்பொற்பாதனேசெப்புநாற்பாதனே
யும்பாக்கும்பனேயோர்முலைக்கும்பனே, யம்புமாலனேயார்தருமாலனே. (கூ0)

என்னையாளவென்றேழுலகீன்றிடு, மன்னையோடுமடைந்தனையையனே
முன்னைமாலயன்காணருமூர்த்தியா, முன்னையான்றொழச்செய்தவமுள்ளதே. (கூக)

போற்றிபோற்றிபுயங்கபுராதன, போற்றிபோற்றிபொருவிரிபூரண
போற்றிபோற்றிபுரவெனப்போற்றினா, னேற்றினான்மகிழ்ந்துள்ளமியம்புவான். ()

வருதிவாம்பரித்தாமவுறங்கிடு, நிருபரைக்கொன்னெடும்பழிநீங்கினு [றான்.
யொருவர்முன்புநாமுற்றுழியன்னவர்க், கருமையொன்றிலைவேண்டிற்றறைகென்

* சுவப்பனமென்பது—சுவனமெனநின்றது.

கிற்பழிச்சிநெடும்பவநீங்கினேன், சிற்பரம்பரமற்றுண்றெரிசன
முற்பிறங்கருணைல்லறமுற்றிலார்க், குற்பவங்களிற்கோடியுதவுமால். (கூச)

தூண்டுசோதித்துணையடிநேயமே, வேண்டும்வேறிலைவேண்டுவதிங்கெனுத்
தாண்டுங்கொய்யுளைத்தாமன்வணங்கினா, னண்டநாதனுமவ்வரநல்கினான். (கூரு)

வள்ளலன்னவன்காணமறைந்தனன், றுள்ளுகந்துகததாமனுஞ்சூழ்வினை
யள்ளனீங்கினனன்றுதொட்டந்தண, ரெள்ளலின்றெதிரேற்றனர்யாவரும். (கூசு)

வேறு.

வருதிர்மாதவிர்வாம்பரித்தாமனேர்வளரிராகவன்வான்றனுக்கோடிநீர்
பிரிவிலாதெழுமவாஞ்சையுற்றுடுநீள்பெருமையாலிடர்தீர்ந்தருட்கூடினான்
விரிவினாலினிநீங்குமக்கோதினோம்வினைவெலாமிதுதான்றனைக்காதினாற்
பருகுவாரெவர்தாம்படிப்பார்கடாம்பரமகாரணர்பூங்கழற்சேர்வரே. (கூஎ)

அசுவத்தாமாச்சருக்கமுற்றிற்று.

ஆ_ திருவிருத்தம் - க,கூஉங.

தருமகுத்தச்சருக்கம்.

அரியமாதவர்தம்மையங்கெதிர்கூதனோக்கினனன்பினாற்
றிரியவுந்தனுக்கோடிநீரதனமேன்மையொன்றதுசெப்புவான்
பரிவினோடுதிர்பண்டொராமன்னவனுண்டவன்பெயர்பகருவார்
தருமகுத்தனெனுமதிக்குலநந்தனல்கியதனயனே. (க)

வாளில்வைத்திடும்வென்றிவாம்பரிமன்னன்மன்னவர்சென்னிதன்
றாளில்வைததிடுநந்தனந்தமிறரைமகட்கருடந்திடு
நாளில்வைததிடுநல்வளங்கெழுஞாலமங்கையைநீடுசேய்
தோளில்வைததடலவாயில்வேடுவர்சூழ்புலப்பகைசாடியே. (உ)

உண்டுணாவளியூணொரீஇத்தவமுன்னிநீள்வனமுற்றனன
வண்டுணாநறவொழுகுதார்ப்புயமைந்தனுமபினாமாதவீர
மிண்டுநாடுபுநேருநேரலர்வென்கொடுததிடமுன்கொடாக்
கொண்டநாடுபுநீதிநூன்முறைகுவலயம்புரவுற்றனன. (ங)

அமையமன்னதில்வேள்வியெண்ணிலவமரர்நாயகனாதியோர
தமதுசிந்தைமகிழ்வுறும்படிதானிழைத்தனனந்தணர்க்
கிமிழ்திரைப்புனலூருமேமமுமீந்தளித்தனனாதலாற்
சுமைநிலத்தவர்தத்தமக்கியலுறைவழாநெறிதுன்னினார். (ச)

கருகுநெஞ்சுறுகள்வருங்கொலைகளவுமசயதிலர்காசினி
நிருபனாகியதருமகுத்தனுநீர்மையிற்பிறழாமலே
பெருகுபார்மகடுயர்தணித்திசைபெருகவைகுறும்வைகலின
மிருகவேட்டையின்வெஃகிவாசியின்மேற்கொளாவனமேவினான். (ரு)

வேரின்வாய்கமழ்பலவுசண்பகம்வெண்ணெர்ப்புன்னைமாதுளந்
தாரவேவளர்வேங்கைகோங்கொடுதூங்குதீங்கனியோங்குமாப்
பாரநீபமசோகுபச்சிலைபன்னிபூங்குமிழ்பாடல்
மாரமாரகிலாமொருங்கிடுமரசுமேவியவடவியே. (சு)

நவசரோருகநாண்மலர்க்கருநாதவண்டினமொய்த்தலாற்
கவருநல்லிசையாழினிற்றிகழ்காமர்பத்தரினமல்கவே
யிவருநீண்முகைமாடகம்புரையேரிலஞ்சியதெங்கணுங்
குவலயம்பொலிவெய்தவந்தருள்குரிசின்மேவியகானமே. (எ)

கம்பமைக்கடவருவிதூங்கிடுகரவரைக்குலமெங்கணும
வெம்பழற்பொறிசிந்துசெஞ்சுடர்வெங்கணெண்கினமெங்கணுங
கொம்பினிற்புரிதிருகினிற்குதிகொண்டுலாங்கலையெங்கணு
மம்புலித்திருமரபினீடுலகாளிமேவியவடவியே. (அ)

பாங்குபூங்கிளிபாடவாடல்செய்பச்சைமாமயிலெங்கணு
ஞாங்காவண்டிசையோடுதெள்ளிசைநாடுகோகிலமெங்கணுந்
தூங்குபஞ்சரவூசலாடுபுகுழ்குரீஇயினமெங்கணு
மோங்குதோளவலியாமொருதுங்கவுதாரிமேவியகானமே. (கூ)

புறமகத்துறையாகமேதகுபுண்ணியத்துறையுட்படுந்
திறமகத்துறைபலகலைத்துறைசீரமறைத்துறைதிரிபுசான்
மறமகத்துறையாவருட்டுறைமருவுமாதவர்வாழ்வதா
மறமகத்தியனமன்னனத்திரியோடடைந்திடுமடவியே. (கo)

ஆயிடைத்திரிகாலையெல்லியடைந்ததண்ணவுமந்திவாய்
நேயமிக்குயாசந்தியின்கடனெறிமுடித்தருணிவெனாடுங
காயமேற்றிரிகொண்டமந்திரமெண்ணிவெம்புலிகானமாா
சீயமஞ்சுபுதாருவினமிசைசெனறிருந்தனனறரோ. (கக)

வேறு.

ஆங்கணுளியமொன்றதுதானடங்காமடங்கலதுதரப்ப
வேங்கிநெங்கியிளைததோடியிறைவனிருக்கும்பாதவத்தி
னோங்குகடுப்பினுடனேறியுலகமுழுதுமொருகுடைக்கீழ்த்
தாங்குந்தருமகுத்தனொனுஞ்சயவாளரியைக்கண்டுரைக்கும. (கஉ)

வெருவாதொழிதிவேல்வேந்தேவிடபியிதன்கண்விடிவளவு
மிருவேமிருத்துமரத்தடியிலிருக்குமரியொன்றெல்லியிதி
லொருபாதியுமயான்விழித்திருப்பவுறங்குநீமற்றொருபாதி
நிருபாதுயில்வன்யான்விழித்துநீயிங்கிருத்தியென்றதுவே. (கங)

நன்றென்றுளங்கொண்டியாபிழைப்பானந்தன்மகனுந்ததமதி
லொன்றுபாதிவிழிதுயின்றானுளியம்புரப்பவதுபோழ்தில்
வென்றிமடங்கல்விளிதடெண்கைவிடுவாய்தள்ளிவேந்தனைநீ
யென்றுநரரினமிகக்கொடியரிறைவரெனவுமியற்பல்லம. (கச)

வயமாவதனையெதிராேக்கிவனத்திற்றிரியுநீயொன்று
நயமாரறத்தினறிமறியாய்நமபிரேனைக்கொலைபுரிந்தோா
பயமாந்திரயப்படுகுழியிற்படிவர்பகருமபழிநீங்கி
யுயமாமகங்களோாயுதமுஞற்றினுமொழியாதால். (கரு)

பனவக்கொலைமுன்பாதகங்கள்பாற்றற்குளதுபரிகாரந்
தனைநம்பினரைவதைத்தபவஞ்சாயத்துரக்குந்தவமில்லை
கனகவரையும்பெரிதன்றுகருதுங்காலைக்காதலினுன்
மனநண்புடையாருயிர்கவரும்வஞ்சம்பெரிதாமென்றிடலும். (கசு)

பல்லமொழிகேட்டெதிர்மாற்றம்பகராதிருந்ததடமடங்கல
வெல்லுமயில்வேற்றருமகுத்தன்விழித்தானதனபின்விறலுளியம
வல்லையிருகண்டுயின்றதவண்மன்னன்மகனைவயப்புலிபார்த்
தொல்லையிதனைத்தள்ளுதிநீயொழிந்தாலிடையூறுனக்கெய்தும். (கஎ)

என்னையெனிலிங்கிசைத்திடுவெனிரவியெழுந்தாலியான்போவன்
பின்னையுளியம்பயந்தீருமபிறழ்வாளுகிசோம்பருவிலங்கு
தன்னைதுணியேலிஃதிறந்தாற்சாருமபகைவேறிலைவிடியா
முன்னம்விடுதிதள்ளியெனமொழியவிறைவனமுறைதேரான. (கஅ)

மடியிலுறங்குங்காடிதனைமறங்கூரவயமாவிருக்குமரத்
தடியில்விழத்தான்றள்ளுதலுமழியாவறனுண்டாகையிரு
லொடிவினகத்தாறபசுமபணைமேலூனறிககபங்கருற்ததழுவிப
படியில்வழுவாதுய்ந்ததுயிரபலலம்விதிக்காரபதியாவரா. (ககூ)

அனைத்தாங்காலையதுசீறியரசன்மதலாயறம்பிழைத்தா
யெனைத்தோர்பிழையுமுனக்கிழைததேனிலலைபிருகுவிருங்குலத்தே
னினைத்தாலடைவேனெனவடிவுநீடுந்தவததாலெண்குருவந்
தனைத்தானெடுத்தேனவிளையாட்டாற * சானகாட்டனபெயாகண்டாய. (உ0)

ஊகித்துணராதுறங்குமெனையொழிததபவததானுனமதத
ஞுகித்திரிநீவனததிடையென்றரசனடுங்கவருளுசாபம
வேகிததுரைத்துவிறலுளியமிருகபதிதனமுகநாடி
யோகிற்சிறந்ததலைமையினுலுண்மைதெரிநதங்குரைசெய்யும. (உக)

அளகைபுரக்குமந்திரியாமவனமநதிரிமாவரசலலை
குளகுண்கரிகுழிமகிரிநீகுறுகியொருநாட்குலமடவாள
புளகமகுடமுலைதோயும்புரிவாலொளனறுபுலங்கொளளா
துளகுபுரையுமுனகையவளோடுமெவிளையாட்டேற்றனையால.. (உஉ)

ஏசுபுனையாக்கௌதமன்றுனெச்சமதறகாருசமிகுதொடிபயால்
காசுபுனையுங்கண்டருக்கோரகன்னியுதவுங்கருமபடமா
மாசுபுனையுமவரையதன்கண்வந்தானுனதுமணிமருங்குற
றாசுபுனையாநிலைகாணூஉததுயாகூரரியாகெனசசபிததான. (உங)

பெற்றயதனுல்விலங்குருவம்போபததிரனுமுனக்கநா
ளற்றார்க்கருளுமளகையாகோனறததிற்றிரியானவனபாஙக
ருற்றுரெவருமத்தகையருயிரிங்கெனைநீயுணலாமோ
விற்றுமனைத்துஞசமாதியினுலெண்ணினேனென்றியம்பியதால. (உச)

பல்லமினையபல்லமொழிபகரக்கேட்டுப்பததிரனுய்
வல்லைமடங்கலுருவகற்றிவயங்குந்தனதன்மந்திரியுரு
சொல்லுமுனியந்தனைப்போற்றிச்சூழுஞ்சாபக்கௌதமனு
நல்லமொழிநின்னுடனெனக்காநாணீங்கிடுமீதெனநவின்றான். (உரு)

* தியானகாட்டன் சானகாட்டன் என நின்றது.

சிங்கவுருவந்தீர்ந்ததனாற்றேர்ந்தேன்சானகாட்டனென
விங்குன்றனைநாளெனவணங்கியெண்குமுனியையேமவொளி
யங்கண்விமானந்தனிலேறியள்கையடைந்தானதன்பின்னர்த
தங்குநெறியாலைவவிடத்துஞ்சானகாட்டன்சரித்தானால். (௨௬)

தருமகுத்தனுன்மத்தன்றானாய்நகரந்தனையடைந்தான்
கருமந்தெளியுமமைச்சரவற்கானூஉரேவைக்கரையிருக்கு
மொருமைமனங்கூர்தந்தையுழையுடன்கொண்டணுகியுளமருட்கை
வருமந்நெறிசொற்றெதிர்விடுத்துமன்னன்றிருமுன்வணங்கினார். (௨௭)

அரசனவனுஞ்சைமினிதாளரியமகனோடணைந்திறைஞ்சி
யுரைசெய்திவனுக்குன்மத்தமொழியுமுபாயமுரையென்றான்
வரைசெய்தளப்பின்மறைவகுததோன்மாணவகன்கேட்டுளப்போதிற்
புரைசெய்மருடீர்பரஞ்சுடரைப்பொழ்துநீடப்புணர்ந்தறைவான். (௨௮)

சானகாட்டன்சாபததாற்சார்ந்திதுதானறணிவேட்டை
போனகாட்டிற்கைகேசிபோற்றுருழிஞைபுகுதுபவ
மானகாட்டிற்போதியெனவந்தோன்வயவிற்கோடியிதற்
கானகாட்டைபிறிதொன்றாலகலாதலகையாகையினால். (௨௯)

நாணிற்சிறந்ததனுக்கோடிநன்றாமெவற்றுநன்றாகுஞ்
சேணிற்சிறந்தவீடுதருஞ்செல்வம்பெருக்குந்தீங்கொருக்குங்
காணிற்சிறந்தமறைபகருங்காட்சித்ததனாற்கழல்வேந்தே
பூணிற்சிறந்தபுதல்வனோடும்போதியவணீயெனப்புகன்றான். (௩௦)

வேந்துமுனியுஞ்சைமினிதாள்வீழ்ந்துபணிந்துதனுக்கோடி
போந்துமதலையொடுநியமம்போற்றிப்படிந்தானெழுமுனனங்
காந்துஞ்சுழல்கட்கடிநீங்கிக்கடிதினகன்றதலைக்கயகை
யேந்துமவுலிக்கோசலைசேயிறையையிறைஞ்சியிருந்தொருநாள். (௩௧)

மகனைவிடைகொண்டிறையிருடிவனத்திற்புகுந்தான்மற்றங்கட்
டகவினீடுந்தருமகுத்தன்றானுவிராமநாயகனுக்
ககலுள்பலவுமாடகமுமணியாடைகளுமவைபிறவு
மிகவுமுதவிவிப்பிரர்தாம்வேண்டுவனவுங்கொடுத்தனபால. (௩௨)

ஏனுதியரோடணிநகர்மெய்தியிடாரீத்தின்பினொடு
மானுதளித்தான்கடலாடையகலமறத்தினகலாமற்
கானார்மருள்கூருனமதத்தங்கடியகுமரகண்டன்முதற்
கூனார்கொடுங்காற்றனுக்கோடிகுடையுமவாபாலடையாவே. (௩௩)

சரதமிதுமற்றிருகாலுஞ்சாற்றுகின்றேந்தனுக்கோடி
வரதமணிநீர்துறந்தயனீவாஞ்சைபுரிவான்பத்திரையி
னிரதநறும்பால்கிடைத்திருக்கவிரநதுதிரிவான்கள்ளியினபால
விரதமருவுஞ்சுடர்ஞானவிளக்கிற்றிகழும்விழியுடையீர். (௩௪)

மொழியும்பிறநீதனின்முககான்மொழியாவிதன்போழ்கினறு
வழியுநகமலமலரயனூர்வாழுந்திருவின்வளமெய்தும்
பொழியுந்தருணநிலாமவுலிப்பொருளிற்பிறிதாமபொருளனைத்து
மொழியுநிலையுந்தவநெறிநின்றொழியாநிலையுமுடையீர்காள. (௩௫)

வேறு.

முரணகற்றுந்தூயசீர்முனிவிர்மற்றிங்கோதினெ
மிருசெவிக்கொண்டோர்கள்பாவிரணியத்தின்சோரமே
பரமகத்தின்கேண்மையோர்பழியனைத்தும்பாறவே
தருமறத்தின்றாதையாந்தருமகுத்தன்காதையே. (கக)

தருமகுத்தச்சருக்கமுற்றிற்று.

ஆ_ திருவிருத்தம - க,கருகூ.

பராவசுச்சருக்கம்.

போர்திகழ்சூதன்மறிததும்விருப்பொடுபேசுற்றான்
றேருமின்மாதவிரற்புதமேதகுதிருமல்கும்
வார்சிலைநீடியகோடியிலுண்டொருவளனின்னும்
பாரதிலுண்டுபராவசுவென்றொருபனவன்றான. (க)

ஆதியநான்மறையோதியுணர்ந்தவனவனோர்நாட்
டாதையையின்னனெனத்தெரியாதுயிர்தானுணடாங்
றீததுதீர்ந்ததுகோசலையேந்தல்சிலைக்கோடி.
யோதனநீதனிலாடுமறறதுரைசெய்கேம். (உ)

அவவகைசொல்வுழியந்தணனையனையறியாம
லுவவகைசெற்றதுவிற்றருகோடியினுதகந்தோய்ந்
திவவகைபாவமுருக்கியதென்றதனியல்பெல்லா
மெய்வகைமாதவர்சூதவிரித்துவிளமபென்றார். (௩)

சென்றுவினுமொழியஞ்செவியூடுசெலசசூத
னன்றெதிகூறுமவர்க்கடல்சோபிருகததுயம
னென்றொருமன்னவனுண்டவனீள்கடலிடமெஙகு
நன்றுணாநீதிவழிப்புரவுற்றனனகைவேலான். (௪)

சத்திரவேள்வியினிந்திரனுதியாதமைவென்றோன்
முத்தியுணர்ந்தரயிப்பியனென்பவன்முடிமன்னன்
சித்தம்விருப்புறுதேசிகனுய்மிகுசெயல்வேள்விக்
கொத்தவைமுற்றுநடத்துமறைத்துறைகொண்டுள்ளான. (ரு)

ஏரருவாவசுநீடுபராவசுவெனமைந்த
ரோரிருவோருளரன்னரயிப்பியனுதவுற்றோ
ராரணநான்கதனங்கமொராறதனளவாகு
நேரியநுண்பொருணூலவையாவுநிறைந்துள்ளார். (சு)

கங்கையினீடுபுகழ்க்கொடைசேர்பிருகத்தும்ம
னிங்கணைவீருயர்சத்திரவேள்வியிழைப்பானென்
றங்கவர்தம்மையழைத்தலுமையனதருள்பெற்றே
பொங்குமருத்துவர்போலொளிமிக்கவர்புக்காரால். (எ)

ஏசறுதந்தைரயிப்பியன்முன்னவனில்லாளோ
டாசிரமத்தினிருந்தனன்மைந்தர்களவ்வேள்வி
மாசறவாற்றினர்மற்றதுகாணியவந்துற்றார்
காசறுமன்னன்விளித்திடமாதவர்கணமிக்கார். (௮)

ஆங்கவர்கோதமனத்திரிகாசிபனணியாழின்
வாங்கிசைநாரதனீடுபராசரன்மார்க்கண்டன்
றாங்குபுலத்தியன்குற்சன்வசிட்டன்சதானந்தன்
றூங்கொலிவேதவியாதனுடன்கிரதுர்த்தக்கன். (௯)

வைப்புலகத்தினென்னும்புலகன்கவிவான்மீகி
தப்பிலரும்பொருணூலுணர்தௌமியன்சாபாலி
யெப்புவியும்புகழ்கௌசிகனென்பவரிவர்மைந்த
ரப்பெரியோரருண்மைந்தர்தம்மைந்தர்களளவில்லார. (௧௦)

உற்றிடுபெண்ணவர்தம்மையருக்கியவுதகத்தான்
மற்றையநல்லுபசாரவிதத்தினினமன்னன்ற
னற்றமிலர்ச்சனையாற்றினன்வேள்வியதணிகாண்பான்
சுற்றியநான்குதிறங்கொள்பதாகினிசூழ்போத. (௧௧)

வேள்விசெயற்கியல்பல்பொருளோடுறும்விறல்வேந்த
ராள்வினைவன்மையரெட்டிகள்வன்னிகளகம்வாழ்வோர
கோள்வினைநீங்குபுகாணிலமாதொடுகுறுகுற்றோர்
சூழ்வினைமுற்றுமவிடுத்தவர்தாம்பிறர்சூழ்ந்துள்ளோர். (௧௨)

கூடினர்யாவரையுமங்கவாதன்மைகுறித்தண்ண
னீடியபூசனைசெய்துபருப்பொடுநெய்தேன்பா
லோடியலைவகையுண்டிமணிக்குலமுடைபொன்பூ
ணேடியவேணவுநல்கிமகிழ்ச்சியினிறைவித்தான். (௧௩)

அச்சபையூடுரயிப்பியனைமைந்தரறத்தாற்ற
லெச்சநடத்தவசிட்டனைமுன்னவரெதிர்காணூஉ
விச்சையின்வல்லுநரிங்கிவர்போலிலாவேறெனரு
வுச்சிதுளக்கினர்தொக்கவர்யாருமுவப்புற்றார். (௧௪)

ஆயிடைநீடுபராவசுவேள்வியதிற்சில்ல
மேயசெயற்புரிவுற்றனன்மூனறும்வேலைக்கட்
சாயமகப்பணியீற்றிலகப்பணிதானுடிப்
போயினனாசிரமதொருதான்றனிபுரையில்லான். (௧௫)

ஏகுழிமாவிருண்மல்கியகாட்டினிலேணத்தோ
லாகமறைப்பவிருந்திடுதந்தையையறியானாய்
வேகவினைக்கொள்விலங்கிதுகொல்லும்விரைந்தென்று
வாகைபுனைந்தபராவசுநித்திரைமயலாலே. (௧௬)

*உய்ந்துயிர்வாழ்தல்பொருட்டுரயிப்பியனுடல்செற்றான்
வந்தனையைத்தெரிவுற்றபினெந்தையைவதைசெய்தே
னிந்தமறக்கினியென்செயலென்றழுதிடர்கூரா
வந்தவினைக்கடனாற்றுபுபின்னையவன்றன்பால். (௧௭)

சென்றுணராதுயிர்தாதையைவாட்டியசெயல்சொற்றா
னன்றவனாகம்வெதும்பியிடர்க்கடலாழ்ந்திட்டா
னின்றபராவசுவாங்கிளவன்முகநேர்நோக்கி
யொன்றுரைகேண்மதியெம்பியெனாவிஃதுரைசெய்வான். (௧௮)

வாம்பரிமன்னனிழைத்திடுசத்திரமகமாற்றற்
கோம்படைசெய்தனமிப்பணிமுற்றுதலுன்றன்னா
லாம்பரிசன்றறியாதுயர்தாதையையடுபாவம்
போம்பரிகாரமுனாற்றலுமுள்ளம்புரிகிற்கும். (௧௯)

ஒல்லையினீவிரதங்கொளல்வேண்டிடுமொருவேனா
யெல்லையில்சத்திரவேள்விமுடிக்குதல்யான்வல்லேன்
வல்லைகொணீயெனவோதலுமுன்னவன்மற்றன்னோன்
சொல்லைவினாயருவாவசுவாங்கெதிர்சொல்கின்றான். (௨௦)

பேதுறல்யான்விரதம்பிரமக்கொலைபிரிவெய்த
வேதமிலாவகைசெய்குவல்சத்திரவெச்சத்தை
நீதவறின்றிமுடித்தியெனாமகிலைநீங்கிப்
போதுதல்செய்தனன்முன்னவன்வேள்விபுரிந்துற்றான்.. (௨௧)

வேறு.

ஆங்கணீத்தகல்பின்னவனாண்டுபன்னிரண்டு
நீங்கிடாவிரதம்பிரமக்கொலைநீங்கும்
பாங்கிலாற்றுபுதகையொடும்வேள்வியிற்படர்ந்தா
னோங்குமுன்னவன்கண்டவனரசனோடுரைப்பான். (௨௨)

தலைவகேளருவாவசுத்தானிவன்பிரமக்
கொலைபுரிந்தவன்சத்திரவேள்விசேர்கொள்கை
யிலையிவன்றனையிக்கணநீக்குதியின்றே
னிலைமைசான்மகம்பலித்திடாதென்றலுநிருபன். (௨௩)

இரவினீள்வனத்தையனைத்தான்கொடீங்கிரிய .
விரதமாற்றியதம்பியர்க்குரைத்திடும்விரோத
வரவுதேர்கிலன்மன்னவன்மாமகச்சாலை
யொருவியேகெனவாஙகருவாவசுவுரைப்பான். (௨௪)

யானிழைத்திலனிப்பிரமக்கொலையென்முன்
றானிழைத்தனன்றன்பழிபாறிடத்தனக்கா
வானநோன்பியானாற்றினேனாறிரண்டாண்டு
மானவேலவமற்றிதுபடிறெனமன்னன். (௨௫)

ஆர்வமுண்மையாற்பராவசுமேற்பழியாயான்
பேர்வைநீயெனப்பின்னருமிவனையேபிரித்தான்
சார்விலாதகறரணிகாத்தலுக்கினுந்தம்பாற்
சேர்வையோர்ப்புரந்தளிப்பதுமன்னவாசெயலே. (௨௬)

நிருபனீத்தபினந்தணர்யாவருநீத்தார்
வெருவுகூரருவாவசுவேறொருவனம்போ
யொருவராற்றருந்தவமுதற்சிலபகலுனாற்றிப்
பொருவில்பானுவைநோக்கியோர்நோன்பதுபுரிந்தான். (௨௭)

கோன்பிறனிவனேதரும்பரிசினைநோக்கி
வான்பெருஞ்செயற்கரியதாந்திருவுளமகிழ்ந்து
தேன்பிறங்குதாரிந்திரன்முதலினோர்செறியத்
தான்புகுந்தனன்றரணியிலிலகுசீர்த்தரணி. (௨௮)

தஞ்சமில்புவிக்கொருதனிநாட்டமாய்த்தலைகெட்
டெஞ்சமாவிருளெழுதருமிரவியைக்காணூஉக்
கஞ்சமாமலர்மலர்த்திடுமெவன்கழற்கஞ்சம்
வஞ்சமில்லருவாவசுவாழ்த்தினன்வணங்கி. (௨௯)

வணங்கிநின்றிடும்ரயிப்பியன்மகன்முகந்தெரிந்து
பிணங்கிறேவரும்பானுவும்பேசுவார்பிள்ளா
யிணங்குநின்பிரமசரியநிலைமையாலிழைக்குங்
குணங்கொண்மாதவக்கொள்கையான்மறைபயில்குறிப்பால். (௩௦)

புனிதனுயினைபராவசுப்பொய்மொழிபுகன்று
தனியகற்றவும்பொறுத்தனைதந்தையைக்கொன்ற
துனியொருங்கநீள்விரதமற்றவன்றனைச்சுட்டி
நனிபுரிந்தனைநவையுனக்கென்கொலோநவில்வார். (௩௧)

தாவிலுன்றனைக்கொள்ளுதுந்தள்ளுதுமவனை
நீவரம்பெறவேண்டியநிகழ்த்துதியென்றார்
தேவருஞ்சுடர்த்திவாகரச்செல்வனுஞ்சிந்தை
நோவுதீர்ந்தருவாவசுவவர்க்கெதிர்நுவல்வான். (௩௨)

ஐயனுருயிர்பெற்றெழுமவவரமருளிச்
செய்யவேண்டுவலென்றனனீந்துபின்றேவர்
பொய்யிலாயினமொருவரங்கேளெனப்புகன்றார்
மையறீரருள்சேரருவாவசுவகுப்பான். (௩௩)

தன்னையன்றனைத்தன்கையாற்றடிந்தவத்தவறு
முன்னையோனையும்விடவருள்வீரெனமொழிந்தான்
பன்னுவாரவர்தாதையாம்பனவனைக்கொன்றாற்
கென்னையோபரிகாரம்யாமியம்புவதினியே. (௩௪)

பெற்றவந்தணனுருயிர்கொன்றவப்பிழைதான்
மற்றொருத்தர்செய்தவத்தினன்மாறுமோஷமைந்தா
சொற்றிடப்புகிற்றான்றவமாற்றினுந்தொலையா
திற்றெனச்சொலுந்திறமிலோம்யாம்பரிகாரம். (௩௫)

என்னவோதியதேவரையெதிர்குறித்தேத்திப்
பின்னுமாங்கருவாவசுப்பேசுவான்பெரியீர்
முன்னுநும்பெருந்தகைமையாலுய்யவென்முன்னோ
னென்னைவெஃகியோருபாயநீரியம்புமினென்றான். (௩௬)

அவர்நெடிப்புறச்சானமுற்றிருந்துணர்ந்தவாசி
யுவரியின்கரையிராகவனொளிர்திருக்கரத்துத்
தவர்கொள்கோடியென்றொருபுனலுண்டுதன்றகைமை
யெவரளப்பவரில்லைமற்றதுதனக்கெல்லை. (௩௭)

வரமளித்திடும்வரம்பிலாவறம்பலவழங்கும்
பிரமகத்திதேம்பிரசமுண்பெரும்பவமரும்பொன்
கரவுநீள்குருதற்பகமனங்கலப்பென்னப்
பரவுபாதகமைந்தையும்வல்லையிற்பாற்றும். (௩௮)

நாட்டமின்றியேபடியினுமப்புனலானம்
வீட்டில்வைத்திடும்வெங்கனாநரகிவைவிளையா
காட்டுமெய்ப்பொருட்காமமுங்கண்ணுதல்கயிலைக்
கோட்டிலேற்றிடுங்கோசலைமகன்றனுக்கோடி. (௩௯)

முரணுலாந்தனுக்கோடியென்றுரைத்திடின்முக்கா
லரணமாயவற்கறம்பொருளின்பம்வீடளிக்கு
மிருணநீக்கிடுமிப்பழியித்தனுக்கோடி
சரணமாவடைந்தாடினாலொழியுமுன்றமையன். (௪௦)

மந்தணப்பொருளுனக்கிதுவகுத்தனமென்று
வந்தரத்தவர்தாமறைந்தந்தரம்போனா
ரிந்தவாற்றடைவடையவுமிளையவனெய்தி
முந்துநீத்திடுபராவசுத்தன்னுடன்மொழிந்தே: (௪௧)

அணுடா

கொண்டெடன்படர்ந்தரியசங்கற்பமுங்கூறி
வெண்டிரைப்புனல்வீழ்ந்தமிழ்ந்தெழுந்திடும்வேலைக்
குண்டலம்பிறந்திட்டதோர்வடிவிலாக்கூற்று. (௪௨)

மாண்பராவசுகேண்மதிதந்தையைவதைத்த
வீண்பெரும்பவநரகினில்வீழ்த்திடாவண்ணஞ்
சேண்படர்ந்ததென்றதுவினாய்ச்சிந்தைநோய்தீர்ந்து
கோண்புணர்ந்திடாவிளவலோடுளங்களிகூர்ந்தே. (௪௩)

சராசனப்பெருங்கோடியைத்தலையினால்வணங்கி
யிராமநாதனையிணையடியிறைஞ்சினனேத்திப்
பராவசுப்புகழ்த்தமபியுந்தானுமாய்ப்பயந்தோன்
விராவுமாசிரமந்தனைமேவினார்விருப்பால். (௪௪)

மாய்ந்ததாதையுமெழுந்தனன்மைந்தரைக்கண்டா
னாய்ந்தமூவருமாயிடையின்பமுற்றமர்ந்தார்
சாய்ந்தமாண்டனுக்கோடியிலாடியதகையா
லீந்துளாரருள்பராவசுவிடத்திலாங்கெவரும்.

வேறு.

எற்பராவருட்போதவறத்தினீரிப்பராவசுப்பாவமொழிததவா
றற்பினாலுமக்காகநவிற்றினோமற்பமார்சுரைப்பானமுதற்கணோர்
பொற்பில்வினைத்தீமைகணத்திலேபுக்கபானுமுற்சேரிருளொப்பவே
கற்பரேவிசைக்காதிலடைப்பரேற்கைப்புருதவிக்காதையகற்றுமே. (௪௬)

பராவசுச்சருக்கமு று:

ஆ திருவிருத்தம் - ௨௦௦௫.

கவிசம்புச்சருக்கம்.

ஆங்கண்மீளவுஞ்சூதமாமுனியழிவில்பண்ணவர்குழுவைநாடியே
தாங்குவார்தனுக்கோடிதீர்வளஞ்சாற்றுவானெடுதேற்றமாதவீர்
நீங்கள்வம்மினோகேண்மினீரெனாநீடுதெண்டிரையாடைவையகேற்
பாங்கிலோர்நரியோடுநண்புதான்பண்டொர்வானரங்கொண்டுவைகிடும். (௧)

அன்றுமானுடமவையிரண்டுமுன்னந்தநாளினுமளவில்கேண்மையா
லொன்றிவாழ்ந்ததம்முண்மைதேர்தலாலுருவம்வேறுவேறாகமாறியுந்
தொன்றுநாடியேதோழமைக்கொளுந்தொடர்புநீங்குறாசுடலைதன்னிலே
நன்றுதாங்களித்துறையும்வேலையினரியைநாடிவானரநவிற்றிடும். (௨)

யாதுபாவநீமுந்தியற்றினையீமமேவிறந்திட்டபேர்கடங்
கோதுசேர்பிணத்தசையருந்துவாய்கூறுசம்புநீயென்றுகூறலு
மாதிதேர்வுறீஇயிகலனுங்கதற்கறையுமுள்ளவாறந்தநாளியான்
வேதநூல்கரைகண்டவிப்பிரன்வேள்வியோடெலாவிதியுமோர்ந்துளேன். (௩)

மல்லறேவசன்மாவெனுமமோர்மறையவன்றனக்குதவிவாசகஞ்
சொல்லியீந்திலேன்றோடமன்னதாற்சுடுவனத்தழன்றடியருந்துகே
ணில்லையென்றிடாதேவராயினுமிடுதல்செப்பியேயீந்திடாரெனி
லல்லல்கூர்நரியாவரப்பொருளற்பமாயினுமதிகமாயினும். (௪)

நாடிநல்குவோமென்றுநல்கிடார்நச்சும்யாவையுநாசமாயிடும்
பேடிபான்மகப்பேறிலாமைபோற்பிறவிபதிலாமறமுடன்கெடுங்
கோடியென்றுவேதியனையொன்றதன்கொடைபுரிந்திடார்கொண்டபாதகம்
பாடில்வாம்பரிமேதநூற்றினும்பாறிடாவெனக்கென்றுபாறுமோ. (௫)

ஆகையானரியாவதுண்மையேயந்தணாளருக்கருள்வழங்கியே
யீகைசெய்திடாருணர்வின்மேலையோரீதுமென்றதங்கீதல்வேண்டுவா
ரோகையாலெனுவோதியேநரியொன்றுகேள்கவியென்றுகூறிடு
நீகுரங்குருவானதெனகொலோநீடுபுட்குலஞ்சாடுகின்றியால். (௬)

நவிலுகென்றலும்வேதநாதனென்னுமம்விச்சுவநாதனல்கினோ
னவமில்பேர்கமலாலயம்மனைக்கந்தணாளனனந்தநாளினு
மிவறனண்பினேம்யானுநீயுநீயிஃதுணர்ந்திடாயானுணர்ந்துளேன்
சிவனையர்ச்சனைசெய்ததன்மையாற்றெரியுமுற்பவச்செயலெனக்கநாள். (௭)

கலைகொள்வேதியன்கறியைமுன்னியான்கரவுசெய்தவக்கறைவிடாமையா
லலைகொள்வானரமாயினேன்மறையாளர்தம்பொருளபகரிக்கொணு
விலையதற்குநேர்மிக்கபாதகமிருளுலாங்கடுத்தனையருந்தினோக்
கொலைசெயும்புவியமரர்தம்பொருள்குலமடங்கலுந்தெரிலைவுசெய்திடும். (௮)

அம்புவிக்குலத்தேவர்பண்ணியமபகரித்தவனளவையில்லநாட்
கும்பிபாகமுற்றெஞ்சுதீமையாற்கோடரத்துருக்கோடலுண்மையா
விம்பரும்பர்தங்கூலம்வவ்விடாரியல்புணர்ந்துளோரிருபிறப்பினோர்
தம்புறஞ்சொலார்குறைநினைந்திடார்தவறுசெய்யினுந்தாம்பொறுப்பரே. (௯

ஞாலர்நல்குரவாளரீகிலார்மறையுணர்ந்திலாரெனினுமற்றவர்
பாலொணாதவமானமாற்றுதல்பணவர்சீறினாலனலைமானவா
ரேனுமன்புசாலினியநண்பினைமிகலகேண்மியாவிப்பிறப்பினிற்
காலமூன்றினிற்சென்றகாலையிற்காரியஞ்சிலகாண்பதினறியே. (௧௦)

வரவுகாண்கிலேனென்னதீமையோவஞ்சவிப்பிறப்பெஞ்சுமெந்நாள்
விரவுநோய்ப்பிறப்பிஃதகற்றுவார்வேறியாரெனக்கூறிவெஃகியே
கரவுசேர்நரிகவியிருந்திடுங்காலையெய்தினான்கண்ணுதற்பிரான்
புரவுசால்புகழ்க்கீதவாய்மையான்பூதிபூசினானசோதிமேனியான். (௧௧)

அருவுருக்கொளாவடவுருத்திரனக்கமாமணியணியுமார்பினான்
றிருவினீடருட்செல்வமேன்மையானசிந்துதீபனாந்தெய்வமாதவ
னொருவுமுறபவத்துள்ளநன்மையானவையிரண்டுமங்கவனைநோக்கியே
யிருகழற்பணிந்தேத்தியெந்தைநீயீதுகேளெனாவோதுமொன்றரோ. (௧௨)

மனாதியெய்திடமறையுணர்ந்திடும்வரதநீயெலாவறமுமவல்லையா
வினாததீமைகூரெம்மைநோக்குவாயிழிபிறப்புடலிதுபொறுக்கிலேம
பினாகியன்பனேபிரியுமாறிதுபேசல்வண்டுநீபெறுதிவேண்டிடா
ரநாதரானொந்துளார்சிறுவாவெம்பிணியாளர்பாலருளறிஞர்செய்வரே. (௧௩)

எந்தைநின்கணாலெம்மையாள்கெனாவிருபதம்பணிந்திடவியம்புவான்
சிந்துதீபனாநுங்கள்பூருவந்தெரிந்தனம்பெயர்தேவசன்மனா
மந்தமில்லெழில்வேதநாதனாமாதிநாளினான் களவைகொண்டநெற்
றாமையாலந்தணர்க்கவர்தங்களிற்கறிதாங்கரத்தலால். (௧௪)

ஏயதுங்கள்பாற்சம்புவோடரியிருவிரகேண்மினீரிந்நமாசுட
லோயுமாறுமக்காமுபாயமியாமொன்றிசைக்குவந்தென்றிசைக்கடற்
காயுநீடணுக்கோடியெய்திநீர்கடிதினமூழ்குமினகடையுடற்பவ
மாயுமாறெனாவருளிமீளவுமாதவன்பழங்காதையோதுவான். (௧௫)

சுமதியென்னுமோர்சுருதியாளன்முன்சுரைகுடித்தனனகரையில்வேட்கையா
லமைதியினறியேபுளினமங்கைதோளணைதலசெய்தனனந்தவல்வினை
யிமைகொளும்பொழுதளவிலிற்றதனறிந்தவாரதனுக்கோடிமூழ்கியென்
றுமைமனாளனன்பினனுரைப்படநேருரைசெயுங்கவிநரியிரண்டுமே. (௧௬)

தேர்மகத்துறைச்சிந்துதீபனேசெப்புமந்தணனிப்புவிதலத்
தாமகன்மதுவுண்டதெந்தவாறவனைவெங்கொலைச்சவராதங்குலத்
தோர்மடந்தைவந்தெங்ஙன்மேவினானுரைவிரித்தெனப்படிவனோதுவா
னோர்மராட்டதேயத்துளான்பெயரெச்சதேவனோரிருபிறப்பினான். (௧௭)

மதிகொள்செஞ்சடைவள்ளன்மாயவன்மகிழருச்சனைமரபினாற்றுவா
னதிதியர்க்கவர்நிதியமாகுவானரியநான்மறைமுறைபிறழ்ந்திடாக்
கதியினீடுவானவன்வயிற்றிலோர்காளைதோன்றினான்காமநூலதி
னீதிகொள்சிந்தையான்கும்தியாயினுநவலுவார்கள்பேர்சுமதியென்பரால். (௧௮)

இற்கலப்பிலான்றந்தைதாயெனுமிருவர்தம்மையுமொருவியேகியே
புற்கலப்பெயர்நாட்டின்மேவினான்பூசுரக்குலத்தாசினிதியி
னிற்கலாற்றலான்விடருடன்றமீஇநிலையுநாளினிற்கொலைசெய்வேடுவப்
பிற்குலத்துளாளொருமடந்தைதான்பெண்ணுருக்கொள்கூற்றன்னதன்மையாள். ()

அரிவைமிக்கவலையன்மாரினுமாறலைத்திடாளனபுகூறியே
புரிவுசெய்தெலார்பொருளும்வௌவுவாள் பூவையன்னவள்பொதுவின்மேவினாள்
பரிவுகூர்மனச்சுமதிபோற்றினான்பாலைதானிலம்பாட்டினாளெனாத்
திரிபின்மாண்பொருட்டிருடிநல்கியேதெரிவைதோள்புணர்செயலினீடினான். (௨௰)

முருகலர்க்குழற்புளினமாதொடுமோகமோவிலான்போகமேவுவா
னொருகலத்தினுண்டுண்ணொணாநறவுணவுமற்றவளோடருந்தினான்
றிருகலக்கண்டுறையுமிந்நாட்டிருடல்வெஃகியேயருடிரிந்திடும்
பொருகலக்கமில்வேடர்தம்மொடும்போதுவான்கொள்வான்வேடம்வேறரோ. ()

வேறுவேடமார்வேடர்போலவேவிறலிலாடர்தம்விடய * மேவியே
யாறுசெய்கையானில்லிடம்புகுந்தவனதாவியும்பொனீட்டமும்
பேறுகொண்டுதான்பெருகுகாதலாற்பிறைகொணெற்றியாணிறைமதுப்புலா
னூறுமாம்பலாள்புளினமின்னனாணண்ணுமவ்விடநண்ணினனரோ. (௨௨)

வேறு.

திரியவருமவன்பின்னர்த்திணியிருளிற்கரவாம
லெரிகுஞ்சிவிளக்கேந்தியிழைத்தமறந்தருவதுபோத
கரியதுகின்மருங்கசைத்துக்கடுங்குரலாற்றிசைகலக்கிப்
பெரியகொலைப்பிரமகத்திபிற்றொடர்ந்துபடாந்ததுவால். (௨௩)

பிற்றொடர்ந்துவெருவரல்செய்பிரமகத்திதனக்கஞ்சிச்
சொற்றொடர்மாநிலமுழுதுஞ்சுழன்மருத்திற்றடுமாறி
நற்றொடர்பின்வானரமேநிரியேமற்றவணங்காண்
முற்றொடர்பாலொருபகற்றனழுதூரைவந்தடைந்தான். (௨௪)

வந்தவன்றன்றந்தையடிவணங்கிமனமருளுற்றே
னெந்தையெனைப்புரவென்றானீன்றவனுமருள்பெருகிச்
சிந்தையினிலச்சமுறேல்சிறுவவெனமருங்கழைத்துப்
புந்திகொடண்ணளிபுரியப்புகுந்தனனப்பொழுதின்கண். (௨௫)

பெற்றவனைமுகம்பார்த்துப்பிரமகத்திநீயிவனைப்
பற்றியருள்புரியற்கபார்ப்பானையுயிர்கொன்று
னற்றமிகுஞ்சுரைகுடித்தானுடகக்கள்வனுமானான்
முற்றுமிவன்செய்தவெலாமுடிவிலதிபாதகமே. (௨௬)

தன்றனைமுன்சுமந்தளித்ததாய்தனக்குந்தந்தையெனு
முன்றனக்குமில்லவட்குமுதவலிலாப்பெரும்பாவி
யின்றிவனைக்கைப்பிடித்தாலிவனளவன்றீங்குனையுங்
கொன்றிருவர்மாதரொடுங்குலமுழுதுங்கொலைசெய்வேன். (௨௭)

ஒழிக்கினுமக்கிடர்செய்யேனொருவனுக்காவொருகுடும்ப
மழிக்குமதுமரபன்றாலறப்பனுவலாய்ந்துளையாற்
கழிக்குமதேகடனெனலுங்கலைமறையோன்கடிதனைப்பார்த்
திழிக்குநெறியவனெனினும்யான்பயந்தமகவன்றே. (௨௮)

தருக்குமுயிர்தானிழந்ததனயரவாக்கரைந்தழுதே
யுருக்கியுடலுடன்சாதற்கொருப்படுவருலகுள்ளோ
ரிருக்குமகவிறந்திடுதறகிசைந்திடுமாறெவன்கொல்லோ
பெருக்குமகக்காதலெலைப்பிரிகிலதென்செயவென்றா (௨௯

* இலாடர்தம்விடயம்—இலாடதேசம்.

விதிமரபுமாசிரமமெய்ந்நெறியும்விடுத்தழிந்த
பதிதனைநீவிடுதியிவன்பரிசனமுந்தரிசனமு
மதிகபவமாக்கிடுமென்றறைந்தவனையருளசெய்தோ
னெதிர்கரங்கொண்டறைந்ததுடலென்புநெறுக்கெனமுரிய. (௧0)

பிடித்தகொடும்பிரமகத்திபிறங்குநெடுங்கையதனு
லடித்திடலுமனனுகோவையாகோவெனவலறித
துடித்துநிலத்திடைவீழ்ந்தான்றுணைவியுடன்பயந்தோரு
முடித்ததுயிரெனக்கலங்கிமுகத்தறைந்துமிகக்கலுழ்ந்தார். (௧௧)

பழுங்கணிதுங்கழ்ந்திடுங்காற்பசுபதிதனவடிவாகுந
தொழுந்தகைய துருவாசனறுனினனனவனமனையி
லெழுந்தவெச்சதேவனுஞ்சென்றிருடியருடருகழறகால
விழுந்திறைஞ்சிமகபபொருட்டோவிணணபபஞ்செயதிடுவா

சுற்றைநெடுஞ்சடைமவுலிக்கணணுதறன்கலையுருவா
ரற்றவசீர்நினைககாணடனனறியிலாகநிலையாகு
மற்றெனொருமகனருநதிமதுமறையோறகொனறிஷைழததானை
பொறறிருடமெபிரமகததிபுகுநததவன்றனைககொலல (௧௩)

வெனபடருமபிரமகததிவினையொருவனறுடனபாற
வணபுபுரிநதுபாயநெறியஃதறைவாயலலையெனி
லென்புதலவனிவனொருவனிறககினமரபிலையாகுந
தென்புலததாகடனறீராதிருவருளசெயதருளெனறுன. (௧௪)

துருவாசனதுகேட்டுதூமறையோன்சுதறகிரங்கிக்
கருவாசமருளகற்றுஙகனைகழற்காறகனகநிறப
பெருவாசமலரிதழிபபிஞ்ஞகனைபபெருமபோது
மருவாசங்கொளவிதயமலரிருததிவகுததுரைபபான

உன்மகன்செயபவஙகொடியவொருபதினுயிரமவகையாற
சொன்மறைநூறபரிகாரஞசூழ்நதிடினுமதுதீாத
லின்மையதுகொருவகைகேளயமதிசையிலிராகவனகை
வின்மருவுமபெயாக்கோடிவிரிதீரிலாடடுவிததால. (௧௬)

பிள்ளையவனறனைததொடுததபிரமகததிபிரிநதிடுமுன
விள்ளுநெறிவிருமபுதுருவிதீதனெனவொருமறையோன
கள்ளவிழுஙகுழறகுரவன்காதலியைக்கலநதபவந
தள்ளினனிததனுககோடிதனிலாடுநதவவலியால. (௧௭)

என்றுதுருவாசமுனியியமபவெசசதேவனுளத
தொன்றுமகிழ்வுடன்கேட்பாரொருமுகவேதனையனையாய
துனறுதுருவிதீதனெனசசொல்லியவனயாரதோனறல
குன்றனையாயவன்குரவனகுலமனையாட்புணாநததெவன். (௧௮)

வளைந்ததலைததனுக்கோடிவந்துபடிந்தவன்பாவங
களைந்ததெவ்னவையறியுஙகாதலுளேனகலைவல்லோய
விளைந்தவகைவிளமபெனலுமவிரிததுரைபபானறுருவாசன்
றுளைந்தபுனற்றிரைப்பொருனைசூழ்பாணடிநனனாட்டில். (௧௯)

எண்ணினுடனெழுததுணாந்தானிததுமவாகனபெயரா
லண்ணலகுலததநதணனருனவனமனேவியமரேச
ருணணமுதினுருசிககுமுருவுருசியவளுயபல
பணணுதுருவிசீதனவனபாலகனுமபருவததில (௪0)

மாணடனனிததுமவாகனமறறவறகுமாரணததிற
பூணடவினேக்கடனமுடிததுபபுததிரனுமனேயுமா
யாணடிருநதாரதனபினனராறிரணடுவருடமழை
மூணடுபொழிமுகினமாறமுழுதுயிாகளபசிததனவால. (௪௧)

கொடைமடமபட்டவாவழஙகுஙகொளகைதவிரசிறுவிலேநா
ளடைதலுமேகோகனனததனேயுடனவனேகி
மடையுதவுமணிசசெஙநெனமாடுறுநாடடிறசினறு
னுடையதனேபபயநதவளோடுளளமுவபபுறறிருநதான (௪௨)

பினறையவனொருவைகறபிறிநதபிறபபினிறபுரிநத
கனறியதீவினேவயததாறகாமசரககிலககாகி
யனறுமரபெனபபயநதாளடககவடஙகானவளபாற
செனறுமுறைதிரிநதவினேசெயதனனசசிறியோனே. (௪௩)

மலஙகுதுயாமதனவிடாயமாறியபினமைநதனவன
கலஙகழிதாயமணிமுலேயிறகாமபபாலுணடமையைப
புலஙகொடுதானமுதிரஙகிபபொருடபாலனறிஃதெனறு
வலஙகருதானதுதீாககுமறததுபபாறனேயுணாவான. (௪௪)

ஊருமவறறரவமெனவுலகினமிசைநடபபவறறுட
கூருகிாவாளுழுவையெனககொடியவினேததலேநினறே
ஞரெனககிஙகினேயாவாறறஙகடைநினறுாதமமிற
பாரிலினமுணடெலமபரிததிடவுமவேணடிடுமோ. (௪௫)

அனனேயிவளனறிலததாயிழையாவேறிலரோ
மினனனேயபரதகையாதாமவேரோடுமெவிளிநதனரோ
பினனேயிறபிறரிலலமபிழைததாலுமபிழைபபுணடா
மெனனேயிதறகுபாயமினியாரருளகூறநெதேனககாபபாா. (௪௬)

நாடுவதென்வேறிருநதுநானினிபபோயநறறவாக
ளோடுபுகனறிநதவினேயொழிககுமவகைகேடபனெனறுக
கோடுதுருவிசீதனவன்குலமுனிவாகுழுசசாமம
பாடுதபோவனததணுகிபபணணவாதாளபணிநதிசைபபான. (௪௭)

ஆயைவலிதணேநதவினேயதுதீாதறகானதொரு
தூயநெறியுரைமினகடொலலேமறைமுறையுணாந்தீ
ரேயுமரணபிறிதிலலேனிறததியிதனபொருடடெனினு
மாயுமதறகுடனபடுவனவாயமையிஃதெனறுரைததான. (௪௮)

செபபுமொழிகேடடவாிறசிலரிவனேததெரிநதாலும
பொயபபவமவநதடுகெகுமெனப்பொருவிலருட்கணபுதைததா
ரொப்பிறுருவிசீதனுடனுரைததாலுமபாதகமென்
றபபெரியோாதமிறசிலலோரததறகுவிடையறைநதிலரால் (௪௯)

இழைத்தமறங்கேட்டழுங்கியிருசெவியுஞ்சிலர்புதைத்தார்
குழைத்தவருட்டுறைமாறிக்கோபித்தார்சிலமுனிவர்
தழைத்ததவப்படிவரவர்தாங்கள்சிலர்தாயிருதோள்
விழைத்தபெரும்பாதகநீவிரைந்தகல்வேறிடத்தென்றார். (ரு0)

வெருவுதுருவிநீதனுந்தான்வெள்கியவணிற்றலுமே
யொருவியவர்தமைக்கருணையுததியுறழ்வியாதன்றான்
மருவியவித்துமவாகன்மகன்முகம்பார்த்தெழுமன்பா
னொருவசனம்பெற்றவளோடுற்றபவங்கெடவுரைப்பான். (ருக)

மறங்கொடுருவிநீதவம்மோவள்ளலிராகவன்செங்கைத்
திறங்கொடனுக்கோடியினீசென்றளித்தாளுடன்குளித்தா
லறங்கெடநீபுரிந்தவினையஃதகலுமாரணங்கள்
பிறங்கியதொல்கதைமிருதிபிறழ்விரிசாததிரம்பலவும். (ருஉ)

பஞ்சமகபாதகங்கள்பற்பலவும்பலவாற்றால்
விஞ்சுதனுக்கோடியிடைவீடெய்துமெனவிளம்பு
மஞ்சியதுகண்டளவிலகலாதவகமில்லை
நெஞ்சிலெனதுரைவழுவாநியமமெனநினைந்திடுவாய். (ருங)

கோடியவிற்கோடியிற்குலையும்வினையெனக்கோடி
யோடியகன்றிடக்கொடுமையொழித்தலதற்கெளிதாகும்
பாடின்மனுநூலினுண்டுபரிகாரமிதற்கெனினும்
பீடிலனையுடன்போதிபேசுதனுக்கோடியினீ. (ருச)

வினைக்கோடிகெடுக்குமெனவிளம்புதலும்வியாதனெதி
ரெனைக்கோடியடிமையெனவிறைஞ்சியிருபிறப்போனு
மனைக்கோடியுரைத்தவளோடவணியின்மேற்றீர்த்தங்க
டனைக்கோடிநிகரில்லாத்தனுக்கோடிதனையடைந்தான். (ருரு)

சென்றமறைக்குலத்தோன்றறினகரன்றான்மகரத்தி
னின்றிடுதிங்களிற்சுருதிநிலைதொகுத்தோனவகுத்தபடி
யின்றியுஞச்சங்கற்பமிசைத்தமிழ்ந்தியெழுந்திருப்பா
னன்றுமுதன்முப்பதுநாளன்னையொடுமெதிற்படிந்தான். (ருசு)

நாட்டொகைமுப்பான்முடிவினவையகற்றிநின்மலனாய்
மீட்டுமவியாதனையடைந்துவீழ்ந்திறைஞ்சிமெய்த்தவநின்
றாட்டுணையேதுணையாகத்தவறின்றித்தனுக்கோடி
காட்டுமரபினிற்படிந்தேன்கண்ணுதறாள்கரந்தொழுதேன். (ருஎ)

தாதாவையுனையடைந்தேன்சரணமெனத்தானெனக்கிப்
போதாவைகுரவனினிப்புரியுநெறிபுகலென்றான்
வேதாவையனையவனும்விழித்தவனைவிப்பிரனே
மாதாவைப்புணர்ந்தபழிமாறியதான்மற்றுனக்கே. (ருஅ)

ஆய்தனக்கும்வினைதீர்ந்ததையமிலையிஃதுண்மை
நீதனுக்கோடியிற்படிந்தநெறியாலுநம்பக்கற்
போதுநலமதனாலும்பூசுரருமாதவரும்
வேதியனேயின்றுமுதல்விரும்பியுனைமேற்கொள்வார். (ருகூ)

ஈங்கினிநின்குலத்தினிலோரிலங்கிழையைமணம்புணர்ந்து
பாங்கின்மனையறம்புரிதிபல்லுயிர்க்குமிதம்புரிவாய்
நீங்கரிதாந்தருமநெறிநிலைநிற்றிநீங்காத
தீங்குபயில்சிறியவர்பாற்சேரலைநல்லவர்ச்சேர்வாய். (சுo)

சந்திமுறைவழுவாமற்றந்திடுதிதகவில்லா
விந்தியங்கள்வழிநடவேலிலங்குதிரைப்பகீரதியோ
டந்திமதிக்குழவிபுனையண்ணலையுங்கண்ணனையும்
வந்தியுரையாதொழிதிமற்றொருவர்க்கபவாதம். (சுக)

அழுக்காறுமனங்கொள்ளேலயலவரிற்பொருள்வெஃகே
லொழுக்கநெறிவழுவற்கவோதுகலைநூல்வேதம்
பழக்கமிகும்பொச்சாப்பிற்படாதுபயில்பசித்தவர்க்குப்
புழுக்கலுதவென்ஞான்றும்புரிபுகலுஞ்சிராத்தங்கள். (சுஉ)

குஞ்சமொழிகொடுவாய்மைகூறற்ககொடியர்குழா
மஞ்சுமறையாறங்கமாகமசாத்திரவிதங்கள்
புஞ்சமிகுமிதிகாசபுராணங்கள்புகழ்மிருதி
செஞ்சொனெடுங்கலைபலவுந்தெரிந்துணாதிதிரிபின்றி. (சுங)

காபாலிதிருப்பெயருங்கண்ணனதுதிருப்பெயரு
நீபாடுசெமழ்ப்பின்றிநிற்றலும்வெண்டிருநீற்றாற்
சாபாலவுபநிடதத்தாற்றிரிபுண்டரந்தரித்தி
தீபாலத்துடையவரன்றிருவக்கவடம்புனைவாய். (சுச)

துளவதனாற்கூவிளத்தாற்சுரிவளைக்கைநவநீதக்
களவுபுரிகண்ணனையுங்காமனஞ்சுகண்ணனையு
மளவையொருபோதிருபோதன்றிமுப்போதானாலும்
வளமருவுபொருளாற்றிவழிபடுவாய்மறையாற்றால். (சு

சொன்னவிருவோரிருகாற்றூநீரைத்துளவுதம்மொ
டன்னவருண்டருள்சேடவன்னமதிமெய்தவாத
முன்னருந்துபுனிதமுறமூரல்வயிச்சுவதேவ
மென்னுமரும்பலிதருவாயிழைத்திடுவாயுபவாசம். (சு

மனையில்வருந்துறவோரைவந்தனைசெய்தர்ச்சையுட
னனைபிரமசாரிபிணியாக்கையினரநாதர்களா
யுனையடையுமவர்தம்பாலோம்படைசெயோங்காரந்
தனைமுதலாமெழுத்தைந்துஞ்சங்கரன்றானுணாந்துரைப்பாய். (சு

மாலவனெட்டக்கரமுமற்றையிமையோர்மனுவுங்
கோலமனச்சானமுடன்கூறுதிநீகுலமறையு
ளோதுமறம்பிறவெவையுமியற்றுதியிவவாறிழைத்தான்
மேலையுலகுனக்குளதாமேனிமுடிவினிலென்றான். (சு

தெய்வமறைவியாதமுனிசெப்புமொழிப்படியாற்றி
மெய்விடுநாள்விளம்புதுருவிகீதனுயர்வீடடைந்தான்
மைவிழியித்தமவாகன்மனையவளும்வானடைந்தாள்
பொய்விரவாத்தனுக்கோடிப்புனல்படிந்தபுண்ணியத்தால். (சு

மேவுத்ருவிநீதனியல்விளம்பினமாலுனக்கெச்ச
தேவமகனுடனீயுஞ்சிலைக்கோடிதனிற்சென்று
லோவுமிடரிஃதென்றானுயர்முனிவன்றுருவாசன்
மூவிருதிங்களின்காறுமுனிவனவன்மொழிப்படியே. (௭௦)

சேயினுடன்றிகழெச்சதேவனவன்சிலைக்கோடி
போயதனில்விதிமுறையாற்புதல்வனுடன்படிந்திட்டா
னுயதிங்களோராறுமகன்றதற்பினந்தரத்திற்
றூயமொழியசரீரிதோன்றியதங்கவன்கேட்ப. (௭௧)

வருதியெச்சதேவவுன்றன்மகன்மறவர்மகட்புணர்ந்த
பெருவினையும்படுநுகர்வும்பிரமகத்தியிழைத்ததுவும்
பொருள்கரவிற்கொண்டதுவும்புரிந்தமறம்பிறவுளவு
மொருவியகன்றனமுழுதுமுள்ளலையயுறவென்ன. (௭௨)

செவிபுகலுமஃதெச்சதேவனவன்செம்மலொடு
மவிரறல்சூழ்தனுக்கோடியதன்பெருமைநினைந்திறைஞ்சிப்
புவிபுகழுங்கோசலைசேய்பூசைபுரியீசனெனு
நவியமுழைசுமந்தகரநாதனடித்துணைவணங்கி. (௭௩)

நெடும்பதிக்கட்டான்போகிநீடுபலகாலங்கள்
கடும்பினொடுமகிழ்ந்திருந்தான்கவியுருவுநரியுருவும்
விடும்பரிசாலிருவீரும்விற்கோடியடைமின்க
ளிடும்பைதவிர்சுமதிகதையீதுமக்கிங்கிசைத்திட்டேம். (௭௪)

வேறளவில்சாந்தியினும்விளியாதிவவினையுருவங்
கோறல்புரிகோடரமேகோமாயுவேநீவிர்
தேறுமின்களென்றுசிந்துதீபமுனிதெளிந்துரைத்தான்
மாறுபுரிமற்கடமும்வனநரியுமிதுகேட்டு. (௭௫)

வாடுமனமருணீங்கிமகிழ்ந்தொல்லையவையிரண்டுங்
காடுமலையுங்கலந்தகடங்கள்பலகடந்தேகிக்
கோடுதனுக்கோடியிடங்குறுகியதிற்குடைந்தாடி
மூடுமுடைவிலங்குடலமுதற்பவங்கண்முழுதகற்றி. (௭௬)

இமையவராயினவதற்பினிலேகரவரிருவோரு
மமையுமணிப்பொன்மவுலியங்கதங்காதணியிலங்கத்
தமையமரர்குலமாதர்தழீஇயிரட்டச்சாமரங்கள்
சிமையவடகுவடுநிகர்செழுங்கனகவிமானத்தில். (௭௭)

புந்திகளிதனிதேறிப்பூமாரிபுலவர்குழாம
வந்திறைப்பவிசும்பினிற்போய்மகம்புரிந்துவான்புரக்கு
மிந்திரனோடொருபீடத்திருந்தனர்களிவரிலிவ
ணந்தரநாட்டிறைவனெனவறிவரிதாம்படியெனறும. (௭௮)

வேறு.

சம்புவோடுகவிதனுக்கோடிவாய்த்தங்கள்பாவவினைகெடப்போனதோர்
நம்புகாதையிவணுமக்கோதினோநன்றுகூறுமறநெறிக்கேண்மையீ
ரிம்பர்யாருமிதுதனைப்பேசுவாரின்பமோடுசெவிபுகப்பேணுவா
ரம்புலாவுகொடுமரக்கோடிநீரங்கண்மூழ்குபயனவர்க்காகுமே. (௭௯)

கவிசம்புச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௦௮௪.

துராசாரச்சருக்கம்.

வேகவழற்சிலைமேனிவிடுதே, யேகுதிவிண்ணினிலென்றுசபித்தான். (௭௪)

விஞ்சியவிசுவாமித்திரனாலே, யஞ்சொலரம்பையருஞ்சிலையானு
டஞ்செனநீடுதவத்தவர்தம்பால், வஞ்சமிழைத்தெவர்வாழ்ந்தவர்மண்மேல். (௭௫)

வேறு.

மிகநெறிசேர்முனிவிசுவாமித்திரன்றன்சாபத்தா
லகநெடியகருந்தடங்கணரம்பையெனுமரமடந்தை
திகழுருவஞ்சிலையாகத்திறல்கெழுகோசிகர்பெருமான்
புகலுடசந்தனிலிருந்தாள்பொழுதிறுதிவருங்காறும். (௭௬)

தருமமயமாம்விசுவாமித்திரனுந்தவவேந்தும்
பொருவரியதவமுன்போற்புரிந்துபெரும்புகழுகிறீஇ
யருமறைதேர்வசிட்டமுனிமறைமுனியென்றறைந்திடலாற்
பிரமமுனியாயினன்றவத்தின்மிகப்பெரிதுளதோ. (௭௭)

ஆசிரம்மதிலங்நாளருந்தமிழ்நேரகத்தியன்பா
னேசமிகுமாணவகனிறைதருமதியுடையான்
றேசுமிகுஞ்சுவேதனெனுந்திருமுனிவன்சிவகதிவேட்
டீசனடிநினைந்துதவமெண்ணில்பகலிழைத்திருந்தான். (௪௮)

அவனுறையுமிடனுற்றாளரக்கியங்காரகையென்பா
ளுவரியெனக்குமிறியெழீஇயொழிக்குமலசலமவற்றாற்
சிவனருள்சேர்தவராசன்றிருமேனிமாசுபடத்
தவறிழைத்தாள்சுவேதனவன்றனதுதிருக்கண்சிவந்தான. (௪௯)

சீற்றமுறுஞ்சுவேதமுனிசினவரக்கியவடன்மேற்
காற்றினெடுங்கணையதனாற்கவானரம்பையரம்பையெனு
மூற்றமிகுஞ்சிலையதனையுடன்றரந்தானவள்வெருவிக்
காடலுற்றாள். (௫௦)

கடிதுரப்பிநணிபாறுங்காரரக்கியவள்பின்ன
ரிடிதுரப்பதெனமுகிலையேனவிளங்கதிர்மாந்தும்
பிடிதுரக்கும்புளினமின்னார்பெருங்கவண்வீசியசிலைபோ
காமர்நிறையரம்பையெனுங்கல்லு. (௫௧)

பிற்றொடர்ந்துசிலைபடரப்பின்பார்த்துப்பெரிதோடும்
விற்றொடருநுதலரக்கிவீழ்ந்தனளக்கவிதடத்திற்
கற்றொடர்ந்துவிழுந்ததுடன்கடியமுடியுடைந்தரக்கி
யிற்றனண்மற்றவளுதிரமெழுந்துகரைபுரண்டோட. (௫௨)

பட்டமதிலமிழ்ந்ததவப்பயனதனாற்சிலையுருவம்
விட்டரம்பையமரர்குழாம்விரைகமழ்பூமழைபொழியக்
கட்டெழிலையணியுமணிக்கலன்மறைப்பக்கததூரிப்
பொட்டழகின்கண்ணேறுபுலவர்குழாங்கொளதீர்ப்ப. (௫௩)

வெள்ளிநெடுஞ்சங்கிலியால்வீக்குண்டவேழமெனத்
தெள்ளியநிததிலவலங்கற்றிரணகிலத்துணைதயங்கக்
கள்ளவிழுமலர்க்கூந்தற்ககனமுகட்டிருள்பரப்ப
வுள்ளமுதற்பொருளனைத்துமும்பர்குழாந்திறையளப்ப. (௫௪)

திருப்பதுமமலர்வாட்கட்செந்துவர்வாய்முகுளமுலை
யுருப்பசிமுன்னரமகளிரொருங்குதிரண்டுவந்தேத்தத
தருப்பணையின்கடிப்பிணையாற்றபணியதுந்துபிமுழங்க
விருப்புறுசாமரைவீசவிமானமிசைவிளக்கென்ன. (௫௫)

கற்படிவப்பழிதீர்த்தகவிதீர்த்தந்தனைப்பழிச்சி
யெற்படிவச்சுடர்வேணியிராமேசன்றனையிறைஞ்சிப்
பொற்படிமேற்புகுந்தனண்முன்புத்தேளிர்குலப்பரத்தை
யற்படிவத்தரக்கியங்காரகையென்னுமவடானும். (௫௬)

மாதவன்பேர்கிருதாசிமலயமுனிசாபத்தாற்
றீதுபயிலிராக்கதியாய்த்திரிந்தலமந்தனள்சிலநாட்
பாதகந்தீர்கவிதீர்த்தம்படிவுறுமப்பாக்கியத்தான்
மீதுலகந்தனையடைந்தாள்விண்ணவர்தங்களைநேர. (௫௭)

வேறு.

ஒருகிருதாசியரம்பையாகியவுவரிருவோர்களுமும்பருரினி
விருடிசுவேதனதன்பினான்முனமிடர்படுசாபமகன்றுமேவினர்
வருமுறையாலிகிரந்தவாவியின்மனனொடுமேனிவருந்தியாயினு
மருமுனிவீர்கள்விரும்பியாடுமினறநெறிநீடுநலங்கள்சேரவே. (௫௮)

கவிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௩௭௨.

காயத்திரிசரசுவதிதீர்த்தச்சருக்கம்.

நிரந்தரம்புனற்பெருமைநிகழ்த்தியபின்சூதனருணேயந்தன்னால்
வரந்தருமாண்சவுனகனைமுதன்முனிவர்தமைநோக்கிவகுத்துரைப்பா
னாரந்தருநூலுடையீர்காளுயர்காயத்திரிவாணியுவர்தம்பேராற்
பரந்தநெடுந்தடமிரண்டுண்டவைபுனிதம்பண்ணுவிக்கும்படிகளெங்கும். (௧)

பகர்வரியவீடுதரும்படிப்பவர்கேட்பவர்பாவம்பாற்றுவிக்கு
மிகுதருமந்தருநரகில்வீழ்த்தியிடாவவையிற்றின்மேன்மையெல்லாம்
புகல்வனுமக்கனையவிருதடம்படியுமாந்தரவர்போற்றுந்தாய
ரகலுதரத்தடம்படியாரடைவரபவர்க்கமிதற்கையமின்றால். (௨)

வந்தவெதவன்பெயர்வைகருவளாகாயத்திரிசரசுவதி
லந்தமுதலமர்கந்தமாதனத்திலயன்மடவாரமர்தலாலே
சந்தமறைமுறையுணர்ந்ததாபதர்காளென்றனனத்தவத்தின்மேலோ
ரிந்தவுரைதருசூதன்றனைமுகம்பார்த்தஃதறிவாரிசைக்கலுற்றார். (௩)

நோக்குநெடும்பாரவர்க்குநோன்றலைவான்றலையவர்க்குநுவறற்கெட்டா
மீக்கணிலைவிழியளவாவியன்கந்தமாதனத்தின்வெறிவண்டாடுந்
தேக்கமலமனையிருப்போன்றிருமனையாரெதுபொருட்டாற்சேர்ந்தாரெங்கள்
பாக்கியமாம்புகழ்ச்சூதபகரென்றாரன்னவனும்பகருகின்றான். (௪)

மால்வயிற்றில்வந்துலகந்தந்தவன்றன்வயிற்றில்வரும்வாக்கெனும்பே
ரால்வயிற்றினவள்பணைத்தோளணையநினைந்தடங்கலின்றியவடன்காமப்
பால்வயிற்றிறபுகநிறையப்பருகிடுவான்பெருகுமயற்பரவைமூழ்கி
வேல்வயிற்றிற்புகுந்ததுபோன்மிகத்தளர்ந்தான்முன்னரந்தவேலைதன்னில். (௫)

தனைத்தொடருந்தகையுணர்ந்துதகரநறுங்குழல்வாக்கின்றையணித்
துனைத்திளமென்பிணையாளுளிரலையுருக்கொடுதுரந்தான்சுருதியானு
மினைத்தெனவோரளவைபெறாவியானைமுதலெறும்புகடையென்னாநின்ற
வனைத்துருவும்பிறர்க்காக்குமயன்றனக்கிவவுருக்கோடலரியதன்றே. (௬)

அவனிதருமயன்பயந்தமகட்புணரும்வேட்கையுறிலறமார்காப்பா
ரிவனிதனைச்செய்ததுநன்றென்றிமையோரிழிபுரைத்தாரினையகாலைச்,
சிவனெயினர்வடிவுகொடுசென்றணுகிப்பினாகமெனுஞ்சிலைவணக்கிப்
பவனனுகர்பணிக்குழைதாழ்காதளவும்பூட்டியொருபகழிவாங்கி. (௭)

உணருமிருக்கலைபலவுமுலகுதவும்பேரகட்டிலுதித்தமாதைப்
புணருமொருகலையுருவாம்போதனுடல்புகத்தூரந்தான்புனிதனங்கட்
ணைரவிழ்தேங்கமலமகன்றுணிந்துசிரந்தரைவீழ்ந்தான்சோதியொன்றுங்
கிணரெரிபோன்றவனுடலிற்பிறந்துவிண்போய்மகயிரமாயிலங்கிற்றம்மா. (அ)

ஆதிரைநாளதுவாகியதனைவெரின்றொடர்ந்தலக்கணுற்றியின்று
மாதிரைநீர்வேணியனுமான்றலைநாண்மருங்கும்பர்வயங்குகின்றான்
போதனுயிர்போனதற்பின்புருடனிழந்துளம்புழுங்கிப்புலமைமாதுந்
தீதிரிகாயத்திரியுந்திரிவுபடுகைனியராய்த்திரிதர்கிற்பார். (௯)

பொன்மகளுமாயவனும்புரந்தரனும்புலோமசையும்பொருந்திவாழு
நன்மைதெரிந்தகங்குலைந்துநாணமுறீஇயுடல்வெதும்பிநாளுநாளும்
புன்மையுணர்ந்தயர்ந்திடுவார்புண்டரிகமலர்க்கோயில்புரியுங்கொண்க
னின்மையெனும்பழிநீக்கிமீண்டிடுக்குஞ்செயலதற்காமெண்ணங்கொள்வார். (௧0)

உலகமுழுவதும்படைக்குநான்முகனையுளதாக்குமொருமையோரா
யலகிறந்தசிவதலத்துமிக்கதுவாய்விழைந்துளபேறளிப்பதாகி
நிலவுகந்தமாதனத்தேகியமமுடனுமாபதிதாணினைந்துநோற்றார்
திலகநுதற்பாரதியுந்திகழ்காயத்திரியுமெனுந்திருவின்மிக்கார். (௧௧)

தங்கள்பெயர்த்தடமிரண்டுதெந்தவற்றுண்முப்பொழுதுந்தாங்கண்மூழ்கி
மங்கையர்தாமுணுமறந்துமனங்கொள்சினங்காமமயன்மருவாராகிச்
சங்கரனதடிக்கமலந்தமதிதயகமலமிசைதரித்துதத்தையல்
பங்கனெழுத்தோரஞ்சும்பண்ணினர்பஙகேருகன்றன்பன்னிமாரகள். (௧௨)

வல்லியர்களிருவருந்தம்மகிழ்நனுயிர்பெறற்பொருட்டிம்மரபிற்செய்தார்
சொல்லருமாதவநெடுநாளதுபொழுதிற்செழுங்கனகத்துங்கமேரு
வில்லியுமையிடங்குலவவேழமுகக்கடவுளுடன்வேற்கைத்தோன்றல்
புல்லியிருமருங்கேத்தமுன்னர்நின்றுனெம்மருங்கும்புலவர்போற்ற. (௧௩)

கண்டனையமொழிமடவார்கண்டனையகண்ணுதலைக்களிப்பிறேடும்
வண்டனையகுழல்சாயமலர்சிதறிப்பதறியடிமலர்மேல்வீழ்ந்து
பண்டனையாயகிலசராசரங்களெல்லாமொருவயிற்றிற்பயந்தபச்சைப்
பெண்டனையோர்பங்குடையெம்பெருமானைப்புகழ்ச்சிமொழிபேசலுற்றார். (௧௪)

வேறு.

மாறு லவிருளுடொளிரருளின்சுடரவடிவப்
பேறார்பெறுகிற்பாரவர்பேறாகியபெருமான்
பாறாரிலைபயின்மூத்தலைவேலங்கைகொள்பரமா
வேறார்கொடியானேயெழிலிடமார்கொடியானே. (௧௫)

உருவம்பயிலுயிர்யாவினுமுளனுயிலனுய்
பருவம்பகலிரவாண்டிருபக்கம்பலவாக
வருவம்பயில்காலந்தனையளவிற்றருமதலா
பொருவெம்புலியுடையாய்மிசைபுனையம்புலியுடையாய். (௧௬)

உள்ளிச்சுடருருவந்தனையுணர்வார்க்கருளுதவித்
தெள்ளித்திரிமிலைநீத்தொளிர்செல்வத்திருவமுதே
வள்ளிக்குரியவனோடிபவதனன்றனையருளும்
வெள்ளிச்சிலையானேபொலன்மேருச்சிலையானே. (௧௭)

அந்திப்பகிர்மதியும்புனையரவின்றலைமணியுஞ்
சந்தித்துமிழ்சுடர்வீசிடுதவளப்புனன்முடியாய்
சிந்தித்தடியவரன்பொடுதிருநான்மறைமொழியால்
வந்தித்தழும்புடையாய்முலைவளையார்தழும்புடையாய். (௧௮)

தாணுப்பரவொளிமெய்ப்பொருள்சம்புத்தனிமுதலென்
றியாணர்க்கழல்புகழ்தொண்டர்களிதயப்பதுமத்தாய்
சேணுற்றமருலகுண்டிடுதிருமான்முதல்விண்ணோர்
காணப்படவெய்தாயெயில்கனலிற்படவெய்தாய். (௧௯)

வசைக்காசுடன்மலினப்பவமாற்றுந்தனிவாழ்வே
திசைக்காழகமொருசுற்றிடுதெய்வத்திருவுருவா
நசைக்காமனதுயிருண்டருணயனுபயினல்லோ
ரிசைக்காதரவுடையாய்குழையிணைக்காதரவுடையாய். (௨௰)

சண்டன்றனதுரம்மலுதைகொண்டங்
மண்டுந்துயர்மரணப்பயமாற்றுந்தனிவரதா
வுண்டம்புதிவருநஞ்சினையும்பர்க்குயிருதவுங்
கண்டாகரியானேமறைகருதற்கரியானே. (௨௧)

காலைக்கதிர்போலத்திகழ்கவினார்திருவுருவா
மேலைப்பதமெய்தாததுவிழைவார்க்கருள்வேந்தே
பாலைப்புரைநீற்றாயளிபாடுந்துணரிதழி
மாலைச்சடையானேபவமருளச்சடையானே. ௨௨

யாருரெனதாருன்னருளெல்லாமெனுநல்லோ
ராருரவருள்ளத்தெழுமறிவின்சுடரொளியே
மீனுரொளிமுதன்மேனிலைவிண்டுன்மனைவிரவா
வானார்தினகரனேமழுமானேந்தினகரனே. ௨௩

இலர்தங்களிலுனையல்லதொரிறைகொள்பவருளரேற்
கலர்தங்கிடுநரகின்றுயர்கண்டாரறிகிற்பார்
மலர்தங்கியபதுமக்கதிர்மணிபோலொளிர்வண்கை
யலர்தங்கழலானேநடமாடுங்கழலானே. ௨௪

வேறு.

நேயத்தெமையாளெனப்பழிச்சிநெடுங்கண்டரளநிரையுகுப்பக்
காயத்திரியுங்கலைமகளுங்காலன்வெருவுங்கழல்பணியச்
சேயத்துரியோனவரைமுகந்தெரிந்துமகிழ்ந்தேஞ்செய்தவத்தால்
வேயொத்திடுதோண்மடவீர்காள்வேட்டவரமேதெனக்கேட்டான். ௨௫

பொங்குமுலையாரெடுத்துரைப்பார்பொன்னுள்பதியுமெம்பதியு
மங்கண்வராகமன்னமதாயளவாவடியுமணிமுடியு
நங்கையுமையாடணிக்கணவாநாங்கடெரியநல்கினைநீ
வெங்கண்விடையாய்வேறுவரம்வினவத்தகுமோவிளம்புங்கால். ௨௬

ஆனதெனினுமெங்களைநீயருள்கூர்தாதையாதலினான்
மேனியதனினமங்கலமாம்விழுமந்தரியோம்விழிமுகிழார்
தானமளிததாய்விடதுகர்ந்துஞ்சரமொன்றதனூற்றனதாவி
போனவயனுக்குயிருதவிப்புரத்தல்வேண்டுமெனவிரந்தார். ௨௭

அந்தமொழிகேட்டருட்கடலாமண்ணலினிதென்றயன்றலையும்
பந்தவடிவுமிவண்டருவீர்படர்வீரெனலும்பஃறலைய
நந்திபிருங்கிமுதற்பூதநாதரவர்போய்நளினமிசை
முந்தைவிதிநான்முகத்தலையுமுடைசேருடலுமுடன்கொணர்ந்தார். (௨௮)

மன்றார்நடத்தோனவையிரண்டும்வாங்கித்தவளமரைக்கோயிற்
கன்றார்தளிர்க்கைக்கலைமகளுங்காயத்திரியுமெதிர்காண
வொன்றாப்பொருந்துமிடந்தெரியாதுடனோர்கணத்தினொட்டுவித்தான்
பொன்றாதுறங்கிவிழித்தவர்போற்புலன்கொண்டெழுந்தான்புகழ்ப்போதன். ()

எழுதந்திடுமெக்கமலமகணிந்துமவுலியெம்மானைத்
தொழுதங்கனையாரிருவரொடுஞ்சுருதிமொழியாற்றுதித்திரங்கி
யழுதெங்கருணைவாரிதியேயடியேனறத்திற்றிரிந்தபிழை
முழுதும்பொறுப்பாய்மேலுமதுமுயலாதருள்வாயெனமொழிந்தான். (௩௦)

அன்னவரமாங்கரனுதவியயனேயினிமேலவலவினை
யுன்னலுரைத்தலுஞற்றலெனுமொருமூவகையுமொழிந்திடுவா
யின்னசெயல்யாரிழைத்தாலும்யாமங்கவரையிடர்கூரச்
சென்னிதடிவோமிதுதெளிவாய்திசைமாமுகனேயெனக்கூறி. (௩௧)

கலைமான்றனைநன்முறைதிரியாக்காயத்திரியைமுகநோக்கி
யலைமான்புணருமான்மகனுக்காவியளித்தோமவனோடுஞ்
சிலைமானுதலீரயனுலகஞ்சேர்மினினியென்றுயர்சிகர
மலைமான்றழுவுமணவாளன்மற்றுமவர்க்குவரங்கொடுப்பான். (௩௨)

பிடியார்நடையீர்நீங்கடரப்பிறங்குந்தடங்களிவையிரண்டிற்
படிவார்படியார்கருக்குழியிற்பரமானந்தப்பயன்பெறுவர்
தொடியார்கரத்தீர்நும்மியற்பேர்துறையார்புனலின்பட்டப்பேர்
முடியாதுலகிலெஞ்ஞான்றுமொழியவிளங்குமுகிழ்நகையீர். (௩௩)

தடங்களெவற்றுமிகப்புனிதந்தருமித்தடங்கள்கொடும்பாவ
மடங்கவகற்றும்பெருஞ்சாந்தியளிக்குமாக்கம்பெரிதாக்கு
மிடங்கொள்பணிலமுகுந்தனுக்குமெமக்கும்விருப்பமெய்துவிக்கும்
வடங்கொண்முலையீரிவைக்குநிகர்வாவியரிதாம்வசுந்தரைமேல். (௩௪)

நித்தநியமநைமித்தநியமமுளத்தினிகழ்வேட்கைக்
கொத்தநியமமொருமூன்றுமுஞற்றாதவருமறைத்துறையின்
முத்தியுதவுந்தவநெறியின்முயலாதவருமூழ்குவரே
லத்தன்மையினும்பயனைத்துமளிக்குநும்பேரறல்வாவி. (௩௫)

இக்குமொழியீரெனவருளியெவருங்காணவேறுகைத்து
நக்கன்மறைந்தான்மாதரொடுநளினன்றனதுநன்னகரிற்
புக்குமகிழ்வுற்றினிதிருந்தான்புண்டரீகன்செயலிதுவேற்
றக்கவறத்தின்றுறைபிழைத்தார்தலைமைபெறுவார்தவத்தீர்காள். (௩௬)

வேறு.

நனையுலர்வனசத்தலர்வேதனார்நவிரம்வேறுபடுத்ததுமீளவே
மனைவிமார்கள்வழுத்தலுமீசனார்மறையனாவியளித்ததுமோதினோம்
வினையிலாததவத்துறைவாணர்காள்விரைகொணீரிவையிற்படிபேறெலா
மினையகாதைபடிப்பவர்கேள்வியாரெதிர்வினவும்விருப்பினர்சேர்வரே. (௩௭)

காயத்திரிசரசுவதிதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௪௦௧.

காசிபச்சருக்கம்.

மாறிலயனார்மனைவிமார்பெயர்கொணீரின், வேறுமொருகாதையதுகூறிலேன் மெய்ந்நூ, லாறுதொழிலீரறிமினந்தணனொருத்தன், பேறுதிகழ்காசிபனெனச் சொல்பெரியோனே. (௧)

ஆடியவையிற்றின்மகபாதகமகன்றே, பீடுபெருகுற்றனனெனப்பினருமன்பி, னேடினிதுரைத்தனனுணர்ச்சிமிகுசூதன், கூடுமுறைமாதவர்வினவிவிடைகொள் வார். (௨)

யாதுவினைகாசிபனிழைத்திவையிரண்டின், சீதவறன்மூழ்கிடுபுதீர்வினையடை ந்தான், சூதவருணியுரைசெய்தொல்கதையெனப்பே, ரோதியிடுமாரமுதுவட்டிடு வதுண்டோ. (௩)

ஆசைபெரிதுற்றனமதன்வரவுதேருந், தேசிகநவின்றிடுதியென்றனர்கடெய்வப் பூசுரர்கள்சூதமுனியஞ்செவிபுகாமுன், மாசகழுவுங்கதைவகுப்பனெனவோதும்.

பாண்டவர்குலத்துயர்பரீக்கிதுவென்மன்னன், மாண்டகடலாடைநிலமாதினை மணந்தே, பூண்டறநெறிக்கணொருபுன்மைகலவாம, லாண்டரசிருந்தனன்முன் னத்தினபுரத்தின். (௫)

மாவிசயனல்குசுடர்வாளபிமன்மைந்தன், மூவிருபதாண்டுநிலைமுற்றியமர் காலை, மேவுதிறலார்மிருகவேட்டைவிளையாட்டிற், றீவிரவுகானினிடைசேனை யொடுசென்றான். (௬)

வையிலகுவாளிபடமான்றவனொர்மான்றா, னெய்யெனமறைந்துகடிதோடி யதுகாணான், வெய்யபசிதாகமிகவெம்பியிறைவேட்டை, செய்யும்வனமெங்குமது தேடுபுதிரிந்தான். (௭)

ஆய்ந்துழலும்வேலைமறையாய்ந்துமனவேக, மோய்ந்துடைகொள்வற்கலையி னோடுபுலனோடக், காய்ந்திடுசமீகமுனியாங்குறைதல்கண்டான், வாய்ந்தசயவாளபி மன்மைந்தனுரைசெய்வான். (௮)

ஞானமுனிதன்வதனநாடிநிலநாதன், றானொருவிலங்குகணைதைத்ததுயர்தன் னூற், போனதுகரந்ததுபுலத்தின்மிகுநும்மான், மானமுறலுற்றதுகொன்மற்றருளு மென்றான். (௯)

கற்றமுனியுள்ளமதுகற்பனைகடந்தே, பற்றகல்பரத்திடைபடிந்தபடியாலே, சொற்றிலனதற்குவிடைசூழ்பொறிகொணெஞ்சோ, டொற்றுமைகொளாவழியு ணர்ச்சியிலவாமால். (௧௦)

தேட்டுறவினவியவழிசெப்பிலனெனத்தான், மூட்டுபுசினக்கடையினான்முனி வன்மேலே, காட்டுறுபிணப்பணிகளத்தினிலெடுத்தி, வேட்டைவினைவிட்டிறை வன்மேவினனகர்க்கே. (௧௧)

சீலமுனிதானருள்சிரிங்கியெனுநாமப், பாலனயலாசிரமமூடுபயில்வுற்றான், மேல வனைநண்புகொடுமேவிடுமொருத்த, னேனுமுயர்பேரினிலிருங்கிருசனென்போன்.

அக்கினிசனோர்பகலமேத்துறைசிரிங்கி, மிக்கமுகநாடியுளவேயுனக்குமேன்மை
தக்கதிஃதன்றுனதுதாதைதகளமேலே, தொக்கருணபப்பணிசுமத்தனுணராயோ. ()

மேதகையபாடவம்விடுத்திடுதியென்றான், நீதிதுசெவிக்கொடுமைசென்றுழிசிரிங்கி
கோதறமுளத்திலெழுகோபமுளனாகி, யீதுபுரிவேந்தன்மிசைசாபமிடுமென்றான். ()

அத்தன்மிசைகாட்டுறையழன்பணியையேற்றி, வைத்தகொடியோனளவைவாரம
வையேழிற், சத்திமிருதக்ககனெனப்பெயர்தரித்த, பைத்தலையினாற்கறிபடூஉவிளிக
வென்றான். (௧௫)

வேறு.

தனையனோதியசாபமத்தந்தையாஞ்சமீக
முனிவனுமெபுபுதல்வனாஞ்சிரிங்கியைமுகம்பார்த்
தினையவாய்மைநீயிசைப்பதோவிருநிலக்கிழத்தி
புனிவளோவளப்பெருங்கலன்றலைவனைப்போக்கி. (௧௬)

உறுவர்நோன்பினுக்குறுமிடையூறெவரொழிப்பார்
நிறுவுவாரெவர்நெஞ்சினையறநெறிநிலைக்கட்
பொறுமையின்றியேசினத்தினைப்பொருளெனக்கொண்டோர்
பெறுவரோநலம்யாங்கணும்பகர்திநீபிள்ளாய். (௧௭)

சினத்தினால்வருந்தீமையத்தீமைதீப்பிறப்பு
மனத்தினீடியமருட்கையும்வறுமையுநரகு
மனைத்துநல்கிமோதலாலொருபொழுதயர்த்துந்
தனக்குநல்லவன்வளர்ப்பனோசீற்றமாந்தழலை. (௧௮)

நோன்றலால்வருமின்பமென்றுலகெலாறுவனுந்
தோன்றனீயிஃதியம்பினைதுணிபுகுழாதென்
றீன்றமாதவனுளங்கரைந்தருளினுலிரங்கி
யான்றசீர்பயிலளப்பின்மானுக்கராமவரின். (௧௯)

முகரிமைக்கிளர்கௌரமாமுகன்றனைநோக்கித்
துகளிலாவடற்றனஞ்சயன்பேரனைத்துன்னித்
தகவிறக்கசப்பாந்தளாற்சாச்சொலித்தனையெம்
மகனிசைத்தனன்சாபமென்றுரைததுவாவல்லை. (௨0)

எனவிடுத்தனனவனுமப்பரீக்கிதுவென்னு
மனன்மருங்குறீஇமீண்டனன்மற்றதுகூறி
வினைவிளைந்ததென்றிறைவனும்வெந்துயர்மேவி
யினியிதற்கெனோதீர்வெனுவெண்ணிநின்றினைவான். (௨௧)

தாலமுற்றவுந்தாங்குறுதனதொருசெங்கோல்
போலமாண்டிரைக்கங்கைநீர்நடுநிறீஇப்பொன்னங்
காலதெரின்றதன்மீமிசைமண்டபங்கட்டி
மாலவன்பதவனசமேல்வீழாதவன்பினனாய். (௨௨)

இருடருங்கமொற்றிமெண்ணில்பல்லுறைகள்
கருடனன்மறைவல்லவர்குழாம்பலகாப்ப
வருடயங்கொளிவானவரந்தணரரசர்
பொருடருங்குலத்துற்றமாதவர்கணம்போறற. (௨௩)

விண்ணில்வெண்முகின்மேற்றலமெழுகியதவளச்
சுண்ணமேய்ப்பகின்றொளிர்தருஞ்சுடர்மணிக்கனக
வண்ணமண்டபத்தேறியேயபிமனல்வரமா
மண்ணல்லைவகினன்றக்ககப்பேரராக்கஞ்சி. (உச)

தங்கடொல்குலக்கதிபனுமமுதசந்திரிகைத்
திங்கள்வானவன்சென்றிடுஞ்சேணெறிக்கெட்டி
யங்கவற்கிஃதறைகுவான்போலவாண்டரச
னெங்குமொன்றும்வந்தெய்திடாதிருந்தனனிதன்மேல். (உரு)

பெருமனுத்துறைபயின்றவன்காசிபன்பெயரா
லொருவன்விப்பிரனுண்டவனுடையநல்குரவால்
வெருவுதக்ககன்விடங்கொளாதிறைவனைமீட்டுப்
பொருள்கவர்ந்திடுங்காதலான்வழிக்கொடுபோந்தான். (உசு)

சுடிகைநீணிறக்குடுமிபின்றுளங்கிடவிளங்கும்
வடிவில்வெள்வரிமார்பின்முந்நூலதாய்வயங்கக்
கொடியதக்ககன்றானுமோர்குலமறையோனாய்
நெடியகாசிபன்வரும்வழிநேர்படவந்தான். (உஎ)

வாரியங்கெதிர்பாப்புருமறைத்துறுமறையோன்
சீரியன்றிடுகாசிபன்றனைமுகந்தெரிந்து
நேரிலாயெவண்சேறியோநீநினைந்தேகுங்
காரியம்புகலென்றனன்மற்றவன்கரைவான். (உஅ)

பாந்தளிற்கிளர்தக்ககன்பரீக்கிதுவாகும்
வேந்தனைத்துனைவெள்ளெயிற்றுமிழ்விடமென்னுங்
காந்துகாரழற்கிந்தனமாக்குவான்கருதிப்
போந்துளானஃதவித்திடப்போந்தனனென்றான். (உகூ)

வேறிசைப்பொறிவிழியலாதுற்றிலான்வினவிக்
கூறுவானெதிர்கோதிலாவேதியர்கோவே
மாறிலாவபிமன்னெனுமன்னவன்மகனை
யீறுசெய்திடவிருந்திடுந்தக்ககன்யானே. (௩0)

மால்படைத்தனைபோலுநீவருடநூறேனு
நீல்படைத்தவென்விடவலியாவருநீக்கற்
பால்படைத்ததோபழுமரமிதுபடப்புரிவ
னூல்படைப்பையேலரசையும்படைப்பையின்றறவோய். (௩௧)

ஓம்படைக்கொணின்மனுத்திறங்காண்பனென்றுரகன்
காம்புடைத்தளிராலினைக்கறித்தலுங்கற்றோர்
மேம்படப்புரிநூலமெய்ச்சுத்தியில்வெந்து
சாம்பராயதத்தொன்மரமொருகணந்தன்னில். (௩௨)

இருவர்மற்றிவரறிவுறாததனுழையிருந்தா
னொருவன்மானுடனவனும்வெந்துறுதுகளானு
னருவவந்தரத்தியங்குவாரம்பகஞ்சிமிழ்ப்ப
மருவுவானெலாம்பரந்தனவடமரச்சாம்பல். (௩௩)

அவனியுண்டவன்றன்னையோரிலையகத்தடக்கிப்
புவனம்யாவையுநிழலிடுபெழுமரம்பொடித்த
கவனவல்விடப்பெருமையைக்காசிபன்காணூஉப்
பவனமுண்பவன்கேட்கவோர்சபதமுன்பகர்ந்தே. (௩௪)

காண்டியென்றவமுயற்சியின்பெருமையைக்கடுத்தீத
தூண்டுதக்ககவென்றுதன்மந்திரச்சுருதி
மாண்டசீதளவமுததாரைகண்மிசைவழங்கி
மீண்டும்வெந்ததுபடிறெனவடத்தினைவிதித்தான். (௩௫)

காளகந்தரன்கரந்திடுமதனைவண்கமலத்
தாளுமந்தணன்றிரியவுண்டாக்குமாறறியத்
தாளுடைத்தருத்தழைத்ததுதலைக்கொடாரகையாற்
கோளிவெண்முகைக்கொண்டதென்றதிசயங்கூர. (௩௬)

கதுமெனத்தரும்விஞ்சையர்கௌதுகம்போல
வதனமொன்றுடைவிதியனான்வயங்குதொன்மரத்தைப்
புதுமரத்தினிற்புரிதலுந்தக்ககன்போற்றி
யிதுவெனக்கிறும்பூதுதந்திட்டதென்றிசைப்பான். (௩௭)

மரபுநாடிமுன்சமீகமாதவன்மகன்சபித்த
வுரைவழுப்படப்புரிகொணூதனக்குவேந்துதவும்
வரையதற்கிருமடங்குபொன்வழங்குவன்யானென
றரவநாயகனளப்பிலாநவமணியளித்து. (௩௮)

ஈங்கணின்றுநீதிரும்பினையேகுதியென்றான்
வாங்கிநல்கியமணிகளைமன்னவன்வாழ்நா
ளாங்கணற்பமென்றறிவினாலறிந்தறுதொழிலோ
னீங்கிநன்றெனாநடந்தனனிருந்தனனிலையில். (௩௯)

எவரையும்மனந்திரிப்பதுமீன்றவர்தமக்குத்
தவறிழைத்திடப்புரிவதுந்தையலார்தங்கள்
கவரில்கற்பினையழிப்பதுங்கற்குநூற்கலைக
ளவ்வயெலாங்கெடக்கெடுப்பதும்பொருள்விருப்பன்றே. (௪௦)

பின்புதக்ககன்றன்குலப்பேரராக்குழுவை
யன்பினாலழைத்தருந்தவவேடமீரமைந்தே
யின்புசால்கனிபற்பலவேந்தியவவேந்தன்
முன்புகொண்டுபோய்க்கொடுமினீரென்றனன்முன்னா. (௪௧)

அங்கதக்குழாமங்கதுபுரிந்தனவாங்கண்
வெங்கதக்கொடுந்தக்ககன்மிக்கதோரிரந்தைச்
செங்கனிக்குளோர்கிருமியாய்ச்சினவுருவொடுக்கித்
நகையால். (௪௨)

அரவமாதவரீந்தவப்பலமெலாமரசன்
வரவுநன்றெனாவாங்கியேவனைந்துதற்சூழ்ந்த
வுரவுசான்முனிவோர்களுக்கவைமுழுதுதவிக்
கரவுகொண்டியறக்ககனிருந்தவக்கனியை. (௪௩)

பண்கெண்டதிற்பரியதிப்பழமெனக்கரத்திற்
கொண்டிருந்தனன்மகிழ்வினூற்குருகுலக்கோமா
னண்டயோனியும்புரவலனழியுநாளழிதல்
கண்டுணர்ந்திடவமிழ்ந்தினன்கதிரவன்கடலில். (சச)

யாவதோவினிவிளையுமாறிறுதிருமோரே
பூாவதாகியநாளுமின்றருந்தவச்சிரிங்கி
நாவினீடுரைநவையுறுதென்றுநற்றவருங்
காவன்மன்னருநகலங்கினாரன்னதோர்காலை. (சரு)

ஏற்றதன்கையிலிரந்தையின்கனிக்குளோர்கிருமி
தோற்றல்கண்டிதுகறிக்குமோநமையெனச்சொல்லி
யாற்றன்மன்னவனகழுத்தின்மேலமுத்தினனதனைக்
கூற்றுவந்துதன்மருங்குறீஇநிற்பதுகுறியான். (சசு)

செழுநறுஞ்சுவையிரந்தையங்கனியினுட்செய்ய
புழுவுருக்கொடுபுகுந்தவததக்ககன்பொருக்கென்
றெழுதரூஉவெழிலிறைவன்மெய்யிறுகிடப்பற்றி
முழுவதூஉம்வளைத்திட்டனனென்பெலாமுரிய. (சஎ)

பெருகிருந்தவராதியர்பிறங்கொளிவேந்த
ரருகிருந்தவரவரெலாமஞ்சிவிண்டகன்றார்
கருகுபேரணற்கட்செவியுமிழ்கடுக்கனலா
லுருகிவெந்துநண்டேரியாயினனுலகுடையோன். (சஅ)

நதிக்கணுட்டுமோர்கான்மிசைமண்டபநாப்பண்
மதிக்குலத்துயர்பற்குனன்றிருமகன்மகனைக்
கதிக்கொள்பாதலத்துறையராவணைந்துயிர்கவர்ந்தால்
விதிக்குமேலொருதெய்வமுநகொள்வரோமேலோர். (சக)

வெருவுபாந்தளால்விளிகெனவேந்தனைச்சபித்தான்
கிருமியாகெனவரவையுங்கிளர்ந்திலன்முனிவன்
மருவுமாறிதுபழவினைப்பயத்தெனும்வழக்காற்
கருவினூழ்வடிவேகொலாமுலகெலாங்கருதில். (ருo)

மண்ணினுடைடைப்பரீக்கிதுவெனபவன்வானோர்
விண்ணினுகைக்கொண்டபின்வேதியர்வேந்த
ரண்ணியார்தமரமைச்சர்மற்றனைவருங்கூடிக்
கண்ணியாற்றினர்மற்றவற்கிறுதியின்கடன்கள். (ருக)

மாயுமன்னனுக்காஞ்செயன்முடித்தபின்மதலை
யாயசீர்ச்சனமேசயன்றன்னையன்றவர்க
ளாயகம்பெறமணிமுடிமிலைச்சியேஞாலச்
சேயிழைக்குறுந்துயர்தணித்திருந்தனர்சிறப்பால். (ருஉ)

வேறு.

இந்நாளிலிறைக்குயிர்நல்குவான், வந்துமீண்டமரபினைநாடியே
யந்தக்காசிபன்றன்னையறிவுறு, நிந்தைசெய்தனர்நீணிலத்தோரெலாம். (ருக)

வன்திலாசிரமத்தில்வளங்கொள்பட், டினத்திறைச்சியிடத்திலுள்ளோரெலாங்
கனத்தகாசிபற்காணுறுமுன்னரே, சினத்திழிப்பர்கிமித்தந்தெரித்திடார். (௫௪)

பழிபுகன்றவர்பாற்புகுதேனெனு, வொழிபுசெல்லுமுறைமையருமோதிடு
மிழிபுகேட்டுநின்றேங்கிமறையவன், விழிபுனற்கொளவெள்கிவெதும்புவான். ()

காசிபன்றனைக்கண்டவர்தாமெலா, மேசுகின்றமைக்கேதுவுணர்ந்திடா
ஞசையோமெருகழைப்பார்தமைத், தேசமெங்கணுந்தேடிவருந்துவான். (௫௬)

யாதுசெய்குவன்யானிதற்கிங்கெனக், காதரங்கொளுங்காசிபன்காசினித்
தாதைபோலுயர்சாகல்லியப்பெயர், மாதவன்றனைக்கண்டுவணங்கியே. (௫௭)

பகலெனுவுலகம்பகர்பண்பினேய், புகலெனுவுனைப்புக்கனன்பூசுர
ரகலெனுவெனைநீக்கினராக்கிய, மிகலெனுற்றெளிவெய்துமவிதியிலேன். (௫௮)

பிரமவெங்கொலைபேசவுங்கேட்டிலேன்,சுரைநுகர்ந்திலன்சொன்னங்கவர்ந்திலன்
குரவனிற்குழுமுற்றிலன்கூடில, னுரைசெய்நானகுமுறுற்றினரோடியான். (௫௯)

வீணிலென்னைவிளம்பினாவெம்பழி, நாணினேனமிகநான்செயுமபாதகங்
காணிலோதுதிகாட்டுமறைப்பொருட், காணியாமுனிநீயென்றறைந்தனன். (௬௦)

மானமோவுரைகாசிபன்வாய்மைகேட், டீனமின்றியொருமுகுாதந்தனிற்
சானமுற்றுயர்சாகல்லியமுனி, யானவாறுணர்ந்தாஙகவற்கோதுவான். (௬௧)

கண்டுணர்ந்தனன்காசிபகேண்மதி, யுண்டதற்கொருகாரணமோதுவேன்
பண்டைவேதப்பனவர்பழிப்பரோ, கொண்டதோர்செயற்குற்றமில்லாமலே. (௬௨)

பாய்திரைப்புவிகாக்கும்பரீக்கிதின், சாதலாற்றிடுந்தக்ககன்றன்விடத்
தீதணிததிடச்சிநதனைகொண்டுபோய், நீதிரும்பினைநீணெறிப்பாதியில். (௬௩)

நீக்கலாமுறைநீண்மறைவல்லனுய்த், தாக்கிநஞ்சந்தலைக்கொளுவார்தமைக்
காக்கிலானெனினிற்காமமுன்னுறினு, லாக்கினுனவனேபவமஞ்சையும். (௬௪)

மையுறுந்துணைவாள்விழிமாதரைக், கொய்யுளைத்திறற்கோடலைவிற்பவர்
செய்யுநன்றிசிதைப்பவர்தாமெலா, முய்யுமாறுமுடையரொருவகை. (௬௫)

வல்லனாகியும்வல்விடமாற்றுத, லில்லனேற்பரிகாரமுமில்லனு
மல்லனேடொருபங்தியினிடல், சொலலல்காணடலிம்மூன்றினுந்தோமுறும். ()

அன்றியந்தவரசனருட்டுறை, நின்றநெஞ்சனெடியவற்கன்பினு
னென்றியோகத்தொருப்படுமுண்மையா, னன்றுகாப்பவனுலவருணங்களும். ()

நண்ணியேசுகர்காவினவிற்றிடக், கண்ணன்மாக்கதைகாதவிற்கேட்டவ
னண்ணலன்னவன்றன்னையளிததிடா, தெண்ணம்வேறுபட்டேகினைமீண்டநீ. ()

குறியிலாவுயிர்கண்டங்குறுகினு, மறிவுளோர்களளிப்பதுகைவிடார்
வறிதினுலனறுமன்னனைப்போற்றிடா, நெறியினீயிங்குநிந்திக்கப்பட்டனை. (௬௯)

நீயிழைத்ததிதென்றுநிகழ்த்தினன், றூயெனப்படுசாகல்லியமுனி
காயுமென்கொல்கமெபனக்காரண, மாயுங்காசிபனுமென்றறிந்தரோ. (௭௦)

அதனைந்ததீமையகலவருளினு, துணர்ந்துசொற்றியுபாயமிதற்கென
ங்கினுன்மறைக்காசிபன்மாதவன், கணர்தியானத்திருந்துகழறுவான். (௭௧)

ஒன்றுபாயமுரைத்துமதனைநீ, யின்றுவல்லையிழைத்தியிருதடங்
தென்றிசைக்கடல்சேர்கந்தமாதனக், குன்றிலுண்டவற்றின்பெயர்கூறுகேன். ()

கஞ்சநாண்மலர்க்காயத்திரிமருள், வஞ்சநீக்குஞ்சரசுவதியென
விஞ்சைவாணர்விளம்புவர்மேலையோ, யெஞ்சுந்தீமையிவையிற்றின்மூழ்கினால். ()

மேற்றலம்புகலாகும்விளம்புநீக், காற்றுமேற்பமொழியினுங்காசிப
போற்றியாடுதிபோகுதியாண்டெனச், சாற்றினான்புகழ்ச்சாகல்லியமுனி. (எச)

தத்துவம்புகல்சாகல்லியன்பதங், கைத்தலத்திற்றொழுதுயர்காசிப
னத்தடங்களிரண்டினுமாடுவான், வைத்தசீர்க்கந்தமாதனத்தேகியே. (எரு)

விண்டுறங்கும்விலங்கலதன்கணூர், வண்டுலாமலர்வாவியிரண்டுடன்
றண்டபாணிவடிகனைத்தாழ்ந்தெழீஇக், கொண்டநூன்முறைச்சங்கற்பங்கூறியே.

அனகநீரிலடைந்துகுடைந்துமுன், பனவனாற்றியபாதகம்பாற்றியே
தனியிருந்தனன்றனபவமபோக்கிய, புனலின்கூலத்தொருசற்றுப்போதரோ. (எள)

ஆயகாலையழகணிபூண்டென, வாயில்வாழுஞ்சரசுவதிமறங்
காயுங்காயத்திரியெனுங்கன்னியா, மேயினாரவண்வேதியன்காணவே. (எஅ)

வீங்குபூண்முலைமெல்லினல்லார்தமைத், தீங்குதீர்ந்ததிருமறைக்காசிப
னாங்கணஞ்சலித்தன்பினரிவைமீர், நீங்கள்யாரைநிகழ்த்துதிரென்றனன். (எகூ)

இலவுநேரிதழ்மாதரிருவருங், கலையின்மெல்லியல்காயத்திரியெனு
மலகின்றூதைக்குரியமனைவிமார, நிலையினீரிவற்றொனறுநிலைதரும்யாம். (அ0)

ஏர்படிந்தபடியிலெடுத்தவெம், பேர்படிந்தபிரசமலர்த்தட
நீாபடிந்தனைநீயெனுங்காதலாற், சீர்படிந்தவரந்தரச்சேர்ந்தனம். (அக)

எல்லையிநதவிரண்டினுமூழ்குவோர், பால்வழங்குவம்பண்ணியபேறெலா
நூல்வயங்கொளிமார்பநுவலுநீ, மேல்வரங்கொளவேண்டியதென்றனர். (அஉ)

என்னைவேண்டியதென்றசொலின்சுவை, கன்னநுண்டுளைநுங்கியகாசிபன்
பொன்னினீடுகருப்பன்புகழ்மனைப், பன்னிமாாதமைப்பணிவழுத்துவான். ()

பூவிரும்பும்பொலஞ்சுடர்நான்முகத், தேவிரும்புந்திருவுருத்தேவிமீர்
நீவிர்கற்குநெடுங்கலையாயினீ, ராவிரன்றியவற்றின்பொருளெலாம். (அச)

சத்தநீவிர்பதங்களிற்றங்கிடும், வைத்தவாக்கியபேதவகையினி
லொாததாற்பரியத்தினுணர்ச்சிநீா, முததிகாட்டுமுகரிமைச்சோதிநீர். (அரு)

எம்மையாளுமிறைவனிடத்துறை, யம்மையென்பதுமந்திருவென்பது
மும்மையேயன்றிநீங்களுணர்ந்துளோர், மெய்மைதேர்ந்திடில்வேறிருவோர்களோ.

ஆக்குவீருலகங்களனைத்தையுங், காக்குமட்டெனக்காக்கவும்வல்லிர்நீர்
நீக்கியாவர்நிலைப்பவருங்களை, வாக்கின்மேதகுமாமறையன்னையீர். (அஎ)

தென்புலத்தவர்தேவர்செயலெலா, மன்பினுங்களையன்றியுண்டாயிடா
முன்புஞாலமுளப்பதையன்றியே, பின்புமீறும்பெறக்கண்டிருப்பிர்நீர். (அஅ)

பூட்டுந்தேர்மிசைப்போதருமாதபன், காட்டுந்திங்களொன்றுமற்கருவரி
யோட்டுகின்றவொளிகளையுங்கள்சீர், நாட்டமென்றெவர்நாடுந்தகையினர். (அகூ)

வின்ஞுதுங்கள்விழியிற்பிறந்திடும், பள்ளமார்கடற்பாரகமெங்கணு
முள்ளுங்காலுமதுற்பலக்கண்ணிமை, கொள்ளும்போதுமுடியுங்குவலயம். (௧௦)

வேதமாகமமென்றுவிடைக்கொடி, நாதன்வாயினுதித்திடுநங்கையீர்
யாதுநானுமையேத்திடவல்லனோ, நோதலற்றனனுங்கடங்காட்சியால். (௧௧)

அறத்துச்செல்லுமறிவுநெறியிலா, மறத்துமீளுமறிவும்வழங்குவீர், துறத்தலின்றெ
னைச்சூழ்ந்திங்கியாவருஞ், சிறப்புச்செய்யவுஞ்செய்மின்றிருவன்னீர். (௧௨)

நெஞ்சிற்கோளிவையென்றுநிகழ்த்தியே, மஞ்சிற்றாழ்குழல்வேதன்மனைவிமார்
பஞ்சிற்கஞ்சிச்சிவக்கும்பரிமளக், கஞ்சத்தாள்கள்பணிந்தனன்காசிபன். (௧௩)

மேவுநான்மறைவேதியன்வேண்டிய, மூவரங்களுமுந்துகொடுத்தயன்
றேவிமார்களிருவருஞ்சீதள, வாவிநீருண்மறைந்தனர்மாதரோ. (௧௪)

வீசுநீரினுண்மெல்லியர்புக்கபின், னாசிகூறியழைத்தறவோரெலாம்
பேசியின்பம்பெருநண்புகொண்டிடக், காசிபன்றன்கடிநகர்மேயினான். (௧௫)

வேறு.

உலகிலன்றுயர்காசிபநாமமாமொருவனந்தணன்மாசறுகாதையா
நிலவுமிங்கிதுபேசிடுமாசையோர்நிறையுமன்பொடுகேள்விகொணீர்மையார்
பலருமைம்புலவேடர்களோடவேபழுதில்வென்றிகொண்மாதவமேலையீ
ரிலகுபங்கயநீண்மனைமாதராரிருதடங்களுமாடினராவரே. (௧௬)

காசிபச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௨,௫௦௫.

பலதீர்த்தச்சருக்கம்.

ஓதுமுணர்சூதமுனியோதநெடுந்திரைவேலைச்
சேதுவுளபலநற்றீர்த்தங்களினமுனிவீர்
பாதகந்தீரவையிற்றின்பரிசுரைப்பனவற்றொன்றை
மூதுணர்வினோரிருணமோசனமென்றுரைசெய்வார். (௧)

மக்கடமிலாரேனும்வந்ததனிற்படிவாரேன்
முக்கடனுநீங்கிடுவர்மொழிந்தகடன்மூவகையு
மெக்கடனோவெனவினவிலிருடிகள்வானவர்பிதிர்க்க
ளக்கடனுக்குடையோர்களவையாமாறறைந்திடுவன். (௨)

வன்னிநிலைமுயலாதான்மாதவர்தங்கடனுளன்
சொன்னமுறைமகம்புரியான்சுரர்க்கிருணத்தொடர்புடையான்
றன்னுயிராமகவில்லான்றென்பிதிர்க்கள்கடனுள
னின்னகடனொருமூன்றுமிதிற்படிவார்க்கிலையாகும். (௩)

இயற்பிரமசரியத்தினிருவகையாமகப்பேற்றின்
முயற்சியுளரானாலுமுழங்கிருணமோசனதீர்
மயற்பிரியப்படிந்ததனால்வருமகிழ்ச்சிமருவலிலார்
செயற்பெரியசவுனகனோந்திலகநுதற்றிருமுகத்தீர். (௪)

அற்றபொருணல்குரவோனவனுமிதிற்படிந்தக்கா
லுற்றபொருணல்குரவோனெனப்படுவனுலகின்கட்
பெற்றகடன்பிறர்கேட்பப்பேதுறுவானதுகுடைந்தாற்
கற்றமுனிவீரவராற்கடன்கேட்கப்படுவானால். (௫)

மொழிதருபேரிதற்கிருணமோசனமற்றதுசெயலாற்
செழுநறுநீர்த்தடமதனிற்சென்றாடியெல்லோருங்
குழுமுனிவீர்கொண்டகடன்குரைகடனீந்திடக்கடவா
ரெழுதுபெருங்கடன்றீர்த்தலிதன்கடனுமிஃதன்றி. (௬)

தருமமகன்முதலைவர்தாம்வேள்விசெயற்பொருட்டான்
மருவலர்தீர்ததடமொன்றுவகுத்தனர்மற்றதில்வைகு
மொருபதினாயிரகோடியுயர்தீர்த்தமுதகமதிற்
பரிதியெனுமாறிரண்டும்பகலுமிரவும்பயிலும். (௭)

அட்டவசுக்களுமிருப்பரவர்தொகையின்மூன்றதிகம்
பட்டவுருத்திரர்குழுவும்பகரிமையோர்தாம்பிறரும்
விட்டகலார்புனலதனான்மேதகுநல்லபிடேக
மெட்டரும்வானவர்பிதிர்க்களிருவர்க்குஞ்செயலின்பம். (௮)

துறைப்புனன்மற்றிதுமுகந்துசுரர்பிதிர்க்கடமைநோக்கி
யிறைப்பவன்பால்வினைமுழுதுமிரிந்தோடுமினிதிருப்ப
னறைப்பதுமனுலகினவனுந்தடமீங்கிதன்றடத்தின்
மறைப்பனவன்றனையூட்டில்வளம்பெருகுமிருமையினும். (௯)

நால்வருணத்தவரேனுநலங்கெழுநீரதுதோய்ந்தார்
மேல்வருணநகொளப்பிறவார்மிக்கதினத்திதுபடிந்தார்
நீல்வருணவிழிகாணார்நிரயமிருள்வலிநெடுந்தேர்
கால்வருணனதிசைமறையுங்காலையினுங்காலையினும். (௧௦)

நினைத்திடுவோனிதுதன்னைநெடுங்கங்கைமுதற்றீர்த்த
மனைத்தினுஞ்சென்றாடினவனாவனிதிலையமிலை
யினைத்துயர்வினிதுகிற்கவிந்திரன்முன்னிமையோர்கண்
முனைத்தகுவர்கெடவேள்விமுற்றியதோர்தடமுண்டால். ௧௧)

சிறந்ததடமிதுதேவதீர்த்தமெனுந்திருநாம
மறந்திகழமருவுமதிலாடினவரகமெல்லாம்
பறந்தகலுஞ்சுழல்கான்முன்பஞ்சியெனப்படிந்தவர்தா
மிறந்தொழியாப்பதம்பெறுவரெண்ணரும்பேரின்பமுடன். (௧௨)

சூழியதனீர்தோய்ந்தாற்றோன்றியகாட்டொடுத்திழைக்குங்
காழிரும்பாதகநீங்குங்கடவுளரிற்கதிர்மறைத்த
வாழியவனெனத்தீர்த்தமவற்றின்மிகுமிதினொருநாட்
டாழுமவன்சதவருடந்தழலோம்பும்பலன்பெறுவன். (௧௩)

இயம்பியவற்றருண்முனிவீரிரட்டுறவெண்ணவிரித்தப்
பயம்படியவிதில்வாசம்பண்ணவரும்பரிசிலர்க்கு
நயம்பெருகுங்கொடைபுரியநண்ணுதிங்கெல்லோர்க்குஞ்
சயம்பெருகும்பரிமேதந்தரும்பேறுதருமிந்நீர். (க௪)

வானவர்க்கும்பிதிர்க்களுக்குமாதவர்க்குமகிழ்ச்சிதருந்
தூநறுநீரிதுசேர்ந்தார்சுரிவளைமால்பதஞ்சேவா
ராணியமாறைந்தொருநான்கன்றியொருமூன்றிரண்டு
தானெனினுமிதிற்றரிப்பான்றாயுதரந்தனிற்றரியான். (க௫)

பகலொருமூன்றிதிலாடிற்பகர்வாசபேயமெனு
மகமதன்பேறுளதாகுமனத்தினினைத்திடவோடுஞ்
சகலபவங்களுமிந்நீர்த்தடத்தமராபிதிர்க்கடமைப்
புகலுமுறைபூசித்தாற்புகுங்காமப்பொருளனைத்தும். (க௬)

இட்டிமுழுதியற்றியபேறெய்துமிதற்கெதிராகப்
பட்டதொருதடமில்லைப்பரவுமிகபரமிரண்டுங்
கட்டகலும்பெருங்கதியுங்காதலித்தோரிதிற்படிவர்
சுட்டியிதன்றகையுமக்குச்சுருக்கியுரைத்தனனறுறவீர். (க௭)

என்னுரையிலடங்கியிடாதிதன்பெருமையிகல்வாலி
தன்னிளவலிரவிமகன்றன்னுமததொருதீர்த்த
மன்னுமதுதனிற்படிந்தோர்மார்த்தண்டனுலகடைவர்
பின்னுமவர்பரிமேதப்பெருவேள்விப்பலன்பெறுவார். (க௮)

தரமகற்றுமதிற்படிந்தாற்சகத்திரகோதானபலன்
வருமனததினினைத்தக்கான்மறையோதும்பலன்பெறலாம்
பிரமகததிமுதலாகப்பிறங்குபெரும்பாவமெலா
மொருவுமிதன்புனலாடியுபவாசமூனுற்றியக்கால். (க௯)

தேட்டமுடன்மனமகிழத்தென்புலத்தார்தேவர்தமை
யாட்டியவனந்நீராலததோர்யாமதிருப்பே
ரீட்டுமகமிழைத்தபலத்தெட்டுமடங்கெய்திடுவன்
கோட்டமிலிந்நீர்குளித்தோன்குறித்துணருங்குலத்துண்மை. (௨0)

இன்னதடந்தனிற்படிந்தோரிசைக்கரியபேரின்ப
நன்னலஞ்சேர்நரமேதயாகபலநண்ணிடுவ
ருன்னியவையுளவாகுமுனுற்றுதவமுனிவீர்காள்
சென்மின்களிலகுகதிர்த்தினகரன்சேய்தீர்த்தத்தில். (௨க)

கொண்டநளன்பெயர்த்தீர்த்தங்குளிக்குமவர்வினையொழிக்கும்
விண்டலமேற்றிடுமெல்லாவேள்விகளின்பயனுதவு
மண்டலர்யும்பிதிர்க்களையுமதில்வைகிமூன்றுதின
முண்டிமறந்தருச்சித்தாருதயகதிரெனப்பொலிவார். (௨௨)

காலும்வெரின்பங்கடுப்பிற்கடிதுரகமேதமகத்
தாலுளதாம்பயனுமுறுமஃதன்றியழலவன்சேய்
நீலனிருந்தடங்குடைந்தோர்நீள்சொன்னயாகபல
மேலுமதிற்பதின்மடங்கேய்ந்திலங்குமழலுலகடைவர். (௨௩)

பங்கமில்சீர்ப்*பசுக்கண்ணன்பட்டமதிற்படிந்தோர்கள்
புங்கவிர்காளொருநாளும்புக்களற்றிலமிழ்ந்தார்கள்
சங்கமிகுஞ்சுரர்கற்பதருநிழற்கீழரசாள்வார்
கொங்கவிழ்தாரங்கதன்பேர்கொண்டபுனற்குளித்தோர்கள். (உச)

கயன்சரபனரன்பனசன்கவயனெடுங்குமுதன்முத
னயன்குலவுவானரங்கணல்கியநீர்நானங்கள்
பயன்பெரியவீடுதரும்படிந்தவர்க்கோர்பட்டமுள
தயன்புதல்வன்மகன்சேயாமணிதிகழ்வீடணன்பெயரால். (உரு)

ஒழியுமதின்மூழ்கினர்பாலுற்றதுயர்பிணிபாவம்
பழிபுரிவார்விழுங்கும்பிபாகமெனும்பவர்க்கவிருங்
குழியதனிற்குளியார்கள்கொடியகளுமிடியகலு
மழிவிறிருவைகுண்டமடைவரவரறவீர்காள். (உசு)

தேனறுந்தார்வீடணன்சீர்த்திறலமைச்சரொருநால்வர்
நானநறும்புனற்பொய்கைநான்குவகுத்தனரவற்றின்
பானலேயுமவர்பாவம்பரியுமுபவீதநடு
மானமதுதீர்த்தமெனவகுத்துரைத்தான்மலர்வேதன். (உஎ)

கரையிலருட்கடலாகுங்கவுசலைசேயருச்சித்த
திரையுடைநீர்வேணியனைச்சேவித்தற்பொருட்டென்றுஞ்
சரயுநதியும்பயிலுந்தடங்கந்தமாதனத்திற்
புரையகலும்படியதனிற்புகுந்தாடும்புடவியெலாம். (உஅ)

தன்னிகராமக்கிரியிற்சரயுமுதற்றீர்த்தங்கள்
பன்னுகின்றகோடிதலையிட்டபதினாயிரமு
மன்னுகங்கைமுதனதியும்வாரிதியேழும்வனமுந்
தொன்னிலைசேர்மாவிடமுஞ்சோதிபயிலாலயமும். (உகூ)

பொன்றருநாட்டவர்சித்தர்புகலிசைக்கின்னரரியக்கர்
நன்றிதெரிமுகரிமைசானற்றவர்மற்றவரேனைத்
தென்றலையபுலத்தருந்தாஞ்சேதுவின்கண்வீற்றிருப்ப
ரென்றும்வரிசிலைக்குருவாமிராகவன்றனாணையினல். (௩0)

வேறு.

இகவிலாப்பொருள்படநவிற்றினேமிரவிகோத்திரவிறைகரைக்கணு
ர்சலதீர்த்தமகிமையுமக்கரோதவறுமுத்திருமுனிகணத்தரே
புகலுமாக்கதையிதுபடித்தபேர்புகலிலாச்செவிவழிவிடுத்தபே
ரகிலமாற்பெருவினையொடுக்கியேயளவிலாக்கதிநிலைகொடுக்குமே. (௩க)

பலதீர்த்தச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,ருநக.

---

* கவாக்ஷன்

இராமநாதச்சருக்கம்.

ஏருலாவுசூதன்மீண்டுமுனிவரோடியம்புவான்
சீருலாவுசெவியினூடுசென்றுபுக்கவளவிலே
காரினீடுமிருடுரந்துகதிவழங்குகாதைபொன்
மேருவில்லிராமநாதன்மேன்மைகேண்மினென்றரோ. (௧)

ஏவர்கண்டகண்ணினோர்களேசிலாதகோசலக்
காவனம்பியன்பினோடுகந்தமாதனத்திலே
தாவனஞ்செய்முக்கண்மூர்த்திதனையன்னதலைமையோர்
மேவனந்தவின்பஞானவீடுசேர்வர்மெய்ம்மையால். (௨)

முதலுகத்தினாண்டுபெத்தின்முற்றுகின்றபுண்ணிய
மதுதிரேதநல்லுகத்தொராண்டினெய்துமஃதுறுந்
துதிகொடிங்களொன்றினிற்றுவாபரத்தினப்பலங
கதிருலாவு * வாரமொன்றினுதவுநீடுகலியுகம். (௩)

பாடிலாதகலியுகத்தொாபகலின்மேவுபயனினுங்
கோடிகூறுமிகுதிகொண்டகோதிலாதநல்லற
நாடொணாதவிடமொன்றினண்ணுமாயனான்முகன்
றேடிராமநாதனெந்தைதெரிசனத்தினாலரோ. (௪)

ஊங்குளார்பிதிர்க்களையருதககோடிபிறவுமா
யீங்கண்வையமுய்யநீடிராமநாதனிருபதங்
தாங்கருத்தின்வாரமொன்றுதானிரண்டுமூன்றுதா
னீங்கலின்றியென்றுமேனும்யாவரன்பினினைகுவார். (௫)

தங்களீறுவீறுமிக்கசண்டனெஞ்சுகொண்டிடான்
கங்கைசூடிபுகழியம்புகாதலோர்கள்காதினால்
வெங்கண்மேதியோதையுண்டுவிழுமமுற்றழுங்கிடா
ரங்கமாயுமன்றுதாமகண்டஞானமாகுவார். (௬)

போரின்மல்கிராகவன்பூசைசெய்தபுனிதனை
யாரிழைப்பரர்ச்சனையவர்நரர்க்குளல்லர்தா
நீரவேணியண்ணலார்நிமலமேனியாகுவார்
வாரமோடுவெழிபடார்வீழ்வர்மாயவாரியுள். (௭)

அந்தலிங்கமூர்த்தியையகத்தினுன்னல்செய்கிலான
வந்துகாணவில்லவன்வரம்பிலீகைதவமகந்
தந்துமிக்கபாவியாய்த்தனயர்மாடுதரையொரீஇ
யந்தன்மூகன்வதிரன்மண்ணையாய்வருந்துமறிவுபோய். (௮)

அத்திநாகநாரியிற்றுவக்கிவெற்பலைத்தநா
ளத்திநல்குமாலமுண்டவருளிராமநாதன்மேற்
பத்திசெய்யுமக்கடாள்பணிந்துபூசைபண்ணுவார்
புத்திமாழ்குபுன்கணோடுநெடுவனூர்புகுந்திடார். (௯)

* வாரம்—நாள்.

ஐந்நூற்றிரட்டிகொண்டபிரமகத்தியயுதமா
முந்துதேறலுண்டதீமையோரிரண்டுமோதியாம்
பந்தமாயகோடிகோடியுற்பவப்பவக்குழாஞ்
சிந்திஞாலமன்னனுக்குமவ்விலிங்கதெரிசனம். (௧0)

வேறு.

தரும்புகழிராமலிங்கந்தனையெதிர்கண்டுளோருக்
கரும்பவிழ்பதுமன்மாயனாகியதேவர்தம்மா
விரும்பிரயாகைகங்கையிவைமுதலிலங்குநீரால்
வரும்பயனில்லையுண்டாமானுடப்பிறவியாக்கம். (௧௧)

வருவதோர்தொடர்ச்சிதன்னான்மனங்கவர்மகிழ்ச்சிதன்னால்
வெருவினாலோபந்தன்னால்விளங்குமவ்விலிங்கந்தன்னைக்
கருதினோர்புகழ்ந்தோர்செய்தகடுங்கொடுவினைகளெல்லா
மெரிகொளிந்தனமாமேவுமிகபரமிரண்டிலின்பம். (௧௨)

எட்டியவுருவாய்நின்றவிராமநாதன்பாற்றொண்டு
மெட்டியல்பாகுமிந்தவிலங்கொளியிலிங்கந்தன்னி
லெட்டுணையன்பர்மாட்டுமினியநண்புடையனாத
லெட்டருமகிழ்ச்சிகூர்தலிழைத்திடும்பூசைதன்னில். (௧௩)

அவ்வருளுருவந்தன்னையருச்சனைசெயலதற்காக்
கைவினைவருந்தன்மிக்ககாதையிற்காதல்கூர்தல்
பொய்விரவாதவன்பாற்புகழ்மொழிகுழறிக்கண்ணீ
மெய்வழிந்திடவடங்காமேனியிற்புளகந்தோற்றல். (௧௪)

கோலமார்வடிவமென்றுங்குறித்திடல்குறிகடந்த
சீலமாரவ்விலிங்கசேவையாற்றமதுசிவ
பாலனம்புரிதலாகப்பத்தியின்கணிதந்தானோர்
நாலிரண்டாகுமுண்மைநவின்றிடினற்றவத்தீர். (௧௫)

மூடனிடத்துண்டேனுமொழிந்தவையெட்டுமுத்தி
நாடதற்குரியனன்னோனற்றவப்படிவின்மிக்கீர்
நேடருமுன்னில்வேறுநேயத்தாற்பிரமவுண்மை
பீடுசால்காட்சிதன்னாற்பிறங்கிடும்பிறழாமுத்தி. (௧௬)

மொழிதருமுத்திவேதமுடிபுநூற்கேள்வியாலே
யிழிபெலாநீத்தோர்க்கெய்துமிலங்குவேதாந்தஞானம்
வழுவிலாத்துறவுமின்றிவளங்கொளாச்சிரமமின்றி
யழிவினால்வருணத்தார்க்குமகிலவாச்சிரமத்தார்க்கும். (௧௭)

திருந்துசீரிராமநாததெரிசனமதனினாலே
பொருந்திடுங்கருவின்மீளப்பொருந்திடாப்புனிதமுத்தி

மிருந்தவர்தேவரெல்லாமேற்றமுங்குறையுமில்லார். (௧௮)

அனைநகரிராமநாதனருணிலையொத்தலாலே
வினைபலவிளைத்தோமென்றுவெருவரல்வேண்டாம்யாருந்
தனைமதித்திடலுமாகாதவத்தினோனென்னப்பானுக்
கனையிருளகற்றலொணாருங்கற்றவர்மற்றவர்க்கும். (௧௯)

சீரணியிராமநாததெரிசனம்பண்ணினானுக்
காரணநான்கும்வல்லவந்தணன்றானுமொவ்வான்
றாரணிவணங்கிராமேச்சரன்றனைக்கண்டோர்தம்மிற்
பேரணியோகவாணர்பெறுகதிபேதமில்லை. (௨0)

திங்களங்கண்ணிவேணிச்சிவபிரானிராமநாதன்
பங்கயம்புரையுஞ்செம்பொற்பதந்தொழும்பண்பினானைத்
தங்கடம்விழியாற்கண்டோர்பாவமுந்தணந்துபோமா
லங்கணனருளாலங்கணுவதோர்கணமதொன்றின். (௨௧)

மாசிலாவிராமநாதன்மலரடிவணங்ககில்லான்
பேசுநான்மறைகற்றாலும்பெருங்கொடைக்கருகனல்ல
னீசனுமிராமநாதனிடத்திலன்புடையோன்ஞாளிப்
பாசகனெனினுமீகைப்பாத்திரமவனேயாவன. (௨௨)

அத்தலத்திருப்போரெல்லாமானனமைந்துமேந்துங்
கைத்தலத்திளையமானுமகனலுமிழ்மழுவுமங்கை
வைத்தவெண்டிங்கள்வேணிமவுலியுமருங்கிலார்த்த
சித்திரவதளும்போர்த்தசிந்துரவுரிபபிறக்கும. (௨௩)

பூசியதவளநீற்றிற்பொலிந்தெழுதவளச்சோதி
வீசியவடிவும்வெள்ளைவிடைநெடுங்கொடியுமேவிக்
காசறுகண்டத்திண்டோட்கண்ணுதற்கடுக்கையந்தார்த்
தேசுடையிராமநாதன்றிருவுருவாவாதிண்ணம். (௨௪)

இதந்தருமிராமலிங்கமிருக்குமூர்க்கேகுவார்க்குப்
பதந்தொறும்புரவிமேதம்பண்ணியபலமுண்டாகும்
விதங்கெழுமலர்நீபன்னமென்கனிவழங்குவாரைச்
சிதைந்திடாதருளுமென்றுஞ்சிவபிரானிராமநாதன். (௨௫)

சேதனர்வணங்குஞ்செல்வச்சேதுவிற்றிகழிராம
நாதனன்மகிழ்ச்சிகூரநான்மறைக்குலத்தொருத்தர்க்
கோதனம்பிடியொன்றூட்டமுததமருரகசென்னி
யாதனமிருக்கும்பூமியடங்கலுமளிததோராவர். (௨௬)

நாவினாலிராமநாதனல்லருளவழுததநாளும
பூவினாற்பூசைசெய்யப்புகழ்ந்திடச்சேதுவின்கட்
சாவுறக்கிடையாதியாக்குந்தாணுவேநீயேதாணு
வாவதென்றுணர்வார்வென்றியடைகுவரிங்குமங்கும். (௨௭)

கார்த்தருகளததினானைக்கவுசலைமதலைபோற்றுந்
தீர்த்தனைநினைக்கினன்றேசிறந்தவருலகிலெல்லாம்
பார்த்திருவின்பமுத்திப்பயனுறார்பணியாரந்த
மூர்த்தியைத்தொழுவார்க்குண்டாமொழிதரும்பலன்கண்மூன்றும். (௨௮)

திருமிகுமிராமலிங்கதெரிசனமதனின்மிக்க
தருமமுநிகருமின்றத்தாணுவைநெஞ்சிலெண்ணா
ரருமறப்பிரமகத்தியாயிரப்பத்திழைத்தோர்
வருநரகவரொடம்மாமாற்றமொன்றியம்புவார்க்கும். (௨௯)

வேதநூல்சாத்திரங்கள்வேள்விகளெலாமிராம
நாதனேபிறிதொன்றில்லைநம்பனையவனைதானே
யாதரவதனாற்போற்றியடிதொழல்வேண்டுமென்றேன்
றூதவிழ்சரோருகப்பூஞ்சரணமேசரணமானோர். (௧0)

இடுக்கணுமெவையுநீங்கியாகங்கடவங்கள்யாவுங்
கொடுத்திடதீர்த்தமெல்லாங்குளித்திடல்செய்யும்பேற்றி
லடுத்ததோர்கோடிகூறாகதிகமாமறனுமெய்தி
பிர்சைவநாட்டில்வைகுவரென்றுமாதோ. (௧௧)

நன்னலங்கூரிராமநாதனையிரண்டுகென்ன
முன்னலசெய்திடுவனுயிரொருவன்றூவேழுகொண்ட
தன்னிருஞ்சுற்றத்துள்ளார்தமமையேற்றித்தானு
மின்னறீசிவபுரத்திலயாவருமேத்தமன்னும். (௧௨)

பொழுதிலொன்றிராமநாதன்பொன்னடிக்கமலந்தன்னு
ளொழுகினேனிகத்துமின்புற்றீறறிலவவிறைவனுவன்
கெழுதகுநகாலையந்தக்கிளரருட்குறியைநெஞ்சாற்
றொழுமவன்சிவனுநகொண்டதுவக்குடம்பதணிற்றுனே. (௧௩)

காலையவவிலிங்கங்காணிற்கறையெலாம்பறையுமுச்சி
வேலையில்வணங்கிற்றேறன்மிசைந்ததீஙகாயிரமபோ
மாலையிற்பணியததீருமாதிருகமனநகீர்த்திப்
பாலையப்போதுகூறிற்பாறுமாயிரம்பொற்சோரம். (௧௪)

கண்டவர்பாவவெற்பைக்கணத்தினுண்டுளியாக்கு
மொண்டிறற்சூலவேற்கையும்பர்கோனிராமநாதன்
முண்டகக்கழற்கால்போற்றிமுற்றிடாக்கருமமற்றை
யெண்டராதத்தருமகோடியாவையுமீகிலாவே. (௧௫)

செங்கணேறனவிராமன்றிணிசிலைக்கோடிசூழ்கி
யங்கணனிராமநாதனடிபணிந்தடையும்பேறு
கங்கையிற்கிடையாதன்றேன்கழறொழார்கரவிலன்றித்
தங்குலத்துரியவையாதம்வயிற்றுதித்தாரல்லா. (௧௬)

ஏற்படவெழுந்துமுக்காலிராமநாதாவென்றக்கான
முற்பகற்பவங்கடீருமொழியுமவ்விலிங்கமூர்த்தி
யற்பினர்க்கருளவேண்டுமாதரமேவியென்றும்
விற்பயில்கதிராங்காணும்விழியினர்துயர்ப்பணிக்கே. (௧௭)

ஈண்டுயிர்விடுங்காலுள்ளத்திராமநாதாவென்றெண்ணின்
மீண்டிவண்வாரான்முக்கண்விண்ணவனுருமெய்மெய்
யாண்டருளிராமநாதாவணிகொண்மாதேவாவந்தண்
காண்டருகடலேயென்பான்கலிவலிநலிதலில்லான். (௧௮)

ஐயர்காள்யாவரேனுமாக்கையஞ்சிறையிற்றிரா
வுய்யுமாறன்பினீலலோகிதாவுலகநாதா
செய்யசீரிராமநாதாசெஞ்சடைமுடியாவென்பார்
வையகவடிவமாகுமாயையான்மயங்கவில்லார். (௧௯)

தன்னிகரிராமநாதாசதாசிவாநீலகண்டா
பன்னுமாதேவாவென்பார்பண்ணியபாவம்பாறு
மின்னுவேற்காலகாலாவேலைவாய்விடமயின்று
மின்னருளிராமநாதாவென்பவர்சினங்கொண்டெஞ்சார். (௪௰)

ஏயசீரிராமநாதாவிளநிலாமுறுவலாலே
தீயவர்புரங்கண்மூன்றுஞ்செற்றமாதேவாசெல்வ
மேயசங்கரனேயெனபார்வேணவாவீக்கமென்னும்
பாயுநீர்வேலைமூழ்கார்பயிறவப்படிமையீர்காள். (௪௧)

அருளுடையிராமநாதனமர்ந்தருளாலயத்தைத்
தருவினூற்றருவோன்சுற்றந்தன்னின்முக்கோடிசுற்ற
மருவுவான்புகுதுங்கோயில்வளங்கொளிட்டிகையாற்செய்தோன்
றிருமறுமாபன்வாழுஞ்செல்வவைகுண்டஞ்சேரும். (௪௨)

கற்கிளர்கற்கிசெய்தோன்கமலனூராளுங்காம
ரெற்கெழுபளிங்குதன்னாலிலங்கொளிவிமானஞ்செய்தோன்
பொற்கொடிவிமானத்தேறிப்புகுஞ்சிவபுரததின்னாங்கர்ச்
சிற்குணனுடனிருப்பன்சேதிமஞ்செம்பாற்செய்தோன். (௪௩)

வெள்ளியானிகேதனத்தைவிருப்பினால்விதிததோன்முக்கண்
வள்ளறன்வடிவமாகிவரமபிலாமகிழ்ச்சிகூருந்
தெள்ளுசீராடகததாற்சினகரஞ்செய்தமேலோ
னுள்ளுணர்சிவக்கொழுந்தாமொன்றுடனிரண்டின்றுவன். (௪௪)

எல்கெழுதிங்கள்வேணியிராமநாதன்பொருட்டு
மல்குசீராள்னசெய்தவரம்பில்பொற்கோயிலுக்கு
நல்குரவுடையோன்றந்தநலங்கொண்மட்கோயிலுக்கு
மொல்கலில்பயன்றுனென்றுமுதவிகொண்டோாவரைத்தால். (௪௫)

அருகுசேர்பாடலாடலபிடேகவேளைதன்னின்
முருகுமுன்னியங்கள்காலமூன்றினுமுயங்கச்செய்வோன்
றிருகுவெம்பவங்கணீங்கிச்சிறப்பினேடிமையவெற்பின்
மருகனுமிராமநாதன்வளர்சிவபுரததின்வாழ்வான். (௪௬)

அண்ணலாமிராமநாதனபிடேககாலந்தன்னி
னண்ணுசீருருத்திரத்லதநமகமார்சமகந்தனைப்
பண்ணமாபவமானத்தைப்பஞ்சசாந்தியைமுன்னாக
வெண்ணுமாமந்திரங்களியம்புவானிரயமெய்தான். (௪௭)

ஆறணியிராமநாதனணிமுடிக்கபிடேகத்தைப்
பாறயிரானநெய்யாற்பஞ்சகவவியத்தாலீசற்
கேறுமற்றவற்றாற்பண்ணுமியல்பினாரெய்துகின்ற
பேற்றதன்பெருமைகேண்மின்பேசுவன்பெருந்தவத்தீர். (௪௮)

இலவிதழ்முகிழக்கொங்கையிடம்பயிலிராமநாத
னலைபுனன்முடியிலான்பாலதனினாலாட்டுகிற்பான்
றலைமுறையேழுமூன்றுந்தமரொடுந்தருக்கிவாழும்
புலவர்போற்றிசைக்குமுக்கட்புராதனன்சிவபுரத்தில். (௪௯)

அலையினாலாட்டுவிப்போனகன்றுதீங்கலைத்துமங்கை
வலையினன்வைகுண்டத்தின்வைகுவன்மறுவிலாத
இலைகொளாணெய்யினாட்டக்கிடைக்குமேலொருவர்க்கன்னோர்
விலையுமோர்கற்பத்தாற்றும்வினைக்குழாம்விளிவுற்றோடும். (௫௦)

தேனினாலாட்டுவிப்பான்றிசைமுகனுலகஞ்சேரு
மானவெட்டயிலத்தாட்டுமவன்புகுமளகையந்தண்
மேனிலாமதியூரெய்தும்விருப்பஞ்சால்கருப்பஞ்சாற்றிற்
றானினீதிராமநாதன்சடைமுடிதன்னிலாட்டில். (௫௧)

ஈட்டுசெம்பீரநல்குமெழினறுங்கனியின்சாற்றா
லாட்டுவார்தென்புலத்தாரமருலகதனிற்சேர்வா
தேட்டுறுமிளநீர்தன்னாற்றிருந்தபிடேகஞ்செய்வா
ரோட்டுவார்முந்நூன்மார்பருயிர்க்கொலைமுதலபாவம். (௫௨)

குரம்புசேரிராமலிங்கங்குளிர்ந்திடவிளைந்தசெய்ய
வரம்பையங்கனிகள்சாததுமவன்பவமானாட்டின்
வரம்பிலாவரிசைமேவும்வடிததுவெண்டுகிலினாலே
நிரம்புநீராட்டுவிப்பானீரிறைநிலைமைசேரும். (௫௩)

சந்தனநறுங்குழம்புசாத்துவான்றயங்குபாடற்
கந்தருவத்தர்வாழுங்கடிநகரடைவன்கஞ்சக்
கொந்தலர்வாசமேவுங்குளிர்புனலாட்டுவிப்பா
னிந்திரனோடுமென்னானிருக்கையுற்றின்பங்கூர்வன். (௫௪)

பாதிரியலரிபுன்னைபாசடைக்கழுநீர்பூத்த
போதிவைகமழுமந்தண்புனலினாலாட்டுவிப்பான்
கோதிரிந்தோடுமேனைக்கொழுமலர்மணங்கலந்த
சீதநீராட்டுவிப்பான்சிவபிரானுலகஞ்சேரும். (௫௫)

பொருப்புறுமேலங்கோலம்பொலங்கெழுமுசீரம்வண்டேர்
கருப்புரமிவற்றினாற்றங்கட்டியவுதகந்தன்னை
விருப்பினாலாட்டுவிப்பார்மேதகுதிருவினோடு
நெருப்பெனுங்கடவுள்வாழுநீணகர்நிலைமைக்கொள்வார். (௫௬)

மண்ணினாலமைந்தகும்பமாநதிவாவியாதி
நண்ணுநீர்முகந்திராமநாதனுக்கபிடேகந்தான்
பண்ணுமாறுதவுகிற்பான்பதிற்றுப்பத்தாண்டுகோறும்
புண்ணியத்திருவினீடிப்புடவியில்வீற்றிருப்பான். (௫௭)

தாமிரத்தசும்புதந்தோன்சதமகனாகுந்தாரத்
தாமெழிற்குடங்கரீந்தோனம்புயாசனனூரெய்து
மேமநற்குடங்கொடுத்தோனீசனூர்மருவுமேழை
வாமனாரருகிருப்பன்மணிக்குடம்வழங்கினானே. (௫௮)

நாற்புவிபோற்றிராமநாதனுக்காட்டற்கேனு
நீற்பொலிகண்டத்தன்னோனிவேதனமதனுக்கேனும்
பாற்பசுவுதவுநல்லோன்பரிமேதபலமுமெய்தி
மேற்பரஞ்சுடராயென்றும்விளங்குவன்சிவலோகத்தில். (௫௯)

ஆரமு * ததனினூட்மேவன்பயனுண்டூறாறு
நேரயாணிகழ்த்தலாற்றேனீடனுக்கோடியாடி
யாரிறையிராமநாதாவென்பவரவர்சென்றெந்த
நாரகூழ்கிடினுஞ்சேதுநணைந்திடும்பேறுநண்ணும். (௯௦)

சிவந்தருமிராமநாதன்சிகரநீள்சேதிமத்தை
நவந்தரப்பழமைநீக்கிநலங்கொளப்புரியுமேலா
ணிவந்தவக்கோயின்முன்னர்நீணிலந்தன்னிற்கண்டோன்
றவந்தருமளப்பில்பேற்றிற்சதமடங்குடையனுவன். (௯௧)

சின்னமாமிடத்தைமுன்போற்செய்பவன்பிரம[illegible]த்தி
தன்னிலோரயுதந்தீர்ப்பான்றூனுவாமிராமநாதன
முன்னெரிதீபமிட்டோன்முந்துணர்முழுதுமுண்ட
மைந்நிறமருட்கைநீங்காமலவிருபேரக்குமாதோ. (௯௨)

சருக்கரைசெய்யசாலித்தண்டுலமெண்ணெயானெய்
பருப்பவைவழங்குமன்பர்பண்ணவாக்கண்ணலாவர்
பொருப்புவிலிராமலிங்கம்பூசனைபுரியக்காண
வுருப்பொலிவுணரத்தீண்டவொழிந்திடும்வினைகளெல்லாம். (௯௩)

நாடியபுகழிராமநாதனுமம்பலத்து
ளாடியையுன்னிக்கண்டையாடியையளிக்குமன்பர்
கோடியகனகச்சில்லிக்கொடிஞ்சிநூறுடையராகி
வாடியமருங்குல்பங்கன்வாழ்சிவபுரத்தில்வாழ்வார். (௯௪)

குடமுழாத்திமிலைமொந்தைகுணிலுடைநந்திதட்டை
படகமாகுளிமுனனுகும்பலவகைவாச்சியங்க
ணடநவில்சரணிராமநாதனுக்களிப்பாரன்றோ
னிடமிகுமுலகிற்பன்னாளிருப்பர்பல்லியங்கலிப்ப. (௯௫)

புங்கவனிராமநாதன்பொருட்டகல்புவியினுள்ளோர்
தங்கையாற்றருவதொன்றுதானணுவளவிற்றேனு
மங்கஃதநந்தமாகுமவன்றிருமுன்வசிப்போ
ரிங்கினிமீளவாராரின்பவீடெய்துகிற்பார். (௯௬)

ஆயுளுங்கடிதுசெல்லுமகன்றிடுமிளமைமக்கள்
சேயிழைநிதிநாடெல்லாந்திண்டிறல்வேந்தர்கொள்வா
ரேயிஃதென்னையென்னாயாவையுந்துறந்திராம
நாயகன்றன்னைநெஞ்சினாடுவார்ஞானமிக்கோர். (௯௭)

இடுக்கணென்றிட்டவெல்லாமிரிந்திடுமிராமநாதன்
கடுக்களத்தெந்தையெம்மான்கண்ணுதல்கடியவேங்கை
யுடுக்கையான்சரணமேன்மையுரைப்பதேயுயர்நெறிக்கண்
மடுக்குநூன்மரபினுய்ந்தமதிப்பயன்மாதவத்தீர். (௯௮)

மராமரமேழுமங்கோர்வாளியாற்றுளைத்தவள்ள
லிராமனாதரத்த லர்ச்சித்தேத்தியவிறைவற்கேற்ற
கிராமமீகுநர்தாம்யாக்கைக்கேட்டினிற்கேடிலாத
வராவணிவலயத்திண்டோளையனதுருவமாவார். (௯௯)

---

* அன்னம்.

தங்குமித்தரையில்வானிற்றலைமைசால்பாத்திரத்துப்
பங்கயன்றலையாற்செய்தபாத்திரங்கையிலேந்து
மங்கணனிராமநாதனதிகபாத்திரமாமந்தச்
சங்கரற்குதவுமற்பந்தான்பெரிதளப்பின்றாகும். (௭௰)

குடைகொடிவிசிறிசாந்தங்குக்குலுக்கொடுக்குமன்ப
ரடைய்விஞ்ஞாலமெல்லாமளித்திடுமரசராவர்
தொடைபுனைவதற்காம்வாசத்தூமலர்வழங்குவார்க்கு
நடைமிகுபுரவிமேதநன்மகப்பே றுண்டாகும். (௭௧)

சிட்டர்சூழிராமநாததெரிசனமேவரீகமேனுங்
கிட்டுமேற்றீர்த்தம்வேதங்கிருதுமாதவங்கள்வேண்டாங்
கொட்டமான்மதந்துருக்கங்கொடுப்பவர்சுருதிவேலை
யெட்டருங்கரைகண்டாக்கமெண்ணிலவெய்துவாரே. (௭௨)

நரைவிடையூரிராமநாதனுக்கிலங்குசோதித்
தரளமாரலங்கலீவார்தாங்கணல்குரவிற்றாழா
ரரவமார்கங்கைநீராலவவிலிங்கத்தையாட்டும்
வரமுளார்தம்மைமுக்கண்வள்ளலும்வரிசைசெய்யும். (௭௩)

இந்தியம்பிறழுமுன்னேயிரங்குடறிரங்குமுன்னே
சிந்தனைதியங்குமுன்னேசிரோருகம்வெளுக்குமுன்னே
யந்தம்வந்தணுகுமுன்னேயருச்சனையிழைத்திறைஞ்சி
நந்தமர்குழையிராமநாதனைநண்ணல்வேண்டும். (௭௪)

முன்புளசாத்திரங்கண்முறைகெழுபுராணமெல்லா
மன்பினலிராமநாதனருணினைந்திறைஞ்சுவார்கள்
பின்பயில்கின்றதங்கள்பிறங்கடையும்பலோடு
மின்பமுற்றிருப்பரும்பரெய்துவர்முத்தியென்னும். (௭௫)

வேறு.

நற்காதையீதுபேசுநாவினார்நட்போடுகேள்வியூடுநாடுவார்
விற்கோடிசூழ்குபேறுமேவுவார்மெய்ததாணுவாமிராமநாதனார்
பொற்கால்கள்காணுநீரராகுவார்பொய்ச்சார்பிலாதஞானமாதவீ
ரெற்கேழிராமநாதன்மேன்மைதானிப்போதுகூறினேமியாமரோ. (௭௬)

இராமநாதச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,௪௧உ.

)ராமனருச்சனைச்சருக்கம்.

பல்லாறுபடுஞ்சமயப்பொருள்பற்றிநின்றோ
ரெல்லார்களுமேத்தியிறைஞ்சுமிராமநாதன்
சொல்லார்புகழ்கூறியசூதனைமாதவத்தோர்
கில்லாதெழுநாரின்வினவிகழ்த்தலுற்றார்.

நீயேமறைமெய்ப்பொருளுண்மைநிலைப்படுத்தோ
னீயேபலதொல்கதைவாரிதிநீந்தியிட்டோ
னீயேயுயிர்கட்கருள்கூர்ந்திடுநேயமிக்கோ
னீயேநினையொப்பவன்யாருனைநேருநிற்பார். (௨)

வேதத்துறைகண்டவியாதனற்பாதநண்ணிக்
கேதத்துறைநீக்குபுமேற்படுகேள்வியானே
சேதுத்துறைமேன்மைகணீயுரைசெய்தலாலே
போதத்துறைபெற்றனம்யாமிதுபோதுமாதோ. (௩)

முந்தப்படிவந்தவிராகவன்முக்கண்மூர்த்தி
சந்தப்படிவப்பிரதிட்டைதனைப்புரிந்தா
னெந்தப்படிமற்றதுகேட்டுணரிச்சைமிக்கே
மந்தப்படிசொற்றருளென்றனரையரானோர். (௪)

அறிவாலுயர்சூதனுமப்பொழுதாரணத்தீர்
மறிவாரிதிசூழ்தருகந்தநன்மாதனப்போ
நெறியார்வரைமுனனரிராகவனீடிலிங்கம்
பிறியாமைநிறுத்தமைபேசுவனென்றுபேசும். (௫)

முனையாடிறல்வேற்கையிராவணன்முன்புகாட்டின்
மனையாடனைவஞ்சமிழைத்தனன்வெளவியேக
நனையாடொடைராகவனண்புறுதம்பியோடுஞ்
சினையாடருமேலுறைவானரச்சேனையோடும். (௬)

கானேறுமிடத்தினைநீங்குபுகைவிலேந்தி
வானேறுமகேந்திரவெற்பினில்வந்ததன்மேற்
றூனேறுபுசானகியென்பவடூந்தமால்போன்
மீனேறுகடற்றிரைவீசிடுமேன்மைநோக்கி. (எ)

வேலைக்கரைநின்றுவினைக்கடலேற்றுதன்றன்
காலைப்புரைநீள்கரையொன்றதனூடுகெட்டி
மூலைக்குழலைச்சிறைவைத்தவன்வாழிலங்கைச்
சோலைக்கடிஞாயின்மதிற்புறந்துன்னியங்கண். (அ)

புரை பாய்நிலவெண்மதியந்தியம்போதுவாவின்
விரைபாய்சுருட்சீதையைவிண்டமர்வெம்மையாற்றூன
வரைபாய்பவனுமெனவேறினன்வானரத்தி
னிரைபாய்படையோடுசுவேலைநெடுஞ்சிலம்பின். (௯)

ஒப்போதருமாண்பினிராகவவுன்னைநீங்கா
வுப்போதெனைவென்றிகொள்சானகியானனந்தா
னிப்போதெனையொத்ததுகாணுதியென்றுதிங்கண
ணம்ப்போதனையானொடுசொல்லியவந்ததும்பர். (௧௦)

நிறைபட்டநிலாக்கதிரெங்குநிரம்புகாட்சி
யறைபட்டபயோததிதன்மகளாங்கரக்கர்
சிறையிட்டிடவாடியிருந்திடுசெய்தியெல்லா
முறையிட்டிடவந்ததுபோன்றதிராமன்முன்னம. (௧௧)

சாய்தற்குடனெஞ்சுதளர்ந்துதவித்திராம
னோய்தற்களவேதகல்சீதையையுன்னியுன்னிக்
காய்தற்கெழுதிங்களுமேனிகரிந்துநாளுந்
தேய்தற்குளம்வைத்தவணின்றதுசேணிலம்மா. (௧௨)

கன்மேனிலையுற்றுழியாதவன்காளையீசன்
வின்மேனிலைகாரிலிராவணன்மேனிலத்தின்
முன்மேன்மையினின்றமைகாணுபுமுன்னியன்னோன்
றன்மேன்மகுடத்தினைவாங்கினன்மீதுதாவி. (௧௩)

சிலையார்கையிராக்கதர்காலறுசெய்கைகாட்டத்
தலையார்சயமெய்தினன்வானரத்தானைமன்னன
றொலையாவொளிவீசிடுசூரியன்றோன்றலுற்றா
ணிலையாயிடுமேகொலிராவணனீர்மைதானே. (௧௪)

மாலாருயிர்சென்னிவழிக்கழிவெய்துமாபோன்
மேலார்முடிபோனபினில்விடைமேவிவென்றி
யேலாதவிராவணன்வீரரினத்திழிந்தா
னீலார்முகில்வண்ணனுமவெற்பிடைநின்றிழிந்தான். (௧௫)

வேறு.

தாழவந்தபின்றசரதனொருதிருத்தனயன்
காழில்கோடரப்பதாதியைக்கருங்கடன்மருங்கின்
வாழிலங்கையையகவயின்வெண்டிரைவளர்பா
லாழிசூழ்ந்தெனவதற்கருகணிபெறவமைத்தான். (௧௬)

ஒட்டுடன்றிரள்வானரர்தமைத்திசையும்ப
லெட்டும்வென்றவனேவலாலிரும்படைத்தலைவர்
மட்டிறானையினோடுமேவந்தேற்றனாவானை
முட்டுமேனியரேதியங்கையர்பன்முகததா. (௧௭)

அனையராமவர்பருப்பணன்பூதனனரிசன்
சினமிகுங்குரோதவசனீள்கரனொடுசிரும்பன்
வனைகழற்பிராரிசனரிமுதலினோர்வஞ்ச
வினையின்மிக்கவரவர்செயல்விளம்பலாந்தகைததோ. (௧௮)

பல்லுருக்கொடுபோதகமெழுந்தெனப்படர்ந்த
கல்லுருக்கெழுமொய்ம்பினரவர்தமைக்காணூஉத
தொல்லுணர்ச்சிகொள்வீடணன்மறைந்தொருசூழல்
வில்லுயிர்த்திடுகணைகடேய்த்தரைப்படவீழ்த்தான். (௧

மேதினிப்படவீழ்ந்தவர்தங்களைமீணடுங்
கோதிலாக்கவிவீரரிற்சிலவாதாங்குறுகிக்
காதிவெண்பலாற்கறித்தலுமவனுயிர்கலங்கிச்
சாதியாதமர்மாண்டுயிர்மெய்ந்நிலைசாய்ந்தார். (௨

ஆவியெஞ்சினான்றியேயெஞ்சினாடங்க
மேவினார்நகரிலங்கைகோனெயிற்புறமேவி
வாவுகோடரத்தானைமேற்கொடுமரம்வணக்கித
தூவினான்கணைமாரியெண்டிசைகளுந்தூர்த்தான். (௨௧

இராந்தரம்பிறிதின்றியேபகழிகளேவ
நிரந்தவீரர்தாநீங்கினர்நின்றனனெடுவிற்
கரந்தரும்புயலன்னவன்கண்டுகெண்சிவந்து
வரந்தருந்திறலிராவணன்றனக்கெதிர்வந்தான். (உஉ)

வருமிராகவற்றெரிதலும்வரம்பிலாமுகமாத்
தருமிராக்கதர்தானையைத்தசமுகனிறுவிப்
பொருமுறைச்சமர்தொடங்கினானன்றவர்போரி
விருமதக்கரிதம்மிலேற்றெனவெதிரேற்றார். (உ௩)

பகரிராவணன்பாணியோரிருபதாற்பண்ணு
மிகலிலெண்மடங்கிராகவனிருகையாலிழைப்பப்
புகரில்வானவர்கண்டிறும்பூதுளங்கொள்ள
நிகரிலாதவரிருவருநேர்ந்துழியங்கண். (உ௪)

கனமிரண்டெனக்கருங்கடலிரண்டெனக்கனலி
யனையராற்றிடுஞ்சமர்க்கயலரக்கர்கோனளித்த
தனயனிந்திரன்பகைஞனுமிராகவன்றம்பி
யெனுமிலக்கிலாவிலக்குமன்றானுநேரெதிர்ந்தார். (உ௫)

செருவடங்கிலாவிரவிசேய்திறல்விரூபாக்கன்
வெருவடங்கிலாதுடைந்திடவேறெதிரேற்றான்
கருவடன்றனையங்கதன்றானெதிர்கலந்தான
பருவுடம்புடைப்பவுண்டரனளன்றனோர்படர்ந்தான். (உ௬)

பனசனேர்ந்தனன்படசனைவென்றிசைபடைப்பா
ணினையவாற்றினிலெண்ணிரியிராக்கதரெவருஞ்
சினவுவாட்கவிவீரருமெதிரெதிர்செறிந்து
முனையினேர்புரீஇத்தொந்தமாஞ்சமர்வினைமுயன்றார். (உ௭)

தொடங்குதொந்தவெம்போரினிற்கவிகளாற்றொலைந்தே
யடங்கவோடினாரிலங்கையையடைந்தனரரக்கர்
கடங்கொள்வேழநேரிராவணன்கௌசிகன்பகையா
மடங்கலேற்றினையேவினான்வானரப்படைமேல். (உ௮)

மைந்தன்மற்றவன்மைந்தினால்வானரவீரர்
சிந்தியோடினாரிராமனுஞ்சுமித்திரைசேயும்
பந்தமுற்றுளமயங்கினார்பன்னகக்கயிற்றா
லந்தமாண்பிணியகற்றினார்பறவைவேந்தருளால். (உ௯)

கடியகிப்பிணிதீர்ந்ததன்பின்பிரகத்தன்
றுடியெடுத்துவந்தெதிரிலாவீடணன்றன்மே
லிடியெனத்தெழித்தெறிந்தனனெறிதலுமிமைய
நெடியவெற்பெனமற்றவன்கலங்கிடாநின்றே. (௩௦)

கட்டுவான்பிரகத்தனைக்கருதியேகனல்கா
லெட்டுமாமணியிறுக்கியவெஃகினையேந்தி
விட்டெரப்பினானவன்றலைமேலிடியென்னப்
பட்டதாலுடல்வீழ்ந்ததுபாராரைமாமரம்போல். (௩௧)

மாமினிற்சுடர்வேலினாற்றன்னுயிர்மாய்ந்து
போமிகற்பிரகத்தனைக்கண்டுளம்புழுங்கி
நேமியிற்கிளர்கிரந்தமாவீரர்மேனெருங்கித்
தூமிராக்கனுங்குழிஞைசேர்சூறையிற்றுரந்தான். (௩௨)

அஞ்சுகோடரங்கண்டொருதருவினையனுமான்
றுஞ்சுமாறெதிர்தூமவெங்கண்ணன்மேற்றுரந்தா
னெஞ்சமற்றவனெஞ்சினனிராவணன்மருங்கு
தஞ்சமென்றுபோயுரைததனர்புகுந்தவத்தன்மை. (௩௩)

மண்படைத்தவன்மதலைசெய்மைந்தனுங்குருத்துக்
கண்படைக்கொளுந்தம்பியையெழுப்பியேகலந்த
திண்படைத்திறஞ்செப்பியேசெலலெனச்செலுத்த
வொண்படைக்களங்குறுகினான்குடச்செவியுரவோன். (௩௪)

இலங்கைக்காணிலையாமெனுமிராகவற்கிலையான்
வலங்கொள்போர்நெடிதாற்றியேவனசமாளிகைமேற்
பொலங்கொளான்முகனீர்முகச்சிலீமுகப்புத்தேட்
குலங்கொண்மொய்ம்பினானுயிர்ப்பலியூட்டினானவப்பால். (௩௫)

கும்பகன்னனுண்டிறந்தபின்குளிர்மதுப்புகட்டுந்
தும்பியன்னவரிருவர்தாந்தூடணனென்பான்
றம்பிமார்தமையொத்திடார்தசமுகனல்லார்
வெம்புநீலனால்வாயுவின்சேயினால்விளிந்தார். (௩௬)

ஏவானவர்தபதிசெய்வதைத்தா
னுயிர்கவர்ந்தனனகம்பனைக்குமுதனுமுரவோ
னயர்வுகூர்ந்திரண்டாவதாநந்தைநாளடர்போர்ச்
செயறிரிந்துபோயிராவணனகரியைச்சேர்ந்தான். (௩௭)

பின்றையாகவத்திலக்குமன்பெருஞ்சிலையெழிலி
நின்றுகான்றிடுஞ்சரமழைநனைந்துயிர்நீத்தார்
கன்றுளத்ததிகாயனுமகாலனைக்கவளந்
தின்றுதேக்கிடுந்திண்டிறற்றிரிசிரத்தவனும். (௩௮)

இகனராந்தகன்றேவவந்தகனெனுமிருவர்
பகலவன்மகனாற்குடக்குழையினான்பயந்த
தகவிலோரிருதனயர்கண்மாருதிதன்னான்
மகரநேத்திரன்வீடணனாலவண்மாய்ந்தார். (௩௯)

ஆற்றலாலுயரிராவணனதன்பினந்தரர்கோன்
மாற்றலான்றனையேவினன்மற்றவன்வந்து
போற்றலார்படைத்திரளொடுமிருவரும்புலத்திற்
றேற்றலாமருள்வாளிதூய்மம்மர்செய்திட்டான். (௪0)

அங்கணங்கதன்சீறியேயன்னவனாரும்
வெங்கணூர்தியைவீட்டலுமேதினியதன்மேற்
றங்கலின்றியாகண்டலன்றண்டலன்றனிப்போ
யெங்குமாகியவிசும்பினுட்கரந்துபுக்கிருந்தான். (௪௧)

* வச்சிரதமிஷ்டிரன்.

சாம்பவன்னளனங்கதன்றரணிசேய்தன்பே
* ராம்பலான்முதலனைவருமவன்கையத்திரத்தாற்
சோம்பிவீழ்ந்துணர்வழிந்தபின்கோசலைசுதன்றாள்
கூம்புசெங்கையான்வீடணன்கூறுவான்குறுகி. (சஉ)

கோசலாதிபகேண்மதிகுய்யகன்கரத்தி
லேசிலாவொருதெய்வகீரியக்கர்கோன்விடுத்தான்
காசிலாவதுகொண்டுகண்கழீஇயினுற்ககன
மீசுலாவுறும்யாவையும்வெளிப்படத்தெரிக்கும். (சந)

அளிக்கநின்கையேற்றம்பகங்கழுவினரெவர்க்குந்
தெளிக்குமென்றனனென்றலுஞ்சிறப்புடன்வாங்கிக்
களிக்கும்வாரிசமலர்மிசைக்காம்புநீள்கஞ்சந்
துளிக்குமவேரியிற்கரங்களாற்பெய்துகண்டுடைத்தான். (சச)

எழிவிராகவனீங்கிடக்கொண்டிலக்குமனும்
பழுதில்சாம்பவன்பரிதிசேய்வாலிதன்பாலன்
வழுவின்மாருதிமயிந்தனேதுமிந்தன்மற்றெவருங்
கழியினுர்விழியப்புனலான்மருள்கடிந்தார். (சரு)

ஆயகாலையிலந்தரநிலைக்கொளுமரக்கன்
சேயையாவருங்கண்டனரிலக்குமன்சீறித்
தாயடித்தனனவன்றனையன்றவர்தமக்கு
மாயிருஞ்சமர்விளைந்ததுவானவர்மருள. (சசு)

தேவர்கோன்மருவலன்றனைவல்லவாசெருவி
லோவிலாதுளந்தரித்தொருவகையினுலொருமூன்
றுவதாகியவைகலினணிமதிலயோத்தி
காவலன்றனக்கிளையவன்கொன்றுயிர்கவர்ந்தான். (சஎ)

மூலமாகியபலமெலாமிராகவன்முடித்தான்
காலமன்னதிலிராவணன்கடுஞ்சினந்திருகிக்
கோலமெல்லிடைச்சீதையாங்கொம்பரையொசிப்பான்
மாலுளங்கொடுபடர்ந்தனன்மதங்கயமன்னான். (சஅ)

அந்திலன்னவளாவிசென்றழித்திடாதரக்கன்
விந்தியன்றகைந்திடுதலுமீண்டுதேர்மிசைக்கொண்
டுந்துமான்படையிருணவுதன்பிழம்பொப்ப
வந்தனலகளத்தவண்மகவானனுமதியால். (சகூ)

சயந்தனக்கிணைதீர்பசும்புரவியிற்றயங்குஞ்
சயந்தனங்கொடுவந்தனன்பரிதிதாழ்ந்தென்னச்
சயந்தனன்புறுதாதைதன்சாரதிகருப்பா
சயந்தனன்பருக்கொழித்திடுமிராகவன்றன்முன். (ருo)

இடிஞ்சிறாண்டிடவெழுஞ்சுடர்மூலநேரிராமன்
கொடிஞ்சிமற்றதிலேறியேகொடுமரங்குனித்து
முடிஞ்சிடாமுடிபத்தையுமுண்டகன்கணையாற்
றடிஞ்சிராவணற்கொன்றுடல்வீழ்த்தினன்றரைமேல். (ருக)

---

* குமுதன்.

வேறு.

ஆங்கணிமையோர்களுமருந்தவருமதகி
யேங்கொலியிலங்கைமணிராவணனையாவி
வாங்கவரிவிற்குவவெரிங்கியவிராம
னோங்குதிறல்வென்றியையுவந்தினிதுரைத்தார். (ருஉ)

நேரியபொருட்கொடைநெடுந்தருவினொண்பூ
மாரிகள்சொரிந்தனர்வழுத்தினரவவேலை
யேரியவிராகவனியாவரொமெந்தண்
வேரிகமழ்புட்பகவிமானமிசையேறி. (ருங)

தைதையமணம்புரிதினதினமகிழ்வெய்தி
யோதமெறிவாரிநடுவூடமரிலங்கை
நாதனெனவீடணனைநல்கியுயர்கந்த
மாதனமடைந்தனன்வரம்பில்படையோடும். (ருச)

அண்டரெதிரவவரையழற்கரியதாக
வண்டமர்குழற்சனகிமாசுதெளிவித்தே
கொண்டகுழுவோடுதிகழ்கோசலைமகன்பாற்
றண்டகவனத்துறைதபோதனர்புகுந்தார்.

பாடுறுதழிழ்த்துறைபகுத்தமுனிமுன்னாக்
கூடிவருமாதவர்கள்கோதைபுனைசீதை
வீடணனிலக்குமன்விறற்கவிகள்விண்ணோ
ரோடமரிராமனையுகந்துபுகழ்வுற்றார். (ருசு)

அப்புகழ்மொழித்திறமறிந்திடும்விருப்பா
லெப்பரிசெனக்கடலினீரிருடிகாணீ
ரொப்புறவுணாந்திடுமினென்றுமொழியாதே
செப்புவன்முனித்தலைவர்செப்பியவையெல்லாம். (ருஎ)

எந்தையிவைகேண்மதியிலங்கொளியிராம
சந்திரவிராகவதயாபரதரங்கச்
சிந்துவுடையானையருள்செய்குதல்பொருட்டால்
—————ரப்பதம்வணங்குதுமியாமே. (ருஅ)

அராவணன்முடி
மராவணமதாவவதரிததிடுமெருட்சீ
தராவணமுலைத்தெரிவைதாடகைதன்னாவி
தராவணர்சிலைத்தலைவதாழ்ந்திடுதும்யாமே. (ருகூ)

காதிமகன்வேள்விநிலைகாத்தருள்சுரந்தோய்
மாதருறவந்திடுசுவாகுவைவதைத்தோய்
மேதகையதானதிறன்மாரிசனைவென்றோய்
கோதமன்மனைக்கருடாள்கும்பிடுதும்யாமே. (சுo)

ஓர்சிலைகுனித்துடனொடித்திலகுசுட்டி
வார்சிலைநுதற்சனகிவாஞ்சைதணிவித்தோய்
சேர்சிலையயப்பரசிராமனிகல்சிந்தக்
கூர்சிலைவனைத்தமுகில்கும்பிடுதும்யாமே. (சுக)

மாத்வள்கைகேசிகொள்வரத்திருமையாலே
தாதைசொல்வழாமலொருதம்பியொடுமெம்பொற்
சீதையொடும்வாசமதுசெய்திடவனத்தே
போதுமுனசேவடிகள்போற்றுதுமியாமே. (௬௨)

பிற்பரதனன்னைசெய்பிழைக்குளமிரங்கு
மற்புநெறிகண்டருளடித்துணையினானே
யெற்புருவகன்றுசரபங்கனினிதேறப்
பொற்புவிகொடுத்தபுகழ்போற்றிடுதும்யாமே. (௬௩)

வெற்றிகொடிறற்படைவிராதனைவதைத்தோய்
குற்றமில்சடாயுவொடுகொண்டமிகுநண்போய்
மற்குலவுமானுருவமாரிசனையட்டோய்
பொற்கமலநின்னடிபுகழ்ந்திடுதும்யாமே. (௬௪)

ராவணனெடுத்தசனகைகாத்
தடுத்தமர்விளைத்திடுசடாயுவுயிரேக
முடித்திடுகனற்றொழிலைமுற்றிடுபுமுததி
கொடுத்தநின்னடித்துணைகள்கும்பிடுதும்யாமே. (௬௫)

கவந்தனைவதைத்தனைகடக்கரியவெனறித்
தவந்தருநலத்தினொடுதாவிலருணேய
மூவந்தரியவந்தனையுடன்சவரிபோற்றுஞ்
சிவந்தகழல்சென்னிமிசைசேர்த்திடுதும்யாமே. (௬௬)

மேவிரவிமைந்தனொடுமேவரியநண்பாய்
வாலியுயிருண்டனைவயக்கவியினத்தாற்
கோலியொர்குரம்பதுகுயிற்றினையளக்காப்
பாலினையநின்னடிபணிந்திடுதும்யாமே. (௬௭)

எண்ணிரியரக்கருமிராவணனுமாளத்
திண்ணவரிவிற்குனிவுசெய்ததிறல்வீரா
வுண்ணினையுமன்பரிடரோடவருள்கூரு
மண்ணனுனசேவடியடைந்திடுதும்யாமே. (௬௮)

நாசமறுபூரணமெய்ஞ்ஞானசுகரூபா
மாசறுமிராமமுதன்மந்திரமுரைப்பா
ராசறுபவக்கடலினம்பியெனவந்த
கோசலைதருங்குமரகும்பிடுதும்யாமே. (௬௯)

முத்தொழில்விழைத்திடுமுதற்கடவுளாகி
மெத்துகருணைச்சலதிமேனியொடும்வந்த
தொதத்ருளியன்பர்களுவப்புறுமுளங்கூ
ர்த்தவுன்னடிக்கபயமாயினமியாமே. (௭0)

வெங்கொலையர்க்கர்கிளைவேரொடுமகழ்ந்தே
சங்கையறநோன்புபுரிதன்மையருள்செய்தா
யெங்களையளித்திடுதியென்றுமெனவேத்தி
யங்கைகமலர்கூப்பினரருந்தவர்களெல்லாம். (௭௧)

வேறு.

சீதைசேர்மார்பினனைத்திருமறைமுனிவர்கூடி
யோதியபுகழ்முப்போதுமுரைப்பவருலகில்வேண்டுங்
காதலினின்பமார்ந்துகதிநிலைகாண்பர்வட்டை
போதிடிற்புகல்வார்க்கச்சம்புந்தியிற்புகுவதில்லை. (எஉ)

படிப்பவர்தம்மைச்சேராபாரிடம்பிசாசுமற்று
முடிக்கரும்வியாதிபாவம்யாவையுமுடிவுற்றோடும்
வெடித்தசொல்லரக்கர்வாணாள்வீட்டினோன்புகழ்ச்சிநாவி
னொடித்தவரடைவரம்மாநுண்ணறிபுதல்வர்தம்மை. (எங)

படித்திடிற்கன்னிதானும்பங்கயக்கண்ணன்சீர்த்தி
கிடைக்கருங்கொழுநன்றன்னையடைகுவள்கிளர்ந்தசெல்வ
மடிக்கழலடையுமுத்தியன்றியும்வேட்டயாவு
முடிப்பர்களிராமன்சீர்த்திமொழிந்திடுமாந்தர்தாமே. (எச)

அத்தவமுனிவர்தம்மையஞ்சலிபுரிந்திராமன்
பத்தியினுடியிங்கென்பங்கயவிழியிற்பட்டோர்
மூத்தரேயெனினுமென்னைமுதல்வனேயென்றியாரும்
வைத்திடற்குரியனேனும்வரந்தரவல்லனேனும். (எரு)

உற்றிடுமுயிரிலாபத்துவகைகூர்ந்தொறுப்பில்சாந்தி
பெற்றுயிரெவைக்குமன்புபெருகியானெனதின்றாகி
வெற்றவைம்புலனடக்கிமேம்படுமறையோர்தம்பாற்
பற்றுளனுதலாலேபகர்வதொன்றுண்டுகேண்மின். (எசா)

பொருணிலைதெரிந்துநன்றாப்புகலுமினிலங்கைபோற்று
நிருதனைக்கொன்றபாவநீங்கிடவெனக்குநீங்க
ளொருபரிகாரமென்றாலுரைசெய்வாருறுவரானோர்
வருதியாலிராமவாய்மைவிரதனேயகிலமன்னா. (எஎ)

ஓதியவாறுநன்றேயுமையொருபாகன்றன்னைப்
பூதலமுய்யப்பூசைபுரிதிநீயிந்தக்கந்த
மாதனமுத்திநல்குமற்றிதினிலிங்கமூர்த்தி
நாதனைநாட்டிற்றீருநண்ணியநவைகளெல்லாம். (எஅ)

இங்கிதிலிலிங்கந்தாபித்திடும்பலமியம்பலாற்றான்
பங்கயன்றானுமாக்கள்பாலதோபகருந்தன்மை
கங்கைசேர்காசிலிங்கங்கண்டதிற்கோடிபேறு
துங்கநீகிறுவிலிங்கச்சோதியைத்தொழுவார்க்குண்டாம். (எகூ)

நயங்கெழுமிந்தலிங்கஞாலமேலுன்றன்பேராற்
றயங்கொளிவிளங்கிராமேச்சரமெனத்தழைக்கநாளு
முயங்கிருவினையாங்காட்டக்குதவகனுகுமற்றிவ
வயங்கருளிலிங்கமையாவல்லையிற்புரிதியென்றார். (அ0)

கேள்வனுளமகிழ்ந்துறுவரோடும்
புண்ணியப்பொழுதிரண்டுபுந்தியிற்றெரிந்துபோரேற்
றண்ணல்வாழ்கயிலைமேவியருட்குறிகொணருமாற்றாற்
கண்ணியதமைக்கும்வென்றிக்கான்மகற்குறித்துச்சொல்வான். (அக)

அஞ்சனையஞ்சனக்கணருமணியனையசெல்வ
மஞ்சனைமாதுபாகன்வடகுலகயிலைக்கேகித்
தஞ்சமாரிலிங்கமூர்த்திதருதியாற்கடிதினென்றான்
கஞ்சமார்கண்ணன்காலிற்கான்முனைகரங்கள்கூப்பி. (௮௨)

கடவுளர்முனிவர்காணக்கந்தமாதனமெனும்பேர்த்
தடவரைபிலத்திற்றாழ்ந்துதான்சிறிதெழுந்துவிண்ணிற்
படிமிசைநிலைப்பவுந்திப்படர்ந்துவான்பனிவெண்டிங்கண்
முடியவன்கயிலைமேவிமுக்கணூற்றொழுதுவெற்பின. (௮௩)

குணதிசைநுனியாவேய்ந்தகுசையிருந்தங்கைகூப்பிப்
பணவரவனையவைவாயுளம்பதைப்பதையடக்கி
யுணவினையினறியாற்றியுயர்தவமுமையாணங்கை
கணவனதருளாற்பெற்றனகாண்டகுமிலிங்கமூர்த்தி. (௮௪)

ஈதிவன்செய்கையாகவிவன்வருவதற்குச்சற்றுப்
போததின்முன்னிராமன்புதுமதிவதனநாடி
மாதவர்வகுத்தவேலைவந்ததுநிறுப்பாய்வல்லை
சீதைவாலுகத்தாற்செய்தசிவனருட்குறியையென்றார். (௮௫)

ஆற்றுவனழகிதேயென்றருந்தவரமரரேனோ
ரேற்றமாசனகிபின்னோனிவரொடுமெழுந்தவேட்கை
மாற்றருமகிழ்ச்சியோடும்வரிசிலைக்குரவனவெள்ளை
நீற்றரனருளின்சின்னநிறுத்துவானினைந்தெழுந்தான். (௮௬)

சூரியன்மிதுனம்வைகச்சுக்கிலபக்கமேவுங்
கூரியன்றினத்தோடத்தங்கூடியதசமிதன்னிற்
சீரியவெதிபாதத்திற்றிகழ்தசயோகந்தன்னிற்
காரிகைமதியோடுற்றகாலையிற்கடுவினீற்றில். (௮௭)

சங்கரனூர்திநாமந்தாங்கியபவனந்தன்னிற்
பொங்குநீராடிநித்தம்புரிசெயன்முறையிற்போற்றிக்
கங்கணங்கரத்திற்சேர்த்திக்கண்டிவெண்ணீறணிந்திட்
டங்கரன்பதிட்டைக்கேற்றவாகமக்கடன்களாற்றி. (௮௮)

அதிர்திரைக்கங்கைநீரிலணிபெறவளர்ந்தவேணி
முதிர்சுடர்ப்பவளக்கொத்தின்முகிழ்த்தவெண்முகிழம்போலக்
கதிரிளநிலவுதோன்றக்கடியராக்கயிற்றிற்கட்டுஞ்
சதுர்மறைக்கரோடிமுட்டாட்டாமரைவாசமவீச. (௮௯)

அஞ்சுடர்முகங்களைந்தினலங்குதண்சுடர்க்கணொன்றும்
வெஞ்சுடர்விழியிரண்டும்வேறுவேறொளிவிளங்கச்
செஞ்சுடர்மணிப்பைநாகத்திருக்குழைவயங்குகாது
நஞ்சுடைக்களமுங்கண்டோர்நற்றவப்பேறுநல்க. (௯௦)

ஐயிருதடந்தோள்வெற்பிலாடராத்தொடிதயங்கக்
கையிரண்டைந்திலேந்துங்கவின்படைக்கலன்றழைப்பச்
செய்யதார்மார்பிற்றான்செய்திருப்பணியாகும்பன்றித்
துய்யதோர்கோடுமாமைத்துளங்கொளியோடுந்தூங்க. (௯௧)

கடுவுமிழ்வெள்ளெயிற்றுக்கட்செவிக்கச்சியாத்த
வடுவறுமருங்கிற்சாத்தும்வயவரியுரிவயங்கத்
தொடுகழலமரர்சென்னித்துணைப்பதந்தன்னிற்றன்மு
னிடுமெலர்நயனமாழியெய்தியபேறுணர்த்த. (௯௨)

எழுமனத்தன்பிற்பாவித்திராகவனிதயநின்றுஞ்
சுழுமுனைநெறியிற்கொண்டுதுவாதசாந்தத்திற்போகி
வழுவறுமந்திரத்தால்வந்திடப்பிராணமார்க்கந்
தழுவுதன்கரத்திற்றங்கிச்சத்தியோசாதந்தன்னில். (௯௩)

வடம்பிரியாதகொங்கைமலைவளர்காதன்மங்கை
யிடம்பிரியாதகாட்சியிலிங்கமாமீசன்றன்னைக்
கடம்பிரியாவிலங்கற்கந்தமாதனமாங்கார்கோட்
டடம்பிரியாதசேதுதன்னிலேதாபித்திட்டான். (௯௪)

தாவனஞ்செய்ததாணுத்தனக்கபிடேகஞ்செய்வான்
கூவலொன்றகழ்ந்தான்வில்லின்கோடியாற்குழகன்முன்னிற்
சேவுருமருவுநந்திதேவையுபதிட்டைசெய்தான்
காவலனயோத்திவேந்தன்கவுசலைகண்களனையான். (௯௫)

ஆசனைவருக்குந்தீர்க்குமக்கிணற்றுதகம்மன்மை
பேசினுமக்குமுன்னேபெருந்தவமுனிவீர்பின்ன
ரீசனையிலிங்கமூர்த்தியிசைந்தருளெம்பிரானைப்
பூசனைபுரியலுற்றான்புரவலனிராகவன்றான். (௯௬)

பரவுமானைந்துசெந்தேன்பலகனியிளநீர்முன்னா
விரவுசீரபிடேகங்கள்வேண்டியவாறியற்றிக்
கரமலாமுகந்துகூவற்கமழ்நறுந்தெண்ணீராட்டி
யரனையொற்றாடைசேர்த்தியாடகவறுவைசாத்தி. (௯௭)

சிந்தையால்வருந்தித்தானேதேடியன்றளக்கலாகா
வெந்தையார்பாதங்காணாஉவிளநகைமுகத்தனாகி
முந்துதானிட்டநாட்டமுண்டகமலர்தலுவான்போற்
பைந்துணர்மலர்தோய்நன்னீர்ப்பாத்தியந்தான்கொடுத்தான. (௯௮)

கலைநெறிமறைகளோடாகமங்களாங்கருணைவேலை
யலையெறிமுகங்கடோறுமாசமனங்கனல்கித்
தலைமையோரெனினுஞ்செய்யுந்தகுதிசெய்திடுவதென்னா
வலையுறழ்சடிலச்சென்னிக்குதவினனருக்கியந்தான். (௯௯)

கோதிலாக்கலவைகூட்டிக்குங்குமக்குழம்பினாட்டிச்
சோதிமாமகுடஞ்சூட்டிச்சூடாமணியாரம்பூட்டி
யோதனஞ்சுவைகளாறோடூட்டிநல்லுதகமூட்டி
நாதனுக்கினியதூபநகையொளித்தீபங்காட்டி. (௧௦௦)

எண்ணிரண்டுபசாரங்களெஞ்சிடாவகையியற்றிக்
கண்ணிநூன்முறையினுள்ளகருமங்கள்பிறவுமாற்றி
யுண்ணிறையனபினூற்றெட்டுருச்செபித்தஞ்செழுத்தைப்
பண்ணியபூசைப்பேறுபரமனுக்குதவினானே. (௧௦௧)

ஆற்றினீள்குரவன்றன்னையருச்சனையங்கிதிக்கின்
மேற்றிசையோகபீடம்வித்தியாபீடம்பூசித்
தேற்றவஞ்சலியான்முக்காலெழின்மலரிறைத்திறைஞ்சிப்
போற்றினானிராமன்வேதபுனிதமந்திரங்களாலே. (௧0௨)

மும்முறைவலங்கொண்டீசன்முன்பினின்றன்பினாடிக்
கைம்மலர்த்தட்டமிட்டுக்காகுத்தன்கண்ணீர்காலச்
செம்மனங்கொண்டுநின்றான்சிவபிரான்கவுரியோடு
மியமெனவெளிவந்தங்கணிராகவற்கருள்வதானான். (௧0௩)

கேட்டியாவிராமநம்மைக்கிளர்தனுக்கோடிநீரி
லாட்டியேயன்பினானீயகன்றுறைசசேதுவின்க
ணாட்டியவிலிங்கந்தன்னைஞாலமேறகாணப்பெற்றா
ரீட்டியபாவமயாவுமில்லையாமுண்மையென்றான். (௧0௪)

அன்றிநின்கையிலேந்துமத்தனுக்கோடிமுந்நீர்
சென்றதிற்படிந்துநின்னாற்செய்திடுமிலிங்கங்கண்டோர்
முன்றருபவங்களெல்லாமுடிததுடனபெறுவர்முத்தி
யுன்றனக்குரைத்தவாய்மையுண்மையீதுண்மையென்றான். (௧0௫)

அந்நிலைமுனிவரானோரரம்பையரமரர்சித்த
ரின்னிசையாணரேனோரிராமனோடுற்றாரெல்லாந்
தன்னிகரிலிங்கமூர்த்திதனிததனிதாபிதிட்டுப்
பன்னுநூன்மரபிற்பூசைபண்ணினாரண்ணலாரை. (௧0௬)

வேறு.

இந்தவேலைதன்னிலேயீசன்வெற்புநீங்கியே
யந்தண்மூர்த்திலிங்கமாமவையிரண்டுகொண்டுதான்
கந்தமாதனப்பெயாக்கடவுண்மால்வரைக்கணே
வந்துவல்லையெய்தினான்வந்துவந்தமைந்தனே. (௧0௭)

காதலாவிராகவன்கழல்வணங்கியன்பினாற்
சீதைதாள்பணிந்துபின்சென்றுதாழ்ந்திலக்குமன்
பாதகஞ்சமிரவிசேய்பதமிறைஞ்சியுற்றவா
றேதுமொன்றுமுணர்கிலானெய்தநின்றுநோக்குவான். (௧0௮)

சனகிவாலுகத்தினாற்றந்தலிங்கமூர்த்தியிற்
கனகமேருவில்லினான்காலனஞ்சுகனகழற்
பனகநீத்தபாயலானபண்ணுபூசைகண்ணுறீஇ
பனகசிந்தைமாருதியழன்றுசீற்றமாயினான். (௧0௯)

நாணிலாவியுட்குறீஇநாமுழந்தினைத்ததும்
வீணினென்றுவெம்பியேவிழிகணீர்ததும்பவே
தாணிலாவுகுனிசிலைத்தருமநீதியாய்ந்தசீர்க்
கோணிலாதகோசலைகுமரனோடுகூறுவான். (௧௧0)

யானெடுத்தவிப்பிறப்பிடும்பையின்பொருட்டலா
லூனெடுத்தசெய்கையாலொன்றுமின்பமுற்றிலேன்
றேனெடுத்தசின்மொழிச்சீதைகேள்வசேருமோ
வானெடுத்தகோடுவாழ்மர்க்கடக்குமாட்சியே. (௧௧௧)

நீயவஞ்சநிலைமைசூழ்தேவரோடிருதரா
லேயதுன்பமளவுறாவென்னையன்னமகவினோர்
தாயராதல்வேண்டிலார்தையலார்கண்மையலார்
காயவாழ்விலெய்தினேன்கரைபடாதகவலையே. (௧௧௨)

முன்புசேவைநிலைமைசேர்முயற்சியால்வருந்தினேன்
பின்புநீடெமரிலேபீழைமம்மர்பெருகினே
னன்பிலன்னையன்னநீயாரிடத்துமவமதிப்
பென்பொருட்டியற்றினாயானிழைத்ததீமைதேனோ. (௧௧௩)

பெண்ணினாசைகொண்டுநின்பின்றிரிந்துழன்றனை
னண்ணல்வாலிதம்பிதானரக்கர்கோன்றனநுசனு
மண்ணினாசையாலுனைவந்துசேவைபண்ணினா
னெண்ணியாதிராமநின்னைவல்யானிழைத்ததே. (௧௧௪)

நிரந்தவீரரளவிலார்நிற்கநீடுகெங்கைநீர்
பரந்தவேணிமௌலியான்பருப்பதத்திலேகியே
வரந்தயங்கருட்குறிவல்லைகொண்டுவருகெனாத்
துரந்ததென்னையென்னிநீதுயரவிளைக்கவெண்ணியோ. (௧௧௫)

திருகிவேறுசெய்யுநின்றிருவுளத்தையறிகிலேன்
பெருகுவானினூடுபோய்ப்பேதைபாகனங்கணன்
கருகுகண்டனெம்பிரான்கழல்பணிந்துநோன்பினாற்
சருகிலங்கம்வாடினேனனூறுவுள்ளமகிழவே. (௧௧௬)

தேவதேவர்போற்றிடுஞ்சிவபிரானுநல்கினான்
மேவிலிங்கமூர்த்தியைவிரைந்துகொண்டுமேவினேன்
மாவினாதவைத்துநீமணலிலிங்கமூர்த்தியை
யேவர்காணவர்ச்சனையிழைத்திசொல்வதென்னியான். (௧௧௭)

இன்றுசெய்வதென்னினியிவ்விலிங்கமூர்த்தியை
முன்றவத்தினுரனிலானமுன்னியொன்றைமுயல்வுழி
நன்றுறாததனறியேநவையுமெய்துமென்றிடு
மன்றைநூலின்வாய்மையென்னளவிலேபலித்ததே. (௧௧௮)

பொன்னிலங்குமார்பனேபுரியுமாறுவேறெவன்
பின்னையெங்ஙனேகுவன்பிழையிதாற்றிலேனியா
னென்னிடும்பைகருதிலேனெனைச்சுமக்குமிருநில
மின்னிடும்பைகருதியேமெய்வெதும்புகின்றனன். (௧௧௯)

இறையிராமவுன்றனாலிகழ்வுபெற்றவிவ்வுடற்
பொறைபொறுக்கநெஞ்சகம்பொருந்திடாதுநின்னையான்
குறையிரப்பதொன்றினிக்கூடுநீங்குகொள்கையே
யுறையுமிந்தவவையினோருவகைகூருமாறரோ. (௧௨௦)

என்றுபல்லமாருதியிசைத்திரங்கியேங்கியே
நின்றுதேம்பியழுதுதானெடிதுகூவியலறியே
கன்றியாகநெஞ்சகங்கவன்றயோத்திகாவலன்
வென்றிமேவுசரணமுன்வீழ்ந்துமண்கிடந்தனன். (௧௨௧)

வே று.

துளங்கிவிழுமாருதிதன்சோகமிகைதனைநாடி
விளங்குகருங்கதிரதிங்கள்வெண்ணிலவுபொழிந்தென்ன
விளங்கருணைநகையாடியிருந்தவர்முன்னிராமன்றான்
வளங்கொண்மொழிபுகனறவன்றன்மனநதேறும்வகையுரைப்பான். (கஉஉ)

என்னிலையும்யானறிவனென்னையலாப்பிறவுயிரின்
றன்னிலையுமறிகுவன்யானறியாததகையில்லை
பனனுதிறன்மாருதியேபட்டவற்றின்படுபவற்றின்
மன்னுநிலதமொழிநதவறறின்மரபென்றுமுணர்ந்துள்ளேன். (கஉங)

ஒற்கமில்சீர்மாருதியேயுயிரொன்றேயுற்பவிக்கு
முற்கருமநெறியதனுன்முடிந்தகலுமுடிவில்லாச்
சொர்க்கமொடுபவர்க்கமுறுந்துகளில்பரம்பொருளென்று
நிர்க்குணமாய்நிற்குமிந்தநிலையறிந்துதுயர்நீப்பாய். (கஉச)

சோதியுருவாயொன்றாய்த்தொடர்பின்றியாண்பெணலி
யாதிதருநகுறியினறியாதாரம்பிறிதின்றி
வேதனைகள்விகாரஙகள்மேவாமல்விளங்கியிடு
நீதியிஃதான்மாவினிலையென்றேநினைந்திடுவாய். (கஉரு)

தானவனுந்தனிநிலையிற்றவறலொழிந்தனுதினமெய்ஞ்
ஞானநெறிக்கவிரோதநணணும்வகைநன்றில்லா
ஊனதனிலகஙகாரமொழிந்திடுதியுயிர்க்கிஞ்சை
யானவினைதணந்திடுதியறமபுரிதியாதரவால். (கஉசு)

புல்லரையுமடங்கலிலாப்புலங்களையும்புறங்கூறு
மல்லலையுமகன்றிடுதியரனைமுதலமரேசர்
மல்லலிருநகழலவணங்கிவந்தனைசெய்வாய்மையதே
சொல்லுதிநீசதாகதியின்றொல்லையருந்தவத்தோன்றால். (கஉஎ)

புறமகமேல்கீழின்றிப்போதவடிவாம்பிரம
நிறைவதனிற்பிரிவின்றிநிலையுமுணர்வின்மையினான்
மறைமுறைதோமாருதியேவையமருட்பொருடோன்றித்
திறமருவுநல்லதுவுநதீயதுவாம்பிராந்தியினால். (கஉஅ)

மருளுறுகற்பனையதனான்மாண்புடையதெனக்கருதும்
பொருளதனுவிராகமுறும்புணர்ந்தவெறுப்பாசையினாற்
றருமமொடுபாவமிவைதாமுளவாமவற்றெய்தும்
பொருவிலுயிர்நரர்நரகர்புததேளிர்முதற்பிறந்தை. (கஉகூ)

இந்தநெறியறியாமலிடும்பையுறலெவனுகுஞ்
சந்தனம்பாளிதமகருத்தண்புழுகுநானமுதற்
கந்தமிவையாதொன்றின்கலப்பதனான்மலினமுறு
மநீதவழுக்குடற்றிரட்சியதுமதிக்கற்பாலதுவோ. (கங0)

ஆனமுதுஞ்சருக்கரையுமருங்கனியும்பசுந்தேனு
மூனமுறுமல்மாதனுதரமதிற்புகுந்தன்றே
கானுலவுநறுந்தெண்ணீர்கடியுமுவர்ப்புனலாத
லீனமிகுமுடைக்குரம்பையிதிற்புகுதப்பெய்தன்றே. (கஙக)

நறுந்தவளத்துகிலழுக்காய்நாறுதற்குநவையுடம்பி
னுறுந்தவறுதலையன்றியொருநிமித்தப்பிறிதுண்டோ
விறுந்தலையுமுடற்சுமையாமிதுசுமத்தற்கிலையாமற்
பெறுந்தகையதெனக்கருதிப்பேணுவரோபெரியோர்தாம். (கஙஉ)

மெய்யாகவிளம்புகின்றேம்வினைநெறியால்வரும்புலனு
முய்யாதோரொன்றாகியுறுமஃதுமுறங்கலிலை
பொய்யாகும்வினையனைத்தும்பொறிமூன்றின்றடுமொற்ற
மெய்யாதசிறையுடம்பாலின்படைவதெவ்வகையோ. (கஙங)

ஊறியெழுஞ்சுக்கிலமுமுதிரமுமுற்றுன்றிரளாய்க்
கூறுபடுமுறுப்பினொடுநெகுழவியிளங்குமரனென
வேறுபடாநாடோறுமிகப்பலிதமெய்திரங்கி
மாறுபடுநிலைவந்தால்வாராததோமரணம். (கஙச)

இப்பிறப்பிலிடும்பையன்றியின்பமிலையேயிறந்த
வப்பிறப்பும்வருபிறப்புமடங்கலுமப்படியன்றே
மெய்ப்பொருணூல்விரித்துணர்ந்தோர்வேண்டுவரோவிறன்மருத்தின்
வைப்பனையாயினிமீண்டுமெண்ணுலகில்வரும்பிறந்தை. (கஙரு)

விழியிழந்தான்போம்பொழுதுவிழுங்குழியின்மீண்டடந்த
வழியதனில்வரும்பொழுதுமறித்தும்விழுந்திடுவதுபோ
விழிபுறுமச்சானத்தாலிறந்துபிறந்தெஞ்ஞான்று
மொழிபிலிடருயிரெய்துமுதுநீங்கிலுறுமின்பம். (கஙசு)

துளங்கலில்சீரருட்கதிராற்றுகளாகுமஃதன்றிக்
களங்கமதுகான்மதலாய்கழியாதுபிறிதொன்றால்
விளங்கொளியஞானமதுவேதாந்தந்தனில்விளம்பு
முளங்கவர்மாவாக்கியங்களொருமூன்றாலுளதாகும். (கஙஎ)

ஆம்போதுமருங்கலைநூலவையுணர்ந்தவாசிரியன்
றேம்போதுபுரைநயனத்திருநோக்காற்றிகழில்லம்
வேம்போதும்விழித்தொன்றும்விரும்பாமல்வெறுந்தனியே
தாம்போதுமவர்போலச்சகமுழுதுந்துறந்தவர்க்காம். (கஙஅ)

மடங்காதசுடர்ஞானமருவாமல்வயின்பெருக
வடங்காதவுணவருந்தியருமறைநூற்சடங்கொன்றுந்
தொடங்காமல்விழித்துறங்குந்தொழிலினராய்த்திரிவாரைக்
கடங்காலுங்களிறனையகாலனவன்கவர்ந்தேகும். (கஙகூ)

சூழ்ந்தனவெல்லாம்பிரியுந்தோன்றினவெல்லாநசிக்குந்
தாழ்ந்திடுமேற்றுயர்ந்தவெல்லாந்தனிநகருமாளிகையும்
பாழ்ந்துடவைப்படுமனுமான்பழுத்தபழந்தனக்கென்றும்
வீழ்ந்திடலேகதியானல்விளியாதோசரீரந்தான். (கச0)

இன்றொழியினுளையென்பதிருந்திடுமோவித்திங்கள்
சென்றிடுமேல்வருமாதந்திரமாமோவருடமிது
பொன்றிடுமேலிரண்டும்போமிதுதான்புதிதன்றே
மன்றநிலையுடனிலையுமாரணமுமாருதியே. (கசக)

அடவிதனிற்புகுந்திடினுமடுக்கன்முழைநுழைந்தானு
மிடைநிலவுசேய்மைநிலத்தெய்திடினுமெறிதரங்கக்
கடலதனின்மூழ்குறினுங்காலமதுவருங்காலை
யுடலொழியுமிறப்பதனோடொற்றுமையதாகலினால். (கசஉ)

எழுந்தரங்கந்தனிற்கூடியிந்தனங்களிரண்டுமெகன்
றொழிந்திடல்போல்வழிபோவாருடன்போகிப்பிரிவதுபோற்
செழுந்தமர்நாடிருந்தநகாசேயிழையார்மகப்பிறவு
மழிந்திடுங்காண்மாருதியேயதற்கில்லைபரிகாரம. (கசங)

ஓரிடத்தோருயிர்நெடுநாளுறைவதில்லையுததியெனு
நீரிடத்துப்புரிவினையானிலையிலுடம்பிதுபோனாற்
பாரிடதிற்சுவாக்கதிற்பவர்க்கமதிலெங்கெனினுஞ்
சேரிடத்திற்சேருமிதுதிண்ணமெனத்தெளிந்திடுதி. (கசச)

தன்றனைத்தானுணர்ந்திடுங்காற்றான்றனியன்பிறிதில்லை
யென்றறிந்தநீயுமிதற்கினைந்திசைத்தற்பாலினையோ
மன்றமருளிதுமறந்துமாருதியேமறைமுடிவி
னின்றபொருளொன்றினையுநினைந்திடுதிநீங்காமல். (கசரு)

யான்செய்தேன்பிறர்செய்தாரெனுமிரண்டுமில்வழக்காங்
கூன்செய்தமருட்கையினாலுளதேனுமுயர்நட்பா
ஞன்செயதவருட்சின்னாநலங்கெழுசீமாருதிநீ
தான்செய்தவஃதாமாற்றளருமிதுதகையனறே. (கசசு)

மனமடைந்தவேற்றுமையால்வந்ததன்றுமாருதியே
தினமடைந்தசெவவிநலஞ்சேர்ந்ததனாற்செழுந்தொங்கற்
கனமடைந்தகுழற்சனகிகண்டமணலிலிங்கத்தை
யினமடைந்தமுனிவருடன்யாநிறுதேமிஃதுண்மை. (கசஎ)

எள்ளியிஃதிழைத்ததெனவெண்ணிமனத்தெழுஞ்சீற்றங்
கொள்ளலைநீவெள்ளிநெடுங்குன்றதனினின்றுகொணர்
வள்ளலருட்குறியதனைமண்புகழுநின்பெயராற்
றள்ளருநல்வேலையினிற்றாபனஞ்செய்வேறிடத்தில். (கசஅ)

வந்துவந்துதந்தமைக்கவானரவேந்தேகேட்டி
சிந்தையினைந்திடனின்றாற்சேர்பிரமராக்கதர்க
ளந்தமதுற்றனர்தனாலதோடமகற்றிடுவா
னெந்தையருளாற்கொணர்ந்தலிங்கத்தையருச்சிப்பாய். (கசகூ)

பாரோர்களனுமேசன்பதமுன்புபணிந்தெனது
பேராற்செய்பெருமானைப்பின்வணங்கியிடக்கடவா
ராரானும்டக்கரியவருமறைப்பேய்முதலலகை
சேராதுமாருதியேசிவகதியுமவர்க்குளதாம். (கருo)

யோசனையாயிரமகப்பாடுறுந்தூரத்துறைந்துமனு
மேசனதுதிருவடியுமிராமேசன்றிருவடியு
நேசமுடனினையுமவர்நெடுந்தருமத்தலைவர்களாய்ப்
பாசமருளிருணீங்கிப்பரமபதந்தனையடைவார். (கருக)

எதிர்மருவுகிரணிறையாலிராமேசனுமேச
னதிர்கழற்கான்முன்பின்னராதரவிற்பணிந்திடுவார்
மதிகுலவுமாருதியேவாஞ்சையெல்லாம்பெறுகையினாற்
கதியுதவுந்தவம்வேள்விகவிகைபிறசெயவேண்டா. (௧௫௨)

யாணிலக்குமணன்சீதையிரவிமகனளன்சாம்பன்
வாணிகலங்கதனீலன்வளரனந்தன்வானவர்தங்
கோணிவர்செயொருபதருட்குறியிடத்தும்வீடணன்பே
ரானமணித்தாணுவினுமரனென்றுமமர்ந்திருப்பன். (௧௫௩)

நீதகனும்படிநீயுந்திருக்கயிலைதனிற்கொணர்ந்த
நாதனைநற்பதிட்டைபுரிநாணிறுத்தசிவலிங்க
மோதுபிலமோரேழுமுருவியுளததுபெயர்த்து
நீதருமத்தாணுவினைநிறுத்தவலையேனிறுப்பாய். (௧௫௪)

பண்டாழிக்கரன்றேடும்படரழற்றூண்டனக்குநிலை
கண்டாலுங்காண்பரிதுகனகவரைமுதலெல்லாந்
திண்டாடத்திரித்தாலுஞ்சிறிதசைக்கொணாதிதனை
யுண்டாகிலுரம்பெயர்ப்பாயொழிதுயரென்றுரைசெய்தான். (௧௫௫)

வேறு.

கேளாவிறலனுமானிதுமுன்கேட்டுளகேள்வி
மூளாதெதிராய்வாலுகமுதல்வற்பெயர்த்திட்டே
தாளாண்மையிற்றான்றந்திடுதாணுக்குறிதனையந்
நாளாதரவுடனாயிடைநாட்டுநசைமிக்கான். (௧௫௬)

அருமாதவர்பிசிதாசனரமுதாசனர்சனகற்
கொருமாமகளவள்கோனவனுடன்வந்தவன்முந்திப்
பொருமாகவியணிகாக்கெதிர்புயவன்மையின்முயல்வாற்
பெருமானருளுருவந்தனையனுமான்பிடித்தசைத்தான். (௧௫௭)

பசையுற்றிடுமெனமைந்தொடுபலகாலிருகையால்
விசையிற்பெயர்த்திட்டானதுவிடைதந்திலதனுவு
மிசையுற்றிடுகீழ்மேல்புடையின்றொன்றுபுயாண்டு
மசைவற்றதற்கிறும்பூதுகொலசையாநிலையம்மா. (௧௫௮)

பின்னுங்கிலுகிலுவென்றொலிபெருக்காவுரநிமிர்த்தே
யுன்னுஞ்சுடர்வான்மேலெடுத்தூற்றத்துடனசைத்தான்
பன்னும்பரமுதலென்பதுபாரான்பவனன்சேய்
மன்னும்முயிர்மருந்தோங்கலின்மனங்கொண்டனன்போலும். (௧௫௯)

தோலாவலியனுமான்பினுந்துணைத்தோணிலத்தூன்றி
வாலாலருட்குறியைப்பலவலயம்படச்சுற்றி
மேலார்கதிர்வெருவக்கிளர்விண்மேலெழுந்திட்டா
னாலார்திசையோடெங்கணுநடுங்குற்றனஞாலம். (௧௬௦)

அலைவுற்றிடவெல்லாஞ்சிவனருளின்குறிசிறிது
முலைவுற்றிலதனுமானவனொருகூப்பிடுவழிபோய்
மலைவுற்றிடுதென்றொதைதன்வலியாற்பெயர்வடபாற்
சிலையிற்கொடுமுடிவீழ்ந்தெனவீழ்ந்தான்கறைசிந்த. (௧௬௧)

பவனன்மகன்விழிவாய்செவிபாயுவவழிபாயுங்
கவனங்கெழுகுருதிப்புனல்கடல்போன்றதுகண்டா
ரிவனீள்கறைக்குழியாழ்ந்தனனென்னும்படிவிசையா
லவன்வீழிடமிகுசோரியின்கயமாயினதங்காள். (௧௬௨)

ஊற்றாகியகுருதிக்கிடங்குறைமாருதியூரு
மேற்றானருட்குறிகொண்டனனென்றேவியிராமன்
போற்றாதிகழ்ந்திட்டானெனப்புலனுண்டெழுபுன்மை
யாற்றாதழற்குவைசேர்குழியதிலாழ்ந்தவனானான். (௧௬௩)

சத்தாய்நிறைந்தசரத்தொடுசரமூழ்ந்தனதுருவா
மைத்தாழ்மணிகண்டற்கதுமரபாகலின்மணலா
லுய்த்தாற்றியவருளின்குறியுலையாவகைநிறுவுங்
கைத்தாமரைக்காகுத்தனைவியந்தாருடன்கலந்தார். (௧௬௪)

வேறு.

சுடுபுனற்கட்டுளைந்துகிடந்திடர்ப், படுபுமாழ்குஞ்சமீரணன்பாலனை
வடுவில்வானவர்மாதவர்கண்டுமெய், வெடுவெடென்னநடுங்கிவெதும்பினார். ()

கொண்டல்வண்ணனுங்கோரவிராவணன், பண்டரிந்திடப்பக்கம்பரிந்துவீழ்
புண்டரத்தின்குரிசிலைப்புண்படக், கண்டகாட்சியிற்கண்டுகலங்கினான். (௧௬௬)

அலையுஞ்சோரியமூழ்திற்கிடந்துமெய்க், களையினீடியகான்மகற்கண்ணுற்றி
யிளையனுயவிலக்குமன்றானுநெஞ், சுளையவாடியுறுதுயர்மேவினான. (௧௬௭)

சோரிசிந்திடுமஞ்சனைதோன்றலைக், காரிசிந்திடுங்கட்செவிப்பாயலான்
பாரிசிந்தைபதைத்திடக்கண்டுகண், மாரிசிந்தினள்வாய்விட்டரற்றினாள். (௧௬௮)

தையல்பூண்முலைச்சானகிபின்னரு, மையவையவென்றம்புயத்தோட்டினுஞ்
செய்யகைகள்கறைபடத்தீண்டியே, துய்யமேனிதடவிதுளங்கினாள். (௧௬௯)

கோவினோடுகுரக்குப்படைஞரும், பாவியேமிதுபார்க்குந்தகையதோ
வாவிகூடவகற்றுதும்யாமெனாத், தாவிவீழ்ந்துதரையிற்புரண்டனர். (௧௭0)

அடித்துவீழ்தலுமங்கணிராகவன், றடித்ததோளிற்றழீஇயழுதேங்கித்தன்
மடித்தலத்தனுமான்றனைவைத்துளங், துடித்துச்சோரிதுடைத்திதுசொல்லுவான்.

உன்னையினுமுயர்தவமாற்றிய, வன்னையஞ்சனைக்காருயிர்மைந்தனே
பின்னைநின்வினைப்பேறுநுகர்தியின், றென்னைநோக்கியெனதுரைகேளையா. ()

காற்றின்மைந்தகடுந்திரைப்பம்பையா, மாற்றின்கூலத்தணங்கெனயாவினைத்
தேற்றிச்சூரியன்சேயக்குமெனக்குமன், றேற்றநண்புதந்திட்டவனீயன்றோ. (௧௭௩)

அந்தநாண்முதலாய்தந்தையன்புசால், பந்தமென்றுளபற்றுமறந்தநன்
மைந்தவென்பொருட்டன்றுகொல்வால்வலி, சிந்துசிந்துவைத்தாவினைசென்றதே

வீங்கவாரிமைநாகமென்னாகத்தை, யங்கைவீசியறைந்தனைதள்ளினாய்
தங்குவெற்பதுதந்தசுரசையை, மஙகுவித்தனைவந்ததுனக்கெனோ. (௧௭௫)

தடிகொணெட்டேற்சாயையென்றேதிடுங், கடியசெய்கையரக்கியைக்கட்டினாய்
மடிவிலாவிறன்மாருதிமற்றதின், முடிவதோர்பயனீபெறமுன்னியோ. (௧௭௬)

வேறுநின்றுசுவேலையின்மாலைவா, யேறிவைகியிலங்கையிற்றேவியை
நாறிறையவனுங்கள்குலக்குமுன், னீறிழைத்தபகைத்திறமெண்ணியோ. (௧௭௭)

மூடிமுற்றுமுயங்கிருட்கங்குல்வாய், நீடிலங்கைகிருதனிற்போகியே
தேடியெங்கணுஞ்சீதையைக்கண்டிலா, தோடியெய்த்ததுமுன்பொருட்டாகுமோ.

நனையசோகவனத்தினைநண்ணியே, யனையசோகத்தமர்ந்தவட்கண்டதன்
றனையசோகமுறுதலைவேண்டியோ, வெனையசோகனெனச்செயவெண்ணியோ.()

சின்னமற்றவடேறவென்செங்கையின், மன்னுமாழிவழங்கிச்சூடாமணி
தன்னைமாறுதரக்கொண்டுதந்தபோ, தென்னநீயதற்கென்னுழிப்பெற்றதே. (௧௮௦)

இலங்கைகோனிகரெண்பதினாயிரஞ், சலங்கொள்வென்றியரக்கரைச்சாடினாய்
கலங்கறீர்பிரகத்தன்றன்காளையாம், வலங்கொள்வேற்சம்புமாலியைவாட்டினாய். ()

தாழ்ந்தானைத்தலைவரிலைவர்க, டாழுமாவிதடிந்தனையன்றியே
* யேழுநாவினமாத்தியரீனறிடு, மேழுமைந்தரையின்னுயிர்வாங்கினாய். (௧௮௨)

தொக்கதேர்படைவேழந்துரகதந், திக்கில்வேறுசிதையத்துரத்தியே
யக்கமைந்தனைமண்ணிலரக்கினாய், மிக்கநின்வலிகாட்டலைவேண்டியோ. (௧௮௩)

பின்னரிந்திரசித்துப்பிணித்தலுந், தென்னிலங்கைநிருதன்முன்சென்றனை
மன்னவன்றனைவைதிடற்கன்றியே, யன்னபந்தமகற்றரிதாகியோ. (௧௮௪)

தசமுகத்தன்றனைச்சவைமுன்னரே, வசைமுகத்தில்வடுப்படக்கூறினாய்
திசைமுகத்திலுன்றிண்புயவென்றியின், றிசைமுகத்தலையெண்ணினையல்லையே. ()

அந்தவஞ்சனிலங்கையடங்கலு, முந்துவெந்தழன்மூட்டிமுருக்கினாய்
தந்தைநண்பன்றனக்குணவீந்திடச், சிந்தைசெய்துகொல்செப்புதிசெம்மலே. ()

சுட்டிலங்கைதுகள்படச்செய்தபின், விட்டகன்றுவிலங்கலொன்றெய்தினாய்
பட்டவுன்றன்பழங்கணளவையா, லெட்டலாகுங்கொலென்பொருட்டாகவே. ()

காரணங்கருதாவுபகாரிநிற், கூரிணங்குவேற்கூற்றங்குறுகியே
பாரணஞ்செயுமாகிற்படியில்யான், மாரணஞ்செயலன்றிவதிவனே. (௧௮௭)

தேய்ந்தநூலிடைச்சீதையிலக்கும, னேய்ந்தபின்னரிருவரிறைமையா
லாய்ந்தபோதெனக்காவதெனையநீ, மாய்ந்தொழிந்திடலஞ்சனைமைந்தனே.(௧௮௯)

இன்றியாருமிருந்தெனிறக்கினீ, சென்றுசெங்கதிர்சேருந்திசையெலா
நன்றுகண்டுணர்நாட்டமிழந்ததன், பின்றையேயையுறுப்பினிற்பேறெனோ. ()

கட்கிருட்டுக்கடியுங்கதிர்மக, னட்கின்வேந்தனிவர்முதலோரெலா
முட்கிவாடுறவுன்னையிழந்தியான, வட்கலின்றிமகுடம்புனைவனோ. (௧௯௧)

காய்க்குங்காட்டிற்கனிகிழங்காமுணா, வாக்கினாயிலையின்னுமருமந்த
யாக்கைமண்படவென்கிடக்கின்றிநீ, சேக்கைகண்படச்செய்யகில்லாமலே.(௧௯௨)

தெற்பைகுண்டிகைசீரைகொண்டென்னுட, னற்புனற்றடநானக்கணைகுவா
யற்பினீந்தன்றமுதசஞ்சீவினி, யெற்பினேனுயிராநல்கியவேந்தலே. (௧௯௩)

ஐயிரட்டிசிரத்தனகந்தையுஞ், செய்யசீதையிடும்பையுந்தீர்த்திடுந், துய்யநின்னைத்
துணைமைகொண்டல்லவோ, வெய்யர்பாவியான்வென்றிபடைத்ததே. (௧௯௪)

பொன்னையென்கட்புணர்த்தியவாறுபோ, லன்னமார்கண்ணயோத்தியிற்ற
ம்பியோ, டென்னைக்கூட்டலையீண்டுப்பிரித்திடி, னின்னையிந்தநிலத்தவரென்சொ
ல்வார். (௧௯௫)

---

* அக்கினிபோலும்காந்தியையுடையஏழுமைந்தர்.

பன்னியின்னபலவுமிராகவன், வன்னிநண்பன்மகன்முகநோக்கியே
தன்னிரண்டுசெலசக்கண்ணீர்களாற், றன்னுமேனியிற்சோரிகழீஇயினான். (௧௯௬)

காதன்மாருதிகாகுத்தன்கண்மலர்ப், பூதநீரமிழ்புண்ணியத்தாலவன்
சேதுவிற்செய்சிவமுதற்காற்றிய, கோதுநீங்கியுணர்வுடன்கூடினான். (௧௯௭)

வேறு.

சோகவல்லிருள்கழிதலுங்காண்மகன்றொடர்மூல
மோகநீங்குழிப்புலன்கொளாதருணிலைமுகப்பார்போ
னாகணைப்புறம்பிரிந்துலகுய்ந்திடுநசையாலே
யோகநித்திரைநீத்தமரொருவனையுடன்கண்டான். (௧௯௮)

கண்டுசீதையுந்தம்பியுமிறையொடுகவியீட்ட
மண்டுதானையும்வளைத்திடவாழ்த்திடவானோர்கள்
பண்டைமாதவர்புகழ்ந்திடத்தன்னருட்பௌவத்தின்
விண்டவாரிசம்போலிருகண்மலர்மிளிர்வெய்த. (௧௯௯)

பாரெனப்படுபொரிதோய்சுவடெனப்பரிவில்லார்
போரினிற்படுபூழிகண்மெய்ப்புறம்பொலிவெய்தக்
கூருருத்திரனுருவமேதானுமாங்குறிதோன்ற
வேருறப்புனைசடாமுடிமண்டலமெழில்செய்ய. (௨௦௦)

வீற்றிருந்தருளிராமனையடிமலர்மிசைவீழ்ந்தே
யாற்றலாதெழுமன்பினாலகங்குழைந்தருண்மேன்மை
போற்றலுற்றனன்மாருதியாதலிற்பொதுத்தன்மை
பாற்றிக்கான்முளையெனும்பெயர்சிறப்பினாற்படைத்துள்ளோன். (௨௦௧)

வேறு.

அடலாரரிவிண்டுவெனும்பெயராதிதேவே
மிடலார்கதையேந்தியசெங்கைவினோதவென்று
மடலார்நறைமல்கியபுட்பவிமானமன்னுங்
கடலார்வணமாசுணப்பள்ளியிற்கண்படுப்போய். (௨௦௨)

நாராயணநான்முகநம்பியைநாபியின்கண்
வேராயெழுபோதிலளித்தருண்மேன்மையானே
யோராயிரம்வாய்செவிகால்கரமுத்தமாங்கம்
பேராயிரமுற்றபெருந்தகையோர்பிரானே. (௨௦௩)

போர்மேல்கொளிராக்கதராருயிர்பொன்றவாட்டிப்
பார்மேல்கொளுயிர்க்கருள்கூர்ந்தருள்பான்மையானே
தார்மேலமர்கூந்தலள்சானகிதன்னவண்ண
வார்மேல்வளர்கொங்கைவளங்கவர்மாலைமார்பா. (௨௦௪)

கனிதாழ்பணைவாழ்கவிசூழ்படைக்காட்சிநோக்கி
யினிதாதரவெய்திமொதவவெற்குமன்பர்
துனிதாமுறுவெம்பிறவித்தளைசாடியாளும்
புனிதாவளையாழிகொள்செங்கரபுண்டரீகா. (௨௦௫)

நாலாமறைதந்திடவுந்தலைநாரவேலைச்
சேலாய்வருகாரணபொன்மலைதிண்புறத்தின்
மேலாகவெடுத்தருள்கச்சபவெள்ளெயிற்றின்
பாலாம்படியேந்தியகேழலின்பான்மையானே. (௨௦௬)

வயமாவலியைச்சிறைவைத்திடவாமனப்பேர்
நயமாரவதாரமெடுக்குமுன்னாரசிங்கச்
சயமார்வடிவங்கொடுபொன்னனைத்தாக்கியன்றோன்
பயமார்மகவுக்கருட்பார்வைசெய்பண்பினானே. (௨௦௭)

வேந்தர்க்கிடர்செய்மழுவாட்படைவீரனாகி
யேந்தற்குலமுய்ந்திடமீண்டுமிராமனென்னுஞ்
சாந்தக்கருணாகரமூர்த்திதரித்துமண்மேன்
மாந்தர்க்கிமையோரினுமாண்டகைவைத்தவள்ளால். (௨௦௮)

தாதார்குழற்கோதமனில்லவள்சாபநீத்த
பாதாபதினாயிரமும்பல்பலத்தின்மானு
மாதாடகையாருயிர்சிந்தியமைந்தவாலி
யீதாரகன்மார்புகிழித்திடுவீரவீரா. (௨௦௯)

மாயாமிருகத்திறன்மாரிசற்செற்றமாயா
சேயாயொருபத்திரதன்றுயர்த்தீயவித்த
நேயாசுகரூபதயாபரநித்தசுத்த
காயாமலர்வண்ணகடற்கரைகட்டினானே. (௨௧௦)

மாறேதுமிலின்பவகண்டிதவாழ்வுசேர்வார்
பேறேபிரியாதமர்பூரணப்பெற்றியானே
வேறேயுடனேயிவையின்றமர்மிக்கவிண்ணோ
ரேறேதுணைநீயெனக்குன்பொருட்டென்வணக்கம். (௨௧௧)

புனலாடுதலாசமனத்தொடுபோசனத்தி
னனவோடுகனாநிலைநண்ணுசுழுத்தியென்னு
நினைவோடுமவத்தைகண்மூன்றினுநின்னையன்றி
யெனையாள்பவர்வேறிலைநின்பொருட்டென்வணக்கம். (௨௧௨)

உன்பானுறுசீர்த்தியையிம்பரினும்பர்தம்மாற்
கொன்பானமதிகொண்டுவகுத்தனர்கூறலாமோ
வன்பாலடைவாரவர்பாலவர்தம்மிலன்பா
வென்பாலருள்கூருதிநின்பொருட்டென்வணக்கம். (௨௧௩)

வேறு.

நின்னிலையுணர்வைநீயேநிகரிலாநிருபரேறே
யிந்நிலையென்னையாள்கென்றிராமனையேத்திக்கற்பின
செந்நிலையுருக்கொண்டன்னசீர்பயில்சீதையென்னு
மின்னிலைமரபிற்போற்றிவிளம்புவான்கவியின்மேலோன். (௨௧௪)

அம்புயமதனிற்றோன்றியங்கையிலதனையேந்துஞ்
செம்பொனின்விளக்கேமாளாச்செல்வமேதேவர்மாதர்
தம்பணிவிரும்பியாளுந்தையலேசெய்யதண்பூங்
கொம்பரினுடங்கிவாடுங்குற்றிடைநெடுமென்கோதாய். (௨௧௫)

எதிர்வினையிலம்பாடென்னுமிரண்டிற்குமொருமருந்தே
மிதிலையர்வேந்தன்முன்னோர்மேதகவிரும்பிபோற்ற
முதிர்தவமுடிவேதிங்கண்முகத்தினாய்முதியவட்ட
மதிநிலையிடங்கொண்மானேமறுவிலாவாழ்வின்வாழ்வே. (௨௧௬)

கோசலைநாடன்காதற்குரைகடற்பிறந்தகோல
வாசிலாமதுரவின்பவமுதமேயழகணிந்த
மாசிலாமணிப்பொற்பூணேமண்மகள்வரத்தின்வந்த
தேசுடைதிருவேயன்பர்சிந்தையாற்பருகுந்தேறல். (உகஎ)

தருமத்தின்வடிவேவானிற்சந்திரனுடன்பிறந்த
கருமைத்தண்கயற்கணல்லாய்கவுத்துவமழுங்கக்கண்ணன்
மருமத்தின்மருவுமாதேமலவிருட்படலைமாலைக்
குருமத்திற்கதிரேநின்கணுவமனும் * பொருளுமாவாய். (உகஅ)

வானகத்தரிவைமாரைமண்ணகமடந்தைமாரைத்
தேனகக்கமலப்போதிற்றிருவனாரென்பதல்லாற்
றூநகைக்கொடியேநின்னைச்சொல்லிடாரவர்போலென்றால்
யானகத்துணர்ந்துநின்னையேத்திடும்புகழ்மையாதோ. (உககூ)

வற்கமாருயிரையெல்லாம்வளர்த்திடும்வளங்கொண்ஞாலப்
பொற்கொடிமகணீகாக்கும்புரவலன்றேவியன்றி
யற்கெழுகூந்தலாரோடாடவர்க்கின்பநல்கும்
விற்கழைவேளையீன்றாய்வியப்பினிவேறுமுண்டோ. (உஉ0)

பொருளிடமுதலவெல்லாம்பொலிவுளதாயகாலைத்
திருவுளதானதென்பர்தெருண்டவர்செல்விநின்பொ
னுருவுறுகாட்சியின்னதொன்றுடைத்தென்பதின்றாற்
றருநிலத்தணிகளெல்லாந்தையணின்றன்மையாமே. (உஉக)

அலைமலிகடல்சூழ்ஞாலத்தாருயிரவைகட்கெல்லா
நிலைமலிஞானவீடுநிறைதிருப்பேறுநல்கு
மலைமகள்பார்வையென்றான்மற்றவளவயவத்திற்
றலைமைநீயுண்டோநின்னைத்தணந்தொருசெய்கைதானே. (உஉஉ)

தணவனோடுடன்பிறந்தாள்கவுரிநின்காதன்மைந்தர்
மணமலிமனைவிமார்கள்வாணியுமிரதிமாது
மிணையில்சீரோரகத்தாளிந்திரன்றேவியென்றா
லுணியிழையணங்கினோரிலயனுனக்கேவரன்றாய். (உஉங)

ஆயிழாயடியனேனையாண்டருளென்றிவவாற்றாற்
சேயவள்சனகியோடுதிண்சிலையிராமன்றன்னை
வாயினாற்புகழ்ந்துகண்ணீர்வார்ந்திடவிறைஞ்சிநின்றா
னேயெனப்பட்டருங்காற்றினிறையவனீன்றசெம்மல். (உஉச)

தருவமர்விலங்கின்மேலோன்றையலாடவனென்றேது
மிருவர்போன்றொருவராகுமிராகவன்சீதையென்னும்
பொருவிலார்தம்மையேத்தும்புகழினைப்புகழவல்லார்
கருதியவெல்லாஞ்சேர்வார்காரிருணிரயஞ்சேரார். (உஉரு)

செந்நெனீர்நாடுமோதர்சேயினோர்சேதாவாழ்நாண்
முன்னைநூற்கல்வியின்பமுழுவதூஉமடைவர்வேதம்
பன்னுசீரந்தணாளர்பழிமுதற்பாவநீங்கி
மின்னுற்ழ்தொள்ளையாக்கைவிடுநிலைவீடுசேர்வார். (உஉசு)

* பொருள்—உவமேயம்.

மருத்துவின்செம்மல்போற்றும்வாய்மைகேட்டுளமகிழ்ந்து
திருத்தகுமிராமன்றேவிசீதையோடவனைநோக்கி
யருத்தியாலுரைப்பன்பிள்ளாயாற்றினையச்சானத்தால்
விருத்தமாஞ்செய்கையிந்தவினையுளங்கொள்ளலாமோ. (௨௨௭)

மூவுலகோரின்மிக்கமுப்பத்துமூன்றுகோடி
தேவராற்றேவர்கோனாற்செங்கண்மாலயனான்மற்றை
யாவராலேனும்யானீண்டிருத்தியவிலிங்கம்பேர்க்க
லாவதோவென்னைசெய்தாயஞ்சனைக்குரியமைந்தா. (௨௨௮)

வலத்துயர்நின்னையென்னைவானரர்க்கிறையைமற்றென்
குலத்துயர்தம்பிதன்னைக்குலைந்திடப்பொருதகொற்றச்
சலத்தினீடரக்கனெங்கோன்றங்கியகயிலைவெற்பைப்
பலத்தினாற்பெயர்த்துப்பட்டபாடுமுன்கேட்டிலாயோ. (௨௨௯)

அருள்விளையாட்டினாலன்றமரர்களகந்தைதீர்ப்பான்
றிருமுனர்த்திருணமொன்றைச்சிவபிரானிறீஇயகாலைப்
பெருமிடல்கூர்ந்தநின்னைப்பெற்றவன்பெயர்க்கமாட்டான்
மருளுறுகாதைதன்னைமாருதிமறந்திட்டாயோ. (௨௩௦)

படியிலாவண்டமாகிப்பல்லுயிர்க்குயிராய்வேறாய்
முடிவிலாமுக்கண்மூர்த்திமுன்னவனின்றதன்மை
நொடிகொணாற்றெளிந்தநின்கணுவல்வதோவினையவாய்மை
நயலான்கண்டாய். (௨௩௧)

அம்பிகைபாகற்காற்றுமபராதமிதனாலையா
வெம்பிமெய்சோர்ந்துவீழ்ந்தாய்மேவினிவிடைப்பதாகை
யெம்பிரான்றன்பாலன்றேணிணையடித்தொண்டர்தம்பா
னம்பிநீபிழைக்குஞ்செய்கைநயக்கலையெந்தஞான்றும். (௨௩௨)

நிறுத்தசீர்மணலிலிங்கநீக்கிவேறமைப்பநீயுட்
குறித்ததுமவன்றன்ஞானக்குறிதனையாதலாலே
பொறுத்தருள்புரிவானின்பாற்புரிசடைப்புராணனன்றேன்
வெறுத்திடினுலகமுண்டோமிடலுறுகவியின்மேலோய். (௨௩௩)

வைகலின்றுதியாகமாருதிநீவிழுந்த
பெய்கறைக்கிடங்குமண்மேற்பிறங்குகவுன்றன்பேராற்
பொய்கெழுதீமையெல்லாம்போக்கியேபுனிதனாய்
மொய்கவிக்கரசேநீயுமூழ்கலாற்குழியிதன்கண். (௨௩௪)

இக்குழிமேன்மைகூறினீசனார்வேணிநின்று
மக்கவுதமியாமுந்தியதுவெளிப்பட்டதந்நீர்
புக்கினிதாடுவார்க்குப்புரவிமேதங்கடம்மின்
மிக்கவாயிரத்தானெய்தும்விழுத்தகுபேறுண்டாகும். (௨௩௫)

சதகுணமதனிற்பேறுதருஞ்சரசுவதிகங்கை
யதிர்புனல்யமுனைமூன்றுமாடினோர்க்கந்தமூன்று
நதியுமோரிடத்திற்கூடிநண்ணியாங்கொழுகுகின்ற
புதுநறும்புனிதத்தெய்வப்பூம்புனலதனிற்றோய்ந்தால். (௨௩௬)

தாயெழுநதிகண்மூன்றுந்தனித்தனியாடும்பேற்றி
லாயிரமடங்குண்டாகுமறைந்தலையனைத்துமாடு
நேயர்தாமடையுமந்தநெடும்பலமுழுதுமுண்டா
மேயதோர்விசையினீபோய்விழுங்குழிமூழ்கினோர்க்கே. (உகஎ)

பிறந்திடற்கரியமக்கட்பிறந்தையிற்பிறந்துநின்பேர்
சிறந்தவிக்கிடங்கின்பாங்கர்செய்கிலார்சிராத்தமென்று
லறந்திகழ்தென்புலத்தாராதரவவர்பாலின்றித்
துறந்துளம்வெகுண்டுபோவார்துணைதருகாலின்றோன்றல். (உகஅ)

நீகுறித்தமிழ்ந்துமிந்தநெடுங்கிடங்கதனின்மூழ்கா
ராகுதிதடத்தினல்காரவர்கள்பாலருந்தவத்தோர்
மாகமேலவர்களெல்லாமனத்திடைச்சினப்பரன்றோ
ராகமேயினதும்வீணேயவர்துயரடைவரெங்கும். (உககூ)

தென்புலவாணர்நாடிச்சிறந்தநின்பெயர்க்கயத்தின்
முன்புறவெள்ளுநீருமுகந்துதர்ப்பணம்புரிந்தா
லன்பினாலானெய்யாறுமவர்தமக்கதுதானென்றே
பொன்புணர்தோளயோத்திப்புரவலன்புகன்றான்மன்னோ. (உஉ0)

தயரதன்மதலைவார்த்தைசதாகதிமதலைகேட்டு
மயர்விலாமகிழ்ச்சியெய்திவடதலையிராமநாதற்
கயனுறத்தாபனஞ்செய்தருச்சித்தானன்றுதான்போய்க்
பெற்றகண்ணுதன்மூர்த் (உஉக)

காலினாற்கூற்றஞ்செற்றகடவுண்மேற்காலின்மைந்தன்
வாலினாற்சுற்றுமூன்றுவலயமுங்காணலாகு
மேலைநாள்போலவின்றும்விளம்பிடுமரபாலியார்க்குங்
கோலமாரிராமநாதன்குறித்தபேறுடன்கொடுக்கும். (உஉஉ)

வே று.

இருடேரந்துலகத்தைவிளக்கியோரகுகுலந்தழைவிக்கவுதித்தகோ
னருளிலிங்கநிறுத்திவழுத்துமாறதுநுவன்றனநற்றவிர்கற்றுளோர்
பொருவினன்கதைமிக்கசெவிக்கொள்வார்புகலிலிங்கமுதற்றரிசித்தலால்
வருபயன்றனைமுற்பெறுகிற்பர்மேன்மறுவறுஞ்சிவமுத்திபடைப்பரே. (உஉ௩)

இராமனருச்சனைச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - உ,அருரு.

பிரமகத்திச்சருக்கம்.

அவ்வழிமாதவர்சூதனனைமுண்டகநோக்கி
மெய்வழிசால்விருப்பினொடுவினவிடுவார்விதியுணர்ந்தோ
யெவ்வழியோபிரமகத்தியிராகவனைத்தொடர்ந்தவழி
யைவழியுமனத்தரக்கன்மரபின்மறையவனல்லன். (க)

அணைந்தவர்பால்வினைதீர்க்குமளப்பில்புகழிராமன்பாற்
புணர்ந்ததஃதென்பதுவும்பொருந்திலதுபுகுந்தவகை
யுணர்ந்தறியுமுபாயமிலேமுன்னருளாலுளந்தெளிவு
ஈந்திடுமாறருளன்றேல்வருமுன்பின்மலைவென்றார். (௨)

சீரியனுந்திருமுகத்திற்சிறுமுறுவல்கொண்டருளி
யேரியலும்புகழ்ச்சூதனேதுவதற்கியம்பிடுவா
னாரியனான்முழுதுணர்ந்தீரறியார்போலறைந்ததெவன்
காரியமிக்காசினிமேற்காரணமின்றுளதாமோ. (௩)

பூங்கமலமலர்க்கோயிற்புனிதனருள்புலத்தியன்பால்
வீங்குமலவிருடுரக்கும்விச்சிரவாவியன்ஞாலந்
தீங்ககலும்படியுதித்தான்றிசைமுகத்தன்றிருப்பேர
னாங்கவன்றானிலையினன்பண்டருந்தவத்தினெடுங்காலம். (௪)

மாமுனிவீரெவராலுமதிப்பருமாதவமிந்தத்
தூமுனிவன்செயுநாளிற்சுமாலியெனுந்தொல்லரக்கன்
பூமியின்மேற்கீழ்நிலத்தின்புடைநின்றும்புறப்பட்டுத்
நீண்மைவிடுந்தூதனெனத்திரிதந்தான்சிலவைகல். (௫)

மற்றவன்றன்குலம்பெருகவானவர்தங்குலஞ்சுருங்கப்
பெற்றதொருபிடிநடையைப்பிறைநுதலைநறைமருவுங்
கற்றைநறுங்குழலணங்கைக்கரத்தினிற்கொண்டுழிதருவான்
சுற்றுமிருட்பிழம்பஃதோர்சுடர்கொண்டுதிரிவதுபோல். (௬)

மதிக்குமதங்கயமனையவாளரக்கன்மால்வயிற்றி
னுதிக்குமகன்றிருமதலைக்கொருகுமரன்பிறங்கடையாய்ப்
பொதிக்கொழுமென்முகையவிழ்ந்தபுட்பவிமானத்துலவு
நிதிக்கிறையையொருபகற்றனேர்படவந்திடக்கண்டான். (௭)

கண்டிவன்போனங்குலத்தோர்காளையுதித்திடுமானான்
மண்டுமனப்பயநீங்கிமண்ணுலகும்வானுலகுந்
தண்டலின்றியரக்கரெலாஞ்சரித்திடுவரெனக்கருதிப்
பண்டருமென்மொழிமகளைப்பார்த்தொருசொற்பகர்ந்திடுவான். (௮)

என்னுடைமாண்குலந்தழைப்பவெழுந்தவிளங்கொடிபோலும்
பொனனுடைமாணடிதலைமணிப்பூணிலக்கைகசியே
யுன்னுடைமாணெழிலகாணினுருப்பசியுமுளநாணுந்
தன்னுடைமாண்குலைந்தயருந்தடங்கமலச்செழுந்திருவும். (௯)

ஆங்கதன்றீயுமராவவாவுமுவாமதியதுபோற்
றாங்கிசையமணிநிறமென்சுரும்பினங்கள்பலவிரும்பும்
பூங்கமலநாண்முகைபோற்பொலிந்தனையாலுனைக்கண்டோர்
நீங்கரியபெருங்காதனெடுங்கடலின்கரைகாணார். (௰)

மன்னுலகிலருவிலைசான்மாமணிபெற்றாலதனைப்
பொன்னணியினடுவமரப்புனையாக்காற்புரிகுழலாய்
தன்னியல்பும்விளங்காதாந்தகைமையதுதனைநாடி
யுன்னையுனக்குரியவன்பாலுதவுநெறியுளங்கொண்டேன். (௧௧)

பாணியனுமொழியரைப்பயந்தார்க்குப்பங்கயப்பொன்
னாணியனையவர்விழையுமாடவரோடேனுகக்
காணினுளங்களிகூருங்காளையேற்கலையுருவாம்
வாணிநலங்கோடலிலாமகற்கண்டாலெனவருந்தும். (௧௨)

அருங்கனியுஞ்செவ்வியின்கணருந்துமவர்க்களிப்பனவாங்
கருங்கலபமயிற்சாயற்கைகசியேகன்னியரு
மிருங்கலைதேர்மகிணர்தமையிளம்பருவத்தடைவாரேற்
பெருங்குரவருடன்றாமும்பெரிதின்பம்பெறுவார்காண். (௧௩)

நல்லமுதஞ்சுரராளவோநரரும்விரும்புவரதுபோ
லெல்லவருமுனைப்புரிவரேரெழிலின்சிறப்பதனான்
மெல்லியணிபொருந்தலின்றிவிலக்கிடுவையெனுங்கருத்தாற்
புல்லநினைந்தனுகாமற்புந்திவெரீஇயிருக்கின்றார். (௧௪)

பான்மதியைவிழுங்கவரும்பாந்தளெனவுன்றனக்கொவ
வான்மணமாமகனாகவரினும்வருமதன்முன்னர்
மேன்மைகெழுபுலத்தியன்சேய்விச்சிரவாவினைமேவி
யான்மனையாளுனக்காவலெனைக்கோடியெனப்புகலாய். (௧௫)

தனதனெனவுனக்கினியதனயர்பலருளராவ
ரெனநவின்றாணிலங்கிழையுமீன்றவன்வாய்மொழிகேட்டு
மனமகிழ்வுற்றிளநிலவுவதனமுழுமதிவழங்க
வனையநெறிபுரிகுவலென்றருந்தவன்பாற்செலநினைந்தாள். (௧௬)

தாதையுரைமனங்கொண்டுதையலவடாழாமற்
போதருவாள்கொடுமாலைப்பொழுதின்கட்புரிசாலைச்
சோதிமகத்தழன்முன்னர்ச்சுடரிரவியெனச்சுடரும்
வேதனருண்மகன்மகனும்விச்சிரவாவினையடைந்தாள். (௧௭)

விளக்கொளியமின்னொன்றுவிண்ணிழிந்ததெனவணுகி
வளர்க்குமகத்தழல்கதுவவாடியமென்கொடிபோல
வுளத்தெழுந்தநாணதனாலொல்கியுடலுயர்கொங்கைக்
களக்குநுணங்கிடைதளரவிருந்தவன்றனெதிர்நிற்பாள். (௧௮)

ஓதிநெடுங்கருமுகிலூடொளித்தமதிமண்டலம்போற்
சீதமலர்முகங்கவிழ்த்துச்சேவடிமாண்விரலுகிரான்
மேதினியைத்தானுதவும்விறலரக்கர்வடுப்படுதது
நீதிதெரித்திடுவாள்போனிலங்கீறிநின்றிட்டாள். (௧௯)

மேல்விழுங்கார்வண்டினத்தின்மிகுதிபொறாதசைந்துபசுங்
கால்வளையத்தாழுமலர்க்கமலம்போன்முகஞ்சாய்த்து
மால்விளையமருங்குநிற்கும்வனைதொடியைமுனைவினையின்
பால்வகையின்றகையுணர்ந்தபண்ணவன்றான்கண்ணுற்றான். (௨௦)

பதப்பதுமந்தொடுத்தமுதின்படிமையளாம்பணிமொழியைக்
கதத்தரக்கர்குலமுதற்குக்காரவுணர்தமையுதவு
முதற்றிதியின்வரல்காணூஉமுறுவலிளநிலவினளாய்
மதத்தொடவாமருள்கடிந்தமறையவன்றானறைகின்றான். (௨௧)

அணியிழைநீயாருன்னையளித்தவராரணைந்தமனத்
துணிபெவனோபொருள்விளங்கச்சொல்லென்றான்வல்லுறழு
மணிமுலைவெண்ணகைத்துவர்வாய்வஞ்சியிடையஞ்சநடைப்
பணிமொழியும்வந்தபணிபணிந்தவனைப்பகர்கின்றாள். (௨௨)

புலத்தியன்றன்குலத்திலுயர்புண்ணியமேபுணர்ந்திடுமைம்
புலத்தியங்குமயல்கடந்தபுங்கவனேபொருளுறுமப்
புலத்தியைவாரெனவனைத்தும்புரிதவத்தின்பெருமைபயில்
புலத்தியல்பாலுணர்ந்தோய்க்குப்புகல்வதிலையானும். (௨௩)

அறையென்றபணிமறுத்தலறமன்றாலமருலகந்
திறைகொண்டசுமாலிமகள்சிலைத்தாதையவனுனைத்
துறைநின்றேனுதவினுற்றொக்கனனின்பக்கலியான்
மறைகண்டமாதவநீமற்றனைத்துமனங்கொள்வாய். (௨௪)

குணமொன்றுமலையனையாய்குறித்தருள்கூறெனக்கோதை
மணமொன்றுமலர்க்கூந்தல்வகுத்துரைத்தாண்மாதவனுங்
கணமொன்றுதியானமுறீஇக்காரிகைசேர்காரியமின்
னணமென்றுதெரிந்தவளோடறிந்தனனென்றறைந்திடுவான். (௨௫)

மகப்பேறுகருதிவந்தாய்வருநேரம்வளைகடலிற்
புகப்பேருங்கதிரிரதப்புன்மாலைப்பொழுததனுன்
முகப்போதும்விழிப்போதுமுன்னியவைமுடிக்கலுறு
மகப்போதுங்களிப்பவியாமறைவதுளததுகேட்பாய். (௨௬)

வெய்யசுடர்வேலைவிழும்வேலையினீமேவுதலாற்
றையலைநின்றளிரவயிற்றிற்றனயரெனத்தாமுதிப்பர்
கையர்களாய்க்கயவருடன்கையாதகலப்பினராய்ப்
பொய்யுரையுங்கொடுந்தொழிலும்பொருந்துபுலையூணரக்கர். (௨௭)

கருவயத்தாலிடவயத்தாற்காலவயத்தாலுலகிற்
பொருள்கள்பலபேதமுறும்பொற்றொடியாய்நின்புதல்வர்
மருவுமந்திமாலையினில்வருங்காலவயத்தாலே
நிருதர்களாகுவரென்றானெடியவன்சேய்மகன்மைந்தன். (௨௮)

சொல்லாடுமதுகேட்டுச்சுமாலிமகள்சுரர்முனிவ
ரெல்லாருந்தொழற்குரியாயெனக்கெவரெனுனக்குலகிற்
பொல்லார்கள்புதல்வரெனப்புணருமதுபுகழாமோ
வல்லாய்நீயெவையுமெனாமாதவன்றாண்மலர்பணிந்தாள். (௨௯)

வரக்கருணைமுனிவினவிமைந்தரவர்தமிலிளையோ
னரக்கர்குணமிலனாகியறிவுகொடைதவநீதி
யிரக்கமொழுங்குளனாகியெமதுகுலக்கியைந்தெவையும்
புரக்குமருள்பூண்டிருப்பன்புரிகுழலாயெனப்பகர்ந்தான். (௩௦)

வேறு.

பின்னரகன்றனநாள்சிலவாள்விழிபெயராமன்
மன்னினளாயிண்டமாதவனீடியவரனாலே
யன்னவளுந்தியில்வந்துபிறந்தனனகிலாண்ட
மின்னல்கொளும்படிசெங்கணிராவணனென்பானே. (௩௧)

அங்கைசிரங்களிரண்டொருபத்துடனலர்நீலப்
பங்கயநாண்மலர்செங்குமுதத்தொடுபயில்காட்சி
தங்கியவாயிதழோடுமுகங்கடயங்கச்சூன்
மங்குலின்மேலுறுசெக்கரின்வாள்விடவளர்குஞ்சி. (௧௨)

மந்தரவெற்புறழ்மேனியுமந்நெடுவரைஞாங்கர்க்
கந்தரநேர்பகுவாய்களுமதன்மிசைகலையெல்லா
மிந்துவினின்றுதனித்தணிநீங்கியெழுந்தென்ன
வுந்தியவெண்பலும்வீங்கியபண்டியுமுளனாகி. (௧௩)

உயங்கிடஞாலமுமெண்டிசையும்பலுமுயர்வானு
நயங்கொடையன்பருளின்றியறம்பயினல்லோர்கள்
பயங்கரமாகவடுங்கொலைதீவினைபழிமல்க
வயங்கினன்வஞ்சவிராக்கதர்மேதகவருமன்னோன். (௧௪)

அம்புவிதந்தவன்மைந்தனளித்தவனருளாலே
வம்பவிழோதியதன்பினர்வாளரிவருமுந்தி
வெம்புலிதோன்றியதென்றிடவென்றிகொண்மிடல்வீறுங்
கும்பகனன்றனையீன்றனள்வானவர்குலமஞ்ச. (௧௫)

பேர்ப்பரும்வென்றிகொண்மைந்தரைநல்கியபின்னனோ
ரேர்ப்புயமேறுசயததிருவம்பகமிடனாட
வார்ப்படுபங்கயமங்கைதன்வாள்விழிவலனாடச்
சூர்ப்பணகைப்பெயர்மாதினையீன்றனடுணையில்லாள். (௧௬)

தோடணவுங்குழல்பின்னையறம்புரிதொடாபங்கோர்
நாடணவாதவொழுக்கமுரங்கொடைநயவாய்மைப்
பாடணமன்பருள்கல்விநலம்பிறபயில்செய்கை
வீடணனென்றொருகான்முளைதந்தனள்வினைதீர்வாள். (௧௭)

அன்றவண்முன்கொடியோர்தமைநல்கியதனபின்னொ
நன்றிகொள்வீடணனைத்தருமிக்கநலத்தாலே
துன்றியகாரிபிறந்தபின்மேதகுசுதைதோற்றும்
பொன்றிகழ்நாடாகடைந்தபயோததிபோலானாள். (௧௮)

பாலரின்முன்னிருவோருயிர்கொன்றபவத்தாலே
காலனுமஞ்சவருபிரமக்கொலைகாருத்தன்
மேலடைவுற்றதுதன்பெயராலுயர்விடையீசன்
மூலவிலிங்கநிறுத்தலின்விண்டதுமுனிவீர்காள். (௧௯)

ஆசிவிராமனுமீசனருட்குறியதுதன்னைப்
பூசைபுரிந்துயர்புண்ணியவாவிபுகுந்தாடி
யேசறுசீதையிலக்குமனோடுமிரும்பாவ
மாசகழீஇயினனாயிடைவைகினன்மகிழ்வோடும். (௨௦)

வேறு.

தோமோடியலாவிராகவனைத்தொடரும்பிரமக்கொலைநீங்கிப்
போமோரிடத்திலொருபுனிதப்புனலுண்டதன்பேர்பிரமகத்தி
யாமோசனியாமதின்மூழ்கிலந்தப்பவமுன்னானவினை
தாமோடிரவியெதிரோடுந்தமத்தினோடுந்தவத்தீர்காள். (௨௧)

தாழுஞ்சடையீரிப்பொழுதுந்தானமதனிற்றன்வடிவி
னீழலதுவாயிராவணனுநிருதன்காணப்படுகின்றா
னூழும்பிலமொன்றத்தடத்தினருகுண்டாகுமதனிடையே
வீழவிடுதேதானயோதியர்கோன்விரவும்பிரமக்கொலைப்பேயை. (சஉ)

அன்னபிலத்தின்வழியடைத்திட்டதன்மேல்வகுத்தோர்மண்டபத்தை
மன்னுஞமலிப்பரிதூரக்கும்வடுகன்றனைமற்றதனுப்பண்
முன்னர்நிறுத்தான்பசுப்பொருட்டுமுளரிக்கோயில்வீற்றிருக்கும்
பொன்னின்கொழுநன்மீண்டலகைபுறப்பட்டுலகைவருத்தாமல். (சங)

அண்ணல்கரியகஞ்சுகன்றனாணையதனாலெழுந்துலகி
னண்ணும்வலியின்றப்பிலத்துணடுங்கிக்கிடந்ததுவறிதே
யெண்ணுமிராமநாதனமர்ந்திருக்குங்கோயிலதன்றென்பால்
வண்ணமுலையாளிமையமலைவளர்காதலியுமகிழ்ந்திருந்தாள். (சச)

அந்தமுதல்வற்கிடம்வலமுன்னூன்றிடத்துமவன்விழியா
மிந்துவிரவியெரிக்கடவுளென்பாரிருப்பரிந்திரனை
முந்தையவராந்திசைக்காவன்முதல்வர்குணபான்முதலாக
வந்ததிசைநாலிரண்டிடத்தும்வணங்கியீசன்றனைவதிவார். (சரு)

ஒற்றைமருப்பன்குகன்வீரனும்பர்முனிவருரகரிசை
கற்றயாணர்சித்தர்முதற்கணங்கள்யமுனைகங்கைகயை
யெற்றுஞ்சரயுவாணிமுதலிலங்குநதிகளபிறர்யாருந்
தெற்றுஞ்சடிலதிராமேசன்றிருத்தாள்வணங்கியாங்குறைவார். (சசா)

எய்யுஞ்சிலைக்கையிராகவன்பினிராமநாதன்றனைப்பூசை
செய்யுமபுனிதவேதியர்கள்சிலரையழைத்தாங்கவர்தமக்கு
வையம்புகழுஞ்செழுஞ்சாலிவளத்தின்மலிந்தவயலூரும்
பொய்யிலறவோரவர்வேண்டுமபொன்னுமணியும்புரிந்தளித்தான். (சஎ)

அனகனிராமநாதனையங்கவர்தாம்புரியுமருச்சனைக்குக்
கனகமகுடங்குழைகடகங்கதிர்வெண்டரளத்தொடைகதிர்கால்
பனகமணிபினிரையழுத்தும்பதக்கமுதலாம்பணிபலவுந்
தனகங்குழையும்விருப்பதனாற்றந்துவேண்டுந்தனமுதவி. (சஅ)

நறியகூலம்பன்னிறங்கூர்நாகம்பிறவுநல்கிநலஞ்
செறியுஞ்செழுநீர்நதியுடுத்ததேயம்பலவுங்கொடுத்துமறை
நெறியின்வழுவாவகைநடத்துநிலையினிறுவியொருமறியு
மெறியுமழுவுமபயிறிருக்கையிறைதாளிராமனிறைஞ்சினான். (சகூ)

வேறு.

காதையீதுபடிக்குநர்காதினூடுமடுக்குநர்
தீதெலாமும்விடுதேதணிசேயவாரிசமட்டவிழ்
போதில்வாழ்வுபடைத்தமர்பூவைமேவுபுயத்துணை
யாதிமேனியிலொற்றுமையாவராசிறவத்தரே. (ருo)

பிரமகத்திச்சருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - உ,கoரு.

தோத்திரச்சருக்கம்.

வடங்கொள்புரிநூன்மணிமார்பின்மறையோர்வதனமலர்நோக்கித்
திடங்கொள்சூதனருள்செய்வான்றெய்வமுனிவீர்சிலம்பின்மக
ளிடங்கொளிராமநாதனிணையிகந்தசீர்த்தியியலிசைப்பன்
மடங்கொள்பாசங்கடிந்தின்பம்வழங்குங்கேண்மின்மனத்தன்பால். (௧)

அலைவில்சேதுவதனாப்பணருளின்குறிநட்டிறைஞ்சியபின்
றலைவனிராமனிலக்குமணன்சனகியிரவிதனயன்முத
லுலைவில்கவிகள்விரிஞ்சன்முதலும்பர்கும்பமுனிமுதலா
மலைவின்முனிவர்தனித்தனிதாம்வழுத்தினார்கண்மரபதனால். (௨)

அன்னமுறையேநமக்கறைவனவரிலயோத்திநகரளிக்கு
மன்னனிராமநாதனடிமலரின்பெருமைவல்லபடி
சொன்னபுகழ்யானறிந்தபடிசுருதிவகுத்தோன்கழல்போற்றி
முன்னமொழிகேன்சவுனகனேமுதலாமுனிவீரெனமொழிவான். (௩)

உலகினுயர்ந்தாய்பெருமாயையுடையாயிலைமூன்றுடைக்கழுமு
ளிலகுபடையாயிணைமலர்த்தாளிறைஞ்சுமடியாரிளைப்பனைத்தும்
விலகும்பரனேயெப்பொருளும்வீட்டுமுதலேவிண்ணுறையு
மலகிறேவர்தந்தேவேயருமாமறையின்சிரத்தறிவே. (௪)

யோகமுனிவர்க்குண்மைநெறியுரைப்பாயென்றுமொருங்கெவையு
மாகநிறைந்தவானந்தாவகிலநாதாவுலகளிக்கு
மேகமுதலேசுகவடிவாமிறைவாவணங்குமெழிற்றொண்டர்
சோகமருவும்பயநீக்கற்றுணையாஞ்சரணமலர்த்துகளாய். (௫)

பேராருயிரேயிறும்பூதுபிறங்கும்வீரப்பெற்றியினாய்
சோராமகபாதகந்தீர்க்குந்துணைவாவவிச்சைதுடைப்பானே
நாரார்காலகாலனேகாலமானாயதுகடந்தாய்
சாரார்போக்குவரவிரண்டாற்றவிக்குந்தாபந்தணிப்பானே. (௬)

இலங்கைநிருதன்பிரமகத்தியென்கணிலையாம்வகையருளால்
விலங்கமுனிந்தவேதியனேவிடமுண்டிருண்டமிடற்றானே
யலங்கன்முருக்குகமழ்கூந்தலரிவைபாகாவமரநதிச்
சலங்கொண்முடியாயிறுதிபடாத்தலைவாவிரூபத்தழற்கண்ணா. (௭)

வணங்கும்பினாகபாணியினாய்மதனையெரித்தாய்மாதவத்தோர்
கணங்கொளிமையோர்கழறொழற்காங்காலங்கருதிக்கடைத்தலைவா
யிணங்குகயிலைத்திருக்கோயிலுடையாய்நமவென்றுளத்தன்பா
லிணங்குமிராமனெடுத்தேத்தியிராமநாதன்றாள்பணிந்தான். (௮)

இளவலிலக்குமணன்பின்னரிராமநாதாவெயின்மூன்று
மளவிறுகளாம்படிநகைத்தாயடுக்கன்மகளாமந்துவர்வாய்த்
தளவநகையாளுயிர்க்கணவாதனிவேற்கரனைச்சடிலமதிப்
பிளவுநிகருமொருகோட்டுப்பிரானைப்பயந்தபெரியோனே. (௯)

படர்செங்கதிர்வெண்மதியழலாற்பயிலுநயனமூன்றுடையாய்
கடருமகுடகோடீராசோமரூபாமார்க்கண்டற்
கடருங்கூற்றின்பயங்கடிந்தாயண்டமனைத்துமாக்கியளித்
துடனங்கழிக்குமுக்கிரனேயொன்ருய்முழுதுமுணர்ந்தோனே. (௧0)

வரனேவரதாவைவகையாமறங்களொழிப்பாய்வாய்மைபயி
லுரனுரின்பவுருவினனேயுழலும்பவநோய்க்கொருமருந்தாம்
பரனேபயமில்பட்டிகர்க்கும்பண்புள்ளவாக்குமபதியாஞ்சங்
கரனேகணக்கில்கணத்தலைவர்காபுரக்குங்காவலனே. (௧௧)

காட்டுமகிலத்திருவுருவாகாணுமவற்றின்கரியாளு
யீட்டும்வினையாலெங்கெங்கேயான்போய்ப்பிறப்பனங்கங்குன்
ருட்டன்பதுமதுணையிலன்புதருவாயவலந்தருநெறியில்
வேட்டுநடத்தலருளாமல்வேதநெறியில்விருப்பருளாய். (௧௨)

என்றுபரசியெதிர்பணிந்தானிதன்பின்பவளவிதழ்திறந்து
மன்றலளகமயிற்சீதைமலையாண்முலையிற்குங்குமச்சே
றென்றிவிளங்குங்கவினுருவாவுலகமெவைக்குமொருமுதலே
துன்றுசடிலசேகரமேற்சுமக்குந்திரைவானதியானே. (௧௩)

தேவதேவேயொருபாலிற்செம்மையொருபாற்கருமையதாய்
மேவுமேனிச்சங்கரனேவேறோர்வடிவாம்விழிநுதலா
யோவில்கருணையாலயனேயுடல்கொண்டுலகிற்பிறந்துழன்று
சாவவருந்தீவினைக்கஞ்சுந்தவத்தோரச்சந்தவிர்ப்பானே. (௧௪)

என்கணிணைநின்றெழும்பார்வையெந்தஞான்றுமிராகவனு
மன்கண்படரமற்றவர்பான்மருவாதொழியவரந்தருவா
யுன்கணடைந்தமார்க்கண்டனுயிருண்கூற்றையுதைத்தவன்றன்
புன்கண்டீர்த்தவுனைச்சேரும்புனிதர்க்கரியபொருளுண்டோ. (௧௫)

இறையின்றுயர்ந்தபேரிறைவாவிராமநாதாவின்புருவா
மறைவந்தடைவார்தமைப்புரக்கும்வள்ளாலெனக்கென்மகிழ்நன்பா
லுறையுங்கருதுமவனேவலுவக்குஞ்செயலுமுதவுதியென்
றறையுங்கழல்பூண்டேறுகைக்குமம்போருகங்களாதரித்தாள். (௧௬)

வேறு.

அளியினீடுகிதியமேயகிலலோகநாதனே
யொளிகொடேவதேவனேயுன்பொருட்டிறைஞ்சுகேன்
விளிவிலாதவன்புநின்மெய்ப்பதத்தினல்கியே
யெளியனேனையாளுமாறிரங்கிராமநாதனே. (௧௭)

உனையலாமனுலகதனுண்மைமீதான்றின்றிட
லெனுமிரண்டுமின்மையாலிவ்விரண்டினுருவமா
முனைவஞானவின்பமாமுதல்வவென்றுமுண்டக
மனையதாள்கள்போற்றினனஞ்சனைக்கொர்மஞ்சனே. (௧௮)

கோளினீடுமுலகமுன்குணமகன்றகுறைவிலா
வாளினல்வயங்கிடாமற்றதன்கணன்றியே
யாளிராமநாதனேயகண்டசம்புவேயெனுத்
தாளில்வீழ்ந்துபரசினன்சயங்கொள்வாலித்னயனே. (௧௯)

இன்பமென்னும்யாவையுமிறைவனின்கணின்பமாம்,
புன்புலங்கடிந்தநூற்புலவருண்மைகாண்பரேல்
வன்பவங்கணீக்கெனாவாளிராமநாயகன்
றன்பதங்கள்வாழ்த்தினான்றலைமைநீடுசோம்பவன். (உ0)

ஆளுமாசைதேசமோடமையமென்னும்வகைமையா
னாளும்வேறுபோலவாய்ஞாலமெங்குமாகிய
தாளிராமநாதனேதவறுதீரநல்கெனா
நீளுநேயநெஞ்சினானீலனேத்தினானரோ. (உக)

எவனொருத்தன்மாயையாலிமைப்பிலாருமாயனும்
புவனிபெற்றதாதையும்போதமம்மரெய்தினா
ரவனவித்தையஃதிலானருளிராமநாதனாஞ்
சிவனெவர்க்குமிறையெனாச்செப்பிவாழ்த்தினானளன். (உஉ)

ஞானமாகிநின்றுருநாடிலாமையாற்பிர
தானமுன்னதாகவேசாற்றுவார்கள்கற்பனை
யானவார்த்தையஃதொரீஇயறியிலாதிநீயெனாக்
கோனிராமநாதனைக்குமுதனேத்தினானரோ. (உங)

தோன்றுமிக்கசாக்கிரஞ்சுவனமேசுழுத்தியா
மூன்றுமாக்கிமாயையான்முடிவின்ஞானரூபமாய்
மான்றவத்தையெய்திடாவள்ளலென்றுபனசனாங்
கேன்றவன்பினேத்தினானிறையிராமநாதனை. (உச)

நின்னையோர்கிலாமையானியாயவாதமூடர்தா
முன்னுகாரியங்களின்முதலணுக்களென்குந
ரன்னசீரிராமநாதாவகண்டசோதியே
யென்னையாளெனாக்கசனெதிரிறைஞ்சியேத்தினான். (உரு)

கலக்கநீடவிச்சையாங்கயிற்றினாலியாப்புறீஇ
யலக்கணெய்துவார்கள்பாலருள்வழங்குசாந்தனே
யிலக்கிலாதசெல்வனேயிராமநாதனேயெனா
மீலக்கணீங்கவாழ்த்தியேவணங்கினான்பசுக்கனான். (உசா)

தனையகன்றுநிலைபெறச்சகலலோகதாரகன்
வினைகளாய்மருத்துவன்விளங்கிராமநாயகன்
புனையும்வேணிமதியினான்பொருப்பின்மங்கைகோனெனாக்
கனைகழற்பழிச்சினான்காதனீடுகவயனே. (உஎ)

காணலின்றியுன்றனைக்கரணநான்குமுயிரெனா
ழாணிலார்கள்கூறுவார்மருவுமன்னமரபுசா
லைணிலங்குமாவிநீயென்றிராமநாயகன்
றாணிலாவுமுண்டகஞ்சரபனின்றுபோற்றினான். (உஅ)

வெள்ளமார்கணங்களின்வேந்தமூன்றுவிழியினாய்
கள்ளுலாவுகூந்தலாள்கவுரிகொண்கபவமெலாந்
தள்ளியாண்டுகொள்ளெனாத்தயங்கிராமநாதனாம்
வள்ளல்சீர்வழுத்தினான்மன்னுகந்தமாதனன். (உகூ)

பிறவிநீரிறப்பெனும்பெரும்பயம்பிறங்குசே
யுறவுமாதர்பூமிபொன்னுகண்டெழுந்தரங்கமாய்
மறையவண்டகோடிசூழ்வரம்பிலாதவாழ்க்கையென்
றறையும்வேலையள்ளல்புக்கழுந்தியேங்கியலறியே. (௧0)

ஐம்பொறிக்கொள்பாந்தளாலழுங்குநோயிடங்கரால்
வெம்புதாபமும்மையாமீன்களாலும்வாடினே
னெம்பிரானிடத்துமாதிலங்கிராமநாதனே
வம்பனேனையாளனாவலிதம்பிவாழ்த்தினான். (௧௧)

கரவரோடுவாளரிகடியவெய்யபிணிகளா
வுரகமாரணங்களாவுழுவையுற்பவங்களா
விரவுபாலர்தருணர்நீள்விருத்தரென்னுநீரிலாப்
பரவுகூவல்விடயமாம்பருப்பதங்கண்மல்கியே. (௧௨)

கனலினீட்டநீடழுக்காறுசீற்றமிவறலா
மூனைகொள்கண்டகம்பயமுயங்குபுன்கணாகியே
துனைவினுண்மைநெறியெலாஞ்சூழல்கொண்டடைத்தமா
வினைசெய்கானநடுவுறீஇவேறுதஞ்சமின்றியே. (௧௩)

புரைகுலாவுதுயருறும்பூரியேனையாளனா
நரைகுலாவுபோர்விடைநடவிராமநாதனை
வரைகுலாவுபுரிசைசூழ்மாவிலங்கைமன்னனும்
விரைகுலாவுதொங்கலான்வீடணன்வழுத்தினான். (௧௪)

ஒன்றைநாடின்மேலதாயொன்றுபின்றையொன்றின்மே
லனறுகீழதாய்வருமளப்பில்யோனிவகைதொறுஞ்
சென்றுதோன்றிமாண்டுபோய்த்தியங்குகும்பிபாகமுன்
னென்றுகூறுநரகின்வீழ்ந்திளைத்திரங்கிமீளவும். (௧௫)

தலத்தின்மேல்வினைக்குறைச்சண்டவாயுவெற்றவே
நலத்தினீங்குபவமுறீஇநாங்கள்சாலநொந்தனம்
புலத்தவீடுதருகெனப்புகழிராமநாதனை
நிலத்திறைஞ்சியேத்தினார்நிரந்தவீரரனைவரும். (௧௬)

வேறு.

சம்புவேயுலகநாதாதமியனேன்மருட்கைதீரென்
றம்புயன்புகழ்ந்திட்டானோரடுக்கல்வந்தகிலமீன்ற
வெம்பெருமாட்டிகேள்வனெவனவற்பணிகேனென்று
வும்பர்கோனிராமநாதனுவமனில்சீர்த்திசொற்றான். (௧௭)

எற்றினாய்தந்தாய்கந்தற்கிபமுகற்கெனப்புகழ்ந்தான்
கூற்றுநீள்குற்றந்தீரக்குடதிசைத்தலைவன்றன்முன்

பேற்றினாலவனையேத்தப்பெறுகுவனெனப்பணிந்தான். (௧௮)

அணிகுழைக்காதினானையலத்தநேர்மேனியானைப்
பணிவனென்றளகைவேந்தன்பரசினான்பரிதியென்பான்
மணிவிழிமூன்றென்னாமேருவுமாதேவாதக்கன்
றணிவிலாவேள்விசெற்றசதுரனேயென்றுதாழ்ந்தான். (௧௯)

நெடியசூல்கரத்திலேந்திநிலவுறழ்நீறுபூசிக்
கடியராவலங்கல்சாத்திக்கனையிருண்மயானத்தாடு
மடிகளேபோற்றியென்னாவம்புலிக்கடவுடாழ்ந்தான்
படிபுகழிராமநாதன்பாதபங்கேருகங்கள். (௪௦)

இந்திரனெழுவாயென்னோடெண்டிசைகாக்குமெண்மர்
வந்தனைவிரும்புந்தாள்கள்வணங்குகேன்வம்பற்றானை
யந்தமிலமலாவென்றானங்கிகாற்கடவுண்மாலே
வெந்திறலரனேயாடைவேங்கையாயெனப்புகழ்ந்தான். (௪௧)

நள்ளுறீஇயெவையுங்காணுநானெனுங்கரியாய்நாளு
முள்ளுறநோக்குங்காலையுன்னையன்றின்மையானே
வள்ளலேசிறியேன்மம்மர்மாற்றெனவிராமநாதன்
றெள்ளுமாண்கழல்கள்போற்றிசெய்தனன்றேவராசான். (௪௨)

வஞ்சகர்க்கரியாய்நீங்காமந்திரப்பொருண்மையானே
தஞ்சநீயென்றுபோற்றித்தயித்தியர்குரவன்றாழ்ந்தான்
விஞ்சுசீரிராமநாதாவேற்றவர்க்கெட்டாயோக
ரெஞ்சலிலுயிரேயென்னாவேத்தினாராயுள்வேதர். (௪௩)

ஆதியேயகிலநாதாவம்பிகாபதியேதிங்கட்
பாதிசேர்சடையினானேபாய்விடைப்பதாகையானே
சோதியேயழிவிலானேதுங்கவானவனேவேத
நீதியேதிரிந்தகுற்றநித்தலும்பொறுப்பாய்நீயே. (௪௪)

எனதெனுமுடம்பையானேயானென்றுமீன்றமைந்தர்
மனைமுதல்வினைக்கீடாகவந்தவற்றளவினீங்கும்
புனைதரும்படிற்றுவையப்பொருளினையென்னதென்று
நினையுமாலகற்றென்றேத்திநெடுங்குறுமுனிவன்றாழ்ந்தான். (௪௫)

ஆடைபொன்பூமிசேதாவாயிழையரியதோன்றல்
கூடுறுநண்பரெல்லாங்குவலயத்துதவியாகா
வீடுறுந்துறவேயென்றும்வேண்டுமென்றிராமநாதன்
றோடவிழ்கமலபாதஞ்சுதீக்கணன்றொழுதான்மாதோ. (௪௬)

மேவுநூலுணர்வுமோதும்வேதமும்பிறவுமெல்லாந்
தேவநின்னிடத்திற்பத்திசெய்கிலாமனிதர்க்கென்று
மீவதொன்றில்லையென்றாவிறைவனேயிராமநாதா
தாவுனதடிக்கன்பென்றுதாழ்ந்தனன்கவுசிகன்றான். (௪௭)

மேலவாமீகைநோன்புவிதிநெறிநியமம்வேள்வி
யோலமார்கங்கையாதியோணநீராடலெல்லாம்
பாலவாம்பயனொன்றீயாபணிந்திடார்க்குன்னையென்னாச்
சீல்வனிராமநாதன்கனைகழல்போற்றிசெய்தான். (௪௮)

எண்ணினுமனந்தகோடிபாவங்கள்பரிதிமுன்ன
நண்ணிடுமிருள்போற்பாறுநம்பனேயிராமநாதா
அண்ணலேயுனைவணங்குமவர்க்கெனவசிட்டனான
புண்ணியமுனிவர்கோமான்போற்றிசெய்திறைஞ்சிநின்றான். (௪௯)

இகத்தினிலிராமநாதனிணையடி தொழுவார்காண்பார்
சகத்தினிலொருகாற்றாழ்வார் தமொருதாயருந்தி
புகத்தகாரகண்டவின்பப்பூரணராவரென்று
வகத்திரிபில்லாமேன்மையத்திரியேத்தினனே. (ருo)

சங்கரனிராமநாதன்சந்நிதிவணங்கியங்கட்
பொங்கியகிணறுர்தம்மைப்புந்தியிற்கொள்வார்தங்கள்
வெங்கொடும்பவந்தீர்த்தன்றோர்வினைகளுங்கெடுக்குஞ்செய்கை
யங்கவர்க்கெளியதென்றுவங்கிராமுனிபுகழ்ந்தான். (ருக)

நிருமலாவிராமநாதாநின்னடித்துணையடைந்தார்
மருவியதுயரந்தீர்க்குமந்திரப்பொருண்மையாருந்
திருமலரதனைத்தாழுஞ்செல்வரைவணங்குவாரும்
பருவரறீர்ப்பாரென்றுப்பரசினன்கவுதமன்றான். (ருஉ)

வேதநூன்முடிபுதேர்ந்துவீட்டிணையடைவார்க்கேனை
யோதுநூற்கலைகளெல்லாமொருவியேயிராமநாதன்
பாதபங்கயங்கள்போற்றிப்பணிதலேயமையுமென்றுப்
போதமார்சதானந்தன்றான்புகழ்ந்தனன்புனிதவாக்கால். (ருங)

நின்னையார்நினைப்பரன்றோர்நெடும்பவமுழுதுநீங்கும்
பின்னையானந்தஞானப்பெருகொளித்திரளாய்நிற்கு
முன்னையேயடைவரென்றுவுணர்வுசால்பிருகுவென்பா
னென்னையாளிராமநாதனிணையடியேத்தியிட்டான். (ருச)

நச்சணிமிடற்றிராமநாதநின்பாதசேவை
யிச்சையினிங்குவேண்டுமின்பமும்வீடுநல்கு
மச்சமார்நரகில்வீழ்த்தாதார்கொலோவணங்காரென்றுக்
குச்சகன்போற்றிசைத்தான்கோதிலாமுகமன்கூற்றால். (ருரு)

எழுகதிரனையமேனியிராமநாதனைவணங்கித்
தொழுமவர்க்கீகைநோன்புசுரநதியாடல்வேள்வி
வழுவிலாச்செபந்தியானம்வழங்குவதென்றேவென்றுப்
பழமறைபயின்றநாவாற்பழிச்சினன்காசிபன்றான். (ருசு)

ஏகனேயிராமநாதாயானுனையேத்தாநின்றே
னாகநீத்திடுநாட்பாகத்தமபிகையோடுந்தோன்றி
மோகமிலகண்டஞானமுண்டகக்கழறுவென்றுத்
தாகமிலங்கிராவாக்தபோதனன்றான்புகழ்ந்தான். (ருஎ)

இந்துவாழ்மகுடவேணியிராகவநாதாயாங்கள்
பந்தமாராசைநீரும்பழுகணெட்டலையும்பல்கு
மந்தமில்பிறந்தைவேலையாழ்ந்தனமளிநீயென்றுக்
கந்தருவத்தரெல்லாங்காதலினேத்தியிட்டார். (ருஅ)

பொன்னவிர்செய்யமேனிப்புனிதனேயிராமநாதா
வுன்னையன்றியாரோவெந்நோயுழவையச்சங்கூர்யாக்கைக்
கன்னெடுவனத்தினீங்குங்கதிநெறிபுகல்வாரென்றுக்
கின்னரர்கீர்த்திவார்த்தைகிளந்தனர்வளர்ந்தவன்பால். (ருகூ)

வாயில்வேட்டுவராம்பொல்லாமாற்றலரூற்றமா
தீயவெம்பவத்தைவென்றுசிவகதிசேரவெங்கட்
காயநற்றுணையாருன்னையன்றியென்றிராமநாதன்
றூயதாள்வனசஞ்சூடித்துதித்தனரியக்கர்தாமே. (௯0)

விற்படைவிறலிராமன்வினைகெடவருச்சித்தேத்துஞ்
[illegible]
யற்பராமடியேம்போற்றற்கறிதுமோவருள்கூரென்றுச்
சற்பமாமுருவர்போற்றித்தாழ்ந்தனர்வீழ்ந்தநெஞ்சால். (௯௧)

துணையிலாயோனிதோறுந்தோன்றிநின்றிறவாவண்ண
மணைதருமவிச்சைநீக்கியடியரேமுய்யநல்கென்
றிணையில்கிம்புருடர்போற்றியிறைஞ்சினாரிராமநாதன்
பிணைவளர்கரத்தெம்பெம்மான்பிரசநாண்மலர்ப்பதங்கள. (௯௨)

மங்கைசேரிடத்தாயூருமால்விடையுடையாய்மன்னி
யெங்குமாயல்லையானுயேற்றமுநிகருமில்லாய்
பொங்கொளியிராமநாதாபுலங்கொளத்தோன்றியாள்கென்
றங்கெதிர்வணங்கிவித்தியாதரராதரித்தார. (௯௩)

புஞ்சமார்கணத்தின்வேந்தேபூசனையவர்பாற்கொள்ளுங்
கஞ்சநேர்பதத்தாய்சூடுங்கங்கையாயிராமநாதா
செஞ்சொலினளவைநீத்ததேவராசியமேயென்று
வஞ்சமில்வசுக்கள்வாழ்த்திவணங்கினார்மாதர்மிக்கார். (௯௪)

போதமேவடிவாநிட்டைபுரிந்திடுமியோகர்க்கீயும்
வாதகமில்லாமுத்திவாதனேமங்கைபங்கா
நீதகன்றோடவெம்பாற்றிருவருள்செய்தியென்று
மேதகுபுகழ்ச்சிவாய்மைவிளம்பினார்விசுவதேவர். (௯௫)

தத்துவமெவற்றினுக்குந்தத்துவமாகித்தானே
மெத்துபேரொளியாய்மேலைமெய்ப்பொருளாகிநிற்கு
மத்தனேயிராமநாதாவடியரேந்தொழுதுமென்று
வைத்தசீர்வழுத்தியிட்டார்மருத்துக்களென்னும்வானோர். (௯௬)

மூனைத்தமர்பொருள்வேறில்லாமுதல்வனேமுயங்குமோக
வினைத்தொடர்பறுக்குஞ்சோதிவிமலனேவிரிந்தஞால
மனைத்துமுண்டென்னக்காட்டுமெத்தவென்றிராமநாதன்
றனைத்தொழுதன்பினோடுஞ்சாத்தியரேத்தினார்கள். (௯௭)

தயங்குபேரொளியாய்த்தானேசச்சிதானந்தமாகி
வயங்குபூரணமாய்த்தோன்றன்மறைந்திடல்சுருங்கலின்றி
முயங்குமோர்பொருள்வேறின்றிமுதனடுமுடிவிலாமற்
றியங்கிடுவிகாரமின்றிச்சுத்தமாய்நித்தமாகி. (௯௮)

பற்றொடுபிராந்திநீங்கிப்பல்லவாம்பிரமாணங்கட்
குற்றறிவளிப்பதாகியுதித்திடவுலகந்தன்பான்
மற்றதுதனக்குத்தானேமருவுமோர்கரியாய்நிற்கு
முற்றிலாவகண்டஞானமூர்த்தியேபோற்றிபோற்றி. (௯௯)

போகமும்வீடுமில்லாப்புனிதனே போற்றிபோற்றி
யாருமாறவைவைரண்டுமெடியவர்க்களிப்பாய்போற்றி
மோகமார்மாயைதன்னுன்முருந்தனுயயனுய்த்தோன்று
மேகனேபோற்றிபோற்றியிராமநாயகனேபோற்றி. (எ௦)

எந்தையேயிணைமேலில்லாவிறைவனேபோற்றியாங்கள்
புந்தியின்மருளான்முன்னம்புரிந்தவெம்பாதகங்கள்
சிந்துமாசிந்தித்துன்றன்சேவடிபணிதுமென்று
வந்தனைசெய்தாரேனைவானவராமேனுரெல்லாம். (எக)

மறங்கொண்மூவிலைவேற்கையாய்வரதனேயிராமநாதா
திறங்கொண்முக்கண்ணுஞானநிலைபயில்புனிதயோகா
திறங்கொண்மாண்சிந்தையானேதிருவடிதாழ்துமென்று
வறங்கொள்வீடணன்றன்காதலமாத்தியரேத்தினுர்கள். (எஉ)

வேறு.

இன்னுரிவர்தாம்பலரீண்டியிராமநாதன்
பொன்னுர்கழலேத்தொலியூழியிற்பொங்குமோதை
மன்னுழ்கடலேமெழனமண்டிசைவானமெங்குந்
துன்னுமிகவிம்மிநிறைந்துதுதைந்ததம்மா. (எ௩)

பரவுற்றிடுபேரிசையுன்மனைப்பாங்கர்நீங்கி
யிரவிற்பொலிகூந்தலிடத்தனிராமநாத
னரவிற்புரிபொற்குழைதாழ்திருவஞ்செவிக்கண்
விரவுற்றதுமற்றவர்காதலின்மேன்மையாலே. (எ௪)

அவர்கண்மொழிதஞ்செவிக்கின்பமளித்தலாலே
யிவர்கண்மகிழ்செய்தலையெண்ணியிராமநாதன்
கவர்கண்ணினர்காணருந்தன்னுருக்காட்டியங்க
ணுவர்கண்ணெதிர்நின்றனனம்பிகையோடுமென்பால். (எ௫)

அங்கார்வமிகுந்திடவன்னவரண்ணல்வேணிக்
கங்காநதிகண்டனர்திங்களங்கண்ணிகண்டா
பைங்கார்முகவேளுயிர்பாற்றியபார்வைகண்டார்
வெங்காளவிடம்பயில்கந்தரமேன்மைகண்டார். (எ௬)

எரியார்மணியங்கதந்தோளிலிலங்கல்கண்டா
ரரியார்நறவங்கமழ்கொன்றையலங்கல்கண்டார்
கரியாரதள்வென்பயில்போர்வையின்காமர்கண்டார்
வரியாருழுவைத்துகில்சாத்துமருங்குகண்டார். (எஎ)

இணையார்மலர்போலொளிர்பாதமிரண்டுகண்டார்
பிணையார்முலையம்பிகைதங்கியபங்குகண்டார்
துணையாதுமில்பேரெழில்கண்டனர்துன்பவேலைப்
புணையாமருள்கண்டனரேனையர்புன்மைகண்டார். (எஅ)

மாணுதனதிவினையஞ்சிவருந்தல்கண்டார்
நாணுதனவெம்பவமெல்லநடத்தல்கண்டார்
கோணுதனஞானசுகோதயங்கூடல்கண்டார்
காணுதனகண்டனர்மண்டெளிப்பின்மிக்கார். (எகூ)

பாடாமகிழ்வுற்றனர்பங்கயப்பாணிகொட்டி
யாடாவயர்வுற்றனர்நெக்குளமன்புதானே
கூடாயினரன்றவர்பாலருள்கூர்ந்துசொல்வா
னேடாரிதழித்தொடைமார்பனிராமநாதன். (௭௦)

வீராய்மதில்சூழுமயோத்தியின்மன்னரேறே
வாராய்ரகுவின்குலமுய்ந்திடவந்தமைந்தா
வாராய்வளர்சீதைமணந்திடுமாலைமார்பா
வாராய்தருமத்துருவாகியவங்கிராமா. (௭௧)

வாவார்குழற்சீதைசுமித்திரைமைந்தவம்மோ
மீவாழ்கதிர்சேய்முதல்வானரவீரர்சேர்மின்
பூவாரயனுதியதேவர்கள்போதுமின்க
ணுவார்தமிழ்க்கோன்முதன்மாதவர்நண்ணுமின்கள். (௭௨)

வேர்செப்பருநம்பெருமெய்ப்புகழ்மேன்மைநாடி
நீர்செப்புமொழித்தொடையன்பொடுநீணிலத்தின்
யார்செப்புநர்கேட்குநர்கேள்வியிழைக்குநீரார்
சீர்செப்பருமன்னவர்சேர்நலஞ்செப்புகின்றாம். (௭௩)

நேசித்தருநான்முறைநம்மைநினைந்துதாமே
பூசித்திடுபேறுமொர்வற்சரம்போதமிக்கோர்
வாசித்திடுசேர்த்திகொள்சேதுவில்வைகுபேறு
மூசித்திரைசூழ்தனுக்கோடியின்மூழ்குபேறும். (௭௪)

போமாதவர்தேர்புரவிக்களைபோக்குகந்த
மாமாதனமேற்புனிதப்புனல்வாவியாவுந்
தாமாடியபேறும்விருப்பொடுசார்வர்பின்னை,
யாமாகுவரென்றனன்மற்றிதிலையமின்றே. (௭௫)

வேறு.

மகிழ்ந்திராமநாதாசீர்வயங்கிராமனாதியோர்
நெகிழ்ந்தகாதலோடுதானிவந்தவீடுகூடவே
புகழ்ந்தவாய்மைகூறிரேம்புலன்கள்சாயவேரோடே
யகழ்ந்துபாசமாசெலாமகன்றஞானயோகரே. (௭௬)

தோத்திரச்சருக்கமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௨,௧௧௧.

சங்கரபாண்டியச்சருக்கம்.

மறையைநாலவகைகண்டருள்வரதன்வாதராயணன்மலரடிவணங்கி
யிறைமிராகவன்வழிபடுகெழற்காவிராமநாதனையெண்ணியோர்காதை
யறைவனின்னமுமுனிவிர்காள்செவியினகம்புகுந்திடிலதற்குமுன்னகத்து
ளுறையகந்தனையொழித்திடுமதுநீருணர்மினென்றுயர்சூதன்மீண்டுரைப்பான். (௧)

ஒழுகுசீதளமதுரவெண்கதிர்கா[illegible]பதிக்குலமுய்ந்திடவுதித்த
வழுதிசங்கரன்பேரினானவனோர்மன்னன்முன்னாளன்மற்றவன்மனுநூன்
மொழியுநீதியின்முறைபிறழாமன்மோதுதெண்டிரைமுழுதுலகாள்வா [ன்.
னெழுதிடாமறையதின்சிரத்துண்மையிசைகொள்பல்கலையினைவபிறதெருண்டோ

வேந்தன்வேதியர்மேல்விருப்புடையான்வேள்வியெண்ணிலவிதியினாற் செய்தோ
சாந்தநால்வகைவருணமாச்சிரமந்தத்தநீதியிற்றவறிடாதளிக்கு [ன்
மேந்தன்மாற்றலர்குருதியிற்சிவந்தவிலைகொள்வேலினானெழில்பெறுமிரதி
காந்தனன்னவன்கவுரியோர்பாகன்கண்ணனாதியர்கழல்பணிந்திடுவான். (௩)

திருவில்வாய்மையிற்சீர்மையிற்கொடையிற்றிறலின்மேன்மையிற்றிண்மையிற்
பொறையி, லொருவர்நேரிலான்றன்னையன்றுயிர்வேறுண்மைகொண்டிடானுள
த்தருள்பூண்டு, மருவுநாளினின்மதமலையிரலை மடங்கலெண்குழைமரைபுலிகட
மை, வெருவிலாளிசேர்வனத்திடையொருநாண் மீனகேதனன்வேட்டைமேற்ப
டர்ந்தான். (௪)

கன்னிநாட்டினான்வேட்டைமேற்சென்றகாடுகோடுடைக்கரியரிமுதலா
மன்னுபல்விலங்கினத்தினாற்குடிஞைமஞ்ஞைகோகிலம்வரிப்புறாக்கிள்ளை
முன்னரஞ்சிறைப்பறவையினிறைவான்முளரியுற்பலமுருகுமிழாம்ப
லின்னநன்மலரிலஞ்சியின்செறிவால்யாண்டும்வெள்ளிடையின்றிநின்றிலங்கும்.()

சிலைமுழைஞ்செலாந்திகழ்மணிப்பாந்தள்சென்னிமேலெலாஞ்சீயவெங்குருளை
யிலைகொள்காவெலாமாதவரீட்டமெழுங்கொடிச்செடியிடமெலாமினமா
னலைகொணீரெலாமறைகுரற்பறவையவைசெய்பஞ்சரத்தகமெலாமண்ட
மலையரூரெலாம்வளர்துடியரவமாறன்வேட்டைமேற்சென்றவவ்வனமே. (௬)

புழைக்கரத்தினாலுரிஞ்சுறுத்தருவின்பொங்கர்வேறிலைபொறிவயப்புலியின்
றழைத்ததோகையாற்றரைப்படப்புடையாத்தண்டமற்றிலைதபோதனர்சாத்தற்
கிழைத்தவற்கலைபுலர்ந்திடாப்பதுக்கையென்பதொன்றிலையிருஞ்சிலைமறவ
ரழைத்தகைவிளியிசைபுகாத்திசைகளங்கணில்லைவேந்தவன்செலுமடவி. (௭)

கறுவுசிம்புள்சேர்சரியகேசரிகள்கடியகோளரியுளியகாருளியங்
குறவர்நேர்வராமுயல்வமாமுயல்கள்கொடிகொள்சேக்கைசேர்குடியநீள்குடிஞை
பறவைமன்சிறையனையபாம்பனைகள்பாயும்வெய்யபுல்வாயபுல்வாய்க
ளறுகையாளிசேருழையனவுழைகளவணிகாவலனடைந்தபேரடவி. (௮)

அருவிநீர்கள்பாய்புனமெலாமருவியாடுசாரலெல்லாம்வரையாடு
கிரியின்மேலெலாங்கிளர்தளிர்த்திகிரிகிடங்கரங்கெலாங்கிளைநெருங்கிடங்கர்
கரியகோடரமிசையகோடரங்கள்கடங்களெங்கணுங்களிறுமிழ்கடங்கள்
விரியும்வேங்கையினிழலெலாம்வேங்கைமீனகேதனன்மேவியவனமே. (௯)

மலையின்மாடெலாமழைமுகிலமலைவளங்கொடாழ்வரைவயினெலாமவரை
கலைகொண்மாதவர்களனெலாமகளங்கள்ளியிற்படுகெருவெலாமகருத்
தலைகொள்வெள்ளிடைநிலமெலாமணிலஞ்சலமெலாம்படிதழைசெவியசல
மலைகொள்காவதியெலாம்விலங்கவதியகிலமன்னவனணியவாரணியம். , (௧௦)

வேறு.

வழுதியவ்வனம்புக்கபின்மன்னவர்தாங்க
டொழுதகுடியச்சுடர்முடித்தொகுதிகணீக்கிச்
செழுமென்வாரினாற்கட்டியசெருப்பணிந்தொளிசேர்
கழல்புனைந்தனன்கான்வழியிருள்வெளிகாண்பான். (௧௧)

கெழீயபார்வலைபற்றியேநீங்கிடாகிர்வாற்
கொடிகொண்மீனவனுடும்பின்வார்க்கோதைகைக்கட்டிப்
படிமடந்தையுங்கமலையுந்தழுவுமைம்படையோன்
வடிவுகாட்டுவானணிந்தனன்மரகதச்சட்டை. (கஉ)

செய்யதாயநுண்ணூற்கலைதலைப்படுஞ்செயலாற்
றுய்யசெந்துகில்சென்னிமேற்சுற்றுபுவீக்கி
வையமோம்பிடுநடுநிலைவலிந்திடுமரபாற்
கையினாலுடைமருங்கினிற்கச்சியாப்புறுத்தான். (கங)

வண்ணமார்புகழ்நிலவினைமாணினந்திரியுந்
தண்ணறுங்கழைக்காணினுஞ்செலுத்திடுந்தகைபோற்

வெண்ணிறத்தவாம்பரிமிசைக்கொண்டனன்வேந்தன். (கச)

துடிமுழக்கினார்கம்பலைப்பம்பைகடுவைத்தா
ரிடிமுழக்கெனவூதினாரிரலைகைக்கதையாற்
செடியுழக்கினார்வலைபலதிசையெலாஞ்சூழும்
படியொழுக்கினாருடன்வருமெயினர்தாம்பல்லோர். (கரு)

நளியுடைக்கொடுவிலங்கினம்படர்நெறிநாடி
யொளியிருப்பவர்சிற்சிலரொருங்குடன்றிரண்டு
வெளியினிற்பவர்சிற்சிலர்தீவகமிருகந்
தளிருடைக்கரங்கொடுநடப்பார்சிலர்தாமே. (கசு)

கோடுவாளுடைஞமலியைக்கொண்டுடன்கயிற்றி
லோடுவார்பலரொண்டழையாற்றமதுருவை
மூடுவார்பலர்தருமருப்பேறியேமுழுது
நேடுவார்பலர்வீரர்களொருங்கினாரங்கண். (கஎ)

பும்பன்

மழையெழுந்தனமடங்கல்கணிமிர்ந்தனமலையின்
முழையெழுந்தயல்சென்றனபன்றிகண்முதிருங்
கழையெழுந்தலைவிண்டொடுவேட்டைசெய்காட்டில். (கஅ)

அவையமிட்டனகவயமாவடங்கலுந்திரண்டு
குவையினோடினகுறுமுயன்மரைநிலைகுலைந்த
சிவல்கபோதகஞ்சாதகஞ்சிச்சிலிசேன
முவணமாதியபுள்ளெலாம்பறந்தனவும்பர். (ககூ)

மந்தரங்கொடுமதித்தநாண்மறிகடன்மகர
முந்துமீனினந்திசைதொறுமிரிந்திடுமுறைபோ
லந்தமன்னனோடணைந்தபோர்மள்ளராங்கலைப்பச்
சிந்தியோடினவிலங்கொடுபறவையின்றிரள்கள். (உ0)

மறங்கொண்மர்ணினம்படர்வனகாண்டலும்வழுதி
திறங்கொள்வார்சிலைவரையினைக்குனித்துமுன்சிறுநாண்
கறங்குபேரொலிகாட்டிவென்கட்டியதூணி
நிறங்கொள்பூங்கணைவகைவகைநிரைபடவாங்கி. (உக)

புணரியுண்டெழுகருமுகிற்றுரையிற்பொழிந்தா
னணையுமவ்வனத்திலைமலர்காய்கனியனைத்து
முணர்வினாலளந்தானெனவொன்றினுமொழியா
திணையெரிக்கணைசென்றனவீழ்ந்தனவெங்கும். (௨௨)

துளைக்கைமாமுகந்துளைத்தன துண்ணெனப்பாய்மா
வுளைக்குமான்பொறியுழுவைமெய்ப்பொறித்தனவோடி
யிளைக்குநீடறுகையுடலறுத்தனவேங்கிக்
களைக்கும்வாளரியரிந்தனகைதவன்கணைகள். (௨௩)

சிரமிழந்தனசிலபுலிசிந்துவெங்கடத்தின்
கரமிழந்தனகரிசிலகடிந்தெதிர்காது
முரமிழந்தனசிலவரியுடன்பலவிடினுஞ்
சரமிழந்ததொன்றில்லையக்காவலன்சாபம். (௨௪)

மிடலழிந்தனகேழல்கள்விசைத்தெழுந்தோடு
மடலழிந்தனமரைத்திரளணங்குறீஇயவணின்
றிடலொழிந்தனவன்பகடெண்கினமிரங்கி
யுடலொழிந்தனவொழிந்தனமுழுவதுமுயிர்கள். (௨௫)

வலியுடைக்கரிக்கும்பமேன்மடிந்தனமடங்கல்
புலியுடற்புதைமருப்புடன்றுஞ்சினபுழைக்கை
கலைநிலத்துறப்பாய்ந்துடன்மாய்ந்தனகருமா
வுலைகவித்திரள்பிடித்தறைந்தெஞ்சினவுளியம். (௨௬)

காகம்வீழ்ந்தனபுண்டரப்பெருமபடைகலந்த
மேகம்வீழ்ந்தனவேங்கையெண்கிருளிவெண்சீய
நாகம்வீழ்ந்தனமீமிசைஞாலமேலவற்றி
னாகம்வீழ்ந்தனவாகியகுணபவெற்பதன்மேல். (௨௭)

கரியபொன்மையவெளியனபசுநிறங்காட்டற்
குரியபன்னிறமுள்ளனவுயிருடம்பெல்லாஞ்
சொரிகொள்சோரியாற்செந்நிறமாயினதொன்னீர்ப்
புரியுமுப்பளத்துற்றபல்பண்டமேபோல. (௨௮)

குருமணிக்குடர்கொடிக்குலங்கவவிநீள்கோட்டி
னிருபுறத்திலும்வளைப்பனபாவினையேய்ப்ப
தருமணிக்குடர்வாய்ப்பருந்தூடுபோய்த்தம்மின்
மருவுநுண்டுகிலாக்குவார்குழுவினைமானும். (௨௯)

தறுகண்மானினமுழுவதுஞ்சாதலிற்றம்மிற்
செறலொழிந்ததுபகையுயிர்சிந்திடச்சீற்ற
முறுவதாகலிற்றம்பணியுலகின்மேற்றாமே
பிறர்முடித்திடப்பெறுவதிற்பெரும்பயன்பிறிதோ. (௩௰)

பரியிளைத்ததுபாண்டியன்புயத்துணைப்பைம்பொற்
கிரியிளைத்தனகார்முகத்தேற்றியகிளர்நாண்
புரியிளைத்ததுநின்றுநின்றழனெலாம்புல்வாய்
நரியிளைத்தனவிளைத்தனன்கவுரியர்நாதன். (௩௧)

நறியவேம்பினுன்புலிக்குறுநன்மையின்பொருட்டான்
முறியவேட்டைசெய்காட்டொருசார்மறைமுனிவன்
பொறிகடந்தவன்பொறியுடைப்புலியதள்போர்த்துப்
பிறிவிலாதுதன்பன்னியோடிருந்தனன்பெரியோன். (௩௨)

அவனையெண்ணிலானுழுவைகொலிருந்ததென்றவன்மே
லிவனொர்வாளியையேவினனிருந்தவனிறந்தான்
றவனலங்கெழுமாதுமச்சரத்தினுலிறந்தாள்
புவனமேலெவர்விதிக்கடல்கடத்திடும்புணையோர். (௩௩)

வேறு.

இறந்திடுதந்தைதாயாமிருவரையவர்வயிற்றிற்
பிறந்திடுமைந்தன்கானூஉப்பெருநிலத்தறைந்துவீழ்ந்து
துறந்தனிர்போலுமாவிதுணையெனக்கேவரந்தோ
மறந்தனிரெனையுங்கூடவாவென்னீர்வாளாசென்றீர். (௩௪)

உணவினையூட்டுவோர்யாருண்டிடாதொழிந்துசீறி
லிணையவந்தணைக்கின்றூர்யாரருமறையாதியாகு
மிணையிரிகலைகள்கற்பித்திடுநர்யாரிருக்குநாளின்
கணிதமீரறிவீரென்னைக்காளையாப்பயந்ததென்னே. (௩௫)

அன்றிநீரென்னைவைத்திங்கமருலகடைந்தீராயி
னின்றியான்கடவும்வாய்மைக்கெதிர்விடையியம்பிச்செய்யு
நன்றிகள்பணித்துப்பின்றைநடமின்கணடவீராயின்
மன்றநீர்சுமந்தீரம்மாமகப்பழிவாரிமண்மேல். (௩௬)

தன்னிகர்தபோவனத்திற்றுபதர்தனயரெல்லா
மன்னையரத்தர்சீராட்டளியுடையோர்களாக
வென்னுளந்தரிக்கலாற்றேனென்செய்கேனிங்குநீங்கிப்
பின்னையோரிடத்திற்சேறல்பிள்ளைமையதனுன்மாட்டேன். (௩௭)

இருவரிலொருவர்முந்தியிறந்துசின்னுளிருந்திங்
கொருவர்பின்பிறந்தீராயினுளத்துயர்சிறிதுதீருங்
குரவிர்நீரொருங்குபேசிக்கொண்டனிரபோலமாய்ந்தீர்
திருவிலேனுங்கட்டோன்றுஞ்செவவியின்றீமையென்னே. (௩௮)

பெற்றிடும்பெற்றமாண்டபெற்றியாற்பிழைபெற்ற
கற்றினந்தன்னைநீங்கள்கண்டிலிர்போலுங்கண்டான்
மற்றெனைவருததங்காணமாய்ந்திடீர்மைந்தன்வேறோர்
பற்றிலன்பாவனென்னும்பரிவுடைப்பண்பினுலே. (௩௯)

துஞ்சியதுண்மைகொல்லோசுதனிலைகாண்டுமென்னும்
வஞ்சமோதெளியகில்லேன்மனத்துயரெனக்கிழைத்தாற்
கஞ்சமேலயனூர்க்கின்பங்களுமோகழறுவானே
னெஞ்சுதல்புரிந்தகூற்றையென்றுநின்றிரங்கியேங்கி. (௪௦)

பொத்திரம்பாய்ந்துமாய்ந்தீர்பொருகணைப்பரியாயப்பே
ரத்திரமென்பதாவிக்கழிவுசெய்திடுதலாலோ
குத்திரமறியீர்செய்தகுற்றமற்றெவனோவென்றுப்
புத்திரன்பொருமிக்கண்ணீர்பொழிந்திடப்புலம்பலுற்றான். (௪௧)

இன்னல்தீற்றகாலையிறும்புடைமுழஞ்சினின்றுந்
தென்னனுமிரங்குமோர்தைசெவியுறீஇயங்கட்சேர்ந்தா
ணங்கெடுவனத்தினீடுமாச்சிரமத்தினுள்ளார்
பன்னியரோடும்வந்தார்பட்டதன்பரிசுதேர்வார். (௪௨)

நங்கையோடாவிநீத்தநற்றவன்றனையுமாற்றா
தங்கணித்திலங்கள்சிந்தவழுமகன்றனையுமங்கட்
செங்கைவில்லேந்திநின்றதென்னவன்றனையுங்கண்டப்
புங்கவர்புழுங்கியுள்ளம்புதல்வனைத்தேற்றலுற்றார். (௪௩)

ஏம்பலித்திரங்குஞ்சேயையெடுத்தணைத்தெரிவளர்க்குந்
தேம்பணிமலர்க்கையாலேசிந்திடுங்கண்ணீர்மாற்றிச்
சாம்புதலொழிதியையாசாதலின்றிருந்தார்தம்மை
யாம்படித்தறிந்தநூலினிவரெனவியம்பக்காணேம். (௪௪)

கேட்டதுமில்லைமேலோர்கிளந்திடக்கேடிலாத
நாட்டுறையமரர்தாமுநான்முகன்கற்பத்துள்ளே
கோட்டியகாலமுள்ளார்குரைவளைப்பாணியானுக்
கீட்டியவாயுளுள்ளேயிறந்திடுமவனுமென்பார். (௪௫)

மேனிலையோர்விளிந்தால்வேண்டியதவஞ்செய்தானு
நானிலத்திறந்திடாமைநம்மளவுள்ளதாமோ
வேனையவுயிர்க்குமாய்வுண்டென்பதெனுன்னையீன்ற
மோனமாமுனியுமாதுமுடிந்தனர்முன்னையூழால். (௪௬)

ன்காறுங்லதந்டைடய
வீகுதலுனக்குமுண்டாம்விளிந்திடவிருப்போர்முந்தி
யாயுணீத்தொழிந்தார்தம்மேலறைந்துவீழ்ந்தலறியிட்டாற்
பேயெனப்படுவதல்லாற்பெறும்பயன்பிறிதொன்றுண்டோ. (௪௭)

உலகமேலிறந்திடாதவுபாயமிங்கொருவற்குண்டேல்
விலகுமோர்கிருமியானும்விளிந்திடற்கேதுவுண்டோ
விலகுமிப்பொருண்மேலையமென்பதொன்றில்லையிந்த
வலகிலாவுயிருநிற்பதந்தகனாணைதன்னில். (௪௮)

பழித்திடுங்கோழைமூளைபற்றியவழுக்குமற்றை
யொழித்திடுமலநீர்வெண்ணீருவையிற்றினுலகத்தோன்று
மிழிப்புறுபண்டமில்லையிவற்றினுக்கிடமாயென்று
மழிப்புறுமியாக்கைகாப்பாரறிவுளாராகுவாரோ. (௪௯)

அருவமாயகண்டஞானவனந்தவானந்தந்தானே
யுருவமாயருளினாலேயுலகெலாநிறுத்திநீக்கி
வருவதுஞ்செய்தவற்றால்வரும்பயனின்றிநின்ற
பெருமுதற்பிரமமொன்றேபிறப்பிறப்பிலதுபிள்ளாய். (௫௰)

சின்மொழிநவின்றிட்டாலுந்தெளிந்தநூற்புலமையாலே
பன்மொழிபகர்ந்திட்டாலும்பரிவுடைப்பண்பினாலே
யின்மொழியிசைத்திட்டாலுமெதிர்மறுத்தியம்பினாலுஞ்
சொன்மொழிவகையேமைந்தாதோற்றியகெடுதறிண்ணம். (௫௧)

ஈன்றவரோடெனக்குமியைபுடைத்தாகிலன்னோர்
தோன்றுநாட்டோன்றிநீயுந்தொலையுநாட்டொலைவாயன்றேன்
மான்றிடாதவரையுங்கண்வளர்பவத்தொன்றுநல்கு
மான்றதொல்விதியின்வேடமஃதறிந்தவலகீப்பாய். (ருஉ)

பணைத்தவன்பினர்போற்கண்ணீர்பாய்ந்திடவழுதங்கீரைப்
பிணைத்தின்மேலுகுத்தாலந்தப்பிணத்துயிர்பருகும்பிள்ளாய்
குணைத்துயர்குரவர்மேனிக்கொடுங்கண்ணீர்மழைசிந்தாம
லுணர்த்துநான்முறையின்மாண்டோர்க்குறுங்கடன்புரிவாயொல்லை. (ருக)

அன்பினாலுன்னையீன்றாராசுகத்திறத்தலாலே
வன்புடைமரணமாகும்வழுவதுநீங்கவன்னோ
ரென்பினைக்கொடுபோய்முத்தியீந்திடுமிராமநாதன்
றன்பெரும்புரத்திலோர்பாற்றாபனந்தரையிற்செய்வாய். (ருச)

மயற்கடன்மூழ்கிமைந்தாவறிதிராதத்தலத்திற்
செயத்தகுஞ்சபிண்டியேனைச்சிராத்தமுன்னானவெல்லா
முய்த்தகுமரபிற்செய்தியொழிதுயரென்றார்தங்கள்
வயத்திலைம்புலனடாத்துமாதவவாணர்மன்னோ. (ருரு)

சாகலன்றனயனானசாங்கலன்றானுமந்த
மோகமின்முனிவர்கூறுமொழியுளங்கொண்டிறந்து
போகியதந்தைதாய்க்குப்புரிகடன்புரிந்துபின்ன
ரேகினான்மற்றைவைகலெறிதிரைவைகைக்கூடல். (ருசு)

இருந்தவணீங்கிச்சென்றானிறையிராமேச்சுரத்தி
லருந்தவரருளுமாற்றாலத்தியுஞ்சேமித்தங்கட்
டருந்தகைச்சிராத்தமாதிதந்தொருவருடங்காறும்
பொருந்தியகடன்களெல்லாம்புரிந்தனனப்புரத்தில். (ருஎ)

ஆங்கதுபுரிந்தபின்னரன்னையோடத்தன்றன்னைச்
சாங்கலன்கனவிற்றண்டஞ்சங்கொடுநேமிதாங்கி
யோங்குபொன்னாடைசாத்தியுவணமூர்ந்துவலகையோடுந்
தேங்கமழ்துளபத்தாருந்திருமலர்த்தொடையுஞ்சேர்த்தி. (ருஅ)

மகரகுண்டலங்கண்மின்னமார்பினிற்கவுத்துவந்தான்
மகரவாரிதியிற்றோன்றும்வளர்கதிர்ப்பரிதிமான
மகரவாகாரங்கைமணமகனாகக்கண்டான்
மகரகேதனனைவென்றோர்வாழ்கந்தமாதனத்தில். (ருகூ)

துயிலெழுந்துவந்துமீளத்தொன்னகரெய்தியங்கட்
பயின்மறையோர்க்குச்சொன்னான்பழுதில்சொப்பனத்தின்பான்மை
யயலிலார்தாமுங்கேட்டுமகிழ்ந்தனர்மைந்தன்றானு
மயர்வுதீர்ந்தினிதிருந்தானவன்செயலன்னதாக. (சுO)

கைத்தனும்வாயுகின்றகைதவன்றன்னைக்காணூஉ
மெய்த்தவர்வெகுண்டுசொல்வார்விரகிலாவேந்தரேறே
யித்தவநாதன்றன்மேலெரியுமிழ்கூர்வாய்ப்பல்லந்
தைத்திடவெய்தாயென்னதவறிழைத்திடநினைந்தாய். (சுக)

அடங்கலில்சீற்றத்தாலேயந்தணற்கொன்றதன்றி
யுடங்குறைமுனிவனில்லாளுயிரையுமுண்டாயன்றே
யிடங்கெழுஞாலத்துன்போலியாரிதுசெய்யற்பாலார்
மடங்கலேறனையாயிந்தவல்வினைக்கென்னைசெய்வாய். (௬௨)

செற்றமுஞ்செயிருமின்றிச்சிந்தையாற்செயலால்வாக்காற்
குற்றமொன்றடையாவண்ணங்குவலயம்புரப்பதன்றே
வெற்றிசாலரசர்நீதிவேடரும்விலங்கேகொல்வார்
மற்றிதுபுரிந்தவாறேமன்பதையளித்தவாறும். (௬௩)

தொன்னிலங்காக்கவென்னுஞ்சொன்முதனெட்டெழுத்தைப்
பன்னியேகுறிலிரண்டாப்படித்தனைபோலுமுன்ன
நின்னிலைவேண்டிற்றாகநிகழ்ந்தவித்தீமைநீக்க
வுன்னிலுன்னுடலையின்னேயுதவகற்குதவல்வேண்டும். (௬௪)

நீறெழத்தழலின்மூழ்கிநின்னுயிர்விடுத்தலன்றி
வேறொருபரிகாரத்தால்வினையிதுவிளிவதன்று
கூறினுமுன்னைநாடிக்கொடுஞ்செயற்பிரமகத்தி
யேறுமோரயுதநில்லாதேகுதியிறைவவென்றார். (௬௫)

வழுதியுங்கேட்டுநெஞ்சமருட்கையோடேம்பாடெய்திப்
பழியிதுபறையுமாறுபடிமையீர்நுங்கண்முன்ன
ரழலிடைவீழ்வனீங்களனுமதிசெய்யினென்றுக்
குழுவுசாலமைச்சர்தம்மைக்குறித்திதுகூறலுற்றான். (௬௬)

மறையவன்பழியுமன்றிமங்கைதன்பழியுமுற்ற
திறையுநான்றேரகில்லேனென்விதியிதுவேயாறு
லறைவதெனமைச்சின்மிக்கீரடுங்கொலைத்தோடமின்னே
பறையுமாறியற்றினல்லாற்படுநரகளப்பின்றாகும். (௬௭)

ஆவியையழலின்றேவுக்கவியுணவாக்கிலிந்தப்
பாவம்விட்டோடுநீங்கள்பழங்கணுற்றழுங்கவேண்டாந்
தீவளர்த்திடுமின்மற்றென்சேயைமுன்கொண்டுதெண்ணீர்ப்
பூவணங்கணங்குறுமற்போற்றுமினெனப்புகன்றான். (௬௮)

செவித்துளைபுகுதலோடுந்தேர்ச்சியின்றுணைவர்சிந்தை
தவித்தழுதிரங்கிமன்றுதனயரில்வளர்த்தாயெம்மை
யவிக்குதுமுயிரையாமுமழலின்வீழ்ந்துன்னையன்றிப்
புவித்தலம்புரத்தன்மாட்டேம்போதுமிவ்வாழ்க்கையென்றார். (௬௯)

மாதுயர்கெழுமிநின்றமர்திரித்தலைவர்தம்மை
யாதரவதனுடியரியணையதனில்வெய்ய
பாதகர்தாமிருத்தல்பான்மையன்றதனாற்பார்மான்
காதலன்றனக்கேகாதற்காதலியாதற்பாலான். (௭௦)

என்னிடைவைத்தநண்பினெண்மடங்கென்கணன்றன்
றன்னிடைவைத்துஞாலந்தாங்குமின்றாழ்த்திடாமன்
மின்னிடைவெந்தீத்தம்மின்விரைந்தெனவிளம்பிவேந்தன்
பொன்னுடைப்புரிநூன்மார்பிற்புங்கவரெவருங்காண. (௭௧)

புன்படிந்தவந்துசித்தம்புனிதனும்முனிவரோடு
மனல்வலங்கொண்டிறைஞ்சியம்பிகாபதியையெஞ்சக்
தனிலுறவிருத்திச்சற்றுந்தளர்ந்திடாதெழுந்துவீசுங்
கனலிடையரசன்வீழ்வான்கருத்தினுட்கொண்டகாலே. (௭௨)

அங்கரனருளாற்றோன்றியந்தரவாணியொன்று
சங்கரமாறவம்மோதழலினீதாழ்வாயல்லே
புங்கவன்பழியுமன்றன்புனையிழைபழியும்போதற்
கிங்குபதேசம்வேறுண்டியம்புவதிறைவகேண்மோ. (௭௩)

மாமறையுண்மைமானுமந்திரமதனைமன்று
நீமனங்கொண்டுதென்பாலெனடுந்திரைவேலைஞாங்கர்க்
காமருசேதுவின்கட்கவுசலைகானாட்ட
தாமமாரிலிங்கமூர்த்திசந்நிதன்னிலெய்தி. (௭௪)

கைதவவருடமொன்றின்காறுநீகாலையுச்சி
மைதவழ்மாலைமூன்றும்வலங்கொடுவணங்கியன்பாற்
பெய்திடுந்துரோணந்தேனெய்பெறுங்கலத்திரட்டியாவி
னெய்தருமளவையான்பானிலாவணிமவுலிக்காட்டி. (௭௫)

அல்லதும்பலவற்றுமாட்டுவித்தரியசாந்து
நல்லபாளிதமுஞ்சாத்திநறியபாலடிசிலாதி
சொல்லியநிவேதனங்கள்சுவைபடப்புரிந்துமூன்று
மெல்லொளிநயனந்தோறுமெண்ணெயாற்றீபங்காட்டி. (௭௬)

மனந்தனில்வேண்டுமாற்றல்வழுத்திவவாறுமாறுத்
தினந்தொறும்வழிபட்டாயேற்றீவினையிரண்டுந்தீருங்
கனந்தரும்பூதமெல்லாங்கடியவைம்பாதகங்கள்
சினந்திடுமிராமநாதன்றெரிசனமொருகணத்தில். (௭௭)

உற்றிடும்பிரமகத்திகள்ளுண்டலுறுபொற்சோரங்
கற்றிடுமாசானில்விற்கலத்தலாம்பவங்களுன்காச்
சொற்றிடுமவற்றிலோரொன்றயுதபாதகந்தொலைந்தே
யற்றிடுமிராமநாதன்றரிசனமதனாலன்றே. (௭௮)

கொலைகளவாதிசெய்வோர்தம்முடன்கூடிஇயபாவந்
தொலைவுறுங்கணமதொன்றிலவைக்கனுதோடந்தானுஞ்
சிலைபயிலிராமன்பூசைசெய்ததேவாதிதேவர்
தலைவனுமிராமநாதன்றரிசனமதனாற்சாயும். (௭௯)

செங்கணேற்றிராமநாதன்றெரிசனநரர்க்குண்டாயிற்
கங்கைநீரதனிலுடிக்கயைபிரயாகைமூழ்கி
யங்கிசால்வேள்வியாற்றியாவதொன்றில்லைவேந்தே
யிங்குநீதாழாதங்கணேகெனவியம்பிற்றம்மா. (௮0)

முனிவருமுருவிற்றோன்றுமொழியினைக்கேட்டுவெந்து
நனிமிகவிற்ம்பூதெய்திநன்றுநன்றென்றுமன்றற்
பனிமலர்வேம்பினுனைப்பார்த்தருட்பான்மையீதே
வினியிவணிற்றல்சேறியிராமநாதன்பாலென்று. (௮௧)

இப்பொழுதிராமநாதன்பெருமையையெண்ணுதேயாஞ்
செப்பினமரசரேறேசெந்தழல்புகுவாயென்று
மைப்புயலனையமாயோன்வகுத்தசேதுத்தலந்தான்
செப்பருமுத்திகல்குஞ்சேருதியொல்லையென்றார். (௮௨)

அரசனுங்களிகூர்ந்துள்ளமருந்தவரருண்மேற்கொண்டு
விரைசயந்தனம்போர்வேழம்வெம்பரிபரியாளங்க
டரையிடமின்றியீண்டத்தனக்குவைபலவுங்கொண்டு
நரைவிடையூரிராமநாதனைநண்ணினுனே. (௮௩)

சென்றிறையிராமநாதன்சேவடிசென்னிசேர்த்தி
யன்றுதொட்டொருபோதுண்டியாக்கியோராண்டினெல்லை
முன்றனக்கும்பர்வாணிமொழிந்திடுமுறைவழாம
னன்றுறவியற்றியிட்டானரபதிபொருநைநாடன். (௮௪)

வைகலுமிராமநாதன்மலரடிவணங்கியான்பா
னெய்கலந்தபிடேகங்கணிவேதனஞ்செய்தான்பின்னும்
பொய்கலவாதவன்பாற்பொன்றசபாரமீந்தான்
செய்கலந்தோடுநன்னீர்த்தென்றமிழ்ப்பாண்டிநாடன். (௮௫)

மறுதொழில்புரியும்வாழ்க்கைவஞ்சகநிருதராவி
தெறுதொழில்வில்லின்கோடிதினந்தொறுமாடித்தென்ன
னறுதொழிலாளரெல்லாமைந்தொழிலாளராக
வுறுதொழிலுண்டியைந்துமுவகையாலூட்டுவித்தான். (௮௬)

வற்சரம்போனபின்னைமறையவனேடுமோதை
விற்சரந்துரந்துகொன்றவினையொரீஇவிமலனுகி
யெற்சாற்காலத்திங்களெனப்பணிந்திராமநாதன்
பொற்சரணிரண்டுமென்னுன்போற்றுதன்மேயினுனே. (௮௭)

ஒருவனேநித்தாமுத்தாவுத்தமாமத்தவேழம்
வெருவரவுரித்துப்போர்த்தவீரனேசூரனஞ்சங்
கருவமரங்கிநெற்றிக்கண்ணனேகண்ணிதமில்லாத்
திருவனேயிராமநாதாசெங்கணேறுகைக்குஞ்செல்வா. (௭௮)

ஐயனேயிரவிகோடியவிரொளிவிளங்குஞ்சோதி
மெய்யனேவிரிஞ்சனுச்சிவிளங்கொளியுகிராற்கிள்ளுங்
கையனேகாலனஞ்சுங்காலனேகடுக்கையந்தார்ச்
செய்யனேயிராமநாதாதிங்களங்கண்ணியானே. (௮௯)

அரையனேயயன்மாலுள்ளத்தளவையினளக்கற்கந்தக்
கரையனேமகுடவேணிக்கற்றைமேற்கங்கைவீசுந்
திரையனேபுரங்கள்வேவச்சிறுநகைபுரிந்தவெள்ளி
வரையனேயிராமநாதாவாசிகான்மறையினுனே. (௯௦)

நீற்றனேகண்டிமாலைநிமலனேவினையுமெல்லைக்
கேற்றனேயிறுதியில்லாவிறைவனேயில்லையென்னுத்
தேற்றனேதெருண்டோருள்ளத்தேறலேகருணைத்தெண்ணீ
ரூற்றனேயிராமநாதாவொப்புயர்வின்மையானே. (௯௧)

அறவனேயறத்தின்பேறேயசும்பறவகன்றஞானத்
துறவனேதுறந்தோர்காணுஞ்சோதியேதொழும்பர்க்குற்ற
வுறவனேயன்பர்பாவமொழித்திடுஞ்செயலிலஞ்சா
மறவனேயிராமநாதாமலைமகள்பாகத்தானே. (௧௨)

அடியனேன்முனியினேனுமொயிழையொருத்தியாவி
முடியனேரெய்துசெற்றமூர்க்கனேன்முறைதவிர்ந்த
கொடியனேனுன்னைவந்துகுறுகினேன்குணத்திற்சால
மிடியனேன்புரிந்தபாவம்வீட்டுவாயன்றிமேலும். (௧௩)

நான்மறைநெறிவழாதநடலைவையுநல்குமென்னுப்
பான்மறைதவளநீற்றுப்பசுபதியிராமநாதன்
வான்மறையாதசீர்த்திவழுத்தினன்வழியுநம்பத்
தேன்மறைநறையார்மார்பன்செந்தமிழ்ச்செழியர்கோமான். (௧௪)

புலங்கொளப்புகழுங்காலைப்புரவலன்முகத்தினின்றும்
விலங்கரும்பிரமகத்திவெளிப்படவுற்றதந்நாள்
வலங்கெழுதோளயோத்திமன்னவன்பின்றொடர்ந்த
விலங்கைமன்பிரமகத்திக்கிளையதுபோலமாதோ. (௧௫)

செந்நிறப்பங்கிபொங்கச்செழுந்தவன்பிரமகத்தி
மைந்நிறவுறுவைசுற்றிவருதலும்வடுகனென்பா
னன்னிறக்கிரீவத்தீசனாணையாலக்கணத்திற்
கொன்னிறச்சூலவேலாற்குத்தியாருயிர்குறைத்தான். (௧௬)

இறந்தபின்பிரமகத்தியீசனெம்மிராமநாதன்
சிறந்தமால்காணாப்பாதந்தென்னவன்காணத்தோன்றி
யறைந்தநின்புகழ்மைவாய்மைக்ககமிகமகிழ்ந்தேமன்று
பறந்தனதுகளாய்நின்னைப்பற்றியபழியிரண்டும். (௧௭)

மாயிருஞாலமுன்போன்மன்னனீபுரத்திநம்மை
மேயினோரித்தலத்தின்மீண்டுதித்திறவாரீரைந்
தாயிரம்பிரமகத்தியகற்றுவாளப்பின்ஞானச்
சேயொளிகாட்டுமேலாஞ்சிறப்பினைச்சேர்வர்திண்ணம். (௧௮)

மதிக்குலநிருபநம்மைவழுத்துநின்வாய்மையாலே
துதிக்குநர்பாவந்தீர்ப்போஞ்சொற்றியாவுனக்குவேண்டுங்
கதிக்குநல்வரங்களென்றான்ககனமேற்படருங்கங்கை
நதிக்குலமடந்தைதோயுநாயகனிராமநாதன். (௧௯)

பாண்டியன்கிளப்பான்றிங்கட்பவளவார்சடையாயுன்னைக்
காண்டலினதிகமானகதியுளதாகிற்பின்னை
வேண்டுவனின்றுகூற்றம்வெருவுமார்க்கண்டனெஞ்சின்
மூண்டெழுபழங்கண்டீர்த்தமுண்டகந்தொழுதேனன்றே. (௧00)

நவந்தருசெய்யதோட்டுநளினமுங்கரியதாகச்
சிவந்தசீரடியிலன்புந்திரிபிலாவீடுமென்க
ணுவந்தியானுரைத்தசீர்த்தியுரைத்திடும்புனிதர்க்குன்னைத்
தவந்தரக்காணும்பேறுந்தக்தருளென்றுதாழ்ந்தான். (௧0௧)

அவ்வரங்கொடுத்திராமனுதரத்தருச்சித்தேத்துஞ்
செவ்வருட்குறியிலீசன் றிரோபவஞ்செய்தான்பின்னர்
மெய்வரம்பெற்றுயர்ந்தமீனகேதனனுமேந்து
கவ்வியக்கரத்திராமநாதனைவணங்கிவாழ்த்தி. (௧0௨)

தானையம்பரவைசூழத்தன்னகரடைந்தெல்லாமு
ஞானமாமுனிவரோடிவ்வின்றனைவருங்கேட்டு
மானகைமுகத்தராகிமகிழ்ந்தபிடேகஞ்செய்தார்
நாணிலம்புரப்பாயென்னநரபதிவழுதிதன்னை. (௧0௩)

மாறனுமமைச்சர்மாதர்மைந்தர்கண்மருவுநண்பால்
வேறுளதமர்களோடுமேதினிபுரந்துபன்னு
வீறுசேர்காலந்தன்னிலிறையவனிராமநாதன்
பேறுசால்பதங்களுடிப்பேரின்பவீடுபெற்றான். (௧0௪)

வேறு.

சங்கரமாறநாமன்மேயதோர்தண்டலில்சீர்கொள்பேறுகூறினேம்
பங்கமிலாதவாதிமாதவீர்பண்டையகாதையீதுபாடுவார்
பொங்கொலிகேடுகோதினுடுவோர்புன்கணெலாமுமோடநூறியே
யெங்குமிலாவுதேவதேவனுமெந்தையிராமநாதனுவரே. (௧0௫)

சங்கரபாண்டியச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩,0௬௬.

சேதுமாதவச்சருக்கம்.

சேதுமாதவன்காதைசெறியிருண், மோதுமாதவமாகுமுனிவிர்கா
வீதுமாதவமென்றுணர்வீரெனு, வோதுமாதவச்சூதனுரைசெய்வான். (௧)

நதியினீடும்பொருநைநன்னாட்டினன், பொதியவெற்பன்புகன்றிடுபுண்ணிய
நிதியெனும்பெயர்கொண்டிலவுமோர், மதியருங்குலமன்னவன்முன்னுளான். (௨)

பொரும்புயத்துணைப்புண்ணியமாநிதி, யரும்புதிங்களணியுஞ்சடாடவிச், சுரும்பு
லாங்கொன்றைச்சுந்தரபாண்டியன், விரும்புங்கூடல்வியனகர்போற்றுவான். (௩)

மாறுகொண்டமருவலர்சாய்ந்திட, வேறுவாம்பரியேந்தலவன்றனைத்
தேறுநாவலர்தீதறுசெய்கையாற், கூறுவார்கள்குணநிதியென்னவும். (௪)

நிலம்புகழ்ந்திடுநீள்கயிலாயமாஞ், சிலம்புகாத்திடுநந்தியந்தேவுபோ
லலம்புநீர்வைகையம்மதுராபுரித், தலம்புரக்குந்தராதிபனோர்பகல். (௫)

முந்தைஞாலவணங்கைமுயங்கெனு, மைந்தன்றன்னைமணிமுடிசூட்டினன்
கந்தமாதனகேட்படக்காருத்தன், றந்தசேதுவிற்சாருந்தகைமையான். (௬)

அக்கணிந்தவனுலவாய்நீங்கியே, முக்குணத்தின்முதற்குணமாநிதி
தக்கநால்வகைத்தானையுந்தன்புறந், தொக்கவைம்பெருஞ்சுற்றமுஞ்சுற்றவே. (௭)

நாலிரண்டெனாநண்ணியவாயமுங், கோனுமைவகைக்கூட்டமுஞ்சூழவே
சானுமன்புதலைக்கொளத்தானெழீஇச், சீலமன்னன்வழிக்கொண்டுசெல்லுவான்.

சேயசேதுவின்றிண்மைதெரிந்திடப், போயராகவன்மீண்டும்புக்கானெனத்
தூயகாதற்றுணைவியுந்தானுமா, யேயெனுவிரைந்தேகினனேந்தலே. (௯)

வேழமேகம்விடும்பரிநெட்டலை, தாழும்பேனர்தவளக்கதலிகை
பாழிவையம்படர்கலனாகவே, யாழிபோன்றதரசன்பெரும்படை. (௧0)

தேரும்யானையுந்திண்சிலம்பீட்டமா, வோரொழுங்குசெல்வீரர்களுந்தியாக்
காருலாங்கொடிக்காடுமருவியே, பாருடன்படர்ந்தன்னபதாகினி. (௧௧)

பல்லவீரரிராகவன்பாங்குளா, ரல்லநீர்த்தவருளின்குறிக்கெலாம்
புல்லுநீழல்புரிந்திடக்கொண்டுடன், செல்லுமாலயம்போன்றனதேர்களே. (௧௨)

ஆதிநாளிலிராகவனூற்றிய, சேதுவின்கணறைகுறைதீர்த்திடு
மாதராற்பலமால்வரைமன்கொடு, போதல்போன்றதுபோதகம்போவதே. (௧௩)

கைகலந்திடுகாதலனின்றமர், செய்ங்கதீதெனத்தென்கடற்சேர்ப்பன்யான், மெய்
கொண்மங்கலம்வேட்டவன்கொண்டுசெல், வைகையன்னதுவாசிப்படர்ச்சியே.

தாவுதென்கடற்றன்னிலையோத்தியர், காவலன்கரைகண்டிடுமாசையா
லோவிலுத்தரவாசைநின்றுற்றிடும், வாவுமாகடல்போன்றனர்மள்ளரே. (௧௫)

உலகமுற்றுமொருங்குதிரண்டென, விலகரும்படைமேதினியீண்டவே
யலகில்சீர்த்திக்குணநிதியாடவர், திலகமன்னவன்சேதுவிற்சேர்ந்தனன். (௧௬)

சென்றபின்னர்ச்செழுந்தனுக்கோடியி, னன்றுசங்கற்பநாடிநவிற்றியே
துன்றுகாதலிற்றோய்ந்ததிலாயிடை, நின்றநீர்களுநீதியிலாடினான். (௧௭)

கோவிராமன்கொடியவிராவண, னாவியுண்டவரும்பழிசூழ்ந்திடும்
பாவநீத்தபச்பதிபங்கயச், சேவடிததுணைசென்னியிற்றாழ்ந்தனன். (௧௮)

அன்றியங்கணமர்ந்திடுநாளவன், வென்றிமாயன்விரும்பிடும்வேள்விக
ளொன்றுமுள்ளத்துவகையினாற்றினான், ஜென்றுவேதத்துறைபிறழாமலே. (௧௯)

வேள்வியீற்றினிலாடும்விதிப்புன, னீள்விற்கோடியினேயத்தினாடியே
மூள்விறற்படையெண்டிசைமொய்த்தெழ,வாள்விழிததுணைமாதொடுமன்னவன்.

மீளவந்தவண்வெய்யநிசாசரர், மாளவந்தசனகிமணாளனை
யாளவந்தருளண்ணலையாரவெண், டோளவந்தனையென்றுதொழுதனன். (உ௧)

கோயில்சூழவலங்கொண்டுகோமகன், வாயில்வந்தனவாழ்த்திவணங்கினான்
பாயுமால்விடைப்பண்ணவன்றன்விடை, மேயதனபினரில்லத்தின்மேவினான். ()

விராவுதானையினோடும்விரிசினைக், குராமலர்க்குழற்கோதையுந்தானுமாய்ப்
பராவுசேதுவிலிவ்வணம்பார்த்திவ, னிராமநாதனையேத்தியிருக்குநாள். (உ௩)

வே று.

சேலோடிகல்விழியிந்திரைதென்றற்சிறுமன்றற்
காலோடசைகமலாலயமேவுந்திருக்கன்னி
பாலோட்டலையெறிவேலையிற்பாந்தட்டுயில்பயிலு
மாலோடொருகலகந்தனைவாளாவருவித்தாள். (உ௪)

சங்கேதமுமொன்றேதினள்சர்ப்பக்குலமஞ்சும்
வெங்கேதனன்விடைகொண்டனன்மிகுசேதுவைநாடி
யங்கேதனிவந்தாளிறையறமாகிநெஞ்சிற்
பொங்கேதமிலன்பின்செயலதுசோதனைபுரிவாள். (௨௫)

தாளுற்றிடுதெண்டாமரைதங்குந்திருவங்கண்
வாளுற்றிடுபுருடோத்தமன்மணிமார்பமும்பிரிந்தே
கோளுற்றிடுமெண்மேற்குணக்குன்றன்னவர்பாலு
நீளுற்றொருதலைதான்றனிநில்லாமையைநிறுத்தாள். (௨௬)

விற்கோடியினிடைநின்றனள்விந்தாவலியென்னு
மிற்கோடிரிபில்லாளொடுமெழுதானையினோடு
மற்கோடிமுன்னெதிர்தோளுடைமதியின்குலமன்
பொற்கோடிசெய்துலைமுற்கொடைபுரிவானவண்புகுந்தே. (௨௭)

வரையார்திரையெறிவாரியின்மரபிற்புனலாடி
யுரையார்கொடையுதவித்தனதுறையுட்புகவுப்பா
னிரையார்கடலுடன்கொண்டெனவிகல்வெம்படைமிடைய
விரையார்தொடைவேந்தன்னவன்மீண்டேகிடும்வேலை. (௨௮)

பொன்னிற்பஃறளிர்மல்கியபுதுக்கொம்பரிற்புயல்சேர்
மின்னிற்படர்கொடிபோன்மணிவிளக்கின்சுடரதுபோற்
பின்னிற்பொலிகலபத்தொடுபிறழ்மஞ்ஞையினொருபெண்
முன்னிற்பதுகண்டற்புதமுதல்வன்பெரிதுற்றான். (௨௯)

சீரார்பதவிணைநின்றெழுசெஞ்சோதியினியல்பா
னீரார்மலர்நீத்துமதினிற்பாளெனநிகழ்வா
ளோரார்வயதெட்டாகியவெழிலாடனையெதிரே
பாராவருகுறல்கண்டவன்பார்த்திங்கிதுபகர்வான். (௩0)

யார்நீயுனையீனுந்தவமெவருஞ்செயவல்லா
ரூர்நீணிலத்தென்றாலஃதொவ்வாதுளமுனக்காம்
பேர்காரணச்சிறப்பாலிடுபெரியோரிலையெவனோ
போர்வேல்விழிபெறவேண்டியதென்றானவள்புகல்வாள். (௩௧)

பெற்றாரிலைமண்மேலெனைப்பிறழாமதனோடே
மற்றாருமென்னுடன்மேயினரிலர்மாலளவன்றி
யுற்றாருமங்கணுகாவகைபுரப்பாயிறையோய்நின்
பற்றாமரைமனைக்கேநிலைபயில்வேன்சிறுபாவை. (௩௨)

உனக்கோர்மகவாவேன்றிரையுததிப்புவியதன்மே
லெனக்கோர்துணையிலரென்றனளெவர்க்குந்துணையாவா
டனக்கோரளவில்லாமகிழ்தானெய்துபுதலைவன்
வனக்கோகிலமன்னாடிருவதனங்குறித்துரைப்பான். (௩௩)

என்பாலுளதொன்றுண்மகவினியென்குலமுய்ய
வன்பாலுனையருள்பெண்மகவாகப்புரந்தளிப்பே
னுன்பாலெவர்பாலாதரவுளதாமவரன்றி
வன்பாலுறவருவாரெவர்மண்ணுண்டிடுவாரே. (௩௪)

அந்தாமரைமலர்மேற்றிருவன்னாயகத்தரிவை
விந்தாவலிமகளாகுதிமேவென்றனன்வேந்தன்
செந்தாமரைபிரியாளவற்பிரியாதுடன்சென்றே
கந்தார்கடமலைசூழ்கடைக்கடிமாளிகைபுகுந்தாள். (௩௫)

திகழ்புண்ணியநிதியாயிடைத்திருவைத்திருமனையா
ணிகழ்பொன்முகமதிநாடுபுநீபோற்றுதியெனவே
புகழ்தன்குலமுன்னோரவர்புரிபுண்ணியநிதிபோன்
மகிழ்தந்திடக்கொடுத்தான்கரமலர்மேன்மகளென்றே. (௩௬)

வேந்தற்கொருமனையாளிருவிழிமாமலர்மலரா
வேந்திக்கரத்தினிதென்றனைத்தெடுத்துச்சிரையமோந்தே
காந்திக்கிளர்மணிப்பூண்கலைகவினப்புனைவித்தே
மாந்தக்கனியமுதூட்டினண்மகவின்மிகவளர்த்தாள். (௩௭)

நெய்த்தோர்கமழ்வேற்புண்ணியநிதிமாளிகைநீங்கா
முத்தார்நகைவிந்தாவலிமுரல்வண்டினநிரைசேர்
கைத்தாமரைதானேபுழற்காற்றாமரையாக
மைத்தாழ்குழன்மயிலிந்திரைவளர்வுற்றிடுநாளின். (௩௮)

வே று.

மூடுவான்முகிற்கூந்தன்முளரிமகண்முலைமென்றோள்
கூடுவானெழுங்காதற்குரைகடலின்றிரையலைப்ப
வாடுவான்மணிவண்ணன்வைகுண்டநகர்நீங்கித்
தேடுவான்புறம்போந்தான்சிறைக்கருடன்பிடரேறி. (௩௯)

தெண்டிரைவாயமுதுடன்சேர்செந்திருவைமுந்தொருநாள்
வண்டுருவங்கொண்டதனிமாயவனாமரபதனாற்
றண்டுணர்வண்கமலமெலாந்தனித்தனியோரிதழாகக்
கண்டுணரும்படிதெரிந்தான்கவுத்துவமாமணிமார்பன். (௪0)

மாலைமதிமண்டலத்தும்வளங்கெழுமாளிகையகத்துங்
காலைநறுமலர்தொடுத்தகண்ணியினுங்கலன்களினுஞ்
சீலமிகும்வனப்புடையசேயிழையார்திருமுகத்து
ஞாலமதிற்பிறவிடத்துநாடோறுநாடினான். (௪௧)

பன்னகமாமலர்ப்பாயற்பள்ளிகொள்வான்பண்டொருகாற்
றென்னிலங்கைமேவியதன்சிறைதீர்த்தற்காரணமா
நன்னெறியாற்சேதுவின்பானண்ணுதற்குமுரியளெனா
மின்னுமுகிறவழ்கந்தமாதனமாம்வெற்படைந்தான். (௪௨)

நண்ணியவன்குரம்பெங்குநாடியுழிதருங்காலைத்
தெண்ணிலவுநகைத்திருவுஞ்சிலதியர்கள்சிலர்சூழ
வெண்ணின்மலர்கொய்திடுவாளெதிர்வந்தாளிலம்பாட்டோர்
கண்ணெதிர்பொன்னெனக்கண்டான்காயாமென்மலர்வண்ணன். (௪௩)

மாலுமுளந்தானாகிவரும்பிரிவின்காரணத்தாற்
கோலமிஃதுடன்குறுகிற்குறுந்தொடிதானெடிதோடி
யோலமெனாவரசன்மனையுட்புகுதுமெனநினைந்தான்
போலவொருதிருவுருவம்பூசுரரிற்புரிகுற்றான். (௪௪)

முண்டகக்கண்முகிழ்ப்பிக்குமுதுநிலவின்பரப்பேய்க்குந்
தெண்டிரையபாற்சல்லிசீதரநிற்பிரியேனென்
றுண்டகருமுகிலுருப்போர்த்துற்றதுபோலொளிவீசும்
வெண்டிருநீற்றெழில்விளங்கமெய்ம்முழுதும்பொலிவித்தான். (௪௫)

கார்த்தசெழும்புயலனையகண்ணனவன்கவினுதன்மே
லேர்த்ததனிப்புண்டரமூன் றிலங்கியிடும்படிசெய்தான்
போர்த்ததிருநீற்றுருவப்புணரியினின் றூர்புள்ளின்
சேர்த்தவிருசிறைக்காலாற்சேணிலெழுந்திரைநிரைபோல். (௪௬)

நெருங்குமலர்மகள்கொங்கைநெருங்கவணைந்திடுந்தோறுங்
கருங்கனுறுந்தழும்பினிரைகரவாமற்காதலினான
மருங்கிலணிந்தொளிநீற்றைமயங்கவிடையிடைவிடுத்த
வருங்கவினபோற்கண்டிகையினலங்கலுரத்தணிந்திட்டான. (௪௭)

பாசடைப்பங்கயமனையாள்பாற்கடல்விட்டகன்றமையான்
மாசுணப்பாய்தனைச்சுருட்டிமணிமார்பினமிசைநாலத்
தேசுடைத்தோள்வரையேநதிச்செல்வதுபோற்செழுந்தொங்கல்
வீசிடத்தாழுத்தரியவெண்பட்டின் றுகில்புனைந்தான். (௪௮)

மெல்லிதழ்முண்டகக்கோயில்விளங்கிழைமென்கரமதனை
வல்லிதிற்றன்பற்றிடுங்கான்மணமகனுமாயவனீ
யல்லனெனுவகைநிறதினடையாளந்தெரிப்பான்போற்
புல்லினுயர்பூங்குசையாற்புரிந்தபவித்திரம்புனைந்தான். (௪௯)

பூவடியாலளந்தபிரான்புரையகன்றோர்புரிந்ததுமுன்
றூவடியிலுலகநடையமைந்தமையாலபிடேகஞ்
சேவடிவார்கொடியவர்பாற்செய்துயிர்கள்சிறப்பெய்தக்
காவடிசேர்கங்கையறல்காமருதோண்மிசைக்கொண்டான். (௫௦)

கரவுபயிலுருவமிதுகண்டவர்கண்களிகூரச்
சுரநதிநீபடிந்துவருந்தூமறையோதமைப்போல
வரனதுபேரெழுத்தஞ்சுமடிக்கடியாங்கெடுத்தோதி
வரமிகுசீாமழைவண்ணன்மலர்மகடன்மருங்கணைந்தான். (௫௧)

பங்கயமேல்வீற்றிருக்கும்பணிமொழியும்பார்ப்பானு
மங்கவன்றன்படிற்றொழுக்கமறியாமலயிர்ப்பின்றித்
துங்கமணிமுகுளமுலைததோழியருந்தானுமாய்க்
கொங்கவிழ்நன்மலர்கொய்துகுவிபொழிலின்புடைநின்றாள். (௫௨)

மணிநிறம்வெண்டுகளதனான்மறைத்தணைந்தமறையவனும்
பணியிலன்போற்பசும்பொழிலினபயில்வளங்கண்டிடுவான்போ
லணுகியொருகாலவளையகன்றொருகாற்பன்முறையுந்
துணிபுநிலைபிறிதாகிச்சுழல்சுரும்பினுழிதருவான். (௫௩)

தளர்வளையார்மருங்குல்புரைதன்மைபொறுஇளந்தளிரின்
வளர்வளையாமலர்கொய்யும்வனசமகடனையங்கண்
விளர்வளையார்முன்கையினைவேட்கையிலார்போன்மெல்லக்
கிளர்வளையார்கரமறையோன்கிட்டியுடன்பிடித்தீர்த்தான். (௫௪)

பற்றியமால்கரத்தொளித்தபணிலமுகமழுந்தலினோ
மற்றவனைப்பிறனாகமதித்தமனப்பயத்தாலோ
பொற்றொடிமென்கரந்திருகிப்புண்ணியமாநிதிமகடா
ளுற்றதுணைப்பாங்கியரோடோலமெனக்கூப்பிட்டாள். (௫௫)

புவியரசாளிந்துகுலப்புண்ணியமாநிதியங்கட்
குவிபொழில்வாயெழுமாதர்கூவுகுரல்கேட்டதனைக்
கவிகைமுழுமதிமாரன்காகளமென்றெண்ணிமுதற்
செவிபுகுதுமெழுத்திசையாற்சேயிழையாரெனத்தெரிந்தான். (௫௬)

தெரிந்தவுடன்விரைந்தேகிச்சேனையொடும்பன்முறைகூ
யரிந்தகுரன்மகடன்னையணைத்தணங்கேயாருன்னை
விரிந்தபொழிலிடைமேவிமென்கரம்வல்லிதிற்பிடித்தார்
பரிந்தழவேண்டியதென்கொல்பகரென்றான்பாரவேந்தன். (௫௭)

சரம்பிடித்தசிலைவேந்தன்சாற்றெனலுந்தாணிரங்கி
யரமபிடித்தவயில்பணிப்பவறைந்திடுவாளருமறைநூல்
வரம்பிடித்தநிலையினனாய்வன்மையினால்வந்தெனது
கரம்பிடிததகள்வனிவன்கண்டுமுனைக்கலங்கலிலான. (௫௮)

மாயநிலைபயில்வேடமறையவர்போற்கொண்டுற்றான்
மேயதருநிழலதன்கண்வெளிநின்றான்விளைந்தபடி
யாயெனவாருயிரளிக்குமையாமற்றிஃதென்றா
ளேயெனமன்னவன்சீறியாவனிவனென்னாமல். (௫௯)

பொருக்கெனவப்பூசுரனும்புயல்வண்ணன்றனைப்பற்றி
யருக்கமுடியிராமேசனாலயத்துட்கொடுபோகி
நெருக்கியிருகரங்களையுநெடுங்கயிற்றாற்பிணித்தலர்மேற்
றிருக்கொழுநன்வருந்தமன்னன்றெண்டமிகச்செய்வித்தான். (௬௦)

அல்லிமலர்ப்பங்கயத்தாளவையிரண்டுமசையாமல்
வல்லியிடுவித்தயலோர்மண்டபத்தின்பாலிருத்திக்
கல்விகலுந்தடநதோளான்கடிமனையிற்சென்றுமகட்
புல்லிமனந்தேற்றியந்தப்புரத்தினிடையமர்வித்தான். (௬௧)

கருமமிதுநிகழ்ந்தவழிக்கருங்கங்குற்பொழுதணைய
மருமலர்த்தண்சேக்கையின்மேன்மன்னவன்கண்படைகொள்வா
னருமறையோன்றன்னிலையுமரிவையவடன்னிலையு
மொருமைநிகழ்கனவின்கணுள்ளபடியுணர்ந்திடுவான். (௬௨)

வேறு.

ஆயிரம்விளகிற்றோன்றுமவிர்மணிப்படங்கொள்பாந்தண்
மாயிரும்பாயனாப்பண்மகரகுண்டலங்கண்மின்னத
தூயமாமணிக்கிரீடச்சுடரொளிபரப்பிநேமிச்
சேயமால்வரையினப்பாற்செறிந்தபேரிருள்கால்சீப்ப. (௬௩)

இளநகைநிலவுதன்சீரேத்துநாசெவவாயாம்பற்
றளமுகையவிழ்ப்பமார்பிற்றரளமாலிகைகடாழ
வுளகு * சான்மகதிச்செங்கையோங்குநாரதனைமுன்னாங்
களவிலாமுனிவர்போற்றக்கண்மலர்க்கருணைபொங்க. (௬௪)

* உளகு—யாழினொருறுப்பு.

முன்னுசிர்படைத்தசேனைமுதலியார்முதலாராகித்
துன்னுகிங்கரர்கடத்தந்தொழின்முறைமரபினுற்றப்
பன்னுமைம்படைவயங்கப்பண்ணவர்பணிந்துபோற்ற
மன்னவனவனைக்கண்டான்வைகுண்டநாதனாக. (௬௫)

ஆடகவனசமாலையலரொளியளகக்காட்டி
னீடிருள்விழுங்கவங்கணெடுங்குழற்கரியசோதி
சூடியகனக்கஞ்சத்தொடையலின்வண்ணமுண்ணக்
கூடிளங்கொங்கைமேருக்கொடுமுடிசிறுகவீங்க. (௬௬)

அணிவடமுத்தமாலையம்மமேலமைந்தகாட்சி
திணிவடகிரிமேற்றூங்குஞ்சிறியவெள்ளருவியேய்ப்பப்
பணிவடக்காஞ்சியல்குற்பரித்தபொன்னுடையோடு
தணிவடதளிர்நேருந்தித்தனிச்சுழிநனிதயங்க. (௬௭)

இரவணசங்கள்போலவினைதரும்படிபிடித்த
கரவணசங்கண்மேவுங்கால்வணசங்கள்பூணு
முரவணசங்கொளுமத்தொளிமணியாழித்தோன்றும்
வரவணசங்களாங்கண்மலர்நிழல்வணசமான. (௬௮)

மாமிகுமதாணிதன்னைமற்றையவணிகளாலே
யேமுறவழகுசெய்தாலென்னமெல்லிணரவிழ்த்த
தூமணக்கொம்பர்தன்னைத்தொங்கலாற்சூழ்ந்ததென்னக்
காமர்பொன்மேனிமீதிற்கலன்பலகவின்றிலங்க. (௬௯)

தெளிமதிநாப்பட்செவவாய்சேர்ந்தமாயோகந்தன்னைத்
தளிபயில்கமலத்தையறணந்திடாளென்னுந்தன்மை
யளிபயில்வதனநாசியணிதருபதுமராக
வொளிமணிகணிதநூலினுறுபொருட்குண்மைகூற. (௭0)

பண்டுதம்வயிரக்கோடுபொழிமார்பகத்தாற்செற்ற
கண்டகன்றன்னைவென்றோன்காதலியென்னுமன்பா
லண்டர்காட்டமுதம்பெய்தவாடகத்தசும்பர்கையா
லெண்டிசைக்கரடப்பாய்மாவெடுத்தபிடேகஞ்செய்ய. (௭௧)

பொன்முகச்சசியினின்றும்புறப்படுமேவன்மாற்ற
நன்முகச்சசிகேட்டுள்ளநயப்பொடுமரபினுற்ற
மென்மணிக்கவானரம்பைமேயனுண்டடுத்ததூணி
மன்மலர்கமலப்பொற்றாள்வருடிவானரம்பைவாழ்த்த. (௭௨)

இனையபேரெழிலின்மல்கியாவருமிறைஞ்சியேத்த
வனசமாளிகைசேர்செல்வவண்ணமாமகளைக்கண்டான்
கனவினிற்கண்டவண்ணங்கண்படைநீங்கிக்கங்கு
னனவினுங்கண்டானந்தநங்கைசேரிடத்துநண்ணி. (௭௩)

விடியல்வந்துற்றதாலேவேரியங்கமலக்கோயிற்
கொடியையுமுடன்கொண்டிந்துகுலப்பிரான்வேதியன்பாற்
கடிதுசென்றவனையுந்தான்கனவினிற்கண்டவாகண்
டடிமலர்வணங்கியங்கையஞ்சலித்தேத்தலுற்றான். (௭௪)

கம்பொடுதண்டநேமிகார்முகங்கதிர்வாளேந்து
மம்புயக்கரத்தினானேயரவிந்தநயனத்தானே
யும்பரோடுலகமுண்டவொருவயிற்றுந்திபூத்த
பைம்பதுமத்தின்ஞாலம்படைப்பவன்றனைப்படைத்தாய். (எரு)

விண்டுவென்பொருண்மையாலேவேறிலாதுலகமெங்குங்
கொண்டுடனின்றகோவேகோவலர்குலத்தின்பேறே
மண்டிகல்புரியுந்திண்டோண்மதுவொடுகையிடவப்போர்
மிண்டுடைவீரராவிவிழுங்கியவென்றியானே. (எசு)

திசைமுகன்மரபிற்றோன்றித்தீவினைக்காவல்பூண்ட
தசமுகன்றலைதடிந்தசராசனத்தடக்கையானே
வசைமுகக்கனகனீன்றமகனுயிர்த்தம்பமாகி
யிசைமுகக்கனகத்தம்பத்தெழுநரசிங்கரூபா. (எஎ)

அலர்கதிர்க்கவுத்துவப்பேரணிமணியெறிக்குஞ்சோதி
மலர்வனமாலைமார்பின்வாழ்திருமறுவினானே
கலர்மனங்கரந்துகற்றோர்கருத்திடைக்கரப்பின்றாகிப்
பலர்புகழ்பரசியேத்தும்பழமறைப்பொருண்மையானே. (எஅ)

இந்திரைக்கினியகேள்வாவிருநிலமடந்தைகொண்கா
மைந்தனுக்கவிகைத்திங்கண்மகரகேதனனைமுன்னாந்
தந்தகேசவனேதாமோதராகராத்தடிந்துதந்தி
முந்துவந்தருளுமாலேமுராரியேமுகுந்தாமாயா. (எகூ)

உடற்சிறைநீக்கியைவர்க்குதவிசெய்திடநடந்த
மடற்சிறைவண்டார்தண்டாமரைப்பதம்வழங்குமுன்னை
யடற்சிறைதன்னில்வைத்தேனபராதமிதற்கென்செய்கேன்
கடற்சிறைத்தெண்ணீர்காயாகருமுகிலன்னகண்ணா. (அ0)

செய்ததானவர்தங்குற்றந்திருவுளந்தனிலெண்ணாம
லுய்திறமருளிநின்றனுருவமுமுதவுமாற்றால்
வெய்தெனப்பற்றிநின்னைவிலங்கிட்டவெய்யனேற்குங்
கைதரவல்லையென்றேகருத்தினுட்கருதுகின்றேன். (அக)

எனப்பலவறிந்தவண்ணமெடுத்திசையேத்தியேந்தன்
னனைப்படுமன்பினோடுமாயனைவணங்கிப்பின்ன
ரனப்பெடைகிள்ளைகோங்கமனநடையஞ்சொற்கொங்கைப்
புனப்பசுந்தோகைச்சாயற்பொன்னினைப்புகழ்தலுற்றான். (அஉ)

அகலிடமுழுதுமீன்றாயரியுரத்தமர்ந்தாயார்க்கும்
புகலிடமானாய்காவற்பொறியெனப்புரிவாயன்ப
ரிகலிடராழியப்பாசமிரித்தியானெனதென்கொள்கை
ழிகலிடாதமலஞானவீடுதந்தருளுமின்னே. (அ௩)

பலமறைவித்தையாகிப்பல்லுயிர்ப்பகுதிக்கெல்லாம்
பொலிவுயர்செல்வங்கல்விபுண்ணியம்புனிதவாழ்க்கை
நலமலிவேட்கைசித்திநன்மதிநவின்றவன்றி
நிலவுசீரெவைக்குமாங்கோர்நிமித்தமாய்நின்றநங்காய். (அச)

வேள்வியாய்வேள்விப்பேறுவிதிப்பவளாகிவேதக்
கேள்வியாய்க்கேள்வித்தன்னாற்கிட்டுதற்கரியளாகி
நாள்விரிநறுமென்றோட்டெளினபீடிகைமேனாளு
மாள்விழைந்தடித்தொண்டாற்றுமரம்பையர்க்கருளுமாதே. (௮௫)

எண்ணிரிசத்திபேதமியாவுமாயெவைக்குமேலாய்க்
கண்ணானந்தமாகிக்கவுரியோர்கருணைநாட்ட
வண்ணமாயளப்பில்சோதிவடிவமாய்வரம்பிலாத
தண்ணளியுருவமாகிச்சராசரம்புரக்குந்தாயே. (௮௬)

ஊக்கமேயுடையபேறேயுணர்வினாலுணர்வார்சிந்தை
நீக்கமேநிலையொன்றாகிநின்றிடுந்திருவேதூல
சூக்கமேபரையேதொள்ளைத்துவக்குடற்பற்றுநீத்தா
ராக்கமேயாக்கியெல்லாமளித்தழித்தருளுவாளே. (௮௭)

உன்மகவாகுமெல்லாவுயிர்களுமவற்றிலொன்றா
மென்மகவானேனென்றாயிதுபடிறானதன்றே
பொன்மகளாகுநாமப்பூவையேமுன்போலென்னை
நின்மகவாகப்போற்றிநீயருளென்றுதாழ்ந்தான். (௮௮)

என்றிவரிருவர்சேர்த்தியிசைத்தபோதிறைவன்பாங்க
ரன்றவர்கருணைகூர்ந்தாராயிடையரசன்றன்னை
மன்றலங்கமலக்கண்ணான்மாயவன்மறித்துநோக்கி
யொன்றிதுகேண்மியாவென்றுவகையாலுரைக்கலுற்றான். (௮௯)

இந்துவின்குலத்துவேந்தேயெம்மைநீயிறுகக்கட்டி
மைந்துடைவல்லிபூட்டும்வழுவினைமனத்துட்கொள்ளே
லந்தமிலன்பர்யாவரவர்வயத்தினனென்றெம்மைச்
சிந்தைகொண்டிடுமொறிந்தச்செயல்விளையாட்டிற்செய்தேம். (௯௦)

பிடித்ததுன்னையமெய்யிற்பிணித்ததுபிரசதொங்க
லடித்ததுசாத்தும்புட்பவஞ்சலியடியிலிட்ட
கடித்தளைபாதசாலங்கடுஞ்சிறையிருத்துமெல்லை
வடித்தவேலரசேயுன்றன்மனப்பெருங்கோயின்மாதோ. (௯௧)

எற்றினாலென்னின்முன்னமெச்சமொன்றிழைத்தாயெம்மேற்
வுற்றதோர்பிரிவுகாட்டியுன்னுழைவிடுத்தேநீயும்
பெற்றதோர்மகவிற்போற்றிப்பெருகுநண்பாலளித்தாய். (௯௨)

அவடனையளித்தலாலேயகமிகமகிழ்ந்தேநின்பா
லிவடனக்கினியர்தாமேயெமக்குமிங்கினியரென்றுந்
துவடனிமருங்குற்கஞ்சத்தோகைபாற்சூழ்ந்தகுற்றங்
குவடுறழ்தோளாயென்கட்குயிற்றியகுற்றங்கண்டாய். (௯௩)

இருபொருளல்லயாமுமிந்திரைதானும்பூசை
திருவினுக்கிழைத்தால்வேறுசெய்திடவேண்டாமெம்பா
லருகுநீஇயாரும்வன்மையாற்றிடாதளிப்பேனென்று
வொருமொழியுலகமீன்றாளோடுமுன்னுரைத்தாய்மன்னா. (௯௪)

அறைமொழிவழாமற்போற்றுமரசநின்னிலைமைகாண்பா
னிறைவனைக்கரங்கள்பற்றியீர்த்தனமிவனையெம்மைச்
சிறையிடுவித்துக்கஞ்சத்தேவியையளித்தலாலே
யுறைபெருமகிழ்ச்சியுற்றேமொன்றுநீயஞ்சவேண்டாம். (௯௫)

முறுக்கவிழ்கமலக்கோயின்முதல்விநின்புதல்விதானே
பொறுக்குதல்புரிந்தோமெல்லாம்புண்ணியநிதியேயென்றான்
மறுக்கெழுதிருவாழ்மார்பன்மன்னனைவதனநாடிக்
கறுக்குமாலோதிமுண்டகாசனைகழறலுற்றாள். (௯௬)

ஆயவடுணைவியாகவரசநீயத்தனாகிச்
சேயெனவென்னைக்காத்தசெய்கையாலுவந்தேன்செங்கண்
மாயனும்யானுநின்பால்வந்தனமெம்பால்வைதத
நேயநீயுடைமையாகிநிகழ்த்தியமகததினாலே. (௯௭)

னபவாழ்வும்நைவநின்பாலுண்டாக
முன்னியமுடிகமேலாமுததிபுமுறைவழாத
நன்னெறிநடையுமெம்பாலனலங்கெழுமன்புநாளு
மன்னுகவென்றுகூறிமாயவன்மார்பிலுற்றாள். (௯௮)

அல்லியங்கமலக்கோயிலாயிழையடைந்தபின்னர்ச்
சொல்லுவான்மாயன்மன்னாதுணைப்பதத்தெமைநீயிட்ட
வல்லியினோடுஞ்சேதுமாதவனென்னும்பேர்கொண்
டெல்லொளிமதாணிமார்பவீண்டியாமிருத்துமென்றும். (௯௯)

இருப்பதுபுரிதுநாமுன்பிருத்தியசேதுக்காக்கும்
விருப்பதினாலும்வேந்தேவேதனும்யாது* பூத
நெருப்பெனவடராதிங்கேநிலைதநிடுகின்றானீங்கார்
திருப்பயின்மகவான்முன்னாஞ்செழுந்திசையிறைவர்தாமும். (௧௦௦)

ஈசனுமிராமநாதனென்றுலகியம்புபேரால்
வாசமதுற்றானிங்கேவையகம்வாழ்வதாக
வாசையோடதனானுமாவிகட்கிடுக்கண்டீர்க்கு
நேசமோடிருத்தல்செய்கேநிலம்புகழ்நிருபரேறே (௧௦௧)

நீவிலங்கிடமுன்பூண்டுநின்றருள்சுரக்குநந்தந்
தேவிலங்குருவந்தன்னைச்சேவைசெய்திடுவோராவாழு
மாவிலந்திருவினீடுமெற்றவர்மனமெனும்பே
ராவிலந்தெளியுமீற்றிலாவர்நம்மேனியன்னோ. (௧௦௨)

என்னொடுங்கமலையோடும்மிருநிலங்காவல்பூண்ட
வுன்னொடுமெண்ணுமூவருயர்கதையுவந்துசொல்வா
பொன்னொடும்புகழினோடும்புதல்வர்களோடுங்காதன்
மின்னொடுமுலகில்வாழ்வார்மிடியொடுமெலிதலில்லார். (௧௦௩)

வம்பவிழலங்கனிம்பமார்பநீமகிழ்ந்துசொற்ற
வெம்பெருஞ்சீர்த்திகேட்பாரியம்புவாரெழுதுவார்க
ளும்பர்ணிவகுண்டநீங்காதுறைவரென்றுரைத்துமாய
னம்புயமடந்தையோடுமாயிடையிருந்தானம்மா. (௧௦௪)

---

* யாது—இராக்கதன்.

மண்ணகமடக்தைகேள்வன்வாரிசமங்கைகொண்கன்
புண்ணியத்தாள்கள்போற்றிப்பூசனைபுரிந்துமீள
வண்ணலாமிராமநாதனடியிணைவணங்கிவாழ்த்தி
யெண்ணருமிறும்பூதோடுமெய்தினனிருக்கைதன்னில். (க0ரு)

அந்நாட்டொடங்கிமன்னனந்தமதடையுங்காறுங்
கந்தமாதனத்தின்வைகிக்கடிமதின்மதுரைகாக்க
மைந்தனைப்பணித்துவீடுமருவினன்மாயும்போதில்
விந்தியாவலியுமாவிமேவினள்வேந்தனோடே. (க0சு)

சேதுமாதவன்றன்சேவைசெய்பவர்திங்கள்வேணி
யாதிவாழ்கயிலைமேவியகன்றிடாரவனைப்போற்றார்க்
கேதமிலிராமநாதனிருந்திறற்கூற்றஞ்சீறும்
பாதபங்கேருகங்கள்பணிந்திடும்பயனுமில்லை. (க0எ)

அலைபுனற்கங்கைத்தெண்ணீராடியவேண்டிச்செல்வார்
மலையுறழ்தடந்தோட்சேதுமாதவன்பாதநண்ணிக்
கலைகொள்சங்கற்பங்கூறிக்காதலிற்படருவாரேற்
புலமைசான்முனிவீரந்தப்போக்குமேல்வரத்தையாக்கும். (க0அ)

வேறு.

வேதமாகமமாதியவாதிநூன் மேவநாடியமேதகுமாதவீ
ரீதுகாதலினொலெவர்கூறுவார் யாவரேநுகர்வாரிருகேள்வியா
னீதியாலவர்நீள்கடன்மேகநேர் நீலமாலமர்நீணகர்மேவுவார்
சேதுமாதவனார்கதைநீரெலாந் தேருமாறினிதோதினய்யாமரோ. (க0கூ)

சேதுமாதவச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ங,உ0ரு.

சேதுயாத்திரைச்சருக்கம்.

ஆதிமாதவச்சூதனருமறை, மூதுணர்ந்தமுனிவரைநோக்கியே
பாதகங்களியாவையும்பாற்றிடுஞ், சேதுயாத்திரைசெப்புதன்மேயினன். (க)

சேதுயாத்திரைசெய்பவர்சீதள, பூதநீரிற்படிந்துபுரிகடன்
யாதுமாற்றியெறிகடற்சேதுவின், மாதுபாகனிராமன்மகிழவே. (உ)

ஏதிலாதங்கியைந்திடுமாத்திரம், வேதநூல்கள்விதிமுறையோதிய
தீதிலாதசிறப்புடையந்தணர்க், கோதனம்பரிவோடுமுதவியே. (ங)

பொங்குசோதிப்புனிதவெண்ணீறணிந், தங்கம்யாவுமலங்கெழிற்கண்டிகைத்
துங்கமாலிகைசூடிப்பவித்திரஞ், செங்கைமாமலரங்குலிசேர்த்தியே. (ச)

படியில்சேதுயாத்திரைபண்ணவே, கடவமென்றுசங்கற்பங்கழறியே
மடியிலாதுமனைநின்றுநீங்கியாங், கொடிவிலஞ்செழுத்தெட்டெழுத்தோதியே. ()

பத்தியோடுமேவுனம்படைத்துமா, சுத்தமேவித்துறந்துகடுஞ்சினஞ்
சித்தமோடிந்திரியமடக்கியே, நித்தமாற்றுகியமங்களாற்றியே. (௬)

கோவியைந்தகுடைசெருப்போடுதாம்பூலமெண்ணெய்பொய்மாதர்புணர்ப்புவிட்
டேனுநன்னெறிப்பாலினியைந்துமால், சானுந்திநெறிதன்னைத்தணந்தரோ. (௭)

உப்பினுண்டியொருபொழுதுண்டுவீண், செப்பலின்றிச்செழுங்கடற்சேதுவின்
றப்பினமாக்கதைசாற்றியரியரா, னொப்பில்பூசையுஞற்றியுவப்பினுல். (௮)

ஒருவர்பாலினுமொன்றுங்கவர்ந்திடா, தரியவேள்விமுதலனவாற்றியே
கருதுநண்பகற்காணுமதிதியர்க், குரியவன்புடனன்னமுதவியே. (௯)

அறிவுசான்றதுறவர்க்கறுசுவை, நறியவுண்டிவழங்கிநவின்றவிம்
முறைவழாதுமுழங்குகடற்றிரை, யெறியுஞ்சேதுவின்மூலததிலெய்தியே. (௧௦)

வேறு.

உயர்ந்திடுபிப்பலாதியுதித்துளாயுலகுக்கெல்லாம்
பயம்புரிந்தருள்வாயென்றுப்பகர்ந்திருபாணியேந்தி
யியைந்திடுமோரொன்றுதவேலேழாதவிரும்பாடாண
நயந்தருமுண்டியாகநவிலருமன்பாலீந்து. (௧௧)

வளர்விசுவாசியாகிமாகிருதாசியாகி
மிளிர்தருவிசுவயோனிவிசாம்பதியாகிவைகு
மொளிமணியாழிப்புத்தேளுறைகுதியிந்தவுப்பின்
றளிகொணீர்க்கடற்கணென்றுச்சந்நிதானம்புரிந்து. (௧௨)

அரியதோர்விண்டுவாகியபாம்பதியாகிமிக்க
விரணியசிருங்கனுகியெழில்விசுவகுத்தனுகித்
திருநதிபதியாய்மேவுந்தெண்கடற்றேவேயென்று
மரபொடுப்புகன்றேயன்பால்வருணனைவணக்கஞ்செய்து. (௧௩)

கதிர்விடுமணிகட்கெல்லாங்காரணமாகிக்காம
ரெதிரறுமணிகட்கெல்லாமிடனதாயிலங்குந்தெய்வப்
புதுமணிமயமாய்மன்னும்பொருதிரைப்புனிதத்தெண்ணீ
ருதியேயென்றுநேயத்துரைததருக்கியங்கொடுத்து. (௧௪)

அளவிலாவுலகுக்கெல்லாமாதாரமாகிநேமி
வளையொடுதண்டமேந்திவைகியதேவேயிந்தத்
தெளிதருபுனலின்மூழ்கத்திருவருள்செய்கியென்று
வுளமகிழுவகையோடுமுரைத்தனுமதிபெற்றுங்கண். (௧௫)

குடதிசைமயிந்தன்மற்றக்குணதிசையிரவிமைந்தன்
வடதிசைத்துவிதன்றென்பால்வளங்கெழுநளனைநாப்ப
ணிடர்தவிரிராமன்சீதையிலக்குமனனுமன்வென்றி
மிடல்கெழுவாலிதோன்றல்வீடணன்றனைநினைந்து. (௧௬)

நாரதன்பிரகலாதனவைதவிரம்பரீடன்
சீர்மறைவியாதனன்றுஞ்சேயையுநினைந்துஞாலத்
தேர்திகழ்நதிகட்கெல்லாமிடனதாமுததித்தேவே
யர்தருபவங்கணீக்கியருளென்றுவேண்டிப்பின்னர். (௧௭)

இரணியசிருங்கமாதியிசைமனுவிசைத்துவெள்ளைப்
புரிவளையேந்திறனைப்புதுகிலாமவுலியானைப்
பரவியாங்கிதயக்கோயிற்பாவித்துப்பகர்வேதாதி
யரியமந்திரத்திறலேயாழ்புனன்முன்னராடி. (௧௮)

இம்முறைபின்னுமூழ்கியெழுந்துசூரியனைநோக்கிச்
செம்மனின்கரங்கடண்டச்சிறந்தொளிர்தீர்த்தமெல்லாம்
பொய்ம்மைதீரருளாலீஙகுப்புனிதநீதருதியென்று
மெய்ம்மைசாலன்பிற்போற்றிமீளவுமுன்போன்மூழ்கி. (௧௯)

குடதிசைநெறியானண்ணிற்குரைகடலாடியங்கட்
படர்தருதருப்பைப்பாயற்பண்ணவற்பரவல்வேண்டும்
வடதிசைமருவுந்தேவிமாபுரமார்க்கநண்ணி
னிடர்கெடநவகற்றீர்த்தத்திப்பரிசிழைத்தல்வேண்டும். (௨௦)

இசைதருமிராமன்சீதையிலக்குமன்பிப்பலாதி
வசையில்கண்ணுவன்மயிந்தன்மாகிருதாந்தனெட்டுத்
திசைபுகழ்சரபனவேகதெரிசியேகாலின்செம்ம
லசைவின்மன்னியுவேகாளராத்திரியகர்க்கணேசன். (௨௧)

முதுகவியிடபனோடுமொழியும்வித்தியையேவானக்
கதிர்மகன்றுவிதனின்னோர்க்கருதியர்க்கியமுன்றந்து
துதிதருமுனிவர்தேவர்தோமறுபிதிர்களின்னோர்க்
கிதமுறுதர்ப்பணங்களீந்துபின்கரையிலேறி. (௨௨)

நனைதுகில்களைந்துலர்ந்தநற்றுகில்புனைந்தேயாச
மனமதுபுரிந்துதெய்வமாமறைவழியேசாலப்
புனிதமாஞ்சிராத்தமாதிபுரிந்துதொல்லறிவுசான்ற
பனவருக்கிரணியங்கோப்படிமுதற்றானம்பண்ணி. (௨௩)

பூதலம்புகழுந்தெய்வப்புகழ்தனுக்கோடிதன்னிற்
சேதுமூலதிற்செய்தசெயன்முறைசெய்துமூழ்க
காதலினடந்துபின்னர்க்காமர்சக்கரதீர்த்தததி
லேதமில்விதியினோடுமினிதுவந்தாடியேறி. (௨௪)

சேதுநாயகனுமன்னுந்திகழ்தருதருப்பைப்பள்ளி
மாதவற்போற்றிமற்றவயங்குசக்கரதீர்த்தத்திற்
காதலிற்குடைந்துபின்னர்க்கவித்தடம்படிந்துசீதை
யேதமில்வாவிமூழ்கியிருணமோசனத்திலாடி. (௨௫)

படிபுகழிலக்குமன்பேர்ப்பைந்தடமருங்கிலெய்தி
முடிமயிர்களைந்தபின்னர்மொழிந்தவத்தடத்தின்மூழ்கி
யொடிவில்சீரிராமதீர்த்தத்துறைதருவிதியினாடிப்
புடவிபொன்முதலதானம்பூசுரர்தமக்களித்து. (௨௬)

பங்கயவாசம்வீசும்பாவநாசத்தின்மூழ்கிக்
கங்கையினாழ்ந்துதெய்வக்காமருகயைநீர்தோய்ந்து
பொங்குசீர்யமுனையாடிப்புரைதவிரந்தணாளர்
தங்களுக்கியைந்தவாறுதானங்களீந்துமன்னோ. (௨௭)

வேறு.

சாவித்திரியேசரசுவதிதயங்குகாயத்திரித்தடங்கண்
மேவிக்குடைந்தாங்கனுமகுண்டவியனீராடிவிரைநாறும்
பூவிற்பொலிந்தபிரமகுண்டம்புகுந்துபடிந்துபுகழ்ந்துகவை
நாவிற்றிகழுநஞ்சுமிழ்வாய்நாகதீர்த்தக்கரைநண்ணி. (௨௯)

மன்னுமனந்தாதியரட்டமாநாகத்தால்வகுத்தவிந்நீர்
தன்னிற்கங்கைமுதனீர்கடங்கள்பவஙீங்கிடத்தங்கும்
பன்னுபவந்தீர்த்துயர்முத்திபரிவாலளிக்குமதிற்படிந்து
பின்னர்ப்பொதியத்தமிழ்முனிவன்பிறங்குபெருநீர்த்தடமூழ்கி. (௩௦)

முடிவிலாதபாதகங்கண்முழுதுங்கணத்தின்முடித்தருடக்
கடவுணீரில்விதிமுறையேகாதலோம்பபடிந்தாடி
யொடிவிலாதசிராத்தமுதலுதவிமறையின்முடிபுணர்ந்த
புடவியிமையோர்க்கிரணியங்கோப்பூமிமுதலபலகொடுத்து. (௩௦)

முன்னருரைத்தநேமிதடமுதலதீர்த்தமிவையனைத்து
மின்னமுறையேயாதரமக்கிவைபடியேதானுதல்
பன்னுமரபிற்படிந்துவஞ்சம்படையாதியன்றபடிபடிகோச்
சொன்னமுதலதானங்கயேமறையோர்க்குதவியபின். (௩௧)

உறைநீராழிசூழிலங்கையுரவோற்கொன்றபழியொழிய
வறைநீரகழிக்கொடிப்புரிசையயோத்திவேந்தனருச்சித்த
பிறவாயாக்கைப்பெரியோனைப்பிறக்குந்தேவர்பெருமானை
யெறிநீர்விரிந்தசடைமவுலியிராமநாதன்றனையிறைஞ்சி. (௩௨)

வையம்பரவும்புகழ்ச்சேதுமாதவனையுமகிழ்ந்திறைஞ்சித்
துய்யவிராமனிலக்குமனைத்தொழுதுசீதைதனைப்போற்றிச்
செய்யபுனல்களுளபிறவுஞ்சிறப்பினுடித்திரும்பவுஞ்சென்
றையணிராமநாதனடியன்பால்வணங்கியதன்பின்னர். (௩௩)

தேசுபயிலுந்தனுக்கோடிதீர்த்தமதனைச்சென்றடைந்து
நேசம்புரிந்துமுறைபிறழாதியமத்துடனேபடிந்தாடி
யேசில்சிராத்தமுதலவிழைத்தியன்றபடிவஞ்சகமின்றி
மாசிலாததானங்கண்மறைவேதியர்கடமக்கீந்து. (௩௪)

கோடிதீர்த்தந்தனிலாடிக்கோடுறுதங்கியன்றபடி
பீடுசான்றபாற்சுரபிபிறங்குக்கனகந்திலந்தூய
வாடைபூமிமுதலாகவறைந்தபலவாந்தானங்கள்
பாடல்சான்றசுருதிமறைப்பனவர்தமக்குப்பரிந்தளித்து. (௩௫)

வேறு.

அன்னதன்பின்னர்முன்னரயோத்தியர்பெருமான்பூசித்
துன்னருமன்பாற்போற்றுமுமாபதியிராமநாதன்
சன்னிதிதன்னிலெய்தித்தாழ்ந்தினிதெழுந்துமுக்கான்
மன்னுறுசெம்பொற்கோயில்வலங்கொடுவேந்துநின்றே. (௩௬)

முத்தனேபோற்றிமூவாமுதல்வனேபோற்றிபோற்றி
நித்தனேபோற்றிபோற்றிநிமலனேபோற்றிபோற்றி
யத்தனேபோற்றியன்பர்க்கன்பனேபோற்றிபோற்றி
சுத்தனேபோற்றிவானோர்துணைவனேபோற்றிபோற்றி. (௩௭)

ஆதியேபோற்றியாராவமுதமேபோற்றிமங்கை
பாதியேபோற்றியின்பப்பரவையேபோற்றிமேலாஞ்
சோதியேபோற்றிதெய்வச்சுருதியுந்தொடரொணுத
நீதியேபோற்றிகற்ருேர்நிதியமேபோற்றிபோற்றி. (௩அ)

கவளமாகரியுரித்தகடவுளேபோற்றிமுக்கட்
பவளமாமலேயேபோற்றிபங்கயன்முகுந்தன்றேடுந்
தவளமாநீறுபூத்ததழற்பெரும்பிழம்பேபோற்றி
துவளமேருவைவளைத்ததோளனேபோற்றிபோற்றி. (௩௯)

ஏனத்தினெயிறுமோட்டியாமையினேடும்புந்தூணின்
ருனத்தினுதித்தசிங்கத்தலேயுடன்றரித்தாய்போற்றி
மோனத்தினீங்காருள்ளமுண்டகமலர்நிறைந்த
ஞானத்தண்டேனேபோற்றிநான்மறைப்பொருளேபோற்றி. (௪0)

எண்ணலார்புரங்கண்மூன்றுமேழுநாக்கடவுளுண்ண
மண்ணெலாமுண்டுமிழ்ந்துமறிதிரைப்பாலினவேலேக்
கண்ணிலேகண்படுக்குங்கருநெடுங்கணைவிடுத்த
வண்ணலேபோற்றிபோற்றியநாதியேபோற்றிபோற்றி. (௪௧)

பாழிவாய்மணிகொள்பாந்தட்பாயனீத்தயோத்திவந்த
வாழிமாவிராமன்றன்பாலாழிநீரகழிலங்கை
வாழிராவணவரக்கன்வலிகெழுபிரமகத்திக்
காழிராதகற்றியாண்டகருணைமாகடலேபோற்றி. (௪௨)

அண்டனேபோற்றியண்டரமுதமுண்டிடவிருண்ட
கண்டனேபோற்றிசெந்தீக்கையனேபோற்றிதிங்கட்
டுண்டனேபோற்றிகொன்றைத்தொடையனேபோற்றிகோபச்
சண்டனேர்விழவுதைத்தசரணனேபோற்றிபோற்றி. (௪௩)

சூலனேபோற்றிபோற்றிசுராதிபர்மகுடந்தோயுங்
காலனேபோற்றிநேமிக்காளமாமேகமேவும்
பாலனேபோற்றிபோற்றிபண்டைநான்மறைநூலோது
மாலனேபோற்றிபோற்றியம்பலத்தமுதேபோற்றி. (௪௪)

நேசனேபோற்றிபோற்றிநிமலனேபோற்றிசேது
வாசனேபோற்றிபோற்றிவள்ளலேபோற்றிபோற்றி
தேசனேபோற்றிபோற்றிசீதைகோன்பூசித்தேத்து
மீசனேபோற்றிபோற்றியிராமநாயகனேபோற்றி. (௪௫)

கன்றுழைபரசுதாங்குங்கரசரோருகனேபோற்றி
மின்றிகழ்சடையிற்கங்கைமிலேந்தநாயகனேபோற்றி
தென்றிசைக்கணியாந்தேவைத்தேவாதிதேவேபோற்றி
யென்றுபல்புகழ்நாமங்களினிதெடுத்திசைத்துவாழ்த்தி. (௪௬)

எந்தைபிரானேயெமையாளுமிராமநாதன்றனைப்புகழ்ந்தாங்
கந்தண்மலர்ச்சேவடிவணங்கியனையோன்பூசைதனக்கான
செந்தண்மலர்சந்தனமுதலசிறப்பினளித்துத்திகழுமர
விந்தன்முதலோர்தொழும்புனிதவிடையோனவன்பால்விடைகொண்டு. (௪எ)

பொன்னந்திகிரிப்படையேந்தும்புரைதீர்சேதுமாதவனை
முன்னரிறைஞ்சிப்புகழ்நாமமொழிந்துபோற்றிமற்றவன்றன்
மன்னும்பூசைக்குபகரணம்வழங்கியவன்பால்விடைகொடுமுன்
சொன்னநியமத்துடன்றனதுதொல்லைப்பதியின்பாலடைந்து. (௪௮)

அந்தணாளர்க்கறுசுவையோடன்பாலடிசிலளித்துவகை
வந்ததானமளித்திடுதென்மரபாம்புனிதமாதவத்தீ
ரிந்தவாறுபுரிந்தோர்களிராமநாதன்றிருவருளான்
முந்துசூழ்ந்தபவமனைத்துமுடிப்பார்நிரயமூழ்காரால். (௪௯)

கொடியமிடியாமெரியழல்வாய்க்கோடைவெயிலாலுடல்வெதும்பார்
கடியதுயர்நோய்பிணிமேவார்கல்விகனகஞ்சேய்முதலா
வுடையமல்லற்பெருந்திருவோடுவந்துவாழ்வுற்றினிதுறைந்து
முடிவிலாதசிவமுத்திமுடிவிலடைவர்முனிவீர்காள். (௫௦)

இனையசேதுமாதீர்த்தமேகிமூழ்குமியல்பில்லார்
வினைகளனைத்துமகற்றுமிந்தமிக்கசேதுமாக்கதையை
நினைவுபுரிந்துகேட்டுவந்துநிகழ்த்திலனையநிறைதீர்த்த
நனையும்புனிதப்பயனவர்பானண்ணும்பாவநண்ணுதால். (௫௧)

வேறு.

கோதுசேர்புலவேட்டுவர்சாயவேகூரருவருள்வாட்கொடுசாடியே
தீதுதீர்தருமாதவமானதோர்சேயகோன்முறையோச்சுபுதேசுசால்
வேதநூனெறிமார்க்கம்வழாமலேவேள்விநாடதுபோற்றுபுநாளுமே
யேதிலாவரசாட்சிசெய்மாதவீரீதுசேதுவியாத்திரைநீதியே. (௫௨)

சேதுயாத்திரைச்சருக்கமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩,௨௫௭.

சேதுபலச்சருக்கம்.

விண்டலம்புகழ்சூதமாமுனிவரன்மீண்டு
மெண்டருங்கணமுனிவரைநோக்கிநீர்யாரும்
கொண்டவன்பொடுகேண்மினீரெனக்குரைகடல்சூழ்
மண்டலம்புகழ்சேதுவின்வருபலன்வகுப்பான். (௧)

பூதலந்தனிற்புண்ணியதலங்களிற்சேது
மாதலந்தனைநிகர்தலமில்லைமாதவத்தீ
ரோதுமன்னதினுறுசெபந்தவந்தானமோமம்
வீதலுற்றிடாதொன்றதேயநந்தமாய்விளங்கும். (௨)

இனையசேதுவிலிருந்தனுக்கோடியிலொருநா
ளனையிலாயிரமுகமுடைக்கங்கைநன்னதிகு
ழனைய்காசியிலொருபஃதாண்டினிதமர்ந்த
புனிதமாம்பெருந்தன்மைசேர்பலனதுபொருந்தும். (௩)

போதுமூன்றிநின்மூழ்கியேபுரிசடையிராம
நாதனாரடிபோற்றியச்சேதுவினண்ணிற்
றீதிழைக்குமாபாதகந்தீர்ந்திடுந்தில்லை
மீதிலைந்திருவருடமேவியபலன்மேவும். (௪)

மூர்துமாறெழுத்தாயிரத்தெட்டுருமுடியா
விந்தமாபுகழ்ச்சேதுவிலாசையோடிசைப்பார்
புந்தியாலரிபூசனைபுரிந்தமெய்ப்பொருளாஞ்
செந்துகிர்ச்சடையிராமநாயகனடிசேர்வார். (௫)

மாகமாதமிப்புனிதநீராடின்மாமதுரை
தோகைமஞ்ஞையாடுந்துறைதொல்லைவெண்காடு
மேகமூடியபழமலைவேங்கடவெற்பு
நாகர்போற்றுசேடாத்திரிநைமிசமருணை. (௬)

தேசுசாலருச்சுனவனமறைவனந்தில்லை
யீசர்காழிதென்கயிலையேயரங்கமேயபக்கா
வாசிலாதமர்வயிததியபுரமருட்குடந்தை
காசிசீர்ப்பருப்பதங்கமலாலயங்காஞ்சி. (௭)

இப்பெரும்பதிமுதலியவீசன்மால்பொருந்து
மொப்பரும்பதியாவினுமோரியாண்டுறைந்த
வப்பெரும்பலனடையுமென்றுலகன்றுறைநீர்
மெய்ப்பெருந்தனுக்கோடியின்பெருமையார்விரிப்பார். (௮)

இனையசேதுவின்பெருமையையிருடிகாளின்ற
வனையைநேருநால்வேதமுநான்கிடத்தறையும்
வினையமார்புராணமிதிகாசநூன்மிருதி
யெனையவும்மொருவாக்கியமாகவேயியம்பும். (௯)

இந்தவண்சிலைக்கோடியிலிந்துவைக்கதிரை
வந்துவெம்பணிவெளவுநாண்மூழ்கிடின்மலிசீர்
தந்தகங்கைசேரவிமுத்தமாம்பெயர்த்தலத்தி
லந்திரட்டியாண்டாடியபெரும்பலனடையும். (௧0)

கோடியுற்பவத்துற்றபாதகமெலாங்குலைவுற்
றோடுமெக்கணம்பரிமேதமாயிரமுஞற்றும்
பாடின்மெய்ப்பெரும்பலனதுபொருந்துறும்பரத்திற்
கேடிலாதுணர்ந்தொன்றியேகெழுவுமாதவத்தீர். (௧௧)

திங்களுற்பவத்தயனத்திலம்புலித்தினத்திற்
றங்குபூரணைதனிலமாவாசியிற்றரணி
யெங்கணும்புகழ்சேதுவைக்காணிலேழ்பிறப்பிற்
றங்கவெம்பவங்கண்டிடாதெய்திடுஞ்சுவர்க்கம். (௧௨)

உதயவேலையின்மாகத்திலுதகங்களெல்லாங்
குதிகொளுந்தனுக்கோடியின்முத்தினங்குடைந்தா
ரதிகமாயினபவமொரீஇக்கங்கையாறுதி
நதிகடோய்பயன்பெறுகுவர்நாடருந்தவத்தீர். (௧௩)

வாய்ந்தசேதுவினுதயத்திலைந்துநாண்மாகந்
தோய்ந்திடிற்பரிமேதயாகாதிகடென்னுஞ்
சாந்திராயணங்கிருச்சிரநோன்புகடரும்பே
றாய்ந்துநான்மறையோதியபேறெலாமடைவார். (௧௪)

அந்தவேளையிலந்தநற்றிங்களிலறைந்த
வந்தநீரிலீரைந்துநாளாடினோரலர்ந்த
வந்தநூற்றிதழம்புயவம்பொனாலயஞ்சே
ரந்தமில்புகழ்ச்சதுர்முகன்மனோவதியடைவார். (௧௫)

இனையகாலையிலினையதோர்திங்களிலினைய
புனிதநீரின்மூவைந்துநாளாடினோர்புரைதீர்
கனகமால்வரைநிறுத்துபுகனைகடல்கடைந்த
வனைதுழாய்முடிக்கடவுள்வைகுண்டத்துவாழ்வார். (௧௬)

இரைத்திடுந்தனுக்கோடியிலிருபதுதினமுன்
னுரைத்ததிங்களினுதயத்திலாடினோரொலிநீர்
நுரைத்ததும்பியபுனன்முடிமுத்தலைநுதிவேல்
வரைத்தடஞ்சிலைவானவனிடத்தினில்வதிவார். (௧௭)

கூறுதிங்களினுதயத்திலையைந்துகொண்ட
வீறுநாடனுக்கோடியில்விருப்புடன்படிந்தான்
மாறிலன்புடையிராகவன்பூசனைமகிழ்ந்து
பேறுகந்தருளிராமநாயகனுருப்பெறுவார். (௧௮)

உந்துமிப்புனனுரைத்தவத்திங்களினுதயத்
தைந்திரட்டிமூன்றுந்தினமாடினோரயோத்தி
வந்துதித்தருளிராகவன்பூசைசெய்மணிசேர்
கந்தரத்திராமேசனோடிரண்டறக்கலப்பார். (௧௯)

ஆகையாலிந்தச்சேதுவிலறிஞரெப்படியு
மோகையானுயர்மாகமாதத்துதயத்திற்
பாகையார்மொழிப்பதுமைகோன்பரிவினாற்குயிற்றும்
வாகையார்தனுக்கோடியிற்படிந்திடன்மரபே. (௨௦)

ஆதியாமருத்தோதயமகோதயமலரி
யோதுபானுவெண்மதியுபராகத்தி * னுரைசால்
சேதுமூழ்கினர்கருவுறார்நிரயமுஞ்சேரார்
வேதியக்கொலையாதியபவங்கள்வீட்டுவரே. (௨௧)

அங்கதன்றியுஞ்சகலசெல்வங்களுமடைந்தே
யிங்கிதந்தருமின்பெலாமிசைந்துவீற்றிருந்தே
பொங்குமிந்திரனுலகமாதியவெலாம்பொருந்தித்
திங்கள்வார்சடைமுடியவன்பதத்தினைச்சேர்வார். (௨௨)

ஆதலாற்கதிர்மதிகளையரவங்கடீண்டிற்
போதமாரருத்தோதயமகோதயம்பொருந்தி
லோதுபுண்ணியகாலங்களாமிகவுவந்து
சேதுமூழ்கிடவேண்டுந்திண்ணமாச்சிறந்தே. (௨௩)

---

* உபராகம்—கிரகணம்.

இலங்கைவேந்தனைவதைப்பதற்கிராகவன்முன்னாள்
வலங்கொடேகிருமித்தவிச்சேதுவைவணங்கி
நலங்கொளுந்தெய்வமுனிவரர்பிரமநன்முனிவோ
ரலங்கல்வேந்துமாமுனிவரர்தென்புலத்தமர்ந்தோர். (௨௪)

சித்தர்சாரணர்சிறந்தகந்தருவர்செங்கமல
வத்தனாதியவிமையவர்கின்னரருரகர்
பத்தியோடென்றுமிருப்பர்களாகையாற்பகர்ந்த
நித்தமேவுமிப்புண்ணியசேதுவைநினைந்தே. (௨௫)

யாதொர்தேசத்துநீரிடைமூழ்கினுமியற்றும்
பாதகம்வராசேதுநாப்பண்ணுறைதீர்த்தத்
தோதகன்கரையொருபிடியோதனமுதவிற்
பேதுறும்பிணிபுருணக * முதலியபிரியும். (௨௬)

அராவணைப்புறத்தறிதுயிலொழிந்துவந்தயோத்தி
யிராமன்வண்கரத்தேந்தியதனுவினாற்கீறுந்
தராதலம்புகழ்கீற்றினைக்கண்டவர்தாம்போய்ப்
பராவுமன்னையர்கருவுறார்வைகுண்டம்பதிவார். (௨௭)

காடரும்புகழ்வீடணன்வேண்டிடநயந்தே
நீடிருந்தனுக்கோடிகொண்டிராமனுநிமலன்
றேடரும்புகழ்படைத்திடக்கீறலாற்செகத்திற்
பீடுறுந்தனுக்கோடியாய்ப்பவத்தையும்பிரிக்கும். (௨௮)

முடிவிலத்தனுக்கோடியில்விதிமுறைமூழ்கிப்
புடவியாடகம்புனைதுகில்பொழிசுவையமுத
மடைகொணன்பசுநறியநெய்வண்டயிர்வெண்பால்
கடிகொள்சந்தனக்கனிதுவர்க்காய்சருக்கரைதேன் (௨௯)

செய்யசாலிநற்றண்டுலந்திலம்பயறுழுந்து
துய்யபோனகம்பண்ணியந்தீம்புனல்சோதி
மெய்கொள்பூண்பலதானியங்காய்பலவிரும்புந்
துய்யசாகினியன்னமோடேனவுந்தொகுத்தே. (௩௦)

மையலின்றியேமறைமுழுதுணர்ந்தவாய்மையராய்
வையகம்புகழ்வழுத்திடுமாமறையோர்தங்
கையிலீந்திடிற்கருதியவளித்திடுமதனா
லுய்வர்தம்பொருளுலோபமற்றுதவுதல்வேண்டும். (௩௧)

நண்ணுமத்தனுக்கோடியினல்கியதானம்
பண்ணிருஞ்செபநியமமோமத்துடன்பயின்றே
யெண்ணருந்தவமாதியொன்றநந்தமாமிதனாற்
கண்ணுதற்பிரான்கரியமால்கஞ்சன்விண்ணாடர். (௩௨)

கேடினாகரோடியக்கர்மாதவர்கள்கிம்புருடர்
நாடுதென்புலத்தவர்மகிழ்நண்ணுவர்நாளும்
பாடில்சேதுவைநோக்கினன்றன்னொடுபெயர்ந்தோன்
றேடுதந்தையுமவற்குறுதந்தையுந்தெரிக்கில். (௩௩)

* புருணகம்—கருச்சிதைத்தல்.

பீடதாம்பரிசுத்தமேயாக்குவன்பிழைத்தே
வாடுறுங்கொடுநரகத்தினின் றுதன்மரபை
வீடதாவெடுத்தேற்றுவன்விளங்கிடும்விறல்விற்
கோடிமூழ்கினுற்கோடியைம்பாதகங்குலைந்தே. (கச)

கணமதொன்றினிலழிந்திடுநிச்சயங்கவைநாப்
பணவராத்துயிலொழித்திடும்பண்ணவன்பணித்த
குணமதாரும்விற்கோடியைக்கண்ணினுற்குறித்தோன்
குணமிலாக்கிலேசந்தருகருப்பையுட்குளியான். (கரு)

வே று.

சீதையாதொருசெந்தழன்மூழ்கினளத்தடந்தினைத்தோர்க்குக்
கோதையார்கொடும்புருணகநாறுபோமக்கணங்குளிர்கஞ்சன்
ரூதையாயிமிராமனிற்சிறந்ததுசேதுவுந்தனியாழிச்
சீதரன்னெவர்தம்மினுமதிகன்போற்சிறந்ததுதிகழ்கங்கை. (கசு)

வே று.

எங்கேனுமியாதொருநீர்மூழ்கிடினுமிப்படியேயெண்ணியாங்கே
கெங்கேகரேராமசேதோவென்றன்பினொடுங்கிளப்பராகிற்
கொங்கேயுமலர்க்கூந்தற்கோகனதைபிரியாதகுழகன்கோலச்
சங்கேந்துமுகில்சேதுக்கிணையாகும்பரகதியுஞ்சார்வர்தாமே. (கஎ)

கடவுவான்றனுக்கோடியிற்படிந்தருத்தோதயந்தனிற்சேது
வடையுமாகந்தமாதனத்ததன்கரையிரண்டினுமன்பாலே
கடுகுமாத்திரம்பிண்டமீந்திடிலிருகதிருளதினங்காறு
மடையசீர்ப்பெருந்தென்புலவாணர்களுளமகிழ்வுறுவாரால். (கஅ)

அதுவுமன்றியிச்சேதுவிற்பிதிர்களையுன்னியாதரவோடே
முதியவந்தணர்தமைக்கொடுசெமித்தளிரளவுமுற்றுறுபிண்ட
முதவுகின்றவன்பாவங்களியாவையுமோட்டுவனவனுற்றூர்
வதியும்வெங்கொடுநரகத்தைவிட்டெழீஇத்துறக்கமேறுவர்மற்றும். (கக)

அன்னவன்றமராயினோர்கலினெனவறைகழலமரேசன்
சொன்னவின்றிடுபுலவர்சூழ்ந்தேத்திடவிழாவுறுஞ்சுவர்க்கத்தின்
மன்னிருந்திடுமனைவருமகிழ்வொடுமுடிவிலாநிறைசோதி
மெய்ந்நலந்தருபரமவானந்தமாம்விமலவீடடைவாரால். (உ0)

சீதைமாமணிமார்பகத்தெழினலந்தினைத்தமால்செய்தோங்குஞ்
சேதுமாதலம்புகழ்புருடோத்தமர்திகழ்ந்தகோகரணத்திற்
சீதரன்றிகழ்பதுமநாபந்தனிற்சிறப்புறுஞ்செழுந்தீர்த்தச்
சீதவார்புனற்றிரைக்கடலாடலாந்தினந்தொறுஞ்சேர்ந்தம்மா. (உக)

சாற்றுசந்ததிவிருப்பினேன்சனிபுகர்தக்கசேய்தன்னுளிற்
போற்றுசேதுவேயல்லதுபொருகடற்புனல்படிந்திடலாகா
சாற்படுங்கருப்பதிக்கையன்பிரேதகாரியந்தனைப்பண்ணுனு
மேற்சொல்சேதுவேயல்லதுவேலைநீர்மூழ்குதல்விடல்வேண்டும். (உஉ)

மதிகுலாநுதற்சீதைகோன்வையகம்வாழ்வுறவகுத்திட்ட
முதியவப்புகழ்ச்சேதுவினுதகத்தின்மூழ்குதன்மொழியுங்கால்
விதிகொளுந்திதிவாரநாண்முதலியநியமங்கள்வேண்டாவாந்
திதமதாகவேதினந்தொறுந்தினந்தொறுமாடலாஞ்சேர்ந்தங்கண். (உங)

இருந்துளான்றனைநினைந்துடன்மூழ்கலாமிறந்தவற்கொண்ணாது
பிரிந்துளானுருத்தருப்பையினிழைத்தெழில்பிறங்கியகுசையேபொன்
பொருந்துமால்புனைபவித்திரமேயெனுமந்திரம்புகன்றேத்திப்
பரந்தவித்தனுக்கோடிநீர்படிகுதலவன்படிகுதலென்றே. (சச)

வீந்தமற்றவன்றனைநினைந்தவனுருமேதகப்புனைவுற்ற
வாய்ந்தவப்பெருந்தருப்பையைநுரைவிரிமறிதருதிரைமோது
நீந்துமைக்கடலிருந்தனுக்கோடியினிறைதருசெழுநீரிற்
றோய்ந்திடச்செயிலன்னவன்றானுமேதோய்ந்தவனுவானே. (சரு)

மதிநிறைந்தநாள்வயங்கமாவாசியில்வாரிதிதுதைந்தாடிற்
கதிசெய்புண்ணியந்தானுறுமற்றைநாட்கடலினைத்தொடலாகா
ததிகசேதுவிற்கங்கைசேர்கடலினிற்சிந்துமாநதியார்ந்த
வுததியிற்புருடோத்தமங்கோகன்னத்தென்றுமாடுதலொண்ணும். (சசு)

இந்தமாபெருஞ்சேதுவின்பெருமையையெடுத்திமையவரோடு
முந்தைஞான்றுயர்முனிவரும்பிதிர்களுங்கேட்டிடமுகுந்தன்றா
னந்திடாவருங்கற்புளநாயகிதன்னொடுநன்காய
புந்திசேரிளையானொடுமிருந்திவைதிடமுறப்புகல்கின்றான். (சஎ)

இனையசேதுநாம்புரிந்ததுகண்டவரெமதருளதனாலே
முனமுஞற்றியபவமெலாமக்கணமுடிந்துநன்கடைவாரா
லனையசேதுவிலாடினோருலகினிலன்னையருதரத்திற்
செனனமெய்திடாராதலினதன்புகழ்செப்புவதரிதன்றி. (சஅ)

வீறுசேரலைமுழங்கொலிவிரிகடலுடுத்திடும்வியன்ஞாலத்
தீறில்சேதுவின்பெருமையுமிராமநாயகன்றனதருளுஞ்சீர்
மாறிலாததோர்பெருமையுமற்றியான்மனமகிழ்வுடனெண்ணி
நூறுகோடிகொள்யாண்டுதானுவலினுநுவலலாந்தகைமைத்தோ. (சகூ)

என்றிராகவன்கூறிடக்கேட்டுளத்திருடிகண்மகிழ்பூத்தார்
நன்றுநன்றெனவிமையவரவன்மொழிநலத்தினைநயந்தேத்தித்
தென்றிசைத்திகழ்சேதுராமேச்சுரன்றிருவருட்டிறமெல்லா
நின்றுபோற்றினரவர்பெருமகிழ்ச்சியைநிகழ்த்தலாம்படித்தன்றால். (ருo)

போற்றல்செய்திடாநாடொறும்புராரிதன்னாணையாற்புவனத்தி
லேற்றமார்புகழ்ச்சேதுவிற்காவல்பூண்டிருந்தருள்புரிவாராற்
சாற்றுகஞ்சனுந்தேவருமிருகழற்றாங்கியதளையோடு
மூற்றமேவியசேதுமாதவனெனவொருதிருநெடுமாலும். (ருக)

உரகர்மாதவரியக்கர்கந்தருவாகிம்புருடரும்பர்களோதுந்
தருமசாத்திரமுயலுநர்கின்னரர்பிதிர்கள்சாரணர்சித்தர்
விரகராம்வித்தியாதரரேனையபூதங்கள்விருப்போடுந்
திடமதாகவேயிராப்பகற்சேதுவிற்சேவைசெய்திருப்பாரால். (ருஉ)

இனையசேதுநீராடினுந்தீண்டினுமிதுதனையெஞ்ஞான்று
நினைவுசெய்கினுங்காண்கினுங்கேட்பினுநீங்கிடுந்துயரெல்லா
மனையுமத்தனுமாயிமொயவனருள்செயுமச்சேதுத்
தனைநிகர்ப்பதொன்றில்லையாந்தவநெறிதழைக்குமந்தணர்காளோ. (ருங)

அண்ணலம்புகழ்ச்சேதுவானதிலருத்தோதயத்தடைந்தாடிற்
புண்ணியந்தருமானந்தமித்தமாம்பொற்புறுபுரையோர்க
ணண்ணிடுங்கொடுநரகங்களுசமாங்காரணங்கடமினுடி
யெண்ணரும்பரமுத்தியுங்கொடுத்திடுமெழில்பெறுமுனிவீர்காள். (௫௪)

மகரதிங்கள்வான்பரிதியாம்வானவன்வந்திடுந்திருவோணம்
புகரில்பாந்தளாங்கரணத்தைதீங்கிமேற்புகுந்திடுமமாவாசி
துகளிலாவெதிபாதமோணத்தொடுசுடருதித்திடும்வேலை
நிகரிலாதிவாரத்தினில்வருமருத்தோதயநிகழ்த்துங்கால். (௫௫)

வேறு.

திரையாருங்கடற்சேதுவடைந்தருத்தோதயத்தொருவன்றீர்த்தமாடிற்
பரையாதிநசையறிவுதொழிலைந்தும்வாயிலாப்படைத்தலாதி
விரையாருமலரோன்முன்சிவமீறுநொடிப்பளவில்விதித்துமாற்று
முரையாதிகடந்தபரிபூரணத்தோடத்துவிதமுற்றுவாழ்வான். (௫௬)

ஆயிரம்வெதிபாதமொப்போரமாவாசியவ்வமாவாசி
சேயவான்கதிர்வாரத்தில்வந்திடிற்செப்புமாயிரப்பத்தா
மோய்வில்சீரமாவாசியோடுயர்திருவோணம்வந்துறக்காற்
றாயவின்னயோகம்புணர்புண்ணியப்பெருமையார்சொலவல்லார். (௫௭)

புகலுமிங்கிவைபொங்கியேவிளங்கிடும்பொருவிலாமாயோகத்
தகைகொள்புண்ணியகாலமிங்கிவைகளிற்றனித்தனியொவ்வொன்றிற்
பகருநானதானஞ்செபமருச்சனைபணினளவிலையென்றான்
மகிழ்வொடிங்கிவைகூடுநாளாடினால்வருமுத்திதிடமாதோ. (௫௮)

மிக்கநாட்களிலுத்தமஞ்சாலவும்விளங்கியதிருவோணந்
தக்கசீரியதிதிகளிலுத்தமந்தயங்கியவமாவாசி
தொக்கமேன்மையோகங்களிலுத்தமந்துகளிரிவெதிபாதந்
திக்கெலாம்புகழ்வாரத்திலுத்தமஞ்செங்கதிர்த்திகழ்வாரம். (௫௯)

இன்னவாம்பெருநான்கியோகங்களுமிரவிமாமகரந்தான்
மன்னுமாதத்தில்வந்திடிற்புண்ணியகாலமாமற்றந்நாண்
மன்னிராமசேதுவிற்படிந்தோர்பினும்வையகமருளெய்தி
யன்னைதன்வயினிடத்தடையார்கள்சாயுச்சியமடைவாரால். (௬௦)

செப்புமித்தொகைசேர்மகரந்தனிற்றிகழத்தவுதயத்துக்
கொப்பதாகவேகாலங்கண்மூன்றினுமுரைத்திடினிலையாமாற்
றப்பிலாவிதுபோலவேமகோதயந்தானுநன்னாளந்நாண்
மெய்ப்பெரும்புகழ்ச்சேதுவிற்றானமேமிக்கதாம்விளம்புங்கால். (௬௧)

பன்னுதானத்தைப்பரிப்பவனொழுக்கமும்பயிறவத்தனுமாகி
மன்னுமாமறையந்தமும்புராணமும்வழுவறவாராய்ந்து
தின்னைநேரிலாச்சங்கரன்றாள்களுஞ்சங்கரிதன்றா
ளுன்னியேயருச்சனைசெயும்பனவனேமொழிந்தபாத்திரமாகும். (௬௨)

நந்துதுற்றிடுஞ்ஸ்ரீசேதுவிற்றானமேநல்கினன்மறையோனு
மிந்தநற்செழும்பாத்திரற்கீகுகவிப்பரிசினையின்றேற்
சிந்தைவைத்ததுசங்கற்பித்ததகஞ்செய்தூர்தனிற்சென்றீக
வுந்துநற்பலன்விரும்பினோனதமபாத்திரற்குதவிடலாகா. (௬௩)

வேறு.

இதுதனக்கோரிதிகாசமியம்பிடுவோர்தானபாத்திரத்தையெண்ணி
யதிதியருக்கருள்சுரக்குந்திலீபனுமரசனதிலாசைகூர்ந்து
விதிதனக்குமகனாகும்வசிட்டமுனிதனைக்கேட்பவிருப்பினோடு
மதிகமுனிதவவசிட்டனவற்குரைத்ததுத்தமமாமதனைக்கேண்மின். (௬௪)

உத்தமனாம்பிரமனருளுயர்புரோகிதவசிட்டமுனிவனோங்கு
மத்தமுதலாந்தானமெவர்க்களிப்பதுனக்கடியேனுதலாலே
புத்திமிகவுடையவனேயவையனைத்துமுள்ளபடிபுகல்வாயென்ன
வுத்தமபாத்திரத்துண்மையுரைக்குதுநீகேட்டியெனவுரைப்பதானான். (௬௫)

ஓதின்மறையாசாரமுடையவனேயுத்தமபாத்திரமதாகு
மோதினவன்றனக்கதிகஞ்சூத்திரவன்னம்புசியாதுற்றுவாழ்வோன்
வேதமொடுமந்திரங்கள்புராணமிவைவகைவந்துவிமலன்றன்னைச்
சீதரனைப்பூசைபுரிந்தில்லறத்தில்வறுமையுடன்றிகழ்ந்துவாழ்வோன். (௬௬)

வருணநெறியாச்சிரமநெறிவழுவாதெஞ்ஞான்றுமகிழ்ந்துவாழும்
பொருவிலவன்யாவரினுமுயர்ந்தபாத்திரனென்றேபுகலுநூல்க
ளொருமையுடன்பாத்திரத்தையுற்றுணர்ந்தேயின்னவருக்குதவினூரேற்
றருமமுதலாதியெலாமடைந்துபரமாயகதிதன்னைச்சார்வார். (௬௭)

உத்தமமாந்தலங்களினுமித்தகையோரிடைத்தானமுதவல்வேண்டு
மத்தகையோரில்லையேற்றுட்டபாத்திரர்தங்கையளித்தான்சென்மம்
பத்தொடுமூன்றிரண்டொன்றுகோம்பிகரமண்டூகம்பழிசாலீன
மைத்தகொடுஞ்சண்டாளனாகிப்பின்சூத்திரனாய்வணிகனாகி. (௬௮)

மன்னாகிமறையவனாய்வறுமைபிணிதனிலுழந்தேவருந்துமண்மே
லன்னார்கைமுன்னீந்ததானபலந்தன்னாலென்றறிகதான
மென்னாளும்பெறவுதவினிரந்திரந்துமனங்கசிந்தேயியல்பினோங்கிப்
பன்னாளும்புகழ்பெறுசற்பாத்திரன்றன்பாலளிக்கபரிவுகூர்ந்தே. (௬௯)

உத்தமமாங்குணங்குலவுமித்தகையோர்கைத்தானமுதவல்வேண்டு
மத்தலத்திலவரிலரேனிலத்துதகமளித்தவர்கையளிக்கல்வேண்டுஞ்
செத்தவரேயாயினவர்மகற்களிக்கவவரிறக்கிற்சிவனுக்கீக
வத்தமவைமன்னர்புகழ்திலீபவெனவசிட்டமுனியறைதல்செய்தான். (௭௦)

என்றரசன்றனக்குமுனியியம்பியபினன்றுமுதற்றிலீபவேந்தல்
வென்றிபுனையுத்தமபாத்திரர்தமக்கேயளித்துகந்தான்மிக்கதானந்
துன்றுபுரிநூன்மார்பீருத்தமபாத்திரமின்றேற்சொன்னவாறே
மன்றவியற்றிடவேண்டும்புண்ணியமாஞ்சேதுவிடைமரபதாமே. (௭௧)

சிறந்திடுமாபாத்திரத்தைநினைத்துதகஞ்சேதுவினிற்செய்தவாறே
யுறைந்திடுமூர்தனிற்கொடுக்கவதிற்குறைந்தாலறந்தழையாதூனமாகுந்
திறந்தெரிந்திப்படிபுரியினீங்கரியதுயரமெலாஞ்சேரவோடும்
பிறந்தையுறூர்பரமசாயுச்சியமாம்பெரும்பதத்தைப்பெறுவர்தாமே. (௭௨)

வேறு.

கோதிலாவிரூபாக்கநற்கோகனங்கும்பகோணங்காஞ்சி
சோதிசேர்ந்தசாீளக்கிராமம்புகழ்த்துவாரகைபிரயாகை
யோதுதென்மதுராபுரிகைமிசமயோத்தியேயுயர்ந்தே[illegible]குஞ்
சேதுவேங்கடம்பதுமநாபந்திகழ்தெண்டகாவனங்காசி. (௭௩)

இரவிசேர்பருப்பதமிவையாவையும்பாற்கரபுரியாகு
மருவினான்முடிமயிர்களைந்துண்டியுமன்றுமார்ந்திடலாகா
திரவியாபிமானத்தினான்மோகத்தாலிவைசெயாதேதம்மூர்
விரவினால்விரவும்பவழூன்றியுமேல்வரும்வெகுபாவம். (எச)

இந்தநற்றலமன்றியிச்சேதுவினிடத்திருடிகளாலே
சிந்திக்குஞ்சிவனாணையாற்செப்பிடுந்தீர்த்தநாலாறுங்கு
கந்தமாதனத்திலக்குமன்றான்முன்புகண்டிடுமக்குண்டந்
தந்தகூலமேற்கந்தரமேற்படுமுண்டனந்தான்கொண்டு. (எரு)

முனமுரைத்தவந்நீரினின்மூழ்கியேமுதுமறையவர்தங்கை
மனமுகந்துதக்கிணைகொடுத்தவரருள்வழங்கியபின்பேகிச்
சினவிடைக்கொடியிலக்குமணேசனைச்சேவைசெய்திடுவாரேல்
வினையனைத்தையும்வீட்டியேசங்கரன்மெய்ப்பதம்பெறுவாரால். (எசு)

வே று.

சேதுவுக்குச்சரியாகுந்தீர்த்தமோரிடத்துமிலைசெவவிதாக
வோதலுற்றதவமுமதற்கொப்பதிலைபுண்ணியங்கள்யாவுமொவவா
காதலிற்சென்றடைவதொருகதியுமதற்கொவவாதுகற்றுநன்காம்
போதமுற்றோர்சேதுவருத்தோதயஞ்சென்றாடுவரெப்போதுந்தானே. (எஎ)

உவராகமாயிரத்துக்கொப்பாமோரருத்தவுதயத்தைப்போலப்
பவராகமுறுபாசமறுப்பதொருகருவியதொன்றில்லைபார்மேற்
றவராகவக்குரிசில்சேதுவருத்தோதயநானந்தான்சாரிற்
சிவராகநூல்களெல்லாமிதற்குநிகரில்லையென்றேசெப்புமென்றும். (எஅ)

வே று.

ஆயிரந்தலையிட்டநல்லறுபதாண்டருடருமாகங்கைத்
தோயமூழ்கினாலெவவளவறமென்றுமுனிவரர்சொன்னார்க
ளாயநல்லறமாமருத்தோதயமகோதயததடைந்தோர்காற்
றாயராமசேதுவிற்படிந்தாலிதுநிச்சயஞ்சொல்லுங்கால். (எகூ)

பன்னிடும்மருத்தோதயமகோதயவேலையிற்பலம்யாவும்
வென்னிடும்பிரயாகையிலாயிரமாகநீர்விழைந்தாடிற்
றுன்னிடுந்தருமத்தொகைதுன்னிடுமிராமசேதுவிற்சோதி
மன்னிடுந்தனுக்கோடியிலோர்விசையாடினிச்சயமாதோ. (அ0)

பாயமூன்றுலகத்துளதீர்த்தங்கள்யாவினும்படர்ந்தாடி
னேயபுண்ணியமெத்தனையத்தனையுற்றிடுமெழிலார
மேயகுங்குமக்கொங்கைநற்சீதைகோன்விதித்திடும்விறற்சேதுச்
சேயநல்லருத்தோதயத்தொருவிசைசேர்ந்துமூழ்குறிற்றிண்ணம். (அக)

வே று.

பிரமவறிவின்றிநன்றிகொன்றுதிரிபாதகராம்பேதையோரும்
பரிவொடுமாபாதகமேசெய்கின்றவன்னியபாதகரும்போகி
யுரமருவுசேதுவருத்தோதயத்தோர்காற்படிந்தாலொழிப்பர்பாவந்
திரமருவுநன்றிபிழைத்தோர்க்கெந்தத்தலங்களினுந்தீர்வேயில்லை. (அஉ)

எந்நன்றிகொன்றார்க்குமுய்வுண்டாமுய்வதிலையிருமையான
செய்ந்நன்றிகொன்றமகற்கென்றுரைக்குநூலேனுஞ்சேதுச்சேர்ந்தே
யந்நன்றிகொன்றவரும்புகழருத்தோதயத்தொருகாலாடினாரேற்
பின்னின்றுபாவமெலாம்பெயர்ந்தோடும்பரிகாரம்பெறுவர்மாதோ. (௮௩)

யாவர்சிலமானவர்கள்சேதுவருத்தோயத்திலாடலாது
மேவிடுமோகாதியினால்விடுவார்கள்விழியிழந்தார்விழுமாபோலப்
பாவுபெருங்குடும்பமெனும்புணரியுழந்தேபற்றியேறமாட்டா
தோவிலருநரகடைவர்புராணமெனுங்கடல்பருகுமுரவிர்காளோ. (௮௪)

சேதுவின்பாலருத்தோதயத்தாடிற்றினகரமண்டலங்கீண்டேகிப்
பூதலமெண்பிரமபதந்தானடைவர்சேதுவிலப்போதிலாடி
நாதனிராமேசனரிசீதைகதிர்மகன்கவிகணன்காந்தேவ
ரேதமறுமுனிபிதிர்களிவரைநினைந்தருக்கியங்களீகமாதோ. (௮௫)

தமையடைந்தமிடிசாடும்பொருட்டருத்தவுதயமயந்தானாயொன்று
விமையடைந்தோர்வணங்குசகநாதனைநிருமலனையெண்ணிவேதச்
சுமையடைந்தசேதுவருத்தோதயத்திலருச்சிக்கிற்சுத்தமான
வமையடைந்ததோட்சனகிகணவனகமிகமகிழுமாயுங்காலே. (௮௬)

வருதிதிவாகரகாந்திக்கிருப்பிடமாஞ்சகநாதவணங்குகேன்யான்
வருதிமதிக்கடவுளேமலர்மடந்தைசகோதரனேசுதையின்வைப்பே
சுருதிபகரத்திரிகோத்திரத்துதித்தாயுனைத்தொழுகேன்சுடரினோடுங்
கருதியருக்கியந்தருகேன்கைக்கொண்மினென்றிவர்க்குக்கழறிப்பின்னர். (௮௭)

வெதிபாதமாயோகிபாதகங்களனைத்தினையும்வீட்டிவேறாங்
கதியாரான்மாவினிடங்களினுறைவாயாயிரஞ்செங்கையாயான்செய்
நதியாருமருக்கியத்தைக்கைக்கொள்வாயென்றென்றேநயந்துபோற்றி
வெதிபாதந்தனைவணங்கியருக்கியமிம்முறையன்பால்விளம்பியீந்து. (௮௮)

மதியொடுபாம்பணிந்தபரமேசுரனையெவ்வுயிரும்வயங்கிவாழுங்
கதியின்வழிநடப்பிக்குங்கண்ணாகியேனையவுங்காட்டுவானைத்
திதியொடுநாள்வாரமிவைக்கதிபதியேமாதவருத்தேவேகால
விதவடிவேபணிகுவன்யானுதவுமருக்கியங்கொள்வாயெனவிளம்பி. (௮௯)

இதமாமிவவகையருத்தோதயத்தொருவனவரவர்மந்திரத்தினாலே
விதமாரர்க்கியங்கொடுத்துத்திரவியசத்திக்கேற்பவிரிந்தஞாலப்
புதராகுமவர்கள்பொருட்டுபாயனதானத்தினையும்புரிகபோதப்
பதினால்வர்பன்னிருவரெண்மரெழுபேரறுவர்பகருமைவர். (௯0)

மறையவரையலங்கரித்துவெண்கலபாத்திரமாதன்மரத்தினாலே
யுறுவதொருபாத்திரமேயாதல்புதிதாகவமைத்துளவவற்றி
னிறையவிடும்பாற்சொன்றிசருக்கரைநெய்கனியிவற்றானிறைத்துமுன்ன
மறையுமவர்முன்வைத்தேதக்கிணைதாம்பூலத்தோடளித்துப்பூணால். (௯௧)

அடியனேன்சத்தியுமிவ்வளவென்றேநயமொழியுமறைந்துதானம்
படியிமையோர்பாலளித்துப்பலயோனியெவற்றினுமேற்படுவதாய்நற்
கடவுளர்தம்முருவொன்றாய்க்காசினிக்குமகிழ்கொடுக்குங்கவின்குழக்க
றுடையமனநிறைந்துசுரர்தொழுகியபாற்சுரபியுடனுதவிப்பின்னர். (௯௨)

செகநாதாநாரணநின்சென்மநாளாகுமிந்தத்திருவோணத்தின்
மகிழ்வொடுநான்மறையவர்க்கெவ்வளவேனுநான்கொடுத்தமற்றித்தான
மிகவாகவருள்புரிதியென்றுசெங்கோடவிழுமரவிந்தவீட்டிற்
புகுமாதுகுடிகொள்ளும்பொன்மார்பிற்புத்தேளைப்போற்றிசெய்தே. (௯௩)

உடுவாகுமனைத்தினுக்குமதிபதியேசுரர்க்கமுதமுதவுந்தேவே
படர்சோதிரோகிணிக்குநிலவொழுகும்பலகலைக்கும்பதியேயெங்கு
முடையானையாண்டருளாயுனைத்தொழுகேனெனமதியையுவந்துபோற்றிப்
படியேறுபுகழருக்கன்றனைத்தாழுமுறைமையையும்பகரக்கேண்மின். (௯௪)

அடராதுபவமுடைக்குமிருஞ்சுடரேயனுக்கிரகமமர்ந்துவாழு
மிடமாகுமொருபகவாவுன்பாதகமலத்திலெந்தஞான்றுங்
கடன்மேவுசெகநாதாகாலதினநாதனேயெனக்கெக்காலு
முடியாதவன்பருளாயென்றருக்கன்மதியிவரைமுடியிற்றாழ்ந்து. (௯௫)

சூரியசந்திரர்க்குரியமகவாகுந்தோன்றலேதொன்மைத்தாய
பாரியநல்வெதிபாதயோகமேயுன்னடிகள்பணிகுவேன்யான்
வாரியுறுசேதுவிலெவ்வளவேனுநான்செய்ததானமன்ற
வேரியல்பாநிறைவேகொண்டிடுதியெனவெதிபாதத்தினையிறைஞ்சி (௯௬)

சாருமிரவலர்க்குதவுங்கற்பகமேசநார்த்தனரேசரித்துவாழுஞ்
சீரியமாதத்துடனேயிருதயனகாலமுமாம்வாசுதேவே
யோரிலிவைக்கீசரனேயரியேயென்பவமொழித்தியென்றுபோற்றி
யேரியனுமறையவரையிப்படியேயருச்சித்தங்கிறைஞ்சியேத்தி. (௯௭)

வேறு.

பின்னிரணியசிராத்தம்பிறங்காமசிராத்தமன்ன
மின்னவையுலோபமின்றியியற்றிப்பார்வணவோமத்தைத்
தன்னிகராசான்றன்னைத்தகைபெறவலங்கரித்தே
பொன்னுநிவிம்பங்கோப்பாதுகைகுடைபூசித்துய்க்க. (௯௮)

இன்னணமிழைக்கிற்சேதுவிடையருத்தோதயத்திற்
பின்னொருதருமம்வேண்டாம்யாவையும்பெற்றோனன்றான்
றன்னிகர்சேதுவல்லாத்தலங்களினிருந்திட்டாலும்
பன்னுமிம்முறையருத்தோதயந்தனிற்பண்ணல்வேண்டும். (௯௯)

வேறு.

ஞானமாதவிர்நற்கந்தமாதனத், தானதெண்கடற்றன்னிலயோத்தியர்
மானவேற்படைமன்னன்வகுத்திட்ட, மேன்மைச்சேதுவையுள்ளம்விரும்பியே. ()

ஓதுநானமுனூற்றிடும்வேலையிற், சேதுசேதுவென்றோதிடிற்செய்திடும்
பாதகம்மொருகோடிபறந்திடுஞ், சோதிசேரழியாப்பதந்துன்னுவார். (௧௦௧)

தேரிலோர்கணஞ்செப்புமரைக்கணம், வாரிசூழுமிச்சேதுவில்வைகுறி
னேரிலந்தகன்றூதர்மற்றேனையோன், பார்வைசென்றிடுமெல்லைபடர்ந்திடார். ()

இராம்சேதுவிற்கோடியிராகவ, னிராமநாதன்சனகியிலக்கும
னிராமனன்பன்கவிகதிரோன்மக, னிராவணன்றம்பியென்றிவரன்றியும். (௧௦௩)

பொன்றிடாவசிட்டன்புகழ்க்காசிபன், றென்றமிழ்க்கலைசேருமகத்திய
னன்றிசேர்தருகோசிகனாரத, னென்றிரேருமேர்கொண்டசாலாவியும். (௧௦௪)

வாமதேவனையும்வண்மைராமனுக், காமதேயெண்ணுமன்பினர்யாரையு
மேமமாத்தினமெண்ணிடுக்கணே, போமதன்றியுமுத்திபுகுவரால். (௧௦௫)

தேசேத்தியகேத்திரஞ்சித்திர, கூடமத்திசயிலங்குடந்தையே
கேடில்சாளக்கிராமமரங்கநற், பாடல்சேர்ந்தசுவேதபருப்பதம். (௧0௬)

காசிலாதநற்காஞ்சியரித்தல, மாசின்மோகினிமாபுரங்கோட்டியூ
ரேசிலாதவிடபகிரியெழிற், கேசவன்னூறையுஞ்சுககேத்திரம். (௧0௭)

வெதரிகாவனமேவுசேடாத்திரி, மதுரைகண்ணநகரமலர்த்திருப்
பதுமநாபம்பகர்புருடோத்தமங், கதிர்வழங்குபுல்லங்கடிகாத்திரி. (௧0௮)

சீனிவாசந்திகழ்பத்தநாதமே, யாணசீர்த்தியசிந்தங்குருங்ககம்
வானர்போற்றுமயிந்திரமவாருண, நாணிலம்புகழ்ந்தேத்துநயிமிசம். (௧0௯)

ஆடுறும்பதிமற்றுமரித்தலத், தாடுறும்புனலாலகலாவக
மூடுறும்புகழ்ச்சேதுவின்மூழ்கினல், வீடுறும்மிதுமெய்மையதாகுமே. (௧௧0)

ஊழிவாய்க்கடுங்காலினுயிர்ப்பெறீஇப், பாழிவாய்நெட்டுடற்பெரும்பாந்தண்மே
லாழிவாய்த்துயினீத்தவனுற்றிட, வாழிமாதவத்தோர்கள்வணங்கிட. (௧௧௧)

வாய்ந்தசேதுவிலாடினர்மாபவந், தேய்ந்துமாய்வதுஞ்செப்புமிச்சேதுவிற்
றோய்ந்திடாதவர்தொல்லைப்பெரும்பவம், வீந்திடாததுமெய்ம்மையதாகுமே. ()

ஆவிகட்கிதமாமஞ்செழுத்தையு, மோவிலாநமச்சிவாயவென்றோதிடார்
பாவியாருளங்கேளார்பவங்களுந், தாவியோடுமிச்சேதுவினனத்தால். (௧௧௩)

மூந்தையாமெழுத்தோடுநமோவென, நந்திலங்குகைநாராயணாயவென்
றிந்தவெட்டெழுத்தாலுருவேற்றலார், சிந்தியார்பவஞ்சேதுவிற்சிந்திடும். (௧௧௪)

மற்றிராமன்மனமகிழ்பூத்திடு, முற்றவாறெழுத்தையுகந்தோதலார்
பற்றிடாருளங்கேளார்பவங்களு, மெற்றுஞ்சேதுவெழின்முனிவோர்களே. (௧௧௫)

நத்திலங்குகைநாரணனுளனு, மதநினத்தவனென்பிழையார்பவ
மூத்திலங்குமுழங்குதிரைக்கடற், சித்திநல்கிடுஞ்சேதுவிறறீருமே. (௧௧௬)

ஏதின்மாமறைச்சாபாலமேழினு, லாதிநன்முடியங்கங்களெங்கணும்
பூதிமேற்றிரிபுண்டரம்பூசிடார், பாதகங்களுஞ்சேதுவிற்பாறிடும். (௧௧௭)

அறிவினலறியாதவரன்றனைப், பொறிகொண்மார்பனைப்புங்கவாதங்களை
மறுவில்வேதமரபினிற்பூசியார், செறியும்பாவமுஞ்சேதுவிற்றீருமே. (௧௧௮)

சாபமேருவினன்றடந்தாமரை, நாபனதியர்பூசைக்குநற்சந்து
தூபதீபந்துணர்மலர்தந்திடார், மாபவங்களுஞ்சேதுவின்மாயுமால். (௧௧௯)

தவளமாமதிசூடியசங்கரற், குவமனற்றசீருத்திரமந்திரத்
தவமிலாவபிடேகமளிததிடார், பவமுமாழ்கடற்சேதுவிற்பாழ்படும். (௧௨0)

அரனுமாயனுமாதியதேவர்கள், புரிவுசெய்யும்புருடசூத்தம்முதற்
பரியுமாபாவமானந்திரிமது, திரிசுபன்னந்திகழ்பஞ்சசாந்தியே. (௧௨௧)

இவைகளாலபிடேகமிவர்களுக், குவகையாற்செய்யவுன்னலர்பாவிக
ளவர்கள்பாவமுமாழ்கடற்சேதுவிற், றுவரப்போயறுந்தொன்முனிவோர்களே. ()

பாயுமாநதிச்செஞ்சடைப்பண்ணவன், றாயமாலெனுஞ்சுந்தரன்பொற்றிருக்
கோயில்சூழ்ந்துவணங்கவில்லாரகொடுந், தீயதீமையுஞ்சேதுவிற்றீருமே. (௧௨௩)

வேறு.

ஆரணப்பரியினுறுதியோர்தமை, மார்கழித்திங்கள்வைகறையின்மாபெருஞ்
சீரியற்பூசைசெய்யாததீமையு, நீரலைச்சேதுவினீங்குமாலரோ. (௧௨௪)

மதுவழிந்தொழுகியமாலைக்கொன்றையோர், புதுமதிச்சடிலனைப்பொறிகொண்மார்
பனைத், துதிதருகிற்றிலர்தொல்பவங்களுங், கதிதருசேதுவிற்கழியுமாலரோ. ()

நாசமில்செழுஞ்சிவநாபந்தன்னையு, மாசில்சாளக்கிராமத்தையும்மனத்
தாசைகூர்துவாரகாசக்கரத்தையும், பூசியார்பவமுமிச்சேதுப்போக்குமால். ()

களிமிகவுளங்கொள்கங்காமிருத்திகை, துளசிநன்மிருத்திகைதூயநன்னுத
லொளிபெறப்புனைகிலாருடையபாவமுந், தெளிபுனற்சேதுவிற்றீருமாலரோ. ()

கோவிசந்தனத்தினைக்கோடுநெற்றியி, லாவிசேர்நெஞ்சினிலம்புயததினிற்
பாவமோசனம்வரப்பரிததிடார்பவ, மோவிடுஞ்சேதுவினுதகமூழ்கினால். (௧௨௮)

உருத்திரவிழிமணிகளத்தூரத்திடாக், கருத்திரவினர்பவக்கணமும்புண்ணிய
சருத்திரமுனிவரர்பெற்றசத்தியத், திருத்திரவியநிகர்சேதுவிற்கெடும். (௧௨௯)

கருக்கிளருயிர்களைக்காததளித்திடு, முருக்கிளர்ந்தோங்கியவும்பர்நாயகன்
மருக்கிளர்துழாய்மணிவனைந்திடார்பவந், திருக்கிளர்சேதுவிற்றீருமாலரோ. ()

இரவிறுபிராமியத்தெழுந்துசுத்தனா, யரியரனுமமுந்துதியொடன்னவர்க்
குரியமந்திரமற்றுமுண்மையாமனுத, திரமொடெண்ணலர்பவஞ்சேதுவிற்கெடும். ()

ஆதவனெழுமுனமறலின்மூழ்கியே, வேதமாதாவெனவிமலமுற்றிடுந்
தீதில்காயத்திரிசந்திசெய்துபின், னோதிடார்பவங்களுமொழிக்குஞ்சேதுவே. ()

வேறு.

சாயம்பிராதாவுடனவுபாசனமுமாத்தியாணிகமுந்
தேயும்பாவமெனப்பிரமயாகம்வைசுவதேவமுட
னேயுமதிதியருக்குச்சிப்பூசையுநற்குருயர்பூசை
சாயங்காலமபண்ணியிடார்பவமுந்தனுக்கோடியிற்றவிரும். (௧௩௩)

வேறு.

இச்சியார்பிறந்தையையெண்ணில்வேதத்தின், முச்சியார்பொருளவாய்முற்றுநீத்
தவ,ருச்சியாம்வேளையிலுற்றபோதவா,பிச்சையாற்றிலர்பவஞ்சேதுப்பேர்க்குமால்

வடாதுறுகயிலையாணிசைத்தமாமறை, விடாதிசையாதவரிசைத்துவிட்டவ
ரிடாதவர்சிராத்தமாளயமபிதிர்க்கள்பாற்,கொடாதவர்பாவமுங்குலையுஞ்சேதுவில்

நித்தியமேயெனநிகழ்சிராத்தமுஞ், சத்தியமாகுமட்டகைச்சிராத்தநை
மித்திகசிராத்தமும்விரும்பிலார்பொருள், வைத்தலோபிகள்பவஞ்சேதுமாற்றுமே

பூயசமுப்பழம்பானகம்முடன், சேயதாம்பூலம்வத்திரஞ்செருப்புட
னுயசந்தலர்சருக்கரையொடாதவங், காய்வுறுகுடைகழைகட்டின்மற்றுமே. ()

சித்திரைமதியினிலுவாவிற்சித்திர, குத்தருக்கருத்திகொள்பொருட்டுமாமறை
வித்தருக்களித்தலைவிரும்பிடார்பவ, மைத்தடஞ்சேதுவின்மாறுமாலரோ. (௧௩௮)

நல்லனவொழுகிடுநன்மையாளனு, மல்லனவொழுகிடுமன்மையாளனுஞ்
செல்லினம்விழுங்கடற்சேதுமூழ்கினு, வில்லினின்முழுகலிப்பிறப்பிலேறுவார். ()

இல்விடைமயங்கவென் றிசைக்குஞ்சார், வல்லலையகற்றிமோசையுற்றவன்
செல்லெனும்படிவமாரிராமசந்திரன்,சொல்லரும்புகழ்த்தனுக்கோடிதுன்னுவான்.

வேறு.

முக்காலுஞ்சத்தியமாவிதமாகச்சாரமதாமொழிகின்றேன்யான்
மைக்காலன்றனையுதைத்தமலர்க்காலைமனத்திருத்துமாதவத்தி
ரெக்காலந்தானுமழிவெய்தாதவிருஞ்சேதுவெய்தினோர்க
ளக்காலையொருக்காலுமழியாதபேரின்பமடைவரன்றே. (௧௪௧)

இப்பொழுதுத்தமசேதுக்கதைமுனிவீருமக்கியாமியம்பினேமா
லிப்பெருஞ்சேதுவின்காதைபடிப்பவர்கேட்பவர்தங்கட்கேய்ந்தநோய்கள்
செப்பரியகொடுந்துக்கந்தீக்கனவுநடுத்துஞ்சலாதிதீர்ந்தே
செப்புறுமக்கினிட்டோமமுதலமகமொருங்குஞற்றுஞ்செய்யபேறும். (௧௪௨)

எப்புவனங்களுநிறைந்தசகலதீர்த்தமும்படிந்தவெய்தும்பேறு
மொப்பரியபெருஞ்சாந்திபுண்ணியநால்வேதமுக்காலோர்தும்பேறு
மெப்பெயரினோருமடையாதபெரும்பீடுகளுமெந்தஞான்றுந்
தப்பறவேயடைந்துசுவர்க்கத்திருந்துபரலோகந்தன்னைச்சார்வர். (௧௪௩)

வேறு.

காவிவாள்விழிக்காமருசானகி, யாவிபோலுமிராமனருச்சித்த
தேவன்வாழுமிச்சேதுபுராணத்திற், றுவிலாதசருக்கத்தொகைதனில். (௧௪௪)

ஒன்றுகூறினர்கேட்டவரொப்பிலாத், துன்றுவேதத்துறைபிறழாமலே
மன்றவாற்றியவாம்பரிமேதமாம், வென்றியாகவியன்பயன்மேவுவார். (௧௪௫)

இரண்டுகூறினர்கேட்டவரீறிலா, முரண்டராதமறைமுறைமுற்றிய
வரண்டரும்பசுமேதத்தடைந்திடுந், திரண்டயாகப்பயனதுசேர்குவார். (௧௪௬)

பத்திசைத்தவர்கேட்டவர்பத்தியாற், குத்திரச்சிறகீர்ந்தகுலிசனோ
டொத்தருத்திமிக்கோகையொடன்புறீஇ, யுத்தமத்திருப்பீடத்துறைகுவார். ()

இருபதோதினர்கேட்டவரேருடை, யருணவாளொளியாயிரந்தோடவிழ்
விரைசெய்தாமரையாதனமீமிசை, மருவுவானவனோடுமருவுவார். (௧௪௮)

முப்பதோதினர்கேட்டவர்முண்டகற், கப்பனுளும்வைகுண்டத்தடைந்தவற்
கொப்பவேமகிழ்வோடுறைகுவார், செப்பொணுதபெரும்புகழ்த்தீர்த்தரே. ()

நாற்பதோதினர்கேட்டவர்நாலிரு, மாற்பெருந்திசைவானவர்போற்றிடுஞ்
சீர்ப்பிறங்குமுருத்திரதேவனோ, டேற்புறுந்திருமேவியிருப்பரே. (௧௫௦)

ஐம்பதும்படித்தன்புடன்கேட்டவ, ரெம்பிறப்பறுத்தாண்டருளெம்பிரா
னும்பர்மாமதிசூடியுமாபதி, சம்புநம்பன்றனையடைவாரரோ. (௧௫௧)

இவையனைத்துமிசைத்தவர்கேட்டவ, ருவகையுற்றொருகாலுயர்வாகிய
சிவமெனப்பெயர்செப்பிடுகின்றதோர், நவையின்மாசிவலோகத்தைநண்ணுவார்.()

வேறு.

இருமுறைகேட்டவரியம்பினோர்கடாம்
பொருவிகந்தோங்கியவிமானம்புக்குலா
யருமறையாகமமனைத்துமோதிடுந்
திருவளம்பெருகுசாமீபஞ்சேர்குவார். (௧௫௩)

மும்முறைகேட்டவர்மொழிந்துளோர்கடாம்
பொய்ம்முறைவாசகம்புகன்றிடாதநூற்
செம்மறைப்பொருளதாஞ்சிவனுக்கன்பராய்
மெய்ம்முறையவன்றனதுருவமேவுவார். (௧௫௪)

நான்முறைகேட்டவர்நவின்றுளோரருட்
கோன்முறையோச்சியேயண்டகோடிநூற்
பான்முறையாணையினடாத்தும்பால்விடை
மேன்முறையீசனேடொன்றிமேவுவார். (௧௫௫)

வேறு.

ஒருகவியேதானுதலிதிற்பாதியாதலிந்தவுயர்புராணத்
தொருபதமேதானுதலொருமொழியேதானுதலுண்மைசான்ற
வொருபுனிதவெழுத்தாதலொற்றுதலொருமுறைகேட்டோரைத்தாலந்த
வொருவிசையிலன்றன்றங்குஞற்றுபவமனைத்தினையுமொழிக்குமாதோ. (௧௫௬)

கஞ்சமகண்மணவாளன்பூசைபுரிசிவன்சேதுக்காதைசெப்பும்
விஞ்சுபுகழ்ப்புராணமிதுபடித்தாலுங்கேட்டாலும்விளம்புமிந்தச்
செஞ்சொல்வளர்புராணவெழுத்தெவ்வளவுண்டவ்வளவுசெனனத்திய
வஞ்சுபெரும்பாதகமுமஞ்சிவெருண்டக்கணத்திலகலுமம்மா. (௧௫௭)

பூதலமெல்லாம்புரக்கும்புண்டரிகக்கண்ணான்முன்புரிந்தவிந்தச்
சேதுவின்மாக்கதைதன்னைப்படிப்பவர்கள்கேட்பவர்கள்சேர்புராணத்
தோதுமெழுத்தெவ்வளவுண்டவ்வளவுசேதுநடுவுற்றநாலா
றுதியதீர்த்தந்தன்னிலடைந்தாடும்பலனனைத்துமடைவரன்றே. (௧௫௮)

அதுவன்றிச்சேதுவெனுந்தலநாப்பணன்னியதீர்த்தங்களாக
வதிகின்றதீர்த்தமெல்லாமாடியபேறடைந்திடுவர்மால்செய்பூசைப்
பதியொன்றுசேதுமாக்கதைபடிப்போர்கேட்போர்கள்பரஞானத்தின்
மதியொன்றிப்பிரமதியானத்திருந்துமகிழ்பூத்தமாதவத்தீர். (௧௫௯)

ஆர்த்ததிரைக்கடலாடையங்கணிலமெங்கணுஞ்சென்றளப்பிலாத
கீர்த்திதருமெழிலினுக்குங்கிடைப்பரிதாமெழிற்சீதைகேள்வன்போற்று
மீர்த்தபுனன்மதிவேணியிராமேசன்புராணத்தையெழுதுமன்பர்
தீர்த்தலரும்பவந்துடைத்துச்சிவசாயுச்சியபதத்தைப்பெறுவர்திண்ணம். (௧௬௦)

இந்தமான்மியமிருக்குமில்லிடமேசேதுவெனவெண்ணியாங்கண்
மந்தனேமுதற்கிரகபீடைவியாதிகளலகைமருள்வேதாள
முந்துமாபயஞ்சோரபயமின்றியொழியுமறுநான்குதீர்த்தங்
கந்தமாதனமயன்மாலிராமநாயகனுளுங்கலந்துவாழ்வார். (௧௬௧)

பன்னிவெகுவாகவினிக்கூப்பிடிலென்மூவுலகும்பதியுமங்கண்
மன்னுமதிலோர்சருக்கஞ்சிராத்தகாலந்தன்னில்வழுத்தியிட்டா
லன்னதனிலுற்றிடுமெல்லாசாரதோடமவையனைத்துநீங்கும்
பின்னர்தமதகந்தன்னிற்பிதிர்க்களுந்தாம்பேருவகைபெறுவர்மாதோ. (௧௬௨)

திருமருவுபருவகாலந்தன்னிற்றிகழ்சீதைமணாளன்போற்று
மொருபெரியகடவுளுளமகிழுமதிலோர்சருக்கமோர்பாட்டேனும்
பொருவரியமறையவர்தம்புனிதவாய்திறந்தினிதுபுகலக்கேட்போர்
வருசுரபிகுழக்கன்றுவளர்மேதிசொரிபாலின்வளங்களேய்வார். (௧௬௩)

மடத்திலெழிலாலயத்தின்மலர்ப்பொழிலிற்பெரியோர்கண்மனையிற்பொய்கைத்
தடத்திடத்தினதிக்கரையிற்புண்ணியபூமியிலிருந்துசாற்றலாகும்
விடப்பமென்னியதலங்கடமிலிருந்துவினவுறவிளம்பலாகா
கடற்றிரைகள்கதிர்முத்தங்கொழித்தெறியுஞ்சேதுமாக்கதைகற்றோரே. (கசுச)

இக்கதையைநியமத்தோடியைந்திட்டுக்கேட்டனுமிப்படியேயென்றும்
பக்கமிருநான்குதனிற்பன்னொன்றிற்பதினன்கிற்பரந்துவைகுந்
திக்குலவெண்ணயனத்திற்றிகழ்தனுச்சிங்கங்கன்னித்திங்கடன்னின்
மிக்குயருமாடுதலாம்பிறந்திடுநாள்விசேடித்துவிரிக்கமாதோ. (கசுரு)

மிக்கபுகழ்ச்சேதுமான்மியந்தன்னிற்றீர்த்தங்கள்விளம்பலானு
முக்கணனைமாயவனைமுனிவர்களையிருவினையைமொழிகையானுந்
தொக்கமறைப்பொருடிரட்டிச்சொற்றவியாதனும்விரும்புந்தொன்மையானு
மெக்கதையின்மேலாகுமிதனகத்திற்புண்ணியுரையியம்பலானும். (கசுசு)

வேந்துமுனிவோர்களையும்பிரமமுனிவோர்களையும்விளம்பலானுந்
தீந்தொடைமாக்கதையிதுதான்பவித்திரமாம்பவப்பிணிக்ளசிதறமோது
மாய்ந்திடுமாசருதியினுமுழங்குவதாமதனையாய்ந்தறிந்துளோர்க்கும்
வாய்ந்திடுசம்மதமாகும்பலன்விழைந்தோரிதனைவாசித்தல்வேண்டும். (கசுஎ)

இக்கதைகேட்டவர்படித்தோர்தமையரியாசனத்திருத்தியருச்சித்தேந்தி
மிக்கபணிதூசுநிலம்வியன்சுரபிசெம்பொனவைவிருப்பினீந்தான்
முக்கணன்மாலயன்பூசைமுற்றியதாமொழிந்திடின்மூவுலகும்பூசை
யக்கணத்திலியற்றியதாமாதலினலவரையருச்சிக்கவன்பால். (கசுஅ)

சீருலவுசததளப்பொற்செங்கமலக்கண்ணனுந்திருவுமிக்க
வேருலவுமிலக்குமனுமிக்காதைகேட்டவர்க்குமியம்பினோர்க்கு
நீருலவுகடலாடைநிலத்தின்மிகுபோகமளித்துநேர்ந்த
பாருலவுபவமகற்றிப்பரபோகமுத்தியையும்பாலிப்பாரே. (கசுகூ)

போதமிகுவியாதன்முகபுண்டரிகவிதழ்திறந்துபொழிந்ததேனு
மேதமிலிக்காதைதனையெழிற்றருமபுத்திரன்றனிணையரோடெங்
கோதறுநற்சேனையொடுந்தவுமியனுங்குரவனருள்கொண்டுகூற
வாதரங்கூர்நியமாசாரத்துடனேகேட்டதுவாமாயுங்காலே. (கஎ0)

ஆதலினன்முனிவீர்காளிக்காதையருமறைச்சம்மதமேயாகு
மேதமறவிதனுண்மையெடுத்துமக்கிங்கிசைத்திடலாலுணர்ந்தீரிந்தச்
சேதுவின்மாக்கதையோதுநீவிருநம்பாலடைந்ததிகழ்மாணுக்கர்க்
கோதுமினென்றுயர்சூதமாமுனிவனுவப்பினெடுமுரைத்துப்பின்னா. (கஎக)

பொருவிகந்தவம்முனிவனுடல்புளகமிகவெழுந்துபோர்ப்பப்பொங்கிக்
கரமலர்கள்சிரங்கூம்பக்கணிப்பரியவானந்தக்கண்ணீர்கால
மருவுமுயர்வியாதனைத்தன்மனத்திடத்துநினைந்துருகிவல்லைவாழ்த்திப்
பரவியுவந்தங்கனுயர்பாடலினோடாடலிவைபயின்றுனன்றே. (கஎஉ)

உற்றருளுமக்காலைமற்றிவன்பேரன்பாமொற்றெரல்லையோடிப்
பற்றிநனியீர்த்திடலும்பராசரன்றன்குமரனெனப்பகர்வியாதன்
மற்றிணையில்லாதுயர்ந்தமாணுக்கற்கருள்சுரக்கும்வாஞ்சையாலே
யற்றமிலாமுனிவரொடுஞ்சூதனுறையாச்சிரமத்தடைந்தானன்பால். (கஎ௩)

அடைந்தருளும்பொழுதவனைக்கண்களிப்பமுன்கண்டாதரவின்மிக்குத்
தொடர்ந்தமுனிகணங்களொடுமெதிரெழுந்துபணிந்தந்தத்தொல்வியாதன்
றடங்கமலத்தாள்கடமிற்றண்டமெனத்தாழ்ந்திறைஞ்சித்தருமானந்தக்
குடந்தருநல்விழிநீராங்குளிர்ந்தபுனலாட்டினன்மெய்க்குணக்குன்றன்னான். ()

அவ்வேலையன்னையர்தாமிளம்பருவப்பாலகரையணைக்குமாபோன்
மெய்வேலையருளினொடுசூதமுனிதனைப்பலகால்விருப்பிற்புல்லி
மைவேலைகடைந்தபிரான்கலையுருவாம்வியாதமுனிமகிழ்ந்துபின்னர்ப்
பொய்வேலைகடந்தமுனிவரரளித்தவாதனத்திற்பொலிந்திருந்தான். (௧௭௫)

இருந்ததற்பின்வியாதமுனிசூதனைமாதவரொடுமுன்னிருத்திப்பின்ன
ரருந்தவத்தோர்தமைநோக்கியரியதிருவாய்மலர்ந்தாங்கருள்வானிந்தப்
பொருங்கடற்சேதுவின்காதைநாமறிவதிதுசூதன்புனிதவாக்கா
லொருங்குறச்சொற்றதுவேதாகமப்பொருளுமிதுவேயாமுரைப்பக்கேண்மின். ()

சுருதியொடுமிருதிபுராணாதிசாத்திரமெவைக்குந்தொன்மையாகக்
கருதுமிதிகாசமட்டோமற்றுநூலெவைதமக்குங்கழறொணாத
பொருண்முடிவுமிதுவேயாம்புரையறுமெய்ஞ்ஞானத்திற்புந்திவைத்தே
தெருளுறுவீரிவ்வாறுசிந்தைகொண்மினையமின்றித்தேசுமிக்கீர். (௧௭௭)

என்றெடுத்தாங்கியம்பிப்பினிக்காதைதருமனுக்கெம்மருளினாலே
வென்றிதருதவமியன்றான்விருப்பினொடுமெஞ்ஞான்றும்விளம்பாநிற்ப
னென்றுநீர்படித்திடவுங்கேட்டிடவுமியம்பிடவும்வேண்டுமென்ன
நன்றுரைத்தபரிசிதுவேநன்கிழைத்துமெனமுனிவர்நவின்றிட்டாரே. (௧௭௮)

வேறு.

என்றிவைமொழிந்துமிக்கவிருடிகட்கருள்வழங்கித்
துன்றியபுகழ்சேர்கின்றசூதமாமுனிவனோடும்
வென்றிசேர்வானூருகவெள்விடைக்கொடியுயர்த்த
கன்றுமான்கரத்தோன்வாழுங்கயிலையையடைந்தான்மாதோ. (௧௭௯)

வென்றிகொளிராமனாலும்விளங்கிடவருச்சித்தேத்துந்
தென்றமிழிராமசேதுதிகழ்கதைதினமும்போற்றித்
துன்றியமுனிவரோதத்தொடங்கினராதலாலே
யொன்றியபுகழினோடுமோங்கியதுலகமெல்லாம. (௧௮௦)

வேறு.

மாதுமலைவளர்காதல்வல்லிவாழ்கமாற்கருள்கூர்சிவராமநாதன்வாழ்க
சேதுவுடன்றனுக்கோடிதீர்த்தம்வாழ்கதிகழ்தீர்த்தமறுநான்குஞ்சிறந்துவாழ்க
நாதனிராமேச்சுரனையருச்சிப்போருநற்றுனந்தலமனைத்துநயந்துவாழ்க
மாதவர்கண்மிகவாழ்கவிராமநாதமாமுனிவனீடூழிவாழ்கமாதோ. (௧௮௧)

சேதுபலச்சருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம் - ௩,௪௩௮.

சேதுபுராணமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க